www.padippakam.com

நாச்சிமார் கோயிலடி இராஜன்



# எதிர்பார்ப்புகள்

படிப்பகம்

www.padippakam.com

# எதிர்பார்ப்புகள்

நாச்சிமார்கோயிலடி இராஜன்

Mithra Arts and Creations Pvt. Ltd.,
அநுசரணையுடன்
பிறேமன் தமிழ்க் கலை மன்றம்
யேர்மனி

படிப்பகம்

www.padippakam.com

Mithra Books
ISBN 1 876626 70 8

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | எதிர்பார்ப்புகள் |
| எழுதியவர் | : | நாச்சிமார்கோயிலடி இராஜன் |
| பொருள் | : | நாடகங்கள் |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| அட்டைப்படம் | : | இலங்கைநாதன் |
| ஓவியம் | : | புகழேந்தி |
| அச்சிட்டோரும் வெளியிட்டோரும் | : | மித்ர ஆர்ட்ஸ் அண்டு கிரியேஷன்ஸ் & பிறேமன் தமிழ்க்கலை மன்றம் யேர்மனி |

| | | |
|---|---|---|
| Book name | : | Ethirparppukal |
| Author | : | Nachchimarkoielady Rajan |
| Subject | : | Tamil Drama |
| Rights | : | Thambayah Rasu |
| Wrapper | : | Ilangainathan |
| Illustrations | : | Pugazhenthi |
| Printed & Published | : | Mithra Arts & Creations Chennai - 24 & Tamilischer Kultur Verein Bremen e.V Germany |

| | | |
|---|---|---|
| Name vom Buch | : | Ethirparppukal |
| Autor | : | Nachchimarkoielady Rajan |
| Herausgeberrecht | : | Thambayah Rasu |
| Gestaltung der Titelseite | : | Künstler: Elangkainathan |
| Design und Zeichnungen | : | Künstler: Pukalenthy |
| Publikant & Produzent | : | Mithra Arts & Creations Chennai-24 Tamilischer Kultur Verein Bremen e.V. Germany |

Made in India by Mithra Book Makers

Mithra Books First Edition

**28th December 2001**

Published by

**Tamilischer Kultur Verein**

**Bremen e.V. Germany**

*in collaboration with*

**Mithra Arts and Creations**

1/23 MUNRO STREET
EASTWOOD 2122 AUSTRALIA
Ph: (02) 9868 2567
e-mail: www.anura@matra.com.au
Fax : (02) 9868 4662

30 VANNIAH STREET
BATTICALOA (EP)
SRI LANKA

375/8-10 ARCOT ROAD
CHENNAI 600 024 INDIA
Ph: (044) 372 3182
e-mail: www.mithra@md4.com.in
Fax : 0091-44-4721336

மித்ர : 56
விலை

முதற் பதிப்பு : 28 டிசம்பர் 2001
பக்கங்கள் : 448

படிப்பகம்

www.padippakam.com

## உட்பொதிவு


- முன்னீடு v
- அறிமுகவுரை viii
- நுழைவாயில் xiv
- உறவுகள் 1
- எதிர்பார்ப்புகள் 67
- நீர்க்கோலம் 101
- சுமைகள் 147
- சுருதிபேதம் 201
- பாவலன் பெற்ற பரிசு 283
- யாரிவர்கள் 307
- வீடு 331
- வந்த வழியை நாங்களெல்லாம் சிந்திச்சுப் பார்க்கவேணும் 381
- அனுபந்தங்கள் 394
- பின்னுரை 406


படிப்பகம்

www.padippakam.com



துள்ளித் திரிந்த பள்ளிப் பருவத்தில்
கைபிடித்தென்னை — வண்ணை
கலைவாணர் நாடக மன்றத்தில் இணைத்து
அரிதாரம் பூசி அரங்கேற வைத்து;
வாலிபத்தின் வாயிற்படிக்கு
நான் வந்த வேளையிலே
என்றும் நான்
கலைஞனென வாழ
நல்வாழ்க்கைத் துணை தேடித்தந்த
என் வணக்கத்திற்குரிய
அண்ணன் வண்ணை தியாகனுக்கும்

எந்தன் ரசிகனாய் தன்னை இனம்காட்டி
நெஞ்சார வாழ்த்தி வழிகாட்டிய பண்பாளன்
இறுதிமூச்சு வரை' இலக்கியப் பயணஞ்செய்து
நீங்காத நினைவுகளை
என் நெஞ்சிற் பதித்த
காலத்தாற் குறுகிய நட்பின் சொந்தக்காரன்;
ஜேர்மனியிலே;
தமிழ்ச்சிறுவர் இலக்கியத்தின் முன்னோடி
"சிறுவர் அமுதம்"
சின்ன இராஜேஸ்வரனுக்கும்

**இந்நூல்**
**படையல்**

படிப்பகம்



# முன்னீடு

சென்ற ஆண்டு, செப்டம்பர் மாதம், ஐரோப்பியப் பயணம் ஒன்றினை என் மனைவியுடன் மேற் கொண்டேன். குணபாலன், 'சின்னக்குட்டி' தயாநிதி, ஞானகுலேந்திரன், இலங்கை வானொலிப் பாடகர் குணசீலநாதன் ஆகியோருடன் பாட்டும் பகிடிகளுமாக இனிமை சுரந்த பயணம். இடைவேளை போல, பிறேமனில் நடைபெறும் கலை விழா பற்றியும், அதனைக் கலா வேள்வி போன்று ஆண்டு தோறும் நடத்தும் நாச்சிமார் கோயிலடி இராஜன் பற்றியும் பாராட்டிப் பேசினார்கள். புகலிட நாடுகளிலே சக கலைஞர்களைப் பாராட்டும் நாகரிகம் அருகிவரும் அவலத்தில், இப்படிப் பாராட்டா? இராஜனின் வீட்டிலே, ஈழத்தின் நாடகம் — சினிமா ஆகிய துறைகளிலே தடம் பதித்த

www.padippakam.com



நண்பர் ஏ. ரகுநாதனைச் சந்தித்தேன். வழியிலே கேள்விப்பட்டன அவரால் வாய்மணக்க உறுதி செய்யப்பட்டன. மகிழ்ந்தேன். பிறேமனில் நடந்த கலை விழாவிலே தமிழனாய்த் திமிர்த்தேன்.

நாச்சிமார் கோயிலடி இராஜன் மிகச் சின்ன வயசிலே நாடகத்தின்பால் ஈர்க்கப்பட்டவர்; தம்மை அதற்கு அர்ப்பணமாக்கிக் கொண்டவர். வில்லிசை, நாடகம் ஆகிய வடிவங்களைத் தமது தமிழ்ப் பக்தியை வெளிப்படுத்தும் ஊடகங்களாகத் தேர்ந்தெடுத்து, ஊழியஞ் செய்கின்றார். புகலிட நாடுகளிலே — பொருளாதார எலியோட்டத்தில் ஈடுபடும் பான்மையினர் அமோகராக வாழும் சூழலிலே — நாடகக் கலையைப் பயிலுதலும் முன்னெடுத்தலும் ஆக்கினை நிறைந்த ஊழியம். இடையறாத பக்தியும், தளும்பாத மன ஓர்மமும் இதற்கு அவசியம். இவை கைவரப்பெற்ற சாதகராய் இராஜன் வாழ்கிறார் என்பதற்கான ஆதாரங்களுள் ஒன்றாய் 'எதிர்பார்ப்புகள்' அமைகின்றது.

ஒன்பது ஆண்டுகள் என்பது மானிட வாழ்க்கையில் நீண்ட காலமல்ல. புகலிட வாழ்வின் சவால்களின் மத்தியில் அதனை அற்ப காலமெனக் கொள்ளவும் முடியாது. இந்த ஒன்பது ஆண்டுகளில் தமது இருத்தலை அல்ல — தமது உள்ளத்திலே கனன்று கொண்டிருக்கும் தமிழ் பக்தியை — ஒன்பது நாடகங்களாக்கியுள்ளார். படைத்ததுடன், தமிழ்ச் சுவைப்புக்கும் பகிர்ந்துள்ளார். தமிழ் படைத்தலும், பகிர்தலும் மகா சங்கையான ஊழியம். நாச்சிமார் கோயிலடி இராஜன் இப்பொழுது அவற்றை நூலாகப் பிரசித்தமாக்கும் பொழுது, இலக்கியம் என்கிற புதிய

www.padippakam.com



பரிமாணம் பெறுவதுடன், புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் கலை - இலக்கிய நேசிப்புக்கான ஆவணமாகவும் மாறுகின்றது.

இக்காலத்திலும், இயல்-இசை-நாடகம் என முத்தமிழாய், தமிழ் செழிக்கின்றது எனப் பெருமை பேசுதல் யோக்கியமானதாக எனக்குத் தோன்ற வில்லை. வித்துவச் செமியாக் குணங்களிலே ஈடுபட்டோர், நாடகத் தமிழின் தனித்துவச் சாங்கங்களையும் இலக்கணங்களையும் மீட்டுத் தரவும் இல்லை. இந்நிலையில், இதனை நாடகத் தமிழ் சார்ந்த நூலெனப் புகழும் தேவையும் இல்லை.

'புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு கலை - இலக்கிய முயற்சிகள் மூச்சாகவும் சுவாசமாகவும் இருக்கின்றன. அவர்கள் வாழும் ஐரோப்பிய நாடுகளிலே தமிழ் மொழி மூலமே தமது இனத்துவ அடையாளங்களைப் பிரசித்தப்படுத்துகிறார்கள் என்பதற்கு இந்தக் கலை விழாவே சான்று' என பிறேமன் நகரிலே இராஜனின் தமிழ் ஊழியத்தை இணைத்து வாழ்த்தினேன். இந்த வாழ்த்து, இந்நூலுக்கும் பொருந்தும். நாச்சிமார் கோயிலடி இராஜனின் தமிழ் ஊழியம் தொடரவும் வளரவும் வாழ்த்துதும்.

**எஸ்.பொ**
19.08.2001

1/23 MUNRO STREET,
EASTWOOD
2122, Australia

படிப்பகம்

www.padippakam.com



# அறிமுகவுரை

தமிழில் முத்தமிழ் இருக்கிறது என்போம் வெறும் பெருமைக்கு,

இயல், இசை, நாடகம்

இது விரிவுரை.

ஆனால் தமிழ் கூறும் நல்லுலகில் நாடகத் தமிழ் வளர்ந்துள்ளதா!

வளர்த்துள்ளோமா!!

வளர்த்ததை அழித்து விட்டோமா!!!

இது நாடகக் காதலர்கள் தங்களுக்குள் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொள்ளும் ஒரு புரியாத புதிர்------- எங்களை, எல்லாம் புரிந்தவர்களாகக் காட்டிக் கொள்ள...

சினிமாதான் சீரழித்தது என்றோம் அன்று......

சின்னத்திரைதான் என்று அலறுகிறோம் இன்று.

சினிமா கண்டுபிடித்த பிரான்சிலோ உலக சினிமாவைத்

www.padippakam.com



தன் ஆளுமைக்குள் வைத்திருக்கும் அமெரிக்காவிலோ ஏனைய ஐரோப்பிய நாடுகளிலோ இன்றும் நாடகம்தான் முதலிடத்தில் கோலோச்சுகிறது. அங்கெல்லாம் ஒரு நல்ல நாடகத்தைப் பார்க்க ஒரு வருடத்துக்கு முன்பே நுழைவுச்சீட்டு பதிவு செய்தால்தான் பார்க்க முடியும்.

இது உண்மை.

அப்படிப்பட்ட நாடுகளில் இல்லாத சினிமாவா? சின்னத்திரையா?

ஆகவே, தமிழ் நாடகக் கலையை அழித்தது சினிமாவோ சின்னத்திரையோ அல்ல...

முத்தமிழ் என்று செந்தமிழில் முழங்கிவிட்டு நாடக இலக்கியத்தை மறந்து விட்ட நாம் தான் காரணம்.--- நாம் என்றால்!

எழுதுகோல் பிடித்தவர்களும் “ரசிகன்” என்ற சொல்லின் அர்த்தமே தெரியாமல் - வெறும் நடிகர்களுக்கு கற்பூரம் காட்டும் பக்தர்களாகிய ஜடங்களும் அவற்றை ஊக்குவித்து முன் மொழியும் வியாபாரப் பத்திரிகைகளும் நாடகக் கலையை மறந்து விட்டு விளம்பரம் மிக்க வியாபார சினிமாக்களுக்கு மகுடம் சூட்டும் அரசுகளும் காரணம்.

ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக அன்று சங்கரதாஸ் சுவாமிகள். பின்பு பம்மல் மு. சம்பந்த முதலியார் போன்றோர் வழியில் அவர்களவுக்கு இல்லாவிட்டாலும் பி. எஸ். ராமையா, இன்று இந்திரா பார்த்தசாரதி, தமிழ் ஈழத்தின் எஸ்.பொ, குழந்தை சண்முகலிங்கம், கவிஞர் அம்பி, கவிஞர் முருகையன், அருட்தந்தை சவரிமுத்து, மறைந்த கவிஞர் மஹாகவி என்று விரல்விட்டு எண்ணத் தக்கவர்களே

www.padippakam.com



நாடகம் என்ற நிஜத்தைத் தரிசிக்கும் படைப்புக்களைத் தருவதோடு நாடகம் சனங்களுக்குப் பிடிக்காது என்று தவறான முடிவுகளில் வாழும் எழுத்தர்களுக்கும் வழிகாட்டும் வகையில் இன்றும் நாடகம் படைத்து வந்துள்ளார்கள் - வருகிறார்கள்.

இலக்கியம் என்பதை வாழ்வின் மறுபதிப்பு என்பர். அப்படியானால் நாடகம் என்பதை வாழ்வின் நடைமுறை எனலாமா?

இன்று பொங்கு தமிழ் என்று ஈழத்தமிழன் உலகு எல்லாம் தமிழ் பரப்பும் வரலாற்றில் இந்த "எதிர்பார்ப்புகள்" நாடக நூலும் ஒன்று எனலாம்.

நாச்சிமார் கோயிலடி இராஜனை, 1961 இல் அவரது ஒன்பதாவது வயதில் இலங்கை வானொலி C.சண்முகம் எழுதி வண்ணை கலைவாணர் நாடகமன்றத்திற்காக T.S.லோகநாதன் தயாரித்த ஈழத்தின் தலைசிறந்த நாடக நெறியாளர்களில் ஒருவரான S.T.அரசு அவர்களின் இயக்கத்தில் யாழ் மனோகரா அரங்கில் மேடை ஏறிய "சரியா தப்பா" நாடகத்தில் பல்கலை வித்தகன் சின்னமணி போன்ற கலைஞர்களுடன் நானும் பங்கேற்ற போதே அறிந்தவன்.

பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரி இல்ல நாடகப் போட்டிக்கு நான் நடுவனாகச் சென்று "மனம் திறந்தபோது" என்ற நாடகத்துக்கு முதற்பரிசு அளித்துவிட்டு அதன் இயக்குநரைச் சந்தித்த போது "எட நீ யாடாப்பா" எனத் திகைத்தவன். பின் புலவர் தட்ஷணா மூர்த்தியின் "ரகுபதி ராகவ ராஜாராம்" (இராமாயணம்) நாடகத்தில் இராவணனான என்னுடன் தன் மீசையை இழந்துவிட்டு லஷ்மணனாக இணைந்தவன். இடையே வில்லிசையில் கோலோச்சியதை

www.padippakam.com



அறிந்து பெருமைப்பட்டவன்.

மண்ணின் அவலங்கள். புலம் பெயர்ந்தோம் அவனும் நானும். தொடர்புகள் அறுந்தன. நான் பாரிசில்...

ஒரு நாள் ஜெர்மனியிலிருந்து, ராட்டிங்கன் நகரின் ஆதவ கிருஷ்ணா கலைமன்ற நிறுவனர்... கதிர்காமநாதன் தொலைபேசியில் ஐரோப்பிய ரீதியான நாடகப் போட்டிக்கு நடுவராக வரித்தார்.

கரும்பு தின்னக் கூலியா!

சிறந்த நாடகம் - சிறந்த நெறியாள்கை, சிறந்த நடிகர் (அன்ரன் பிலிக்ஸ்) சிறந்த நடிகை (பெனடிக்ரா ஞானச்செல்வம்) என ஒரே நாடகத்துக்கே பல பரிசுகளை வழங்கிவிட்டு நிமிர்ந்தால் அது நமது இராஜனின் நாடகம் "எதிர்பார்ப்புகள்." விட்டுப் போன தொடர்புகள், கலையைக் காதலிக்கும் அவருக்கும் எனக்கும் மீண்டும் ஒட்டுப் போட்டுவிட்டது.

அவர் ஏற்கனவே மேடை ஏற்றிய உறவுகள் நாடகத்தை "நினைவு முகம்" என்று சின்னத்திரைக்கு இயக்கவும் நீர்க்கோலம் என்ற நாடகத்தை ஒளி நாடாவில் பார்க்கவும் "வீடு" என்ற நாடகத்தை யார் இவர்கள் என்ற பெயரில் அவர் நெறிப்படுத்திய போது அதில் நடித்தும் அவர் படைப்புக்கள் பலவற்றை ரசித்தவன் நான். ஐரோப்பிய ரீதியில் நான்கு ஆண்டுகள் சிறந்த நாடகம் - சிறந்த இயக்குநர் என்று தங்கப் பதக்கங்களும் அன்ரன் பீலிக்ஸ், பெனடிக்ரா ஞானசெல்வம், செல்வி ரூபி... நவரத்தினராஜா - சித்திரா - தங்கராசா - அனுலா - மனோஹிமன் செல்வன் - அசோக் குலதாசன் - செல்வன் மோகனதாஸ் என ஒரு மிகச் சிறந்த நடிகர்

www.padippakam.com



வரிசையை புகழ் மேடைக்கு அழைத்து வந்தவர்.

இந்நூலில் - "உறவுகள்" - "எதிர்பார்ப்புகள்" "நீர்க்கோலம்" "சுருதி பேதம்" "சுமைகள்" "வீடு" "யார் இவர்கள்" "பாவலன் பெற்ற பரிசு", "வந்த வழியை நாங்கள் எல்லாம் சிந்திச்சுப் பார்க்கவேணும்" என நவரத்தினங்களாகப் பதிவுசெய்யப் பெற்றிருக்கின்றன.

நாடகம் நடிப்பதற்குரியதாக அமைய வேண்டும் என்ற யதார்த்தத்துக்குரியதாக அவை அமைந்துள்ளன. மேடையில் அவற்றை அரங்கேற்றி பரிசில்களும் பெற்று அதை நிருபித்துள்ளார். அவரே ஒரு மிகச் சிறந்த நடிகராக இருப்பதும் இதற்கு ஒரு முக்கிய காரணம் எனலாம். என் தயவுடன் வழிவிடுங்கள் "சின்னத் திரைப் படத்தில் தன் பாத்திரத்தில் வாழ்ந்தார் என்பதே பார்த்தவர்கள் அனைவரின் ஒட்டுமொத்த அபிப்பிராயமாகும் - நினைவுமுகம் திரைப் படத்தில் அவரும் - அன்ரன் பீலிக்சும் நடித்த ஒரு உணர்ச்சி மிகுந்த காட்சியில் அவர்கள் நடிப்பைப் பலமுறை பார்த்த ஐரோப்பாவின் சிறந்த நாடக இயக்குநர்களில் ஒருவரான "பரா" தட்சணாமூர்த்தியும் சின்ராசாவும் தவில் சமா வைத்த மாதிரி இருக்கிறது என்று விதந்துரைத்ததும் குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த நாடக நூலை அவர் பதிப்பித்தது - உலகம் எல்லாம், சிதறுண்டு, வாழும் கலைத்தாகம் கொண்டோர்கள் எல்லாம் ஒரு நல்வரவாகும். உலகமெல்லாம் வாழும் நம்மவர்கள் நல்ல நாடகப் பிரதிக்காக தேடல் செய்யும் கலைஞர்கள் அவரின் அனுமதியுடன் அரங்கேற்ற முனையவேண்டும். - நாடகத் தமிழையும் உலகெங்கும் பரப்பியவர், தமிழ் ஈழத் தமிழர்தான் என்று வரலாற்றுக்

www.padippakam.com



குறிப்பில் இடம் பெற வழிசெய்ய வேண்டும்.

இந்நூலுக்கு அறிமுகவுரை எழுத வாய்த்ததை நான் பெருமையாக உணர்ந்து, என்னைக் கலைபேச வைத்த மறைந்த என் ஆசான் ஈழத்துக் கலையரசு மு.சொர்ணலிங்கம் ஐயா அவர்களை வணங்கி அமைகிறேன்.

*என்றும் கலைக் காதலன்*

**ஏ.ரகுநாதன்**

*15.08.2001*

தமிழாள் கூத்தவை
95, Rue Des Poissonners
75018, Paris France

படிப்பகம்

www.padippakam.com

# நுழைவாயில்...

கருவில் உருவான காலமுதல் காதலித்து
உருவமொடு உணர்வு தந்தென்னை உலகிற் பிரசவித்த அம்மா
கூத்தாடுத லொன்றும் குறைவான செயலில்லை என்று
நாற்பதாண்டுகளின் முன்னேயே மனதிலேற்று - என்னை
நாடகமாட நல் ஒப்புதல் தந்த - ஐயா
பொருளீட்டா பிள்ளையிவன்
பொருளாதார சிக்கலில் உழல்கின்றானென்று,
உங்கள் மனம் புலம்புவது
என்காதில் கேட்கிறது!
ஆனாலும் என்ன செய்ய,
பிஞ்சு வயதிலென் நெஞ்சில் நுழைந்து
கொஞ்சம் கொஞ்சமாய்
என்னை அடிமையாக்கி
இன்றெனக்கு ஆன்ம சுகம்தரும்
எந்தன் அருங்கலைகளாம்
வில்லிசையால், நாடகத்தால்- கொஞ்சம்
புகழீட்டி வைத்துள்ளேன்,
உங்களுக்கும் என் சந்ததிக்கும் சேர்த்து!
இன்னும் ஒரு நூல் எழுத என் ஆயுள் நீளுமோ?

படிப்பகம்

www.padippakam.com



**என்றோர் ஐயம் என்னுள் எழுந்ததனால்...**

**கலைஞனாய் உலகமேற்க என்னைப் பெற்றவரே!**
**உங்கள் பாதம் தொட்டு வணங்கி**
**எந்தன் எதிர்பார்ப்புகளின்**
**நுழைவாயிலில் நிற்கின்றேன்...**

1993ல் "பாவலன்பெற்றபரிசு"லிருந்து இருந்து 2000ல் "வீடுகள்" வரை எனது நாடகங்களை பார்த்து ரசித்து, பாராட்டி, விமர்சித்து இந்த நாடகங்களால் ஏற்பட்ட பாதிப்புகளை என்னை உணரவைத்து தொடர்ந்து நாடகங்கள் எழுதவும், இயக்கவும் எனக்கு உற்சாகம் தந்த ஜேர்மன் பிறேமன் வாழ் இரசிகப் பெருமக்களுக்கும் பிறேமன் தமிழ்க்கலை மன்ற உறுப்பினர்களுக்கும் என் இதயம் நிறைந்த நன்றிகளோடு, என்னை அறிந்தவர்களாகவும், என் முகமறியாதவர்களாகவும் இருக்கும் வாசகர்களே!

எனது முதல் நாடகநூலுக்கு உங்கள் பேராதரவைத் தருவீர்களென்ற எதிர்பார்ப்புகள் நெஞ்சத்தை நிரப்ப நுழைவாயிலில் உங்களை வரவேற்பதில் மகிழ்கின்றேன்.

பட்டறிந்தவையும் தேடலும் துணையாயிருந் ததால் நாடகங்கள் எழுதுவது பெரிய சிரமமாயிருக்கவில்லை. ஆனால் நாடகங்கள் எழுதுவதைவிட முன்னுரை எழுதுவது கடினமாயிருந்ததென்பது உண்மையாகிப் போனது.. அதனாலேதான், இந்நூலுக்குப் பின்னுரை ஒன்றையும் எழுதவேண்டியவனானேன். யாரிவன்? இவனுக்கு ஏனிந்த நாடக ஆர்வம்? எப்படி வந்தது என்பதையறிய ஆவலேற்பட்டால் விடை பின்னுரையிலுண்டு.

www.padippakam.com



பாவலன் பெற்ற பரிசு....

1992ல் நிறுவப்பட்ட பிறேமன் தமிழ்க்கலை மன்றம் இலைமறை காயாகவிருந்த பல கலைஞர்கள் அரங்கேறவும், அவர்தம் திறமைகள் வெளிப்படவும் களமாயமைந்தது. பிறேமன் தமிழ்க்கலை மன்றத்தின் அறிமுகவிழாவில் பாரிஸ் கலைஞர் பரா அவர்களின் எங்கே போகிறோம் நாடகம் மன்றக் கலைஞர்களால் மேடையேற்றப் பட்டதனால் நாடகம்பற்றிய புதிய பார்வையொன்று பிறேமனில் தோன்றியதென்றால் அது மிகையல்ல.

தை 93ல் பூவரசு இனிய தமிழேட்டின் இரண்டாவது ஆண்டு விழாவை நிறைவு செய்வதற்கு ஓர் நாடகம் வேண்டும் என பிறேமன் தமிழ்க் கலை மன்றத்திடம் கேட்கப்பட்டது. விழாவிற்கு ஒருவாரம் மட்டுமே அவகாசம் இருந்தது. அதனால் ஓர் இரவில் பிரதிஎழுதி... மறுநாட்காலையில் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் தனித்தனியாக ஒலி நாடாவில் வசனங்களை குரலில் பதிவுசெய்து, குரலிலும் எழுத்திலுமாக பிரதி வழங்க... நடிகர்கள் வேலைக்குப் போகும்போதும் வரும் போதும், கேட்டும் பார்த்தும் உரையாடல்களை மனனம் செய்து தினசரி இடைவிடாத ஒத்திகைக்கு சமூக மளித்து ஒத்துழைத்தனர். ஆனாலும் உரையாடல் நடிகர்களுக்கு சரியாக மனனமாகாமையால் நண்பர் பீலிக்ஸ் பிரதி பார்த்துதவ (Prompt) பாவலன் பெற்ற பரிசு நாடகத்தை 18.01.93ல் அரங்கேற்றினோம். பிறேமன் தமிழ்க் கலைமன்றத்தினர் நல்ல நாடகங்களை

www.padippakam.com



மேடையேற்றுவார்கள் என்ற நம்பிக்கையை பாவலன் பெற்ற பரிசு இரசிகர்களுக்கு ஏற்படுத்தியது.

உறவுகள்...

தமிழீழ விடுதலைப் போராட்ட சூழலும் அதையொட்டி எழுந்த திட்டமிட்ட இனவாதக் கொடுமைகளும் என்னால் நேரடியாக அனுபவித்து உணரப்படாதவை. எனது தங்கை கருணாவதியும், மருகன் வதனனும் புலம்பெயர்ந்து ஜேர்மனிக்கு வந்த போது தாயகத்தில் எம் உறவுகளின் துன்பத்தையும், தமது அனுபவங்களையும் விவரித்ததும், என் தாயாரிடமிருந்து அவ்வப்போது வந்த கடிதங்கள் தாங்கி வந்த ஏக்கங்களும் என்மனதில் அழுத்தமாகப் பதிந்தன. இவற்றைச் சுமந்து உலாவிவந்த வேளையில், ஒருநாள் நண்பர் பீலிக்ஸ் அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தபோது நகைச்சுவையாக ஒரு முதியவர்போல பேசினார். அவரின் குரலில் இருந்த கனிவும், தளர்ச்சியும் என்னைக் கவர்ந்து, உறவுகளின் சண்முகம் என்னுள் உருவானார். உறவுகளின் நாடகக் கதையை என் சகோதரர் கணேஸ் தம்பையாவுடன் விவாதிக்க, மதபேத மற்ற நட்பை உணர்த்திய மரிய-தாஸ் என் மனத்திரையிற் தோன்றினார்.

உறவுகள் நாடக அரங்கேற்றத்திற்கு இரு வாரகாலம் மட்டுமே இருந்தது! சியாமளா வேடத்தில் நடிக்கவிருந்த சித்திரா-பீலிக்ஸ் உடல் நலம் குன்றி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். யாரை நடிக்க வைப்பது என நான் குழம்பிக்கொண்டிருந்தேன்..



படிப்பகம்

www.padippakam.com



"அண்ணை செல்வத்திடம் கதைச்சுப் பார்ப்பம்... பெனடிக்ரா... நடிக்கக் கூடிய ஆள். ஆனால்... அவ இப்ப கர்ப்பமாக இருக்கிறா..." என்றார் பீலிக்ஸ்... தயக்கம்! எப்படிக் கேட்பது... இந்நிலையில் கேட்கலாமா?... பீலிக்ஸ் கேட்டுவிட்டார். ஒப்புதல் தந்தார் ஞானசெல்வம். சியாமளாவாக திருமதி பெனடிக்ரா ஞானசெல்வம் நடித்தார்... அடுத்த தம்பதிகள், தங்கராஜா-- சித்திராதேவி. இந்தக் கலை நேசிப்பாளர்களின் முழுமையான ஒத்துழைப்பு... உறவுகளை வெற்றி நாடகமாக்கியது... பூவரசு இனிய தமிழேட்டின் பாராட்டும், அட்டைப் பட அலங்கரிப்பும் உறவுகளுக்குக் கிடைத்தது...

ஜேர்மனி இராட்டிங்கன் நகரில் நடைபெற்ற முதலாவது ஐரோப்பிய நாடகப்போட்டி, ஈழநாடு பத்திரிகையின் ஆதரவில், ஜேர்மன் - இராட்டிங்கன் ஆதவ கிருஷ்ணா கலை மன்றத்தினரால் நடத்தப் பெற்றது... உறவுகள் இப்போட்டியில் முதலிடம் பெற்று, சிறந்த நடிகையாக சிவபாக்கியம் கதாபாத்திரத்தில் நடித்த திருமதி சித்திராதேவி தங்கராஜா தங்கப்பதக்கம் பெற்றார்... அவரை மேடைக்கு அழைக்குமுன் - திருமதி பெனடிக்ரா ஞானசெல்வம் அவர்களை தவறுதலாக அழைத்ததும்... சிறந்த இயக்குனராக எனது பெயர் ஒலிபரப்பப்பட்டு... இல்லையில்லை.. தவறென்று, பரிசளிப்பு மேடையிலேயே அரிதாரம் பூசாத ஓர் குட்டி நாடகத்தை, விழா அமைப்பாளர்கள் நடாத்தியதும் எம்முள் மிகுந்த வேதனையைத் தந்தது... நாம் கலைஞர்கள் என்ற உணர்வுடன் அன்று நடந்து

www.padippakam.com



கொண்டதால், இன்று கலைஞர்கள் ஓரணியாக வளரவும்... நடுவர்களையும் அறிவிப்பாளரையும் தமது எண்ணத்துக்கு இசைய வைத்து ஈனச் செயல் புரிந்த எழுதுகோல் ஊன்றிகளும், கலைக்காவலர்களும் இன்று மக்களாலும் கலைஞர்களாலும் நிராகரிக்கப்பட்டு காணாமற் போய்க் கொண்டிருக்கிறார்கள்ளென்பதும் ஐரோப்பா அறிந்த உண்மை.

உறவுகள் ஹேர்ணே, ஹம்போர்க் ஆகிய நகரங்களில் தொடர்ந்து மேடையேற்றப்பட்டு மேலும் பாராட்டுகளைப் பெற்றது... பாராட்டு கலைஞனுக்கு அவசியம். அதே வேளை பாராட்டைத் தட்டிக் கொடுக்கும் ஊக்கியாகக் கலைஞன் கொண்டால் மட்டுமே அவனால் நிலைக்க முடியும். பாராட்டுரைக்கும் புகழுரைக்கும் கலைஞன் மயங்கினால், அவனுக்கு அது படுகுழியாக அமைந்து விடும் என்பதை உறுதியாக நம்புவன் நான். அதனால் ஆண்டு விழாவிற்காக எழுதும் நாடகம் உறவுகளைப் போல - சிறப்பாக அமைய வேண்டும் என்பதிலும், சென்ற நாடகப் போட்டியில், பரிசுக்காக, மேடையில் ஏற்றப்பட்டு, தனது சக நடிகைக்கு பரிசு கிடைத்த திருப்தியோடு மேடையை விட்டிறங்கிய என்னினிய சகோதரி பெனடிக்ராவுக்கு அடுத்த போட்டியில் சிறந்த நடிகைக்கான பரிசு பெற்றுக் கொடுக்கக் கூடிய பாத்திரம் ஒன்றை அமைக்க வேண்டுமென்ற அக்கறையும் என்னுள் இருந்தது.

இந்த வேளையிலே, 1994ல் தமிழகத்தில் ஏதிலியர்களாக வாழ்ந்து கொண்டிருந்த எமது உறவுகளுக்குத் தேவையான உதவிகளை

www.padippakam.com



இதயபூர்வமாகச் செய்துகொண்டிருந்த அருட்திரு அன்ரனி அடிகளார் ஜேர்மனிக்கு வருகை தந்திருந் தார். அவருடன் நிகழ்ந்த சந்திப்பு தமிழக அகதிமுகாம்களில் எம் உறவுகள் பலகோணங்களில், அனுபவிக்கும் துன்பத்தை உணர்த்தியது. அவற்றை அருட்டுணர்வாகக் கொண்டு பிறந்த கதையை மன்றச்செயலாளர் நித்தியேந்திரனுக்கு வில்லுப்பாட்டிற் காகப் காரில் பயணித்து கொண்டிருந்த போது விபரித்தேன். வியந்தார். அதுவே எதிர்பார்ப்புகள்.

இருபத்தைந்து வயது நிரம்பிய பெனடிக்ரா ஞானசெல்வம் அகதிமுகாமில் வாழும் ஐம்பது வயதுத் தாயாக வேடமேற்று அன்ரன் பீலிக்ஸ்சுக்கு ஈடுகொடுக்கும் குணசித்திர நடிகையாக பாராட்டுப்பெற, செல்வி மோகனரூபி நடிகையாக அறிமுகமாகி வரவேற்புப் பெற, தமிழக அகதி முகாம் அதிகாரியாக முதன் முதல் பிறேமனில் மேடையேறியே கே.பி.நவரெட்ணராஜா தனக்கென ஒரு தனியிடத்தை ரசிகர்களிடம் பெற்றுக் கொண்டார்.

போட்டிக்குப் புறப்பட்டோம் ஈஸ்வரியாக நடித்த திருமதி சித்திரா-பீலிக்ஸ் நாட்டிலில்லை மீண்டும் நடிகை தேடும் படலம். மன்றத்தின் மீதும் கலைஞர்கள் மீதும் மட்டற்ற நேசம் கொண்டிருந்த திருமதி பூமணி நவரத்தினம் அவர்கள் ஏற்கனவே தன் மகள்மார் சந்திரவதனியையும், மோகனரூபியையும் நாடகத்தில் நடிக்க அனுமதித்தவர். இப்போது மருமகள் செல்வி கௌரி நாகலிங்கம் நடிப்பதற்கும் ஒப்புதல் தர கௌரி யை ஈஸ்வரியாக்கி போட்டிக்குச் சென்றோம். நடுவர் குழு

www.padippakam.com



சுயமாக இயங்கியது என்பது தீர்ப்புரையில் தெரிந்தது.

ஒரு கப்பலுக்கு மீகாமன் எவ்வளவு முக்கியமோ அப்படியே ஒரு நாடகத்திற்கு அதன் இயக்குநர்.. ஆகவே.. இயக்குநரிலிருந்து பரிசுகளை அறிவிக்கிறோம்.. என ஆரம்பித்த தீர்ப்புரை சிறந்த இயக்குநர்: எதிர்பார்ப்புகளின் இயக்குநர். சிறந்த நடிகர்: எதிர் பார்ப்புகளின் இராசையா சிறந்த நடிகை: எதிர்பார்ப்பு களின் செல்லம்மா - சிறந்த துணை நடிகை: எதிர்பார்ப்புகளின் உமா "சிறந்த நாடகம் எது? நீங்களே சொல்லுங்கள்" என சபையோரை தலைமை நடுவர் ஏ.ரகுநாதன் அவர்கள் கேட்க, ஒருமித்த குரலில் "எதிர்பார்ப்புகள்" என சபையோர் முழங்கியது. இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. 77இல் யாழ்ப்பாணத்தில் "ரகுபதி ராகவ ராஜாராம்" நாடகத்தில் இலக்குவனாக நடித்து பதினேழு ஆண்டுகளின் பின், வெண்தலையோடு ஏ.ரகுநாதன் அவர்களை நடுவராக அரங்கத்தில் கண்டது நெஞ்சில் பழைய நினைவுகளை நிழலாடச் செய்தன...

நடுவர் குழு தீர்ப்புக்குப் பின் நடிகர்களை நேரில் பாராட்ட ஒப்பனை அறைக்கு வந்து "யாரப்பா அந்த இராசையா... தம்பி... உனக்கு புள்ளிபோட முடியாதவாறு அழவைத்து விட்டாய்.. தாடியைக் கழற்றும் ஆளை வடிவாப் பாக்க..." என்று நடுவர் ரகுநாதன் கேட்க "தாடி ஒரிஜினல் ஐயா!" என்றார் பீலிக்ஸ்

"இந்தியாக்காரரை எங்கயப்பா தேடிப் பிடிச்சனீங்கள்..."

www.padippakam.com



"வணக்கம் சார்! நீங்க தமிழ்நாட்ல எந்த ஊருங்க?...."

குங்குமப் பொட்டும், பேச்சும் அசல், 'இவை நவரெட்ணராஜாவுக்கு நடுவர்களிடமிருந்து வந்த பாராட்டுகள்! "பிள்ளைகள். உங்களுக்கு பாராட்டு மட்டும் போதுமானதல்ல. நடிப்பதற்கு மேடையேறினால் இன்றும் நாக்கு வளைக்கும் எங்கள் சமூகத்தில் துணிந்து மேடையேறி வந்து போட்டியிட்டு நடித்து எங்களை திணறடித்துவிட்டீர்கள்.. ஒரு நாடகத்தில் மூன்று பெண்கள், நடிப்புக்கு சமவாய்ப்பளிக்கும் பாத்திரங்கள்.. சிறப்பாக நடித்தீர்களம்மா" என்ற பாராட்டுகளைப் பெற்றனர் பெனடிக்ரா, கௌரி, ரூபி, ஆகியோர்... நித்தியேந்திரனும் வதனி நவரத்தினமும் உப பாத்திரங்களாகத் தோன்றினராலும்... அவர்களும் நாடக மாந்தர்களே! நடுவர் குழுவில் பங்கேற்ற ஏ.ரகுநாதன் அவர்களும், இரா. குணபாலனும் எதிர்பார்ப்புகளை சின்னத் திரைப் படமாக்கவும் எமது நடிகர்களே அதில் நடிக்கவேண்டும் எனக் கேட்டதும் மனநிறைவைத் தந்தது... ஆயினும், எந்தத் தாய்க்கும் முதற்பிள்ளை மேல் பற்று அதிகம் தானே? அதனால் உறவுகளை படமாக்குங்கள் எனக் கேட்டேன். உறவுகள் "நினைவு முக"மானது.. எதிர்பார்ப்புகளின் வெற்றி மன்ற உறுப்பினர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திய போதிலும், நண்பர்களாக இருந்தபோது ரசிகர்களோடு சேர்ந்து எம்மைப் பாராட்டியோர், இலக்கியவாதிகளெனப் பெயர் பெற்றோர், நண்பர்கள் தங்கள் சுய விருப்புகளுக்கு தலையசைக்க மறுத்ததால் பாராட்டினால் தீட்டு என்று

www.padippakam.com



தங்கள் செவிமூடி, கண்மூடி, பேனாவையும் மூடியதை எண்ணும் போது, இலக்கியம் என்பது உண்மையை பதிவாக்குவது என்பதை இலக்கியதாரர் சிலரின் சுயவிருப்பு அழிக்குமா என்ற வினா எம்முள் எழுந்தது. பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் அழிந்துபோகுமா? சீப்பு ஒழிக்கப்படுவதால் திருமணங்கள் நின்று போகுமா? இல்லைத்தானே.... பிரேமன் தமிழ் கலை மன்றத்தி லிருந்து சிலர் பிரித்தழைத்துச் செல்லப்பட்டபோது, இன்னும் உழைப்பும் முயற்சியும் தீவிரமாக வேண்டுமென்ற உணர்வே மன்றத்தினருக்கு மேலோங்கியது...

எம்மன்ற நிறுவனர்களின் ஒருவரும் மனம் நிறைந்ததால் வாயாரப் புகழ்ந்தும், நிறைவு பெறாவிடின் (சிறு குறைகாணினும்) ஒருவார்த்தையில், “சீ... குப்பை“ என்றும் நெத்தியடி விமர்சனத்தில் எம்மை அதிர்ச்சி அடையவைக்கும் திரு. கந்தசாமி அவர்களின் விமர்சனத்தால் உருவான மகேஸ் - உமா பாத்திரங்கள் நினைவு முகத்தை, உறவுகளில் இருந்து இன்னுமொருபடி மேலுயர்த்தியது. அதுமட்டுமன்றி, அடுத்த நாடகம், இன்னும் திறமாக இருக்க வேண்டும் என வெற்றிக்கு சொன்ன வாழ்த்தோடு ஒரு வரியை அழுத்தமாகச் சொல்லி வைத்தார்.

நினைவுமுகம் படத்தினால் வந்த பாராட்டும், அழலாடி, ஆசைத்தம்பியின் ஈழமுரசு விமர்சனப் போரும் இன்னும்... சிறந்த படைப்பாக நீர்க்கோலம் உருப்பெற வேண்டுமென்ற பாரிய அழுத்தத்தை எனக்குத் தந்தன.

www.padippakam.com



## நீர்க்கோலம்

என் நெஞ்சில் சூல் கொள்ளத் தொடங்கியது...

பெற்றோரின் பொறுப்பைத் தாமேற்று சகோதரர் களுக்காக தங்கள் இளமையை, வாழ்வின் வசந்தங்களை ஐரோப்பாவின் குளிருக்குத் தீனியாக்கி மனத்தாலும், உடலாலும் நலிந்து போய்க் கொண்டிருக்கும் இளைஞர் களையும், தங்கள் பிள்ளை பொறுப்பற்றவன் என்பதைத் தெரிந்திருந்தும் உயிர்ப் பாதுகாப்புக்காக பெற்றோர்களால் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட இளைஞர்களின் மதுமயக்கமும், நெஞ்சை நெருடின. ஐரோப்பிய நாணயங்கள் பல்லாயிரக்கணக் கான ரூபாய்களாக மாறிக் கையில் கிடைக்கும்போது பண மயக்கத்திலாழும் பெற்றோரும், சகோதர்களும், இவர்களோடு ஜேர்மனியில் வாழும் வதிவிட அனுமதி (Visa) யை தராதரப்பத்திரமாக வைத்து மணமகன் தேடுவோருமென்று பலர் மனக்கண் முன் வந்து நின்றனர். இவர்களை பதினொரு நாடகமாந்தர்களாக்கி உருவானது நீர்க்கோலம்.

1995ல் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யேர்மனிக்கிளை நடாத்திய ஐரோப்பிய நாடகப் போட்டியில் முதற் பரிசுக்குரிய நாடகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு. சிறந்த நாடகப் பிரதி, சிறந்த இயக்கம், சிறந்த நடிகை (செல்வி மோகனரூபி நவரத்தினம்) சிறந்த குழந்தை நடிகர் (செல்வன் அசோக் குலதாசன்) பரிசுகளுக்கான தங்கப் பதக்கத்தையும் பெற்றது நீர்க்கோலம்

www.padippakam.com



சுமைகள்...

ஒருநாள் நண்பர் பிரேமன் செ.யோகநாதனுடன் கதைத்துக்கொண்டிருந்தபோது வறுமையின் கொடுமையால் திருமணம் கனவாகிப்போன கன்னியரின் வாழ்வை, ஐரோப்பாவின் செல்வச் செழுமையால், வாலிபத்தைக் கடந்தோர் சிலர் தம் விருப்பிற்கு ஏற்ப வளைக்க எண்ணும் நிலைபற்றிய பேச்சு எழுந்தது. இதனால் புதியதோர் தேடல் பிறந்தது.

தாயகத்திலிருந்து இறக்குமதிப் பொருளாக சிலரால் கணிக்கப்படும் மணப்பெண்கள்.., பணம் பத்தும் செய்யும் என்பதை மெய்பிக்கும் சில புலம்பெயர்வாழ் உறவுகள்,. வட்டியும் சீட்டும் அட்டையாகி உழைப்பை உறிஞ்சிய அவலத்தால் நலிந்து.. புலம்பெயர் நடை-பிணங்களாக உலவுவோர், தன் எழுதுகோலுக்கும், சிந்தனைக்கும் மதிப்பளிக்கும் நேர்மைமிகு எழுத்தாளன், அரங்கேற்றம் காண்பதொன்றே ஆடற்கலையின் நிறை வென்றெண்ணும் சில பெற்றோர்கள் ஆசிரியர்கள்: இவர்களின் எண்ணங்களை தாங்கி உருவானது சுமைகள்.

நான்காவது நாடகப் போட்டியில் சுமைகள் முதற் பரிசு பெற, கோமதி பாத்திரத்தினூடாக திருமதி பெனடிக்ரா ஞானசெல்வம் தன்னையோர் குணசித்திர நடிகையாக நிறுவி இரண்டாவது தடவையாக சிறந்த நடிகைக்கான தங்கப்பதக்கத்தைப் பரிசாகப் பெற்றுக் கொண்டார். திருமதி அனுலா மனோகிமன் தனது பாத்திரத்தின் கனத்தையுணர்ந்து அற்புதமாக நடித்து

www.padippakam.com



தானுமோர் சிறந்த நடிகையென்பதை நிருபித்தார். சிறுமியாக என் நாடகங்களில் மேடையேறிய மேரி சாலினி நவரட்ணராஜா செல்வியாகிய பின்னும் தன் நடிப்பாற்றலை வெளிப்படுத்தி பாராட்டுகளைப் பெற்றுக் கொண்டார். திருமதி ஷர்மி பாக்கியநாதனுக்கு இதுவே முதல் மேடையானபோதிலும் மிக மிக இயல்பாக நடித்திருந்தார்.

## சுருதிபேதம்

96ல் கனடாவில் அடுக்குமாடிக் கட்டிடங்களின் வரவேற்பு நுழைவாயில்களிலும், அதையடுத்துள்ள பச்சைப் புற்றரைகளிலும் எம் முதியவர்கள் அமர்ந்து... அவரவர் புலம் பெயர் துயரங்களை... ஆற்றாமைகளை ஒருவருக்கொருவர் முறையிட்டு ஆறுதல் பெறுவதை நேரிற் கண்டேன். செவியில் நுழைந்து நெஞ்சிற் கனத்த சம்பவங்களால் சுருதிபேதத்தின் நல்லதம்பி உருவானார். வசதியான அகதி வாழ்க்கையிலும் வளர்ந்து விட்ட வரட்டுக் கௌரவங்கள் மனிதனைக் மாற்றுகின்றன. உடன் பிறந்தார் இடையே ஏற்படும் பொறாமை அதனால் பெற்றவர் படும் துன்பம் போன்ற உளவியற் பாதிப்புகளை உள்ளடக்கி பிறந்தது சுருதி பேதம்.

## யாரிவர்கள்?

தமிழீழ மண்ணுக்குள் இள மங்கையர்களை புதைத்த நரபலியாளர்களுக்கும், பாலியல் வன்முறை வெறியருக்கும் பாதுகாப்பு அளித்துக் கொண்டு நல்லைக்

www.padippakam.com



கந்தனுக்கு வானத்திலிருந்து மலர் தூவி தங்கள் கொடுமையை மறைக்க முயன்றோரின் முகத்திரை கிழித்து முகமறிய முதியவர் விசாகப்பெருமாள் வன்னியிலிருந்து ஐ.பி.சி. வானொலிக்கு எழுதிய மடலை நாடகப் பேராசான் ஈழக்கூத்தர் ஏ.சி. தாசீசியஸ் அவரகள் படிக்கக் கேட்டேன். ஈழக்கூத்தரின் குரல் வளத்தால் முதியவர் விசாகப்பெருமாள் என் கண்ணில் விரிந்து நெஞ்சில் பதித்த கனத்தை "யார் இவர்கள்?" நாடகமாக்கி ரசிகர்களின் முன் இறக்கி வைத்தேன். யாரிவர்களில் புதிதாக அறிமுகமானவர் சரோஜினிதேவி நேமிநாதன்.-

"வந்த வழியை நாங்கள் எல்லாம்
சிந்திச்சு பாக்க வேணும்..."

சிறுவர்களை வைத்து அவர்களின் குரல்களில் நேரடியாக நாடகமொன்றை மேடை ஏற்ற வேண்டும் என்று விரும்பியது மன்றம். இசையோடு இணைந்தால், சிறுவர்களுக்கு இலகுவாக மனனம் வரும் என்ற நம்பிக்கையில்.. ஜேர்மனிய குடி உரிமை, பொருளீட்ட மட்டுமே தமிழார்வம், இன உணர்வு, மனமாற்றம் என்ற மதமாற்றம் இவைகளை நாடகமாந்தர்கள் ஆக்கி எழுதப்பட்ட தாளலய நாடகம். பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களை நடிக்க வைத்து திருமதி பெனடிக்ரா ஞானசெல்வம் அவர்களின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்டது "வந்த வழியை நாங்கள் எல்லாம் சிந்திச்சு பாக்க வேணும்..."

www.padippakam.com



வீடு

நண்பர் எழுத்தாளர் இராஜன் முருகவேல் அவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது இளைஞர்களாக புலம்பெயர்ந்து வந்த எம்மவர்கள், இன்று மூன்றாவது சந்ததியான பேரப்பிள்ளைகளைக் காண ஆரம்பித்திருக்கிறார்கள். மூன்று சந்ததிகளையும் தொடர்புபடுத்தி நாடகம் ஒன்றை எழுதுங்கள் என்றார் .மூன்று சந்ததியையும் தொடும் புள்ளிகளால் உணரப்படக் கூடிய பிரச்சினைகள் பற்பல.அவற்றில் எதை நாடகத்தின் மையக் கருவாகக் கொள்வதென எண்ணினேன்.

ஜேர்மனிய வாழ்வில், வதிவிட அனுமதி - நிரந்தர வேலை, இந்த படிக்கட்டுகளை தாண்டி இன்றைய புதிய தளம் வீடு. தொலை நோக்கற்ற பார்வை, அதனால் வரும் இடர்கள், புலம் பெயர் வாழ்வில் மூத்த தலைமுறையும், இளைய தலைமுறையும் சந்திக்கும் புதிய பிரச்சனைகள் இவற்றைத் தாங்கி இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி நாடக மாந்தர்களோடு ரசிகர்களையும் அழைத்துச் சென்ற முயற்சி வீடு. இந்த நாடகத்தினூடாக பீற்றர் குலமும், செல்வி மேரிசாலினி நவரட்ணராஜாவும் ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டனர்.

எனது நாடக மாந்தர்கள் உங்கள் உறவுகளாக, நண்பர்களாக உங்களோடு வாழ்பவர்களாக, நீங்கள் அறிந்தவர்களாக இருக்கிறார்களே என்ற உணர்வையும், பாதிப்பையும் உங்களுக்குத் தருவார்களானால் அதுவே என் எழுத்துக்குக் கிடைத்த வெகுமதியெனப் பூரிப்பேன்.

www.padippakam.com



இந்த நாடகங்கள் பற்றிய உங்கள் விமர்சனங்களை வரவேற்கக் காத்திருக்கிறேன். படைப்பாளர்கள் சிலர் ஒருவரோடொருவர் சந்தித்துக் கொள்ளும்போது இன்னொரு படைப்பாளியைப் பற்றிக் குசுகுசுத்துக் குறைதேடுவதோ, படைப்பாளி முக மறிந்தவர், மரியாதைக்குரியவர், நண்பரென்று தரமற்ற படைப்புக்கு பாராட்டால் முதுகுசொறிந்து விடுவதோ விமர்சனமாகுமா? ஒரு படைப்பிலிருந்து வாசகன் பெறக் கூடிய உணர்வும், வேறு பலகோணங்களில் எப்படியான பாதிப்புகளை அப்படைப்பு சமூகத்திற்கு தரும் என்ற பார்வையும் வெளிப்படுத்தப்பட்டு படைப்பாளிக்கும், வாசகர்களுக்கும் பயன்தருவதாக விமர்சனம் அமைந் தால் வாசகர்களிடம் படைப்புகள் பற்றிய விழிப்பும், ஆர்வமும் படைப்பாளிகளிடம் புதிய உற்சாகமும் தேடல் களும் பிறந்து வளருமென்பது என் நம்பிக்கை. விமர் சனம் ஓர் கலை, அதை வளர்க்க உங்கள் எழுது கோலை எடுங்கள் என்ற வேண்டுகோளை எழுத்தாளர் களுக்கும் வாசகர்களுக்கும் முன்வைக்கிறேன்

எனது நாடகங்களிலே தம்பதிகளாக நடித்த தங்கராஜா சித்திராதேவி, ஞானசெல்வம் பெனடிக்ரா, மனோஹிமன்- (ஜீவகன்) அனுலா மற்றும் திருமதி ஷர்மி பாக்கியநாதன் ஆகியோர் ஒத்திகைகளின்போது தங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதில் பட்ட சிரமங்கள் பலவற்றை நான் அறிந்து மனம் வருந்தினாலும்... இந்த நாடகங்களில் நடித்து இவை மேடையேறி மன்றத்திற்குப் பெருமை சேர்த்தபோது அனைத்துக் கலைஞர்களோடு சேர்ந்து நானும் மகிழ்ந்திருக்கிறேன். அவர்களின்

www.padippakam.com



உழைப்பை எண்ணி நெஞ்சம் நெகிழ்ந்திருக்கிறேன். தாய்மையடைந்த நிலையில் தாமேற்ற பாத்திரங்களை சிறப்பாக நடித்து ஒத்துழைத்த திருமதி பெனடிக்ரா ஞானசெல்வத்திற்கும், திருமதி உமா லிங்கேஸ்வரனுக்கும் நன்றிசெலுத்துவது கடமை-யென்றே கருதுகின்றேன்.

தமிழகம் செல்லும்போது எனது நாடகங்களை நூலாக்கும் ஆவல் நீண்ட நாட்களாக நெஞ்சில் கனமாக இருந்தது. என் எண்ணத்தை ரகுநாதன் அண்ணரிடம் முதலில் தெரிவித்த போது.... "சொல்லாதே... செய்" நூலாக்கும் போது... ஒன்பது நாடகங்களாகப் போடு என்ற அன்புக் கட்டளையை இட்டதோடு, அடிக்கடி தொடர்பு கொண்டு நாடக நூலுக்கான ஆயத்தங்களை மேற்கொள்கின்றேனா என்று நச்சரிக்கவும் தொடங்கி விட்டார். அத்துடன் அமையாது யார் இந்த நாச்சிமார் கோயிலடி இராஜன் என்று... அறிமுகவுரை வழங்கிய என்றும் என் மதிப்புக்குரிய அண்ணன் ரகுநாதன் அவர்களுக்கு முதல் நன்றி.

இந்த நாடகங்கள், நூலுருப்பெற வேலைப் பளுவிற்கிடையே கணனியிற் தொகுத்து பேருதவி செய்த இனிய நண்பரும் எழுத்தாளருமான இராஜன் முருகவேல் அவர்களுக்கு நன்றி செலுத்துவது சம்பிரதாயத் திற்காகவல்ல.... செல்வி மேரிஷாலினி நவரட்ணராஜா விற்கும் மோகனதாஸ் இராஜனும் நன்றிக்குரியவர்களே.

தமிழகம் சென்று.. எழுத்தாளர் இளம்பிறை ரகுமான் அவர்களைச் சந்தித்து என் எண்ணத்தை

www.padippakam.com



வெளியிட.. முதுமையிலும் என் பேனா எழுதும் என்று ஓயாத உழைப்பாளியாக தமிழ் இலக்கிய யாகம் புரிந்து கொண்டிருக்கும் எஸ்.பொ அவர்களிடம் அழைத்துச் சென்றார்...அவரின் மித்ர வெளியீட்டு நிறுவனத்திலிருந்து 77ல் நானறிந்து கால ஓட்டத்தால் மறந்துவிட்ட ஓவியர் இலங்கைநாதனை மீண்டும் அறிமுகப்படுத்தினார் எஸ்.பொ.. இலங்கை நாதனின் ஓவியக் கோப்பிலிருந்து அட்டைப் படத்தை தெரிவு செய்ய, எங்கள் மன்ற இலச்சினையை புதுக்கி, வண்ணமிட்டுளனது... ஜேர்மனியப் பயண நிலையை உள்வாங்கி... ஒரே நாளில், உள்ளோவியங்களை அழகுற வரைந்து என்னை வியப்பிலாழ்த்தி, நூலின் வடிவமைப்புப் பொறுப்பினையும் ஏற்று... அரிய ஒத்துழைப்பை வழங்கிய... ஓவியர் புகழேந்தி (புகழ்) என்றுமென் நெஞ்சில் இடம் பெற்றவர்களில் ஒருவராகிவிட்டார்..

மித்ர வெளியீட்டு நிறுவனத்தின் கணனித் தொகுப்பாளர் சிறீதரனும் அவருடன் இணைந்து பணியாற்றிய சகோதரிகளும் கண் துஞ்சாது அச்சுப் பிழை பார்த்து திருத்தி - நூல் சிறப்புற உழைத்துதவிய நண்பர். ப.தி.அரசு அவர்களும் என்றுமென் நன்றிக் குரியவர்கள்...

தனது அவுஸ்திரேலிய பயண ஏற்பாட்டிற்கிடையே புலம்பெயர்வாழ் தமிழர்களின் கைகளில் தவழவிருக்கும் நூல் அழகுற அமைய வேண்டும் என்பதில் ஆர்வத்துடன் ஆலோசனை வழங்கிய எஸ்.பொ அவர்கள் தன் இலக்கியத் தொடர் யாகத்தை என் கண்முன்னே மெய்ப்பித்தார்.

www.padippakam.com



24.07.2001ல் கட்டுநாயக்காவில் நிகழ்ந்த சொக்கப்பானைத் திருவிழாவால் திட்டமிட்ட என் பயணம் குழம்பி, பதிப்பகத்திற்கு செலுத்தவேண்டிய பணமும் செலவாகி கையறு நிலையில் தமிழகத்தில் நின்றவேளையில், தொலைபேசி யழைப்பில் என் நிலையறிந்து கனடாவிலிருந்து உதவிக்கரம் நீட்டிய என்னினிய நண்பன் சிறீசேகரத்திற்கு நன்றிக்கு மேற்சொல்ல வார்த்தைகளைத் தேடுகின்றேன்.

கடந்த ஒன்பதாண்டுகளில், இந்த நாடகங்களை எழுதவும்...மேடையேற்றவும், என் முழுக் கவனத்தைச் செலுத்துவதற்காக இடையிடையே வீட்டிலிருந்து காணாமற்போன வேளைகளிலெல்லாம், என் குடும்பத்தையும், குழந்தைகளையும் பராமரித்து....என் கலைமுயற்சிகளில் தடையின்றி நான் தொடர்ந்தும் ஈடுபட வழிவிட்டு நின்ற, நிற்கும் என் துணைவி யசோதாவுக்கு நன்றி சொல்வது முகமனுக்காகவல்ல.

*14.12.2001* **நாச்சிமார்கோயிலடி இராஜன்**

**Thambayah Rasu**
**Langlütjensand 6 - 28259 Bremen. (Germany)**
**E-mail : kalaiosai@tamil.com**

www.padippakam.com



# உறவுகள்

ஏ-2

படிப்பகம்

## உறவுகள்

இளவேனில் 1993

| நாடக மாந்தரும் | உயிரூட்டியோரும் |
|---|---|
| சண்முகம் | அன்ரன் பீலிக்ஸ் |
| சிவபாக்கியம் | சித்திராதேவி தங்கராஜா (சிறந்த நடிகைக்கான தங்கப்பதக்கம்) |
| தங்கராஜா | மூர்த்தி |
| சியாமளா | பெனடிக்ரா ஞானசெல்வம் |
| மரியதாஸ் | நாச்சிமார்கோயிலடி இராஜன் |
| லிங்கம் | ஞானசெல்வம் |
| திலீப் | பிரசன்னா மகேஸ்வரன், மோனதாஸ் இராஜன் |
| ரமணன் | மோனதாஸ் இராஜன், சாம் யோனாஸ் பீலிக்ஸ் |
| மகேஸ் | பெனடிக்ரா ஞானசெல்வம் |
| உமா | மோகனரூபி நவரத்தினம் |
| திரைக்குப் பின்னால் : | சித்திரா மணிவண்ணன், கொலின் நித்தியேந்திரன், பிரான்சிஸ் இராஜகுமாரன். |

www.padippakam.com

# காட்சி 1



***களம்***

*சண்முகம் வீடு*

***பாத்திரங்கள்***

*சண்முகம், மனைவி சிவபாக்கியம், சண்முகத்தின் நண்பர் மரியதாஸ்.*

*சண்முகம் வீடு யாழ் நகரிலுள்ள வசதியான வீடு - சண்முகமும் மனைவியும் தம் ஒரே மகனை ஜேர்மனிக்கு அனுப்பிவிட்டு மகனை எண்ணிவாறு இருக்கும். முதுமையடைந்த தம்பதிகள்*

*(திரைவிலகும்போது சண்முகம் பத்திரிகையை வாசித்துக் கொண்டிருக்கிறார்.)*

**சண்:** எங்கள் நாட்டில் இனப்பிரச்சினையில்லை.... ஜனாதிபதி. திரும்பத் திரும்ப பொய் சொல்லுறதே இவங்களுக்கு பழக்கமாப் போட்டுது! (சைக்கிள் மணிச்சத்தம் கேட்டு) எணேய் மணிச்சத்தம் கேக்குது.... என்னெண்டொருக்காப் பாரணை....

**பாக்:** (வந்தபடி) என்ரை ராசா பேப்பர் பாக்கத் துவங்கினால் இனி ஒண்டும் செய்யமாட்டார்.....(வெளியே சென்று திரும்பி வந்தபடி) அங்க ஒருத்தரையும் காணேல்லையப்பா.

**சண்:** காலைமை கடிதம் வந்தது தெரியாமல், எங்களை

www.padippakam.com



ஏமாத்துறத்துக்கு - வேணுமெண்டு மணியடிச்சுப் போட்டு போகுதுகளாக்கும். முருங்கையால முறிஞ்சு விழுந்ததுகள்.

**பாக் :** இஞ்சேப்பா (உள்ளேயிருந்து) மழை தூறுது போல கிடக்கு.... காஞ்ச துணியளை ஒருக்கா உள்ளுக்கு எடுத்துப்போட்டு விடுங்கோ....

**சண் :** பேப்பர் வாறதே அருமை. அதை ஆறுதலா இருந்து வாசிப்பமெண்டால் விடுகிறாயில்லையெணை!

(சண்முகம் புறுபுறுத்தபடி உள்ளே போக நாய் குரைக்கும் சத்தமும் இடையிடையே 'போ... அங்கால' என நாயை விரட்டும் மரியதாசின் குரல் கேட்கிறது. சால்வையின் ஒருமுனையைப் பிடித்தபடி கதவைச் சாத்துவதாக பாவனைகாட்டி - சால்வையை இழுத்தபடி தோளில் பெட்டி நிறைய சாமான்களுடனும், கையில் ஒரு பையுடனும் மரியதாஸ் மேடைக்கு வருகிறார்.)

**மரி :** சண்முகம்..... சண்முகம்.... கெதியா... வாடாப்பா...... தங்கச்சி..... சண்முகம்....

**சண் :** (ஆறுதலாக வந்தபடி)... என்னண்ணை ஏன் இந்தக் கத்துக் கத்துறாய்?

**மரி :** எடேய்!!! முதலில இதைப்பிடி... மண்ணெண்ணைப் போத்தில் உடைஞ்சு போகப்போகுது...

**சண் :** கதவுக்குள்ள சால்வையை விட்டுப் பூட்டிப் போட்டு ஏன் இப்பிடிக் கத்துறாய்....

**மரி :** கதவுக்குள்ள சால்வையில்லே.... உன்ரை நாய் அங்கால சால்வையைப் பிடிச்சு இழுத்துக்கொண்டு நிக்குது.

**சண் :** ஏன்.... இறைச்சி ஏதும் சால்வையில சுத்திக்கொண்டு வந்தனியே???

**மரி :** (சினத்துடன்) ஆ... உன்ரை புளிச்சல் ஏவறைக் கதைக்கு...

www.padippakam.com



டேய் முதலிலே உன்ரை நாயைக் கலைச்சுப்போட்டு என்ரை சால்வையை எடு.... பகலில எண்டாலும் இந்தச் சனியனைக் கட்டிப்போட்டால் என்னடாப்பா?

சண் : இஞ்சைவிடு... (சால்வையைப் பிடித்து கதவு திறப்பதாகப் பாவனை காட்டி நாயை விரட்டுகிறார் சண்முகம்) போலீஸ்.... உதைவிடு... அங்காலபோ.. ஓடு...

மரி : நல்ல பேர் போலீஸ்... ஏன் இன்ஸ்பெக்ரர் எண்டு வையாதை யன்.... நாயைப் பிடியடா எண்டுறன்.. அவன் கையில இருந்த பையை வாங்கிக்கொண்டு நளினக் கதை கதைக்கிறான்...

பாக் : (வந்தபடியே) ஆர்... மரியதாசண்ணையே? என்னண்ணை வந்ததும் வராததுமாய் ரெண்டுபேரும் புடுங்குப்படுகிறியள்...

(பாக்கியத்தைக் கண்டதும் மரியதாசின் சினம் தணிகிறது.)

மரி : பின்ன... என்ன தங்கச்சி... நேற்றைக்கு மண்ணெண்ணை இல்லையெண்டு கதைச்சனியெல்லே... அதுதான் மண்ணெண்ணை வாங்கிக்கொண்டு வந்தனான்... ஏதோ முன் பின் தெரியாதவனைக் கண்டமாதிரி... உவன்ரை நாய்... கலைச்சுக்கொண்டு வந்து சால்வையைப் பிடிச்சிட்டுது...

சண் : நீ கண்ணாடியில்லாமல் வந்து நித்திரையாக் கிடந்த நாயின்ரைவாலை மிதிச்சிருப்பாய்...

மரி : (சினத்துடன்) நீ கதைக்காதை... நீ கேள் பிள்ளை. நாய் சால்வையைப் பிடிச்சிட்டுது. நான் ஓடிவந்து கெட்டித்தனமா கதவைச் சாத்திப்போட்டன்.... இதைப் பிடியடா எண்டு சொல்லுறன்... அவன் மண்ணெண்ணைப் பையைப் பிடிக்கிறான்... என்னைப்பற்றியும் யோசிக்கேல்லை... என்ரை சால்வையைப் பற்றியும் யோசிக்கேல்லை...

www.padippakam.com



**சண் :** அண்ணை, நேற்றைக்கு உவ மண்ணெண்ணை இல்லையெண்டு சொல்லேக்கை எனக்குத் தெரியும்... இண்டைக்கு நீ மண்ணெண்ணையோட வருவாயெண்டு. எங்கையெங்கையெல்லாம் திரிஞ்சு இந்த மண்ணெண்ணையை - என்ன விலை குடுத்து வாங்கினியோ தெரியாது.. தச்சமயம் போத்தில் விழுந்து உடைஞ்சா... மண்ணெண்ணையைப் பிடிக்காமல் எங்க வாய் பாத்தனியெண்டு கேப்பாய்... எப்பிடியோ நீ பேசுறது பேசுறதுதானே... அதுதான் மண்ணெண்ணைப் போத்திலைப் பிடிச்சன்...! கதவைச் சாத்திப்போட்டு.... சால்வையையும் விடாமல் தேவையில்லாமல் நிண்டு கத்துறாய்... பூட்டின கதவுக் குள்ளால வாறதுக்கு நாய்க்கு ஏலுமேயண்ணை?

**மரி :** கதைக்கு கதை நல்ல வடிவாச் சொல்லுவாயடா... தங்கச்சி மண்ணெண்ணையோட ஆறு நெருப்பெட்டியும் கிடக்கு... நெருப்பெட்டியை இவனிட்டைக் குடுக்காதை... சுருட்டுப் பத்தி முடிச்சுப்போடுவான்..

(எட்டி வெளியே பார்கிறார்)

**பாக் :** நல்லாக் குடுத்தன்.. என்னணண்ணை... படலையைப் படலையை எட்டிப்பாக்கிறியள். நாய் பின்னால போட்டுதண்ணை...

**சண் :** அவர் இப்ப நாயைப் பாக்கேல்லையப்பா... அவற்றை ரெண்டாவது பெண்சாதி நிக்கிறாவோ எண்டு பாக்கிறார். உப்பிடி அடிக்கடி எட்டிப் பாப்பார் எண்டு தெரிஞ்சுதான் வாசல்கதவை திறந்து விட்டனான்...

**பாக் :** என்னப்பா.... ரெண்டாவது பெண்சாதியோ?

www.padippakam.com



*சண் : ஓமணை. மரியதாசண்ணைக்கு அவற்றை சயிக்கில் பெண்சாதி... மாதிரித்தானே..?*

*மரி : பார் தங்கச்சி... உவன்ரை நையாண்டிக் கதையை... உந்தச் சைமிக்கில் இல்லாட்டி நான் உந்தத் தேசமெல்லாம் போய்வருவனே... கார் ஓடுதோ அல்லது பஸ் ஓடுதோ? ஒண்டும் இல்லை! இல்லாத சாமான் சக்கெட்டெல்லாம் கொண்டுவர என்ரை சயிக்கில் எவ்வளவு உதவியா இருக்கு சொல்லு பாப்பம்... இவனுக்கு அது தெரிஞ்சாத்தானே... அது சரி.. இண்டைக்கு வெளிநாட்டுக் கடிதங்கள் வந்ததுபோல கிடக்கு. பொடியன்ரை கடிதம் வந்ததே?*

*சண் : ஓமண்ணை... வந்தது...*

*மரி : அதை முதல் சொன்னாயில்லையடா... கேட்டாப்பிறகு தான் சொல்லுறாய்...*

*சண் : எங்க சொல்லவிட்டனி... வந்த நேரம் துவக்கம் நீதானே கதைக்கிறாய்...*

*மரி : சரி... சரி... சொல்லு.. என்ன எழுதியிருக்கிறான்?*

*சண் : என்ன, சுகமா இருக்கிறானாம்... தனக்கு அங்க தொடர்ந்து இருக்கிறதுக்கு ஏற்றமாதிரி விசா (Visa) கிடைக்குமாம்... ஆனால்.. எப்ப ஏது எண்டு எழுதேல்ல... கார் எடுத்திருக்கிறானாம்.. (மகிழ்ச்சியாக) அங்கையே ஓடிப் பழகியிருக்கிறான்போல இருக்கு...*

*பாக் : (கவலையாக) அதுதானண்ணை நினைக்கப் பயமாயிருக்கு... அவன் ஒரு துறுதுறுத்தவன்... நல்லாப் பழகாமல் கண்டபடி கார் வழிய ஓடித்திரிஞ்சு, ஏதனொண்டு நடந்திட்... டால்...*

*மரி : அதெல்லாம் பயப்பிடத் தேவையில்லைப் பிள்ளை...*

www.padippakam.com



அவனென்ன சின்னப் பொடியனே... பெண்சாதி பிள்ளையளோடை இருக்கேக்கை பொறுப்பு கவனம் எல்லாம் தானாவந்திடும் தங்கச்சி....

**சண் :** இவ சொன்னா கேக்கிறா இல்லையண்ணை... கண்டபடி பயப்படுகிறா...

**பாக் :** அண்ணை... உங்களுக்க கொஞ்சம் மோர் கொண்டுவரட்டே...?

**சண் :** கேட்டுக்கொண்டு நிக்காமப் போய் கொண்டுவாணை... ஆ... கையோடை அந்தக் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு வாரும். அண்ணையையும் கேட்டு எழுதியிருக்கெல்லே!

**மரி :** (மகிழ்ச்சியுடன்) அடி சக்கையெண்டானாம்... என்னையும் கேட்டு எழுதியிருக்கிறானே... எவ்வளவு தூரம் போயிருந்தாலும் என்னை அவன் மறக்கேல்லைத்தானே...

**பாக் :** ஏனண்ணை மறக்கிறான்... இந்தாங்கோ... (மோரை நீட்டி) முதலில இதைக் குடியுங்கோ... (மோர் குடித்து முடிய) படங்களும் அனுப்பியிருக்கிறானண்ணை... பேரன்மார் ரெண்டு பேரும் நல்லா வளர்ந்திட்டினம்...

**மரி :** (படத்தை வாங்கிப்பார்த்து கண்ணைக் கசக்கி... தெரியாமல்) சண்முகம் உந்தக் கடிதத்தை ஒருக்கா வாசி... ஆ... இல்லாட்டி... உந்த 'என்வலப்'புக்குள்ளை இந்தப் படத்தையும் கடிதத்தோட வைச்சுத்தா தங்கச்சி... கண்ணாடியை விட்டிட்டு வந்திட்டன்... (பொய்யென்பது நடிப்பால் வெளிப்பட) வீட்டை கொண்டுபோய் பாத்திட்டு கொண்டுவாறன்.

**சண் :** (சினத்துடன்) கண்ணாடி இல்லாமல் ஏனண்ணை வெளிக்கிடுகிறனி... ஆ... உதுக்குள்ள சயிக்கிலும் ஓடுறாய்... உன்ரை நினைப்பு... நீ இன்னும் சின்னப் பொடியனெண்டு... அது சரி... போன கிழமை நெஞ்சுக்கை

www.padippakam.com



குத்துதெண்டு சொன்னாய். டொக்டரிட்டைப் போனனியே? இல்லையென்ன???

மரி : அது... போவம்... ஆறுதலாய்...

சண் : எப்ப ஏலாம வந்தாப்பிறகோ... நீ சொல்லுறது கேட்கமாட்டாய்... வா... இப்ப போவம்.

மரி : எடேய்... இப்ப சுகமடாப்பா... பிறகு போகலாம்...

சண் : (சினம் தணியாமல்) கண்ணாடிக்கு என்ன நடந்தது... திருத்தக்குடுத்தது எடுத்துப்போட்டியே... இல்லையென்ன.. அதை எடுப்பமெண்டில்லை...

பாக் : கையில காசில்லையாக்குமப்பா.

சண் : நீ.... சும்மா இரணை... கையில இருந்த காசுக்கு இங்க மண்ணெண்ணை இல்லையெண்டவுடன மண்ணெண்ணை வாங்கிக் கொண்டுவாறார். (பாக்கியம் உள்ளே செல்லல்) டொக்டரிட்டைப் போகேல்லை. சும்மாவே உடம்பு பெருத்து பிறசர் குணமும் இருக்கு... போகேக்கை வரேக்கை... வழி தெருவில ஏதுமொண்டு நடந்திட்டா...?!

மரி : கிடைச்சிட்டுது சான்ஸ்... இனி... வாய் ஓயாமல் கத்தப் போறான்... தங்கச்சி...

பாக் : (பாக்கியம் வந்தபடி) வாறன் அண்ணை... இந்தாங்கோ.. மண்ணெண்ணைக்காசு... கையில காசில்லையெண்டால் நேற்றைக்கு சொல்லியிருக்கலாமெல்லோ?

சண் : ச்சா... அவர் சொல்லமாட்டார்... சொன்னா கௌரவம் குறைஞ்சிடும்... மனைவியைப் பார்த்து உமக்கும் ஒரு யோசினை இல்லையணை.... ஏதன் சாமான் சக்கெட்டு இல்லையெண்டு அவருக்குச் சொல்லேக்கை காசைக் குடுத்து விடுவமெண்டில்லை!... மண்ணெண்ணைக்

www.padippakam.com



காசுமட்டுமே குடுத்தனீர்... இன்னுமொரு ஐநூறு ரூபாய் கூடக் குடும்... அண்ணை உனக்கொண்டு சொல்லிப் போட்டன்.

(பாக்கியம் உள்ளே செல்லல்)

**சண் :** நாங்கள் ரெண்டுபேரும் செத்தால்... தூக்கிக் கொண்டுபோய் சுடுகிறது நீதான். வெளியாள்மாதிரி நடக்காதை... அதை மனதில வச்சுக்கொள்...

**மரி :** ஏன்ரா... இப்பிடி விசர் கதை கதைக்கிறாய்?

(பாக்கியம் காசு கொண்டு வர சண்முகம் காசை வாங்கி மரியதாசிடம் கொடுத்து)

**சண் :** இண்டைக்கே... டொக்டரிட்டைப் போகவேணும்... டொக்டரிட்டைப் போகாமல் இந்தப் பக்கம் வராதை... அவ்வளவுதான்.

**பாக் :** போதும் நிப்பாட்டுங்கோ.... அண்ணை உங்கடை பொடியன் பிறகு வந்தவனே...

**மரி :** ஆர் டேவிற்றோ... தாய் செத்தாப் பிறகு... இரண்டுதரம் வந்தவன்.

**பாக் :** அப்ப ஆறுமாதமா வரேல்லையே...

**சண் :** அண்ணை எங்கயெண்டு விசாரிச்சுப் பாத்தனியே.

**மரி :** எங்கயெண்டு என்னண்டடா கேக்கிறது... உயிரோட இருந்தா வருவான்தானே...

**பாக் :** அவற்றை கதையைப் பாருங்கோப்பா...

**சண் :** (கவலையாக) எங்கடபிள்ளை வெளிநாட்டில... எங்களுக்கு பாக்க ஏலாம இருக்கு... உன்ரை பொடியன் உள்ளூரில. உனக்குக் பாக்க ஏலாம இருக்கு...

www.padippakam.com



மரி : உள்ளூரில இருக்கிறானோ... இல்லாட்டி உலகத்தை விட்டே போய்ற்றானோ... ஆருக்குத் தெரியும்... (கலங்குகிறார்) ஏதோ... ஆண்டவர் விட்ட வழி... உயிரோட இருந்தால் எனக்கு மண்போட வருவான் எண்டு நம்பிக் கொண்டிருக்கிறன்... (சில துளி கண்ணீர் வர தன்னை சமாளித்தவராக) சரி... சரி... நீங்கள் பொடியனுக்கு பதிலை எழுதிப்போடுங்கோ... நானும் எழுதிப் போடுறன்... நான் வாறன்...

பாக் : அண்ணை... இப்பிடியே டொக்டரிட்டை போட்டு.... வாங்கோ மத்தியானம் சாப்பிட்டுட்டுப் போகலாம் என்ன...

மரி : இல்லைப் பிள்ளை... எனக்கு வேற அலுவல் கிடக்கு... நான் அப்பிடியே வீட்டை போறன்...

(எழுந்து வாசல் நோக்கிப் போகும்போது)

சண் : உன்ரை அலுவலும் நீயும்... அதெல்லாம் நாளைக்குப் பாக்கலாம்... டொக்டரிட்டைப் போட்டு வா... நாங்கள் சாப்பிடாமல் பாத்துக்கொண்டிருப்பம்... என்ன...

மரிய : (மேடையின் ஓரத்தில் சென்று, ஏதோ முக்கிய அலுவலாக அழைப்பதுபோல) ம்..... சண்முகம் இஞ்சை ஒருக்கா வா...

சண் : (அவசரமாக) என்னண்ணை... (அருகே செல்ல)

மரி : தங்கச்சி சொன்னால் வருவன்தானே... பிறகென்னடா நீ எனக்கு முதலாளி... போடா...

(சண்முகம் அசடு வழிய... மரியதாஸ் வெளியே போகிறார்.)

பாக் : என்னப்பா நீங்கள்... அவரைக் கோவிச்சுப் பேசிறியள்.

சண் : அப்பிடிப் பேசாட்டி ஆள் இப்ப டொக்டரிட்டைப் போகாதப்பா... பாத்தியேணை கிழவன்ரை சேட்டையை... ஏதோ அலுவல்மாதிரி கூப்பிட்டு சொன்ன கதையை...

www.padippakam.com



பாக் : உங்கள் ரெண்டு பேருக்கும் உதுதானே வேலை...

சண் : எணேய்... நீர் கெதியாச் சமையும்... நான் உதிலபோட்டு ஓடியாறன்...

பாக் : எனக்குத் தெரியும்... கள்ளு விடாய்குதுபோலகிடக்கு.... பொடியனுக்கு கடிதத்தை எழுதிப்போட்டு அதுக்குப் பிறகு போகலாம்... இருங்கோ!

சண் : எணேய்... ஒரு அரைப் போத்தில் குடிச்சா... வடிவா எழுதலாமெணை..

பாக் : எழுதிப்போட்டு போய் குடியுங்கோ... (கண்டிப்பு தொனிக்க) எடுங்கோ கொப் பியையும் பேனையையும்... நான் உலை வைக்கவேனும்... அரைப்போத்தில் குடிச்சிட்டு வாறணெண்டுபோட்டு பிறகு கையில ஒரு போத்திலைக் கொண்டுவந்து... வீட்டுக் கோடிக்கை வச்சுட்டு... அடிக்கடி கோடிக்கை போறதுக்கு அடுக்குப் பண்ணவேணாம். சொல்லிப் போட்டன்... ஓ

(பாக்கியம் உள்ளே செல்ல)

சண் : பெண்ணடிமையைப்பற்றி பேப்பரெல்லாம் எழுதுறாங்கள்... இந்த ஆணடிமையைப்பற்றி ஒருத்தரும் எழுதுவாரில்லை... சரி.. சரி... கொப்பியையும் பேனையையும் கொண்டு வாரும்...

பாக் : (வந்தபடி) இந்தாங்கோ...

சண் : வேற என்ன எழுதுறது... (கொப்பியை வாங்கி மளமளவென எழுதி - நிறுத்தி)

பாக் : பேரன்மார் எங்களை நினைச்சுக் கேக்கிறவங்களோ?? சொல்லிக் குடுக்கிறனியோ... பிள்ளையளை மருமகளை, உன்னைப்பாக்க ஆசையாக்கிடக்கு...

www.padippakam.com



சண் : இஞ்சை... ஒவ்வொரு கடிதத்திலும் உது எழுதுறதுதானே... திருப்பித்திருப்பி எழுதினதை எழுத நான் என்ன வேலையினக்கெட்டவனே...

பாக் : கடிதம் எழுதுறதைவிட.... வேறையென்ன வெட்டிச் சுமக்கிற வேலை உங்களுக்குக்கிடக்கு... அவன் அங்கை இருந்து கஷ்டப்பட்டு உழைச்சு காசனுப்புறான்... நாங்கள் இங்க இருந்து அறா விலை குடுத்து கஷ்டம் தெரியாமல் வேண்டித்தின்னுறம்... கடிதம் எழுதவும் உங்களுக்கு பஞ்சியாக் கிடக்கு...

சண் : பஞ்சியில்லையப்பா... பழசுகள் எழுதினதைத் திருப்பித் திருப்பி எழுதி அலுப்புத்தருகுதுகள்... எண்டெல்லை நினைக்கப்போகுதுகள்...

பாக் : அதெல்லாம் நினைக்கமாட்டினம் நீங்கள் எழுதுங்கோ...

சண் : ம்.... ம்... எழுதியாச்சு...

பாக் : ம்.... (பெருமூச்சு) என்ரை பிள்ளையை எப்பதான் பாக்கப் போறனோ... அங்க என்ன பாடுபடுகுதுகளோ...

சண் : ஏனெணை வீணாய் கவலைப்படுகிறாய்... (இயலாமையும் மகனைப் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கமும் வெளிப்பட) அங்கை அவை நிம்மதியாத்தான் இருப்பினம்... அப்பவே உனக்குச் சொன்னான்.. அவனை வரச் சொல்லுவம்... பாத்துப்போட்டு அனுப்புவமெண்டு. நீ கேக்கேல்லை. இந்தியாவுக்கெண்டாலும் வந்திருந்தால் நாங்கள் போய்ப் பார்த்திருக்கலாம்... இப்ப... வரவும் ஏலாது... போகவும் ஏலாது... இனி... எங்க அவனைப் பாக்கிறது... இப்பிடியே ரெண்டு பேரும் ஏங்கி ஏங்கி புலம்பிக் கொண்டிருந்திட்டு... ஒரு நாளைக்கு பொம்பரடிக்குப் போறமோ... ஷெல் அடிக்கும் போறமோ... கடவுளுக்குத்தான் தெரியும்.

www.padippakam.com



**பாக் :** சும்மா இருங்கோப்பா... உலகத்தில பிறந்த எல்லாரும் எண்டைக்கோ ஒருநாளைக்குப் போறது போறதுதானே...

**சண் :** போறது போறதுதானெணை... போகேக்கை ரெண்டு பேரும் ஒண்டாப் போயிடவேணும்.... ஆனா... அதுக்குள்ள... அவனை ஒருக்காப் பாத்திட வேணும்.

**பாக் :** எனக்கும் ஆசையாத்தானப்பா இருக்கு! ஆனா என்ன செய்யிறது...

**சண் :** எணேய்! இப்பிடிச் செய்தாலென்ன... யோகத்தின்ரை பொடியன் அடிக்கடி கொழும்புக்குப் போய்வாறான்... அவனோடை நாங்களும் ஒருக்காக் கொழும்புக்குப்போய் ரெலிபோனிலை (Telephone) கதைப்பமே?

**பாக் :** என்ரை ராசாவுக்கு நினைப்பு தான் இன்னும் இளம் பொடியனெண்டு!... ஆளான ஆளெல்லாம் வீட்டுக்கை இருந்து யோசிக்குதுகள்... இவர் தான் கொழும்புக்குப் போகப்போறாராம் சோடி கட்டிக்கொண்டு. அதுவும் இந்த வயதிலை...

**சண் :** நாங்கள் பழைய சோடிதானேயப்பா... எணேய்... வெளி நாட்டில முப்பது நாப்பது வயதுக்குப் பிறகுதான் கலியாணம் செய்யிறதாம்... அறுபது எழுவது வயதிலதான் வெள்ளைக்காரர் ஒருதருக்குத் துணை ஒருத்தர் எண்டு வாழுறதாம்... நீர் இப்ப என்னோட சோடியா வர வெட்கப்படுகிறீர்...

**பாக் :** இல்லையப்பா... ரெண்டு பேரும் ஒண்டா வெளிக்கிட்டால் வீடு வாசல் எல்லாம் ஆர் பாக்கிறது... அப்ப இப்பிடிச் செய்யுங்கோ. நீங்க ஒருக்காப் போய் கதைச்சுப்போட்டு வாங்கோ... அடுத்தமுறை யோகத்தின்ரை பொடியன் போகேக்கை நானும் ஒருக்காப் போட்டுவாறன்...

www.padippakam.com



**சண் :** உது நடக்காது. உன்னை இங்க தனிய விட்டிட்டு நான் கொழும்புக்குப் போகவோ?... ஏலாது...

**பாக் :** இதென்னப்பா பிடிவாதம் பிடிக்கிறியள்... ரெண்டு பேரும் என்னெண்டு போறது...

**சண் :** மடைச்சிமாதிரிக் கதைக்காதையெணை... உன்னை இங்க விட்டிட்டு எனக்கும் தனியப்போக ஏலாது.... உனக்கும் என்னை அனுப்பிப்போட்டு இங்க தனிய இருக்க ஏலாது... போகேக்கை எனக்கொண்டு நடந்திட்டா நீ தவிச்சுப் போவாய்... உனக்கிங்கையொண்டு நடந்திட்டால் நான் தவிச்சுப்போவன்... நினைக்கவே விசராக் கிடக்குது... உந்தக் கதையை நிப்பாட்டும்....

**பாக் :** சரி... கண்டபடி யோசியாதேங்கோ... யோகம் சொன்னாளப்பா!... பொடியள் சமாதானம் கதைக் கிறதுக்கும் ஆயத்தமெண்டு றேடியோவில சொன்னதாம்...

**சண் :** ஓமணை! பிரேமதாசாவும் இப்ப கனகாலமா அப்பிடித்தான் சொல்லுறான். ஆனா புதுப்புது பிளேனும் வாங்குறான்... பொடியள் இதைப்பற்றியெல்லாம் யோசிக்காமலே இருப்பாங்கள்... டி.எஸ். சேனநாயக்காவில இருந்து பிரேமதாசா வரைக்கும் ஒருத்தனும் சொன்னபடி நடக்கேல்லை எண்ட விஷயம் பொடியளுக்கு வடிவாத் தெரியும்.... நாங்கள் கண்டபடி எங்கட தனி மனுஷச் சந்தோசத்துக்காக.... சமாதானம் வரும் எண்டோ... வந்திட்டுதெண்டோ நினைக்கக்கூடாது. அது சரி யோகத்தின்ரை பொடியன் இண்டைக்கோ நாளைக்கோ கொழும்புக்குப் போறன்...

**பாக் :** இண்டைக்குப் போறானப்பா... சயிக்கிலுக்கும் சொல்லிப்போட்டனெண்டு சொல்லித்தான் காயிதத்தைக் கொண்டுவரச் சொன்னவன்.

www.padippakam.com



*சண்:* *சனியனை... நான் ஓடிப்போய் கடிதத்தைக் குடுத்துப் போட்டு போறதும் வாறதுமா. வாறனெணை. சிவ அரைப்போத்தில் குடிக்கிறனெண்டு போய் கொட்டிலுக்கை இருந்து அலம்புறதில்லை... கெதியா வரவேணும்... அண்ணை வந்திடுவார் .*

**(திரை)**

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 2



**களம் :**

மகேஸ்வரி வீடு.

**பாத்திரங்கள்:**

மகேஸ்வரி, மகேஸ்வரியின் மகள் உமா.

அலங்காரப் பொருட்களேது மற்று உடைந்த நாற்காலியொன்று மேடையின் வலது பக்கத்தில் இருக்கிறது. அதனருகே நான்கைந்து தேங்காய்கள் கிடக்கின்றன..

மகேஸ்வரியும் மகள் உமாவும் வறுமையில் வாழ்கிறார்கள்.

மகேஸ்வரி அரிசி புடைத்துக் கொண்டிருக்கிறாள். உமா புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருக்கிறாள்.

**மகேஸ்** : உமா... சிவபாக்கியம் ஆச்யிற்றை உந்த தேங்காயைக் கொண்டு போய் குடுத்திட்டு வாறியே?

**உமா** : என்னம்மா நீங்கள் தேங்காய் மாங்காய் கொண்டு என்னை போகச் சொல்லுறீங்கள்...

**மகேஸ்** : அதுக்கு என்னாச்சி... தெரியாத வீட்டுக்கே போகச் சொன்னனான்... ம்... தேங்கா மாங்காய் வித்து சீவிக்கிற நிலைமையில கொப்பர் எங்களை விட்டிருக்கிறார்... இனியென்ன செய்யிறது...

**உமா** : வெளிநாட்டுக்குப்போய் அள்ளிக்கொண்டு வருவா ரெண்டு காணியை ஈடுவச்சு அனுப்பினீங்கள்...



படிப்பகம்

www.padippakam.com



**மகேஸ் :** இப்ப அதுவும் அறுதியாப்போச்சு... இன்னும் எத்தினை நாளைக்கு செல்லப்பாண்ணைக்கு தவணை சொல்லுறதோ தெரியேல்லை...

**உமா :** எங்களின்ரை வாழ்க்கை இப்பிடி... தேங்காய் - மாங்காய் - பிலாக்காய் எண்டு வந்து நிக்குது...

**மகேஸ் :** உமா... இதில ஒண்டும் கேவலம் இல்லையடி... நாங்கள் ஒருதருக்கும் துரோகம் செய்யேல்லை... காட்டிக் குடுக்கேல்லை... மற்றவன்ரை சொத்துக்கு ஆசைப்படேல்லை. இருக்கிறதை வச்சு சாப்பிடுகிறம்.

**உமா :** சித்தப்பாவின்ரை செத்தவீடு சிலவெண்டு இருந்த நகையும் அடைவுக்குப்போட்டுது. இனி என்னெண்டு திருப்பி எடுக்கப்போறீங்கள். காணி அறுதியாப் போனமாதிரி நகையும் அறுதியாப் போக முந்தி எடுத்து வில்லுங்கோ... இனி அப்பா காசனுப்புவார் எண்ட நம்பிக்கை எனக்கில்லை...

**மகேஸ் :** ஏனடி இப்பிடிச் சொல்லுறாய்... அப்பப்பாவும் - சித்தப்பாவும் இருக்கேக்கை எங்களைப் பாப்பினம் எண்டு அப்பா காசனுப்பாமல் இருந்திருப்பார். இப்ப அப்பப்பா இல்லை - சித்தப்பாவும் இல்லையெண்டு தெரியும், இனி அனுப்புவாரெடி...

**உமா :** ஓமோம்... அனுப்பி.. கிழிப்பார்...

**மகேஸ் :** பல்லுடைச்சுப் போடுவன் தங்கச்சி!... ஓ... எண்டைக்கும் அப்பர் பிள்ளையெண்டு மரியாதை இருக்கவேணும்...

**உமா :** அம்மா ஷெல் விழுந்து சித்தப்பா செத்தார் எண்டு எழுதினீங்கள்... ஒரு பதில்லை... அப்பப்பா... அவரைப் பெத்த தகப்பன் செத்ததுக்கு றெட் குறோஸ் (Red Cross)க்கு குடுத்து தந்தி அடிப்பிச்சீங்கள்... கொள்ளி வைக்க வருவாரெண்டு. அவர்தான் வரேல்லை. ஒரு

www.padippakam.com



கடிதம் போட்டாரோ... இல்லை. காசனுப்பினாரோ... அதுவும் இல்லை... பிறகென்னெண்டம்மா மரியாதை வரும்...

**மகேஸ் :** எடியேய் என்ன இருந்தாலும்... அவர் உன்னைப் பெத்தவரெடி.. உன்ரை தகப்பனடி.

**உமா :** தகப்பன்... கட்டின பெண்சாதிக்கு... பெத்த பிள்ளைக்கு... சாப்பிடச் சோறும்... உடுக்கத் துணியும் குடுக்காமல் வெளி நாட்டில் இருக்கிறார்... அவர் தகப்பன்.

**உமா :** அம்மா... அடைவில கிடக்கிற என்ரை நகை, உங்கடை நகை... எல்லாத்தையும் எடுத்து வித்துப் போட்டு, மிச்சக் காசை என்னட்டைத் தாங்கோ... நான் கொழும்புக்குப்போய் துணிமணி ஏதும் வாங்கிக் கொண்டு வந்து இங்க யாவாரம் செய்தால் பிரச்சினை இல்லாமல் சீவிக்கலாம்.

**மகேஸ் :** இடிச்சுவிட்டனெண்டா அலகுடைய... வித்துச் சுட்டுப் போட்டு.... யாவாரம்செய்யப் போறாளாம் யாவாரம்... இருக்கிறதை அழிக்கிற புத்திதான் கொப்பருக்கும் உனக்கும்...

**உமா :** அம்மா.... அப்பான்ரை குணந்தான் எனக்குமெண்டு சொல்லி... விசர் ஏத்தாதீங்கோ. சொல்லிப்போட்டன்... ஓ...

**மகேஸ் :** ஓமடி... ஓம்... நான்தான் பிழைவிட்டிட்டன்... அப்பவே அந்தாள் வரச்சொல்லேக்கை வெளிக்கிட்டிருக்க வேணும்... கடனை வச்சுப்போட்டு அப்பப்பாவை இங்க தனியவிட்டிட்டு போகக்கூடாதெண்டு நினைச்சன்... இப்ப அப்பப்பாவும் போட்டார்...

(திரை)

○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 3



***களம் :***

***யோகத்தின் வீடு***

***பாத்திரங்கள்:***

***காந்தன், சண்முகம்***

*காந்தன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அடிக்கடி வியாபாரத்திற்காகப் போய் வருபவன். கொழும்புக்குப் போகும் போது அயலிலுள்ளோர் தரும் வெளிநாட்டுக்குப் போக வேண்டிய கடிதங்களை வாங்கிச் சென்று தபாலில் சேர்ப்பதை தன் வழக்கமாகக் கொண்டிருந்தான்.*

*(காந்தன் சயிக்கிள் ஒன்றைத் துப்புரவு செய்தபடியிருக்க சண்முகம் வந்தபடி)*

***சண் :*** *காந்தன்... காந்தன்...*

***காந் :*** *வாங்கோண்ணை... உங்கடை கடிதத்தைத் தான் பாத்துக் கொண்டிருக்கிறன்...*

***சண் :*** *கொண்டு வராட்டி அடிப்பாய் போல கிடக்கு...*

***காந் :*** *கடிதம் கொண்டு போகாட்டில் நீங்கள் ரெண்டு பேரும் சந்திக்கு சந்தி... நிண்டு கிழிப்பியளெல்லே. உள்ளுக்கு வாங்கோவன்...*

படிப்பகம்

www.padippakam.com



*(சண்முகம் வந்து இருந்து கொண்டு...)*

**சண் :** இந்தாடா தம்பி... கடிதம்... சண்முகத்தைக் கண்டு மரியாதைக்காக எழும்புகிறான் இரன்ரா இரு... இரு... இஞ்ச... இதில 100 ருவாய் கிடக்கு... கடிதத்துக்கு...

**கா :** கடிதத்துக்கு ஏனண்ணை 100 ருவாய்.... கடிதம் பாராமயில்லை... 20 ருவாய் போதும்...

**சண் :** இவ்வளவு கஷ்டங்கள் கடந்து போறாய்... இருக்கட்டும் வை...

**கா :** சண்முகண்ணை... இந்தச் சேட்டைதானே கூடா தெண்டிறது. ஒரு உதவியாத்தான் கடிதத்தைக் கொண்டுபோய் கொழும்பில போட்டு விடுகிறன்... அதுக்கு காசு வாங்கினனெண்டால்... கடவுள் என்ரை காலைக் கழற்றி விட்டிடும்... பிறகு சைக்கிலும் ஓடேலாது...

**சண் :** சரியடாப்பா... கோவிக்காதை... என்னிட்டை மாத்தின காசில்லை... நீ போட்டு வந்து, மிச்சக்காசைத்தாவன்... அது சரி... கொழும்புப் புதினங்கள் என்னமாதிரி...

**காந் :** என்னத்தைப் புதினம்? யாழ்ப்பாணச் சனத்தில பாதி கொழும்புக்கைதான் நிக்குது..... வெளிநாட்டால வாற எங்கட ஆக்கள் அள்ளி எறிஞ்சு அந்தமாதிரி சிலவழிக் கிறாங்கள்... அங்கயிருந்து வாற மாப்பிளைமார் பெரிய ஹோட்டலுகள் 'புக்"பண்ணித்தான் கலியாண வீடு செய்யுறாங்கள்...

**சண் :** அப்ப எல்லாம் வெளிநாட்டுப் பிளான் எண்டு சொல்லு...

**காந் :** அதையேன் பேசுவானன்னை... கலியாண வீடுகளிலை யெல்லாம் எங்கடை சனம் ஒரேசண்டை....

**சண் :** என்ன... சண்டையோ...

www.padippakam.com



காந் : ஓமண்ணை... கரண்டி கத்தியை வச்சுக்கொண்டு சனம் கோழிக் காலோடை சண்டை பிடிக்கிறதும் கோழிக்கால் பக்கத்துக் கோப்பையில போய் விழுகிறதும்.... கோட்டுச் சூட்டுகள், காஞ்சிபுரம் சீலையளிலயெல்லாம் ஆட்டிறைச்சிக் குழம்பும்... ரசமும் ஊத்துப்படுகிறதுமா... சரியான அமளி...

சண் : கொப்பரை மாதிரி... நீயும் சரியான நளினக்காரனை யிருக்கிறாய்... அதுசரி... எங்கடை வெளிநாட்டுச் சனங்கள் கொழும்பில வீடுகள் வேண்டுதாம் மெய்யே...

காந் : ஓமோம்... அதுகும் நடக்குது. ஐம்பத்தெட்டு, எழுவத்தேழு, எண்பத்திமூண்டு... இதுகளை மறந்திடுகினம்... இஞ்சால குண்டுபோட்டு அழிக்கிறாங்கள்... பிரச்சினை துவங்கினா கொழும்புப் பக்கத்தில உயிரோடை வச்சு கொளுத்து வாங்கள்...

சண் : உதையேன் எனக்கு ஞாபகப்படுத்திறாய்.. உதெல்லாத்தையும் நேரில கண்டு அனுபவிச்சதாலதானே கொழும்புக் கடையை வித்துப்போட்டு ஊரோட வந்தனான். எட தம்பி... நானும் அவவும் ஒருக்கா கொழும்புக்குப்போய் மகனோட கதைக்கலாமெண்டு யோசிக்கறம்... அடுத்தடுத்த முறை நீ போகேக்கை சொல்லு. நாங்களும் வர ஆயுத்தப் படுத்திறம்....

காந் : இதுக்கென்னண்ணை ஆயுத்தம் செய்யிறது... காசுமட்டுத் தான் வேணும்... அது உங்களிட்டை இருக்குது... வாங்கோவன் இண்டைக்குப் பின்னேரம் வெளிக்கிடுவம்.

சண் : நல்ல கதை... சொன்னவுடன் வா எண்டிறாய்...

காந் : அண்ணை... நினைச்சதை உடனை செய்யவேணும்... பேந்து பிறகெண்டு ஒத்தி வைக்கக்கூடாது... கொழும்பில வந்து பாருங்கோவன். ரெலிபோன் கதைக்கிற இடத்தில

www.padippakam.com



நிண்டு பாத்தா, நாடகம் பாக்கிறமாதிரி இருக்கும்... ரெலிபோனோடை நிண்டு அழுகிறவை, சிரிக்கிறவை, சண்டை பிடிக்கிறவை... அந்தமாதிரி இருக்குமண்ணை...

**சண் :** சரியடாதம்பி... கவனமா போட்டுவா... அடுத்தமுறை நாங்களும் வாறம்... மனுஷி தேடப்போகுது. காலமையில இருந்து ஆள்காட்டி பறந்துகொண்டு திரியுது. நான் உதில ஒரு அலுவல் போகவேணும். போட்டு வாறன்... என்ன

**காந் :** கள்ளுக்கு போறியள்போல கிடக்கு... ஆ... சண்முகண்ணை "என்வலப்"புக்கு மேல எழுதிவிடட்டே மகனுக்கு...

**சண் :** இஞ்ச... சும்மா... விசர் வேலை பாத்துவிட்டிடாதையடா தம்பி...

(சண்முகம் போகிறார்.)

**(திரை)**

O O O

www.padippakam.com



# காட்சி 4



***களம்***

*சண்முகம் வீடு*

***பாத்திரங்கள்***

*சண்முகம், சிவபாக்கியம்,*
*மரியதாஸ், ஒரு பெண்குரல்*

*மேடையின் இடப்புறத்தில் பங்கர்... மங்கலான ஒளியில் தெரிகிறது... வலப்புறத்தில் கையில் ஒரு கொள்ளிக் கட்டையை வைத்து சுருட்டைப் பற்ற முயற்சிக்கிறார் சண்முகம் - ஹெலிகொப்ரர் பறக்கும் சத்தம் கேட்கிறது.*

***ஒரு பெண்குரல் :*** பாக்கியக்கா... பாக்கியக்கா... ஆள்க்காட்டி பறக்குது... கேக்கேல்லையே... ரெண்டு பேரும் செல்லம் பறைஞ்சு கொண்டிருக்காமல்... கெதியா பங்கருக்குள்ள போங்கோ...

***பாக் :*** *(காது கொடுத்து கேட்டு)* ஓமப்பா.... ஆள்காட்டி பறக்குதுபோல கிடக்கு. நடவுங்கோப்பா... முதலில பங்கருக்குள்ள போவம்...

***சண் :*** பங்கருக்குள்ள போவம் எண்டதை என்னவோ பங்களாவுக்குள்ள போவம் எண்டமாதிரி சொல்லுறாய் அடிமேல் அடிஅடிச்சால் அம்மியும் நகருமெண்டாங்கள் அந்தக் காலத்தில. இப்ப... அடிமேல் அடிஅடிச்சால்

www.padippakam.com



ஆச்சிமாரும் அஞ்சமாட்டினம் எண்ட நிலை வந்திட்டுது... நட... நட... ஒரு நாளைக்கு ரெண்டு பேரும் உந்தப் பங்கருக்குள்ளதான் போறதோ தெரியாது...

(குண்டுகளின் சத்தம் பலமாகக் கேட்கிறது மரண ஓலங்களும் கேட்கிறது.)

பாட்டு

சக்கரம் சுழலுதடா வாழ்க்கை சக்கரம் சுழலுதடா
நெஞ்சில் அமைதியின்றி நிம்மதி அணுவுமின்றி — சக்கரம்
தஞ்சமென்றோடிச் சென்று அஞ்சியே வாழ்வோர்க்கும்
வெஞ்சமர்களததினிலே அஞ்சாமல் மாள்வோர்க்கும்
வஞ்சகர் விரித்த வலை ஏந்தியே பிழைப்போர்க்கும்

கஞ்சிக்கும் வழியின்றி ஏங்கிடும் மாந்தருக்கும் — சக்கரம்
என்றேனும் ஓர் நாளில் விடிவெள்ளி வந்துதீரும்
நன்றான அந்நாளை மனதினில் படம் வரைந்து
உணர்வுகள் உரமேற்ற நம்பிக்கை உயிர்கொடுக்க
துன்பத்தில் நீராடி வாழ்வுடன் போராடி — சக்கரம்

மரிய : (வந்தபடி) சண்முகம்... தங்கச்சி... சண்முகம்... தங்கச்சி...

பெண் குரல் : மரியதாசண்ணை... சண்முகண்ணையும்... பாக்கியக்காவும் பங்கருக்குள்ள இருக்கினம்... உதுகள் ரெண்டும் ஆரும் சொன்னாத்தான் பங்கருக்குள்ள போகுங்கள். பிறகு ஆரும் கூப்பிட்டாத்தான் வெளியில வருங்கள்.... கொஞ்சம் சத்தமாக் கூப்பிடுங்கோ அண்ணை...

மரி : சண்முகம்... சண்முகம்.... தங்கச்சி... தங்கச்சி...

சண் : எணேய்... வாணை... அண்ணை வந்திட்டார்... என்றபடி சண்முகம் வெளியே வருகிறார்.

சண் : அண்ணை.... கூப்பிடக் கூப்பிட எழும்புகிறா இல்லையண்ணை!... எழும்புகிறா இல்லையண்ணை...

www.padippakam.com



*மரி : (அவசரமாக உள்ளே சென்று...) தங்கச்சி... பிள்ளை... தங்கச்சி... (என்று பாக்கியத்தைத் தொட பாக்கியம் சரிந்து விழுகிறாள்)*

*(திரும்பிவந்து) சண்முகம்! சண்முகம்!*

*(சண்முகத்தின் கைகளைப் பிடித்தபடி)*

*சண் : என்னண்ணை.... என்னண்ணை.....*

*மரி : சண்முகம்... நாங்கள் தனிச்சுப் போட்டமடா! தனிச்சுப்போட்டமடா!*

*சண் : என்ன...! அவசரமாக... ஓடிச்சென்றுபாக்கியத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்து... என்ன விட்டுட்டுப்போட்டாளோ... பாக்கியம் என்னை விட்டுட்டுப்போட்டாளே... தான் போகப் போறனெண்டு தெரிஞ்சுதான் சொன்னவளோ? என்னைத் தனிய கொழும்புக்கு போகச்சொல்லி... தனியப் போட்டாளே... என்னை விட்டுட்டுப்போட்டாளே... என்ரை பிள்ளையைக் காணாமல்போட்டாளே...*

*மரி : சண்முகம்... சண்முகம்...*

*சண் : ஆச்சி... எணேய்... எணேய்... என்ரை ஆச்சியல்லே... எணேய்.. ஒண்டாய் போவமெண்டு நான் சொல்லிக் கொண்டிருக்க... தள்ளியிரு எண்டு சொல்லிப்போட்டு... தனியப் போட்டியோ... என்னை தனியவிட்டுப் போட்டியோ... கொழும்புக்கு உன்னைத் தனியவிட்டுட்டுப் போகமாட்டன் எண்டு நான் சொல்லிக் கொண்டிருக்க... நீ என்னைத் தனியவிட்டிட்டு, உலகத்தைவிட்டே போட்டியே.... எணேய்... என்ரை பிள்ளை தவிக்கப் போறானெணை... அவனுக்கு என்னெண்டணை அறிவிக்கப் போறன்... அவனைப் பாக்கோணும் பாக்கோணுமெண்டு ஆசைப்பட்டியே... இப்ப பாக்காமலே போட்டியேணை...*

www.padippakam.com



ஐயோ... பேரப்பிள்ளையள் பேரப்பிள்ளையளெண்டு சங்கிலி மோதிரம் செய்துவச்சுப்போட்டு பாக்காமல் போட்டியேணை... எணேய், தனிய நான் இருப்பனெண்டு விட்டிட்டுப் போனியோ... (மரியதாஸை நோக்கி) அண்ணை... அண்ணை... பாத்தியே இவளை.... என்னை விட்டிட்டுப் போட்டாள். எண்டைக்குமில்லாத மாதிரி கொள்ளிக்கட்டையோட வந்தனெண்டு சொன்னாள் அண்ணை. இப்ப என்னை... கொள்ளிவைக்க வைச்சுட்டாள் அண்ணை... அண்ணை... என்ரை பிள்ளை... என்ரை பிள்ளைக்கு...?

*மரி* : அறிவிப்பம்...

**சண்:** அப்ப என்ரை பிள்ளை தாயைப் பாக்க வந்திடுவான், என்னண்ணை..? வருவானெல்லே? வருவானெல்லே..?

*மரி* : ஓம். வருவான்... சண்முகம்... சண்முகம், வா முதலிலை தங்கச்சியை வீட்டுக்கை கொண்டு போவம்... வாடா... வாடா...

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 5



***களம்***

*ஜேர்மனி... கிருஸ்ணமூர்த்தி வீடு*

***பாத்திரங்கள்***

*மூர்த்தி, மூர்த்தியின் மனைவி சியாமளா, மூத்தமகன் திலீப், இளையமகன் ரமணன், நண்பர் லிங்கம்.*

*மூர்த்தியின் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.*

***சியா :*** *(வந்தபடியே) திலீப், ரமணன்! உங்கள் ரெண்டுபேருக்கும் எத்தினை தரம் சொல்லுறது? கீழ்வீட்டு கிழவன் வந்திடப் போகுது... துள்ளி விளையாடாதீங்கோ...*

***திலீப் :*** *அம்மா! வெளியபோயும் விளையாட விடமாட்டீங்கள். வீட்டுக்குள்ளயும் விளையாட விடமாட்டீங்கள்...*

***ரம :*** *அண்ணா!! அப்பா hat gesagt wir dürfen spielen. (அப்பா விளையாடச் சொல்லி சொன்னவர்.)*

***திலீப் :*** *Ja... ich weiß das auch, aber அம்மா will das nicht... (ஓம்... எனக்கும் தெரியும். ஆனால் அம்மாவுக்கு விருப்பமில்லை.)*

***சியா :*** *Hausaufgaben (வீட்டுப்பாடம்) எல்லாம் செய்திட்டீங்களே... திலீப்.. தம்பிக்கு தெரியாததை சொல்லிக் குடுக்கலாமெல்லே...*

படிப்பகம்

www.padippakam.com



ரம : அம்மா... bitte... (தயவுசெய்து...) அண்ணா எனக்கு சொல்லித்தரவேண்டாம்... der kann mir nichts bei bringen... (அவரால் எனக்கு சொல்லித் தர முடியாது.)

திலீப் : ரமணன்... Wenn du nicht deine fresse halst... hau ich dir eine rein! (உன்ரை வாயைப் பொத்தாட்டி உனக்கு அடிச்சுப்போடுவேன்.)

சியா : திலீப்... இப்ப ரெண்டு பேரும் அடிவாங்கப் போறீங்கள்... அப்பா வாற நேரமாப்போச்சு... குழப்படி செய்யாமல்... ரெண்டு பேரும் விளையாடப்போங்கோ.

திலீப் : Danke Mami (நன்றி அம்மா.)

(ரமணன்... சிறுவர்கள் வெளியே செல்லப் புறப்படும் வேளையில்... மூர்த்தி வருகிறார்...)

மூர் : சண்டைபிடிக்காமல் விளையாடிப்போட்டு... நேரத்துக்கு வரவேணும்... என்ன...

ரம : சரியப்பா...

மூர் : என்னப்பா... எத்தினை தரம் சொன்னாலும் கேக்கிறியள் இல்லை... Bildung (கட்டிடத்து)க்குள்ள வந்தவுடன எங்கட வீட்டுச் சத்தம்தான் கீழ கேக்குது...

சியா : அதுக்கு நானென்ன செய்யிறது. உங்கடை பிள்ளையளோடை கத்திக்கத்தி தொண்டை வறண்டுபோச்சுது...

மூர் : என்ரை பிள்ளையளெண்டு நினைச்சுக் கத்தினதாலதான் தொண்டை வறண்டிருக்கு... உம்மடை பிள்ளைய ளெண்டு நினைச்சு சொல்லிப் பாரும் தொண்டை வறளாது...

சியா : சரி... சரி... உங்கடை joke (பகிடி) போதும்... கடிதம்

www.padippakam.com



*பாத்தனீங்களேயப்பா...*

*மூர்* : *ஓ... இங்கேப்பா... ஊரில இருந்து கடிதம் வந்திருக்கு...*

*சியா* : *ஆற்ர? மாமா மாமியின்ரையே? என்ன எழுதியிருக்கினம்?*

*(மூர்த்தி கடிதத்தை பிரிக்க...)*

*சியா* : *இன்னும் வாசிக்கேல்லையே? வாசியுங்கோவன்...*

*(சியாமளா உள்ளே செல்ல... மூர்த்தி கடிதம் வாசித்து முடிய சியாமளா தேனீரோடு வருகிறாள். மூர்த்தி யோசனையாக இருப்பதைக்கண்டு)*

*சியா* : *கடிதம் வாசிச்ச உடன யோசிக்கத் துவங்கீற்றீங்களே? இஞ்சை கொண்டாங்கோ.*

*(சியாமளா கடிதம் வாசிக்க, மூர்த்தி தேனீர் குடிக்கிறார்.)*

*சியா* : *இதென்ன...? இது ஒண்டரை மாதத்துக்கு முதல் எழுதின கடிதமப்பா...*

*மூர்* : *ஓ...*

*சியா* : *மெய்யேப்பா... மாமா மாமிக்கு எங்களைப் பாக்க ஆசையா இருக்காம்... இப்பிடிச் செய்தாலென்ன...*

*மூர்* : *என்னெண்டு சொல்லுமன்.*

*சியா* : *நாங்கள் இப்ப Ceylon (சிலோன்)க்கு போறது நினைக்கேலாத விசயம். அவையை சிங்கப்பூருக்கு வரச்சொல்லி எழுதுங்கோ... அடுத்த Ferien (விடுமுறை)னோட எல்லாரும் போய் பாத்திட்டு வருவம்...*

*மூர்* : *அவை நகை வேண்ட வேணுமெண்டு எழுதேல்லயப்பா.... எங்களைப் பாக்கவேணுமாம்...*

*சியா* : *நானிப்ப நகை வேண்டப் போறதெண்டு சொன்னனானோ?*

www.padippakam.com



மூர் : பின்ன என்னப்பா? யாழ்ப்பாணத்தில இருக்கிறவையைப் பார்க்கிறதுக்கு Singapore (சிங்கப்பூர்) ஒரு Center (சென்ரர்)ரே? யாழ்ப்பாணம் போக ஏலாட்டி.... கொழும்புக்கு போயெண்டாலும் பார்க்கலாம்தானே? நான் அவை இந்த வயதில கொழும்புக்கு வாறதே கஷ்டம் எண்டு யோசிச்சுக்கொண்டிருக்கிறன்... அவ என்னண்டா Singapore (சிங்கப்பூர்)ஆம்...

சியா : அப்ப விடுங்கோ... நான் யோசினை சொன்னா உங்களுக்குப் பிடிக்காதே.

மூர் : சொல்லுற யோசினையை நடக்கக்கூடியமாதிரி சொல்லோணுமப்பா... சனம் போக்குவரத்துக்கு வழி தெரியாமல், சாப்பாட்டுச் சாமான் வாங்கேலாமல்... இருக்கிறதுக்கு இடமில்லாமல்... வருத்தங்களுக்கு மருந்தில்லாமல் எவ்வளவு கஷ்டப்படுகுதுகள் எண்டு தெரியுமே... இப்ப கொஞ்சநாளைக்கு முதலிலதான் கிளாலிக் கடலிலை... பேப்பரிலை பாக்கேல்லையே...

சியா : பேப்பர் வாசிக்க எனக்கு எங்கயப்பா நேரம்? பிள்ளையளின்ரை அலுவலுக்கும், வீட்டு வேலைக்குமே நேரம் சரியாக் கிடக்கு.

மூர் : ஓமோம்... நம்புறன்... மா இடிச்சு.... தூள் இடிச்சு... முத்தம் கூட்டி, தண்ணி அள்ளி, உடுப்புத்தோச்சு... உண்மையா எக்கச்சக்கமான வேலைதான்... முதலிலை உந்த T.V. (ரீவி)யை யன்னலுக்குள்ளால தூக்கி எறியவேணும்... அதுதான் அவங்களையும் கெடுத்து... உம்மையும் கெடுக்குது. கொஞ்சநேரம் வெளியிலபோய் நல்ல காத்து வேண்டுமெண்டால் போறதில்லை...

சியா : வெளிய போறதெண்டால் காசு வேணுமப்பா....

www.padippakam.com



*மூர்* : எந்தக் கடையிலயப்பா காசுக்கு காத்து விக்கிறாங்கள்...

*சியா* : காத்து வாங்குறதுதான் இப்ப முக்கியம்... வீட்டில எவ்வளவு வேலைகிடக்கு... அவர் காத்து வாங்கப் போகட்டாம்...

*மூர்* : சும்மா... வேலை வேலை எண்டு சொல்லி எரிச்சலைக் கிளப்பாதையும்... மூண்டு மணித்தியாலத்தில செய்யிற வேலையை பன்ரண்டு மணித்தியாலத்தில செய்யிறியள்.. ஏன் சொல்லும் பாப்பம்? வேலைசெய்யிற Method (முறை) தெரியாமல்... ஒருமணித்தியாலத்தில சமைக்கலாம்... நீர் மூண்டு மணித்தியாலம் எடுக்கிறீர்... அதுக்கு நானென்ன செய்யிறது...

*சியா* : வீடு பாக்கச் சொல்லி எத்தினைதரம் சொன்னான்... இந்தக் குட்டிக் குசினியோடை நான் படுகிறபாடு உங்களுக்கு என்ன தெரியும்.. இங்க இருந்து அங்க காவி.. அங்க இருந்து இங்க காவி அதிலயே என்ரை நேரம் போகுது...

(வாசல் மணி ஒலி கேட்கிறது.)

*சியா* : ஆரோ வருகினம்.... போதும்... ஆரெண்டு பாருங்கோ...

(மூர்த்தியின் கதவைத்திறக்க. மூர்த்தியின் லிங்கம் - வருகிறார் லிங்கம்... மதுவுக்கு நண்பரா? அல்லது லிங்கத்துக்கு மது நண்பரா? ஆனால் மூர்த்திக்கு இவர் நண்பர்)

*மூர்* : ஆ... லிங்கமே... வாரும்... வாரும்...

*சியா* : என்ன லிங்கமண்ணை... கனநாளாய் இந்தப் பக்கம் காணேல்லை.

*லிங்* : எங்க வேலையும் வீடுமாப் போகுது...

*சியா* : வேலையும் வீடுமாப் போகுதோ... அல்லது வேலையும்

www.padippakam.com



வேற கூட்டங்களுமாப் போகுதோ?

மூர் : சியாமளாவின் பேச்சை நிறுத்தும் எண்ணத்தில் என்னப்பா? லிங்கம் ... இரும்.

சியா : இல்லையப்பா! லிங்கமண்ணையைப்பற்றிக் கேள்விப் படுகிறதுகள் நல்லா இல்லை அதுதான் கேட்டனான்...

லிங் : கதைக்கக் கதை இல்லாட்டி சனம் ஆயிரம் கதை கதைக்கும்... அதையெல்லாம் கேக்கிறதே...

சியா : லிங்கமண்ணை நான் கேள்விப்பட்டது பொய்யெண்டால் சந்தோசம் தான்.

சியா : சரி! இருந்து கதையுங்கோ... தேத்தண்ணிக் கொண்டு வாறன்...

(சியாமளா உள்ளே போக...)

லிங் : மூர்த்தியர் எனக்கு தேத்தண்ணி வேண்டாம்... இப்ப வரேக்கைதான் குடிச்சனான்...

மூர் : என்ன தேத்தண்ணியோ? வேற ஏதுமோ?

(சைகையால் காட்டுகிறார் லிங்கம்.)

மூர் : சியாமளா லிங்கத்துக்கு Tea (ரீ) வேண்டாமாம்... வைக்காதையும்... பிறகு சொல்லும்... இண்டைக்கென்ன லீவே?

லிங் : ஓ... லீவுதான்...

மூர் : லிங்கம் இண்டைக்கு ஊர்க் கடிதம் வந்திருக்குது உமக்கும் வந்ததே?

லிங் : ஓம்... எனக்கும் வந்தது... மூர்த்தியார் அதுதான் கவலையாயிருந்துது... தண்ணியடிச்சிட்டன்.



படிப்பகம்

www.padippakam.com



மூர் : லிங்கம்... உந்தக் கதையை விடும்... கவலையெண்டாலும் தண்ணியடிப்பியள்... சந்தோசம் எண்டாலும் தண்ணி யடிப்பியள். கடிதம் வரேல்லை எண்டும் தண்ணி போடுவியள்... கடிதம் வந்ததெண்டும் தண்ணி போடுவியள்... தண்ணியை அடிச்சுப்போட்டு அதுக்குக் காரணம் கண்டு பிடிக்கிறீங்கள்... என்னைப்போல தேக அலுப்புக்கெண்டு கொஞ்சம் பாவிக்கிற ஆக்களும் உங்கடை கதையளால தண்ணியெடுக்க ஏலாமப்பண்ணுறியள்... அது சரி, ஊரில இருந்து சனம் இப்ப லேசா வருகுதாம்... மனுஷி பிள்ளையைக் கூப்பிடேல்லையே..?

லிங் : மூர்த்தியர்... இனி என்னெண்டு கூப்பிடுகிறது... கொஞ்சக் காசோட சனம் லேசா வந்தநேரத்தில வரச்சொல்லி எழுத, மாமா மாமி தனிய... பிள்யையின்ரை படிப்பு பழுதாகிப் போகும், வரமாட்டான் எண்டாள்... இப்ப காசும் கனக்க... எனக்கும் கூப்பிட விருப்பமில்லை.

மூர் : ஏன் உமக்கென்ன காசுப் பிரச்சினை? ஒரு முழு வேலை செய்யிறீர்.... சனி ஞாயிறில Aushilfe (பகுதி நேர) வேலையும் செய்யிறீர்... பிறகென்ன லிங்கம்?

லிங் : காசுப் பிரச்சினையில்லை... அவள் வரமாட்டனெண்டு சொன்னவள். அங்கயே இருக்கட்டும்... மாதம் மாதம் காசனுப்புறன்... மூர்த்தியர்.... அவள் என்ரை வாழ்க்கையை யோசிக்கேல்லை... அவளை மதிச்சு நான் ஏன் என்ரை வாழ்க்கையை வீணாக்கவேணும்... அதால நான் யோசிச்சிட்டன்...

மூர் : என்னெண்டு யோசிச்சனீர்?

லிங் : எல்லாரையும் போல... எனக்கும் Germany (ஜேர்மனி)யில குடும்பமா வாழுற ஆசை வந்திட்டுது... என்ரை

படிப்பகம்

www.padippakam.com



தகுதிக்கேற்றமாதிரி... என்னெண்டு கேக்கேல்லை... கலியாணம் செய்த ஒருத்தன்ரை தகுதிக்கேற்றமாதிரி பொம்பிளையும் கலியாணம் கட்டியிருக்கிறா... அவ்வளவுதான்...

மூர் : லிங்கம் என்ன பிசத்துறீர்..?

லிங் : மூர்த்தியர் இதுதானே கூடாது. நான் கொஞ்சம் குடிச்சனெண்டதை மரியாதையோடு சொன்னனான். பிறகு நீர் பிசத்திறனெண்டு சொல்லக்கூடாது... எனக்கும் என்ரை மனுசிக்கும் சரியில்லை எண்டமாதிரி... ஒராளுக்கும் புருஷனுக்கும் சரியில்லை. அவவுக்கு இங்கை ஒரு பிள்ளையிருக்கு... எனக்கு அங்க ஒரு பிள்ளையிருக்கு... இப்ப நாங்கள் முடிவெடுத்திட்டம் எங்களுக்கு ரெண்டு பிள்ளையளெண்டு... ஒண்டும் ஒண்டும் ரெண்டு... கணக்குச் சரிதானே... அப்ப எனக்கு இப்ப வெறியில்லை... சரியோ.. நீர் என்ரை ஊர்க்காரன்... உம்மிட்டை கதைக்கேக்கை கொஞ்சம் உஷார் வேணும்... அதுக்காகத்தான்... கொஞ்சம்... எடுத்தனன்.

மூர் : சாப்பிடவும் மாட்டனெண்டிட்டீர்... Teaயும் குடிக்கேல்லை...

லிங் : சாப்பிடாத வீடு... ரீ குடிக்காத வீடெண்டாத்தான் பிரச்சினை. இங்கையொரு பிரச்சினையும் இல்லை... மூர்த்தியர் எனக்கு ஒரு ஐம்பது மாக்... அவசரமா வேணும்... நாளைக்கு முதலாந் திகதி... Bank (பாங்)க்கு காசு வந்திடும்... பின்னேரம் கொண்டுவந்து தருவன்..

மூர் : லிங்கம்... நீர் எப்ப தாறீர் எண்டது பிரச்சினையில்லை... இந்தக் காசைக் கொண்டுபோய் இண்டைக்கே முடிச்சிடுவீர்...

லிங் : மூர்த்தியர்... Bitte... (தயவு செய்து...)! நான் வேற ஒருத்தரிட்டையும்போய்... காசுகேட்க மாட்டன்... நீர் என்ரைஊரவன்.. அந்த உரிமையில தான் உம்மிட்டை காசு கேக்கிறன்.

www.padippakam.com



(மூர்த்தி காசு கொடுக்க வாங்கியபின்)

லிங் : மூர்த்தியர்... இப்ப சொல்லும் உம்மடை ஞாயத்தை

மூர் : நீர் போறவழி பிழையெண்டதுதான் என்ரைஞாயம்...

லிங் : மூர்த்தியர்.... பிழையெண்டால் சிவப்பெரியும்... சரி-யெண்டால் பச்சை எரியும்

மூர் : லிங்கம்! பிழை சரி தெண்டதைப்பற்றி இன்னொரு நாளைக்கு ஆறுதலா கதைப்பம்... இப்பநீர்... அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டாம். இப்ப வீட்டை நடவும்.

(ரெலிபோன் அடிக்கிறது)

(பாக்கியம் இறந்த செய்தி ரெலிபோனில்)

மூர் : *Ha:llo. ja Kirshnamoorthy... ja..... சிவபாக்கியம்.... றயள.... Red Cross... ja... ja... ja...* (ஹலோ... ஓம் கிருஸ்ணமூர்த்தி... ஓம்... சிவபாக்கியம்.. என்ன... றெட் குறோஸ்... ஓம்... ஓம்...)

(மூர்த்தி அதிர்ச்சியுறுகிறான்.)

சியா : (வந்தபடி) ஆரப்பா அது Deutsch (டொச்) இல கதைசசது?

லிங் : சியாமளா... அவசரப்படுத்தாதையுங்கோ Telefon Red Cross (ரெலிபோன் றெட் குறோஸ்) இல இருந்து வந்திருக்குப்போல இருக்கு... ஏதோ கவலையான விஷயம்.

சியா : என்னப்பா...?

மூர் : அம்மா... அம்மா... என்ரை அம்மா போய்ரா... என்னை விட்டிட்டுப் போய்ரா.

(திரை)

○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 6



***களம்***

*சண்முகம் வீடு*

**பாத்திரங்கள்**

*மரியதாஸ், யோகம், மகேஸ்வரி, உமா, சண்முகம், காந்தன்.*

*சண்முகம் ஆழ்ந்த கவலையில் ஒருபுறம் இருக்கிறார்... மரியதாஸ் யோகம் வீட்டை ஒழுங்கு செய்யும் பாவனையில் இருக்கிறார்கள்... மகேஸ்... கையில் ஒரு பொதியுடன் வருகிறார். அது ஓலைப் பெட்டியாக இருந்தால் நல்லது. உள்ளே போகிறார்... உமா பின்னால் வரலாம்.*

***மகேஸ் :*** *(உள்ளிருந்து வந்து மரியதாசிடம்).....*

*அண்ணை... அடுப்படிக்கை தோசை வச்சிருக்கிறன். ஆறு ஏழு பேருக்குத்தான் காணும்... இன்னும் வேணுமெண்டால் உமாவிட்டை சொல்லிவிடுங்கோ... சுட்டுக்குடுத்து விடுகிறன்...*

***மரி :*** *என்ன நீ... தோசைக் கடையே வச்சிருக்கிறாய்? ஆக்கள் வந்தா சுட்டனுப்புகிறதுக்கு...*

***மகேஸ் :*** *ஓமண்ணை... இப்ப தோசையும் இடியப்பமும் காலமையில செய்து விக்கிறனான்... வாழ்க்கையும் ஓடவேணுமெல்லே...*

***மரி :*** *சரி... அப்ப... நீ போய் உன்ரை பிழைப்பைப் பார்...*

படிப்பகம்

www.padippakam.com



எல்லாம் முடிஞ்சுது. இனி சனம் வராது... இருக்கிறது போதும்...

(மகேஸ்வரி போகும்போது...)

**மரி** : மகேசு... ஒருக்கா... அவனிட்டை சாப்பிடச் சொல்லிப்போட்டுப் போ...

**மகேஸ்** : சரியண்ணை... (மகேசு சண்முகத்திடம் போய்) அண்ணை... அடுப்படிக்கை தோசை வச்சிருக்கிறன்... உமா நிக்கிறாள்... சாப்பிடுங்கோ... நான் போட்டுவாறன்...

**மரி** : யோகத்தின்ரை.. பொடியன் வந்திட்டானே...

**மகே** : இல்லையண்ணை...

**மரி** : அப்ப... யோகத்திட்டைச் சொல்லிவிடு அவன் வந்து திரும்பி கொழும்புக்குப் போகேக்கை எங்கள் ரெண்டு பேரையும் கூட்டிக்கொண்டு போகவேணுமெண்டு...

**சண்** : அண்ணை அண்ணை... என்ன... தனித்தனியாக் குசுகுசுத்துக்கொண்டு நிக்கிறாய்... எல்லாம் முடிஞ்சுது... ஊருக்கை நடந்த கலியாண வீடு செத்த வீட்டுகளுக்கெல்லாம் அவிச்சுப்போட்டுட்டு இப்ப தனிய இருந்து என்னை வாங்கித் தின்னச் சொல்லிப்போட்டு.. அவள் போட்டாள்... அண்ணை.. எனக்கு இனி.. இங்க இருக்கேலாது. அவள் தான் பெரிய ஆளெண்டு எனக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் காட்றாள். நான் என்ரை பிள்ளையைப் பாக்கோணும்... அவனுக்கு ஆறுதல் சொல்லோணும்...

**மரி** : சண்முகம்! எல்லா ஒழுங்கும் நான் செய்வன்... நீ ஒண்டுக்கும் யோசியாதை... எழும்பு.. போய் குளிச்சுப்போட்டு சாமி கும்பிட்டுட்டு வா. வந்து சாப்பிடு.

www.padippakam.com



*(சண்முகம் எழுந்து போக, மரியதாஸ் சுவரில் முன்பிருந்தபடி படங்களை மாட்டுகிறார். அப்போது காந்தன் உள்ளே வருகிறான்.)*

காந் : அண்ணை...

மரி : வா... தம்பி... வா...

காந் : என்னண்ணை... போகேக்கை மனுஷியின்ரை கடிதம் கொண்டு போனன். வரேக்கை மனுஷி இல்லை...

மரி : இனியென்னடா தம்பி செய்யிறது... நாங்கள் குடுத்து வச்சது அவளவுதான். சரி... நீ எப்ப இனிப் பயணம்?

சண் : (வந்தபடி) வாடா தம்பி... பாத்தியே... சொன்னாய்... சந்தியில நிண்டு கிழிப்பாளெண்டு... இப்ப... ஒருத்தரும் வேண்டாமெண்டு போட்டாளெடா...

காந் : அண்ணை, இப்பதான் வந்தனான்.... அம்மா விஷியத்தைச் சொன்னவுடன இங்க வந்திட்டன்... நான் கொழும்புக்கை போக கிளாலிக்கை பிரச்சினை துவங்கீற்றுது. ... அதுதான் இந்தமுறை திரும்பி வரச் சுணங்கிப்போட்டுது.

மரி : சரி... இனி நீ எப்ப வெளிக்கிடப்போறாய்..?

காந் : நீங்கள் எப்ப வெளிக்கிடுகிறது எண்டு சொன்னாச் சரி...வெளிக்கிடுவம்...

சண் : இனி என்னடா தம்பி... நாள் நட்சத்திரம் குறிச்சே வெளிக்கிடப் போறன்... நீ ஓமெண்டால் இப்பவும் நான் றெடி...

மரி : தம்பி... நான் பின்னேரம் வந்து எப்ப வெளிக்கிடுவம் எண்டு சொல்லுறன். நீ போட்டுவா.

*(காந்தன் போக)*

www.padippakam.com



**காந்** : அப்ப நான் வாறனண்ணை...

(மரியதாஸ் யோசிக்க)

**சண்** : பிறகென்ன நாள் வச்சுக் கொண்டு நிக்கிறாய்... பின்னேரம் முன்னேரமெண்டு...

மகேசுவின்ரை பெட்டை நிக்கிறாளெல்லை... அவளைக் கூப்பிடு.

**உமா** : என்னப்பு... தேத்தண்ணி ஊத்தட்டே....

**சண்** : ஒண்டும் வேண்டாம் நீ... போய் அம்மாவை ஒருக்கா வரச்சொல்லு...

**உமா** : வாறன் அப்பு

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 7



***களம்***

*மூர்த்தி வீடு*

**பாத்திரங்கள்**
*மூர்த்தி, சண்முகம், மரியதாஸ், சியாமளாவின் குரல், ரெலிபோன் ஒப்பரேட்டரின் குரல்.*

*ஜேர்மனியில் மூர்த்தி வீட்டின் படுக்கையறை... அதிகாலை வேளை. மூர்த்தி சியாமளா நித்திரையில்... மேடையின் இடப்பக்க முனையில் கொழும்பிலுள்ள தனியார் தொலைபேசி பரிவர்த்தனை நிலையக்கண்ணாடி அறை.*

*தொலைபேசி மணி ஒலிக்கிறது.*

***சியாமி*** : அப்பா... மெய் யேப்பா... ரெலிபோன் அடிக்குதப்பா... எடுக்கிறீங்களே...?

***மூர்த்தி*** : ஓ... (மூர்த்தி படுக்கையில் கிடந்தபடி)

***மூர்*** : ஹலோ... ஹலோ..

***குரல்*** : *Hallo... Call from Sri Lanka. May I speek with Mr. Moorthy, please.*

***மூர்*** : *Ja... Speeking...*

***குரல்*** : *Hold the line please...* ஐயா, மூண்டாவதுக்குப் போங்கோ. மூர்த்தி பேசுறார்.

www.padippakam.com



*(சண்முகம் கண்ணாடி அறைக்குள் வந்து)*

**சண்** : தம்பி... மூர்த்தி... நான் ஐயர கதைக்கிறன்.

**மூர்** : ஐயாவோ.. ஐயா.. ஐயா...

**சண்** : என்னப்பு...?

*(அவசரம் குரலில் தெரிகிறது)*

**மூர்** : நீங்கள் நிக்கிற நம்பரைச் சொல்லுங்கோ... நான் திருப்பி எடுக்கிறன்.

**சண்** : வேணாம்... வேணாம்... இப்பிடியே கதை.. இஞ்சை என்னிட்டைக் காசு கிடக்குது. சியாமளா, பிள்ளையள் எல்லாம் சுகமா இருக்கினமே? நீ சுகமா இருக்கிறியே? ராசா.

**மூர்** : ஓமய்யா... எல்லாரும் சுகமா இருக்கிறம். ஐயா.. எனக்கு அம்மாவைப் பாக்கக் குடுத்து வைக்கேல்லை. ஐயா... (கலங்குகிறான்)

**சண்** : ஓமப்பு. அம்மாவும் குடுத்து வைக்காமல் போய்ச் சேர்ந்திட்டாள். அப்பு... எனக்கு உன்னைப் பாக்கவேணும்.. நான் உன்னைப் பாக்கவேணும்... உன்னைப் பாத்திட்டால் அந்த நிம்மதியோட நானும் அம்மாவைத் தேடிப் போயிடுவன்.

**மூர்** : ஐயா, எனக்கு சிலோனுக்கு வந்திட்டு திரும்பி வரக்கூடிய விசா இன்னும் கிடைக்கேல்லை. அந்த விசா கிடைக்காமல் நான் உங்க வந்தால், திரும்பி வாறது கரைச்சலய்யா!

**சண்** : அப்ப நானும் அம்மாமாதிரி உன்னைப் பாக்கேலாமல் போகவேண்டியதுதானாக்கும்.

**மூர்** : ஏனையா உப்பிடிக் கதைக்கிறியள்? உங்களுக்கு

www.padippakam.com



ஒண்டும் நடக்காது. வினாய் பயப்பிடாதேங்கோ. நீங்கள் உப்பிடியே கொஞ்சநாளைக்கு கொழும்பில நில்லுங்கோ. நான் அடிக்கடி ரெலிபோன் எடுத்துக் கதைக்கிறன். காசும் அனுப்புறன்.

**சண்** : இங்க இருந்து நான் ஆரையப்பு பாக்கிறது? எனக்குக் காசு வேண்டாம் நான் உன்னைப் பாக்கவேணும். எனக்கு உன்னைக் கெதியாப் பாக்கவேணும்போல கிடக்கு.

**மூர்** : ஐயா... யாழ்ப்பாணத்தில இருந்து என்னெண்டு தனிய வந்தனீங்கள்?

**சண்** : நான் தனிய வரேல்லை ராசா. மரியதாசண்ணையும் வந்தவர். இஞ்ச பக்கத்திலதான் நிக்கிறார். தம்பி.. நான் கேட்டதுக்குப் பதில் சொல்லேல்லையப்பு...

**மூர்** : ஐயா, மரியதாஸ் மாமாவிட்டை ஒருக்கா குடுங்கோ...

**சண்** : கொஞ்சம் பொறு. அண்ணை... இந்தா... உன்னோட கதைக்கப்போறானாம்...

(மரியதாஸ் கண்ணாடி அறைக்குள் வந்து ரீசிவரை வாங்கி)

**மரி** : மூர்த்தி.... எப்பிடி இருக்கிறாய் தம்பி?

**மூர்** : சுகமா இருக்கிறன்... மாமா... உங்கட கடிதம் கிடைச்சது... டேவிற் சுகமா இருக்கிறானே...? வீட்டை வாறவனே..?

**மரி** : ஆ... ஓ... ஓ... இருக்கிறான். கனநாளைக்குப் பிறகு அம்மா மோசம்போனபோது வந்திட்டுப்போட்டான்... தம்பி.. இங்கை ஐயா தனிச்சுப் போய்ரான்... வருத்தங்களும்... அவனைப் பாக்க எனக்கு கவலையா இருக்கு. நீ ஒருக்கா கொழும்புவரைக்கும் தனிய எண்டாலும் வந்திட்டுப் போனால் ஐயாவுக்கு ஆறுதலா இருக்கும். தம்பி.

**மூர்** : மாமா, இங்கை விசாப் பிரச்சினை இருக்கு. விசா கிடைச்சா உடன வருவன். நீங்கள்தான் ஐயாவுக்கு

www.padippakam.com



ஆறுதல் சொல்லவேணும். கொழும்பில நில்லுங்கோ.

**மரி** : சரி... நான் சொல்லுறன். நீ ஐயாவோடை கதை. இந்தா... நீ கதை...

**சண்** : (ரிசீவரை வாங்கி) தம்பி...

**மூர்** : ஐயா, நான் காசனுப்புறன். கொழும்பிலேயே நில்லுங்கோ...

**சண்** : தம்பி... எனக்கு காசு வேணாம். நான் உன்னைப் பாக்கவேணும். சாக முதல் நான் உன்னைப் பாக்கவேணும். எனக்கு காசு வேணாம். பாணந்துறைக் கடை வித்த காசு பாங்கில வட்டியோட கிடக்கு... எனக்கு உன்ரை காசு வேணாம்... என்ரை பிள்ளையை நான் பார்க்க வேணும். நான்... சாகிறதுக்கு முந்தி... உன்னைப் பார்க்க வேணும்...

(சண்முகம் ரிசீவரை வைத்துவிடுகிறார்.)

**மூர்** : ஹலோ... ஹலோ... ஐயா.. ஐயா... லைன் கட்டாகீற்றுது...

(ரிசீவரை வைத்த மூர்த்தி மேடையில் யோசனையோடு உலாவுதல்.)

**சண்முகத்தின் குரல்:** அண்ணை... உனக்கு என்ன சொன்னவன்? அவன் வரமாட்டான்போல கிடக்கு. என்னை ஆவியா அலைஞ்சு திரியவிடப் போறான்.

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 8



***களம்***

*ஜேர்மனியில் மூர்த்தியின் வீடு.*

***பாத்திரங்கள்***

*திலீப், ரமணன், மூர்த்தி, சியாமளா, சண்முகம், மேல்வீட்டு ஜேர்மன் தாத்தா.*

*ரமணன் Computer (கொம்பியூட்டர்) பொம்மையைப்போல அசைந்துகொண்டு நிற்கிறான்.*

***ரம*** : *அண்ணா.... Na, kannst du mir das nach machen? (என்னைமாதிரி செய்வியா?)*

***திலீப்*** : *Das ist doch billig!! Ich kann das noch viel besser! (இதில் கஸ்டமில்லை. நான் இதுக்கும் பார்க்க நல்லாய் செய்வேன்.)*

***ரம*** : *Träum nicht ! (கனவு காணாதை.)*

***திலீ*** : *Du weißt nicht wie ich tanzen kann! (நான் எப்பிடி ஆடுவனெண்டு உனக்குத் தெரியாது.)*

***ரம*** : *OK. Komm lass tanzen! (சரி, வா.. ஆடுவம்.)*

*(திலீப் நடனமாட, கீழ்வீட்டிலிருந்து இடிக்கும் சத்தம் கேட்கிறது...)*

www.padippakam.com



ரம : அண்ணா Opa klopft.... Genug jetzt... (தாத்தா தட்டுகிறார்.. இப்ப போதும்..)

திலீ : இந்தக் கிழவனோட பெரிய கரச்சல்...

(வாசல் கதவு மணி ஒலிக்கிறது.)

திலீ : ரமணன் கதவை திற... Opa (தாத்தா) எண்டா திறக்காதை.

(ரமணன் 'முடியாது' என்பது போலிருத்தல்.)

திலீ : Geh hin und guck nach! Wenn Opa vor der Tür steht mach nicht auf! OK? (போய் பார். தாத்தா எண்டா கதவைத் திறக்காதே.)

(ரமணன் கதவைப் போய் திறக்க ஜேர்மன் தாத்தா வருதல்.)

ஜேர் : ... morgen...

திலீ : (இடைமறித்து) Bitte entschuldigen sie mich! Sagen sie es nicht meinen Eltern. Das wird nie wieder vorkommen! Versprochen! (தயவுசெய்து என்னை மன்னியுங்கள். எனது பெற்றோருக்கு சொல்லவேண்டாம். இப்படி திருப்பி நடக்காது.)

(ஜேர்மன் தாத்தா செல்ல சிறுவர்கள் இருவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டு மேடையின் நடுப்பகுதிக்கு வந்து... மேசையை ஒழுங்கு படுத்துகின்றனர். வாசல் கதவு மணி மறுபடியும் ஒலிக்க, ரமணன் கதவை திறக்கிறான்... திலீப் தொடர்ந்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறான்.)

ரம : அண்ணா... Wieder Opa (மறுபடியும் தாத்தா...)

திலீ : இந்தபடியே Was? Schon wieder? (என்ன... மறுபடியுமா?)

ரம : Nein nicht der! Das ist ein Tamilischer Opa. (அவர்

www.padippakam.com



இல்லை. இது ஒரு தமிழ் தாத்தா...) (எழும்பி தம்பியார் அருகே செல்ல)

திலீ : Was? Tamilischer Opa? (என்ன? தமிழ் தாத்தா?) (எழும்பி தம்பியார் அருகே செல்ல)

(சண்முகம் சிறு கைப்பையுடன் உள்ளே வருகிறார்.)

சண் : பிள்ளையள் இது மூர்த்தியின்ரை வீடுதானே.......

திலீ : ஓம்..... வாங்கோ...

சண் : (பிள்ளைகளை அணைத்து) என்ரை குஞ்சுகளே... தனியவே இருக்கிறீங்கள்.... என்ரை ராசாமாரே... அப்பா எங்கயப்பு... அம்மா எங்கயப்பு...

ரம : Pappa ist zur Arbeit gegangen und Mamma zum Einkaufen. (அப்பா வேலைக்கும் அம்மா கடைக்கும் போய் விட்டனர்.)

திலீ : தம்பி.... Er versteht kein Deutsch. (அவருக்கு ஜேர்மன் பாசை விளங்காது.) அப்பா வேலைக்குப் போய்ரார்.... அம்மா கடைக்குப் போய்ற்ரா... இப்ப வருவினம்...

சண் : அப்ப நீங்கள் ரெண்டு பேரும் தனியவே நிக்கிறியள்...

திலீ : ஓம்....

சண் : அப்புமார் உங்களுக்க தனிய வீட்டில இருக்கப் பயமில்லையே...

ரம : Nöööö... warum denn??? (இல்லை... ஏன் அப்பிடி?)

சண் : என்ன ராசா?

திலீ : ஏன் பயம் எண்டு கேக்கிறான்....

சண் : கெட்டிக்காரப் பிள்ளையள்... என்னை ஆரெண்டு

www.padippakam.com



உங்களுக்குத் தெரியுமே?

**திலீ :** நான் நினைக்கிறன்... நீங்கள்தான் அப்பாவுக்கு ஸ்ரீலங்காவில் இருந்து கடிதம் எழுதுறனீங்கள்.... ஆ... எங்கட அப்பப்பா...

**ரம :** *Opa! Und ihre Frau ist meine Oma... richtig? die ist doch tot! (தாத்தா! உங்கட மனைவி என்ரை அப்பம்மா... சரியே? அவ செத்திட்டா..)*

**சண் :** என்னப்பு சொல்லுறாய்...

**திலீ :** அது... அப்பாவின்ரை அம்மா உங்கடை Frau (மனைவி) தானேயெண்டு கேக்கிறான்...

**சண் :** ஓ.... அதென்னப்பு கிறவ்..?

(இரண்டு பேரும் சிரித்து)

**திலீ :** கிறவ் இல்லை... Frau.... Frau எண்டா பொம்பிளை...

**சண் :** ஓம்... ஓம்... அவதான் அப்பாவின்ரை அம்மா, உங்கடை ஆச்சி...

**ரம :** அண்ணா... Was ist das ஆச்சி? (அது என்ன ஆச்சி..)

**திலீ :** Das heiβt Oma... (அப்பிடியெண்டால் அப்பம்மா) அப்பம்மா...???

**சண் :** ஓ... சரி... அப்பம்மா எண்டும் சொல்லலாம்.... ரெண்டு பேரும் பள்ளிக்கூடம் போறீங்களே????

**திலீ :** ஓம்....

**சண் :** தமிழும் படிக்கிறனீங்களே...???

**திலீ :** ஓ... நான் தமிழ் எழுதுவன்... தம்பி இப்பதான் படிக்கத் துவங்கியிருக்கிறான்...

www.padippakam.com



சண் : என்ரை கெட்டிக்காரக் குஞ்சுகளைக் கண்டிருந்தால் ஆச்சி எவளவு சந்தோசப்பட்டிப்பாள்.... காணக் குடுத்து வைக்காமல் போய்ராளே... (அழுகிறார்.)

ரம : Oh Nein... ich rede ja schon Tamilisch... Opa nicht weinen....!! (ஓ.. இல்லை.. நான் தமிழில கதைப்பன்.. அப்பப்பா அழவேண்டாம்..!)

சண் : (பொக்கெற்றில் இருந்த இரண்டு சங்கிலிகளை எடுத்து இருவருக்கும் அணிவிக்கிறார்... முத்தமிடுகிறார்...) அப்பு ஒருக்கா முகம் கழுவவேணும்... எங்கை ராசா கழுவுறது...

(என்றபடி சுருட்டுப் பற்றவைக்கிறார்.)

திலீ : வாங்கோ... இஞ்சையிருக்கு Toilet.

(சண்முகம் திலீப்பும் உள்ளே செல்ல, வாசல் கதவு மணி ஒலிக்கிறது. ரமணன் சென்று கதவு திறக்க தாய் சியாமளா உள்ளே வருகிறார் இரண்டு பைகளுடன்.)

ரம : Mammi Hast du mir Schokolade mit mitgebracht? (அம்மா.. சொக்கலேற் கொண்டுவந்தீங்களா?)

சியா : Ja... (ஓ...)

(சியாமளா சொக்களேற் கொடுக்கிறார்.)

ரம : Danke Mammi... ahhh Mammi Opa ist da... (நன்றி அம்மா.. அப்பப்பா வந்திருக்கிறார்..)

சியா : Opa? (தாத்தா..?)

திலீ : (வந்தபடி) அம்மா... அப்பப்பா வந்திருக்கிறார்...

சியா : என்ன? அப்பப்பாவோ....

திலீ : ஓமம்மா! கடிதம் போடுவார்... அந்த அப்பப்பாதான்...



படிப்பகம்

www.padippakam.com



*சியா :* நல்லாத் தெரியுமா திலீபன்...

*திலீ :* நல்லாத் தெரியுமம்மா! நான் முந்தி அவற்றை படம் பாத்தனான்தானே... இஞ்ச எங்களுக்கு சங்கிலி தந்தவர்...

*சியா :* சரி! எங்கயவர்?

*திலீ :* Toiletக்கு போய்ரார்...

*சியா :* ரமணன்.... என்ன செய்தனீங்கள்.. இப்படிப் புகையாக்கிடக்கு... திலீப் Küche (குசினி)ஐ ஒருக்காப் பார், அடுப்புப் போட்டிருக்கோ எண்டு... இதென்ன ஒரு நாளுமில்லாத நாத்தம்... நெருப்புக் கொழுத்தி விளையாடினீங்களே? Carpet (தரைவிரிப்பு) எங்கையும் நெருப்புப் பட்டிட்டுதோ தெரியேல்லை... (நிலத்தைப் பார்க்கிறாள்)

*ரம :* Nein Mammi Opa hat geraucht, eine Schwarze Zigarette. (இல்லையம்மா, அப்பப்பா கறுத்தச் சிகரட்டுப் புகைத்தவர்.)

*திலீ :* Das ist keine Zigarette, sondern eine Zigarre. (அது சிகரட்டு இல்லை, சுருட்டு.)

*சியா :* சுருட்டோ? இதென்ன அநியாயம்... நான் ஒருத்தரையும் வீட்டுக்க சிகரெட்டே பத்தவிடுகிறதில்லை...

*திலீ :* அம்மா... அப்பப்பா வாறார்...

*சண் :* பிள்ளை... வந்திட்டியளே...

*சியா :* மாமா... என்ன மாமா... சொல்லாமை கொள்ளாமை திடீரெண்டு... Telefon (ரெலிபோன்) இல கதைக் கேக்கையும் வரப்போறதெண்டு சொல்லேல்லையே. உங்களோடை கதைக்கிறதுக்கு ரெலிபோன் நம்பரும்

www.padippakam.com



தெரியாது... அவர் நல்லா குழம்பிப்போட்டார்... என்னண்டு வந்தனீங்கள் மாமா...

**சண் :** பிள்ளை... கொழும்பிலை காசு குடுத்தா தாய், தகப்பன், சகோதரத்தை தவிர மற்ற எல்லாம் வாங்கலாம். காசுதான் வேணும்... ஆயிரம் ரூபாய் மாத்தினால் ரண்டு நிமிசம் நில்லாது... காசைக் குடுத்தன், ஏத்திவிட்டுட் டாங்கள். அங்க ஏமாத்திறவங்களும் இருக்கிறாங்கள் தான். ஏதோ... மரியதாசண்ணை வெட்டியாடி என்ரை பிள்ளையைப் பார்க்க என்னை அனுப்பிப் போட்டார். பாவம்... அவர்தான் இப்ப தனிச்சுப்போனார்...

(மூர்த்தி உள்ளே வரல்.)

**சியா :** இஞ்ச அவரும் வந்திட்டார்...

**மூர் :** ஐயா...

**சண் :** தம்பி... என்னப்பு... என்ரை அப்பு... என்ரை ராசா... உன்னைப் பாக்காமச் செத்துப்போவனோ எண்டு நல்லா பயந்திட்டன்... இப்ப... பாத்திட்டன். என்ரை பிள்ளையைப் பாத்திட்டன்...

**மூர் :** ஐயா... அம்மாவுக்கு என்னையா நடந்தது... துணிஞ்சு தனிய வெளிக்கிட்டிட்டியளே... எப்படி ஐயா வந்தனீங்கள்..?

**சண் :** தம்பி... யாழ்ப்பாணத்தில இருந்தது கொழும்புக்கு வரும்வரைக்கும்தானப்பு கஷ்டம். பிறகு காசைக் குடுக்கக்குடுக்க வழி தானா வந்துது. கொழும்பில ஏறி Frankfurt, வந்து இறங்கினான். கொழும்பில வெளிக் கிடேக்கையே ஏஜென்சிக்காரன் சொல்லித் தந்தான்... எங்க... என்ன... எப்பிடி... கேட்பாங்கள்... என்னென்ன பதில் சொல்லவேணுமெண்டு... சும்மா சொல்லக்கூடாது.

www.padippakam.com



கொழும்பில இருந்து இங்க வரும்வரைக்கும் பொய்தான். பொய்யெண்டால் அப்பிடி இப்பிடிப் பொய்யில்லை... அண்டப்புளுகு ஆகாசப்புளுகு எல்லாம் சொல்லி... வாய் புழுத்துப்போச்சு. Airport, இருந்து ஒரு Camp (விடுதி)இல கொண்டு வந்துவிட்டாங்கள்...

**சியா :** எவ்வளவு மாமா முடிஞ்சுது...

**சண் :** பாஸ்போட் அதுக்கு இதுக்கெண்டு மூண்டரைக்கு மேல வந்திட்டுது...

**சியா :** Frankfurt இல இருந்த Train, லியா வந்தனீங்கள்...

**சண் :** சச்சா... அந்த Camp (விடுதி)க்கு ஆரையோ கூட்டிக்கொண்டு போக ரெண்டு பொடியங்கள் வந்தாங்கள்... எங்க போறீங்கள்... காசு தந்தால் கொண்டு போய்விடலாம் எண்டு சொன்னாங்கள்... அட்றஸ்சைக் குடுத்தன்... ஐநூறு மார்க் வேணுமெண்டாங்கள். ரவலர்ஸ் செக்கில கையெழுத்தை வையுங்கோ... காரில ஏறுங்கோ எண்டாங்கள். கொண்டுவந்து விட்டுட்டுப் போட்டாங்கள்...

**மூர் :** ஐநூறு மாக்கோ...? நூற்றியம்பது மார்க் கூட எடுத்திட்டாங்கள்...

**சண் :** எல்லாம்... எங்கட தமிழ் பொடியங்கள்தானே... அவங்களும் எங்களைவிட்டா வேற ஆரிட்டை உழைக்கிறது... எங்கை போனாலும் எங்கடை பொடியள் பிழைச்சுக்கொள்ளுவாங்கள்...

(சியாமளா உள்ளே செல்கிறாள்...)

**மூர் :** ஐயா... மரியதாஸ் மாமா ஊருக்குப் போய்ற்றாரோ? இல்லையெண்டால்..?

**சண் :** இல்லையப்பு... அவர் கொழும்பிலைதான் நிக்கிறார்.

www.padippakam.com



என்ரை ரெலிபோனைக் கண்டுதான் வெளிக்கிடுவார்...

மூ : ஐயா... அப்ப அவருக்கு ஒருக்கா Telefon எடுத்துச் சொல்லுவம்....

சண் : ஓம்... தம்பி... இந்தா... (நம்பரை எடுத்துக் கொடுத்தல்)

மூ : (Telefon இல் நம்பர் அடித்து) Hallo I am calling from Germany. May I speak to Mr Mariathas please?
ஆரோ கூப்பிடப் போய்ரினம்... இதென்ன லொட்ச் நம்பரே ஐயா?

சண் : ஓம்... தம்பி...

மூர் : Hallo... இல்லை மாமா... நான் மூர்த்தி கதைக்கிறன்... ஐயா இங்க வந்திட்டார்... இந்தாங்கோ... ஐயா கதைக்கிறார்... சண்முகம் ரிசீவரை வாங்க

(மூர்த்தி உள்ளே போகின்றான்...)

சண் : அண்ணை... அண்ணை... நான் வந்திட்டன்... என்ரை பிள்ளையைப் பார்த்திட்டன்... இனி நிம்மதியாச் சாவன் அண்ணை...

சண் : என்ன... யாழ்ப்பாணம் போகேலாம இருக்கோ... அப்ப நீ போகேக்கை ஒருக்கா. Telefon பண்ணிச் சொல்லிப்போட்டுப் போ... என்ன

(சியாமளா தேனீரோடு வருகிறாள்.)

சண் : அண்ணை நான் வரேக்கையே சொன்னனான்... அந்தக்காசு உன்ரை செலவுக்கு இருக்கட்டுமெண்டு... எனக்கினியேன் காசை... நான் மகனோடை இருக்கிறன்.. உந்தக் காசை நீ வச்சிரு... ஒரு நொள்ளையும் வேண்டாம் நான் சொன்னமாதிரிச் செய். கொழும்பில நிக்கேக்கையே புதுசா ஒரு கண்ணாடியொண்டும் எடுத்துப்போடு... சரியே நான் அப்ப வைக்கிறன்...

சியா : மாமா அவரிட்டைக் கன காசே கிடக்குது...

சண் : ஒரு... ஒரு இலட்சம் மட்டிலை இருக்கும்

www.padippakam.com



***சியா :*** *அப்ப... நாலாயிரம் மாக் வரும்... இங்க நாலாயிரம் மாக் மிச்சம் பிடிக்கிறதெண்டால் எவளவு நாள் செல்லும்? நீங்கள் சும்மா குடுத்திட்டு வந்திருக்கிறியள். தேத்தண்ணியைக் குடியுங்கோ...*

***சண் :*** *சும்மா இல்லைப்பிள்ளை... அவர் எனக்குச் செய்த உதவிக்கு நான் எவ்வளவோ செய்யவேணும்... என்னையும் பாக்கியத்தையும் சகோதரம்போல, பிள்ளைபோல பாத்தவர். அவள் என்னை தனியவிட்டிட்டு போகேக்கை அனாதையாய் நிண்டன்... என்ரை உயிர் இண்டைக்கு இருக்கிறது... நான் உங்களை வந்து பாக்கிறது, எல்லாம் அவர் தந்த ஆறுதலாலைதான்...*

***சியா :*** *மாமா... அப்ப காணி வீடு எல்லாம்?*

***சண் :*** *பிள்ளை... இப்ப அங்க ஒண்டும் வித்துக் காசாக்கிற நிலைமையில ஊர் இல்லை... நீங்கள் அங்க வந்து இருக்கிற நோக்கமும் இல்லை... நான் தனிய இருந்து செத்தால்... அந்த காணி வீடெல்லாம் இல்லாமல் போறதுதானே? கொழும்புக்கு வந்து உங்களோட கதைக்கவேணும்போல இருந்துது.... காணியை மகேசு விணாண பெட்டைக்கு எழுதிக் குடுத்தன்... வெளிக்கிட்டுட்டன்...*

***மூர் :*** *(வந்தபடி) சியாமளா... ஐயா இங்கதானே இருக்கப்போறார்... பிறகு விசாரிக்கலாம் காணி நிலத்தைப்பற்றி... வாரும்... எல்லாருக்கும் சாப்பாட்டைப் போடும்... பசிக்குது.*

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 9



***களம்***
*மூர்த்தி வீடு.*

***பாத்திரங்கள்***
*மூர்த்தி, லிங்கம், சண்முகம்,*
*சியாமளா, திலீபன்.*

*திரை விலகும் போது - இருவரும் உரையாடிக் கொண்டிருந்தனர். என்மீது புலப்படுகிறது...*

*மூர் : லிங்கம் இரும். வாறன்...(மூர்த்தி உள்ளே போகிறான்.)*

*லிங் : மூர்த்தியர் ஆறுதலா வாரும் பிரச்சினையில்லை.... (என்று சொல்லியபடி பொக்கெற்றில் இருந்த சிறுபோத்திலை எடுத்து குடிக்கிறார்.)*

*மூர் : என்ன லிங்கம்!! இண்டைக்கு ரீ குடிக்கலாமோ?*

*லிங் : வேண்டாம் மூர்த்தியர்... மூர்த்தியர் குறை நினைச்சுக்கொள்ளாதையும். ஐயா வந்திருக்கிறதா அறிஞ்சனான். உடன வந்து பாக்க ஏலாமப்போச்சுது...*

*மூர் : பரவாயில்லை... ஐயா இங்கதானே இருப்பார். பிறகென்ன...*

*லிங் : ஐயா எப்பிடி சுகமா இருக்கிறாரோ?*

படிப்பகம்

www.padippakam.com



மூர் : இல்லை லிங்கம்... வந்த நாள் துவக்கம் மருந்து எடுத்தபடிதான்... நாளைக்கு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக டொக்டர் துண்டு தந்திருக்கிறார்...

லிங் : அது யோசிக்கத் தேவையில்லை மூர்த்தியர். இங்க என்ன வருத்தமெண்டாலும் மாத்திப்போடுவாங்கள்.

திலீ : (வந்தபடி லிங்கத்தைப் பார்த்து) ஹலோ மாமா!... அப்பா... இப்ப சொல்றீங்களா? நான் எழுதுறன்...

மூர் : திலீப்... அப்பா கதைச்சுக் கொண்டிருக்கிறன்... தெரியேல்லையே...

லிங் : என்ன திலீப்? என்ன எழுதப் போறீங்கள்?

திலீ : அது தமிழ் கலை மன்றத்துக்கு ஒரு கடிதம் எழுதவேணும்... அதுதான்...

லிங் : மூர்த்தியர்! ஆரன் பொழுதுபோகாதவை கொஞ்சப்பேர் சேர்ந்துகொண்டு தமிழ், கலை எண்டு கதைப்பினம்... இதையெல்லாம் காதில விழுத்தக்கூடாது.

மூர் : திலீப்... நீ உள்ளுக்குப் போ... பிறகு எழுதலாம்... லிங்கம் தங்கடை நேரத்தைச் சில வழிச்சு விட்டு மாதம்மாதம் சந்தாகட்டி, கூட்டம்கூடி வருஷத்துக்கு இரண்டு மூண்டு Programme (நிகழ்ச்சி) நடத்துறாங்கள்... நீர் என்ன செய்யறீர்? தண்ணியடிச்சுக்கொண்டு, எங்க ஆரும் ஏமாந்தவை இருக்கினம் எண்டு தேடித் திரியிறீர், கலியாணம் செய்ய. எங்களுக்கு ஏலுமெண்டா சனத்துக்கு ஏதும் நல்லது செய்யவேணும்... ஏலாட்டி சும்மா கதைக்காமல் ஒதுங்கவேணும். அதுதான் முறை...

(வாசல் கதவு மணி ஒலிக்கிறது.)

மூர் : ஐயாதான் வாறார் போல இருக்கு...

(கதவு திறக்க மூர்த்தி சென்று திரும்ப, பின்னால் சண்முகம் வருகிறார்.)

www.padippakam.com



லிங் : மாமா... வாங்கோ... உங்களைத்தான் பாக்க வந்தனான்.

சண் : ஆ... நல்ல.. மணம் குணமா வந்திருக்கிறாய்போல கிடக்கு... நீ ஆறுமுகத்தின்ரை பொடியனெல்லை? (மூர்த்தி உள்ளே செல்கிறான்.)

லிங் : பிறகென்ன... இவளவு காலத்துக்குப் பிறகும் மாமா என்னை ஞாபகத்தில வச்சிருக்கிறீங்கள்.

சண் : ஊரில இருக்கிறவைக்கு எல்லாரையும் ஞாபகமிருக்குது... இங்க வந்தவையில சிலருக்குத்தான் எல்லாரையும் மறந்துபோட்டுது. ம்... அதுசரி.. உன்ரை தம்பி செத்தது உனக்குத் தெரியுமெல்லே...

லிங் : ஓம்... தெரியும் மாமா... நான் இஞ்ச தெரிஞ்சவையைக் கூப்பிட்டு... முப்பத்தொண்டுக்கு சாப்பாடும் குடுத்தனான்...

சண் : ஆ... முப்பத்தொண்டு... துக்கமாச் செய்தனியோ... இல்லாட்டி Party (கொண்டாட்டமா) யா வச்சனியோ?

லிங் : இதென்ன மாமா... இப்பிடிக்கேக்கிறீங்கள்?

சண் : பின்னை என்னடா... தம்பியின்ரை பெண்சாதியும், பிள்ளையளும் ஆதரவில்லாமல் இருக்குதுகளேயெண்டு நினைச்சு கடிதமும் அனுப்பேல்லை. ஐஞ்சு சதம் காசும் அனுப்பேல்லை... இங்க முப்பத்தொண்டு செய்தனெண்டுறாய்...

லிங் : மாமா... நான் என்ரை மனுஷிக்குக் காசனுப்பேக்கை அவைக்கும் சேர்த்துதான் அனுப்பினான். அப்ப அவள் குடுக்காமல் எல்லாத்தையும் தான் அமத்திப்போட்டாள் போல இருக்கு.

சண் : அடி செருப்பால... அந்தப் பெட்டையைப்பற்றி உப்பிடிக் கதைச்சா உன்ரை நாக்கு அழுகிப்போகும். வளவுக்கை காய்க்கிற தேங்காய் மாங்காயை வித்து, நகை நட்டை

www.padippakam.com



அடைவு வச்சு உன்ரை மனுஷிதான், எல்லாரையும் பாக்கிறாள்... நீ... உன்ரை மனுசிக்கும் காசனுப் புறதில்லையெண்ட விஷியம் எனக்குத் தெரியும்.

மூர் : (வந்தபடி) ஐயா... லிங்கம் காசனுப்புறதையா...

சண் : இல்லை தம்பி... அதுகள் படுகிற கஷ்டம் எனக்குத் தெரியும் எண்டதாலதானே இப்பிடிக் கதைக்கிறன்...

மூர் : லிங்கம், அப்ப... இவளவு நாளும் நீர் பொய்யே சொன்னனீர்...

சியா : குடும்பத்தைக் கவனிச்ச லெட்சணத்தில இங்க கலியாணமும் செய்யப்போறார்...

சண் : என்ன..... இவனுக்கு இன்னொரு கலியாணமோ...?

சியா : ஓம் மாமா... புருஷனைவிட்டுப்போட்டு ஆரோ ஒருத்தி பிள்ளையோடை இருக்கிறாளாம்... லிங்கமண்ணை அந்த பொம்பிளைக்கும் தனக்கும் பொருத்தம் பார்த்துக்கொண்டு திரியுறார்.

சண் : லிங்கம் அண்ணையோ... இவன் தரவளியை வீடு வாசலுக்கே அடுக்கக் கூடாது... ஒருத்தரும் கொண்டாடவும் கூடாது...

லிங் : மாமா... இது யாழ்ப்பாணமில்லை... இது டொச்லாண்ட் (Deutschland). இங்க இப்பிடித்தான் வாழவேணுமெண்டில்லை. எப்பிடியும் வாழலாம்.

சண் : இங்கயும் வாய்க்குள்ளாலதானே சோறு தின்னுறாய்... பிள்ளை... உந்த Toilet கழுவுற தும்புத்தடியைக் கொண்டா... அதால நாலு சாத்துச் சாத்தித்தான் இவனைக் கலைக்கோணும். தானுமழிஞ்சு, தன்ரை குடும்பத்தையும் அழிச்சு, மற்றவன்ரை குடும்பத்தையும் அழிக்கத் திரியுறான்.

www.padippakam.com



*லிங் : மாமா... இது... தனிமனுஷ சுதந்திரம்...*

*சண் : சுதந்திரத்துக்கு அர்த்தம் தெரியாத றாஸ்கோல்... பொ-றடா வாறன் உன்னை...*

*லிங் : மூர்த்தியர்...*

*சண் : நடவடா வெளியில...*

*(மூர்த்தி இருவருக்கும் குறுக்கே வந்து)*

*மூர் : லிங்கம்... வாரும் இறங்குவம்...*

*லிங் : மூர்த்தியர்! இது சரியில்லை...*

*மூர் : லிங்கம்... வாழும்.... சொல்லுறதைக் கேளும்...*

*சியா : மாமா... நீங்கள் உள்ளுக்கு வாங்கோ...*

**(திரை)**

o o o

www.padippakam.com





# காட்சி 10

***களம்***

*மூர்த்தி வீடு*

***பாத்திரங்கள்***

*சியாமளா, மூர்த்தி, சண்முகம், திலீபன், ரமணன்.*

*மூர்த்தி வீடு. விடுமுறை நாள்... மூர்த்தி சியாமளா பூமி ஓய்வாக வீட்டில் இருக்கின்றனர். மேசையில் தேநீர் பாத்திரம் ஆள்.*

***சியா*** : *மெய்யேப்பா... மாமா ஆஸ்பத்திரியில இருந்து வந்ததில இருந்து என்னமோ கடுமையா யோசிக்கிறார்... வடிவாச் சாப்பிடுகிற தும்இல்லை..ஆஸ்பத்தி ரியிலை என்னப்பா சொன்னவை...*

***மூர்*** : *ஐயாவுக்கு ஹார்ட் (Heart) பலவீனமா இருக்காம். அதிர்ச்சி, கவலையான விஷியங்களை தாங்கக் கூடியமாதிரி அவற்றை உடம்பு இல்லையாம். நல்ல றெஸ்ற் (Rest) எடுக்கட்டாம். டெய்லி (Daily) கொஞ்ச நேரம் வெளியிலபோய் வரவேணுமாம்.*

***சியா*** : *அவர் சொல்லுறதைக் கேட்டாத்தானே. தன்ரை உடுப்பை என்னைத் தோய்க்கவேணாமாம். தான் தன்ர கையால தோய்ப்பனெண்டு நிற்கிறார்... நான் நேற்றைக்கு கொஞ்ச உடுப்பைத் தோச்சுப்போட்டன். வருத்தக்காரன்ரை உடுப்பை நீ ஏன் தோய்கிறாய், பிள்ளையளுக்கு கூடாது எண்டு நிற்கிறார்.*

www.padippakam.com



மூர் : சியாமளா... உம்மிலும் நல்ல மாறுதல் தெரியுது. ஐயாவின்ரை உடுப்புகளை தோய்க்கிற அளவுக்கு நீர் மாறீட்டீர்...

சியா : நீங்கள் அன்டைக்குச் சொன்னதை யோசிச்சுப் பாத்தன். என்ரை ஐயா இருந்தால் அல்லது இங்க வந்திருந்தால், நான் செய்து குடுக்கத்தானேயப்பா வேணும்? இப்ப மாமாவும் எனக்கு ஐயா மாதிரித்தானே?

மூர் : சியாமளா... எனக்குத் தலையெல்லாம் குளிருது. கொஞ்சநாளைக்கு முன்னுக்குத்தானேயப்பா அட்டியலும் காஞ்சிபுரமும் எடுத்தது? இப்ப என்னத்துக்கு இந்தப் பெரிய ஐசைத் தூக்கித் தலையிலை வைக்கிறீர்...

சியா : நான் சீரியஸ் (serious) ஆக கதைக்கிறன். நீங்க பகிடி ஆக்காதேங்கோ.

மூர் : இனி எனக்கு கவலை இல்லை. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்...

(வாசல் கதவு மணி ஒலிக்கிறது.)

சியா : மாமாதான் வாறார்போல கிடக்கு. உங்கட பாட்டுக் கச்சேரியை நிப்பாட்டுங்கோ.

(சியாமளா கதவு திறக்க ரமணன் வருகிறான்.)

ரம : (வந்தபடியே) அப்பா... அப்பப்பா ஊருக்குப் போகப் போறாரோ?

மூர் : இல்லையே? ஏன் ஆர் சொன்னது?

ரம : அப்பப்பாதான் சொன்னவர்....

சியா : அப்பப்பா உன்னோடை விளையாட்டுக்கு கதைச்சிருப்பார்...

www.padippakam.com



ரம : இல்லையம்மா... அப்பப்பா ஊருக்கு போகப்போறேன் எண்டு சொல்லி அழுதவர்...

மூர் : என்ன அப்பப்பா அழுதவரோ? எங்க தம்பி அப்பப்பா?

ரம : அப்பப்பா வாறார்...

(திலீப்பும் சண்முகமும் வருகிறார்கள்.)

சண் : ரமணன், போய் தம்பியோட முகம் கழுவிப்போட்டு படியுங்கோ!

சியா : மாமா இருங்கோ... தேத்தண்ணி கொண்டு வாறன்... (உள்ளே போகிறாள்)

ரம : அப்பா... அப்பப்பாட்டை கேளுங்கோ.. உண்மைக்குச் சொன்னவரா, இல்லை பொய்க்கு சொன்னவரா? கேளுங்கோ அப்பா.

மூர் : அப்பப்பா பகிடிக்குச் சொல்லியிருப்பாரெண்டு அம்மா சொன்னவவெல்லே....

(திலீப்பும் ரமணனும் உள்ளே போதல்.)

சண் : இல்லைத் தம்பி! பகிடி இல்லை... உண்மையாத்தான் சொன்னான்... எனக்கு ஊருக்கு போக ஆசையாக்கிடக்கு. நான் ஊருக்குப் போகவேணும்...

மூர் : என்னையா நீங்கள்... குழந்தைப் பிள்ளைமாதிரி கதைக்கிறீயள்...

சண் : இல்லையப்பு... சாகிறதுக்கு முந்தி உன்னைப் பாக்கவேணும் எண்டு ஆசைப்பட்டன்... பாத்திட்டன். இப்ப எனக்குத் திருத்தி. இனி நான் ஊருக்குப் போய் நிம்மதியாச் சாவன்...

மூர் : ஐயா! இனி ஊருக்குப்போய் ஆரோட இருக்கப்போறீங்கள்? இங்க உங்களுக்கு என்ன குறை..?

www.padippakam.com



சண் : ராசா.. ஒரு குறையுமில்லை இங்க... இருக்கிறதுக்கு ஏற்றமாதிரி என்னால என்னை மாத்திக்கொள்ள இருக்கேலாமல் இருக்கப்பு... நான் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த அந்த மண்ணிலை சாகிற ஆசை எனக்கு வரக்கூடாதே..?

மூர் : ஐயா... இதென்ன கதை ஐயா?

சண் : இது கதையில்லையப்பு... நான் வாழ்ந்து முடிச்சிட்டன்... இனி வாழவேண்டியவை நீங்கள்... உங்களின்ரை சந்தோஷத்தை, சுதந்திரத்தை... நான் கெடுத்துப்போட்டனே எண்டும் ஒரு கவலை...

மூர் : ஐயா..! ஆரையா சொன்னது.... எங்கடை சந்தோஷம் கெட்டதெண்டு..? சியாமளா ஏதும் பிழையா கதைச்சவளே (சற்று கோபமாக) சியாமளா?

சண் : தம்பி, என்னப்பு நீ... ஐயாவுக்காக பெண்சாதியை கோவிக்கிறாய்... உது கூடாது ராசா...

சியா : என்ன மாமா... (தேனீருடன் வருகிறாள்)

சண் : தம்பி! பிள்ளையளின்ரை சந்தோஷத்தை பெத்ததுகள் பாக்கிறமாதிரி... பெத்தவையின்ரை சந்தோஷத்தை பிள்ளையள் பாக்க மறந்திடுதுகள்... ரோடை கொண்டாடிக் கொண்டு, என்னாலை இருக்கேலாது ராசா!

மூர் : ஐயா! முன்பின் தெரியாத ஆக்களோடை வாழுற நாங்கள், அவை அவைன்ர போக்குக்கு ஏற்றமாதிரித்தான் நடக்கவேண்டியிருக்கு... எல்லாத்துக்கும் சரியெண்டு தான் போகவேணும்.

சண் : தம்பி! உயிரும், உணர்வும், உரிமையுள்ள உறவுமாய் வாழுற சனங்களோடை இவ்வளவு காலமும் வாழ்ந்துபோட்டு, இந்த இயந்திரங்களோடை என்னாலை

www.padippakam.com



வாழமுடியாது...

மூர் : ஐயா! வெளிநாட்டில வாழுற எல்லாரும்... நீங்கள் நினைக்கிறமாதிரி இல்லை ஐயா... நீங்கள் கண்ட சிலபேர் அப்பிடி நடக்கினம் எண்டதுக்காக, ஏனையா எல்லாரையும்..?

சண் : இந்த வாழ்க்கையை என்னால அனுசரிச்சு வாழ ஏலாம இருக்கப்பு.

மூர் : ஐயா... நீங்க இங்க வந்தது இந்தப் பிள்ளையளுக்கு எவ்வளவு ஆறுதலா இருக்குது சொல்லுங்கோ பாப்பம்... அந்த ஆறுதலை இல்லாமல்ப்பண்ணிப்போட்டுப் போக உங்களுக்கு எப்பிடி ஐயா மனம் வந்தது.?

சியா : அதுதானே மாமா...

சண் : தம்பி... இஞ்ச வாழுற எங்கடை சந்ததி இன்னும் கொஞ்சநாளில மொழியை, கலையை, கலாச்சாரத்தை இழந்து போகப்போகுது... எங்கடை நினைப்பு... எப்பவும் எங்கட தாய் மண்ணில... இருக்கோணுமப்பு. அந்த முகத்தை மாறந்துபோனமெண்டால்.... எங்களை நாங்கள் இழந்துபோவம்...

மூர் : ஐயா... அதுக்கும் நீங்கள் போறதுக்கும் என்னையா சம்பந்தம்?

சண் : சம்பந்தமில்லையெண்டு சொல்லாதை. நான் நினைச்சு... என்ரை தாய்முகத்தைப் பாக்கப்போறதுபோல நீங்களும் அங்க வரவேணுமெண்டுதான் விரும்புறன்... நான் உங்கடை முகத்தைப் பாக்கவந்தது போல... நீங்களும் அந்த நினைவைச் சுமந்து கொண்டு அந்த முகத்தைப் பாக்க வாங்கோ.

ஐயா... நான் என்ரை தாயை மறக்காதவன். மதிக்கிறன்...

www.padippakam.com



அந்த முகத்தை என்னால மறக்கமுடியாது... அந்த நினையை என்னால அழிக்க முடியாது... என்ன சுதந்திரத்தை நான் இழக்கமாட்டன்.

*சண்* : தாய், தகப்பன், சகோதரத்தை பெண்சாதி பிள்ளையை மறந்தவை எத்தினைபேர்... மரவெள்ளி, குரக்கன், வரகு, பனங்கிழங்கோட எத்தினை குடும்பம் காலந்தள்ளுது எண்டு தெரியுமோ... அல்லது இஞ்சை உள்ள வெளி நாட்டு வாழ்க்கையை பெரிசெண்டு நினைக்கிறவைக்குத் தெரியுமோ? வெள்ளைக்காரியோடை கலியாணங் கட்டாமல் குடும்பம் நடத்திறவையும், மற்றவன்ர பெண் சாதியைக் கொண்டுபோறவனும், பிறகு தெருவிலவிடு கிறவனும், கட்டின பெண்சாதிக்கு காசனுப்பாமல் இங்க குடியும் கூத்துமா திரியிரவங்களும்...

*மூர்* : ஐயா, நீங்கள் சமூக சீர்திருத்தம் பேசவும், என்னையும் என்ரை மனுஷி பிள்ளையளையும் கவலைப்படுத்திப் போட்டு போகவுமே இங்க வந்தனீங்கள்...? அம்மாவைக் கடைசியில காணக் குடுத்துவைக்கேல்லை... நீங்களும் இப்பிடிப் போனால் என்ரை மனம் என்னபாடுபடும் எண்டு யோசிச்சுப் பாத்தனீங்களே? தன்ரை தகப்பன் மாதிரி-யெண்டு அவவும், 'அப்பப்பா, அப்பப்பா' எண்டு பிள்ளையளும் உங்களில அன்பாயிருக்க, தனியப் போறனெண்டு வெளிக்கிட உங்களுக்கு எப்பிடியய்யா மனம் வந்துது? ஏலாத வயதில வந்த தகப்பனை வச்சுப் பாக்காமல் துரத்திப்போட்டான் மூர்த்தி எண்டு நாளைக்கு நாலுபேர் கதைக்க வைக்கப்போறியளோ?

*சியா* : மருமகளுக்கும் மாமனுக்கும் சரியில்லையாம். மருமகள் தான் புருஷனிட்டைச் சொல்லிக் கலைச்சுப்போட்டாள் எண்டும் கதைக்கச் சனம் இருக்கு.



படிப்பகம்

www.padippakam.com



*டூர் : ஏனையா என்னை இப்பிடி ஒரு பழிச் சொல்லுக் கேட்கவச்சிட்டுப் போக ஆசைப்படுகிறியள்..? என்ரை பிள்ளையள் நாளைக்கு நீங்கள் போனால் தவிச்சுப் போயிடும்.*

*(ரெலிபோன் அடிக்கிறது.)*

*அப்பப்பா... அப்பப்பா... உங்கடை Friend மரியதாஸ்... செத்துப் போய்ராராம்...*

***சண் :** ஆ... என்ன... அண்ணை... அண்ணை... மண்ணை...*

**(நிறைவு)**

○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com



# எதிர்பார்ப்புகள்

படிப்பகம்

www.padippakam.com

## எதிர்பார்ப்புகள்

முதுவேனில் 1994

| | |
|---|---|
| **நாடக மாந்தரும்** | **உயிரூட்டியோரும்** |
| இராசையா | அன்ரன் பீலிக்ஸ் (சிறந்த நடிகருக்கான தங்கப்பதக்கம்.) |
| செல்லம்மா | பெனடிக்ரா ஞானசெல்வம் (சிறந்த நடிகைக்கான தங்கப்பதக்கம்.) |
| காந்தன் | அ.டொ.ஞானசெல்வம் |
| ஈஸ்வரி | கௌரி நாகலிங்கம் |
| நடராசா | நாச்சிமார்கோயிலடி இராஜன் |
| இந்திய அகதிமுகாம் | அதிகாரி பூ.நவரட்ணராஜா |
| கோமளா | சித்திராதேவி தங்கராசா |
| உமா | மோகனரூபி நவரத்தினம் (சிறந்த துணை நடிகைக்கான சிறப்பு விருது.) |
| அகதி | சந்திரவதனி நவரத்தினம் |
| அகதி | கொலின் நித்தியேந்திரன் |
| திரைக்குப் பின்னால் : | பிரான்சிஸ் இராஜகுமாரன் |

# காட்சி 1



***களம்***

*தமிழக அகதிமுகாம்.*

***பாத்திரங்கள்***

*இராசையா, இராசையாவின் மனைவி*
*செல்லம்மா, மகள் உமா,*
*அதே முகாமில் வசிக்கும் நடராசா.*

*சுவருக்கு பதிலாக படுக்கை விரிப்பு, சேலை - வேட்டி போன்றவை பொருத்தப்பட்டிருக்கின்றன.... மேடையின் இடப்பக்கத்தின் பிற்பகுதியில் ஓர் அடுப்பு - சில விறகு கட்டைகள்... ஒரு சமையலறைக்கான பொருட்கள்... நடுவே... கட்டப்பட்ட கயிற்றில் சில துணிகள் உலருகின்றன... இருக்கைக்கு இரண்டு மரக்குச்சிகள்... உமாவின் கதைப் புத்தம் படிக்கிறாள்.... செல்லம்மா... வயது (50) சமையலில் ஈடுபட்டிருக்கிறாள்*

*(தமிழக அகதி முகாமொன்றில் ஈழத்திலிருந்து அகதியளாக 7 வந்திருக்கும் மக்களில் நால்வர் இராசையா, செல்லம்மா, உமா, நடராசா.)*

***செல் :*** *உலகத்தில மனுசருக்கு இப்பிடியும் ஒரு கஷ்டம் வாறதோ? வீடு வாசலைவிட்டு, சொந்த பந்தத்தை விட்டு, அன்னிய தேசத்தில வந்து அகதியா சீரழிய வேண்டிவந்திட்டுதே. பத்துப்பேர் இருக்கேலாத இடத்துக் குள்ள ஐம்பது பேர் இருக்கிறம். வாச லில்லை... கதவில்லை... சீலை யாலை மறைப்புக் கட்டிக் கொண்டு ஒரு சீரழிஞ்ச வாழ்க்கை வாழவேண்டி வந்திட்டுது.*

www.padippakam.com



உமா : (கதைப்புத்தகம் வாசித்தபடி) அம்மா, எல்லாம் நல்லதுக்கெண்டு நினையுங்கோவன்.

செல் : இடிச்சுவிட்டுடுவன் அலகுடைய. ஓ... நல்லதுக்கெண்டு நினைக்கட்டாம், நல்லதுக்கு... அப்பவே சொன்னனான்... யாழ்ப்பாணப் பக்கத்திலை ஒரு கோயிலிலையோ, இல்லாட்டி பள்ளிக்கூடத்திலயோ இருக்கிற அகதிமுகாமில போய் இருப்பமெண்டு. கொப்பரும் மோளும் கேட்டியளே?

உமா : அம்மா! ஊரிலேயே இருந்திருந்தால் என்னை ஜேர்மனிக்கு உங்களால அனுப்பேலுமே? இங்க வந்த சாட்டோட அக்காவும் அத்தானும் என்னை இனிக் கூப்பிடுவினம்தானே..?

செல் : சும்மா... பகல் கனவு காணாமல் இரடி. நல்ல கொக்காள்தான் உன்னைக் கூப்பிடுவாள்.

உமா : அம்மா... அக்காவில உங்களுக்கு நெடுக சந்தேகம் தான்.

செல் : சந்தேகமில்லையெடி... அனுபவம்... அவளைப் பெத்து இருபத்தைஞ்சு வருஷம்வச்சு வளர்த்த அனுபவம். இருபத்திமூண்டு பவுண் நகைபோட்டனான். ஒண்டுக்கு ரெண்டு தோடு செய்து குடுத்தன். சிமிக்கியோடை... அவள் கடைசியா என்ன கேட்டவளெண்டு உனக்குத் தெரியுமே? இருந்த ஜிப்சி பழைய டிசைன்... அப்பாலோ ஜிப்சி கலியாணத்துக்கு முதலியே தரவேணும், இல்லாட்டி பரிசு கெடுப்பனெண்டு, என்ரை கஷ்டத்தைப் பற்றி கொஞ்சங்கூட யோசிக்காமல் ஒற்றைக் காலிலை நிண்டெல்லே வாங்கிக்கொண்டு போனவள்...

உமா : அம்மா... சும்மா பழைய கதையளைக் கதைக்கா தீங்கோ...

www.padippakam.com



**செல் :** பழசுகளைக் கதைக்கிறனோ... ஏன் நீ ஒருத்தி இருக்கிறாயெண்டு நினைக்காமல்தானேயடி அவள் அப்ப நடந்தவள். கொத்தானோ இல்லாட்டி மாமா மாமியோ இத்தினை பவுண் நகை போடவேணுமெண்டு எங்களைக் கேக்கேல்லை. உங்கடை பிள்ளைக்கு நீங்கள் போடுறதைப் போடுங்கோ எண்டு மனுஷத்தனமா அவை கதைக்க... இவளெல்லே தலைகணிக்கை வச்ச நெருப்புக்கொள்ளிமாதிரி நிண்டவள்...

**உமா :** அம்மா... அதே அக்காதானே இப்ப நாங்கள் இங்க வந்து கடிதம் போட்டவுடன நூறு மாக் காசும் அனுப்பினவ.

**செல் :** ஓமடி... ஓம்... கண்டறியாத நூறு மாக்கோட நாலு வரியில ஒரு கடிதமும் அனுப்பி... இப்ப எத்தினை மாசம் ஆ.. கொப்பர் அதுக்குப் பிறகு எத்தினை கடிதம் எழுதினவர் சொல்லுபாப்பம்... ஒண்டுக்கும் பதில்லை...

**உமா :** அம்மா... அப்பாவுக்கிருக்கிற நம்பிக்கை உங்களுக்கு அக்காவில இல்லாமல்போட்டுது.

**செல் :** என்னெண்டெடி நம்பிக்கை வரும்? இண்டைக்கு வரைக்கும்... உனக்கு என்ன செய்யிறதெண்டதைப்பற்றி ஒருவரி கேட்டு எழுதினவளே? இல்லையே!

**உமா :** அம்மா. வேணுமெண்டாப் பாருங்கோ... அப்பாவின்ரை நம்பிக்கை ஒரு நாளும் வீணாகாது.

**செல் :** கொப்பர் ஏமாந்தவர்தானே... கையில காசிருந்தால் குலுக்கி சிலவழிச்சு... செட்டைகட்டிப் பறப்பார்... காசு முடிஞ்சவுடன முகம் அமாவாசைக் கறுப்பா மாறிப்போகும். இந்தா பார். ஒரு கிழமையா வேலைக்குப் போறார். இன்னும் ஒரு நாளும் சம்பளமெண்டு ஐஞ்சு சதம் வாங்கிக்கொண்டு வரேல்லை. மொத்தமா தருவாங்களெண்டு சொல்லுறார். இனி தந்தாப்

www.padippakam.com



பிறகெல்லோ.

**உமா :** வேலைக்குப் போற அவருக்குத்தானேயம்மா வேலையிடத்தின்ரை நிலவரம் தெரியும்.

**செல் :** என்னடி... என்ன நிலவரம்... இந்த காம்ப்பில வேலை செய்யிறவங்களே, எங்களமாதிரி அகதியளுக்குத் தாற ரேஷன் காட்டை மலிவா வாங்கி... அதில வாற சாமான்களை களவா வித்து உழைக்கிறாங்கள்... உள்ளூர்காரங்களை வேலைக்குப் கூப்பிடாமல் ஏன் வெளியூர்காரங்களை வேலைக்கு கூப்பிடுகிறாங்கள்..? மலிவா... குறைஞ்ச சம்பளத்தில வேலை வாங்கத் தானே... அப்ப சம்பளத்தையும் அண்டண்டைக்கு வாங்கிக்கொண்டு வரவேண்டியதுதானே? ஒவ்வொரு நாளும் காலமைபோனா இரவுதான் வாறார். ஆமான சாப்பாடில்லை... சம்பளத்தையும் சேரவிட்டிட்டு, நாளைக்கு தரமாட்டனெண்டு சொல்லீற்றால் என்னடி செய்யிறது..?

**உமா :** ஏனம்மா... சும்மா எல்லாத்துக்கும் சந்தேகப்படுகிறீங்கள்? இப்ப உங்களுக்கு என்னத்துக்குக் காசு?

**செல் :** என்னத்துக்குக் காசோ... எடியேய் காசில்லாமல் உலகத்தில செய்யக்கூடிய ஒரு அலுவல் சொல்லு பாப்பம்... அகதியளுக்கு காசு தாறது எண்டுதான் பேர்... தாறதை ஒழுங்காத் தாறாங்களோ? முதலாம் திகதிக் காசை பதினைஞ்சாம் திகதிக்குப் பிறகுதான் தாறாங்கள். அதைத் தரேக்கை தாறவன் தனக்கும் பத்து இருபதெண்டு வெட்டிக்கொண்டுதான் தாறான். வெளியில சொன்னால் தாறதையும் தரமாட்டாங்கள்.

**உமா :** அம்மா... அதுசரி... அக்கா அனுப்பின காசை என்னம்மா செய்தனீங்கள்?

www.padippakam.com



**செல்** : ஆ... அண்ணாந்து வாயிக்கைபோட்டு தண்ணி ஊத்தினான். ஏனடி இப்பிடி கண்மண் தெரியாத கேள்வி கேக்கிறாய்? உனக்கு எனக்கு கொப்பருக்கு உடுப்பு எடுத்தம்... மிச்சக் காசிருந்தால் சாப்பாட்டுச் சிலவுக்கு தட்டுப்பாடிருக் காதெண்டு நான் நினைச்சுக்கொண்டு இருக்க, கொப்பர் உனக்கு பாஸ்ப்போட் எடுக்க குடுத்திருக்கிறார். நான் சொல்லுறதை நீங்கள் எப்ப கேட்டனியள்? இப்ப பார்... காசில்லையெண்டவுடன கூலிவேலைக்கு வெளிக் கிட்டுட்டார்.

**உமா** : அதுக்கென்னம்மா செய்யிறது? ஆம்பிளையெண்டால் வேலைவெட்டிக்கு வெளியிலை போகத்தானே வேணும்?

**செல்** : அதுக்கேற்றமாதிரி உடம்பும் இடங்குடுக்கவெல்லேடி வேணும்? ஊரில பாரம் பழுதூக்கி வேலை செய்திருந்த ஆளா இருந்தா பரவாயில்லை. சும்மாவே ஏலாத மனுஷன்... வேலையால வந்து நாரிக்கை நோகுது, முதுக்கை பிடிக்குது, நெஞ்சுக்கை குத்துது எண்டு சொல்லேக்கை எனக்கு வயிறு பத்தி எரியுது.

**நட** : (ஒரு கால் இல்லாதவர் தடியூன்றி வந்தபடி) ஆருக்கக்கா வயிறு பத்தி எரியேல்லை? எல்லாருக்குந்தான் பத்தி எரியுது.

**செல்** : நடராசண்ணையே... வாங்கோண்ணை...

**நட** : நடராசா எண்டு பேர்தான்... நடக்கக் கால்தானில்லை...

**செல்** : ஏனண்ணை இப்பிடிச் சொல்லுறியள்? உமா, மாமாவுக்கு தேத்தண்ணி வையாச்சி.

**நட** : வேணாம் பிள்ளை... நானும் அகதி. நீங்களும் அகதி. இதுக்குள்ள ஒரு விருந்துபசாரம் வேறயே..?

**உமா** : மாமா... எல்லாம் கொஞ்சநாளைக்குத்ததானே?

www.padippakam.com



நட : அதென்னெண்டு கொஞ்சநாளைக்கெண்டு சொல்லு வாய்? நாங்களாவது கொஞ்சநாளையில ஊருக்குப் போயிடுவம். ஆனால் நீ.... ஜேர்மனிக்குப் போய்ற்றால் நிரந்திரமா அகதிதான்... ஓ..

செல் : அது அவளுக்கு விளங்கினாத்தானேயண்ணை... ஜேர்மனிக்குப் போனாப் போதுமெண்ட நினைப்பு அவளுக்கு! எப்பிடி அனுப்புறது எண்ட மலைப்பு தகப்பனுக்கு. என்ன செய்யப் போகினமோ எண்ட ஏக்கம் எனக்கு!

நட : அக்கா... இராசையாண்ணை இன்னும் வரேல்லையே?

செல் : இன்னும் காணேல்லை... வாற நேரந்தான்.

நட : அது சரி... ஏதேனும் செய்தி அறிஞ்சனீங்களே...

செல் : என்ன சேதியண்ணை....

நட : பொறக்கா வாறன்... பிள்ளை ஒருக்காப்போய் ஒப்பீசில ஆக்கள் ஆரும் இருக்கிறாங்களோ எண்டு பாத்துக்கொண்டு வாறியே ?

உமா : சரி மாமா....

(உமா வெளியே போக..)

நட : அக்கா... எங்களையெல்லாம் ஊருக்குத் திருப்பியனுப் புறது எண்டு முடிவு செய்தாச்சாம். விருப்பமான ஆக்கள் எழுதிக் குடுக்கலாமாம். விரும்புற ஆக்களைத்தான் முதலில அனுப்புவாங்களாம்.

செல் : ஊருக்குப் போறதெண்டால் ஆருக்குத்தான் விருப்ப மில்லை ? என்ரை மனுசன் ஓமெண்டு சொன்னாப் பிறகெல்லோ மிச்சம்.

நட : நான் எழுதிக் குடுக்கப்போறனக்கா. இங்கையிருந்து

www.padippakam.com



கஷ்டப்படுகிறதைவிட கஞ்சியோ கூழோ குடிச்சுக் கொண்டு அங்கபோய்க் கிடக்கலாம். இங்கயுள்ள அரசியல்வாதியளெல்லாம் எங்களைவச்சு பிழைப்பு நடத்துறாங்கள். நேரத்துக்கொரு வேஷம் போடுறாங்கள். ஆ... முக்கியமான விஷியத்தை மறந்திட்டன். இந்தியன் ஆமி முழுவதும் ஊரில இருந்து போட்டுதாம்.

**செல் :** கடவுளே... அப்ப நாங்கள் இனிப்போய் அங்க நிம்மதியா இருக்கலாம்.

**குரல் :** ஏம்மா... யாரும்மா அது ராசையா வூட்டுக்காரங்க? வெளிய வாங்கம்மா... அந்த ஆளு அடிபட்டுக்கிட்டு வந்திருக்காரும்மா... சீக்கிரம் வாங்கம்மா...

**செல் :** கடவுளே... என்ன நடந்தது? (அவசரமாக செல்லாம்மா. வெளியே செல்ல... நடராசா எழும்ப எத்தனிக்கிறார். இராசையாவின் மூக்கிலிருந்து இரத்தம் கசிகிறது. தோளிலிருந்த துண்டினால் மூக்கை பிடித்திருக்கிறார்.

(வெளியே போய் இராசையாவைப் பிடித்து அழைத்து வந்தபடி)

ஐயோ... ஐயோ... என்னப்பா நடந்தது? கடவுளே... ஏனிப்பிடிச் சோதிக்கிறாய் எங்களை? ரெத்தப்பலி குடுக்கவோ இங்க வந்தனாங்கள்? அப்பவே சொன்னனான், ஒரு இடமும் தனிய போக வேண்டாமெண்டு. நடராசண்ணை ஆஸ்ப்பத்திரிக்குக் கொண்டுபோவமே?

**இரா :** வேண்டாமப்பா... வேண்டாம்... எனக்கொண்டுமில்லை... பொய் மூக்குத்தான் உடைஞ்சுபோச்சு... ஒரு சீலைத்துண்டிலை தண்ணி நனைச்சுக்கொண்டு வா.

**செல் :** ஒண்டுமில்லையோ? ரெத்தம் வந்துகொண்டிருக்கு... எடி... உமா... உமா...

www.padippakam.com



நட : அண்ணை... ஓட்டோ பிடிச்சுக்கொண்டு வரட்டே... ஆஸ்பத்திரிக்குப் போவம்.

இரா : வேண்டாம் நடராசா. ஆஸ்பத்திரிக்குப் போனால் என்ன நடந்தது எண்டு கேட்பாங்கள். உண்மையைச் சொல்லவேண்டி வந்திடும். பிறகு அது பெரிய சோலியாப்போகும்.

நட : அப்ப என்னன்ணை நடந்தது?

இரா : பத்து நாளா வேலை செய்தனான். கிழமைக் கடைசியில சம்பளம் தாறதெண்டு சொன்னவங்கள். தரேல்லை. பெட்டையின்ரை பாஸ்போட் செய்து தாறவனுக்கு மிச்சக்காசு குடுக்கவேணும். இண்டைக்கு கேட்டன். பின்னேரம் தரலாம் எண்டு சொன்னாங்கள். வேலை முடிஞ்சு வயலுக்கை நிண்டு வெளிக்கிடேக்கை பத்துப் பதினைஞ்சு பேர் தடியள் பொல்லுகளோட வந்து பண்ணையாரிட்டை காசு கேட்டா பதில் இதுதானெண்டு அடிச்சுப் போட்டாங்கள்.

செல் : அப்ப பொலிசுக்குப் போயிருக்கலாமெல்லே..

இரா : போலிசுக்குப் போய் என்னப்பா செய்யிறது? வேலைக்கு எங்களைப் போகச் சொன்னவங்களே?

நட : அண்ணை, உங்களுக்குமட்டும்தான் அடிச்சவங்களோ? இல்லாட்டி... வேற ஆக்களுக்குமோ?...

(இராசையா சொல்லிக் கொண்டிருக்க - ஈரத்துணியால் செல்லம்மா துடைத்துக் கொண்டிருக்கிறாள்)

இரா : எங்களில மூண்டு பேர்... இரண்டு பேர் மற்றக் காம்ப்பில இருந்து வந்த ஆக்கள். போதும் விடப்பா...

(செல்லம்மா எழுந்து போக)

இஞ்ச... கடிதம் வந்ததே?

செல் : அதுக்குள்ளை கடித ஞாபகம் வந்திட்டுதே?

www.padippakam.com



இரா : ஆ... இப்ப... எத்தினை நாளா கடிதத்தை எதிர்பாத்துக்கொண்டிருக்கிறன்.

நட : அண்ணை... இன்டைக்கு வராட்டி நாளைக்கு வருந்தானே? அப்ப நான் போட்டுவாறன். ஆஸ்பத்திரிக்குப் போறதெண்டா கூப்பிடுங்கோ.

இரா : சரி... போட்டு வா...

செல் : அண்ணை... உமாவை ஒருக்கா வரச்சொல்லி விடுங்கோ... ஆரன் படக்கதை கதைத்சால் தானும் சேந்து கதைச்சுக்கொண்டு நிப்பாள்.

நட : சரியக்கா...

(நடராசா போக...)

இரா : இவவுக்கு நான் மகளின்ரை கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதில ஒரு பகிடி. பொறு பொறு. உமாவை ஜேர்மனிக்கு அனுப்பிப்போட்டுத்தான் உன்னோடை கதையிருக்கு... ஓ...

செல் : அப்பிடியொண்டு நடந்தால் எனக்கும் சந்தோசந்தான்.

இரா : இஞ்சை... கொஞ்சம் சுடுதண்ணிவையப்பா. நாரிக்கை நோகுது.

செல் : பொல்லாலை அடிச்சது. ரெத்தம் கண்டிப்போட்டுதோ தெரியேல்லை...

இரா : பொல்லால அடிச்சுதுக்கு சந்தோசப்பட வேணுமப்பா...

செல் : என்ன..?

இரா : இல்லை... விளக்குமாத்தால அடிச்சிருந்தா ஈக்கில் குத்தி... சிதழ் பிடிச்சு... எவளவு கரைச்சல் சொல்லு பாப்பம்.

செல் : உங்கடை சொடுகுக் கதையளுக்கு...

(திரை)

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 2



***களம்***

*ஜேர்மனியில் நாதன் வீடு.*

***பாத்திரங்கள்***

*நாதன், நாதனின் மனைவி ஈஸ்வரி, ஈஸ்வரியின் சிநேகிதி நகுலா.*

*அலங்காரப் பொருட்கள். சோபா கற்... என வசதிமிக்க வீடு. ஈஸ்வரி... உடைகளை அயன் பண்ணிக் கொண்டிருக்கிறார்.*

*நகுலா தேநீர் குடித்துக் கொண்டிருக்கிறாள். Tea pot உம் சில Tea Cup களும் மேசை மீதிருக்கிறது. நகுலாவின் கேள்விக்கு பதில் சொல்லும் பாவனையில் -*

**ஈஸ் :** *ஓமக்கா. காலைமை நேரத் தோட போய் அவர் நமபர் எடுத்தவர். நான் பிள்ளையளைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பிப்போட்டுத்தான் போனனான். ஏதோ கடவுள் புண்ணியத்தில Unbefristet (காலவரையற்ற) விசா கிடைச் சிட்டுது.*

**நகு :** *அப்ப இனியென்ன? வேற எங்கயும் மாறவேண்டியது தானே?*

**ஈஸ் :** *எனக்கு விருப்பந்தான். ஆனால் அவருக்கு ஜேர்மனியில இருக்கத்தான் விருப்பமாக் கிடக்கு. அது சரி, உங்களுக்கு என்ன விசா?*

www.padippakam.com



நகு : எங்களுக்கு Stadt (குறிப்பிட்ட நகரத்துக்குள் வசிப்பதற்குரிய) விசாதான்.

ஈஸ் : Stadt விசாவை வச்சுக்கொண்டு என்ன செய்யப்போறியள். Befugnis (தற்காலிக வதிவிட அனுமதி) எண்டாலும் பரவாயில்லை.

நகு : என்ன ஈஸ்வரி unbefristet கிடைச்சதுக்கு என்னமோ Citizen (குடியுரிமை) கிடைச்சமாதிரி கதைக்கிறீர். எல்லாருக்கும் Stadt விசாதானே முதலிலை தந்தவங்கள். அது சரி.... Dortmund (டோட்மூண்ட் என்னும் நகரம்) பக்கம் போறியளெண்டு கேள்விப்பட்டன்... மெய்யே?

ஈஸ் : ஏன் என்ன விஷேசம்? நாங்கள் அடுத்த கிழமையளவில சிலவேளை போகலாமெண்டு யோசிச்சுக் கொண்டு இருக்கிறம்.

நகு : விஷேசமொண்டுமில்லை... பவுண் விலை குறைஞ் சிருக்குதாம். காசைக் கையில வச்சிருக்கிறதைவிட நகையா ஏதும் வேண்டலாமெண்டுதான்... புது டிசைனில அட்டியல் தோடுகள் எல்லாம் வந்திருக்குதாம்.

ஈஸ் : நானும் அதுக்குத்தான் போகலாமெண்டிருக்கிறன். அப்ப நீரும் வாருமன். அடுத்தகிழமை போவம்.

நகு : உம்மிட்டை எல்லா நகையும் இருக்குத்தானே?

ஈஸ் : ஓ... நான் வரேக்கையே எல்லாம் கொண்டு வந்தனான். எதுக்கும் புதுசா ஏதும் வந்தால் வாங்கலாந்தானே? அதுசரி, கேள்விப் பட்டனீரே ஒரு விஷியம்..?

நகு : என்ன விஷியம்?

ஈஸ் : இப்ப ரெண்டு கிழமைக்கு முதல் Quelle (குஅலே என்னும் கடை)க்கை கண்டு கதைச்சம் ஒரு பிள்ளையோடை....

www.padippakam.com



நகு : ஓ... அது... இந்த... இதுக்குள்ளே இருக்கிற பொடியனுக்கு வந்த பெட்டையெல்லே?

ஈஸ் : அந்தப் பெட்டை... அந்தப் பொடியனைக் கலியாணம் செய்யமாட்டனெண்டு சொல்லிப்போட்டு போட்டுதாம். அவன்ரை பழைய Story (கதை) எல்லாத்தையும் பெட்டைக்கு ஆரோ சொல்லிப்போட்டினமாம்.

நகு : நல்ல விஷியந்தானே? ஒரு குமர் தப்பீற்றுது. ஈஸ்வரி உம்மிட்டைக் கேட்டாத்தான் தெரியும்... கனநாளாக் கேக்க வேணுமெண்டு மறந்துபோனன். எங்கயன் நல்ல பொம்பிளையொண்டிருந்தா சொல்லுமன்... என்ரை தம்பிக்கு...

ஈஸ் : பாப்பம்.... ஆரிட்டையும் விசாரிச்சுத்தான் பாக்கவேணும்... தம்பி. என்ன படிச்சவர்?

நகு : அவன் S.S.C. படிச்சவன்...

ஈஸ் : ஆ.... படிச்சிட்டு வேலை ஏதும் செய்தவரோ?

நகு : ஓ... யாழ்ப்பாணத்திலை... யாழ் மெற்றலிலை வேலை செய்தவன்.

ஈஸ் : இஞ்சை என்னமாதிரி... வேலைகீலை செய்யிறாரோ?

நகு : ஓ... வந்த நாளில இருந்து அவன் றெஸ்ரோரண்டில வேலைசெய்யிறான்.

ஈஸ் : அதுசரி அவருக்கு விசா என்னமாதிரி?

நகு : விசா... எங்களுக்குமாதிரி Stadt விசாதான்...

ஈஸ் : எடட.... Befugnis, Unbefristet எண்டால் பயப்பிடாமல் ஆரிட்டையும் விசாரிச்சுப் பாக்கலாம். பாப்பம்... எதுக்கும் விசாரிச்சுப் பாக்கிறன்.

www.padippakam.com



*(உள்ளேயிருந்து நாதன் ஈஸ்வரி, ஈஸ்வரி என அழைக்க...)*

**ஈஸ் :** *நகுலாக்கா... அவர் நித்திரையாலை எழும்பிற்றார்...*

**நகு :** *அப்ப நான் போட்டுவாறன்... Dortmund விஷியம் மறந்திடாதையும்...*

**ஈஸ் :** *ஓமக்கா...*

*(நாதன் வந்தபடி...)*

**நாத :** *என்னப்பா... காலைமை நேரத்தோடை எழும்பினது... அலுப்பாயிருக்கெண்டு கொஞ்சநேரம் சரியவிடாமல் அறுத்துக்கொண்டிருக்கிறீர்.*

**ஈஸ் :** *அறுத்துக்கொண்டிருந்தனானே? எவ்வளவு முக்கியமான விஷியம் கதைச்சுக்கொண்டிருந்தனான் எண்டு தெரியுமே?*

**நாத :** *ஓமோம்... தெரியும். கடைசியாக் கதைச்சது பிரயோசனமான விஷியம்மாதிரி இருந்துது... அதைக் கதைச்சு முடிச்சிருக்கலாமே?*

**ஈஸ் :** *எது... Dortmund போற விஷியமோ?*

**நாத :** *மண்ணாங்கட்டி... Dortmund போறது முக்கியமான விஷியமோ? வேறை முக்கியமான விஷியம் கதைச்சியள்...?*

**ஈஸ் :** *ஆ... அந்தப்பெட்டை கலியாணத்துக்கு மாட்டனெண்டு ஓடிப்போட்டுதப்பா.*

**நாத :** *ஐயோ... நகுலாக்கா தம்பியாருக்கு பொம்பிளை தேவையெண்டு கதைச்சா.*

**ஈஸ் :** *எட... அதே... பொம்பிளை எங்கயப்பா இருக்கு? அதில தேத்தண்ணி இருக்கு.*

எ-7

படிப்பகம்

www.padippakam.com



நாத : என்ன நீர்... உங்கடை தங்கச்சியை கட்டிக்குடுக்கலாந்தானே?

ஈஸ் : அதுக்கு... நாங்களெல்லே தங்கச்சியைக் கூப்பிடவேண்டி வரும்... அது நடக்கிற காரியமே?

நாத : ஏன்... அதில என்ன கஷ்டம் கொஞ்சம் மாறினால் கூப்பிடலாந்தானே? அம்மா அப்பாவும், அவளும் இன்னும் எவ்வளவு நாளைக்கு அகதி முகாமில இருக்கிறதெண்டு நினைச்சக்கொண்டிருக்கிறீர்?

ஈஸ் : இஞ்சே... சும்மா விளையாடாதீங்கோ... அப்பா அம்மா அவளுக்கு நகை நட்டு ஏதன் தேடிவச்சிருக்கினமோ எண்தே எனக்குத் தெரியாது.

நாத : இருந்ததெல்லாத்தையும் நீர் கொண்டு வந்திட்டீர். இனி இல்லாட்டி நாங்கள்தானேயப்பா செய்து குடுக்கோணும்.

ஈஸ் : நல்ல கதையாக்கிடக்கு. எனக்கு கலியாணத்துக்கு அவை தரவேண்டியதைத்தானே நான் வாங்கினனான். சீதணமெண்டு உங்களுக்கு ஏதும் தந்தவையே? இல்லையே...?

நாத : இஞ்சே... விளக்கம் கெட்ட கதை கதையாதையும். உமக்கு காணியும் வீடும் தந்தவை. நகையளும் தந்த்வை. பிறகென்னப்பா சீதணம்?

ஈஸ் : மற்ற இடங்களில பாத்தனீங்களேப்பா... மாப்பிள்ளைக் கெண்டு காசா ஐம்பது எழுபத்தைஞ்சு எண்டு 'பாங்க்"இல போடுகினம்... அப்பிடி எங்களுக்கு ஒண்டும் தரேல்லை. பிறகேன் தேவையில்லாத வேலை?

நாத : ஈஸ்வரி... இப்பிடிக் கதைக்காதையும். உமக்கிருக்கிறது ஒரேயொரு தங்கச்சி. ஒரு அண்ணையோ அல்லது தம்பியோ இல்லை. கொப்பர் இனி உழைச்சு அவளுக்கு

படிப்பகம்

www.padippakam.com



கலியாணம் செய்யேலுமே? சகோதரம் எண்டிருக்கிற நீர்தானே செய்யவேண்டியதைச் செய்யவேணும்.

ஈஸ் : எனக்கு... பாதி காணியும் வீடும்தான் தாறதுக்கு அம்மா வெளிக்கிட்டவ. நான் கெட்டித்தனமா முழுக்க வாங்கிப்போட்டன்... அதையேன் இப்ப..?

நாத : ஈஸ்வரி...

ஈஸ் : எனக்கு விருப்பமில்லையெண்டு வையுங்கோவன். எனக்கு பிள்ளையள் இருக்கு. அதுகளுக்கும் எதிர்காலமிருக்கு. இப்பிடித் தேவையில்லாத அலுவல் பாக்க எனக்கு ஏலாது.

நாத : ஈஸ்வரி... எதப்பா தேவையில்லாத வேலை? அகதி முகாமில... அதுவும் இந்தியாவில தாயும் தகப்பனும் தங்கச்சியும் இருக்க, இங்க 'டோட்முண்ட்" போய் நகை எடுக்கிறது தேவையில்லாத வேலை. இருபத்தைஞ்சு முப்பது ஆயிரம் மாக்கில கார் வாங்கி ஓடுறது தேவையில்லாத வேலை. வசதியா இருக்கிறம்... செய்யவேண்டியதைச் செய்யவேணுமப்பா.

ஈஸ் : சொல்லுறதைக் கேளுங்கோ.. இந்தியாவில இருக்கினம்... சிலவுக்கு காசு தேவைப்படுமெண்டுதான் நூறு மாக் அனுப்பினனான். அடுத்த கடிதத்தோடையும் நூறு மாக் அனுப்பப்போறன். அவை கஷ்டமில்லாமல் இருக்க இந்த உதவியே தாராளம்.

நாத : ஈஸ்வரி... அனாதையளுக்குச் செய்யிறதுதான் உதவி. சகோதரத்துக்கு... பெத்தவைக்குச் செய்யிறது கடமை...

ஈஸ் : சரி... உங்கடை பாஷையில கடமை.. அதைத்தான் நான் செய்யிறன். மூண்டு மாதத்துக்கொருக்கா நூறு மாக் போதாதா?

www.padippakam.com



நாத : நான் சிலவுக்கு காசனுப்புறதைச் சொல்லேல்லை... உமாவை இங்க கூப்பிட்டு கலியாணம்செய்து வைக்கிறது எங்கட பொறுப்பு எண்டு சொல்லுறன்.

ஈஸ் : (சற்று கோபமாக) இஞ்ச கூப்பிட்டுக் கலியாணம் செய்யிறதெண்டால் எவ்வளவு முடியும் சொல்லுங்கோ பாப்பம்? ஆகக் குறைஞ்சது இருபத்தைஞ்சாயிரம் மாக் எண்டாலும் முடியும்.

நாத : அதைப்பற்றி நீர் ஏன் கவலைப்படுகிறீர்..? அதுக்கு ஏற்பாடு செய்யிறது என்ரை அலுவலெல்லோ?

ஈஸ் : அப்ப என்ரை பிள்ளையளும் நானும் நாளைக்கு தெருவில நிக்கிறதோ?

நாத : என்ரை பிள்ளையள் தெருவில நிக்கிறதில எனக்கும் விருப்பம் இருக்காதெண்டதை நீர் விளங்கிக் கொள்ளவேணும்...

ஈஸ் : தன்ரை பிள்ளையளின்ரை எதிர்காலத்தில அக்கறையுள்ள ஒருத்தர் கதைக்கிற கதையே இது?

நாத : ஈஸ்வரி... கதை எங்கேயோ துவங்கி எங்கேயோ போகுது... நான் சொல்லுறதைக் கேளும்...

ஈஸ் : என்னத்தை கேக்கிறது?

நாத : ஐயா அம்மாவுக்கு ஐநூறு மாக் அனுப்பும். அதோட உமாவுக்கு 'பாஸ்போட்" எடுத்த உடன ரெலிபோனில சொல்லச் சொல்லி கடிதமும் எழுதும். ஆ... மறக்காமல் ரெலிபோன் நம்பரையும் எழுதும்...

ஈஸ் : ரெலிபோன் நம்பர் என்னத்தக்கு? கடிதம் எழுதினாப் போதுந்தானே..?

நாத : ஈஸ்வரி.... (கோபமாக) நான் சொல்லுறதை தயவுசெய்து

www.padippakam.com



செய்யும்... செய்யவேண்டிய கடமையளை சரியாச் செய்யாமல் இங்க வசதியா வாழுறம் எண்டு மற்றவைக்கு பவர் காட்டுறதில ஐஞ்சு சதம் பிரயோசனமில்லை.... ஆ... நகுலாக்காவிட்டை இனிக் கதைக்கேக்கை அவவின்ரை தம்பியின்ரை சாதகம் இருக்கோ எண்டு கேளும்...

ஈஸ் : நகுலாக்கா... ஒருமாதிரியான ஆள்... அவ சீதணமில்லாமல் ஓமெண்டு சொல்லமாட்டா...

நாத : ஈஸ்வரி... எத்தினையோ மாப்பிளைமார் தங்கடை சில விலை பொம்பிளையளைக் கூப்பிடுகிறாங்கள்... சிலவேளை அவையும் அதுக்குச் சம்மதிக்கலாம்... எதையும் கேட்டு, கதைச்சு முடிவு செய்யவேணும்... இந்தியாவில இருந்து அகதியளை திருப்பி அனுப்பப் போறாங்களாம்... அப்பிடி ஏதும் பிரச்சினை வாறதுக்கு முதல் உமாவை இங்க கூப்பிடவேணும்... அதுக்கேற்ற மாதிரி... செய்ய வேண்டிய அலுவல்களை நேரத் தோடை செய்யும்.

(திரை)

○ ○ ○

www.padippakam.com





# காட்சி 3

***களம்***

*தமிழக அகதிமுகாம்.*

***பாத்திரங்கள்***

*இராசையா, செல்லம்மா, உமா, நடராசா, அகதிமுகாம் அலுவலர்.*

*இராசையா கோபம்... யோசனையோடு நடந்துகொண்டிருக்க... செல்லம்மா கடிதத்தை வாசித்துக் கொண்டிருக்கிறார்.*

**செல் :** அவள் காரியகாறி. தனக்கு மிஞ்சித்தான் தானம் எண்டு நடக்கிறவள். அப்பவே சொன்னான், அவளை நம்பவேண்டாமெண்டு. கேட்டியளே... இப்ப யோசிச்சு யோசிச்சு வேதனைப்படுகிறியள். அவளின்ரை குணத்தை சரியா விளங்காமல், இப்ப இந்தப் பெட்டைக்கு வெளிநாட்டு ஆசையை நெஞ்சில வளத்துப்போட்டீங்கள்.

**இரா :** நான் மருமகனிலை கனக்க நம்பிக்கை வச்சிருந்தன்.... இவர் இப்பிடி பாராமுகமா இருப்பாரெண்டு.... கனவிலும் நினைக்கேல்லை.

**செல் :** சாமி ஓமெண்டாலும்... பூசாரி தடுத்த கதைதான் நடந்திருக்கும்... இவள் அல்லி ராச்சியமெல்லே நடத்துவாள். வீடு கட்டுறதுக்கு முதல் சொன்னனான்.

www.padippakam.com



காணியை ரெண்டாய் புறிச்சுப்போட்டு, சின்னனா ரெண்டு வீட்டைக் கட்டுவம், ஒண்டை வாடகைக்கு குடுப்பமெண்டு. அப்பிடிச் செய்திருந்தாலும் சின்னவளின்ரை பங்கை வித்துச்சுட்டு ஏதன் செய்திருக்கலாம்.

இரா : சரியெடி ஆத்தை... நீ சொன்னதைக் கேக்கேல்லை... பிழைதான்... முடிஞ்ச விஷியத்தைக் கதைக்காமல் இனி என்ன செய்யிறது எண்டு யோசி பாப்பம்.

செல் : இங்கையிருந்து இனி என்னத்தையப்பா யோசிக்கிறது? ஊருக்கு அனுப்பப்போறாங்களாம்... அங்கினேக்கை போய் இனிப் பாப்பம்.

இரா : பொத்தடி வாயை. ஊருக்குப் போகப் போறாளாம் ஊருக்கு. ஊருக்குப் போற கதை கதைச்சியெண்டால் அடிச்சு மூஞ்சை முகறையெல்லாம் உடைச்சுப போடுவன். ஓ... ஊருக்குப் போனாப்போல ஆகாயத்தில இருந்து உனக்கு காசு கொட்டப்போகுதே? எடியேய்... (கோபம் தணிந்து) இவளைக் கரை சேர்த்துப்போட்டால் நாங்கள் ஊருக்குப்போய் நிம்மதியாச் சாகலாமெல்லே?

செல் : சும்மா தலையைப்போட்டு உடைக்காதீங்கோப்பா...

சண : படைச்சவன் படியளப்பானெண்டு நாங்கள் கையைக் கட்டிக்கொண்டு முயற்சிசெய்யாமல் இருந்தாச் சரியே?

செல் : இனியென்ன முயற்சியப்பா செய்யிறது? அதுதான் அவள் வெட்டொண்டு துண்டு ரெண்டா எழுதிப்போட்டாளே. தனக்கு ஏன் கலியாணம் செய்து வைச்சனீங்கள்... நிம்மதியா வாழுறதுக்கோ... இல்லாட்டி உங்களுக்காக கஷ்டப்படுகிறதுக்கோ எண்டெல்லே கேட்டிருக்கிறாள்... எங்களால தன்ரை குடும்பத்துக்கை பிரச்சினையெண்டு எழுதினாப் பிறகு... இனியென்னெண்டு அவளுக்கு கடிதம் எழுதுறது?

www.padippakam.com



இரா : என்னெண்டு எழுதுறதோ... எழுதுறன்... நான் எழுதுறன்... அவள் கேட்டமாதிரி முழுக்காணியும் குடுத்து... வீடும் பெரிசா... பெரிசா கட்டிக் குடுத்தனான்... அவள் விரும்பினமாதிரி நகை செய்துபோட்டனான்... என்ன குறையெடி அவளுக்கு வச்சனான்... எல்லாம் வடிவாச்செய்துதானே அனுப்பினான்... இனியென்ன செய்யப்போறன்... என்ரை பிள்ளையை எப்பிடி ஒருத்தன்ரை கையில பிடிச்சுக் குடுக்கப்போறன்... ஈஸ்வரி... ஈஸ்வரி... உன்னை நம்பினனே... இப்பிடி எங்களை நடுறோட்டில விட்டிட்டியேடி.

(அகதிமுகாம் அலுவலர் உள்ளே வந்தபடி..)

அலு : என்னையா நீங்க... ஏன்யா இப்பிடி சத்தம்போடுறீங்க?

இரா : இல்லை... சும்மா மனுஷியோட கதைச்சுக் கொண்டிருந்தனான்.

அலு : தமிழ்நாட்டுக்கு வந்து இவளவு நாளாயிடுச்சு.. இன்னும் தமிழ் கரெக்டா பேசமாட்டேங்கிறீங்க... சரி... சரி... உங்க Family ல (குடும்பத்தில) மூணு மெம்பர்தானே?

இரா : இதென்ன... இவளவு நாளைக்குப் பிறகு புதுசா கேக்கிறியள்?

அலு : இல்லை. ஷிப்புக்கு லிஸ்ட் (கப்பலுக்கு பட்டியல்) வந்திருக்கு... அதுதான் செக் பண்ணிக்கிறோம்...

இரா : என்ன... ஷிப்புக்கோ..?

அலு : ஆமாய்யா... சிலோனுக்கு முதல்ல கிளம்புற கப்பலுக்கு லிஸ்ட் போட்டிருக்குய்யா...

இரா : கப்பலுக்கோ... எங்களுக்கோ... நாங்கள் ஊருக்குப் போறதுக்கு எழுதிக்குடுக்கேல்லையே...

www.padippakam.com



அலு : யோவ்... என்னையா நீ... விளையாடுறியா? தம்பிமுத்து இராசையா... இராசையா செல்லம்மா... இராசையா உமா... மூனு பேர் பேரும் இருக்கு... ஒப்பம் வேறபோட்டிருக்கீங்க...

செல் : இதென்ன அநியாயம்... நாங்கள் போறதெண்டு எழுதிக்குடுக்கேல்லையே...

அலு : இந்தாம்மா சும்மா தொணதொணன்னு பேசிக்கிட்டிருக்காத... உங்க வூட்டுக்காரர்தானேம்மா ஒப்பம் போட்டிருக்காரு...

செல் : என்னப்பா...?

இரா : இல்லையப்பா... ஐயா... நான் போடேல்லை...

அலு : யோவ்... இதென்னையா இது... உங்கொப்பன் கையொப்பமா?

இரா : ஐயா... கொஞ்சம் மரியாதையாக் கதையுங்கோ...

அலு : யோவ்... என்னையா நீ... மரியாதை அது இதுன்னு பேசிக்கிட்டு... இந்தா பாரு... இது உன்னோட ஒப்பந்தானே?

இரா : ஓ.. ஓ... இது....

அலு : அப்பறம் என்னையா...

இரா : ஐயோ... இது... அண்டைக்கு உடுப்புகள் தாறதுக்கெண்டெல்லோ கையெழுத்து வாங்கினீங்கள்...

நட : (வந்தபடி) இராசையாண்ணை... போமில (பத்திரத்தில) மேலுக்கு எழுதினதை வாசிக்க ஏலாமல் மறைச்சுக் கொண்டு இப்பிடித்தான் கனபேரிட்டை கையெழுத்து வாங்கியிருக்கினம்.

www.padippakam.com



அலு : யோவ்... நீ மொதல்ல வெளிய போய்யா... நான் இங்க பேசிக்கிட்டிருக்கேன்ல.. அப்புறம் நீ என்னையா... நடுவில புகுந்துகிட்டு...

நட : ஐயா... கோவிக்கக் கூடாது... ஐயா அவர் இப்ப ஊருக்கு போக விரும்பேல்லை... முதல்முதலிலை அகதியளைக் கொண்டுபோற கப்பலிலை... குமர்ப்பிள்ளையையும் கொண்டுபோறது அவளவு நல்லதில்லைப் பாருங்கோ.

அலு : யோவ்... அதுக்கு நான் ஒண்ணும்பண்ண முடியாதுய்யா... என்னையா இது.. புரியாத ஆளுகளா இருக்கீங்க... ஆ... உம் பேரென்ன ?

நட : நடராசா...

அலு : ஆ... நடராசா... நடராசா... ஆ... உன்னோட பேரும் இந்த லிஸ்ட்லயே இருக்குய்யா...

நட : நான் எழுதிக் குடுத்தனான்... அவையள்...

அலு : அதெல்லாம் எனக்குத் தெரியாதுய்யா... என்னை ஏன்யா போட்டு குடையுறே.... நாளன்னிக்கு திங்கள்ல... மறு திங்கள் பத்தொன்போது காலையில நீங்கள்லாம் இங்கயிருந்து கிளம்புறீங்க...

நட : கிளம்புறமோ... நாங்களென்பிளேனோ? அல்லது ஹெலிஹெர்ப்ரரே கிளம்புறதுக்கு வெளிக்கிடுகிறம் எண்டு வடிவாச் சொல்லுங்கோவன்...

அலு : ஆ... இதிலேல்லாம் ஒண்ணும் குறையில்லை... நடராஜா எண்ணு பேர்தான்... ஒத்தைக் காலைத்தான் காணோம்.

நட : இஞ்ச... கதைக்கிறதை மரியாதையாக் கதை...

(சேட்டைப் பிடிச்சு இழுக்க..)

www.padippakam.com



அலு : யோவ்... வுடுய்யா... கையை வுடுய்யா...

இரா : நடராசா... விடு... விடு...

அலு : இருய்யா... உன்னைப் பாத்துக்கிறேன்..

நட : என்ன... என்ன... பாக்கப் போறாய்...

செல் : அண்ணை... சும்மா இருங்கோண்ணை...

நட : இல்லையக்கா... இவன் சரியான கெட்டவன்...

செல் : கெட்டவங்கள் எங்கதானில்லை... நல்லவங்கள் இருக்கிற இடத்தில ஒண்டு ரெண்டு கெட்டவங்களும் இருப்பாங்கள்தானே? பசிக்குச் சோறும் தந்து... படுக்க இடமும் தந்ததும் இவங்கள்தானே... அவங்களுக்கும் எங்களோட இப்பிடி நடக்கிறதுக்கு என்னென்ன நிர்ப்பந்தமோ?

நட : சரியக்கா... நான் வரப்போறன்... அண்ணை என்ன யோசித்துக்கொண்டிருக்கிறியள்...

இரா : ஆ.. ஒண்டுமில்லை... நீ போட்டுவா...

(நடராசா வெளியே செல்ல...)

செல் : மெய்யேப்பா... கையெழுத்து வைக்கேக்கை வாசிச்சுப் பாக்கிறேல்லையே?

இரா : என்னத்தையடி வாசிக்கிறது... அதுதான் ஆண்டவன் இப்பிடி தலையில எழுதி இருக்கிறானே... யானை தன்ரை தலையில மண் அள்ளிப்போடுறமாதிரி நான் .... நானே கையெழுத்துப் போட்டிருக்கிறனே... எங்கயப்பா அவளின்ரை கடிதம்?

செல் : என்னத்துக்கப்பா... அதை...?

www.padippakam.com



*இரா : ஆ... நாக்கு வழிக்க... எடியேய்... கேள்வி கேட்டுக்கொண்டு நிக்காமல், கொப்பியையும் பேனையையும் கையோட கொண்டு வா...*

*செல் : என்னப்பா இனி எழுதப் போறீங்கள்... கடிதம் போய் பதில் வாறதுக்குள்ள... எங்களை அனுப்பிப்போடுவாங்க ளெல்லே?*

*இரா : நாங்கள் போறது போறதுதான்... ஆனா இனி அப்பன் மகள்... மாமன் மருமகன் எண்ட உறவுகள் முடிஞ்சுது எண்டு அவளுக்குத் தெரியவேணாமே?*

*உமா : (வந்துகொண்டே) அப்பா... எங்களை ஊருக்கு அனுப்பப்போகினமே...*

*இரா : ஓமாச்சி... நாங்கள் ஊருக்குப் போகப்போறம்...*

**(திரை)**

○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 4



***களம்***

*ஜேர்மனி... நாதன் வீடு.*

***பாத்திரங்கள்***
*நாதன், ஈஸ்வரி, நகுலாவின் குரல், இராசையாவின் குரல்.*

*தொலைபேசி மணி ஒலிக்க, ஈஸ்வரி ரிசீவரை எடுக்கிறார்.*

**ஈஸ்** : *ஹலோ....*

**நகு** : *ஹலோ... நான் நகுலா கதைக்கிறன்... எப்பிடி ஈஸ்வரி...*

**ஈஸ்** : *இருக்கிறன்...*

**நகு** : *என்ன ஒருமாதிரிக் கதைக்கிறீர்?*

**ஈஸ்** : *ஒண்டுமில்லை.... சொல்லுமன்...*

**நகு** : *என்ன டோட்முண்ட் போறதெண்டு சொன்னீர்... பிறகு அந்தக் கதையைக் காணேல்லை.*

**ஈஸ்** : *அவருக்கு கொஞ்சம் சுகமில்லை. இப்ப 'கிறாங்" (சுகயீன விடுமுறை)ல நிக்கிறார். அதால அடுத்தடுத்த கிழமைதான் போகவேணும்... போகேக்கை சொல்லுறனே.*

**நகு** : *அது சரி. உமக்கொரு தங்கச்சி இருக்கெண்டு உம்மடை அவர் என்ரை மனுஷனிட்டைக் கதைச்சவராம்.*

படிப்பகம்

www.padippakam.com



ஈஸ் : ஓ... இருக்கிறா...

நகு : அப்ப.. அண்டைக்கு நான் தம்பிக்கு ஒரு பொம்பிளை வேணுமெண்டு கதைக்கேக்கை நீர் அதைப்பற்றி ஒண்டும் சொல்லேல்லை.

ஈஸ் : என்ரை தங்கச்சியைப்பற்றியோ.... அவள் சின்னப்பெட்டை.... அதுதான்...

நகு : அதில என்ன... என்ரை தம்பிக்கும் வயது கனக்க இல்லை....

ஈஸ் : அதைப்பற்றி இன்னொரு நாளைக்கு ஆறுதலாக் கதைப்பம். நகுலா.... நான் இப்ப கையில அலுவலா இருக்கிறன்...

நகு : அப்ப சரி.... ஓகே... பாய்..

ஈஸ் : ஓகே... பாய்... (ரெலிபோனை வைத்தவிட்டு) சீ... இந்த மனுசன் ரெண்டில ஒண்டு பாக்கிறதெண்டுதான் நிக்குது... எப்பிடி இவற்றை மனசை மாத்திறதோ தெரியேல்லை...

(நாதன் கையில் சில சாமான்களுடன் உள்ளே வருகிறான்.)

நாத : இந்தாரும்.... இதை எடுத்து வையும்...

ஈஸ் : தேத்தண்ணி வைக்கட்டோ... அல்லது ஜூஸ் குடிக்கப் போறியளோ...

நாத : ஒண்டும் வேணாம்... நான் கடையில சிலோன் ஜூஸ் இருந்தாப்போல குடிச்சிட்டன்... இஞ்ச... தமிழ்ப் பேப்பரில வந்திருக்கப்பா... வாற திங்கட்கிழமை மெட்ராஸில இருக்கிற அகதியளில ஒருபகுதி திருகோணமலைக்குப் போகினமாம்...

www.padippakam.com



ஈஸ் : ஆ...

நாத : அதுசரி... ஐயா அம்மாவுக்கு... காசனுப்பிப்போட்டீரே?

ஈஸ் : ஓ...

நாத : எவளவு அனுப்பினனீர்?

ஈஸ் : எவளவு அனுப்பச் சொன்னனீங்கள் எண்டது மறந்துபோட்டுதே...

நாத : அப்ப நான் சொன்னதை அப்பிடியே செய்யிறீர்... ஆ... அப்ப ரெலிபோன் நம்பரும் எழுதியிருப்பீர்... காசு கிடைச்சுக் கடிதம் போட்டவையே?

ஈஸ் : ம்.... அவை கிடைச்ச காசு சிலவழிச்சு முடிஞ்ச பிறகுதானே கடிதம் எழுதுவினம்...

நாத : ஆ... அப்பிடியே... ஈஸ்வரி.. எங்கடை குடும்பத்தைப் பொறுத்தவரையில... வேலைக்குப் போறன்... வீட்டை வாறன். உம்மோடை, பிள்ளையளோடை எங்கயன் போறன், வாறன்... இவளவுந்தான் நான் செய்யுறன்... பாங்க் ஸ்ரேற்மென்ற் பாக்கிறேல்லை... வாற கடிதங்கள் பாக்கிறேல்லை... எல்லாம் நீர்தான் பாக்கிறீர்... நீர் சொல்லுறதை நம்புறன்... கேக்கிறன்... அதன்படிதான் இவளவு நாளும் நடந்தனான்... ஆனால்... இப்ப....

ஈஸ் : இப்ப என்ன? இப்ப.... என்ன...?

நாத : (மிக அமைதியாக) ஈஸ்வரி...

ஈஸ் : கொஞ்சநாளா உங்கடை கதை பேச்சு... நடத்தை எல்லாம்... ஒரு மாதிரியாக் கிடக்கு... இது எனக்குப் பிடிக்கேல்லை...

நாத : (சிரித்து) இதை நான் சொல்ல வேணும்... நீர்

www.padippakam.com



*சொல்லக்கூடாது... காலைமை நீர் டொக்டரிட்டைப் போட்டீர்... ஒரு றிஜிஸ்ரர் லெற்றர் வந்துது... நான்தான் கையெழுத்து வச்சு வாங்கினான்...*

*ஈஸ் : (பதட்டத்துடன்) எங்கயிருந்து வந்தது...*

*நாத : ஏன் பதறுறீர்... உங்கடை அப்பாவிட்டை இருந்துதான் வந்தது...*

*ஈஸ் : ஆ...*

*நாத : அதை நான் வாசிச்சிட்டன்... இப்ப நீர் வாசியும்... இந்தாரும்...*

*(ஈஸ்வரி கைகள் லேசாக நடுங்கியபடி கடிதத்தை வாங்கி உறையிலிருந்து எடுத்து விரிக்கிறார். மேடையின் வலது பக்கத்தில் மங்கலாக வட்ட முள் அதன் நடுவே இராசையா. இன்னுமொரு வட்ட ஒளி ஈஸ்வரியின் மேல் சற்று பிரகாசமாக... இராசையா... கடிதமெழுக பலமுறை முயற்சித்து முடிவுக்கு வந்து எடுக்க தொடங்குகிறார் - எழுத... எழுத... உணர்வுகளுடன் கடிதத்தைப் படிக்கிறார்.)*

*இராசையாவின் குரலில் கடிதம்:*

பிள்ளை ஈஸ்வரிக்கு!

வெளிநாட்டில வசதியாய் இருக்கிற அகதிகள் நீங்கள், இங்கை இருக்கிற உண்மையான அகதிகளைப்பற்றி கவலைப்படுவியள், உணருவியள் எண்டு நம்பி ஏமாந்து போனோம்.

நான் உன்ரை அம்மாவைக் கலியாணம் செய்து ஏழு வருசத்துக்குப் பிறகு பொம்பிளைப்பிள்ளை வேணுமெண்டு தவமிருந்து பெத்தனான். கொள்ளி வைக்க ஆம்பிளைப்பிள்ளை இல்லாவிட்டாலும் பரவாயில்லை

www.padippakam.com



யெண்டு பொம்பிளைக்கு பொம்பிளையாகவும், ஆம்பிளைக்கு ஆம்பிளையாகவும் வளர்த்தனான்.

ஆச்சி நீ ஐஞ்சு வயசில சாகக்கிடக்கேக்கைக, நான் கும்பிடாத தெய்வமுமில்லை, ஏறாத கோயில் படியுமில்லை. இப்ப என்னெண்டால் என்னை நீ உயிரோடு சாகடிக்கிறாய்.

பிள்ளை நீ கடைசிவரை கண்கலங்காமல் இருக்க என்ரை அக்காளின்ரை மகனை மருமகனா எடுத்தன். அவரும் எங்களைப்பற்றித் தேடாமல் இருப்பாரென்று நினைக்க வில்லை. மூத்தவளுக்கு எல்லாத்தையும் கொடுத்தால் இளையவளுக்கு என்ன செய்கிறது எண்டு கொம்மா கேக்க, நான் யோசிக்காமல் நடந்திட்டன். என்னிலை பிழைதான் ராசாத்தி. ஆனாலும் நீ நல்லாயிரு.

வெளிநாட்டுக்குப் போனவை சிலர் பெத்தவை செத்தாலும் வரமாட்டினமாம் என்று அறிஞ்சும், ஆசையாக அருமையாக வளர்த்த உன்னை அழுதழுது பிளேன் ஏத்திவிட்டேன். என்ரை கஸ்டத்தைப் பார்க்காமல் நீ கேட்டதெல்லாம் நான் தந்தது உன்னட்டைப் பிச்சை எடுத்துக் கஞ்சி குடிக்கிற துக்கு இல்லையடி. உன்னோடை கூடப் பிறந்தவளுக் கெண்டாலும் ஏதேனும் உதவி செய்வாயென்று நினைசன். இனி நாங்கள் இந்த இடத்தில் இருக்கமாட்டோம். பெத்தவைகளின்ரை உணர்வுகளை நினைக்க மறந்த நீ நான் செத்தாலும் என்ரை கட்டையிலும் முழிக்கவேண்டாம்.

*இப்படிக்கு,*
*உன்னைபெத்த பாவி ஏமாந்த*
*இராசையா.*

*(இராசையா கடிதத்தை எழுதி முடிக்க ஈஸ்வரி விம்மி விம்மி அழுகிறாள் காந்தன் வந்தபடியே)*

எ-8

www.padippakam.com



*நாத : அழு... நல்லா அழு.... காலம் கடந்த ஞானோதயம் வந்து ஆருக்கு என்ன பிரயோசனம் இருந்த இடத்தில் இருக்கமாட்டம் எண்டு எழுதியிருக்கிறார்.... இனி எப்பிடித் தொடர்பு கொள்ளுறது... இனி நீ நினைச்சால் கூட காசனுப்பஏலாது. நாதன் சொல்ல - ஈஸ்வரியின் அழுகைச் சத்தம் கூடுகிறது) அழு... அழு... பெத்தவைக்கு செய்த துரோகத்துக்காக வெட்கப்பட்டு அழு... எத்தினையோ பேர் தங்கடை வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படாமல் பெத்தவையையும் சகோதரங்களையும் பாக்கிறாங்கள்... நீ... வசதியாயிருந்தும் அவைக்கு உதவி செய்திடக் கூடாதெண்டு நினைச்சிருந்தியே அந்த கேவலமான எண்ணத்துக்காக அழு...*

*ஈஸ்வரி குரலெடுத்து அழ ...*

*திரை மெதுவாக மூடிக் கொள்கிறது.*

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 5



***களம்***

*திருகோணமலை அகதிமுகாம்.*
*பழுதடைந்த சுவர் பின்னணியில் தெரிகிறது.*

***பாத்திரங்கள்***

*இராசையா, செல்லம்மா, நடராசா.*

*சலனமற்றவராய் வெறித்த பார்வையோடு இராசையா செயல் இழந்தவராய் இருக்கிறார். - சுய நினைவுடன் இருக்கிறாரா... இல்லையா என்பது புலப்படவில்லை.*

***செல் :*** *அப்பா... அப்பா... என்னப்பா... கல்லு மாதிரி இருக்கிறியள்... ஆமிக்காறங் 'களோட வந்தவங்கள் என்ரை பிள்ளையைப் பிடிச்சுக் கொண்டு போட்டாங் களப்பா... எனக்குப் பயமா யிருக்கப்பா.... கப்பலால வந்து இறங்கினவுடன கொண்டு போனவங் களப்பா.... இன்னும் விடேல்லை... ஒருக்காப் போய் என்னெண்டு பாருங்கோப்பா...*

***இரா :*** *ஆ... ஆ... ஆ...*

***செல் :*** *கதையுங்கோ... என்னெண்டு என்னைக் கேளுங்கோவன்... என்னை ஏன் இப்பிடி வதைக்கிறீங்கள்... என்ரை ராசாவெல்லே... கதையுங்கோ... கப்பலிலை ஏறமாட்டன் ஏறமாட்டன்*

www.padippakam.com



எண்டு சொல்லச் சொல்ல ஏத்தினாங்களே.... இதுக்குத்தானோ... ஐயா... என்ரை ராசா... என்ரை பிள்ளையைக் கூட்டிக்கொண்டு வாங்கோ.... என்னரை பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வாங்கோ!

(இரண்டு மூன்று வேட்டுச் சத்தம் தொடர்ந்தாற்போல் ஒலிக்க...)

நட : செல்லம்மக்கா...! இராசையாண்ணை... செல்லம்மக்கா...

குரல் : இஞ்சை பாருங்கோ இந்த அநியாயத்தை... உமாவைச் சுட்டுப்போட்டாங்கள்... உமாவைச் சுட்டுப்போட்டாங்கள்...

செல் : ஐயோ.. என்ரை பிள்ளை... என்ரை ஐயோ... (தலையில் அடித்துக் கொண்டு வெளியே ஓடிகிறாள், சிலர் உமாவைத் தூக்கி வர... தானும் பிடித்துக்கொண்டு..)

ஐயோ... என்ரை ராசாத்தி... என்ரை ஆச்சி... ஐயா... உங்கடை உமாவைச் சுட்டுப்போட்டாங்களய்யா...

இரா : ஆ... ஆ... உமா... என்ரை உமா... ஈஸ்வரி....

(இராசையா விழுகிறார்.)

செல் : ஐயோ... கடவுளே... நானினி என்ன செய்வன்... நானினி என்ன செய்வன்... நானினி என்ன செய்வாள் பலமுறை சொல்லி குரல் அடங்கியது!

**(நிறைவு)**

○ ○ ○

www.padippakam.com



# நீர்க்கோலம்

படிப்பகம்

www.padippakam.com

## நீர்க்கோலம்

முதுவேனில் 1995

| நாடக மாந்தரும் | உயிருட்டியோரும் |
|---|---|
| சின்னத்துரை | பூ. நவரட்ணராஜா |
| குமார் | மனோகிமன்(ஜீவகன்) |
| மூர்த்தி | நாச்சிமார்கோயிலடி இராஜன் |
| காந்தன் | அ.டொ.ஞானசெல்வம் |
| கிளி | பெனடிக்ரா ஞானசெல்வம் |
| யமுனா | உமா லிங்கேஸ்வரன் |
| ரேவதி | அனுலா மனோஹிமன் |
| உமா | மோகனரூபி நவரத்தினம் (சிறந்த நடிகைக்கான தங்கப்பதக்கம்.) |
| அகிலன் | அசோக் குலதாசன் (சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான தங்கப்பதக்கம். |
| ஈஸ்வரி | சித்திராதேவி தங்கராசா |
| சரவணமுத்து | பொ. குலதாசன் |
| திரைக்குப் பின்னால் : | கொலின் நித்தியேந்திரன், லிங்கேஸ்வரன், பிரான்சிஸ் இராஜகுமாரன். |

படிப்பகம்

# காட்சி 1



**களம்**
*யாழ்ப்பாணம்*

**பாத்திரங்கள்**
*சின்னத்துரை வயது 10,*
*மனைவி கிளி வயது 55,*
*மூத்தமகள் யமுனா வயது 28, இரண்டாவது மகள் ரேவதி வயது 25, கடைசி மகள் உமா 20, யமுனாவின் மகன் அகிலன் வயது 5.*

*சின்னத்துரையின் வீடு வசதியான யாழ்ப்பாணத்து புது வீடாகும். தேங்காய் துருவிக் கொண்டிருக்கிறாள் உமா. ரேவதி பிட்டுக்கு மா கொத்திக் கொண்டிருக்கிறாள். உமா தேங்காய்ப்பூவை வாய்க்குள் போடுகிறாள்.*

**ரேவ** : நல்லாயிருக்கு... என்ன...

**உமா** : என்ன....

**ரேவ** : தேங்காயைத் திருவித் திருவி வாயிக்கை போட்டால் புட்டுக்கு என்னத்தைப் போடுறது?

**உமா** : அக்கா.... நான் என்ன செய்யிறன் எண்டு பாத்துக் கொண்டிருக்காமல் நீ உன்ரை வேலையைப் பாரன்.

**ரேவ** : கெதியா தேங்காயைத் திருவிப்போட்டு.... போய் தண்ணி அள்ளிக்கொண்டு வா... 'மூனா' வரப்போறார்.

**உமா** : அக்கா.... 'மூனா' வெண்டு ஐயாவைச் சொல்லாயெண்டு அம்மா சொல்லச் சொல்ல, நீ கேக்கிறாயில்லை.... அக்கா.... ஐயாவை ஏனக்கா எல்லாரும் 'மூனா"வெண்டு சொல்லுறவை?

www.padippakam.com



ரேவ : எண்பத்துமூண்டு கலவரத்துக்கு முதல் ஐயா கொழும்பில கடை வச்சிருந்தவரெடி. முதலாளியா இருந்து, உழைச்சுச் சேர்க்கவேண்டிய நேரத்தில குடிச்சுக் கூத்தாடிப்போட்டு.... இப்ப அண்ணை அனுப்புற காசை வச்சு முதலாளி வேலை பாக்கிறார்.

உமா : ஏனக்கா.... எதுக்கெடுத்தாலும் நீ ஐயாவைக் குறை சொல்லுறாய்? வீட்டு அலுவல்களை ஐயா பாக்காமல் நீயே பாக்கப் போறாய்?

ரேவ : நான் ஏன் அதுக்குப் போறன்? அவர் தன்ரை விருப்பத்துக்கு எல்லாம் செய்ய, எரிச்சல் எரிச்சலா இருக்குது. சின்னனாய் ரெண்டு வீடு கட்டச்சொல்லி அண்ணை எழுத... இவர் தான் லெவலா வாழுறனெண்டு மற்றவைக்குக் காட்ட மேல்வீடு கட்டியிருக்கிறார்.

உமா : அக்கா, ரெண்டு வீடு கட்டினா சிலவு கூட எண்டுதானே, ஐயா ரெண்டுபேருக்கும் சேத்து மேல்வீடாக் கட்டினவர்?

ரேவ : சும்மா கனக்கத் தெரிஞ்ச மாதிரி அலம்பாதை.... உமா.... தான் மேல்வீட்டில நிண்டு தண்ணிகொண்டு வா எண்டு கூப்பிட்டால், ஆரன் ஒருத்தர் தண்ணி கொண்டுவந்து தரவேணும் எண்டு எத்தினை தரம் சொல்லியிருப்பார் சொல்லு பாப்பம்.

கிளி... வருகிறாள் வலது கால் வலுவிழந்து போயிருப்பவள். அந்தக் காலை. வலக்கையினால் பிழத்துத் தூக்கினவத்தே நடப்பவள். இடதுகை நடக்கும் போது இடுப்பிலே இருக்கும்...

கிளி : அதுக்கென்னடி ஐயா கேட்டு, நீ தண்ணி கொண்டுபோய்க் குடுத்தா.... நீ என்ன குறைஞ்சு போயிடுவியே?

www.padippakam.com



ரேவ : அதுக்கு தான் உழைச்ச காசிலையெல்லோ மேல்வீடு கட்டியிருக்கவேணும்... அண்ணை அங்கை இருந்து கஷ்டப்பட்டுக் காசனுப்ப, இவர் இங்க பெரிய பவர் காட்டிக்கொண்டிருக்கிறார்.

கிளி : ரேவதி.... (நிலத்தில் அமர்கிறாள்) ஐயா தெருவில போறவன் வாறவன்ரை காசிலை பவர் காட்டேல்லை. தன்ரை பிள்ளையளின்ரை காசிலதானே எல்லாம் செய்யிறார்?

உமா : அம்மா.... பிள்ளையளின்ரை எண்டு என்ன ரெண்டுபேரையும் சேர்க்கிறியள்.... சின்னணண்ணை மட்டுந்தான் காசனுப்புறதெண்டது எனக்கும் தெரியும்... ஓ...

கிளி : ஆ... ஆ.... பெரியண்ணையும் அனுப்புவான் தானே... ஆளையாள் வாயடிக்காமல்.கெதியா அலுவலைப் பாருங்கோடி. (வானொலிச் செய்தி கேட்டல்.) மனுஷன் பசியிலை வரப்போகுது...

ரேவ : நல்லா வந்தார் பசியில.... எங்கயன் கடைப் பண்டம் சாப்பிட்டிட்டு ஏவறைவிட்டுக்கொண்டு வருவார். நீங்கள் எங்களை கை ஓயாமல் அலுவல் செய்வியுங்கோ.

உமா : அம்மா.... தேங்காய் போதுந்தானே?

கிளி : போதும் போதும்.... இதைக் கொண்டுபோய் போடன்.... போன மனுஷனை இன்னும் காணேல்லை.

(உமா உள்ளே செல்கிறாள்.)

ரேவ : அண்ணைவையை வரப்போறாரெண்டதை ஊரெல்லாம் சொல்லி புளுக வேண்டாமே?

கிளி : என்ரை பிள்ளையைப் பாத்து எத்தினை வருஷமாப்

www.padippakam.com



போச்சு. அண்ணை வாறான் எண்டு ஐயாவுக்கும் சந்தோசமாத்தானே இருக்கும்?

ரேவ : அண்ணையைப் பாக்கிற சந்தோசத்தைவிட, அண்ணை தனக்கு என்னென்ன கொண்டு வரும், எவ்வளவு கொண்டு வரும் எண்ட ஏக்கந்தான் ஐயாவுக்கு.... அண்ணை வரட்டன்...

கிளி : வந்தால்.... என்ன கோள் மூட்டப்போறியே? பிள்ளை... ஐயா முந்தித்தான் குடிச்சார், வெறிச்சார். எண்டைக்கு உடுத்த உடுப்போட கொழும்பிலை இருந்து கப்பலேறி வந்தாரோ.... அதுக்குப் பிறகு எவ்வளவு மாறிப்போனார்...

(உமா வர ரேவதி மாவைக் கொடுக்கிறாள்.)

கிளி : அண்ணையவையை வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு மனுஷன் கோயில் குளம், வீடு பிள்ளையள் எண்டு இருக்கிறது உனக்குப் பிடிக்கேல்லையே?

ரேவ : எல்லாம்... நடிப்பு.... வேஷம்....

கிளி : (கோபமாக) அப்போதையில இருந்து நானும் பாக்கிறன். அவளையும் வச்சுக்கொண்டு ஐயாவைக் குறை சொல்லிக்கொண்டே இருக்கிறாய். இந்தச் சொத்தியைக் கலியாணஞ்செய்து இவளவுநாளும் அந்த மனுஷன் வாழுறது, அந்த மனுஷன்ரை நெஞ்சுக்குழிக்கை இருக்கிற கருணையாலதானடி.

ரேவ : நல்ல கருணை.... உங்களைக் கலியாணஞ் செய்ததுக்குத்தானே.... (ரேவதி எழும்பியவாறு) அப்பு கொழும்புக் கடையும், அக்கா இருக்கிற வீடும் சீதனமாக் குடுத்தவராம். உழைக்காமல் முதலாளியாகிற கெட்டித்தனம் எல்லாருக்கும் வராதம்மா.

www.padippakam.com



கிளி : பல்லை உடைச்சுப்போடுவன். தங்கச்சி, ஐயா இல்லாமல் ஆகாயத்தில இருந்து ஒருத்தரும் வரேல்லை. நாளைக்கு எங்கயன் போய் வாழப்போறனி. இப்பிடி வாயடிச்சுப் பழகினால்.... வாறவன் இழுத்துப்போட்டு மிதிச்சுப்போடுவான்....

ரேவ : அது.... உங்கட காலம்.... இப்ப பொம்பிளையள் ஆயுதம் பிடிச்சு களத்தில நிண்டு எதிரியை அழிக்கிற காலம் அம்மா. ஆரன் அடிக்கிற அளவுக்கு நான் நடக்க மாட்டன். ஆனால்.... வாறவன் என்னை அடிமையா நினைச்சால், அப்பிடி ஒரு வாழ்வு எனக்குத் தேவையுமில்லை.

கிளி : மனுஷர் வாழுறதுக்குப் படுகிற பாடில்லை. உன்ரை வாயும் நீயும். கடவுளே! நான் என்ன செய்யப்போறன்? சொத்தி பெத்த பிள்ளை. வளர்க்கத் தெரியாமல் வளத்து வாய்காட்டுதெண்டு நாளைக்கு நாலுசனம் நாக்கு வளைக்கப் போகுதே.

(அப்போது சின்னத்துரை வருதல்.)

சின் : (வந்தபடி) சின்னத்துரையன்ரை பிள்ளையளைப்பற்றி ஆரும் நாக்கு வளைச்சால் மீன் வெட்டுற அரிவாளாலை நாக்கை வெட்டிப்போடுவன். ஓ.... என்னடி.... என்னடி அது.... ஆரடி என்ரை பிள்ளையளை நாக்கு வளைச்சது?

கிளி : ஒருத்தரும் ஒண்டும் சொல்லேல்லையப்பா. மற்றவை பகிடி பண்ணுறமாதிரி நடக்கக் கூடாதெண்டு சொல்லிக் கொண்டிருந்தனான்.

சின் : மறைக்கிறாய்.... மறைக்கிறாய்.... என்னத்தையோ மறைக்கிறாய்.... ஆரோடை சண்டை..? பிறக்கிராசியோடையோ இல்லாட்டி கடைக் குட்டியோடையோ?

www.padippakam.com



**உமா** : (உள்ளேயிருந்து எட்டிப் பார்த்து) ஐயா.... நான் சண்டை பிடிக்கேல்லை....

**ரேவ** : அப்ப.... நான்தான் இஞ்ச ஒரு சண்டைக் கோழியோ? பொறடி வாறன் உனக்கு....

**உமா** : அக்கா.... அடிச்சியெண்டால் தண்ணியள்ள மாட்டன்....

**சின்** : பிள்ளை.... அவளுக்கு அடிச்சுப் போடாதை.... என்னப்பா நடந்தது?

**கிளி** : ஒண்டுமில்லையப்பா.... அவளவை ரெண்டுபேரும் ஆளையாள் தனகிக்கொண்டிருந்தாளவை.... அதுதான் பேசின்னான். நீங்கள் சாப்பிடுங்கோவன்.

**சின்** : என்ன செய்திருக்கிறியள்?

**கிளி** : புட்டவிச்சிருக்கு....

**சின்** : கொங்கிறீற்றே? நான் நினைச்சனான்.... கொங்கிறீற்றை உள்ளுக்கனுப்பினால் இரவிரவா தண்ணி இழுக்கும். எனக்கு வேண்டாம். எங்க.... அந்தப் பேப்பரை எடு.

(ஈசிச் சேருக்குப் போகிறார்.)

**கிளி** : அவள் சொன்னது சரிதான். ஐயா பசியோடை வருவாரெண்டு செய்துவச்சால், ஐயா கந்தப்புவின்ரை கடையிலை ஏதன் சாப்பிட்டு வருவாரெண்டு, அவள் சொல்லுறது சரிதானே?

**சின்** : பத்துப் பன்ரெண்டு இடியப்பம் அவிக்கேலாது. தாயும் பிள்ளையளும் சேந்து இப்பிடிக் கதைமட்டும் கதைப்பியள். சுடச்சுட நல்ல தோசை. பன்ரெண்டு உருப்படியை பஞ்சியைப் பாக்காமைத் தள்ளி விட்டிட்டன். இஞ்ச.... மறந்துபோட்டனப்பா.... உனக்கும் ஐஞ்சு தோசை வாங்கிக்கொண்டு வந்தனான்.

www.padippakam.com



சைக்கிளிலை (Bag) குக்கை கிடக்கு. எடுத்துச் சாப்பிடு...

கிளி : எனக்கு வேண்டாம்.... பிள்ளையள் இருக்கிறாளவை. அவர் எனக்குமட்டும் கொண்டந்தவராம்.

சின் : எடி பைத்தியக்காரி.... உனக்குப் பிறகுதானேயெடி இவையைக் கண்டனான்?

கிளி : சரி சரி.... உதில கொஞ்சநேரம் சரிஞ்சிட்டு எழும்பி அவிச்ச புட்டைச் சாப்பிடுங்கோ.

சின் : சரி.... உன்ரை விருப்பத்தை ஏன் கெடுப்பான்? சாப்பிட்டாப் போச்சு. இப்ப ஏழு மணிதானே. ஒரு எட்டு எட்டரைபோல எழுப்பி விடு.

கிளி : உமா.... உமா....

உமா : (வந்தபடி) என்னம்மா....

கிளி : ஆச்சி.... அக்கா வீட்டை ஒருக்காப் போட்டு வாறியே? ராசவெள்ளிக் கிழங்கு உறியில கிடக்கு. அகிலனுக்குக் கொண்டுபோய் குடுத்திட்டு வாவன்.

உமா : எனக்குத் தெரியாது. நான் போகேல்லை. அங்க போக அத்தான் ஏதும் ஞாயம் கதைச்சுக்கொண்டிருப்பார்.

(சிறுவன் அகிலன் ஓடி வருகிறான்.)

அகி : அம்மம்மா.... அம்மம்மா....

கிளி : என்ரை அப்பு.... ஓடியாடா ராசா. உன்னை நினைக்க வந்து நிக்கிறாய். என்ரை அப்பு, அம்மாவும் வந்தவளே ராசா?

அகி : அம்மாவும் அப்பாவும் கோயிலடியில கதைச்சுக் கொண்டு நிக்கினம். நான் ஓடி வந்திட்டன்.

www.padippakam.com



**உமா** : என்னடா.... கோயிலடியிலயோ?

**அகி** : ஓ.... அப்பாதான் சைக்கிளிலை அம்மாவையும் என்னையும் கூட்டிக்கொண்டு வந்தவர். அம்மம்மா, அப்பா உங்கடை வீட்டை வரமாட்டாராம். தாத்தாவோடையும் உங்களோடையும் கோவமாம்.

**கிளி** : இல்லையப்பு.... நாங்கள் அப்பாவோட கோவமில்லை ராசா.

**அகி** : அப்ப.... நீங்கள் ரெண்டுபேரும் அப்பாவோடை நேசமோ?

**கிளி** : ஓமய்யா....

**அகி** : பொய்....! இண்டைக்கு மத்தியானம் அம்மாவுக்கு அப்பா அடிச்சவர். தாத்தாவையும் உங்களையும் பேசிப்பேசி அடிச்சவர்.

**கிளி** : கடவுளே.... இதென்ன... நீரோசை என்ரை பிள்ளையை இப்பிடிக் கருக்கிறானே....

**உமா** : அம்மா.... சும்மா இருங்கோ.... அகிலன்.... அப்பா என்னப்பு பேசினவர்?

**அகி** : சின்னமாமாவைப் பேசினார்.... பெரியமாமாவைப் பேசினார்.... சித்தியையும் பேசினவர்....

**ரேவ** : என்னடா.... என்னை என்னடா பேசினவர்.... (அகிலனை தன் பக்கம் இழுக்கிறாள்)

**கிளி** : இஞ்ச விடடி அவனை.... (தன் பக்கம் அகிலனை இழுத்து அனைத்துக் கொள்கிறாள்) பிள்ளை பயந்திடப்போகுது....

**ரேவ** : இங்க மேல்வீடு கட்டினதில இருந்து அக்காவுக்கும் அவருக்கும் மூக்கு ஒரு முழம் நீண்டுபோச்சு.

www.padippakam.com



அக : ஆ.... சித்தி.... மேல்வீட்டுக்காரரிட்டைப் போ எண்டு சொல்லித்தான் அப்பா அடிச்சவர்.

(அப்போது யமுனா உள்ளே வருகிறாள்.)

யமு : டேய்.... கோள் மூட்டுறதுக்கே முன்னுக்கு ஓடியந்தனி? வாடா.... இங்க...

(அகிலனை அடிக்கக் கை ஓங்குகிறாள் யமுனா. அவன் அடிபடாமல் தப்பிக் கொண்டு... எட்டப் போய் நின்று)

அகி : அப்பா உங்களுக்கு அடிச்சா.... நீங்க ஏன் எனக்கு அடிக்க வாறீங்க? தாத்தாவை இப்ப எழுப்பிச் சொல்லுவன்... ஓ....

யமு : உனக்கு நல்லா வாய் கொழுத்துப்போச்சு தம்பி....

(அகிலனை யமுனா எட்டிப் பிடிக்க வர...)

கிளி : எடியேய்.... பிள்ளையை விடடி. உமா, தம்பியைக் கூட்டிக்கொண்டுபோய் அந்தக் கிழங்கை எடுத்துக் குடு. யமுனா, பிள்ளையை வச்சுக்கொண்டே ரெண்டுபேரும் சண்டை பிடிக்கிறனீங்கள்?

ரேவ : அவனுக்கு முன்னுக்கு சண்டை பிடிக்கிறமாதிரிக் காட்டினாத்தானே, அவன் இங்க வந்து சொல்லுவான்....

யமு : ரேவதி... நீ வாயை மூடு. கனக்கக் கதைக்காதை. ஒழுங்கைக்கை இருக்கிற பழைய வீட்டை எனக்குத் தந்து பேய்க்காட்டிப்போட்டு, நீங்கள் மேல்வீடு கட்டியிருக்கிறியள். அதுவும் றோட்டுக் கரையில....

கிளி : யமுனா, உப்பிடி அடாத்துக் கதை கதைக்காதை பிள்ளை. அம்மா ஐயா சீவிச்ச வீட்டை எனக்குத் தாங்கோ எண்டு நீ கேட்டுத்தானேயாச்சி, வீடு வளவு முழுவதும் உனக்குத் தந்தனாங்கள். தங்கச்சிமாரை

www.padippakam.com



நாங்கள் பாப்பம்.... மூத்த பொம்பிளைப்பிள்ளை நல்லா வாழ்ந்தா எங்களுக்கு விடிவு வருமெண்டு கொண்ணையும் தம்பியும் சொல்ல.... உன்னிட்டை வீடுவளவை அப்பிடியே தந்திட்டு இந்தக் காணிக்கை கொட்டில் போட்டெல்லே நாங்கள் இருந்தனாங்கள்?

யமு : அப்ப.... கொட்டில் போட்டனீங்கள்.... இப்ப மேல்வீடும் கீழ்வீடுமா வசதியா இருக்கிறீங்கள். நான் மூத்த பிள்ளை மூலைக்கை இருந்து மூண்டு கட்டை தாண்டி ஜேர்மன்காரரிட்டை வரவேண்டி இருக்கு. எத்தினை நாளைக்கு உங்களாலை நான் அடியும் உதையும் வாங்கிறது?

(சிணுங்குகிறாள் யமுனா.)

ரேவ : சற்று சத்தமாக அக்கா... ஏனிப்ப எங்களிலை பழிபோடுறாய்?

கிளி : மெதுவாக் கதையடி.... கொப்பர் எழும்பப் போறார்....

ரேவ : அக்கா.... உனக்கு நடிக்கத் தெரியுமெண்டால் நாடகத்திலை, படத்திலை போய் நடி. நாட்டுக்கு நல்லது செய்ததாப் போகும். சும்மா இருந்த அத்தானை நீதான் மகுடி ஊதிப் படமெடுக்க வச்சிருக்கிறாய். உனக்கு இந்த வீடு வேணுமோ? கட்டின காசைத் தா. நாங்கள் போறம் ஒழுங்கேக்கை. அந்த வீட்டுக்கு ஒரு விலையைச் சொல்லு. அதைத் தாறம்.

யமு : எனக்கென்ன வெளிநாட்டில இருந்து வருமானம் வருகுதே? நீ கேட்டவுடன எண்ணித் தாறதுக்கு. இஞ்ச றோட்டுக்கு றோட்டு குடிச்சுப்போட்டு சண்டை பிடிச்சுக்கொண்டு திரிஞ்ச அண்ணையை தம்பி ஜேர்மனுக்குக் கூப்பிட்டிருக்கிறான். அண்ணைக்குப் பதிலா அவரைக் கூப்பிட்டிருக்கலாமெல்லே?

www.padippakam.com



கிளி : ஓமடி.... ஓம்... நல்ல ஞாயந்தான்.... கூடப் பிறந்தவனை அவன் கூப்பிட்டது உனக்கும் உன்ரை புருஷனுக்கும் பொறுக்குதில்லையோ? எடியேய்... கொண்ணை கெட்டவனோ? நல்லவனோ? இந்தச் சொத்தி பெத்த மூத்தபிள்ளை அவன். அவனைப்பற்றி இனிக் கதைச்சி எண்டால்... (அழுகிறாள்.)

யமு : மூத்தபிள்ளை... இளையபிள்ளை... ரெண்டு பேற்றை வருமானத்தையும் நீங்கள்தானே அள்ளுறியள்? ஒரு கண்ணுக்கு வெந்நீரும் மற்றக் கண்ணுக்கு தண்ணீருமெல்லே ஊத்தறியள்?

(அப்போது ஓய்வு நாற்காலியில் நித்திரை போல் கிடந்த சின்னத்துரை நிமிர்ந்து)

சின் : அசிற் கிடைச்சால் ஊத்துவன்ரி உன்ரை நாக்கில... கிளி... இப்ப நீ என்னப்பா... இவளின்ரை கதைக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறாய்...

கிளி : இல்லையப்பா... மருமகன் இவளை அடிச்சு அனுப்பியிருக்கிறாரப்பா...

சின் : பிறக்கிறாசி சொன்னாள். அதுதானப்பா உண்மை. நானும் அப்போதையில இருந்து கேட்டுக் கொண்டுதான் கிடந்தனான். இவளுக்கு நான் என்னடி குறை வச்சனான்? வீட்டோடை வெறுங்காணியையும் தா எண்டாங்கள். இவளைவைக்கு வையாமல் இவளுக்கே எழுதினன். அவற்றை உத்தியோகத்தின்ரை திறத்திலை ரெண்டு லெட்சம் கேட்டாங்கள். இவள் விரும்பீற்றாளே அவனையெண்டு எண்ணி வச்சன். இஞ்ச ரெண்டு குமர் இருக்குது எண்டதை இவளும் மறந்து அடிக்கடி வந்து கடிச்சுக் குதறிப்போட்டுப் போறாள். சின்னவன் வாறான் எண்டு அறிஞ்சவுடன திட்டம்போட்டு வறுகிறதுக்கு



படிப்பகம்

www.padippakam.com



வந்திட்டாள். இப்ப ரெண்டு மாசமா இந்தப் பொடியை அண்டவிடாமல் வச்சிருந்துபோட்டு, இண்டைக்கு இங்க என்னத்தக்கு வந்தனி? என்ரை ஆம்பிளைப்பிள்ளை உழைச்சு அனுப்புது. நான் அதை வச்சு இவளவைக்கு செய்யவேண்டியதைச் செய்வன். நீயும் அவனும் அதைப்பற்றி என்ன கேக்கப்போறியள்? ஆ...

அகி : (ஓடி வந்து) தாத்தா... அப்பா உங்களை...

யமு : வாடா இங்க... இந்தக் காசுப் பிசாசுகளிற்றை ஏன் போறாய்? ஏன் போறாய்?

(மகனை அடிப்பதற்காக யமுனா கையை ஓங்க...)

சின் : கையை முறிச்சுப்போடுவன். சீதணம் வேண்டினாப் புறமும் விறாண்டுறத்துக்கு நிக்கிறார் அவர். இவ வந்திட்டா, அத்தையிற்றை சொல்லி அழ. எனக்கு முன்னுக்கு வச்சு பிள்ளையை அடிச்சியோ, இந்த வீட்டுப் படலை மிதிக்கக்கூடாது. நட வெளிய... நட வெளியில...

யமு : இஞ்ச ஆரன் செத்துக்கிடந்தாலும் நான் இனி வரமாட்டன்... என்ரை வீட்டையும் ஆரும் வரக்கூடாது.

ரே : ஐயோ... உன்னிட்டை நாங்கள் வரேல்லையக்கா... இஞ்ச ஆரும் செத்தால் நானும் உமாவும் இருக்கிறம்... சாகிறது.. எப்பவாலும் ஒரு நாளைக்குத் தான்.. ஆனா... நீ.. அடிக்கடி வந்து கதைக்கிற கதையனாலை இஞ்ச இருக்கிறவையைக் கொஞ்சம் கொஞ்சமா சாக்கொல்லாதை....

யமு : ஓமடி ஓம்... ஜேர்மனியில இருந்து வாற எல்லாத்தையும் நீ அள்ளிக் கொண்டு போகப் போறாய்.. உமா.. வாயைப் பிளந்து கொண்டு நிக்கப் போறாள்... இந்தக் கிழடுகள் ரெண்டும்.. அப்பதான் என்னைப் பற்றி உணரும்..

www.padippakam.com



கிளி : யமுனா வாயைப் பொத்து.. நான் எல்லாம் உணர்ந்திட்டன். இனி நீ எனக்கு ஒண்டும் சொல்லத் தேவையில்லை. இதிலை நிண்டு அலட்டிக் கொண்டு நில்லாமல் வீட்டை நட..

யமு : இனியேன் நான் இஞ்ச நிக்கிறன் என்ரை பிள்ளையை விடுங்கோ.. நான் போறன்.

கிளி : யமுனா சொல்லுறதைக் கேள்... வீட்டை போ.. அவன் வாற நேரம் வருவான்.

யமு : என்ன..

கிளி : உமா கொண்டு வந்து விடுவாளெடி போடி...(யமுனா.. வெளியே போகிறாள்..)

கிளி : வந்தவளுக்கு ஒரு வாய் தேத்தண்ணி குடுப்பமெண்டில்லை. ஆளையாள் கடிச்சு அவளை அனுப்பிப் போட்டியள்.. இப்ப சந்தோசமேடி...

ரே : கடைசியில பழி எங்களிலையே... திறம்.. மெத்தத் திறம்....

சின் : (வந்தபடி) கிளி... எங்கயப்பா அவள் போட்டாளே...

கிளி : ஓ... போட்டாள்.

சின் : என்னப்பா... போட்டாளெண்டு போட்டு உதிலை இருக்கிறாய்... இருட்டீற்றுது... அவள் தனியப் போவாளே? எழும்பு... போய்ப் பாத்து அவளை வீட்டை கூட்டிக் கொண்டு போ.. நான் சயிக்கிளிலை பின்னால் வந்து உன்னை ஏத்திக் கொண்டு வாறன்.

உமா : சும்மா... இருங்கோ! ஆளையாள் படை வெட்டிக் கொண்டு நிக்கிறீங்கள்... அந்தான். கோயிலடியில நிண்டு.. அக்காவை சயிக்கிளைலை ஏத்திக்கொண்டு போயிருப்பார்...

www.padippakam.com



**அகி :** *சித்தி நாங்கள் வரேக்கை அப்பா.. தேரடியில இருந்து*

**ரேவ :** *டேய் கோள்மூட்டி... பொத்தடா வாயை.*

**கிளி :** *சும்மா இருடி... அவனோடை ஏனிப்ப கொழுவல் எடுக்கிறாய்..*

**சீன் :** *நீ... வா அப்பு... நாங்கள் ஆடும் புலியும் விளையாடுவம்...*

**அகி :** *தாத்தா புலியெண்டதை மெதுவாச் சொல்லுங்கோ... ஆமிக்காறர் பயந்திடுவாங்கள்.*

*(எல்லோரும் சிரிக்க திரை மூடுகிறது.)*

**(திரை)**

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 2



***களம்***

*குமார் வீடு ஜேர்மனி. வீடு தூய்மையாக சிறிய அலங்காரத்துடன் அமைந்திருக்கிறது மேசை - ஒழுங்கற்று கிடக்கறிது*

***பாத்திரங்கள்***

*சின்னத்துரையின் இரண்டாவது மகன் குமார், குமாரின் நண்பர் மூர்த்தி, மூர்த்தியின் மனைவி ஞானம், சின்னத்துரையின் மூத்தமகன் காந்தன்.*

*குமார் ரெலிபோனில் கதைத்துக் கொண்டிருக்கிறான்.*

*குமா* : *நான் குமார்.... காந்தன்ரை தம்பி. அண்ணை ஒரு கிழமையா இங்காலை வரேல்லை. எனக்கு வீட்டிலை இருந்து கடிதம் வந்தது. அதைச் சொல்லத் தான் எடுத்தனான்.... நான் ரெலிபோன் அடிச்சனான் எண்டு ஒருக்காச் சொல்லிவிடுமன், என்ன.... ஓகே... Bye...*

*(வீட்டு வாசல் மணி அடிக்கிறது. மணிக் கூட்டைப் பார்த்தபடி சென்று கதவு திறப்பதாகப் பாவனை செய்துவிட்டு,*

*அலங்கோலமாகக் கிடக்கும் மேசை, அறையை விரைந்து ஒழுங்குபடுத்துகிறான் குமார். மூர்த்தி கையில் ஒரு 'வாய்க்" (Bag) உடன் உள்ளே வருகிறார்.)*

*குமா* : *மூர்த்தியண்ணை.... எப்ப ஊரால வந்தனீங்கள்? நான்.... நீங்கள் இன்னும் வரேல்லை எண்டெல்லோ நினைச்சுக் கொண்டிருக்கிறன்.*

www.padippakam.com



*மூர் : நாங்கள் வந்து நாலு நாளாகீற்றுது. உம்மைத்தான் பிடிக்கேலாமப் போச்சு.*

*குமா : என்னண்ணை செய்யிறது? Factory வேலை முடிஞ்சு வீட்டை வர ஐஞ்சு மணியாகும். ஆறு மணிக்கு றெஸ்ரோரண்டுக்குப் போயிடுவன்.*

*மூர் : நீர் இரவு பகலா இங்க அடிச்சு மாக் மாக்கா அனுப்ப, அங்க மாடி வீடெல்லே நிமிந்து நிக்குது!*

*குமா : எங்கயண்ணை.... அக்கா வரேல்லையே?*

*மூர் : உம்மடை நாலு மாடியும் ஏறிவர வேணாமே?*

*(ஞானம் வந்தபடி)*

*ஞான: குமார்.... உம்மடை வீட்டைவர நினைச்சவுடன இந்தப் படிதான் கண்ணுக்கை வந்து பயப்பிடுத்துது. நல்ல காலம். நாலாவது மாடியோடை நிப்பாட்டினாங்கள். (இளைத்தபடி அமர்கிறாள்.) குமார்.... கொஞ்சத் தண்ணி கொண்டாரும். நல்லாக் களைக்குது.*

*குமா : ரீ போடுறனே அக்கா....*

*மூர் : முதலிலை தண்ணியைக் குடும். பிறகு ரீயைத் தாருமன்.*

*(குமார் உள்ளே போகிறான்.)*

*ஞான: இஞ்சேரும். நான் குமாரோடை கொஞ்சம் Technic கதைப்பன். நீர் இடையிலை அலட்டிக்கிலட்டிக் குழப்பிப்போடாதையும்....*

*மூர் : என்ன! உங்கடை அக்காவின்ரை மகளின்ரை விஷியமாக் கதைக்கப்போறீரோ? அதிலை நான் என்ன நினைக்கிறனெண்டால்.....*

www.padippakam.com



ஞான: நீர் ஒண்டும் நினைக்கவேண்டாம். கொஞ்சநேரம் வாயைப் பொத்திக்கொண்டு இருந்தால் பெரிய புண்ணியம் கிடைக்கும். அந்த 'வாய்க்"ல இருக்கிறதுகளை எடுத்து வெளியில வையுமன்.... பாத்துக்கொண்டு நிக்கிறீர்.

(அசடு வழிந்த ஒரு பார்வையோடு மூர்த்தி சில பார்சல்களை எடுத்து மேசைமீது வைக்க, குமார் தண்ணீரோடு வருகிறான்.)

குமா : என்னண்ணை.... பார்சலுகள்....

மூர் : எல்லாம் உமக்குத்தான்.... மிளகாய்த்தூள், புழுக்கொடியல், பொரிவிளாங்காய்.... உம்மடை அம்மா தந்துவிட்டவ.

குமா : இஞ்ச இப்ப எல்லாம் கிடக்குது. பிறகேனண்ணை கட்டிக் காவிக்கொண்டு வந்தனீங்கள்?

ஞான: தம்பி.... இங்க வாறதுகள் யாவாரத்துக்காக கலந்து கிலந்து அப்பிடி இப்பிடித்தானே?

மூர் : ஆனா இதுகள் ஒரிஜினல்.... குமார்.... எள்ளுப் பாகு அருமை... அந்த மாதிரி இருக்கு.

ஞான: என்ன நீர்.... ஏதோ சாப்பிட்டுப் பாத்தமாதிரிச் சொல்லுறீர்....

மூர் : நீர்தானே சொன்னனீர் குமாருக்குக் கொண்டு போக முதல் ஏழெட்டு எடுத்துவைக்கச் சொல்லி.... அதில.... ஆக.... ஒண்டே ஒண்டுதான் எடுத்துச் சாப்பிட்டனான்.

ஞான: குழந்தைப் பிள்ளையளை விட..... நீர் மோசம்....

குமா : என்ன உங்களுக்குள்ளை கதைக்கிறீங்கள்? ஊர்ப்புதினங்கள் என்னமாதிரி எண்டு சொல்லுங்கோவன்.

ஞான: அதையேன் பேசுவான் தம்பி. அங்கை இருக்கிற கிழடு கட்டையள் குஞ்சு குருமனுக்கெல்லாம் தாங்கள் இப்ப

www.padippakam.com



தங்கடை சுதந்திர நாட்டில வாழுறதா.... ஒரு வித்தியாசமான உணர்ச்சி.... சந்திரிகா கணக்குவிட்டாலும் சரி, ஒரு கை பாப்பம் எண்டெல்லோ சனங்கள் வாழுதுகள்.

மூர் : குமார்.... பஞ்சம் வந்தாலும் பயப்பிடமாட்டமெண்டு.... தோட்டம் துரவு ஒருபக்கம்.... புதுப்புது தொழிலுகளுக்கு ஆயுத்தம்.... ஆராச்சி எண்டு இன்னொரு பக்கம்.... ஊரைப் பாக்கப் பாக்க ஆசையா இருக்கு.

ஞான: தம்பி, பத்தாயிரம் ரூபாயை கையில கொண்டுபோனாலும், தட்டிப் பறிக்கவோ, சண்டித்தனம் செய்யவோ ஆக்களில்லைத் தம்பி. அந்தமாதிரி சட்டம், ஒழுங்கு, கட்டுப்பாடு....

குமா : அப்ப.... ஒரு அரசாங்கம் நடக்குதெண்டு சொல்லுங்கோ....

மூர் : சரியாச் சொன்னீர் தம்பி....

குமா : எங்கடை வீட்டுக்காரர் எப்பிடி இருக்கினம்....

ஞான: அவை அந்தமாதிரி இருக்கினம் குமார். நீர் எப்ப வருவீரெண்டு எதிர்பாத்துக் கொண்டிருக்கினம்.

குமா : அடுத்த மாதம் ஏழாந் திகதி போறதுக்கெண்டு 'சீற் புக்" பண்ணிப்போட்டனக்கா.

ஞான: குமார்! நீர் வந்தால் உமக்கும் தங்கச்சிக்கும் கலியாணம் செய்யவேணுமெண்டு ஐயா கதைச்சார்.

(இன்னும் ஏதோ சொல்ல முயல....)

மூர் : குமார்! அதைப்பற்றித்தான் நாங்கள் இப்ப முக்கிமாக் கதைக்க வந்தனாங்கள்.

ஞான: இஞ்ச... (கணவனை பேச விடாமற் தடுக்க முயற்சிக்க)

படிப்பகம்

www.padippakam.com



டூர் : அது பிரச்சினையில்லை ஞானம்! தம்பி! இவவின்ரை தமக்கேன்ரை மகளுக்கு, உம்மை மாப்பிளையா எடுத்துப் போடவேணுமெண்டு இவவுக்கு சரியான விருப்பம். நீர்... ஒண்டுக்கும் யோசியாதையும். உமக்கு பொம்பிளையை இங்க கூப்பிட்டுத் தாறது எங்கட பொறுப்பு.

ஞான: விசர்க்கதை கதைக்காமல் சும்மா இரும் பாப்பம் நீர். வெளிநாட்டு மாப்பிளையள் இப்ப தங்கடை சிலவிலதானே பொம்பிளையளைக் கூப்பிடுகினம்.

குமா : அக்கா... தங்கச்சிமாற்றை கலியாணம் முடியாமல் நான் கலியாணம் செய்யமாட்டன்.

டூர் : குமார்... நீர் ஒண்டுக்கும் யோசியாதையும்.... பெட்டையின்ரை தமையன்...

ஞான: இஞ்ச... (கணவனின் பேச்சை நிறுத்த மீண்டும் முயற்சிக்க)

டூர் : பொறும் ஞானம் இரும். குமார்... பெட்டையின்ரை தமையன் கனடா வில இருக்கிறான். நல்ல சீதணம் வாங்கலாம்.

குமா : சீதணமோ.... அண்ணை! சீதணம் வாங்கிக் கலியாணஞ் செய்ய எனக்கு விருப்பமில்லை.

ஞான: அதுதானே...! குமாருக்கு சீதணம் வேண்டுறது பிடிக்காதெண்டு தெரியாதே....

டூர் : சீதணம் எண்டில்லாட்டிலும் பொம்பிளைப் பகுதி மாப்பிளைக்கு அன்பளிப்பா கொஞ்சம் எண்டாலும் குடுக்கத்தானே வேணும்.

(குமார் ரீ போட்டுக்கொண்டு வருகிறான்.)

www.padippakam.com



ஞான: குமார் முற்போக்கா யோசிச்சு சீதனம் வாங்கிறதில்லையெண்ட முடிவோடை இருக்கேக்கை நாங்களேனப்பா அதைக் குழப்புவான்? (ஞானம் மூர்த்தி அருகில் சென்று....) நீர் வீட்டை வாரும். உம்மோடை கதைக்கிறன்....

மூர் : நல்ல ஞாயம். நல்ல பொடியனை நீர் மடக்கப்பாக்கிறீர்.... என்ன.... அவனுக்கு ரண்டு தங்கச்சி இருக்குதெல்லே?

குமா : என்னண்ணை....

மூர் : சீச்சி... ஒண்டுமில்லை....

ஞான: நாங்கள் விடுதலையடையப் போற ஒரு நாட்டிலுள்ள மக்கள் எண்டுறதை இந்தாள் மறந்துபோட்டுது...

குமா : அண்ணை... நாங்கள் எங்கடை நிலத்தை மீட்டு எல்லை போடுறது மட்டுமில்லை.... விடுதலை.... சாதி... சீதனம் எண்டு மற்றவனுக்குச் சொல்லேலாத எங்களிட்டை இருக்கிற வெக்கக்கேடான பிரச்சினையளுக்கும் தீர்வு காணவேணும். அதுகளுக்கும் ஒரு முடிவு கட்டினாத்தான் நாங்கள் எங்கடை மண்ணை அடைஞ்சாப்பிறகும் எங்களுக்கெண்டு தொடர்ந்தும் பாதுகாக்கலாம்.

மூர் : குமார்.... நீர் ஒருத்தர் சீதனம் வாங்காமல் இருந்தாப்போல இந்தப் பிரச்சினை தீர்ந்திடுமோ? சொல்லும் பாப்பம்.

குமா : அண்ணை.... நான் ஒருத்தனெண்டு சொல்லேல்லை.... எங்கடை விடுதலை உண்மையான விடுதலையா இருக்கோணுமெண்டால்.... நாட்டுக்காக உயிரைக் குடுத்த போராளியளின்ரை தியாகம் நிலைக்க வேணுமெண்டால்.... இதுகளைப்பற்றி எல்லாரும் யோசிக்கவேணும்.... ஒவ்வொருத்தரும் தான்தான் தப்ப நினைச்சா.... ஒண்டும் நடக்காதண்ணை.... அண்ணை,

www.padippakam.com



வேணுமெண்டாப் பாருங்கோ.... கலியாணத்தைச் சந்தையா நினைக்கிற எங்கடை ஆக்களின்ரை போக்குக்கு நாட்டில கெதியா ஒரு மாற்றம் வரும்....

(வாசல் கதவு மணி ஒலிக்க, குமார் சென்று கதவைத் திறக்கிறான்.)

ஞான: தம்பி.... ஏதோ ,மூட், குழம்பி நிக்கிறீர்போல கிடக்கு.... நான் இன்னொரு நாளைக்கு வந்து ஆறுதலாக் கதைக்கிறன். (மூர்த்தியைப் பார்த்து) நீர் வாரும்.... போவம்....

(ஞானமும் மூர்த்தியும் புறப்பட, காந்தன் உள்ளே வருகிறான்...)

காந் : நான் வர நீங்கள் போறியள்....

ஞான: காந்தனிலிருந்து வீசும் மது நெடியால் முகம் சுழித்து அவர்கள் இருவரும் வெளியேற - அவசரமா ஒரு அலுவல் தம்பி.... போகவேணும்....

குமா : என்ன.... சுகமில்லையே.... இதென்னண்ணை உன்ரை கோலம்? என்னோடை இங்க இருக்கச் சொல்லக் கேளாமல் அங்கபோய் பொடியங்களோடை இருக்கிறாய். அவங்கடை பழக்க வழக்கம் சரியில்லை.

காந் : நாங்கள் சரியா இருந்தாச் சரிதானே....

குமா : ஓ.... இப்ப நீ.... சரியாத்தானே இருக்கிறாய்....

காந் : அப்ப.... நீ அண்ணை.... நான் தம்பி... அப்பிடித்தானே?

குமா : ஏதன் சொன்னாக் கோவம் வந்திடும். சரி.... நான் சொல்லேல்லை.... வீட்டில இருந்து கடிதம் வந்ததே?

காந் : எனக்கேன் கடிதம் வருகுது. (குமாருக்கு குத்திக் காட்டும் தோரணையில்) காசனுப்புற ஆக்களுக்குத்தானே கடிதம் வரும்?

www.padippakam.com



குமா : (தனக்குள்) ம்.... உந்த நளினத்துக்குமட்டும் குறைவில்லை.

காந் : என்ன....

குமா : (மழுப்பலாக) ஒண்டுமில்லை...

காந் : ஆ.... ரெண்டு கிழமைக்கு முதல் நான் வீட்டிற்கு கடிதம் எழுதிப் போட்டிருக்கிறன்....

குமா : ஆ.... அதுதான் இப்ப 'வெதர்" இப்பிடி மாறி இருக்குது. Weather

காந் : குமார்... உந்தச் சேட்டைக் கதையள் என்னோடை வைக்காதை. நான் என்ன எழுதின்னான் எண்டு கேட்டியோ? இல்லை ஆனா நான் சொல்லுவன். ஊரிலயே உதவாதவன் எண்டு பேரெடுத்திட்டன். இனி எனக்கு கலியாணம்.... வாழ்க்கை எண்டெல்லாம் ஒண்டுமில்லை.

குமா : ஏன் இல்லை? நீ உன்னை மாத்தினா எல்லாம் வடிவா நடக்குந்தானே அண்ணை?

காந் : எனக்கொண்டும் வடிவா நடக்கத் தேவையில்லை.... நான் சொல்லுறதைக் கேள் தம்பி.... நீ இங்க வந்த காலத்தில உன்னோட வந்தவங்களெல்லாம் பிள்ளை குட்டியோடை குடும்பமா... சந்தோசமா இருக்கிறாங்கள்....

குமா : அதுக்கு....

காந் : உனக்கு கலியாணம் பேசச் சொல்லி வீட்டை எழுதிப்போட்டிட்டன்.

குமா : அச்சா! நல்ல வடிவா இருக்கும். அண்ணை கூத்தாடிக்கொண்டு திரிய.... தம்பி கலியாணஞ் செய்திட்டானெண்டு சனம் என்னைப் பகிடிபண்ணவோ? எனக்கிப்ப கலியாணம் வேண்டாம். நீ முதல்.... மற்றவை மதிக்கிறமாதிரி நட. எனக்கு அது போதும். அண்ணை.... நான் இப்ப ஊருக்கு வெளிக்கிட்டது அம்மாவைப் பாக்கிறதுக்காகத்தான். கலியாணத்துக்காக இல்லை....

www.padippakam.com



காந் : நீ முதல் ஊருக்குப் போட்டு வாவன்.

குமா : நான் கொஞ்சநேரம் நித்திரை கொள்ளவேணும். பின்னேரம் வேலைக்குப் போகவேணும்.

காந் : அப்ப.... என்னைப் போகச் சொல்லுறாய்....

குமா : இப்ப நான் அப்பிடியே சொன்னனான்....

காந் : சரி.... சரி.... நான் போறன்.... நீ நித்திரையைக் கொள்.... தம்பி ஐம்பது மாக் தாவன்ரா....

குமா: என்னிட்டைக் காசில்லை. போன கிழமைதான் வீட்டை காசனுப்பினனான்.

காந் : எடேய் மாதக் கடைசியடா. இனி முதலாந் திகதிதான்ரா காசு வரும்.

குமா : என்னிட்டைக் காசு இல்லையண்ணை.

காந் : உன்னிட்டைக் காசில்லையெண்டால் Sparkasse (ஒரு வங்கியின் பெயர்)யில காசில்லை எண்ட கதைதான். சரி... ஒரு இருவது மாக்கெண்டாலும் தாவன்.

குமா : என்னண்ணை நீ.... (இருபது மார்க் கொடுக்கிறான்) அண்ணை.... உந்த Jacket ஐக் கழற்றி எறி... உனக்கொரு Jacket எடுத்தனான். போட்டுக்கொண்டு போ....

காந் : இதுக்குத்தான் சொல்லுறது.... தம்பி உடையான் படைக்கஞ்சானெண்டு.... (Jacket ஐ அணிந்து கொண்டு)

"அண்ணன் தம்பி உறவுமுறை வளர்ந்ததினாலே அலைமோதுது பார் உள்ளமிரண்டும் பாசத்தினாலே...." பாடிக் கொண்டு போகின்றான்.

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 3



**களம்**

*சின்னத்துரை வீடு.*

**பாத்திரங்கள்**

*கிளி, உமா, ரேவதி, சின்னத்துரை, கலியாணத் தரகர் சரவணமுத்து.*

*கிளி காய்கறிகள் நறுக்கிக் கொண்டிருக்க மகள் உமா வந்தபடி...*

**உமா** : அம்மா, சின்னண்ணைக்கு பாக்கிற பொம்பிளை நல்ல வடிவா, சிவப்பா இருக்கோணும். நல்ல குணமாவும் இருக்கோணும்.... ஓ...

**கிளி** : சும்மா அலட்டாமல் இரடி. நானென்னவோ யோசிச்சுக் கொண்டிருக்கிறன். அவளென் னெண்டால் சிவப்புக் கறுப்பெண்டு நிக்கிறாள்.

**உமா** : இனியென்னம்மா திருப்பித் திருப்பி யோசிக்கிறீங்கள்? பெரியண்ணையே எழுதிப்போட்டார். ஐயாவுக்கும் சம்மதம். சின்னக்காவும் அப்பிடித்தான் செய்யவேணும் எண்டு சொல்லுறா.... பிறகென்ன...?

**கிளி** : நீங்களெல்லாரும் ஓமெண்டு சொன்னாச் சரியே? சின்னண்ணை இதுக்குச் சம்மதிக்கவெல்லோ வேணும்.... எல்லாருக்கும் என்ரை மூத்தபிள்ளை கேவலமாப் போட்டுது. குரல் தள தளக்கிறது)

(அப்போது ரேவதி வந்தபடி....)

www.padippakam.com



*ரேவ* : *இப்ப ஆரம்மா பெரியண்ணையைக் கேவலப்படுத்தினது? அவர் நல்லா இருக்கோனும் எண்டுதானே சின்னண்ணை கூப்பிட்டது. அவர் அதை யோசிக்கேல்லையே....*

*கிளி* : *அவன்ரை தலைவிதியைக் கடவுள் இப்பிடி எழுதிப்போட்டான்.... ம்... இப்ப கொக்காவும் கொத்தானும் என்ன கொழுவல் எடுப்பினமோ தெரியாது.*

*உமா* : *என்னத்துக்கம்மா இப்பிடிச் சொல்லுறீங்கள்?*

*கிளி* : *கொத்தானுக்கு தங்கடை ஆக்களுக்கை சின்னண்ணையை எடுத்துப் போடவேணுமெண்டு கனநாளாத் திட்டம்....*

*ரேவ* : *அவற்றை திட்டம் நடக்க நான் கடைசிவரைக்கும் விடமாட்டன்....*

*(அப்போது சின்னத்துரை வந்தபடி.....)*

*சின்* : *ஆற்றை திட்டம்..? என்ன திட்டம் போடுறியள் தாயும் பிள்ளையளும் கூடியிருந்து.... ஆ... என்ன திட்டம் போடுறியள்....? எல்லோரும் அமைதியாக ஆளையாள் எல்லோரும் அமைதியாக ஆளையாள் பார்க்க, சின்னத்துரை சட்டையைக் கழற்றி - சுவரில் மாட்டிவிட்டு எல்லோரையும் பார்கள் ரேவதியும் உமாவும் உள்ளே செல்கின்றனர். என்னப்பா.... என்னவோ கதைச்சுக் கொண்டிருந்தியள்.... என்னைக் கண்டிட்டு நிப்பாட்டிப் போட்டிளே?*

*கிளி* : *இல்லையப்பா.... அவளவை தமையன் வரப்போறாள் எண்டு ஆளுக்கொரு கதை கதைக்கிறாளவை.... நீங்களெங்கயப்பா இவளவு நேரமும் போட்டுவாறியள்?*

*சின்* : *வாசிகசாலைக்குப் போனனான். சரவணமுத்து வருமெண்டு பாத்துக் கொண்டிருந்தன். காணேல்லை.*

www.padippakam.com



கிளி : சரவணமுத்தரிட்டை இப்ப என்ன அவசரமான அலுவல் உங்களுக்கு?

சின் : ஆ.... என்னவோ.... எனக்கு ரெண்டாந்தாரமா ஒரு கலியாணம் பேசச் சொல்லப் போனனான்....

கிளி : இஞ்ச, குமர்ப்பிள்ளையளை வச்சுக்கொண்டு கதைக்கிற கதையை....

சின் : பின்னையென்ன.... சின்னவன் வரப்போறான்.... பிறக்கிராசிக்கும் வயது போதாதே....

கிளி : பொடியன் வாறதுக்கு முதலே நீங்கள் படைவெட்டிக்கொண்டு நிக்கிறியள். கொஞ்சம் பொறுங்கோவன். அவன் வாறதுக்குள்ளை இஞ்ச என்னென்ன நடக்குமோ?

சின் : இனி ஒரு பிரச்சினையும் வராதப்பா.... போர் நிறுத்தம் ஒழுங்கா நடக்குது. சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் மூண்டு தரம் வந்திட்டுப் போட்டாங்கள்.

கிளி : எனக்கு எண்டால் ஸ்ரீமான்ரை மோளிலை நம்பிக்கையில்லை. ஒருநாளைக்கு ஒரு கதை கதைக்கிறாளாம். இந்தத் தட்டுப்பாடான சாமான் சக்கட்டுகளை இங்கால விடுகிறதுக்கு ஒரு வழி செய்யாமல் இழுத்தடிச்சுக் கொண்டிருக்கிறாள்.... பிறகென்னப்பா....

சின் : நீ வீட்டுக்கை இருந்துகொண்டு இவளவு விஷயமும் அறிஞ்சுபோட்டாய்....

கிளி : பின்னை.... பொடியளின்ரை றேடியோ ஒவ்வொருநாளும் உலக நடப்பைச் சொல்லிக் கொண்டுதானே இருக்குது. அது கிடக்கட்டும்.... பெரியவன் இருக்க சின்னவனுக்கு பொம்பிளை பாத்தால் ஊர் உலகம் ஒண்டும்

www.padippakam.com



சொல்லாதே?

**சின்** : கிளி.... எனக்கு விசர் ஏத்தாதை.... இந்த வீட்டில ஆருக்கு.... என்ன.... எப்ப செய்ய வேணுமெண்டு எனக்குத் தெரியும். இதுதானே இப்ப மூண்டுபேரும் இருந்து மகாநாடு நடத்தினனியள்... அதை மீறி ஆரும் கதைச்சியளெண்டால் முறிச்சு வேலீக்கை போட்டிடுவன்.

(அங்கே அமைதி நிலவ, சின்னத்துரை தொடர்கிறார்....)

**கிளி** : பெரியவனுக்கு இப்ப ஒருத்தரிட்டையும் போய் பொம்பிளை கேக்க ஏலாது... ஐஞ்சு சதம் சீதனமும் வாங்கேலாது. சின்னவனுக்கெண்டால் ஆரன் துணிஞ்சு பொம்பிளை தருவாங்கள்.... நல்ல சீதனமும் வாங்கிப்போடுவன்.... அதை வச்சு ரெண்டு பெட்டையளின்ரை அலுவலையும் முடிச்சிடலாமப்பா.

**கிளி** : சின்னவன் சீதனம் வாங்க ஒத்துக்கொள்ள மாட்டானப்பா....

**சின்** : அப்ப.... அவர் கலியாணமில்லாமல் இருக்க வேண்டியது தான்....

**கிளி** : இதென்ன கதையப்பா? அவன் படிக்கிற காலந்தொட்டே சீதனம் வாங்கிறவன் முதுகெலும்பில்லாதவன்.... மற்றவையள் விலைக்கு வாங்கிறதுக்கு ஆம்பிளை என்ன அடிமையோ எண்டு ஞாயம் கதைக்கிறவன்.... அவன் அறிஞ்சால் பெரிய கரச்சலில வந்து முடியுமப்பா.

**சின்** : ஆ.... அப்பிடியோ?....

**கிளி** : இவள் ரேவதி என்னெண்டால் ஆம்பிளை வீட்டிலை பெரியாளில்லை....

**சின்** : என்ன....

**கிளி** : ஆம்பிளைக்கு அடங்கி நடக்க பொம்பிளை அடிமையோ

எ-10

www.padippakam.com



எண்டு புதுசு புதுசாக் கதைக்கிறாள்....

**சின்** : கிளியக்கா.... எல்லாரும் கலியாணத்துக்கு முதல் அப்பிடித்தான் ஊருக்கு உபதேசம்செய்து கதைப்பினம். தங்கடை அலுவல் வரேக்கை உபதேசம் எல்லாத்தையும் உறியில ஏத்தி மூடி வச்சிடுவினம். சீதணம் வேண்டாதையெண்டு மேடையில வசனம் பேசுவாங்கள். தங்கடை பிள்ளையளுக்கு பெண்சாதி-மாரிட்டைச் சொல்லி சீதணத்தைத்தான் கறப்பாங்கள். காதலை வாழ்த்தி பேப்பர் வழிய எழுதுவாங்கள். தங்கடை பிள்ளையள் காதலிச்சால் ஈரச் சாக்கால கோழியை அமத்துறமாதிரி மூடிமறைப்பாங்கள். நான் அப்பிடியில்லை.... என்ரை குடும்ப நிலைமை எனக்குத்தான் தெரியும்.... என்ன செய்ய வேணும் எமண்டதும் எனக்குத்தான் தெரியும்.

**கிளி** : நான் என்னத்துக்குச் சொல்லு....

**சின்** : (இடைமறித்து...) சின்னத்துரையன் முடிவெடுத்தால்.... ஒரு முடிவுதான். அதை வேற ஒருத்தராலயும் மாத்த ஏலாது.... சொல்லிப்போட்டன்.

**கிளி** : வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கெட்டு கொட்டைப் பாக்கெண்டுறது கதைக்கிறது இந்த வீட்டில வழக்கமாப் போச்சு.

(அப்போது சரவணமுத்து வருகிறார்.)

**சர** : 'மூனா'... 'மூனா'... என்ன? என்னைத் தே... தேடினீராம்... என்ன சங்கதி....

**சின்** : ஆ.... உன்ரை வடிவுக்கு உன்னை மூண்டாந் தாரமா கலியாணஞ்செய்ய ஒரு பொம்பிளை இருக்காம் நாலைஞ்சு பிள்ளையளோடை.... அதுதான்

www.padippakam.com



தேடினனான்... பேய்க் கேள்வி கேட்டுக்கொண்டு நில்லாமல் செருப்பை வெளியில கழற்றிப்போட்டு உள்ளுக்கை வா...

சர : இதென்ன புதுச் சட்டமாக் கிடக்கு.... ப... ப... பழைய வீட்டில இருக்கேக்கை உப்பிடிக் கதைக்கமாட்டீர். மேல்வீடு கட்டினவுடன கதையெல்லாம் மா... மா... மாறிப்போச்சு....

சின் : சரவணமுத்து... முந்தித்தான் நாங்கள் அடிமையா வாழ்ந்தம். ஆனால் இப்ப ஒரு அரசாங்கம் நடத்திறம்.... அப்ப.... எங்களிட்டை அதுக்கேத்தமாதிரி சட்டதிட்டம் ஒழுங்கெல்லாம் இருக்கும்... இருக்கவேணும்.... என்ன...?

சர : ம்.... அதுவும் சரிதான்... சரி... அவசரமா என்னை வரச்சொன்னீராம்.... எ... எ... என்ன விஷயம்?

சின் : எல்லாம் உனக்கு வருமானமாய்த்தான். பொடியளின்ரை பெட்டையளின்ரை குறிப்பைத் தா எண்டு நெடுக கலைச்சாய். இப்ப ரெண்டையும் தரப்போறன்...

சர : (சந்தோசமாக...) என்ன..?

சின் : என்ரை இளையமகளுக்கு மாப்பிளை பாக்கவேணும்.... சின்னவனுக்கு பொம்பிளை பாக்கவேணும்....

சர : என்ன சின்னவனுக்கெண்டுறீர்..? அப்ப மூத்தவன்.... ஓகோ.... அப்ப மூத்தவன் அங்கினைக்க ஆரோ ஜேர்மன் காரியைப் புடிச்சிட்டான்போல இருக்கு.... ஆ....

சின் : சீ... சீ.... அப்பிடியொண்டுமில்லை.... சரவணமுத்து.... மூத்தவன் எனக்கு கொள்ளி வைப்பான்.... குடும்பத்துக்கு பொறுப்பா இருப்பான் எண்டு நம்பினன்.... ஏமாந்து போனன்.... அங்க போயும் அவன் திருந்தேல்லை.... நட்டாமுட்டித்தனம் செய்து கொண்டிருக்கிறான்.

www.padippakam.com



அவனுக்கே.... அவனால பிரயோசனமில்லாமல் போட்டுது.

சர : 'மூ'னா.... நீர் ஓ... ஓ... ஓமெண்டு சொல்லும். எங்கயன் பார்த்து அவனுக்கும் ஒரு பெ... பெ... பெட்டையை முற்றாக்கிவிடுகிறன். என்ன.... கொஞ்சம் பொய்தான் சொல்ல வேண்டி இருக்கும்....

சின் : கடவுளே.... அப்பிடி ஒரு பழி வேண்டாம்.... சரவணமுத்து.... அவன் தனக்கு கலியாணம் வேண்டாம்.... தம்பியார் வாறான்.... அவனுக்கு கலியாணத்தைச் செய்தனுப்புங்கோ எண்டு எழுதி இருக்கிறான்....

சர : பிறகென்ன.... அவன் பிழையான ஆளெண்டு நினைச்சன்.... உ.... உ.... உப்பிடி யோசிச்சிருக்கிறானே.... சரி... சொல்லும்.... ம... ம... மகளுக்கு உள் ஊர் மாப்பிளை வேணுமோ? இல்லையெண்டால் வெளிநாட்டு மாப்பிளை வேணுமோ?

சின் : எதெண்டாலும் சரி.... ஆனால் சீதணம் வாங்கி கலியாணம் செய்துபோட்டு என்ரை பிள்ளையள் வெளிநாட்டில இருக்குதெண்டதுக்காக.... திரும்பத் திரும்ப.... சீதணம் கேக்காத மாப்பிளையாய் இருக்கோணும்.

சர : மூத்த மருமகனால கனக்க அனுபவப்பட்டிட்டீர்போல இருக்கு. சரி... மாப்பிளை ஜேர்மனி... பொம்பிளையை அனுப்புற சிலவை ஆர் பொறுக்கிறது? நீரோ... அல்லது பொம்பிளை பகுதியோ....?

சின் : சரவணமுத்து... விசர்க்கேள்வி கேக்காதை.... என்ரை பொடியன்போய் ஒன்பது வருஷம் முடியப்போகுது. அவனுக்கு ஜேமனில 'உங்கவீறிஸ்' விசா இருக்கு.... ஓ...

www.padippakam.com



சர : அந்த நாச்த்தை சரியாச் சொல்லுமன்.... உங்கவீறிஸ் இல்லை.... Unbefristed.... அது சரி... அங்க உள்ள சிலபேருக்கே அதைச் சரியாச் சொல்லத் தெரியாதாம்.... புறகென்ன?

சின் : அவன்.... 'ஸ்பொன்சர்' பண்ணி பொம்பிளையைக் கூப்பிடுவான். ஆனால் கலியாணம் இங்கதான்...

சர : சரி.... மகளுக்கு என்னமாதிரி சீதனம் குடுக்கப் போறீர்?

சின் : அது மகனுக்கு வாற சீதனத்தைப் பொறுத்தது....

சர : நீர்.... என்னைவிடப் பொல்லாத ஆளா இருக்கிறீர்....

சின் : சரவணமுத்து.... உங்களைமாதிரி ஆக்கள் நெடுக கரடி விட்டால்... சின்னத்துரையள் முதுகைச் சொறிஞ்சு கொண்டே இருப்பான்.... நாங்களும் எங்களுக்குத் தெரிஞ்ச வித்தையைக் காட்டவேண்டியதுதானே?

சர : சரி.... சொல்லும்.... மகனுக்கு என்ன எதிர்பாக்கிறீர்?

சின் : என்ரை மகன் ஜேமன் மாப்பிளை.... இருபதாயிரம் மாக் காசு தரவேணும்....

சர : மூண்டு தர ஆறு.... பதினெட்டு... மூண்டு தர ஏழு... இருபத்தொண்டு... கிட்டத்தட்ட ஆறு ஏழு லெட்சம் ரூபாயெல்லே வருகுது.

சின் : நீயேன் ரூபாயில பாக்கிறாய்.... மாக்கில பாரன்.... மற்றது.... நகையள் எப்பிடியோ போடுவினந்தானே?

சர : அதை நீர் கேக்கத் தேவையில்லை. வெளிநாட்டுக்குப் போற சில பெட்டையள் தாய் தேப்பனை முழுசா மொட்டை அடிச்சுப்போட்டுத்தான் போகுதுகள்.

சின் : மற்றது.... காணி.... வீடெண்டு ஏதும் குடுப்பினந்தானே?

கிளி : (வந்தபடி) என்னப்பா... மாப்பிளை பொம்பிளை எங்க.... ஏது... எண்டு ஒண்டும் கேக்காமல் உங்கட பாட்டுக்கு கதைக்கிறியள்.... எங்கட பொடிய' எங்கடை

www.padippakam.com



பெட்டையளுக்கும் குடுக்கவெல் லே வேணும்...

**சின்** : (மனைவியைக்காட்டி) இதுக்குத்தான்... உன்னைத் தேடி வாசிக சாலைக்குப் போனனான்... இஞ்சியிருந்தால்... இப்பிடித்தான்... நட... கந்தப்புவின்ரை கடைக்குப் போவம்... எல்லா விபரமும் அங்க வச்சுக் சொல்லுறன்..

**கிளி** : என்னப்பா... நானிப்ப என்ன கேட்டிட்டனெண்டு வெளிக்கிடுகிறீங்கள்.

**சின்** : கிளி... குறிப்புகளைக் கொண்டா... வேற கதை கதைக்காதை.. இண்டைக்கு கலியாணம் பேசி முற்றுக்கிறன். நாளைக்கு கொழும்புக்கு வெளிக்கிடுகிறன். பொடியளிற்றைக் கதைச்சு... சின்னத்துரையன்... சம்மதம் வாங்கிக் கொண்டு வாறானே இல்லையோ... பார்...

**கிளி** : வீட்டின் உள்ளே செல்ல...

**ரேவதியின்**
**குரல்** : குறிப்புகளை கொண்டு போய்க் குடுங்கோ அம்மா... கொழும்புக்குப் குடுங்கோ அம்மா... கொழும்புக்கு போய் சின்னண்ணேற்றை கிழி வாங்கிக் கொண்டு வரட்டும் .

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 4



**களம்**

குமார் வீடு.

**பாத்திரங்கள்**

குமார், காந்தன், மூர்த்தி.

குமார் யன்னல் துடைக்கும் பொருட்களோடு யன்னலைத் துடைப்பதற்காக ஆயத்தமாகும்போது மூர்த்தி மேடைக்குள் நுழைந்தபடி...

மூர் : குமார்.... இந்தாரும் தம்பி....

குமா : என்னண்ணை.... இவளவு நேரத் தோட....

மூர் : அதையேன் கேப்பான்.... இண்டைக்கு லீவு நாளெண்டாப்போல அக்கா இட்டலி அவிச்சவ.... உமக்குக் கொண்டுபோய் குடுத்திட்டு வரச் சொன்னா.... அதுதான் கொண்டு வந்தனான்... நான் நீர் நித்திரையாக் கிடப்பீரெண்டெல்லோ நினைச்சுக் கொண்டு வந்தனான்.

குமா : காலமை கொழும்பில இருந்து ரெலிபோன் வந்துது.... அப்பிடியே எழும்பீற்றன்....

மூர் : கொழும்பில ஏதும் பிரச்சினையாமே?

குமா : கொஞ்சம் பதட்டமாத்தான் இருக்குதாம்....

மூர் : பேச்சுவார்த்தை முறிஞ்சபடியால் அப்பிடி இருக்குந்தானே தம்பி....

www.padippakam.com



குமா : அண்ணை... நேற்றைக்கு பொடியள் ஒரு பிளேனை விழுத்திப்போட்டாங்களாம்....

மூர் : சீ.... உண்மையாவே...

குமா : என்னண்ணை? இது பகிடிக்குச் சொல்லுற கதையே? ஏவுகணையால அடிக்கிறாங்களெண்டு B.B.C.யில சொல்லுறான்....

மூர் : ம்.... ஜே. ஆருக்குக்கு நிலத்தில அடி. பிரேமதாசாவுக்குக் கடலுக்கை அடி.... சந்திரிகா எல்லாரையும்விட திறமா நடிச்சபடியா அவவுக்கு ஆகாயத்தில அடி.... நடக்கட்டும், நடக்கட்டும்.... வேண்டட்டும், வேண்டட்டும். அதுசரி... ஆற்றை ரெலிபோன் தம்பி?

குமா : அப்பர் வந்திருக்கிறாரண்ணை....

மூர் : ச்ச்சா.... ச்ச்சா... அப்ப... பிரச்சினைக்கை மாட்டுப்படவெல்லோ போறார்...

குமா : அவற்றை கதையைப் பாத்தா, இதெல்லாம் சிம்பிளான விஷியம் எண்டமாதிரியெல்லோ இருக்கு....

மூர் : ஓம் தம்பி.... நாங்கள் பயப்பிடுகிறமாதிரி இப்ப அங்க சனம் இல்லை. எங்களுக்குத்தான் நினைக்கப் பயமா இருக்கு.... அதுசரி... அப்ப ஐயாவிட்டை ஞானம் கதைச்ச விஷியத்தைச் சொன்னீரோ?

குமா : என்னத்தை சொல்லுறது.... அவர் எனக்கு நல்ல விலை பேசிப்போட்டு எனக்குச் சொல்லத்தானே கொழும்புக்கு வந்திருக்கிறார்.

மூர் : என்ன தம்பி.... சொல்லுறீர்?

குமா : எனக்கு கலியாணம் முற்றாக்கிப்போட்டாராம்.... பொம்பிளையைக் கூப்பிடட்டாம்....

மூர் : (தனக்குள் மெதுவாக) அப்ப இட்டலி தந்தவ ஏமாந்து போனா.... போச்சு.....

www.padippakam.com



குமா : என்னண்ணை..?

மூர் : ஒண்டுமில்லை தம்பி.... ஞானமக்கா சம்பலுக்கை மிளகாயைக் கூட வச்சு அரைச்சுப்போட்டா.... வயித்துக்கை என்னமோ செய்யுது.

(அப்போது வாசல் கதவு மணி ஒலிக்கிறது.)

மூர் : ஆரோ வருகினம்போல இருக்கு.... பாருந்தம்பி..... (வயிற்றை கோபமாக) தடவியபடி

(மூர்த்தி உள்ளே போக, காந்தன் மேடைக்கு வந்தபடியே....)

காந் : டேய் குமார்! நீ என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறாய்?

குமா : ஏன்....? என்ன நடந்தது..?

காந் : என்ன நடந்ததோ? ஐயாவிட்டை என்னடா கனக்கக் கதைச்சியாம். நீ என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறாய்...? இங்கயிருந்து நீ காசனுப்பினாப்போல வீட்டுக்கு நீ பெரியாளில்லை.... அதை ஞாபகத்தில வச்சுக்கொள்.

குமா : இப்ப நான் பெரிய ஆளெண்டு சொன்னனானே?

காந் : அப்ப.... என்ன ஐயாவிட்டை சொன்னனி? சீதனம் வாங்கினால் ஐயா பாக்கிற பொம்பிளையைக் கலியாணம் செய்யமாட்டனெண்டு சொன்னனியாம்.

குமா : என்ரை வாழ்க்கையை ஐயா விலைபேசியிருக்கிறார்.... எனக்கது விருப்பமில்லை....

காந் : வீட்டிலை ரெண்டு தங்கச்சிமார் இருக்கிறாளவை. அதை ஞாபகத்திலை வச்சுக்கொள்.

குமா : அதை நீயெல்லோ ஞாபகத்திலை வச்சிருக்கோணும்.... வந்து இவளவு நாளைக்கு நூறு மாக் வீட்டை அனுப்பியிருப்பியே? பிறகு... வந்துட்டாய் கதைக்கிறதுக்கு! நானிப்ப கலியாணம் செய்யப்போறனெண்டு கேட்டனானே? இன்னும் நாலு வருஷம் நான் இப்பிடியே இருந்தனெண்டால் தங்கச்சிமாருக்கு செய்யவேண்டியதை வடிவாச் செய்வன்...

www.padippakam.com



காந்: அப்ப நீ.... நினைச்சதை செய்வாய்.... ஐயாவுக்கு மரியாதை குடுக்க மாட்டாய்....?

குமா : அண்ணை.... நான் அப்பிடிச் சொல்லேல்லை....

காந் : அப்ப... உன்ரை கதைக்கு என்னடா அர்த்தம்? உன்னாலை இப்ப ரேவதியின்ரை.கலியாணம் குழம்பப் போகுது.

குமா : அவசரமா இப்ப அவளுக்கு கலியாணம் செய்யவேணுமெண்டால் ஐயா உன்னை விக்கட்டும். நீ கலியாணத்தைச் செய்யன்.

காந் : என்னடா....

குமா : ஓ.... உனக்கு விருப்பமெண்டால் நீ சீதனத்தை வாங்கிக் குடுத்துப்போட்டு... கலியாணத்தைச் செய்யன்....

(குமார் யன்னலைத் துடைக்கவென யன்னலில் ஏறுகிறான்.)

காந் : டேய்.... நான் கலியாணம் செய்யமாட்டன் எண்டு உனக்கும் சொன்னனான். வீட்டையும் எழுதின்னான். அதாலதானேடா ஐயா இப்பிடி முடிவெடுத்தவர்....

குமா : அப்பிடியில்லை.... உனக்கு ஒருதரும் பொம்பிளை தரமாட்டாங்கள் எண்டு நீயும் முடிவெடுத்திட்டாய்.... ஐயாவும் முடிவு செய்திட்டார்.

காந் : ராஸ்கல்..... எனக்கென்னடா குறை..?

குமா : என்ன குறையோ..? ஊரில குடிச்சுக்கொண்டு திரியிறா எண்டு அம்மா அழுது அழுது எழுத, உன்னை இஞ்ச கூப்பிட்டன். நீ என்னெண்டால் 'அல்டி' (அல்டி என்பது ஒரு கடையின் பெயர்) யைக் குத்தகையெடுத்தவன்மாதிரி இருக்கிறாய்.

காந் : கதைக்கிறதை மரியாதையாக் கதை.....

குமா : மனுஷரோடையெல்லோ மரியாதையாக் கதைக்கிறது.. உனக்கு எப்பிடிச் சொன்னாலும் நீ திருந்தமாட்டாய்....

காந் : என்னடா சொன்னனீ.... நான் மனுஷனில்லையோ....

www.padippakam.com



*(ஆத்திரத்துடன் காந்தன் யன்னல்மீது ஏறிநின்ற குமாரை நெருங்கி அடிக்கக் கை ஓங்க, குமார் தடுமாறி யன்னலுக்கப்பால் வெளியே விழுகிறான். அதிர்ச்சியோடு யன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தவாறு காந்தன்...)*

**காந் :** குமார்... குமார்... என்ரை ஐயோ... எடேய்... நான் வேணுமெண்டு செய்யேல்லையடா... நான் வேணுமெண்டு செய்யேல்லையடா.... என்ரை தம்பி.... குமார்.....

*(உள்ளே இருந்து வந்த மூர்த்தி யன்னலுக்குவெளியே எட்டிப் பார்த்து...)*

**மூர் :** ஐயோ! கடவுளே....

**காந் :** அண்ணை 'அம்புலன்ஸஜீ"க்கு 'போன்"பண்ணுங்கோ....

*(மூர்த்தி வெளியே ஓடுகிறார்.)*

**காந் :** கடவுளே.... என்ரை தம்பியைக் கொண்டுபோடாதை.... என்ரை தம்பியைக் கொண்டுபோடாதை....

**(திரை)**

ο ο ο

www.padippakam.com



# காட்சி 5



***களம்***

*சின்னத்துரை வீடு.*

***பாத்திரங்கள்***

*கிளி, சின்னத்துரை, ரேவதி, உமா*

*சின்னத்துரை யோசனை வசப்பட்டவராக முகத்தை 'உம்'மென்று வைத்திருக்கிறார். கிளி... கணவன் ஏதேனும் பதில் சொல்வாரென எதிர்பார்க்கிறாள்.*

*(சிறிது மௌனத்தின் பின்...)*

***கிளி :*** *பிள்ளையளோடை போய்க் கதைச் சிட்டு வந்தால் மனுஷர் என்ன ஏதெண்டு சொல்ல வேணும்... தானே ராசா... தானே மந்திரியெண்டு எல்லாம் தனக்குள்ளையே வச்சிருக்கிறதெண்டால் நானொருத்தி.... இஞ்ச ஏன் இருக்கோணும்? இல்லைக் கேக்கிறன்... நானொருத்தி இஞ்ச ஏன் இருக்கோணும்.. ? பயணத்தால வந்ததில இருந்து முகத்தை "உம்" மெண்டு வச்சுக் கொண்டிருந்தால் இதுக்கு என்ன அர்த்தம்..?*

***சின் :*** *நீ.... பெத்தபிள்ளையள் என்னைக் கொல்லப் போகுதெண்டு அர்த்தம்....*

***கிளி :*** *ஏனப்பா.... இப்பிடிக் கதைக்கிறீங்கள்.... என்ன சொன்னவங்களெண்டு சொல்லுங்கோவன்..*

www.padippakam.com



**சின் :** *பெரியவன் குழப்படிகாரனெண்டாலும் ரெண்டு சொல்லு ஆறுதலாக் கதைச்சான். ஆனா அந்த ராஸ்கல்... அந்த ராஸ்கல்.... அது என்ரை பிழை.... என்ரை பிழையடி.... இவளையும் அவனையும் கொஞ்சம் படிக்கட்டுமெண்டு விட்டன். அதுதான்ரி நான் செய்த மடத்தனம். கிளி நான் உயிரோடை இருக்கேக்கை என்ரை பிள்ளையள் நல்லா இருக்கோணுமெண்டு நான் நினைச்சது பிழையோ? குறிப்புப் பொருந்தி சீதண பாதனம் முற்றாக்கி, எவளவு சந்தோசமா கொழும்புக்குப் போனனான். வெளிக்கிடேக்கையே இவள் சிவப்புக் கொடி காட்டினாள். தங்கச்சிக்கு நானென்ன குறைவோ எண்டு அவர் ரெலிபோனில பெத்த அப்பனுக்குப் புத்தி சொல்லுறார்.*

**கிளி :** *அவன் அனுபவம் இல்லாத சின்னப் பொடியன் தானேயப்பா. அவன்ரை கதையைச் சும்மா விடுங்கோப்பா.*

**சின் :** *கிளியக்கா... குமாரால ரேவதியின்ரை கலியாணம் குழம்பினால், நான் உயிரோடை இருக்கமாட்டனெண்டு பெரியவனிட்டைச் சொல்லிப்போட்டுத்தான் வந்தனான்.*

**கிளி :** *ஏனப்பா பெரியவனிட்டை உப்பிடிக் கதைச்சனீங்கள்? ஐயோ, அவன் குடிச்சுப்போட்டு குறுமுட்டாள்தனமா தம்பியாரோடை கதைவழிப்பட்டிடப்போறான். கண் காணாத இடத்தில இருக்கிற சகோதரங்களைச் சண்டை பிடிக்கச் சொல்லவே கொழும்புக்குப் போனனீங்கள்?*

**சின் :** *ரெத்தமும் ரெத்தமும் மோதினாத்தான்ரி இந்தப் பிரச்சினைக்கு முடிவு வரும். கிளி.... உனக்கும் சொல்லிப்போட்டன். நான் சொல்லுறமாதிரி என்ரை பிள்ளையள் நடக்கேல்லையோ, என்ரை சவத்தைக்கூடக் கண்ணில காணமாட்டியள்.*

www.padippakam.com



**ரேவ :** ஐயா.... சும்மா அம்மாவை வெருட்டாதீங்கோ. காலத்துக்கேத்தமாதிரி நானும் அண்ணையும் மாற நினைக்கிறம். நீங்கள் உங்கட காலத்திலேயே நிக்கிறியள். வெளிநாட்டில உழைச்சுப்போட்டு இங்க வந்து சீதணம் வாங்கினால், நாளைக்கு அண்ணையை ஆரும் மதிப்பினமோ..? அண்ணைக்கு மரியாதை இருக்குமோ....?

**சின் :** மதிப்புக்கூடும்.... நல்ல சீதணம் வாங்கினானெண்டு மரியாதை வரும்....

**ரேவ :** அது முந்தி.... இப்ப அப்பிடி இல்லை.... அண்ணை வெளிநாட்டில உழைக்கிறபடியா, நீங்கள் காசைக் குடுத்து எனக்கு மாப்பிளை வாங்கிப்போடுவீங்கள். ஆனால் இஞ்ச.... சாப்பிடுறதுக்கே கஷ்டப்படுகிற குடும்பங்களில என்னைவிட வயதுக்கு மூத்த எத்தினையோ பேர் இன்னும் கலியாணம் செய்யாமல் இருக்குதுகள். அதுகளெல்லாம் உங்களைமாதிரி விலையுயர்ந்த வெளிநாட்டு மாப்பிளையளை வாங்கேலுமோ....?

**கிளி :** என்னடி.... விக்கிறது.... வாங்குறதெண்டு கதைக்கிறாய்.... மற்றவைக்கு சீதணத்துக்கு வசதி இல்லாட்டி....

**ரேவ :** எங்க ஷெல் விழும்.... எங்க குண்டு போடுவான் எண்டு விசாரிச்சு.... அங்கபோய் நிண்டு சாகிறதோ?

**கிளி :** எடியேய்.... அப்பிடி ஒரு நிலமை உங்களுக்கு வரக்கூடாதெண்டுதானே....

**ரேவ :** ஐயா கொள்வனவும் விற்கனையும் செய்யப்போறார், என்ன....?

www.padippakam.com



*சின் :* ரேவதி.... கதைக்காதை.... பிறக்கிராசிமாதிரிக் கதைக்காதை.

*ரேவ :* ஐயா.... உங்களை அம்மாவுக்காக அப்பு விலைக்கு வாங்கினார். நீங்கள் இப்ப அண்ணையை விக்க நிக்கிறீங்கள் எனக்காக. எனக்கு இப்பிடி ஒரு கலியாணம் வேண்டாம்.

*சின் :* ரேவதி.... கதைக்காதையடி. கழுத்தை நெரிச்சுப் போடுவன். கிளி... பாத்தியேடி இவளின்ரை கதையை. பிள்ளையளெண்டாய்.... இதுகள் பிசாசுமாதிரி என்னைக் கொல்லப்போகுதுகளெடி.

*கிளி :* அங்க போய் பெரியவனுக்கு உருவேத்திப்போட்டு, இங்க வந்து இவளோடை மல்லுக்கு நிக்கிறியள்.... பெத்த தேப்பனை பிள்ளையள் எதிர்த்துக் கதைக்கிறதையும், பழிக்கிறதையும் நான் பாத்துக் கொண்டிருக்கிறன்... எனக்கேன் இந்த விதி? உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்.... அதுகளை அதுகளின்ரை விருப்பத்துக்கு நடக்கவிடுங்கோ. இல்லையெண்டால் என்னைக் கொல்லுங்கோ.

*சின் :* உன்னை நான் ஏன் கொல்லுவான்? அதுக்கு நீ பெத்த பிள்ளையள் போதும் டி! நான் எங்கயன் துலைஞ்சு போறன். (சின்னத்துரை - ஆத்திரத்துடன் புறப்பட)

*கிளி :* எங்கயப்பா போறியள்..?

*சின் :* ம்.....

(முறைத்துப் பார்த்தவாறு வெளியேறுகிறார் சின்னத்துரை.)

*கிளி :* எடியேய்... மனுசன் இந்தப் பிரச்சினைக்கை தப்பிப் பிழைச்சு வந்திருக்கு. வந்ததிலை இருந்து

www.padippakam.com



தண்ணிவென்னி குடிக்காமல் சாப்பிடாமல் இருக்கிறார். ஐயாவை ஆறுதல்படுத்தி நான் கதைக்க.... அதுக்கிடயிலை நீ வந்து உன்ரை வாயைக்காட்டி இப்ப வெளியாலை கலைச்சுப்போட்டாய். எப்பவும் நிமிந்து நிண்டு கதைக்கிற மனுஷனை பிள்ளையள் தங்களுக்கு முன்னுக்கு குனிஞ்சுநிண்டு கதைக்க வச்சிட்டுது. (அழுகிறாள்)

(அப்போது உமா வந்தவாறு...)

**உமா:** அம்மா... சும்மா இருங்கோ.... ஐயா வாசியசாலையடிக்குப் போட்டுவருவார்.

(சைக்கிள் மணிச் சத்தம் கேட்கிறது.)

**கிளி :** ஆரெண்டு பாரெடி.... நிக்கிறாய் மரம்மாதிரி. பெத்தவைக்குப் பிள்ளையள் ஆறுதலெண்டால், இஞ்ச ஆளுக்காள் ஆக்கினையா இருக்கு....

(ரேவதி வெளியே பார்க்கவென்று போக....)

**உமா:** அம்மா.... நானொண்டும் ஆக்கினை தரேல்லை. தரவும் மாட்டன். என்ரை வழி வேறை. ஆனா நல்ல வழி. நாலுபேர் மதிக்கிற வழி. எங்கடை குடும்பத்தில ஒருத்தரும் போகாத வழி.

**கிளி :** என்னெடி.... என்ன சொல்லுறாய்....?

**உமா:** (நிதானமாக) அவசரப்படாதீங்கோம்மா....

(அப்போது ரேவதி விம்மலை அடக்க முயன்றவாறு வந்தபடி...)

**ரேவ :** அம்மா.... அண்ணை.... அண்ணையிட்ட இருந்து தந்தி...

**கிளி :** என்ன.... அண்ணை வாறானாமே..?

www.padippakam.com



**ரேவ :** ஐயோ.... இல்லையம்மா....

(விக்கி விக்கி அழுகிறாள் ரேவதி.)

**கிளி :** என்னடி..?

**ரேவ :** தந்தி.... சின்னண்ணை... சின்னண்ணை செத்துப்போச் செண்டு தந்தி வந்திருக்கம்மா....

**கிளி :** என்ரை ஐயோ..... என்ரை பிள்ளை.... ஐயோ... என்ரை பிள்ளை.... என்ரை பிள்ளைக்கு என்ன நடந்தது.... ஐயோ.... அண்ணையும் தம்பியும்..... அண்ணையும் தம்பியும்.....

(அதிர்ச்சியால் கிளி நெஞ்சைப் பிடித்துக் கொள்கிறாள் துடிக்கிறாள்)

**ரேவ :** அம்மா..... அம்மா..... அம்மா....

(கிளியின் துடிப்பு மெதுமெதுவாக அடங்குகிறது)

**உமா:** அம்மா.... அம்மா.... அக்கா.... அக்கா..... அக்கா..... அம்மா....

**ரேவ :** அம்மா.... எங்களைத் தனிய விட்டுட்டுப் போட்டீங்களே..... அம்மா.... என்ரை அம்மா.... என்ரை அம்மா....

**உமா:** அம்மா... அம்மா... ஏனம்மா.... ஏனம்மா.... எங்களை விட்டுட்டுப் போனீங்கள்....

(அப்போது சின்னத்துரை வருகிறார்... தாய் நிலத்திற்கிடக்க பிள்ளைகள் தாயருகே இருக்க...)

**சின் :** என்ன.... ஆரைக் கொல்லுறதுக்கு ஆத்தையும் பிள்ளையளும் மாநாடு நடத்துறியள்?

எ-11

படிப்பகம்

www.padippakam.com



***உமா:*** *நாங்கள் கொல்லேல்லை ஐயா..... நீங்கள்தான்!*

***சின் :*** *உமா.... உமா.... என்னாச்சி..?*

***உமா:*** *அம்மாவைக் கொண்டுபோட்டீங்கள்..! (சோகம் அதிர்ச்சி தாளால் தந்தையின் மார்பில் அடித்து அலறுகிறாள்) என்ரை அம்மாவைக் கொண்டுபோட்டீங்கள்..!!*

***சின் :*** *என்னாச்சி... என்னாச்சி... கிளி! கிளி... எழும்பு... எழும்பு... இனி...எழும்படி... எழும்படி எழும்படி. ஐயோ.. எழும்படி நீயில்லாமல் இந்திக்கு ஓசுகளை என்னெண்டி தனிய வச்சுக் காக்கப் போறன்*

**(நிறைவு)**

○ ○ ○

www.padippakam.com



# சுமைகள்

படிப்பகம்

www.padippakam.com

## சுமைகள்

இளவேனில் 1997

| நாடக மாந்தரும் | உயிரூட்டியோரும் |
|---|---|
| நவம் | நவரட்ணராஜா |
| கோமதி | பெனடிக்ரா ஞானசெல்வம் (சிறந்த நடிகைக்கான தங்கப்பதக்கம்.) |
| கீதா | அனுலா மனோஹிமன் |
| கண்மணி | ஜர்மி பாக்கியநாதன் |
| கோகிலன் | மனோஹிமன் |
| சிவசம்பு | இராஜன் முருகவேல் |
| ஷாமினி | மேரி நவரட்ணராஜா, |
| குணம் | தங்கராஜா, நாச்சிமார்கோயிலடி இராஜன் |
| இராசு | யோகநாதன் |
| பாமினி | கிருபாகரி சீவரத்தினம் |
| திரைக்குப் பின்னால் : | பிரான்சிஸ் இராஜகுமாரன்,செல்வறோஜன், பாக்கியநாதன், ஜெயந்தன் |

படிப்பகம்

# காட்சி 1



***களம்***

*ஜெர்மனியில் செல்வச்சிறப்பு*
*வாழ்வோரின் வீடாக தெரிகிறது.*
*நவத்தின் வீடு.*

***பாத்திரங்கள்***

*எழுத்தாளர் நவம், அவரது மனைவி*
*கோமதி, மகள் ஷாலினி.*

*கோமதி வீட்டுவேலை ஒன்றில் ஈடுபட்டிருக்கிறாள். நவம் புத்தகம் ஒன்றை வாசித்தபடி இருந்திருக்கிறார் என்பது புலப்படுகின்றது.*

**நவ** : நல்லா இருக்கு நீர் சொல்லுற கதை. காசிருந்தால் மட்டும் போதுமே? இனியெண்டாலும் கொண்ணருக்கு ஒரு வாழ்க்கை அமையவேணு மெண்டு யோசிக்கிறீரில்லை... ஆ... கோமதி! கொண்ணருக்கு இப்ப எத்தனை வயசு சொல்லும் பார்ப்பம்?

**கோம** : என்ன... முப்பத்தெட்டு.... முப்பத் தெட்டு வயசு ஆம்பிளைக்கு ஒரு பெரிய வயசே?

**நவ** : முப்பத்தியெட்டோ? எத்தனை வருசமாய்..? இப்ப நாலைஞ்சு வருசமாய் உதைத்தானே சொல்லுறீர்... கோமதி! இவ்வளவு நாளும் ஊருக்குப்போய்க் கலியாணம் செய்யப்போறார் எண்டு சொல்லி காலத்தைக்

www.padippakam.com



கடத்தியாச்சு.... இங்கினேக்கை கேட்டுவந்த சம்பந்தங்களையும் நீர் ஒருமாதிரி தட்டிக் கழிச்சு விட்டிட்டீர்...

**கோம :** இங்கினேக்கை வாற சம்பந்தங்களை எப்பிடிச் செய்யிறது சொல்லுங்கோ பாப்பம். பொம்பிளையைக் கூப்பிடுறதுக்கு Zwölf (பன்னிரண்டு) முடிஞ்சுது, Fünfzehn (பதினைஞ்சு) முடிஞ்சுது எண்டு சொல்லுகினம். சீதனமா ஒரு Pennigk; (பெனிக் - ஜேர்மன் நாணயம்) தரமாட்டினமாம். நகைமட்டும் போட்டுக்கொண்டு வந்தால் போதுமே? அப்பிடி ஒரு கலியாணம் செய்யவேணுமே?

**நவ :** அப்பிடிச் செய்தாலென்ன குடியே மூழ்கிப்போகும்? ஐரோப்பாவில உழைச்சு வாழ்ந்துகொண்டு சீதனம் கேட்கிறதே வெட்கக்கேடான விஷயம். கொண்ணற்றை வயசுக்கும் தோற்றத்துக்கும் சீதனம் கேக்கலாமோ எண்டு கொஞ்சநேரம் தனிய இருந்து யோசிச்சுப் பாரும். விளங்கும்.

**கோம :** சும்மா வயசு வயசெண்டு சொல்லிக் கொண்டிருக்கா தேங்கோ. இங்க வயசு ஒரு பிரச்சினையே இல்லை. Sechzig jahre (அறுபது வயது) ஆம்பிளை Dreizig jahre (முப்பது வயது) பொம்பிளையைக் கலியாணம் செய்யிறது Europe இல ganz Normal. (ஐரோப்பாவில சர்வசாதாரணம்.)

**நவ :** அதேமாதிரி ரெண்டு வருசத்தில Divorce (விவாகரத்து) எடுக்கிறதும் இங்க ganz Normal (சர்வசாதாரணம்) தான்...

**கோம :** எல்லா விசயத்தையும் Problem (பிரச்சினை) ஆக்கிப் பார்க்கிறது உங்களுக்குப் பழகிப் போச்சுது.

**நவம் :** கோமதி! நான் இதைப் Problem ஆக்கேல்லை. எல்லாத்துக்கும் Europe, Europe எண்டு கதைக்

படிப்பகம்

www.padippakam.com



கிறனீங்கள்.... Europe இல சீதனம் இல்லை யெண்டதையும் ஒத்துக்கொள்ள வேணுமெண்டுதான் சொல்லுறன்.... உங்கடை பிரச்சினையளை மூடி மறைக்கவும், சமாளிக்கவும் வெளிநாட்டுக் கலாச் சாரத்தை முண்டு குடுக்காதீங்கோ. இப்ப பாரும்... எத்தனை இளம்பொடியள் சீதனம் வாங்காமல் தங்கடை செலவில பொம்பிளையைக் கூப்பிட்டுக் கலியாணம் செய்யிறாங்கள். சந்தோசமா வாழுறாங்கள். உம்மைமாதிரி ஒரு சிலர் வருமானத்துக்காக எங்கடை கலாச்சாரத்தில பாதியையும், ஜேர்மன்காரன் ரையில சிலதையும் சேர்த்துக்கொண்டு குழப்புறீங்கள்.

**கோம :** இங்க வாழுகிற நாங்கள் இங்கத்தே கலாச்சாரத்தை மதிக்கவேணுமப்பா. ஜேர்மன்காரரைப் பாருங்கோ... ஆளுக்காள் நல்ல் Liebeth (அன்பாக) இருக்கினம். அவையவை தங்கடை அலுவலைச் Selbe வாச் (தாங்களாகச்) செய்யினம். Vielleicht (சிலவேளை) ஏதும் பிரச்சினை வந்தாலும் அதைப் பெரிசாக்காமல் விலகிக்கொள்ளுகினம்.

**நவம் :** கோமதி! எரிச்சல் வரப்பண்ணாதையும். தமிழோடை நாலைஞ்சு டொச்சு சொல்லை கலந்து பினைஞ்சு பினைஞ்சு கதைக்கிறதுதான் டொச்சுக் கலாச்சாரமோ. உது நுனிப்புல் மேயிற அரைவேக்காட்டுத்தனமப்பா. உம்மையும் ஏமாத்தி, மற்றவையையும் ஏமாத்தப் பாக்கிறீர்.

**கோம :** (சற்றுக் கோபமாக) இஞ்ச... நான் யாரை ஏமாத்தினனான்? ஒருத்தரையும் நான் ஏமாத்தேல்லை. என்னையும் ஒருத்தரும் ஏமாத்த ஏலாது.

**நவம் :** கோமதி! நீர் மட்டுமில்லை, ஆரெண்டாலும் சரி....

www.padippakam.com



(எழுந்தபடி) ஏமாறமாட்டமெண்டு ஒருநாளும் நினைக்கக் கூடாதப்பா... ஏமாத்திறவன்ரை கெட்டித்தனத்தைப் பொறுத்ததுதான் நாங்கள் ஏமாறுகிறதோ இல்லையோ எண்டது.... இப்ப பாரும் நீர் எங்கடை கலாச்சாரப்படி சீட்டுப் பிடிக்கிறீர்....

**கோம :** என்ன..?

**நவம் :** பின்னை... சீட்டு ஜேர்மன்காரன்ரை கலாச்சாரமே..? எங்கடை கலாச்சாரந்தானே..? ஆராவது ஓராள் சீட்டை எடுத்துப்போட்டு கட்ட ஏலாமல் போட்டுதெண்டு வையும். என்ன சொல்லுவீர்? ஏமாத்திப்போட்டினம் எண்டுதானே சொல்லுவீர்?

**கோம :** ஐயோ.... உங்கடை வாயால உப்பிடிச் சொல்லாதீங்கோ. நீங்கள் சொல்லுறது பலிச்சுதெண்டால் நான் நடுத்தெருவிலதான் நிக்கவேணும்.

**நவம் :** உம்மோடை சேந்து நானுந்தானே நடுத்தெருவில நிப்பன்.... சரி.... உந்தக் கதையை விடும். (கதிரையில் வந்து இருந்தவாறு) இப்ப கொண்ணற்ரை பிரச்சினைக்கு வாரும்.

**கோம :** திருப்பித் திருப்பி என்ன கேக்கிறீங்கள்? அண்ணை இங்க வந்து பத்து வருசத்துக்குமேலே.... சீதனம் வாங்காமல் கலியாணஞ்செய்தால் பாக்கிற சனம் என்ன சொல்லும்? சொல்லுங்கோ பாப்பம்...

**நவம் :** இப்ப நீர் சொல்லுறது எங்கடை வறட்டுக் கலாச்சாரம்... உதைவிடும்.... மற்றவை அப்பிடிக் கதைக்கினம், இப்பிடிக் கதைக்கினமெண்டு மற்றவைக்காக வாழ ஏலாது... கொண்ணருக்கு இப்ப பொறுப்பில்லை.

**கோம :** என்ன..?

படிப்பகம்

www.padippakam.com



**நவம் :** உம்மடை Bruder (சகோதரன்) இற்றை தேவையான Geld (காசு) இருக்கு. அவற்றை Geld அவரிட்டையிருந்து urlaub (சுற்றுலா) போய் அவற்றை Einkom (வருமானம்) கொண்டு வருகுது.

**கோம :** (கணவனின் பேச்சைக் கேட்க இயலாத நிலையில்) ஐயோ.... நீங்கள் என்ன சொல்லுறீங்கள்..?

**நவம் :** உம்மடை பாஷையில கதைச்சனான், பார்த்தரோ..? நீர் கதைக்கிறமாதிரி நான் கதைக்கிறதை உமக்கே தாங்க ஏலாம இருக்கேக்கை, தமிழிலை எழுதுற எனக்கு உப்பிடி நீர் கதைச்சால் எப்பிடித் தாங்கேலும்? எவ்வளவு சுமையாக இருக்கும் சொல்லும் பாப்பம். சரி அதை விடும்... நான் சொல்லுறதைக் கேளும். நேற்றைக்கு ராசுவைக் கண்டனான்.

**கோம :** ஆரது ராசு?

**நவம் :** அவன்தானப்பா நெல்லியடிப் பெடியன். கொண்ணற்றை சினேகிதன். Huchting (குக்ரிங் என்பது ஒரு இடத்தின் பெயர்) இல இருக்கிறான்.

**கோம :** ஓ.... அவனுக்கென்ன.?

**நவம் :** ம்.... (சிரித்தபடி) அவனுக்கொண்டுமில்லை.... கொண்ணை தனக்கொரு கலியாணம் சந்திச்சால் பேசச்சொல்லிக் கேட்டவராம்.

**கோம :** என்ன..? எனக்குத் தெரியாமலோ..?

**நவம் :** சரி வந்தா உமக்குச் சொல்லுவார்தானே? கதையைக் கேளுமன். நாங்கள் இருக்க, எங்களிட்டை ஒரு சொல்லுக் கேக்காமல் தான் கலியாணம் பேசுறது முறையில்லையெண்டு ராசு நினைச்சிட்டான். நான் ஓமெண்டால் தான் பேசுறன் எண்டு சொன்னான்.

www.padippakam.com



**கோம :** *(நையாண்டியாக) நீங்கள் உடன ஓமெண்டு சொல்லியிருப்பியளே?*

**நவம் :** *பிறகு இதில என்ன யோசிக்க இருக்கு?*

**கோம :** *(சினந்துகொண்டு எழும்பியபடி) என்ன யோசிக்க இருக்கோ?*

**நவம் :** *கொண்ணற்றை வயசைத்தான் யோசிச்சன். அவற்றை வயசுக்குப் பொருத்தமா இருந்தா பேசச் சொல்லிச் சொன்னன்.*

**கோம :** *நானொருத்தி இங்க இருக்கிறன் எண்ட நினைப்பில்லாமல் கண்டவனிட்டையெல்லாம் கலியாணம் பேசச் சொல்லுறார் அவர். இவரொருத்தர் ஓமெண்டு சொல்லுறார். இண்டைக்கு அவர் வரட்டும்.*

*(வீட்டு வாசல் மணி அடிக்கிறது. நவம் கதவு திறக்கும் பாவனை...)*

**நவம் :** *கொண்ணை வந்தால் வீண் சண்டை பிடிக்காதையும். நல்லதா வந்தால் செய்யட்டன்.*

**கோம :** *நல்லதோ கூடாதோ, எனக்கு முதல் தெரியவேணும். எனக்குத் தெரியாமல் என்ரை வீட்டுக்கை இருந்துகொண்டு....*

**நவம் :** *இது.... எங்கடை கலாச்சாரமாக்கும்... என்ன?*

**கோம :** *நீங்கள் இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுறீங்கள்?*

**நவம் :** *கோமதி.... முதலிலை உமக்குத் தெரிஞ்சால் இதையும் நீர் தடுத்துப்போடுவீர் எண்டு கொண்ணர் நினைச்சாரோ, என்னவோ.... தெரியாதமாதிரி இரும். அவராச் சொல்லேக்கை கேளும். சரியோ... சரிதானே?*

*(ஷாலினி உள்ளே வருகிறாள்.)*

www.padippakam.com



**ஷாலி :** *அம்மா.... யன்னல் திறந்திருக்கு. கொஞ்சம் மெதுவாக் கதையுங்கோ. நீங்கள் கதைக்கிறதெல்லாம் வெளியில கேக்குது.*

**கோம :** *ம்... வந்திட்டா... இனி நாங்க கதைக்கேலாது. றூயி (அமைதி) சொல்லிக்கொண்டு நிக்கப்போறா.*

**ஷாலி :** *அம்மா... றூயி இல்லை.... Rühe...*

*(நவம் சிரிக்கிறார்.)*

**கோம :** *மகள் ஏதும் எனக்குச் சொன்னவுடன அவருக்கொரு சிரிப்பு...!*

**ஷாலி :** *அப்பா... ரெண்டு Brief (கடிதம்) வந்திருக்கு.*

*(கடிதத்தை ஷாலினி நவத்திடம் கொடுக்க..)*

**நவம் :** *ரெண்டு கடிதமெண்டு சொல்லன் பிள்ளை.*

*(நவம் கடிதத்தை வாங்கிப் பிரிக்கிறார்.)*

**கோம :** *ஷாலினி.... இந்தா உடுப்பு தைச்சுவச்சிருக்கிறன். போய் முகத்தைக் கழுவிப்போட்டு கெதியா உடுப்பை மாத்திக்கொண்டு வாங்கோ. Birthday (பிறந்தநாள்) க்குப் போகவேணும்.*

**ஷாலி :** *ஆற்றை Birthdayக்கம்மா போகப்போறம்?*

**கோம :** *அது uberrasing... (மர்மம் அல்லது சஸ்பென்ஸ்).*

**ஷாலி :** *ஐயோ... uberrasing இல்லையம்மா.... Überasung.*

*(நவம் பலமாகச் சிரிக்க, சாலினியும் சேர்ந்து சிரிக்கிறாள்.)*

**கோம :** *போதும்... (காதைப்பொத்தி) போதும்.... நிப்பாட்டுங்கோ ரெண்டு பேரும். இனிமேல் நான் வீட்டுக்குள்ளை Deutsch (ஜேர்மன் மொழி) கதைக்காம இருக்கிறன். சரியோ..?*

படிப்பகம்

www.padippakam.com



**ஷாலி :** *Ja... Das ist sehr gut. (ஓம்... அது மிகவும் நல்லது.)*

*(நவம் ஷாலினியின் பின்னே சென்று...)*

**நவம் :** *சாலினி... அம்மாவோடை இப்பிடிக் கதைக்கக் கூடாது. சரியே?*

*(ஷாலினி உள்ளே செல்ல, முகத்தில் பொய்க்கோபத்துடன் இருக்கிறாள் கோமதி. இரண்டு கடிதங்களையும் வாசித்துவிட்டு, அரங்கேற்றம் சம்பந்தமான கடிதத்தை மேசையில் வைத்த நவம்...)*

**நவம் :** *என்ன கதையைக் காணேல்லை?*

**கோம :** *நான் கதைக்கேல்லை...*

*(அரங்கேற்றக் கடிதத்தை கோமதி பார்க்கிறாள்.)*

**நவம் :** *அது எனக்கு நல்ல வசதியெல்லோ? அப்ப இனிமேல் நிம்மதியா நிறைய வாசிக்கலாம், கனக்க எழுதலாமெண்டு சொல்லும்.*

**கோம :** *(கோமதி சிரித்துவிட்டு, அரங்கேற்ற அழைப்பிதழைப் பார்த்தபடி) இதாரப்பா பாலகிருஷ்ணன்..?*

**நவம் :** *Swiss (சுவிற்சர்லாந்து) பாலா....*

**கோம :** *அவற்றை மகளுக்கே அரங்கேற்றம்?*

**நவம் :** *ஓ....*

**கோம :** *என்னப்பா... Erster Gast (பிரதம விருந்தினர்) எண்டு உங்கடை பேர் போட்டிருக்கு....*

**நவம் :** *என்ன....*

**கோம :** *சரி... சரி... பிரதம விருந்தினரெண்டு உங்கடை பேர் போட்டிருக்கு...*

**நவம் :** *ஏன்.... எனக்கு அதுக்குத் தகுதியில்லையே?*

www.padippakam.com



**கோம :** நான் அப்பிடிச் சொன்னனானே? இருபது இருபத்தைஞ்சு வருசமா எழுதுறீங்கள். உங்கட எழுத்தால Bank (வங்கிக்கு) காசு வராவிட்டாலும், இந்தத் தகுதியாவது வந்து எங்களுக்கு ஒரு Swiss urlaub (சுவிற்சர்லாந்து சுற்றுலா) கிடைச்சிருக்கு.

**நவம் :** என்ன.... Swiss urlaub?

**கோம :** பின்னை... நீங்கள் பிரதம விருந்தினரெண்டால் அவையின்ர சிலவில நாங்களும் ஒருக்கா Swiss பாத்திட்டு வரலாந்தானே..?

**நவம் :** என்ரை குடும்பத்துக்கும் சிலவு தரவேணுமெண்டு நான் கேட்கமாட்டன். அது அநாகரீகமப்பா.

**கோம :** இதிலை என்னப்பா நாகரீகம் அநாகரீகம் இருக்குது?

**நவம் :** சமூகக் குறைபாடுகளை இனம்கண்டு, ஏற்றதாழ்வுகளைச் சுட்டிக்காட்டி, எங்கடை மண்ணின்ரை விடுதலைக்குத் தடையா சமுதாயத்தின்ரை முதுகிலை ஏத்தி வைச்சிருக்கிற சுமையள் இறக்கப்படவேணும் எண்டிற ஆதங்கத்தில எழுதுற என்ரை பேனைக்கும், எழுத்துக்கும் கிடைச்சிருக்கிற மரியாதையை நான் சுயநலத்துக்கு இரையாக்கமாட்டன்.

**கோம :** சரி... உங்களுக்கு விருப்பமில்லை எண்டால் விடுங்கோ. இன்னொருமுறைக்கு நாங்கள் எங்கடை சிலவிலை போவம்.

**நவம் :** ஷாலினி.... வெளிக்கிட்டிட்டியே பிள்ளை?

**ஷாலி :** (உள்ளேயிருந்தவாறு) வாறன்... தலையிழுக்கிறன்....

**கோம :** மெய்யேப்பா.... ஆற்றையோ அரங்கேற்றத்துக்குப் போறீங்கள். ஷாலினியின்ரை அரங்கேற்றத்தைப்பற்றி ஒண்டும் யோசிக்காமல் இருக்கிறீங்கள்.

www.padippakam.com



**நவம் :** என்ன? சாலினிக்கு அரங்கேற்றமோ..?

(ஏளனமாகச் சிரிக்கிறார்.)

**ஷாலி :** அப்பா (தலைசீவியவாறு வந்தபடி) ஓமப்பா.... நானும் ரெண்டு வருஷம் Tanz (நடனம்) பழகீற்றன்தானே? எனக்கு எப்ப அப்பா அரங்கேற்றம்?

**நவம் :** இப்போதைக்கில்லை. ஆகக் குறைஞ்சது இன்னும் நாலு வருசமெண்டாலும் போகவேணும்.

**ஷாலி :** என்னப்பா....

(சிணுங்குதல்...)

**கோம :** ஊரிலதானப்பா ஆறேழு வருசம் பழகுறது. இஞ்ச அப்பிடியில்லை. ரெண்டு மூண்டு வருசம் பழகின பிள்ளையளுக்கெல்லாம் அரங்கேற்றம் செய்யினம் தானே?

**நவம் :** ஆரன் செய்யினம் எண்டதுக்காக, நாங்கள் அப்பிடிச் செய்யோணுமேப்பா? கோமதி! ஷாலினிக்கு இப்ப பன்ரெண்டு வயசு....

**ஷாலி :** (இடைமறித்து) என்னோடை படிக்கிற தர்சினிக்கும் பன்ரெண்டு வயசு. அவ அரங்கேற்றம் செய்திட்டாதானே?

**கோம :** ஓ... அதுதானே....

**நவம் :** கோமதி... அபிநயம் பிடிக்கிறதைமட்டும் அரங்கேற்றம் எண்டு அம்மாவும் பிள்ளையும் நினைச்சுக் கொண்டிருக்கிறீங்கள். ஷாலினி... இஞ்ச வா பிள்ளை. உனக்கு அடவுகளெல்லாம் தெரியுமோ?

(ஷாலினி தெரியாதென தலையாட்ட...)

**கோம :** என்னப்பா.... அடைவுகளோ?

**நவம் :** ஓ.... அடைவு.... வட்டி.... சீட்டு.... ஏலம்.... கழிவு.....

www.padippakam.com



**கோம :** என்னப்பா....

**நவம் :** பின்ன என்ன.... அடைவு இல்லை... அடவு.... அடவுகள் தெரியாது.... சரி. முத்திரைகள் எத்தினையெண்டு தெரியுமோ? நிருத்தம் எண்டால் என்னெண்டு தெரியுமோ? நவரசத்தில் எத்தினை பாவம் இருக்கு சொல்லு பாப்பம்.

(ஒவ்வொரு கேள்விக்கும் தெரியாது தெரியாது எனச் சொல்லி விம்முகிறாள் ஷாலினி. விம்மல் அழுகையாக வெடிக்கிறது.)

**கோம :** சும்மா ஏன் இப்ப பிள்ளையை அழுவிக்கிறீங்கள்?

**நவம் :** ஷாலினி... அழாதையம்மா.... பிள்ளைக்கு என்னென்ன தெரியவேணும் எண்டதுக்காகத்தான் அப்பா சொன்னனான். ரீச்சர் உனக்கு எப்ப அரங்கேற்றம் செய்யலாமெண்டு சொல்லுறாவோ.... அப்ப செய்வம். சரியோ... சரி என்ன? போய் முகத்தை ஒருக்கா கழுவிப்போட்டு வாடா... ஆ... அப்பாவின்ரை மேசையில் ஒரு (Bag) "வாய்க்" இருக்கு. அதையும் எடுத்துக் கொண்டு வாடா...

(ஷாலினி தகப்பனுக்கு முத்தம் கொடுத்துவிட்டுப் போக...)

**கோம :** மெய்யேப்பா... அப்ப நானொருக்கா ரீச்சரிட்டைக் கேட்டுப் பாக்கட்டே?

**நவம் :** சுவாமி!... கோமதி... ரீச்சருக்கு நாங்கள் கரச்சல் குடுத்துச் செய்யிறது அரங்கேற்றமில்லை. அது வெறும் சடங்குதான். கலியாணவீடு, Birthday, சாமத்தியச் சடங்குமாதிரி அரங்கேற்றத்தையும் வெளிநாட்டில சில ரீச்சர்மாரும் சில சனமும் சடங்காக்கிப்போட்டினம்.

(உள்ளேயிருந்து ஷாலினியின் குரல்....)

**சாலி :** அப்பா.... நீங்கள் வேலைக்குக் கொண்டு போற Bag,.... கொண்டு வாறது?

www.padippakam.com



***கோம :*** இல்லை... அந்த Geschenk Papier,y (பரிசுப்பொருள் சுத்தும் கடதாசி) சுத்தின பார்சல் இருக்குது. அந்த Bagதான்...

***நவம் :*** நீர் சொன்ன சொல்லைக் காப்பாத்தமாட்டீர். நான் சொல்லுறதைக் கேளும். அரங்கேறப்போற பிள்ளைக்கப்பா அறிவுபலம், மனபலம், உடற்பலம் இருக்கவேணும். யோசிச்சுப் பாரும்.... கண்ணனைப் பிரிஞ்சு ராதை காதலுணர்ச்சியால துன்பப்படுகிற டான்சை ரீச்சர் சாலினிக்குச் சொல்லிக் குடுத்தா விளங்குமே? அரங்கேற்றமெண்டிற கனமான விஷியத்தைச் சுமக்க சாலினி தயாராகவேணும். ஒரு உயர்ந்த விஷியத்தை சின்னனாக்கக் கூடாது. விளங்குதே?

***ஷாலி :*** (உள்ளேயிருந்து வந்தபடி) அப்பா... போவமா?

***கோம :*** நட... நட.... இன்னும் கொஞ்சநேரம் நிண்டால் அப்பா என்ரை காதைச் செவிடாக்கிப்போடுவார்... நட...

**(திரை)**

○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 2



***களம்***
*நவம் வீட்டின் ஒரு அறை*

***பாத்திரங்கள்***
*நவம், கோமதி, கோமதியின் அண்ணன் குணம், ஷாலினி, ராசுவின் குரல்.*

*அங்கே நவத்தின் மனைவியின் திருமணமாகாத அண்ணன் குணம் பணத்தை எண்ணிக் காற்சட்டைப் பைக்குள் வைக்கிறான். சிறு குறிப்பேடொன்றில் எழுதிக் கொள்கிறான். ஷாலினி கயிறடித்துக்கொண்டிருக்கிறாள்.*

*குண* : *ஷாலினி.... ஐயோ நிப்பாட்டு.... ஒரு அலுவல் செய்யவிடுறாயில்லை நீ.*

*ஷாலி* : *மாமா.... நான் கேட்டது என்ன மாதிரி?*

*குண* : *பள்ளிக்கூடம் லீவெண்டால் வீட்டில இருக்கேலாது. ஷாலினி சும்மா கரச்சல் தராமல் இருக்கமாட்டியே?*

*ஷாலி* : *மாமா.... நீங்கள் சொன்னமாதிரி நடக்கவேணும்.... ஓ....*

*குண* : *சாலினி.... ஐந்து மார்க், பத்து மார்க் சாமானெண்டால் வாங்கலாம். நீ கேக்கிறது 'கொம்பியூட்டர்" அதுக்கு எவளவு காசு வேணுமெண்டு யோசிச்சுப் பாத்தியே?*

*ஷாலி* : *Ist nicht zuviel... (அது கனக்கவில்லை.) மூவாயிரம் மாக்குக்கு உள்ளதான் வரும்.*



படிப்பகம்

www.padippakam.com



குண : மூவாயிரம் மாக் nicht zuviel... ஓ... சாலினி, காசின்ரை அருமை தெரியாமல் விளையாடாதை.

சாலி : நீங்கள் சொன்னனீங்கள் Geburtstag Geschenk (பிறந்தநாள் அன்பளிப்பு) வாங்கித் தாறனெண்டு. இந்த மாசக் கடைசிக்குள்ளை Computer வாங்கித் தரவேணும். அதுவரைக்கும் நீங்கள் சொல்லுற ஒண்டும் செய்யமாட்டன்.

குண : என்ன வெருட்டுறாய்? கார்த் திறப்பை எடுத்து ஒழிப்பாய். என்னிட்டை Extra (பிறிதொரு) திறப்பிருக்கு. ம்...

சாலி : ஏ..... நீங்கள் வச்சிருக்கிறது காரோ? அது வண்டில். அந்த வண்டில் திறப்பு எனக்கு வேணாம். எனக்குத் தெரியும், உங்களை எப்பிடிப் போகாமல்பண்ணுறதெண்டு.

(தொலைபேசி ஒலிக்கிறது. குணம் போய் எடுக்கிறான்.)

குண : ஹலோ.... ஹலோ.... ஆரது?

குரல் : வணக்கம்! குணமண்ணை.

குண : ம்... ம்.... சொல்லு....

குரல் : வணக்கம் சொல்லுறன். என்ன ம் ம் எண்டுறீங்கள்? வணக்கமண்ணை.

குண : ம்... ம்.. சரி.... அங்கயிருந்து பதிலேதும் வந்ததேடாப்பா?

குரல் : என்னண்ணை, வணக்கம் சொல்லுறன் திருப்பித் திருப்பி.... ம்... ம்... போடுறீங்கள்... வணக்கம் சொல்லுங்கோவன்.

குண : இஞ்ச ராசு.... ரெலிபோன் எடுத்தா வணக்கம் சுணக்கம் எண்டு சொல்லிக்கொண்டு நிக்காமல் விஷயத்தைச் சொல்லன்.

www.padippakam.com



*குரல் : குணமண்ணை.... வணக்கம் சொன்னால் ஏன் கோவிக்கிறீங்கள்?*

*குண : ஊரில உதுகளெல்லாம் சொல்லிக்கொண்டுதானே திரிஞ்சனீங்கள்?*

*குரல் : அண்ணை.... ஊரில வணக்கம் சொல்லாமல் இருந்தனாங்கள்தான். அதுக்குக் கன காரணம்.... அதைச் சொல்லுறதெண்டால் நேரதான் வரவேணும்.*

*குண : ராசு.... விசர் ஏத்தாதை. நான் உன்ரை ரெலிபோன் எப்ப வரும், எப்ப வரும் எண்டு எதிர்பாத்துக் கொண்டிருக்கிறன். நீ என்னெண்டால் ரெலிபோன் எடுத்துச் சேட்டைவிட்டுக்கொண்டு நிக்கிறாய்.*

*குரல் : ஒரேயொருக்கா வணக்கம் சொல்லுங்கோ...*

*குண : இதென்ன அநியாயமாக் கிடக்கு.... ரெலிபோனை எடுத்துவச்சு அறுத்துக்கொண்டு நிக்கிறாய். நீ தண்ணியடிச்சால் நானென்ன சம்பலேடா? ராசு... நீ இப்ப எடுத்த விஷயத்தைச் சொல்லப்போறியோ, இல்லாட்டி நான் ரெலிபோனை வைக்கிறதோ?*

*குரல் : வைக்கிறதெண்டால் வையுங்கோ. Keine problem (பிரச்சினை இல்லை). நல்ல செய்தியொண்டு சொல்லத்தான் எடுத்தனான். ஆனால் வணக்கம் சொன்னால்தான் விஷயத்தைச் சொல்லுவன்.*

*குண : சரி! வணக்கம்.... வணக்கம்.... வணக்கம்..... போதுமே?*

*குரல் : அச்சா.... Wounderba... (அற்புதம்...)*

*குண : சரி... இனியெண்டாலும் சொல்லன்....*

*குரல் : காலமை கொழும்பில இருந்து ரெலிபோன் வந்துது. நீங்களனுப்பின போட்டோ கிடைச்சிட்டுதாம். அவை சம்மதமாம். மற்றது....*

www.padippakam.com



குண : சொல்லன்ராப்பா.... இழுத்து இழுத்துக்கொண்டு நிக்கிறாய்.

குரல் : பொம்பிளையைக் கொழும்புக்கு கூட்டிக்கொண்டு வந்திட்டினம்....

குண : என்ன...? பொம்பிளை கொழும்புக்கும் வந்திட்டுதோ?

குரல் : 'பாஸ்போட்' மற்ற அலுவல்களுக்கு காசனுப்பவேணும்.

குண : அண்டைக்கு ஐநூறு மாக் தந்தனாந்தானே?

குரல் : அண்ணை.... இப்ப ரெலிபோனுக்கு எவளவு முடிஞ்சுது சொல்லுங்கோ பாப்பம். கணக்கெல்லாம் பிறகு பாருங்கோ. நாளைக்கு ஆயிரத்தைநூறு மாக் உடன அனுப்பவேணும். கொழும்பில 'ஹோட்டல்' வழிய நிக்கிறதெல்லாம் பிரச்சினை. விளங்குந்தானே? ஆ.... பொம்பிளையோடை ரெலிபோனில கதைக்கப் போறீங்களே?

குண : கேட்டுக்கொண்டு நிக்கிறாய். நம்பரைத் தாவன்ராப்பா...

குரல் : நல்லாய்த்தான் அவசரப்படுறியள்... சரி எழுதுங்கோ.... ஐஞ்சு... இருபத்திரண்டு... மூண்டு... ஒன்பது... நாலு...

குண : கொஞ்சம் பொறு.... பேனை எடுக்கவேணும்.... ஷாலினி... ஒரு பேனை கொண்டா... ராசு.... கொழும்புக்கு அவ ஆரோடை வந்திருக்கிறா?

(ஷாலினி பேனை எடுத்துக் கொடுக்காமல் விளையாட்டாக நளினம் செய்கிறாள். ரெலிபோன் தொடர்பு துண்டிக்கப்பட.....)

குண : ஹலோ.... ஹலோ.... ஹலோ....

**கோம :** (வந்தபடி) சாலினி... போ உள்ளுக்கு. நீ மாமாவோடை liebeவா (அன்பாக) இருந்து விளையாடினது போதும்.

www.padippakam.com



மாமா உன்னிலும் liebe இல்லை. என்னிலும் liebe இல்லை. அவர் இப்ப எல்லாம் selbeவாச் (தானாக) செய்யத் துவங்கீற்றார். ஆனபடியா, இனிமேல் அவருக்கு எங்களைத் தேவையில்லைத்தானே?

**குண :** தங்கச்சி... பிள்ளையை வச்சுக்கொண்டு என்ன கதைக்கிறதெண்டு தெரியாமக் கதைக்காதை. சாலினி.... Sommer (கோடைகாலம்) முடிஞ்சு பள்ளிக்கூடம் துவங்க மாமா Computer வாங்கித் தருவன்.... என்ன?

**கோம :** நீயொண்டும் என்ரை பிள்ளைக்குக் Computer வாங்கத் தேவையில்லை. நானிருக்கிறன். தகப்பன் இருக்கிறார். வாங்கிக் குடுப்பம். சாலினி.... Kinder Zimmerக்குப் (பிள்ளைகளுக்கான அறை) போ. Haus ausgabe (பாடசாலை வீட்டுவேலை) இருந்தா எடுத்துச் செய்.

**ஷாலி :** அம்மா....

**கோம :** சாலினி.... போ எண்டால் போ....

**ஷாலி :** அம்மா.... மாமாவோடை சண்டை பிடிச்சால், அப்பாவை நித்திரையாலை எழுப்பிவிட்டிடுவன். ஓ....

**கோம :** வாயடிக்காமல் போடி.

**குண :** என்ன தங்கச்சி நீ.... என்னிலை ஏதும் கோவமெண்டால் என்னோடை கதை. பிள்ளையோடை ஏனிப்பிடிச் சினக்கிறாய்?

**கோம :** ஐயோ... (நளினமாக) உன்னோடை கதைக்கிறதுக்கு நானார்? எனக்கென்ன உரிமை இருக்கு?

**குண :** என்ன...?

**கோம :** என்னோடை என்ரை வீட்டுக்கை இருந்துகொண்டு, எனக்குத் தெரியாமல் உனக்குக் கலியாணம் பேசி,

www.padippakam.com



பொம்பிளை கொழும்புவரைக்கும் வந்திருக்கு. பிறகென்ன... நான் ஆரோதானே? அண்ணை, தாய் பிள்ளையெண்டாலும் வாயும் வயிறும் வேற எண்டுதானே நீ காட்டியிருக்கிறாய்? அது வேற ஒண்டுமில்லை. Selbe Soult (என்ரை பிழை) என்ரை Soult...

**குண :** தங்கச்சி.... இதில உன்ரை பிழையென்ன.... என்ரை பிழையென்ன? ஒருத்தரிலும் ஒரு பிழையுமில்லை.

**கோம :** இல்லை. பிழை என்னிலைதான். கலியாணம் செய்யாத பொடியள் தனிய இருக்கிறமாதிரி உன்னையும் தனிய இருக்கவிட்டிருந்தால், என்ரை அருமை உனக்குத் தெரிஞ்சிருக்கும்.

**குண :** இப்பவும் நான் தனியத்தானே இருக்கிறன்...

**கோம :** என்ன..?

**குண :** ஓ... இப்பவும் ஒரு கிழமையா நீ என்னோடை கதைக்கிறாயில்லை. சாப்பாடும் போட்டுத் தாறாயில்லை.

**கோம :** ஆனால்... உனக்குப் பிடிச்சதைத்தானே சமைச்சுவச்சனான். அண்ணைக்கு அது பிடிக்கும், இது பிடிக்கும் எண்டு இவளவு நாளும் உனக்கு விருப்பமானதைத்தான் செய்தனான். உன்ரை உடுப்புகளைக்கூட உன்னைத் தோய்க்கவிடாமல் நான்தான் தோய்ச்சுத் தந்தனான். உனக்கு என்ன குறை வச்சனான்? என்ன குறை வச்சனான்? சொல்லு பாப்பம்...

**குண :** நீ சொல்லுறதெல்லாம் உண்மை. இல்லையெண்டு சொல்லேல்லை. ஆனால் எனக்கெண்டொரு வாழ்க்கை வேணும். நானும் மற்றவையைப்போல வாழவேணும்! இன்னும் எத்தினை நாளைக்கு உனக்குச் சுமையா இருக்கிறது?

www.padippakam.com



**கோம :** நீயெனக்குச் சுமையெண்டு நானெப்ப சொன்னனான்?

**குண :** இந்தா! இப்பதானே சொன்னனீ? வாய்க்கு ருசியாச் சமைச்சுத்தாறன். உடுப்புத் தோய்க்கிறனெண்டு சொன்னா என்ன அர்த்தம்? வேண்டாம். நான் கதைச்சால் கனக்கக் கதைச்சிடுவன். வேண்டாம். பொம்பிளை வடிவாயிருந்தால் சீதனம் போதாதெண்டாய். நல்ல சீதனம் வரேக்கை பொம்பிளை வடிவில்லையெண்டாய். பொம்பிளையும் வடிவாயிருந்து, சீதனமும் பரவாயில் லாமல் வந்துது. சாதகம் பொருத்தமில்லையெண்டாய். சீதனம், சாதகம், பொம்பிளை எல்லாம் சரியா வந்து அமையேக்கை பொம்பிளையின்ரை குடும்பம் சரியில்லையெண்டாய்...

**கோம :** அண்ணை... நான் பொம்பிளை பாக்கிறது றோட்டில குடிச்சு வெறிச்சுக் கிடக்கிறவனுக்கில்லை... என்ரை கூடப்பிறந்த அண்ணைக்கு. வடிவான பொம்பிளை... நல்ல சீதனம்... ஆனால் செவ்வாய்க் குற்றமெண்டால் நான் எப்பிடி ஓமெண்டுவன்? தானுழைச்சு.... என்னையும் மனுசனையும் பிள்ளையையும் இஞ்ச கூப்பிட்டவன் என்ரை அண்ணை. அந்த அண்ணை நல்லா இருக்கவேணும். எல்லாவிதத்திலயும் என்ரை அண்ணைக்கு நல்ல சம்பந்தம் வரவேணுமெண்டு நான் நினைச்சது பிழையோ?

(நவம் முகம் துடைத்தபடி மேடையோரத்திற்கு வருகிறார்.)

**குணா :** தமையன்ரை காசை தங்கச்சி வட்டிக்கு குடுத்து சம்பாரிக்கிறா. அதுக்காகத்தான் தமையனுக்கு வாற சம்பந்தங்களை ஏதேனும் சாட்டுச் சொல்லி தட்டிவிடுகிறா எண்டு சனம் கதைக்குது.

www.padippakam.com



**நவம் :** கோமதி! முதலிலை இந்தக் கதையை நிப்பாட்ட வேணும். இதுக்காகவெண்டாலும் அண்ணையின்ரை கலியாணத்துக்கு நீர் சம்மதிக்கவேணும்.

**கோம :** அப்ப... சனம் கதைக்குதெண்டு அண்ணை சொல்லுறதை நீங்களும் நம்புறீங்களோ?

**நவம் :** கோமதி! சனம் கதைக்குதோ, குணம் நினைக்குதோ எண்டது எனக்கு அவசியமில்லாத விஷியம். ஆனால்.... இப்பிடியொரு கதை வந்திருக்கக் கூடாது. வந்திட்டுது. இனியென்ன செய்யப்போறீர்?

**கோம :** ஆரன் என்னைப்பற்றி இப்பிடிக் கதைக்கவிட்டிட்டிருப்பனே? இந்தக் கதை கதைச்சது ஆரெண்டு அறிஞ்சு....

**நவம் :** கோமதி! எடி எண்டு கலியாணம் செய்து இண்டைக்கு வரைக்கும் நான் உம்மைக் கூப்பிடேல்லை. அண்ணைக்கு முன்னுக்கு என்னை அப்பிடிக் கூப்பிட வைக்கமாட்டீரெண்டு நினைக்கிறன். சரியோ? சரி என்ன... குணம்! இனிமேல் உம்மடை காசு, கணக்கு வழக்கெல்லாம் நீரே பாத்துக் கொள்ளவேணும். கோமதி.... அண்ணையின்ரை குடுக்கல் வாங்கல்களை அவரிட்டை ஒப்படைச்சுப் போடும். உமக்கு, எனக்கு, பிள்ளைக்கு வாழ்க்கைக்கு தேவையானதை நான் உழைக்கிறன். நீர் இனிப் பழி கேட்கவேணாம். ஆ.... நீர் இப்ப பிடிக்கிற இந்தச் சீட்டோடை இனிமேல் இங்க சீட்டெண்டுற கதையே இருக்கக்கூடாது.

**கோம :** என்ன?

**நவம் :** ஓம்.... அப்பிடித்தான்! இவ்வளவு நாளும் நான் சில விஷியங்களில தலையிடேல்லை. ஏன் அபிப்பிராயம் கூடச் சொல்லாமல் இருந்திட்டன். இனிமேல் அப்பிடி நான் இருக்கமாட்டன். என்ன... இந்த எழுத்தாளன்

www.padippakam.com



பெண்ணடிமைத்தனம் செய்யத்துவங்கீற்றான் எண்டு நீர் நினைச்சால், அதை ஏற்றுக் கொள்ளுறதைத் தவிர எனக்கு வேற வழியில்லை. உம்மடை போக்கிலை நீர் போய் பழி சுமக்கிற நிலைமைக்கு வந்திட்டீர் எண்டதாலதான் நான் இப்பிடி ஒரு முடிவெடுத்திருக்கிறன். கோமதி, வாழ்க்கையைச் சுமையாக்கினமெண்டால் சந்தோசம் எங்களுக்குப் பிரியாவிடை வச்சிடும். சரிதானே? குணம்... ராசுவைக் கண்டனீரோ?

குண : ஓ... காலமை அவனிட்டைப் போட்டு வந்தனான்....

நவம் : ஆ.... கோமதி கொஞ்சத் தேத்தண்ணி கொண்டு வாரும். நான் வெளிய போகவேணும்.

(கோமதி உள்ளே போகிறாள்.)

நவம் : பிறகு! ராசு என்னவாம்...?

குண : ராசு தனக்குத் தெரிஞ்ச ஏஜென்சி ஆரோ இருக்கினமாம். முதலிலை பாதிக்காசு குடுக்கவேணுமாம். ஆள் வந்த உடன ரெலிபோன் அடிப்பாங்களாம். மிச்சக் காசைக் குடுத்து ஆளைக் கூட்டிக்கொண்டு வரலாமாம்.

நவம் : இங்கை ஜேர்மனிக்கே கூட்டிக்கொண்டு வருவாங்களாமோ? இல்லையெண்டால் வேற எங்கயன் 'போடர்' இலை வச்சுக்கொண்டு...

குண : (இடைநிறுத்தி) இல்லையில்லை.... ஜேர்மனிக்கே கூட்டிக்கொண்டு வாறாங்களாம்...

நவம் : ஆ.... அப்படியெண்டால் நல்லதெல்லோ?

குண : ஓ.... அதுதான் உங்களிட்டையும் கதைச்சுப்போட்டு சொல்லுறதெண்டு சொன்னனான்.

நவம் : ராசு காசுக்குப் பொறுப்பெண்டால் காசைக் குடுமன்.

www.padippakam.com



**கோம :** (தேனீருடன் வந்தபடி) ம்.... சீதனமும் வாங்காமல் ஏஜென்சியால பொம்பிளையைக் கூப்பிடுகிறதுக்கும் சில-வழிக்கப் போறனெண்டு நிக்கிறாய். சரி... சரி... ஏதோ உன்ரை விருப்பத்துக்கு செய்யுறதெண்டு வெளிக் கிட்டனி, இனி... செய்து முடிவைக் கண்டு கொள்.

**நவம் :** (சற்று கோபத்துடன் அச்சுறுத்தலாக) கோமதி! அது சரி குணம்.. பொம்பிளைக்கு உம்மடை போட்டோவெல்லாம் அனுப்பி, வயசெல்லாம் தெரியப்படுத்தினனீர்தானே?

**குண :** ஓ....

**நவம் :** பிறகென்னப்பா.... நான் யோசிச்சுப் பயந்த ஒரேயொரு விஷியம் அதுதான்.

**குண :** அவையும் போட்டோ அனுப்பியிருக்கினம்.

**நவம் :** ஆ... கோமதி... வாங்கிப் பாரும்.

(கோமதி படம் வாங்கிப் பார்த்து... முகத்தில் ஆச்சரியமும் அதிர்ச்சியும் கலந்து வர...)

**நவம் :** இஞ்ச கொண்டாரும் நானும் ஒருக்காப் பாப்பம். (நவம் படம் பார்த்து) குணம்..... . பொம்பிளைக்கு எத்தினை வயசெண்டு சொன்னனீர்?

**குண :** முப்பத்திரெண்டு...

**நவம் :** போட்டோவில அப்பிடித் தெரியேல்லை. ஒரு இருபத்தாறு, இருபத்தேழுதான் இருக்கும்போல இருக்கு.

**குண :** ஒருவேளை முந்தி எடுத்த படமா இருக்கும்.

**நவ :** நீர் உம்மடை வயசு சொன்னனீர்தானே?

**குண :** ஓ... ஓமோம்....

www.padippakam.com



**நவம் :** உங்கடை அம்மா தங்கச்சியெல்லாம் போய் பொம்பிளையைப் பாத்தவைதானே?

**குண :** அதுக்கு வசதி இல்லாமல் போச்சுதத்தான். இவையள் வவுனியாவில இருந்து கொழும்புக்கு லேசா வந்திட்டினம். அம்மா தங்கச்சியவை வன்னியில இருந்து யாழ்ப்பாணம் போய்ற்றினம்.

**கோம :** ம்.... இஞ்ச நீ எல்லா முடிவும் எடுத்தாப் பிறகு அவை பாத்தென்ன விட்டென்ன?

**நவம் :** கோமதி... இனி வீக்க தூக்கம் பாக்காமல் அண்ணையின்ரை கலியாணத்தை எப்பிடி வடிவாச் செய்யிறதெண்டதைப்பற்றி யோசியும். சரி... நான் இறங்கப் போறன். கடைக்குப் போகவேணுமே?

**கோம :** தமிழ் கடைக்குமொருக்காப் போய் மரக்கறி வந்தா வாங்கிக்கொண்டு வாங்கோ. பொன்னாங்காணி வல்லாரை பாத்து எடுங்கோ. அழுகல் இலையெல்லாம் வச்சு அனுப்புறாங்கள்.

**நவம் :** சரி.... நான் போட்டு வாறன். குணம், நீ ராசுவோடை போய் கதைச்சுப்போடும். என்ன..?

(நவம் வெளியே போகிறார்.)

**குண :** தங்கச்சி! அத்தானிட்டை..... நான் ஒரு விஷியத்தை....

(இரு வாத்தியங்கள் விட்டுவிட்டு ஒலிக்கிறது. குணமும் கோமதியும் சர்ச்சைப்படுகின்றனர். குணத்திடம் தவறுசெய்த உணர்வும், கோமதியிடம் கோபமான உணர்வும் பிரதிபலிக்க வேண்டும். வாத்தியம் ஒலித்து முடிய...)

www.padippakam.com



***குண :*** *ஏதன் பிரச்சினை வந்தால் நீ வெட்டியாடுவாய். நான் உன்ரை காலிலை விழுந்தால் கைவிடமாட்டாய் எண்ட நம்பிக்கையிலதான் தங்கச்சி.... இப்பிடிச் செய்தனான்.*

***கோம :*** *சரி... நடந்தது... நடந்து முடிஞ்சுது. இனியெண்டாலும் ஏதன் செய்யேக்கை என்னிட்டை ஒருக்கா கதைச்சுப்போட்டுச் செய்.*

**(திரை)**

o o o

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 3



***களம்***

*நவம் வீடு.*

***பாத்திரங்கள்***

*ஷாலினி, பாமினி, குணம்,*
*கண்மணி, சிவசம்பு, கோகிலன்,*
*ராசுவின் குரல்.*

*ஷாலினி ரீவி பார்த்துக்கொண்டிருக்கிறாள். அப்போது வாசல் அழைப்புமணி ஒலிக்கிறது. எழுந்துபோய் திறக்க பாமினி உள்ளே வந்தபடி...*

***பாமி*** *: ஷாலினி.... அம்மா இல்லையே....*

***ஷாலி*** *: நிக்கிறா.... வாங்கோ அன்ரி.*

***கோம*** *: (உள்ளேயிருந்து) ஆர் சாலினி 'பெல்" அடிச்சது?*

***பாமி*** *: அது நான் பாமினி....*

***கோம*** *: (வந்தபடி) என்ன இண்டைக்கு நேரத்துக்கு வந்திட்டீர்? சீட்டுக்கு இன்னும் நேரம் கிடக்குதே...*

***பாமி*** *: நான் இண்டைக்கு சீட்டுக்கு வரமாட்டன் கோமதி. சீட்டுக் காசையும்.... அந்தக் காசையும் தந்திட்டுப் போவமெண்டு தான் வந்தனான். இதில ஐநூறு மாக்கும்*

www.padippakam.com



ரண்டு மாத வட்டிக்காசு நானூறு மாக்கும்.... முதல் நாலாயிரம் மாக்குமாய் மொத்தம் நாலாயிரத்தித் தொளாயிரம் இருக்குது. சீட்டுக் காசில கழிவுக் காசு உம்மிட்டை இருக்கட்டும். அடுத்த மாதக் காசில கழிக்கலாம். என்ன...?

**கோம :** அப்ப இரவுக்கொருக்கா 'போன்' பண்ணும் பாமினி. கட்டுக் காசு எவ்வளவு, மிச்சம் என்னிட்டை எவளவு நிக்குதெண்டு சொல்லுறன்.

**பாமி :** சரி.... அப்ப நான் போட்டுவாறன் கோமதி.

**கோம :** இருமன்... தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம்.

**பாமி :** இல்லை.... எனக்கு வேலைக்கு நேரம்போட்டுது. கீழ அவர் காருக்கை இருக்கிறார். நான் வாறன், என்ன...

(பாமினி வெளியே போகத் திரும்ப.... குணம் உள்ளே வந்தபடி...)

**குண :** Park Platz (கார் தரிப்பிடம்) இல்லாமல் நிக்கிறார். உங்களைக் கெதியா வரட்டாம்.

**பாமி :** ஓமோம்... வாறன், என்ன...

(குணம் பாமினியின் பின்னால் சென்று கதவைப் பூட்டி வர)

**கோம :** அண்ணை, பாமினிக்குக் குடுத்த காசு நாலாயிரமும்... வட்டி முந்நூற்றியிருவதும் தந்திட்டுப் போறா. இந்தா... இந்தக் காசோடை நான் குடுத்த காசெல்லாம் வாங்கித் தந்திட்டன். சரியோ?

**குண :** தங்கச்சி.... வட்டி நானூறெல்லே ?

**கோம :** இல்லையில்லை. அவ நகை தந்தவ. அதால நாலுப்படிதான் குடுத்தனான்.

(வாசல் கதவு மணி ஒலிக்கிறது.)

www.padippakam.com



**கோம :** அண்ணை.... ஆரெண்டு பார். சீட்டுக்கு ஆக்கள் வருகினம்போல இருக்குது.

(கண்மணி வருதல்.)

**கண் :** வணக்கம்.... தம்பியண்ணை!

**குண :** ம்... ம்... கதவைச் சாத்திவிடுங்கோ கண்மணி.

**கண் :** பின்னாலை சிவ்சம்பண்ணை வாறார்.

**சிவ :** (உள்ளே வந்தபடி) வணக்கம்.

**குண :** ம்.... ம்... கதவைச் சாத்திவிட்டிட்டு வாங்கோ அண்ணை.

(கோமதி தேநீர் கொண்டு வருகிறார்.)

**கண் :** அக்கா.... சீட்டு நாளிலை, நீங்கள் இந்தக் கதவைத் திறந்தே வச்சுவிடலாமே?

**கோம :** இந்த 'பில்டிங்கை' நாங்களின்னும் வாங்கேல்லை. வாங்கினாப் பிறகு பாப்பம் கண்மணி.

**சிவ :** என்ன தம்பி.... கலியாணம் முற்றாகிப் போச்சாம். அப்ப இனிக் காப்புக் கையால சாப்பிடப்போறியள்?

**குண :** நானென்ன பொடியளின்ரை றூமிலேயே இருக்கிறன்? தங்கச்சியோடதானே இருக்கிறன்...?

**கண் :** அதுதானே....?

**சிவ :** பிள்ளை.... நேரமாகுதுபோல இருக்கு....

**கோம :** நாலு மணியாகுதுதான். ஆனா.... ஒரு அஞ்சு நிமிசம் பாக்கவேணுமெல்லே? மற்றது... ஒராள் சீட்டுக்கு வரநேரமில்லையாம். சீட்டுக் கூறேக்கை ரெலிபோன் எடுக்கச் சொன்னவர்.

www.padippakam.com



**சிவ** : அதென்னெண்டு தங்கச்சி.... சீட்டுக்கு வாறதுக்கு நேரமில்லையெண்டால் அவையெல்லோ ரெலிபோன் எடுக்கவேணும்? நீங்கள் ரெலிபோனெடுத்து சீட்டுக் கேக்கவிடுகிறது அவளவு வடிவில்லை. என்ன... நான் சொல்லுறது சரிதானே?

**கண்** : நீங்கள் சொல்லுறது ஞாயமண்ணை. அக்கா... அவை ரெலிபோன் எடுத்துக் கேக்கிறதெண்டால் கேக்கலாம். நீங்கள் எடுக்கிறது முறையில்லை.

**கோம** : பின்னைச் சரி... சீட்டுக் கட்டுற உங்களுக்கு விருப்பமில்லையெண்டால் நான் ரெலிபோன் எடுக்கேல்லை. ரீ கொண்டு வாறன்.

(கோமதி உள்ளே போகிறாள்...)

**கண்** : அண்ணை.... உங்கடை வீட்டுக்காறரைக் கூப்பிடுகிறதுக்கு ஏதென் அலுவல் பாக்கிறியளோ?

**சிவ** : இல்லைத் தங்கச்சி.

**குண** : என்னண்ணை.... ஆறமாத விசாக்காரரே குடும்பத்தோடை ஆக்களை இறக்குகினம். நீங்கள் Unbefristet (காலவரையற்ற) விசா வச்சுக்கொண்டு கூப்பிடாமல் இருக்கிறியள்.

**கோம** : (உள்ளே இருந்தபடி) அண்ணை.... இஞ்ச ஒருக்கா வந்திட்டுப் போறியே?

(குணம் உள்ளே போகிறான்.)

**கண்** : மெய்யே அண்ணை.... ஏன் இன்னும் வீட்டுக்காறரைக் கூப்பிடாமல் இருக்கிறியள்?

**சிவ** : எனக்கு.... ஒரு நிரந்தரமான வேலை இல்லை. கூப்பிடுகிறதெண்டால் லேசான விஷியமே?

www.padippakam.com



**கண்** : ஏனண்ணை.... கடன உடனப்பட்டுக் கூப்பிட்டுப் போட்டியளெண்டால், பிள்ளையளின்ரை Kinder Geld (பிள்ளைகளுக்கான அரசாங்க உதவித் தொகை).... Sozial (சமூக உதவிப் பணம்) காசுகளிலை ஒரு வருசத்தில கடனை குடுத்துப்போடுவியளே..!

**சிவ** : பிள்ளை... தங்கச்சியின்ரை புருஷன் ஜெயசிக்குறு ஆமியின்ரை ஷெல் அடியில மோசம்போட்டார். இப்ப தங்கச்சியும் பிள்ளையளும் என்ரை மனுசி பிள்ளையளோடை ஒண்டாத்தான் இருக்கினம். நான்தான் எல்லாருக்கும் சிலவுக்குக் காசனுப்பவேணும். இப்ப வீட்டுக்காறரைக் கூப்பிட நினைச்சால்.... நான் கடனாளியாகி, இன்னுமொரு சுமையைக் கூட்டிக்கொள்ளவேண்டி வந்திடும். ஏதோ... இங்க கிடைக்கிறதில மிச்சத்தைப் பிடிச்சு, சீட்டைக் கட்டி ஊருக்கு அனுப்பலாம். அவளவுதான் செய்யக்கூடியதாய் இருக்கு.... போனகிழமை கடிதம் வந்தது. அனுப்புறதுக்கு கையில காசில்லாமல் கிடக்கு.

**கண்** : அப்ப.... இண்டைக்கு சீட்டு எடுக்கப் போறியளே?

**சிவ** : பாப்பம்.... கழிவு என்ன மாதிரியோ தெரியேல்லை.

(குணமும் கோமதியும் உள்ளே வருகிறார்கள்.)

**கோம** : சரி..... நேரமாகுது. கூறுறன், என்ன..?

**கண்** : ஓமோம்....

**கோம** : ஐம்பது....

**கண்** : இரண்டாயிரம். அண்ணை... உங்களுக்கு எத்திணை சீட்டண்ணை?

**சிவ** : நான் ஒரு சீட்டுத்தான் கட்டுறன்....

எ-13

www.padippakam.com



கண் : எனக்கு நாலு சீட்டு....

சிவ : ஆ...

கண் : நாலும் என்ரையில்லை. அண்ணையின்ரை அக்காவின்ரை. மற்றது Out of Cityயில (வெளி நகரம்) தெரிஞ்ச ஒரு Familyயின்ரை.

கோம : ரெண்டாயிரம்.... ரெண்டாயிரம்....

சிவ : தங்கச்சி.... சீட்டைக் கவனிப்பம்.

குண : ரெண்டாயிரத்தைநூறு....

கண் : தம்பியண்ணை.... பொம்பிளையை Sponsor (ஸ்பொன்சர்) பண்ணியே கூப்பிடுறியள்?

குண : எனக்கு இப்ப Arbeitlos (வேலை இல்லை.) Sponsor பண்ண ஏலாது. 'ஏஜென்சி'யைத்தான் ஒழுங்குபண்ணி இருக்கிறன்.

கண் : அப்ப பொம்பிளை கெதியா வந்திடுமெண்டு சொல்லுங்கோ... (கோமதியிடம்) எவளவக்கா..?

கோம : ரண்டாயிரத்தைநூறு.....

சிவ : ரண்டாயிரத்தறுநூறு....

கண் : ரண்டாயிரத்தி எழுநூறு... (குணத்திடம்) அது சரியண்ணை, சீதனம் என்ன மாதிரி?

குண : நான் சீதனம் வேண்டாமென்று சொல்லிப்போட்டன். (கோமதியிடம்) மூவாயிரம்...

கண் : ஆ.... அப்ப நகையள்...? மூவாயிரத்திநூறு...

குண : அது.... அவை விரும்பினதைப் போட்டு அனுப்புவினம். நான் இவளவுதான் எண்டு ஒண்டும் சொல்லேல்லை.

www.padippakam.com



மூவாயிரத்தைநூறு....

**சிவ** : மூவாயிரத்தறுநூறு....

**கண்** : தம்பியண்ணை, சிவசம்பண்ணை சீட்டு எடுக்கப்போறார்போல கிடக்கு...

**குண** : ஆ....

**கண்** : மூவாயிரத்தெழுநூறு....

(வாசல் கதவு மணி அடிக்க, குணம் நாலாயிரம் என்று சொல்லிவிட்டு சென்று கதவு திறக்க, கோகிலன் உள்ளே நுழைந்து ஓடிவந்த களைப்புடன்....)

**கோகி** : தம்பியண்ணை, சீட்டுக் கூறியாச்சே?

**கோம** : நாலாயிரம்...

**குண** : ஏன்..? எடுக்கப்போறியே? கேள், கேள்.

**கோகி** : எவளவாம்..?

**குண** : நாலாயிரம்...

**சிவ** : நாலாயிரத்திநூறு.....

**கோகி** : நாலாயிரத்திருநூறு.... இருநூறு

**குண** : நாலாயிரத்தைநூறு....

**சிவ** : நாலாயிரத்தறுநூற்றம்பது...

**கோம** : நாலாயிரத்தறுநூற்றம்பது.... நாலாயிரத்தறுநூற்றம்பது... முறை சொல்லப்போறன். முதலாம்முறை நாலாயிரத்தறு நூற்றம்பது.... ரண்டாம் முறை நாலாயிரத்தறு நூற்றம்பது... மூண்டாம் முறை நாலாயிரத்தறு நூற்றம்பது...... சிவசம்பண்ணை, சீட்டு உங்களுக்குத் தான். சிவசம்பண்ணை... மிச்சக்காசுகள் இண்டைக்கு

www.padippakam.com



இரவுக்குள்ளை வந்திடும். நீங்கள் நாளைக்குப் பின்னேரம் வந்து காசை எடுங்கோவன்.

**கண்** : சிவசம்பண்ணை... நாலாயிரத்தறுநூற்றைம்பது கழிவு. உங்கடை கட்டுக்காசும் போச்செண்டால், ஐயாயிரமும் தேறாதண்ணை. உங்களுக்கு காசு போதாதெண்டால் சொல்லுங்கோ... ஆரிட்டையாலும் மாறித் தாறன். என்ன... வட்டி நாலுப்படி குடுக்கவேணும்.

(ரெலிபோன் அடிக்கிறது. குணம்போய் ரெலிபோனை எடுக்கிறான்.)

**சிவ** : சீட்டுக் கட்டுறது சுமையைக் குறைக்க... இப்ப இந்தச் சீட்டே எனக்கொரு சுமையாய்ப்போச்சுது. பிறகு வட்டிக்கும் வேண்டவே? வேண்டாம் பிள்ளை. நான் வாறன்...

**கண்** : ஓமண்ணை.... இன்னும் பதினைஞ்சு மாதம் கட்டவெல்லேவேணும்?

(திரை மூடுகிறது. திரைக்குப் பின்னால் குணமும் ராசுவும் தொலைபேசியில் உரையாடுவது ஒலி வடிவில் கேட்கிறது.)

**குண** : ஹலோ...

**இராசுவின் குரல்** : தம்பியண்ணை.... நான் ராசு...

**குணம்** : என்ன...

**குரல்** : அண்ணை, ஆள் இண்டைக்கு வெளிக்கிடுகுது. நாளைக்கு இஞ்ச வந்திடும்.

**குண** : இங்சையெண்டால்.... எங்கையடாப்பா?

**குரல்** : ஆள் பிராங்பேர்ட்டுக்குத்தான் (பிராங்பேர்ட் ஜேர்மனியில் விமானநிலையம் அமைந்துள்ள நகரம்) தலைமாத்தி வருகுது. நான் முன்ஸ்ரருக்குக் (முன்ஸ்ரர் என்பது

www.padippakam.com



ஜேர்மனியின் ஒரு நகரம்) கொண்டுபோய் நாளாண்டைக்குப் பதிஞ்சிடுவன். அதுக்குப் பிறகு வந்து கூட்டிக்கொண்டு போங்கோ. தம்பியண்ணை... எனக்குக் கொண்டுவந்து விடேலாது. குறை நினைச்சுக் கொள்ளாதீங்கோ. நான் நாளைக்கு முன்ஸர்றிலை யிருந்து ரெலிபோன் எடுக்கிறன்... சரியோ.... அண்ணை... மிச்சக்காசைக் குடுத்துத்தான் பொம்பிளையைக் கூட்டிக்கொண்டு போகவேணும்.

குண : ஓமோம்... காசுக்கொண்டும் யோசிக்காதை...

**(திரை)**

○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 4



***களம்***
*நவம் வீடு.*

***பாத்திரங்கள்***
*நவம், கோமதி, ஷாலினி, குணம், குணத்தை திருமணம் செய்யவென தாயகத்திலிருந்து வந்த கீதா.*

*நவம் கீதாவுடன் உள்ளே வருகிறார்.*

***நவம்*** : *வாங்கோ பிள்ளை. வாங்கோ.... கோமதி... வாங்கோவன்.... உங்க என்ன செய்யுறியள்?*

***கோம*** : *(உள்ளிருந்தபடி) வாறன்... வாறன்....*

***ஷாலி*** : *(வந்தபடி) அம்மா.... (கீதாவைக் கண்டு ஏதோ சொல்ல வந்ததை நிறுத்தி நேசமாகப் புன்னகை செய்து) ஹலோ...*

***நவம்*** : *(கீதாவுக்கு ஷாலினியை அறிமுகம் செய்து) இவ என்ரை மகள்...*

***கீதா*** : *உங்கடை பேரென்ன தங்கச்சி?*

***ஷாலி*** : *ஷாலினி...*

***கீதா*** : *ம்.... நல்லபேர்....*

***ஷாலி*** : *Dankeschon... (நன்றி..)*

***கீதா*** : *என்ன...*

***நவ*** : *அவ... நன்றி சொல்லுறா.*

www.padippakam.com



**கீதா :** என்னத்துக்கு?

**நவ :** அவவின்ரை பேரை நல்லபேர் எண்டு சொன்னதுக்குத்தான்.

**கீதா :** (சிரிக்கிறாள்.)

**நவ :** பிள்ளை.... இந்த நாட்டில எல்லாத்தக்கும் நன்றி சொல்லுவினம். இது இந்த நாட்டுக்காரரில உள்ள நல்ல பண்பாடுகளில ஒண்டு.

(உள்ளேயிருந்து மெதுவாகக் கதைப்பதுபோல்)

**கோம :** நீ முன்னுக்குப் போவன். நான் வாறன்.

**குண :** நீ முன்னுக்குப் போ. எனக்குத் தனியப் போக வெட்கமாக இருக்கு.

**நவம் :** கோமதி.... கோமதி....

**கோம :** (வந்தபடி) வாறன்.... வாறன். அடுப்பில கறி... (வந்து நின்று கீதாவைப் புன்னகையுடன் பார்த்து) ஆ.... வாரும் பிள்ளை..!

(கோமதியின் பின்னால் குணம் வந்து நிற்கிறார்.)

**நவ :** பிள்ளை, இவ என்ரை மனுசி. இவர்தான் அவவின்ரை தமையன். கோமதி, கதையும்... நான் ஒருக்கா Bahnhof (புகையிரத நிலையம்) வரைக்கும் போட்டுவாறன்.

**கோம :** ஏனிப்ப வந்ததும் வராததுமாய் ஓடுறீங்கள்? ரீ குடிச்சிட்டுப் போங்கோவன்...

**நவ :** கோமதி... பாலாவின்ரை மகளின்ரை அரங்கேற்றத்துக்குப் போக இன்னும் Ticket Reserve பண்ணேல்லை. இண்டைக்கு இரவுக்கெல்லே நான் வெளிக்கிடவேணும்?

**கோம :** அதுக்கு இப்ப என்ன அவசரம்? பிறகு போகலாந்தானே.?

**நவம் :** இருபத்திநாலு மணித்தியாலத்துக்கு முதலே Ticket Reserve பண்ணவேணும். இப்பவே late... நான் போறதும்

www.padippakam.com



வாறதுமா வந்திடுவன். நீங்கள் பிள்ளையோடை கதைச்சுக்கொண்டிருங்கோ.... பிள்ளை.... உங்கடை கவிதைகளைப்பற்றி பிறகுவந்து கதைப்பம். நான் போட்டு வாறன்....

(நவம் போகிறார்.)

**கோம:** சாலினி... உங்கடை 'றூம்'க்குப் போங்கோ....

(ஷாலினி உள்ளே போகிறாள். குணம் அசடு வழியப் புன்னகைக்க, கீதாவும் பதிலுக்குப் புன்னகைக்கிறாள்.)

**கோம:** உமக்கென்ன பேர் பிள்ளை...

**கீதா :** கீதா....

**கோம:** கீதா... ம்.... (தனக்குள் யோசித்து) ஒரு சங்கிலியும் ரெண்டு காப்பும்தான் கிடக்குது... வெளிநாட்டு மாப்பிளையைக் கலியாணம்செய்ய வந்திருக்கிறா. கழுத்து கையெல்லாம் வலு துப்பரவாக்கிடக்கு. அண்ணை... நகை எத்தினை பவுனெண்டு சொன்னவை?

**குண :** தங்கச்சி... வந்ததும் வராததுமாய் துவங்காதை. கொஞ்சம் பொறன்.

**கோம:** ஆ.... அப்பிடியே? பொம்பிளையைக் கண்டவுடன மாறத் துவங்கீற்றாய். சரி.. சரி... இப்ப பொம்பிளையோடை கதைக்க அவசரப்படுறாய். சரி... சரி... நீ கதை. கீதா... இருந்து கதையும். ரீ கொண்டு வாறன்.

(கோமதி உள்ளே செல்கிறாள்.)

**குண :** ஏன் நிக்கிறீங்கள்..? இருங்கோவன்...

(சிறிது நிசப்தம்.)

**கீதா :** ஓ....

(இருக்கிறாள்.)

**குண :** என்னமாதிரி.... ஜேர்மனி பிடிச்சுதோ....

www.padippakam.com



கீதா : நேற்றைக்குத்தானே வந்தனான்.... இனி.... இங்க இருந்து பாத்தாத்தானே தெரியும்.

குண : ஓமென்ன.... வந்தவுடன தெரியாதுதானே... ஆனா.... கொஞ்சநாள் பழகீற்றால் பிடிக்கும் (உள்ளே திரும்பிப் பார்த்து) உங்களிற்றை ஒரு விஷயம் சொல்லுறன்.... மனதுக்கை வச்சிருங்கோ.

(கீதா என்ன என்பதுபோல பார்க்கிறாள்.)

குண : அதென்னெண்டா.... தங்கச்சி இடைக்கிடை கொஞ்சம் கோவமாக கதைப்பா. ஆனா... நல்லவ. நீங்கள் கொஞ்சம் சமாளிச்சு நடந்து கொண்டால்.... alles O.K. (எல்லாம் சரி.)

கீதா : ஆ.... உங்கடை தம்பியும் கோவக்காறரோ?

குண : தம்பியோ...?

கீதா : (சிறிது வெட்கப்பட்டு) ஓ.... தம்பி எப்ப வருவார்?

குண : என்னைத்தான் தம்பியெண்டு கூப்பிடுகிறவை....

கீதா : நல்ல பகிடியாக் கதைக்கிறீங்கள்.... எங்க உங்கடை அவவைக் காணேல்லை?

குண : அவவோ.... இப்ப நீங்கள் பகிடி விடுகிறியள்....

கீதா : உங்களுக்கு எத்தினை பிள்ளையள்?

குண : நீங்கள் பேய்ப் பகிடிக்காறியா இருக்கிறியள்.

(குணம் வந்து கீதாவுக்குப் பக்கத்தில் உட்கார கீதா எழும்புகிறாள்.)

கீதா : போட்டோவில பாத்த உங்கட தம்பியின்ரை சாயல் உங்களில அப்பிடியே இருக்கு... உங்களமாதிரி அவரும் இப்பிடிப் பகிடி விடுவாரோ?

(கோமதி... சினத்துடன் வந்து... கையில் இரண்டு தேனீர்.)

கோம: கீதா... உதென்ன விசர் அலம்பல் அலம்பிக் கொண்டிருக்கிறீர்? இஞ்ச! எங்களுக்குத் தம்பிமார்

www.padippakam.com



ஒருத்தரும் இல்லை. இது என்ரை அண்ணை. இவர்தான் உம்மைக் கலியாணம் செய்யப்போறார்.

**கீதா :** என்ன.... இவரோ...? அப்ப போட்டோவில இருந்தது..?

(இசை இடிமுழக்கமாக ஒலிக்கிறது.)

(திரைக்குப் பின்னால் ஒலிவடிவில் ஷாலினி, கோமதி, குணம் ஆகியோரது உரையாடல் ஒலிக்கிறது.)

**ஷாலி :** அம்மா, அம்மா! அப்பா சுவிஸில இருந்து வரும் வரைக்கும், நான் உங்களோடை உங்கடை 'பெட்'டில படுக்கிறன், என்ன?

**கோம :** ஏன்? உன்ரை 'பெட்'டிலை நீ போய்படன்!

**கோம :** அன்ரி என்ரை 'பெட்'டில படுத்திட்டா...

**கோம :** அண்ணை, கீதாவை உன்ரை 'ரூம்'க்குக் கூப்பிடன்...

**குண :** ஐயோ, இண்டைக்கு வாங்கின பேச்சுப் போதும்.... விடு. அங்கையே படுக்கட்டும்.

**(திரை)**

www.padippakam.com



# காட்சி 5



***களம்***

*நவம் வீடு.*

***பாத்திரங்கள்***

*கோமதி, கண்மணி, குணம், ஷாலினி, கீதா, நவம்.*

*கோமதி நிலைகொள்ளாமல் யோசனையில் தவித்து, வாசல் அழைப்புமணி ஒலிக்க, கதவைத் திறக்க கண்மணி உள்ளே வருகிறாள்.*

**கோம** : *கண்மணி வாரும்....*

**கண்** : *ஆ... கோமதியக்கா, எப்பிடியக்கா சுகம்? தம்பியண்ணைக்கு பொம்பிளை வந்திட்டுதெண்டு கேள்விப்பட்டன். வந்து பாக்கவும் நேரம் கிடைக்கேல்லை. குறை நினைச்சுக்கொள்ளாதீங்கோ.*

**கோம** : *இப்ப என்ன அவசரம்? பொம்பிளை இங்கதானே இருப்பா.... அது சரி... அண்ணை, உங்கடை வீட்டை வந்த சிலமன்..?*

**கண்** : *இல்லையக்கா. அப்ப குணமண்ணை வீட்டில இல்லையே? ஆ... ஆ... (நளினமாக) அப்ப... பொம்பிளையைக் கூட்டிக்கொண்டு எங்கயன் வெளிக்கிட்டிட்டாரே? ஆ... அது சரியக்கா... எப்ப அக்கா கலியாணம்?*

www.padippakam.com



*கோம* : இப்பதான் பொம்பிளையைக் கொண்டுபோய்ப் பதிஞ்சனாங்கள். இனி... Stadt (நகரம்) மாத்தி... பேப்பரெல்லாம் சரி வந்தாப் பிறகுதான்....

*கண்* : நல்ல கதைதான்... பேப்பருகள் சரி வாறது இண்டைக்கு நாளைக்கு நடக்கிற அலுவலே அக்கா? குணமண்ணை இவளவு நாளும் இருந்தது போதாதே? முதலிலை கலியாணத்தை முடியுங்கோ.... பிறகு எழுதலாந்தானே?

*கோம* : ஓமோம்..... அப்பிடித்தான் யோசிக்கிறன். மெய்யே கண்மணி... முதலிலை மோதிரத்தை மாத்திவிட்டாலென்ன?

*கண்* : ஓ... அப்பிடிச் செய்தாலும் பரவாயில்லைத்தான். ஏனக்கா, கலியாணஞ்செய்ய இப்ப ஏதன் இடைஞ்சலோ?

*கோம* : சீச்சீ.... அப்பிடியொண்டுமில்லை.... கண்மணி... அண்ணை உங்கட வீட்டை வந்தால் அல்லது ரெலிபோன் அடிச்சால் எனக்கொருக்கா ரெலிபோன் எடுக்கச் சொல்லிவிடும், என்ன....

*கண்* : ஏனக்கா... ஏதன் பிரச்சினையோ?

*கோம* : இல்லையில்லை!. கண்மணி.... ரீ வைக்கட்டோ...? அல்லது ஜூஸ்..?

*கண்* : இல்லையக்கா.... நான் இன்னொரு நாளைக்கு வாறன். மாப்பிளை பொம்பிளையைப் பாப்பமெண்டுதான் வந்தன். அவையில்லை.... இன்னொரு நாளைக்கு வாறனே.

*(கண்மணி போகிறாள்.)*

*கோம* : ஆற்றையன் வீட்டு விஷியத்தை எப்பிடியும் மோந்து பிடிக்கவேணுமெண்டு நிக்குதுகள்.

*(திரும்பவும் யோசனையுடன் கோமதி நடக்கிறாள். குணம் சோர்வுடன் வர...)*

www.padippakam.com



கோம : அண்ணை.... எங்க போனனி? உன்னைத் தேடி இப்ப எத்தினை ரெலிபோன் எடுத்திட்டன். எங்கயன் போகேக்கை சொல்லிப்போட்டுப் போகக்கூடாதே?

குண : வீட்டை இருந்தா மண்டை வெடிச்சிடும் போலை இருக்கு. அதுதான் வெளிய போனனான்.

கோம : சரி... சரி.... அண்ணை... கெதியா நட. கடைக்குப் போகவேணும்.

குண : ஏன் தங்கச்சி?

கோம : இண்டைக்குப் பின்னேரம் மோதிரம் மாத்தவேணும்.

குண : என்ன.... இண்டைக்கோ...? அத்தான் இன்னும் வரேல்லை.

கோம : அவர் வாறதுக்கு முந்தி மோதிரம் மாத்திப்போடவேணும். நட... இருவரும் வெளியே போக

(கீதா அழுது கொண்டு வந்து அமருகிறாள். ஷாலினி பாடசாலையால் வருகிறாள்...)

ஷாலி : ஹலோ அன்ரி... (கீதா கண்ணைத் துடைக்க...) என்ன அன்ரி, ஏன் ஒருமாதிரி இருக்கிறீங்கள்?

கீதா : நான் ஏமாந்து போனன்... நான் ஏமாந்து போனன். என்னை ஏமாத்திப் போட்டினம்.

ஷாலி : ஏமாத்திப் போட்டினமா? Wer hat das gemacht...? (ஆர் அப்பிடிச் செய்தது..?) என்ன அன்ரி சொல்லுறீங்கள்..? ஆர் உங்களை ஏமாத்தினது? என்னத்துக்காக ஏமாத்தினவை? அம்மா... அம்மா..!

கீதா : அம்மா வீட்டில இல்லை.... கடைக்குப் போயிற்றா ஷாலினி... இந்தப் போட்டோவில இருக்கிறது ஆரெண்டு உமக்குத் தெரியுமே?

(ஷாலினி போட்டோவைப் பார்த்து..)

www.padippakam.com



*ஷாலி* : ஆரிது? எனக்குத் தெரியேல்லையே..!

*கீதா* : உங்கடை மாமாவாம்..!

*ஷாலி* : இந்தப் போட்டோவில இருக்கிறமாதிரி... மாமாவை நான் ஒருநாளும் காணேல்லையே!

*கீதா* : எப்பவோ எடுத்த படத்தை ஊருக்கு அனுப்பி, வயதையும் குறைச்சுச் சொல்லி, என்னை.... என்னை ஏமாத்திப் போட்டினம்.

*ஷாலி* : அன்ரி... அழாதேங்கோ.... உங்களுக்கு மாமாவை கலியாணம்செய்ய விருப்பமில்லையெண்டால்.... அதைச் சொல்லுங்கோ.

*கீதா* : ஐயோ... சொல்லச் சொல்ல கேட்கமாட்டினமாம். உங்கடை மாமாவின்ரை காசில நான் வந்ததால கட்டாயம் அவரைக் கலியாணம்செய்ய வேணுமெண்டு உங்கடை அம்மா சொல்லுறா.

*ஷாலி* : அன்ரி, அப்பா சுவிஸில இருந்து இண்டைக்கு வந்திடுவார். அவரிட்டைச் சொல்லுங்கோ. இப்பிடி ஏமாத்தினது அப்பாவுக்குத் தெரிஞ்சா.... அப்பா கோபப்படுவார்.

(எதிர்பாராதவிதமாக உள்ளே நுழைந்த கோமதி.... மகள் ஷாலினியின் கன்னத்தில் அடிக்கிறாள்.)

*கோம* : போடி உள்ளுக்கு. பெரியாக்களின்ரை விஷியங்களிலை நீ கதைக்க வந்திட்டியோ..?

*ஷாலி* : மாமா இந்த அன்ரியை ஏமாத்திப்போட்டார்!. நீங்க அடிக்கிறீங்க!.... அப்பா வரட்டும் இண்டைக்கு.... நான் அப்பாவிட்டை எல்லாம் சொல்லுவன்!.

(அழுது கொண்டு உள்ளே போகிறாள் ஷாலினி.)

www.padippakam.com



**கோம :** என்ன!.... நீ என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறாய்? இப்ப ரெண்டு நாளா இவளவு சொல்லியும் நீ கேட்காமல், இப்ப என்ரை பிள்ளையிட்டைச் சொல்லி எங்கடை குடும்பத்துக்கை சண்டை வரச் செய்யப்போறியோ? இனி நீ தலையால கிடங்கு வெட்டினாலும் ஒண்டும் நடக்காது. உன்னை Camp (அகதிகள் முகாம்)இல பதிஞ்சாச்சு, அண்ணையின்ரை Girlfriend (சிநேகிதி) எண்டு. இனி என்ன செய்வாய்?

**கீதா :** என்ன... Girlfriend எண்டு பதிஞ்சதோ?

**கோம :** ஓ.... டொல்மேச்சரிட்டைச் (மொழிபெயர்ப்பாளரிடம்) சொல்லி உனக்கு எழுதின Statement (வாக்குமூலம்)இல அப்பிடித்தான் எழுதிக் குடுத்திருக்கு.

**கீதா :** ஓ... அப்ப... திருப்பியும் ஒரு ஏமாத்து செய்து இருக்கிறியள்....

**கோம :** இதில என்ன ஏமாத்திருக்கு? இதுதான் இங்க வந்தவுடன செய்ய வேண்டிய வேலை. இப்பிடிச் செய்தாத்தான் நீ இங்க இருக்கலாம்.

**கீதா :** இல்லை. நான் இங்க இருக்கமாட்டன். இப்பிடி ஏமாத்து, பொய், மோசடி செய்யிற ஆக்களோடை நான் வாழமாட்டன்.

**குண :** வாழமாட்டியோ... எறும்பு சேத்தமாதிரி நான் சேர்த்த காசை ஏஜென்சிக்காரனிட்டை அள்ளிக் குடுத்து உன்னை இறக்கியிருக்கிறன். நீ வாழமாட்டியோ? வாழாமல் என்ன செய்யப்போறாய்?

**கீதா :** நான் போகப்போறன்.... இங்கயிருந்து போகப்போறன்.

**குண :** எங்க போகப்போறாய்? ஊருக்கோ..? திரும்பியோ..? வாழ எண்டு போனன், ஏமாத்திப்போட்டாங்கள் எண்டு சொல்லி, இயக்கத்துக்குப்போய் போராளியளாகப் போறியளாக்கும்... ஆ....

www.padippakam.com



**கீதா** : கதையை நிப்பாட்டுங்கோ... போராளியாப் போறவை விரக்தியால போகினம் எண்டு கொச்சைப் படுத்தாதீங்கோ. அது புனிதமான விஷியம். அதுக்குப் பயந்துதான் நீங்களும்.... ஏன் நானும் இங்க வந்திருக்கிறம். எந்த நிமிசத்திலும் உயிர் போகலாம் எண்டதை நல்லா உணர்ந்து சாவை எதிர்நோக்கி இருக்கிற புனிதத்தை வாயாலை உச்சரிக்கக்கூட உங்களுக்கு தகுதியில்லை. சீ....

**கோம** : கீதா... கனக்கக் கதைக்காதை. அவர் உனக்குத் தாலி கட்டப்போறவர். இப்ப உன்ரை வாயால கொட்டுற வார்த்தையை பிறகு அள்ளேலாது. சொல்லிப்போட்டன், ஓ...

**குண** : தங்கச்சி.... கதைச்சுக்கொண்டு நிக்காமல் கெதியா வாவன். கடை பூட்டிப்போடுவாங்களெல்லே?

**கோம** : (சுத்தமாக) ஷாலினி... இந்தச் சாமானளைக் கொண்டுபோய் வை. நான் கடைக்குப் போட்டுவாறன்.

(ஷாலினி உள்ளே வர, கோமதியும் குணமும் வெளியே போகிறார்கள்.)

**ஷாலி** : அன்ரி, நீங்க அழாதேங்கோ. அப்பா வந்தால் அம்மாவும் மாமாவும் ஒண்டும் கதைக்கமாட்டினம். கவலைப்படாதேங்கோ.

**கீதா** : எப்பிடி நான் கவலைப்படாமல் இருக்கிறது? உங்கடை அப்பாவும் வந்து மாமாவுக்காக, அம்மாவுக்காக அவையின்ரை பக்கம் சேர்ந்து கதைச்சா...?

**ஷாலி** : Nein... (இல்லை..) அப்பா அப்பிடியில்லை... அப்பா நல்லவர்.

(ஷாலினி கூறுவதைக் கேட்டபடி உள்ளே வருகிறார் நவம்.)

**நவம்** : என்ன பிள்ளை.... நான் கூடாத ஆளெண்டு ஆரன் சொன்னவையே?

www.padippakam.com



ஷாலி : (மகிழ்ச்சியுடன்) Oh... இந்தா.... அப்பா வந்திட்டார்....

நவம் : என்ன விஷியம் பிள்ளை? ஏதோ என்னை எதிர்பார்த்துக்கொண்டு நிண்டமாதிரிக் கதைக்கிறாய்...

ஷாலி : அன்ரி... அந்தப் போட்டோ எங்க..?

நவம் : என்ன போட்டோ பிள்ளை....

(ஷாலினி கீதாவிடமிருந்து போட்டோவை நவத்திடம் கொடுக்கிறாள்.)

ஷாலி : இந்தப் போட்டோவை அன்ரிக்கு அனுப்பி, மாமா தன்ரை வயதையும் குறைச்சுச் சொல்லித்தான் அன்ரியை இங்க கூப்பிட்டிருக்கிறார். இப்ப இந்த அன்ரி தன்னை ஏமாத்திப்போட்டினம் எண்டு கவலைப்படுகிறா. அம்மாவும் மாமாவும் அன்ரியோடை சண்டை பிடிச்சுப்போட்டு இப்பதான் கடைக்குப் போகினம்.

நவம் : இந்தப் போட்டோ எடுத்துக் கனகாலமல்லோ? பிள்ளை.... இதைவிட வேறை ஒரு போட்டோவும் அனுப்பேல்லையே?

கீதா : இல்லை...

நவம் : மாப்பிளைக்கு எத்தினை வயசெண்டு உங்களுக்கு சொன்னவை....

கீதா : இருபத்தொம்பது வயதெண்டு....

நவம் : ம்!... உங்களுக்கும் பொய் சொல்லி எனக்கும் பொய் சொல்லியாச்சு. ம்....

கீதா : என்ன....

நவம் : ஷாலினி.... நான் அன்ரியோடை கதைக்கிறன்.... நீ போய் ஏதன் அலுவல் இருந்தா பாரம்மா... போ...

(ஷாலினி போக...)

நவம் : பிள்ளை.... உங்களுக்கு இப்ப அவரைப் பிடிக்கேல்லை. அப்பிடித்தானே..?

எ-14

www.padippakam.com



**கீதா :** எல்லாரையும்போல நானும் சந்தோசமா வாழ ஆசைப்பட்டுத்தான் வந்தனான். ஆனா... ஆரம்பமே பொய், ஏமாத்து, மோசடி.... இதை எப்பிடி ஏற்று வாழலாம்? சொல்லுங்கோ பாப்பம். இப்பிடி ஏமாத்தினவரோடை இனி எப்பிடி நான் மனமொத்து வாழுறது?

**நவம் :** வயதில பொய்!. போட்டோவில ஏமாத்து!. ம்... ஒருவகையான மோசடிதான்! பிள்ளை. வீணாய் யோசிச்சு மனதைக் குழப்பாதை. பயணத்தாலை வந்தனான் களைப்பாயிருக்கு. குளிச்சிட்டு வாறன். அவையும் வரட்டும் கதைப்பம். நீங்க கவலைப்படாதேங்கோ... சரியோ..?

(கீதா யோசிக்க, நவம் உள்ளே செல்கிறார். கோமதி மேடைக்கு வருகிறாள். கீதா நாடியில் கை வைத்தபடி இருக்கிறாள்.)

**கோம :** என்ன... இருந்த இடத்தைவிட்டு இன்னும் அசையாமலிருக்கிறாய். என்ன கப்பலே கவிண்டு போச்சுதெண்டே நாடியில கைவச்சுக் கொண்டு இருக்கிறாய்? எழும்பு. போய் குளிச்சுபோட்டு வீட்டு அலுவல்களைப் பார்.

(கோமதி உள்ளே போக முற்பட...)

**குண :** வந்தபடி தங்கச்சி.... வாசலில கார் நிக்குது. அத்தான் வந்திட்டார்போல இருக்கு....

**கோம :** ஆ... சரி, சரி... அவரோடை நான் கதைக்கிறன். நீ வாயைக் கீயைக் குடுத்திடாதை.

(அப்போது நவம் மேடைக்கு வருகிறார்.)

**நவம் :** ஏற்கெனவே அவர் வாயைத் தந்திட்டார். நீர் இப்ப குடுக்காதையெண்டுறீர். கலியாணம் முற்றாப் போச்செண்டு இவர் சொன்னவுடன நான் கேட்ட முதல்

www.padippakam.com



கேள்வி, போட்டோ அனுப்பினனீரோ... வயதெல்லாம் சொன்னனீரோ எண்டதுதான். ஓமோமெண்டு ஓணான்மாதிரி தலையாட்டினார்.

**கோம :** என்ன!.... என்ன? இப்ப என்ன நடந்து போச்செண்டு இப்பிடிக் கதைக்கிறியள்.

**நவம் :** ஆ... முந்தி ஏனிந்தக் கலியாணம் எண்டு கேடடீர். இப்ப ரெத்தமும் ரெத்தமும் ஒண்டாகி பாசமழை பொழியுதுபோல கிடக்கு.

**குண :** அத்தான்.... அண்டைக்கு அவவைக் கொண்டுவந்து விட்டுட்டு உடன நீங்கள் சுவிசுக்குப் போட்டீங்கள். இங்க சரியான பிரச்சினையாக் கிடக்கு. நீங்கள்தானத்தான் எப்பிடியும் இதைச் சமாளிக்கவேணும். நீங்கள் வரட்டும் எண்டுதான் நானும் தங்கச்சியும் பாத்துக் கொண்டிருந்தனாங்கள்.

**நவம் :** எட..... இவளவு விபரம் தெரிஞ்ச நீர் படம் அனுப்பினனீரோ எண்டு நான் கேக்கேக்கையெல்லோ இதைச் சொல்லியிருக்கவேணும்?

**கோம :** ஓ... அண்ணை அனுப்பினது பழைய படந்தான். வயதும் குறைச்சுத்தான் சொல்லிப்போட்டார். இப்ப அதுக்கென்ன? ஊர் உலகத்தில நடக்காததையே அண்ணை சொல்லிப்போட்டாரெண்டு 'லோயர்க்' கேள்வி கேட்டுக்கொண்டு நிக்கிறீங்கள்..!

**நவம் :** கோமதி.... கலியாணம் கொண்ணைக்குத்தானெண்டு நினைக்கிறன். நீர் சும்மா இரும் நான் அவரோடை கதைக்கிறன். குணம்... நீர் அனுப்பின படம் எத்தினையாம் ஆண்டு எடுத்தனீர்?

**குண :** கிட்டடியில எடுத்த படந்தான்.... அத்தான்...

**நவம் :** ஆ... அப்ப 'டோப்' வச்செடுத்தனீரோ?

www.padippakam.com



**கோம :** தங்கச்சியின்ரை புருஷன்.... அத்தானெண்டு அண்ணை உங்களிட்டை இவளவு மரியாதையா நடக்குது. நீங்கள் பொறுப்பா முன்னுக்கு நிண்டு முடிச்சுவைக்காமல் இப்பிடிக் கதைக்கிறது சரியோ சொல்லுங்கோ பாப்பம். இஞ்ச... அண்ணையிட்டை எவளவு காசிருக்கெண்டு அந்தப் பெட்டையைக் கூப்பிட்டு ஒருக்காச் சொல்லுங்கோப்பா.

**நவம் :** கோமதி... நான் உங்களுக்காகக் கதைச்சால் அது கலியாணமா இருக்காது.... திணிப்பாய்த்தான் இருக்கும்.

**கோம :** சரி... அப்ப இப்ப என்ன செய்யவேணுமெண்டு சொல்லுறீங்கள்.

**நவம் :** இதை நான் முடிவு செய்யேலாதப்பா. அந்தப் பிள்ளையைக் கூப்பிட்டுக் கேப்பம். பிள்ளை.... பிள்ளை கீதா.... வெளிநாட்டு வாழ்க்கையெண்டு நீங்கள் ஒரு கற்பனையோடை வந்திருப்பீங்கள். உங்கடை கற்பனைக்குள்ள அடங்காத எதிர்பாராத வாழ்க்கையா சிலவேளை இது அமையக்கூடும். ஆனால் வாழுறதுக்காக இவளவுதூரம் வந்திட்டீங்கள்... இனி...

**கீதா :** ஐயோ... நீங்களும் இவையளமாதிரி என்னை வற்புறுத்தாதீங்கோ...

(கும்பிடுகிறாள்...)

**நவம் :** ஆ.... நான் வற்புறுத்தேல்லை. அப்பா அம்மா இல்லாமல்.... சொந்த பந்தம் இல்லாமல்...

**குண :** அத்தான்... ராசு இவவின்ரை சொந்தக்காரன்தான்....

**நவம் :** ராசுவோ.... சொந்தக்காரனெண்டால் உன்னோடை சேர்ந்து இவளவு தில்லுமுல்லு செய்திருப்பானே.... அவன்ரை கதையை விடு. பிள்ளை... நீங்கள் தனிய எடுக்கிற முடிவு உறுதியான முடிவா, தெளிவான

www.padippakam.com



முடிவா, பின்னுக்கு நீங்கள் மனவருத்தப்படாத முடிவா இருக்கோணும். உங்கடை முடிவை.... நீங்கள் யோசிச்சு ஆறுதலாச் சொல்லலாம். அவசரமில்லை....

**கோம :** இனியென்னப்பா யோசிக்கிறதுக்கிருக்கு..?

**கீதா :** நான் மூண்டு நாளா யோசிச்சிட்டன். எனக்கு இந்த வாழ்க்கை வேணாம். நான் இங்கயிருந்து போகப்போறன்.

**நவம் :** சரி பிள்ளை... உங்கடை முடிவு இதுதானெண்டா.... சரி...

**குண :** என்ன சரி... நானும் பொறுத்துப் பொறுத்து பாக்கிறன். நீங்களும் அவவோடை சேந்து கதைக்கிறீங்கள். என்ரை காசிலதான் அவ இங்க வந்தவ எண்டதை நீங்கள் மறந்திட்டீங்கள்போல கிடக்கு.

**நவம் :** குணம்.... உம்மடை காசிலை அவ இங்க வந்தவ எண்டதுக்காக, நீர் அவன் விலைக்கு வாங்கிப் போட்டீரெண்டு நினைக்கக்கூடாது. ரெண்டு பேருக்குமிடையில் ஒத்துப்போற கன விஷியங்கள் சேர்ந்தாத்தான் வாழ்க்கை வாழ்க்கையாயிருக்கும். இல்லாட்டி அது நரகமாத்தான் போகும். இதை நீர் வடிவா யோசிச்சுப் பாரும். ஆத்திரத்தில முடிவெடுத்து இடைஞ்சலான வாழ்க்கையைத் தேடக்கூடாது. கோமதி என்ரை பெண்சாதியெண்டாலும் அவ ஆட்டிவைக்கிற பொம்மையா நீர் நடக்கவேணாம்.

**கோம :** நான் ஆட்டி வைக்கிற பொம்மையா அண்ணை நடக்கிறதுக்கு, அண்ணைக்கென்ன மூளையில்லையே?

**நவம் :** சொந்த மூளையிருந்தால் முப்பத்தெட்டு வயதுவரை கலியாணமில்லாமல் இருந்திருப்பாரே?

**குண :** நான் உங்களைக் கேட்டது எனக்கு மூளை இருக்குதோ இல்லையோ எண்டு ஆராய்ச்சிசெய்யச் சொல்லி இல்லை. என்ரை காசில இங்க வந்து என்னை ஏமாத்திப் போட்டு போக நிக்கிறா... நீங்கள் என்ன கதை கதைச்சுக்கொண்டிருக்கிறியள்?

www.padippakam.com



கீதா : ஏமாத்தினது ஆர்... நானோ நீங்களோ?

கோம : கலியாணமெண்டால் ஒண்டிரண்டு பொய் சொல்லுறது வழக்கம்தான். இவளவு ஞாயம் கதைக்கிற நீ மாப்பிளையைப்பற்றி விசாரிச்சுப் பாத்திட்டெல்லோ வெளிக்கிட்டிருக்கவேணும்?

கீதா : வெளிநாட்டில வாழுற நீங்கள் நாகரீகமா நடப்பீங்கள் எண்டு நம்பினது என்ரை பிழைதான். இங்க வந்து பாத்தாப் பிறகுதான் தெரியுது நாகரீகமில்லாத மோசடிக்காரரெண்டு. நெருப்புக்கு மேல நடக்கிறமாதிரி என்ரை வாழ்க்கை அமையுறதை நான் விரும்பேல்லை.

குண : ஏய்.... என்ன கதைக்கிறாய் நீ...?

(ஆத்திரத்துடன் கீதாவை குணம் நெருங்க...)

கீதா : அப்பிடியே நிக்கவேணும். கிட்டா வந்தா மரியாதை போகும். நான் இஞ்ச இருந்து போறதுக்கு முதல் ஒண்டு சொல்லுறன். கேட்டுக்கொள்ளுங்கோ.... நான் இங்க வாறதுக்கு நீங்கள் சிலவழிச்ச காசைத் தந்திட்டுத்தான் நான் இந்த நாட்டைவிட்டுப் போவன். என்ரை நகையள் முழுக்க இதில இருக்குது. இதையும் வச்சுக் கொள்ளுங்கோ.

கோம : அண்ணை... நகையை வாங்காதை....

கீதா : நீங்கள் வேண்டாமெண்டு சொன்னாலும் நகையைக் கொண்டு போகமாட்டன். உங்கடை மிச்சக்காசைக் கொஞ்சம் கொஞ்சமா தருவன். அதுக்கிடையிலை எனக்கொரு நல்ல வாழ்க்கை கிடைச்சால் அதை வேண்டாமெண்டு ஒதுக்கமாட்டன். ஆனா... அதுக்கு முதல் உங்கடை காசைத் தந்திட்டுத்தான், அப்பிடி ஒரு வாழ்க்கை கிடைச்சாலும் ஏற்றுக்கொள்ளுவன்.

நவம் : பிள்ளை.... இப்ப நீங்கள் எங்க போகப்போறீங்கள்?

படிப்பகம்

www.padippakam.com



**கீதா** : இந்த நாட்டுப் பாஷை தெரியாத என்னைக் பொண்டுபோய் ஏமாத்திப் பதிஞ்சினமே? அந்த Campக்குத்தான். நடந்ததைச் சொல்லப்போறன்.

**நவம்** : சரி.... நடவுங்கோ.... நான் உங்களைக் கொண்டுபோய் விட்டு விடுகிறன்....

(நவமும் கீதாவும் போக.... அதிர்ச்சியில் உறைகிறான் குணம்.)

**கோம** : நான் சொல்லுறதைக் கேளுங்கோப்பா....

**நவம்** : அண்ணையும் தங்கச்சியும் சேர்ந்து ஒரு மோசடி செய்திருக்கிறியள். அதுக்கு என்னையும் எனக்குத் தெரியாமை உடந்தையாக்கிப் போட்டீர்கள். இனி நீர் என்ன சொல்லுறது நான் என்ன கேக்குறது?

**கோம** : அந்தப் பிள்ளை உலகம் தெரியாமை முடிவெடுத்திருக்குது. அதுக்கு நீங்கள் ஆறுதலாய் சொன்னால், அது சம்மதிக்கும். சொல்லுங்கோப்பா... உங்களைக் கும்பிட்டுக் கேக்கிறன். சொல்லுங்கோப்பா.

**நவம்** : என்னத்தைச் சொல்ல? என்ரை மனுசியும் மச்சானும் ஒரு மோசடி செய்துபோட்டு வலுகெட்டித்தனமாய் எனக்கு மறைச்சுப் போட்டினமெண்டு சொல்லட்டோ? கோமதி... இந்தப் பிள்ளை எடுத்த முடிவு தன்னம்பிக்கையான முடிவு. இந்தச் வெளிநாட்டுச் சமுதாயத்திலை பணம் சேர்த்த சிலர் செய்யிற ஏமாத்து, மோசடி, சுரண்டலுக்கு எதிராய் எடுத்திருக்கின்ற முடிவு. இதை நான் எதிர்த்தால்... இவளவு நாளும் எழுதின என்ரை பேனையை முறிச்சு அடுப்புக்கைதான் வைக்கவேணும் போடி உள்ளுக்கு....

(நவமும் கீதாவும் போக...)

**கோம** : போ... போ.... உன்னைவிட வடிவான பொம்பிளையைப்

www.padippakam.com



*பாத்து அண்ணைக்குக் கலியாணம்செய்து வைக்கிறனோ, இல்லையோ பார்.*

*(என்று கூறியவாறு வாசல்வரை சென்று கோமதி திரும்ப.... குணம் மெதுமெதுவாய்ச் சிரிக்கிறார்.... சிரிக்கிறார்.. மனநோயாளியைப் போல...)*

*குண : தங்கச்சி.... கலியாணத்துக்கு கனபேருக்குச் சொல்லவேணுமோ? வீடியோவுக்குக் கனக்கக் காசு கேக்கிறாங்கள்.... தாலிக்கொடி பதினைஞ்சு பவுண் மூவாயிரத்தைநூறு... உடுப்புக்கு மூவாயிரம்... மணவறைக்கு முந்நூறு... மாலைக்கு முந்நூறு.... ஐயருக்கு எழுநூறு.... Hall (மண்டபத்து)க்கு ஆயிரம்.... சாப்பாட்டுக்கு ஐநூறு.... •*

**(நிறைவு)**

○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com



# சுருதிபேதம்

www.padippakam.com

# சுருதிபேதம்

கோடை 1998

| நாடக மாந்தரும் | உயிரூட்டியோரும் |
|---|---|
| நற்குணம் | பூ.நவரட்ணராஜா |
| லலிதா | பெனடிக்ரா ஞானசெல்வம் |
| நிமலன் | ரமேஷ் |
| சுகந்தினி | மோகனரூபி நவரத்தினம் |
| சசி | ஜீட் நிக்ஸன் ஞானசெல்வம் |
| அமுதன் | தே. தங்கராஜா |
| வினோ | அனுலா மனோகிமன் |
| சிந்து | மேரிஷாலினி நவரட்ணராஜா |
| தனம் | பி.மனோகிமன் |
| ராசாத்தி | ஷர்மி பாக்கியநாதன் |
| குமுதன் | அரவிந்தன் நவரட்ணராஜா |
| குகன் | சந்திரன் |
| சோதி | கிருபாகரி சீவரத்தினம் |
| நல்லதம்பி | நாச்சிமார் கோயிலடி இராஜன் |

www.padippakam.com

# காட்சி 1



***களம்***

*அமுதனின் வீடு, நற்குணத்தின் வீடு என மேடையில் இரு பகுதிகள்.*

***பாத்திரங்கள்***

*நற்குணம், நற்குணத்தின் தம்பி அமுதன், நற்குணத்தின் மனைவி லலிதா, மகள் சுகந்தினி, வினோ, சிந்து.*

*ஜேர்மனியில் ஒரு நகரில் இரு வீடுகள். வலப்பக்கம் அமுதனின் வீடு. இடப்பக்கம் நற்குணத்தின் வீடு. தொலைபேசியில் உரையாடுகின்றனர். உரையாடல் இரு வேறுபட்ட வாத்திய ஓசையாக வெளிப்படுகிறது. முகங்களில் வாத்திய ஒலிக்கேற்ப மாறுபாடுகள் தெரிகிறது. வாத்திய இசை நிற்க...*

**நற்** : நல்லாயிருக்கு! நல்லாயிருக்கு நீ சொல்லுற கதை. தலையிருக்க வாலாடக் கூடாதெண்டதை நினைவிலை வைச்சுக்கொள். நான் சொல்லுறபடிதான் நீ கேக்க வேணும். எங்கடை குடும்பத்துக்கு நான்தான் மூத்தனான்.

**அமு** : அண்ணை, நீ சொல்லுறதை நான் கேக்கலாம். ஆனால் தங்கச்சியும் மச்சானும் கேக்கவெல்லோ வேணும்? கடைசிவரைக்கும் உன்ரை விருப்பத்துக்கு மச்சான் நடக்கமாட்டார்.

**நற்** : என்னடா நீ மச்சான் மச்சானெண்டு அவனைத் தூக்கித் தலையிலை வைக்கிறாய். எங்கடை வீட்டு விசயத்தை

www.padippakam.com



நாங்கள்தான் முடிவு செய்ய வேணும். வந்தான் வரத்தான் எல்லாம் முடிவு செய்யேலாது.

அமு : அண்ணை உப்பிடிக் கதையாதை. தங்கச்சின்ரை புருசனை வந்தான் வரத்தான் எண்டு சொன்னால் என்ன அர்த்தம் சொல்லு பாப்பம்.

நற் : அமுதா! அகத்தி ஆயிரம் காய் காய்ச்சாலும் பிறத்தி பிறத்திதான். அதை மாத்தேலாது.

அமு : அண்ணை உப்பிட அசிங்கமாய்க் கதைக்காதை. எங்கடை அப்பாவை நாங்கள் கூப்பிடேல்லை. வந்தான் வரத்தான் எண்டு நீ சொல்லுற மச்சான்தான் தன்ரை காசைச் செலவழிச்சுக் கூப்பிட்டவர்.

நற் : டேய்! அப்பாவை இங்காலை எடுக்கவேணுமெண்டு நான்தான் முதல்லை யோசிச்சனான். நான் அதை மலருக்குச் சொல்ல, கனடாக்காரன் விசயத்திலை முந்தீட்டான். இப்ப அப்பாவைக் கூப்பிட்டு வீட்டிலை வேலைக்காரன்மாதிரி வைச்சிருக்கினம்.

அமு : ஆண்டவனுக்கு அடுக்காத கதை கதைக்காதை. அப்பா அங்கை சந்தோசமாகத்தானே இருக்கிறார்?

நற் : என்னடா சந்தோசம்? கனடாவிலை முழுப் புகையிலை இருக்குது. வாங்கிக் குடுத்து சுத்திக் குடியுங்கோ எண்டு சொன்னால் அப்பாவுக்குச் சந்தோசம் வந்திடுமோ? அவன்ரை சுத்துமாத்து விளையாட்டுகள் எனக்குத் தாண்டா விளங்கும். தங்கச்சியும் தானும் வேலைக்குப் போகவேணும். அந்தநேரத்திலை பிள்ளையளைப் பாக்க ஆள் வேணும். அதுக்காகத்தான் சம்பளமில்லாமல் வேலை வாங்குறதுக்காக அப்பாவைக் கூப்பினிட்டவன் தெரியுமே?

அமு : அண்ணை சொல்லுறதைக் கேள். தங்கச்சி காலமை வேலைக்குப் போவாள். பிள்ளையள் ஸ்கூலுக்குப்

www.padippakam.com



போயிடும். தங்கச்சி வேலையாலை வந்தப் பிறகுதான் பிள்ளையள் ஸ்கூலாலை வருவினம். அப்பாவுக்கு அங்கை ஒரு வேலையும் இல்லை. காலமை சாப்பிட்டிட்டு ரீவி பாப்பார். பேப்பர் புத்தகம் படிப்பார். பின்னேரத்திலை வாக்கிங் போட்டு வாறார். அப்பாவுக்கு அங்கை ஒரு குறையுமில்லை. நான் போன வருசம்போய் எல்லாம் நேரிலை பாத்தனான்தானே?!

நற் : அமுதன்! சொல்லிப்போட்டன். உந்தக் குத்தல் கதையளை நிப்பாட்டிப்போடு. உனக்குப் பாஸ்போட்டிலை விசா. எனக்குப் பேப்பர் விசா எண்டதைச்சொல்லிக் காட்டுறியோ?

அமு : உனக்கும் பாஸ்போட்டிலை விசாத் தருவாங்கள்தானே? நீ வந்து இப்ப எத்தினை வருசம்? அகுலைக் (அரசியல் தஞ்சத்தை) கான்சல்பண்ணி அப்பவே பெபுக்னஸ் (தற்காலிக வதிவிட விசா) எடுத்து ஒழுங்காய் வேலை செய்திருந்தால் நீயும் கனடாவுக்குப் போட்டு வந்திருக்கலாந்தானே?

நற் : டேய்! நான் ஜேர்மன்காரனுக்கு உழைச்சுக் குடுத்து ரொயர் (வரி) கட்டவே இஞ்சை வந்தனான்? என்ரை குவாலிபிக்கேசனுக்கு (தகுதிக்கு) இங்கை என்னடா வேலை இருக்கு?

அமு : (ரெலிபோனைக் கையால் பொத்தி) இவற்றை குவாலிபிக்கேசனுக்கு Becks (ஒரு வகை பியர்) கொம்பனியிலை வேலை கேட்டிருக்கலாம்.

நற் : என்னடா சத்தத்தைக் காணேலை?

அமு : உன்னை ஏதோ ஜேர்மன்காரன் வெத்திலைவைச்சு இஞ்சை வரச்சொல்லிக் கூப்பிட்டமாதிரிக் கதைக்கிறாய். உன்ரை படிப்பைப்பற்றிப் பெரிசாய் யோசிக்கிற நீ இஞ்சை அகதியா வந்திருக்கக் கூடாது. அண்ணை, இன்னொண்டு.

படிப்பகம்

www.padippakam.com



படிப்பைப்பற்றிக் கதைக்கிற நீ கொஞ்சம் ஒழுங்கா யிருக்கவும் ட்ரை பண்ணியிருக்கவேணும்.

நற் : அமுதா! சத்தியமாய் இண்டைக்கு நான் குடிக்கேல்லை. (கிளாஸிலிருந்து பியரை அவசரமாக விழுங்குகிறார்.)

அமு : தொண்டைக்குள்ளை என்னவோ இறங்குற சத்தம் கேக்குது. அது பச்சைத் தண்ணியாக்கும்?!

நற் : டேய், கதையை நிப்பாட்டு. அண்ணை தம்பியெண்ட மரியாதையில்லாமல் உனக்கு நளினம் நல்லாய்த்தான் கூடிப்போச்சு.

அமு : சும்மா கத்தாதை அண்ணை. அப்பாவை மச்சானும் தங்கச்சியும் நல்லாய்த்தான் வைச்சிருக்கினம். அவருக்கு ரண்டொரு மாதத்திலை லான்டட் கிடைக்கப்போகுது. பிறகேன் அவரை இஞ்சை கூப்பிட வேணுமெண்டு கரைச்சல்படுத்துறாய்?

நற் : டேய்! நாங்கள் ரண்டுபேர் இஞ்சை மலைபோலை இருக்க, பிறத்தியான் என்னடா அப்பாவைப் பாக்கிறது?

அமு : கீறுபட்ட றெக்கோட்மாதிரிச் சொன்னதைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கப் போறாய். எனக்கு காலமை வேலை அண்ணை.

(நற்குணத்தின் மனைவி லலிதா வேலையால் வருகிறாள்.)

நற் : பிறகும் பார் சேட்டையை... நீ வேலைக்குப் போறனி, நான் வேலைக்குப் போகாதனான் எண்டதைக் குத்திக் காட்டிறியோ?

அமு : அண்ணை, உனக்குப் பொழுதுபட்டால் ரேஸ்ற்றுக்கு ஆள்வேணும். அதுக்கு என்னை ஏன் கரைச்சல் படுத்துறாய்?

நற் : டேய் அமுதா, (பலவந்தமான அழுகையாக) கணடாவுக்கு ரெலிபோன் அடிச்சு நான் இதுவரைக்கும் எவ்வளவு காசு

www.padippakam.com



கட்டியிருக்கிறனெண்டு உனக்குத் தெரியாது.

அமு : நான் உன்னை ரெலிபோன் அடிக்கச் சொன்னனானோ? இல்லை... உனக்கு ரெலிபோன் அடிக்கிறது பொழுது போக்கு. அடிக்கிறாய்... அதுக்கு நான் என்ன செய்யுறது? உப்பிடி வீணாய் ரெலிபோன் அடிக்கிற காசை ஊருக்கு ராசாத்திக்கு அனுப்பிவிடலாந்தானே?

நற் : (அழுதபடி) டேய்! விசர்க் கதை கதைக்காதை. அப்பாவின்ரை விசயமாய்த்தான் கதைச்சனான். ஆறு வருசமாய் அப்பாவை அங்கைவைச்சிருந்துபோட்டு இப்ப சிலோனுக்கு அனுப்பப் போகினமாம்.

அமு : அப்பா ராசாத்தியைப் பாக்கிறத்துக்காகத்தானே சிலோனுக்குப் போறார்?!

நற் : அப்ப அவருக்கு மலரும் ராசாத்தியும்தான் பிள்ளையள், நாங்கள் பிள்ளையளில்லை. எங்களை வேண்டியேடா வளர்த்தவர்?!

அமு : அண்ணை நீ கனடாவுக்கு ரெலிபோன் அடிச்சு என்ன கதைக்கிறனியெண்டு எனக்கு விளங்கேல்லை... அப்பா கனடாவிலை இருந்து ஊருக்குப்போய் ராசாத்தியைப் பாத்திட்டு, அப்பிடியே இஞ்சைவந்து எங்களையும் பாத்திட்டுத்தான் கனடாவுக்குப் போப்போறார்.

நற் : ஓகோ... அப்ப சிலோனுக்குப் போயிட்டு இஞ்சை வாறார்... நல்லது... அது சரி, உனக்கிந்த விபரம் எல்லாம் எப்ப தெரியும்?

அமு : நேற்றைக்கு மச்சான் ரெலிபோன் எடுத்தவர். அப்பாவுக்கு ஜேர்மன் விசா எடுக்க அயன்லாடுங் (அழைப்பு) எடுத்து அனுப்பட்டாம்.

நற் : பாத்தியோ கனடாக்காரன்ரை சேட்டையை? ரெலிபோன் எடுத்துக் கதைக்கிற என்னட்டை மலரை ஒரு சொல்லுச் சொல்லவிடாமல், உனக்கவன் போன் பண்ணியிருக்

www.padippakam.com



கிறான். இந்தக் குடும்பத்துக்கு நான் மூத்தனான். என்னை அந்த வந்தான் வரத்தானும் மதிக்கேல்லை, நீயும் மதிக்கேல்லை. ஓகே... நீ இப்ப ரெலிபோனை வை. நானிப்ப அவனுக்கெடுத்துக் கிழிக்கப்போறன்.

அமு : அண்ணை! உன்னட்டைச் சொன்னாலென்ன, என்னட்டைச் சொன்னாலென்ன ஒண்டுதானே? அப்பாவென்ன நாளைக்கே வெளிக்கிடப்போறார்?! உனக்கு முதல் சொன்னானெல்லே, லான்டட் கிடைக்க ரண்டொரு மாதம் செல்லுமெண்டு. பிரச்சினை வேண்டாம். நீ ஸ்ரட்டாம்ற்றிலை (கச்சேரி) போய் அயன்லாடுங் எடு. நான் அதைக் கனடாக்கு அனுப்பிவிடுறன்.

நற் : ஓமோம்... நீர்தானே இப்ப வீட்டுக்கு மூத்தவர். நீர் சொல்ல நான் செய்யவேணும், என்ன? நீர் வேலைக்குப் போக, நான் பேற்றோல் அடிச்சுக் கொண்டுபோய் அயன்லாடுங் எடுத்துக் கொண்டந்து தர, நீர் நோகாமல் கனடாவுக்கு அனுப்பிப் பேரெடுக்கப்போறீர், என்ன? அப்ப நானொரு வெறும் பேயன், என்ன... வையடா போனை.

அமு : அண்ணை....

நற் : வையடா போனை!

(ரெலிபோனை அடித்து வைக்கிறார். அமுதன் ரெலிபோனைப் பார்த்து)

அமு : தலையெழுத்து... இந்தாளைத் திருத்தேலாது.

(நற்குணம் நடக்கிறார். உள்ளேயிருந்து)

சுகந் : அம்மா நீங்கள் அப்பாவோடை கதைக்கமாட்டீங்கள். அவர் என்ன செய்தாலும் பேசாமல் இருங்கோ. மாறிமாறி ஆருக்கெண்டாலும் ரெலிபோன் எடுத்து அலட்டிக் கொண்டிருக்கிறார். என்னாலை ஹவுஸ் அவுஸ்ஹாப (பாடசாலை வீட்டுவேலை) செய்யேலாமை இருக்கு.

www.padippakam.com



லலி : சுகந்தினி! மெதுவாய்க் கதை. அப்பாக்குக் கேட்டு தெண்டால் இப்ப எங்களோடை கொளுவலெடுக்கத் தொடங்கீடுவார்.

சுகந் : அம்மா! உங்களுக்கு அப்பாட்டைக் கதைக்கப் பயமாயிருந்தால் சொல்லுங்கோ. நான் அப்பாட்டைச் சொல்லுறன்.

லலி : என்ன சொல்லப்போறாய்?

சுகந் : நான் படிக்கிறதெண்டால் அவரை வீட்டிலை இனிமேல் அமைதியாயிருக்க வேணுமெண்டு சொல்லப்போறன்.

லலி : சரிசரி. இப்ப கதைச்சு அப்பாக்கு ஒண்டும் விளங்காது. நான் காலமை கதைக்கிறன். நீ சாப்பிட்டிட்டுப்போய்ப் படு. சுகந்தினி! அண்ணை இன்னும் வரேல்லையே?

சுகந் : நான் இண்டைக்கு முழுக்க அதைக் காணேல்லை.

நற் : ஓய்... உங்கை என்ன சத்தம்? என்ன குசுகுசுக்கிறியள்?

லலி : (வந்தபடி) உங்களுக்குச் சாப்பாடு போடட்டே?

நற் : மாட்டுக்குப் போடுறது வைக்கோல். ஆட்டுக்க வைக்குறது புண்ணாக்கு. மனிசனுக்குத் தாறது சாப்பாடு.

லலி : சரி, சாப்பாடு தரட்டே?

நற் : நீயும் உன்ரை சாப்பாடும்... நான் என்னவோ பிரச்சினையிலை இருக்கிறன். உனக்குச் சாப்பாடு... சசி எங்கை? இப்ப எத்தினை மணி? எத்தினை மணிக்கவன் வீட்டை வாறவன்? ஊர் சுத்துற காலை ஒரு நாளைக்கு முறிப்பன்.

லலி : நீங்கள் இப்பிடிப் பொழுதுபட்டாப் பிறகு தவண்டு கொண்டிருந்தால், பிள்ளையள் என்னெண்டு வீட்டிலை நிக்கும்?

நற் : என்னெண்டு...? என்னெண்டு...? (கையை விசுக்கிறார்)



படிப்பகம்

www.padippakam.com



*லலி* : வேண்டாம்... பிள்ளை வீட்டுக்கை நிக்கிறாள்.

*நற்* : நிண்டாலென்ன? பொலிஸை அடிச்சுக் கூப்பிடுவாளோ? அண்ணையையும் தங்கச்சியையும் முறிச்சுப்போட்டு ஆஸ்பத்திரியிலை கொண்டுபோய் வளத்துவன். நான் ஏசியன். என்ரை பிள்ளையளை இப்பிடித்தான் வளப்பனெண்டு பொலிசுக்கும் சொல்லுவன். விளங்குதே...?

(சுகந்தினி உள்ளே இருந்து வருகிறாள்.)

*சுகந்* : அம்மா! இப்ப எத்தினை மணி? நான் நாளைக்குப் பள்ளிக்கூடம் போறேல்லையோ? அம்மா கெதியாய் கொண்டந்து அப்பாக்குச் சாப்பாட்டைக் குடுங்கோ. அப்பா! கெதியாய்ச் சாப்பிட்டிட்டுப் படுக்கலாம்.

*நற்* : என்ன... என்ன?

*சுகந்* : கெதியாய்ச் சாப்பிட்டிட்டுப் படுக்கலாமெண்டு சொன்னனான். இனிக் கதைக்க வேண்டாம்.

(சுகந்தினி வேகமாக உள்ளே போக, தாய் பின்தொடர்கிறாள்.)

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 2



***களம்***

*தமிழீழத்தில் ராசாத்தியின் வீடு.*

***பாத்திரங்கள்***

*நல்லதம்பி, நல்லதம்பியின்*
*மகள் ராசாத்தி, ராசாத்தியின்*
*மகன் குமுதன், தனம்.*

*(குமுதன் விளையாட்டுக்காரரை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறான். தாய் ராசாத்தி வந்தபடி...)*

*ராசா : தம்பி குமுதன்! என்ன செய்து கொண்டிருக்கிறாய்?*

*குமு : அம்மா! இந்தக் கார் வடிவாய் ஓடுதில்லை. நான் இதைக் கழட்டித் திருத்தப்போறன்.*

*ராசா : தம்பி! தாத்தா கொண்டு வந்ததிலை ரண்டு காரைப் பழுதாக்கிப்போட்டாய். உதையும் கழட்டினால் பழுதாய்ப்போம். உப்பிடியே வைச்சு விளையாடு.*

*குமு : தாத்தா எங்கையம்மா? வாசிகசாலைக்கோ போயிட்டார்?*

*ராசா : தாத்தா இண்டைக்குப் பயணம் போறாரெல்லே தம்பி? அதுதான் நல்லூருக்குப் போயிட்டார்.*

*ராசா : அப்பு... இதிலை இருந்து விளையாடிக்கொண்டிரு. வெளியிலை போகாதை. அம்மா தோட்டத்துக்கை போய் மரக்கறி புடுங்கிக்கொண்டு வாறன், என்ன?*

www.padippakam.com



குமு : சரியம்மா...

(ராசாத்தி உள்ளே செல்கிறாள். குமுதன் காரை இரண்டு மூன்றுதரம் உருட்டிப் பார்த்துவிட்டு, ஏதோ ஒரு பாடலைப் பாடிக்கொண்டு காரோட்டுகிறான். நல்லதம்பி கோயிலால் அருச்சனைத் தட்டுடன் வருகிறார்.)

நல் : என்னப்பு... கார் வடிவாய் ஓடுதே? இஞ்சை வா ராசா....

குமு : (எழும்பி வந்தபடி) தாத்தா! எனக்கேன் கார் வாங்கிக்கொண்டு வந்தனீங்கள்?

(நல்லதம்பி பேரனை அணைத்து முத்தமிட்டு விபூதி பூசியபடி)

நல் : விளையாடத்தான் ராசா வாங்கிக் கொண்டு வந்தனான்.

குமு : தாத்தா! எங்கடை நாட்டிலை பெற்றோல் இல்லை. பிறகென்னெண்டு காரோடும், சொல்லுங்கோ பாப்பம்.

நல் : முந்திப் பெற்றோல் இல்லைத்தான். இப்ப ஆமிக்காரர் யாழ்ப்பாணத்துக்கை வந்தப்பிறகு பெற்றோல் இருக்குத்தானே?

குமு : எங்களுக்கு ஆமிக்காரற்றை பெற்றோல் தேவையில்லை. மண்ணெண்ணை இருந்தால் இஞ்சை கார் ஓடும். இப்ப எங்களுக்கு என்ன தேவை சொல்லுங்கோ பாப்பம்.

நல் : என்ன தேவை இப்ப... எனக்குத் தெரியேல்லை.

குமு : வடிவாய் யோசிச்சுச் சொல்லுங்கோ...

(நல்லதம்பி யோசிப்பதுபோல் அபிநயிக்க)

குமு : நீங்கள் சொல்லாட்டில் நான் சொல்லிப்போடுவன். சொல்லட்டோ?

நல் : பொறு. பொறு.

குமு : சொல்லட்டோ

படிப்பகம்

www.padippakam.com



நல் : கொஞ்சம் பொறன்...

குழு : சொல்லப்போறன்

நல் : சரி... சொல்லப்பு. எனக்குத் தெரியேல்லை.

குழு : எங்கடை நாட்டுக்கு வந்து நந்திக்கொடி ஏத்தின ஆமிக்காரனைக் கலைக்க புதுப்புதுத் துவக்கு வேணும். நீங்கள் எனக்குக் கார் வாங்கிக் கொண்டு வராமை துவக்கும் எறிகுண்டு செய்யிற சாமான்களும் வாங்கிக் கொண்டு வந்திருக்கலாம்.

நல் : அப்பு! நான் துவக்கு வாங்கிக்கொண்டு வந்திருந்தால் ஆமிக்காரர் என்னை யாழ்ப்பாணத்துக்கை விட்டிருக்க மாட்டாங்கள். மேலோகத்துக்குத்தான் அனுப்பி யிருப்பாங்கள்.

ராசா : (வந்தபடி) அப்பா வந்திட்டீங்களே? ஏனப்பா நேரம் செண்டது? கோயிலாலை வேறெங்கையன் போனனீங்களே?

நல் : சீச்சீ... நான் ஒரிடமும் போகேல்லை. இண்டைக்கு முருகனிட்டை வந்தனான். இனி எப்ப வருவனோ, இல்லையோ? அதுதான் ஆறுதலாய் தீர்த்தக்கேணிக்குப் பக்கத்திலை இருந்துபோட்டு பத்துமணிப் பூசையையும் கண்டுகொண்டு வாறன்.

ராசா : காலமை தேத்தண்ணியும் குடிக்காமைப் போனனீங்கள். இவளவுநேரமும் இருந்தீட்டு வாறியள். இருங்கோ தேத்தண்ணி ஊத்தியாறன்.

நல் : வேண்டாம் ராசாத்தி. தேத்தண்ணியும் கோப்பியும் மாறி-மாறிக் குடிச்சு நாக்கு வெந்துபோச்சுது. சோறு வடிச்சுப் போட்டியே? கொஞ்சக் கஞ்சி தா பிள்ளை.

ராசா : கஞ்சி ஆசை இன்னும் போகேல்லையே அப்பா?

www.padippakam.com



நல் : இண்டைக்கு குடிச்சா இனி எப்ப குடிக்கப்போறன்? பிள்ளை... கஞ்சிக்குள்ளை கொஞ்சம் தேங்காய்ப்பூவும் போட்டுத்தாணை...

குழு : அம்மா... எனக்கும் கஞ்சி வேணும், தேங்காய்ப்பூப் போட்டு.

நல் : அச்சா... ரண்டு பேருக்குமாய் கொண்டா பிள்ளை... அப்பு... இஞ்சை வா ராசா. எங்கையையா அப்பாவைக் காலமையிலையிருந்து காணேல்லை? ஞாயிற்றுக் கிழமையிலும் அப்பா வீட்டிலை நிக்கிறாரில்லை.

ராசா : (கஞ்சியுடன் வந்தபடி...) அப்பா! வெளிநாட்டிலைதான் ஞாயிற்றுக்கிழமை லீவு.

நல் : எங்கை ஆச்சி, அங்கையும் கள்ள வேலையெண்டால் ஞாயிற்றுக்கிழமையிலையும் செய்யத்தானே வேணும்?

ராசா : எங்கடை நாட்டு நிலமையிலை லீவு நாள் இல்லையப்பா. தம்பி... கஞ்சி கேட்டாய்... தாத்தாவோடை இருந்து குடிச்சு முடி பாப்பம். அப்பா... குடியுங்கோவன்... சூடாறப் போகுது.

நல் : (கஞ்சியைக் குடித்து) அம்மாளாச்சி... என்ன ருசியாயிருக்கு. இனி இந்தக் கஞ்சியைக் குடிப்பனோ, இல்லையோ?

ராசா : ஏனப்பா... அக்கா கஞ்சி வடிக்காமலே சோறு காச்சிறவ?

நல் : என்னண்டாச்சி அங்கை கஞ்சி வடிக்கிறது... வேலைக்கு போற அவசரத்திலை சமைக்கிறதுதானே? குக்கருக் குள்ளை தண்ணிக்களவாய் அரிசியைப்போட்டு சுவிட்சைத் தட்டி விடுவா. அது சோறாகிவிடும். வெள்ளிக் கிழமையிலை பச்சையரிசியைப்போடுறது... கொஞ்சம் தண்ணி கூடினால், சோறு புக்கையாய் மாறிப் போகும். பிறகெங்கை கஞ்சியைக் காணுறது? அது சரி பிள்ளை...

www.padippakam.com



நான் இவளவு தூரத்திலை இருந்த உங்களைப் பாக்க ஆசையாய் வந்திருக்கிறன்... மருமகன்... ராப் பகலெண்டில்லை... வீட்டிலை நிக்கிறாரில்லை... அவரோடை இன்னும் வடிவாக் கதைக்கக்கூட இல்லை. இண்டைக்குப் பயணம் வெளிக்கிடப் போறன். இன்னும்தான் அவரைக் காணேல்லை.

ராசா : உங்களோடையிருந்து கதைக்கிறத்துக்கு நேர மில்லாமை ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு அலுவல் வருகிதெண்டு அவரும் சொன்னவரப்பா. இண்டைக்கு நேரத்துக்கு வாறனெண்டு சொல்லிப்போட்டுத்தானே போனவர்?

குமு : அம்மா... நான் விளையாடப்போட்டு வாறன்...

ராசா : தூரத்துக்குப் போகாதை... கிட்டடியிலை நிண்ட விளையாடு...

நல் : அப்பு... கிணத்தடிக்குக் கிட்டப் போகாதை ராசா. கவன-மாய் விளையாடிப்போட்டுக் கெதியா வா ஐயா... (குமுதன் வெளியில் போதல்) பிள்ளை... நானும் வந்து மூண்டு கிழமையாயிட்டுது. ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒண்டு எனக்குச் சமைக்கச் சொல்லிப்போட்டுப் போறார். இண்டைக்குவரைக்கும் அவரோடை நான் ஒண்டாயிருந்து சாப்பிடேல்லை. எட... இரவிலைதன்னும் நேரத்துக்கு வீட்டுக்கு வாறாரில்லை.

ராசா : அப்பா... பகலிலை நாங்கள் சீவிக்கிறத்துக்காக வேலைக்குப் போனால், லீவு நேரத்திலை நாட்டுக்காகவும் ஏதும் செய்யத்தானே வேணும்?

நல : பிள்ளை... என்ன சொல்லுறாய்? மருமகனுக்கும் பொடியளுக்கும் ஏதும் தொடுப்பிருக்கோ?

ராசா : (சிரித்தபடி) வன்னியிலை இருக்காமல் பிறகென்னத்துக்கு இவளவு கெதியாய் இஞ்சை வந்தனாங்கள்?

www.padippakam.com



நல் : என்னாச்சி சொல்லுறாய்? அப்ப மருமகனும் போராட்டங்களுக்குப் போறவரே?

ராசா : அப்பா... ஆயுதத்தோடை களத்துக்குப் போறது மட்டுந்தான் போராட்டமெண்டு நீங்கள் நினைக்கிறீங்கள். எங்கடை நாட்டைப்பற்றி... போராட்டத்தின்ரை அவசியத்தைப்பற்றி சனத்தோடை கதைச்சு ஊக்கப் படுத்துறதும் போராட்டத்தோடை சேர்ந்ததுதான்.

நல் : என்ன... போராட்டத்தைப்பற்றிச் சனத்திட்டைக் கதைக்கிறதோ? பிள்ளை... வேண்டாம் பிள்ளை... உந்த வேலை வேண்டாம். சனங்கள் தாங்கள் தப்புறத்துக்காக ஆமிக்காரரிட்டைச் சொல்லிக் குடுத்துப்போடும். இந்தச் சனத்தை நம்பி நீங்கள் இஞ்சை இருக்க வேண்டாம். நான் பயணம் போறது இரண்டொரு நாள் பிந்தினாலும் பரவாயில்லை. நீங்களும் என்னைப் பயணம் அனுப்புற சாட்டிலை பாஸ் எடுத்துக்கொண்டு என்னோடை கொழும்புக்கு வாங்கோ. அப்பிடியே அங்காலை வெளிக்கிட்டிடலாம்.

ராசா : அப்பா... வெளிநாட்டுக்கு வாறத்துக்கு எனக்கும் விருப்பமில்லை. அவருக்கும் விருப்பமில்லை.

நல் : ஏன் பிள்ளை... ஏன்? பஞ்சாங்கத்திலை சுபநேரம் எண்டு போட்டிருக்கிற நேரங்கூட இஞ்சை எமகண்டமாய்த்தானிருக்குது. பிறகேன் இஞ்சையிருந்து அல்லல் படுகிறியள்?

தனம் : (வந்தபடி) மாமா! பஞ்சாங்கம் பாத்து நல்ல காரியங்கள் செய்த காலம் மலையேறிப்போச்சு.

நல் : அ... தம்பி வந்திட்டியளே?

தனம் : ஓம் மாமா... இப்ப எங்களுக்குச் சுபநேரம் எப்ப எண்டில்லை. ஒரு பிளேனை விழுத்தினால் சுபநேரம். ஒரு

www.padippakam.com



ஹெலியை விழுத்தினால் சுபநேரம்... ஒரு கப்பலை அடிச்சுக் கடலுக்கை தாட்டால் சுபநேரம்.

நல் : தம்பி, எப்பவும் பயத்தோடை சீவிக்காமல் அங்காலை வந்திட்டால் நிம்மதியாய் இருக்கலாம். ராசாத்தி தனக்கு வெளிநாட்டுக்கு வர்றத்துக்கு விருப்பமில்லையெண்டு சொல்லுறா. நீங்களெண்டாலும் அவவுக்குப் புத்தியைச் சொல்லி வெளிக்கிடப் பாருங்கோ...

ராசா : நீங்க முகத்தை கழுவிப்போட்டு வாங்கோவன்... அப்பா... இப்ப வெளிநாட்டுக்கு வெளிக்கிடுறதெண்டால் அண்ணை யவேன்ரை உதவி வேணும்.

நல் : அதுக்கென்ன... கூடப்பிறந்தவளுக்கு உதவிசெய்ய அவங்கள் மாட்டனெண்டு சொல்லப்போறாங்களே...

ராசா : அப்பா... எனக்குப் பெரியண்ணையை வடிவாய்த் தெரியும். அவரங்கை எப்பிடி இருக்கிறாரெண்டும் தெரியும்.

நல் : அவனாலைதானாச்சி எனக்கும் கவலை. பெரியவனை விடு. சின்னண்ணை நல்லாயிருக்கிறான்தானே...? அவனிட்டை ஒரு சொல்லுச் சொன்னால் கடனை உடனைப் பட்டெண்டாலும் சந்தோசமாய் உங்களைக் கூப்பிடுவானாச்சி...

ராசா : அப்பா... எங்கள் ரெண்டுபேரையும் குமுதனையும் கூப்பிடுறதெண்டால் இப்ப கனகாசு வேணும். சின்னண்ணை கடன்பட்டுக் கூப்பிட்டால் பிறகு அண்ணிக்கும் அவருக்கும் நிம்மதி இருக்காது. நாங்கள் வெளிநாட்டுக்கு வெளிக்கிட்டு அண்ணேன்ரை சந்தோசத்தைக் கெடுக்க எனக்கு விருப்பமில்லை.

நல் : சரியாச்சி... அண்ணைமார் வேண்டாம்... அத்தான் மறுசொல்லுச் சொல்லாமல் எல்லாம் செய்வார். நீயும் கனடாக்கு வந்திட்டால் அக்காவுக்கு நீ

www.padippakam.com



துணையாயிருப்பாய். குமுதனும் நல்லாய்ப் படிக்கலாம் ஆச்சி.

**ராசா :** அப்பா! சகோதரங்களிட்டையோ, அத்தானிட்டையோ அவர் கடன்பட்டு கடமைப்படுறது எனக்கு விருப்பமில்லை.

**தனம் :** (உள்ளிருந்து வந்தபடி) என்னோடை படிச்ச சிநேகிதப் பொடியங்களும் வெளிநாட்டிலை இருக்கிறாங்கள் மாமா.

**நல் :** எங்கை தம்பி இருக்கினம்?

**தனம் :** ஜேர்மன்லை ஒருத்தன் இருக்கிறான். பரிசிலை ஒருத்தன் இருக்கிறான். மற்ற ரண்டுபேரும் கனடாவிலைதான் இருக்கிறாங்கள்.

**நல் :** அப்ப பிறகென்ன தம்பி... சொந்தக்காரரிட்டைக் கடமைப்படக் கூடாதெண்டால், நீங்கள் உங்கடை சிநேகிதர் மூலமெண்டாலும் வெளிக்கிடலாந்தானே?

**ராசா :** அவையும் இவரை வரச்சொல்லி கனதரம் கேட்டு எழுதினவை. எங்கள் ரெண்டு பேருக்கும் வெளிநாட்டு வாழ்க்கையிலை விருப்பமில்லை. அதுதான் வேண்டா மெண்டு இருக்கிறம்.

**நல் :** ராசாத்தி, சாமி வரம் குடுத்தாலும் பூசாரி தடுக்கிற கதையாயிருக்குது உன்ரை கதை. மருமகன் ஓமெண்டு சம்மதிச்சாலும் நீ குழப்பியடிப்பாய் போலிருக்குது.

**தனம் :** இல்லை மாமா... அவவைக் கோவியாதையுங்கோ... எங்கள் ரெண்டுபேருக்குமே இஞ்சை இருக்க வேணுமெண்டுதான் விருப்பம். அதைவிட நாட்டுக்காக எங்களாலை ஏலுமானதைச் செய்யவேணுமெண்டதும் எங்கடை ஆசை.

**நல் :** தம்பி! நாட்டுக்காக ஏதும் செய்யவேணுமெண்டால் அங்கையிருந்தும் செய்யலாந்தானே? வெளிநாட்டிலை

படிப்பகம்

www.padippakam.com



இருக்கிறவங்களெல்லாம் நாட்டுக்காக ஒண்டும் செய்யாமலே இருக்கிறாங்கள்?

**தனம் :** மாமா! அங்கையிருந்து பொருளுதவிமட்டுந்தான் செய்யலாம். இங்கே இருந்தால் அந்தந்த நேரத்துக்குத் தேவையான உழைப்பைக் குடுக்கலாம். அவசியம் ஏற்பட்டால் உயிரைக்கூடக் குடுக்கலாம்.

**நல் :** தம்பி, உப்பிடிச் சொல்லாதையுங்கோ ராசா. நீங்களில்லாமல் என்ரை பிள்ளையும் இந்தக் குஞ்சும் நடுத்தெருவிலை நிக்கிற நிலமையை வைச்சிடாதேங்கோ. ராசா. நீங்கள் என்னோடை கொழும்புக்கு வாங்கோ. இனி இஞ்சை இருக்க வேண்டாம். (கண் கலங்குகிறார்)

**ராசா :** அப்பா... இண்டைக்கெங்கடை தேசத்தாய் பொட்டில்லாமை நிக்கிறாள். அவளுக்கு எங்கடை ரத்தத்தாலை பொட்டு வைச்சுப் பாக்க நாங்கள் ஆசைப்படுறம். அவளுக்குப் பொட்டு வைக்க எங்கடை ரத்தம் போதாதெண்டால் உயிர்கள்... உயிர்களாலை பொட்டுவைக்க எத்தினை பிஞ்சுகள் வெளிக்கிட்டிட்டுது. இந்த நேரத்திலை நாங்கள் நாட்டைவிட்டு என்னெண்டாப்பா வெளிக்கிடலாம்? அது ஏலாதப்பா... நாங்கள் இஞ்சைதான் இருக்கப் போறம். எங்களை வரச்சொல்லிக் கேளாதையுங்கோ.

**தனம் :** மாமா, வீட்டுக்கொருத்தர் போராட ஒற்றுமையாய் வெளிக்கிட்டிருந்தால் எங்களுக்கு விடுதலை எப்பவோ கிடைச்சிருக்கும்? எங்கடை ஒற்றுமையை எத்தினையோ பேர் எத்தினையோ விதமாக் கெடுத்துப்போட்டாங்கள். இது எங்கடை கடைசிச் சந்தர்ப்பம். இப்பவும் நாங்கள் சுயநலமாய்ச் சிந்திச்சமெண்டால் இந்த மண்ணிலை தமிழன் வாழ்ந்த வரலாறே இல்லையெண்டு ஆக்கிப் போடுவாங்கள்.

www.padippakam.com



நல் : தம்பி! நீங்கள் சொல்லுற எல்லாம் சரிதான். இன்னும் எவளவு நாளைக்கு என்ரை உயிர் இருக்குமோ தெரியாது. என்ரை உயிர் இருக்கும்வரை என்ரை பிள்ளையள்... மருமக்கள்... பேரப்பிள்ளையள் எல்லாம் சந்தோசமாயிருக்க வேணும். அதுதானையா என்ரை ஆசை... மூண்டு சகோதரங்களும் வெளிநாட்டிலை இருக்க, என்ரை கடைக்குட்டி இஞ்சையிருந்து கஸ்டப்படுகுதே எண்ட கவலையிலைதான் என்ரை உயிர் போகப்போகுது.

ராசா : அப்பா... இஞ்சை ஒரு கஸ்டமும் இல்லை. நீங்கள் எழுதுற ஒவ்வொரு கடிதமும் நீங்கள் பக்கத்திலை இருந்து கதைக்கிறமாதிரி ஆறுதலாயிருக்கும். அதைப் பாத்தே நான் இஞ்சை சந்தோசமாயிருப்பன்.

தனம் : மாமா, நீங்கள் இண்டைக்குப் பயணம் போறீங்க ளெண்டுதான் சில முக்கியமான வேலையளை வேறையாக்களிட்டை ஒப்படைச்சீட்டு வந்தனான்... ஒண்டுக்கும் கவலைப்படாதேங்கோ... நீங்கள் வலு கெதியாக... எங்கடை நாட்டுக்கு வந்து... இல்லை... உங்கடை நாட்டுக்கு வந்து... உங்கடை பிள்ளையை... பேரனை... மருமகனைப் பாப்பீங்கள். கவலைப்படாமை வெளிக்கிடுங்கோ... உடுப்பை மாத்துங்கோ...

ராசா : அப்பாவை அவசரப்படுத்திறீங்கள்... நீங்கள் உடுப்பு மாத்தேல்லையே... அப்பா இன்னும் சாப்பிடேல்லை. நீங்கள் வரட்டுமெண்டு பாத்துக்கொண்டு இருந்தவர்.

நல் : சரி பிள்ளை, எல்லாருக்கும் சேர்த்துச் சாப்பாடு போடு... எல்லாரும் ஒண்டாயிருந்து சாப்பிடுவம்.

தனம் : ராசாத்தி! நானும் வவுனியாவரைக்கும் போய் மாமாவை அனுப்பிப்போட்டு வாறன்.

www.padippakam.com



**ராசா :** ஏனப்பா... நீங்கள் கொழும்புக்குப் போகப் பாஸ் கேக்கேல்லையே...

**தனம் :** பாஸ் கேட்டன்... தந்திட்டாங்கள்... ஆனால் உம்மையும் குமுதனையும் இஞ்சை தனியவிட்டிட்டு என்னெண்ட போட்டுவாறது எண்டுதான் யோசிக்கிறன்.

**குமு :** அப்பா... என்னையும் அம்மாவையும் ஒருத்தரும் ஒண்டும் செய்யேலாது. நான் அம்மாவைக் கவனமாய்ப் பாப்பன்.

**தனம் :** அசல்... அப்பிடித்தான் துணிவாயிருக்க வேணும். ஆனால் நாங்கள் எல்லாரும் கொழும்புக்குப்போய் தாத்தாவை அனுப்பிப்போட்டு வருவம். (மூவரும் புரியமால் தனத்தைப் பார்க்க) நான் எல்லாருக்கும்தான் பாஸ் எடுத்தந்தனான்...

**மற்ற மூவர்:** ஆ... (மகிழ்ச்சியில்)

**(திரை)**

ㅇ ㅇ ㅇ

www.padippakam.com



# காட்சி 3



***களம்***

*நற்குணம் வீடு, அமுதன் வீடு*
*என மேடையில் இரு பகுதிகள்.*

***பாத்திரங்கள்***

*நற்குணத்தின் மகன் நிமலன், லலிதா, குகன், அமுதனின் மகள் சிந்து, வினோதினி, நற்குணம், நற்குணத்தின் மகள்களான சசி, சுகந்தினி..*

*நிமலன் சட்டைத் தெறிகளைப் பூட்டியபடி..*

***நிமலன்*** *: அம்மா! ஏழு இருவது ஆயிற்றுது...*

***லலிதாவின் குரல்*** *: (உள்ளிருந்து) இந்தா... ஊத்திட்டன். நீ வெளிக்கிட்டிட்டியே?*

***நிம*** *: வெளிக்கிட்டிட்டன்... கதைச்சுக் கொண்டு நிக்காமைக் கெதியாய் வாங்கோ... நேரஞ் செல்லுமெண்டால் சொல்லுங்கோ, நான் போறன்.*

***லலி*** *: (கையில் தேனீருடன் வந்தபடி) சரி... சரி... இந்தா குடி. நேரத்தோடை போகவேணுமெண்டால், தங்கச்சீற்றைச் சொல்லி. தேத்தண்ணியை வைச்சுக் குடிச்சிட்டுப் போயிருக்கலாந்தானே?*

***நிம*** *: சுகந்தினி ரீ போட்டு நான் குடிக்கிறதைவிட, குடிக்காமலே போகலாம்...*

www.padippakam.com



சுகந் : அண்ணை, நீ கேட்டாலும் நான் உனக்கு ரீ போட்டுத் தந்தாலெல்லோ?

லலி : ஏன்... அண்ணைக்கு ரீ போட்டுக் குடுத்தாலென்ன குறைஞ்சே போயிடுவாய்?

சுகந் : இவருக்கு நான் போடுற ரீ பிடிக்காது... ஒருக்காச் சொல்லுவார் சாயம் கூட எண்டு. சாயம் கணக்காயிருந்தால் சொல்லுவார் சீனி கூடிப்போச்செண்டு... இவரிட்டை இப்பிடிக் கதை கேக்கிறதைவிட ரீ போடாமை இருக்கிறர் பெஸர் (சிறந்தது.). Besser

நிம : ஒரு ரீ குடிக்கிறத்துக்கு இவளவு கதை கேக்கவேண்டிக் கிடக்கு... அம்மா, எத்தினை தரம் சொல்லிப்போட்டன். நீங்க வேலைக்குப் போகவேணாம்.

சசி : (வந்தபடி) அம்மா! அண்ணா சொல்லுறாரெண்டு நீங்க வேலைக்குப் போகாமை விடவேண்டாம்... நீங்க வேலைக்குப் போனால்தான் எனக்கு ரசன்கெல்ட் (கைச்செலவுக்கான சில்லறை) கிடைக்கும்...

சுகந் : அம்மாவை வேலைக்குப் போகவேண்டாமெண்டு சொல்லுற நீ, எனக்கும் தம்பிக்கும் பள்ளிக்கூடச் செலவுக்குக் காசு தருவியே... நீ வேலைக்குப் போகமாட்டாய்... ஞாயம்மட்டும் கதைக்க வந்திடுவாய்...

நிம : அம்மா சொல்லிப்போட்டன்... சுகந்தினியைத் தேவை இல்லாமை என்ரை விசயங்களிலை தலையிட வேண்டா மெண்டு சொல்லி வையுங்கோ. பிறகு வீணாய் இவ என்னிட்டை அடி வேண்டுவா... காசு வேணுமெண்டா போய் அப்பாட்டைக் கேக்கிறதுதானே? அவர் சோசல் காசை எடுத்து காருக்கும் பெற்றோல் அடிச்சு, தனக்கும் பெற்றோலடிச்சுக் கொண்டு திரியிறார். இவ என்னட்டைக் காசாம்...

www.padippakam.com



*சசி* : அக்கா... அண்ணாவே அம்மாட்டைத்தான் காசு கேக்கிறது. பிறகு நீங்கள் அண்ணாட்டைக் காசு கேட்டால் அவர் என்னெண்டு தருவார்?

*நிம* : சசி! குட்டு வேண்டப்போறாய்...

*லலி* : சரி, சரி... இனி காலமை சண்டை பிடிச்சுக்கொண்டு நிக்காமை பள்ளிக்கூடத்துக்கு வெளிக்கிடுங்கோ.

(லலிதா உள்ளே செல்ல)

*சசி* : அண்ணா! உங்கடை லைற்றர் (Lighter) ரொயிலட் (Toilet)க்கை இருந்தது... இந்தாங்கோ...

*நிம* : (நிமலனின் தலையில் தட்டி) மெதுவாய்ச் சொல்லன்...

*சுகந்* : ஆஹா... அப்ப இதுவும் நடக்குதா? நல்லது...! அண்ணா! அப்பான்ரை பேரைக் காப்பாத்திப்போடுவாய்...

(நிமலன் அடிக்கக் கையோங்க)

*சுகந்* : அண்ணை... அடிச்சா... அம்மாட்டைச் சொல்லுவன்...

*சசி* : அம்மா! அண்ணாவும் அக்காவும் சண்டை பிடிக்கப் போகினம். கெதியாய் வாங்கோ...

(தாய் வந்தபடி)

*லலி* : தம்பி, நீ நேரத்தோடை போகவேணுமெண்டாய்... இப்ப அவளோடை விளையாடிக்கொண்டு நிக்கிறாய்... சத்தம்போட்டு அப்பாவை எழுப்பாமல் கெதியாய் இறங்குங்கோ.

(ரெலிபோன் அடிக்கிறது)

*சுகந்* : ஹலோ... ஹலோ... ஹலோ...

*லலி* : ஆரது...

*சுகந்* : கட் பண்ணிப்போச்சுதம்மா... அம்மா நான்போட்டு வாறன்...

www.padippakam.com



*சசி : அக்கா... நில்லுங்கோ... நானும் வாறன்...*

*(இரண்டு பேரும் வெளியே போகிறார்கள். மீண்டும் ரெலிபோன் அடிக்கிறது. லலிதா எடுக்க பதில் இல்லை.)*

*லலி : என்ன... திருப்பியும் கட்டாய் போயிற்றுது...*

*நிம : ஆரோ விளையாடுறாங்கள்போலை கிடக்கு... இனி அடிச்சா எடுக்காதேங்கோம்மா... நான்போட்டு வாறன்...*

*(நிமலன் வெளியே போக, தாய் உள்ளே போகிறாள். திருப்பி ரெலிபோன் அடிக்க, நற்குணம் நித்திரையைக் கெடுத்த தொலைபேசியழைப்பை ஆத்திரத்தோடு வந்து எடுக்கிறார்.)*

*நற் : டேய்... ஆரடா அவன் பள்ளிக்கூடம் போகாதவன்... ரெலிபோனென்ன விளையாட்டுச் சாமானேடா... வையடா ரெலிபோனை...*

*(ரெலிபோனை அடித்து வைக்கிறார்.)*

*நற் : இஞ்சை உள்ளதுகள் கண்டவேற்றையும் நம்பரைக் குடுக்கிறது... அவங்கள் நேரகாலமில்லாமை ரெலிபோன் அடிக்கிறாங்கள்... நித்திரைகொள்ள விடுகிறாங்கள் இல்லை.*

*(நற்குணம் உள்ளே போகிறார்.)*

*(அமுதனின் வீடு ரெலிபோன் அடிக்கிறது... அமுதனின் மகள் வந்து எடுக்கிறாள்.)*

*சிந்து : ஹலோ....*

*நல்லதம்பியின்*
*குரல் : ஹலோ... ஆர் கதைக்கிறது?*

*சிந்து : நான் சிந்து கதைக்கிறன்... நீங்கள் ஆர் கதைக்கிறீங்கள்?*

*குரல் : சிந்துவோ.... பிள்ளை... அப்பாவைக் கூப்பிடம்மா. நான் அப்பப்பா... கொழும்பிலை இருந்து கதைக்கிறன்...*

எ-16

www.padippakam.com



**சிந்து :** அம்மா... அம்மா... அப்பப்பா... ரெலிபோன்...

**குரல் :** கெதியாக் கூப்பிடாச்சி...

**சிந்து :** ஹலோ கொஞ்சம் பொறுங்கோ... அம்மாட்டைக் குடுக்கிறன்.

**வினோ :** ஹலோ!

**குரல் :** ஹலோ, அது நான் பிள்ளை... இந்த நம்பருக்கு ஒருக்கா எடுங்கோ... ஐஞ்சு... மூண்டு... நாலு... ஆறு... ஏழு... ரெண்டு..

**வினோ :** கொஞ்சம் பொறுங்கோ மாமா. சிந்து... பேனையை எடு... மாமா எப்பிடிச் சுகமாய் இருக்கிறீங்களே... ராசாத்தியவை எப்பிடி இருக்கினம்...

**குரல் :** அவையும் இஞ்சை என்னோடை வந்திருக்கினம்... நம்பரைக் கெதியாய் எழுதுங்கோ பிள்ளை...

**வினோ :** சொல்லுங்கோ மாமா...

**குரல் :** ஐம்பத்திமூண்டு... நாற்பத்தியாறு... எழுபத்திரெண்டு...

**வினோ :** ஐம்பத்திமூண்டு... நாற்பத்தியாறு... எழுபத்திரெண்டு.. மாமா... அவர் வேலைக்குப்போட்டார்... பின்னேரந்தான் வருவார்.

**குரல் :** பிள்ளை... நாளைக்கு ஏழரை மணிக்கு பிளேன்...

(ரெலிபோன் கட் ஆக)

**வினோ :** ஹலோ... ஹலோ... ஹலோ... ம்... சொன்னதை வடிவாக் கேக்குறதுக்குள்ளை கட் ஆகீற்றுது... சிந்து! ரெலிபோன் வந்தால் என்னைக் கூப்பிடச் சொல்லி உனக்கு எத்தினை தரம் சொல்லுறது... நீ ரெலிபோனை எடுத்து மினக்கெடுத்தினதாலை அப்பப்பா சொன்னதைச் சரியாக் கேக்கேலாமைப்போச்சுது...

www.padippakam.com



**சிந்து :** ரெலிபோன் அடிக்க... அடிக்க நீங்கள் எடுக்காமல் இருந்துபோட்டு இப்ப என்னைப் பேசுறீங்கள்... அப்பாவுக்கு பெரியப்பா ரெலிபோன் அடிக்கேக்கைமட்டும் என்னை எடுத்து அப்பா இல்லையெண்டு சொல்லச் சொல்லுவீங்கள்... இனிமேல் ரெலிபோன் அடிச்சால் நான் எடுக்கமாட்டன். ஓ....

**வினோ:** கதைக்காமல் போ அங்காலை...

(யோசித்து நடந்து திரும்பி வந்து, ரெலிபோனை எடுத்து நம்பர்களை அழுத்துகிறாள்.)

(எதிர்முனை நற்குணம் வீடு. நற்குணம் நித்திரையால் எழுந்து வந்து ரெலிபோனை எடுக்கிறார்.)

**நற் :** ஹலோ... ஆரது?

**வினோ:** நான் வினோ கதைக்கிறன்... கொழும்பிலை இருந்து இப்ப ரெலிபோன் வந்தது. அவர் வேலைக்குப்போட்டார். அதுதான் உங்களுக்குச் சொல்லுவமெண்டு எடுத்தனான்...

**நற் :** ஆரெடுத்தது...?

**வினோ:** உங்கடை அப்பாதான் எடுத்தவர்...

**நற் :** எங்கடை அப்பா எண்டால் உங்களுக்கென்ன குஞ்சியப்புவே? வினோ... மாமாவெண்டு சொன்னால் குறைஞ்சு போவியளோ?

**வினோ:** இல்லை... வாய்தடுமாறிச் சொல்லிப்போட்டன்...

**நற் :** பானைக்குள்ளை இருக்கிறதுதான் அகப்பையிலை வரும்.. நெஞ்சுக்குள்ளை இருக்கிறதுதானே வாயிலை வரும்... சரி... சரி... என்னவாம்?

**வினோ:** நாளைக்கு ஏழரைக்கு பிளேனெண்டு சொன்னவர்.

**நற் :** உதென்ன அடிதலையில்லாத கதை... ஆ... ஏழரையெண்டால் காலமை ஏழரையோ... இரவு

www.padippakam.com



ஏழரையோ? இஞ்சை பிளேன் வாறநேரம் ஏழரையோ... அங்கை வெளிக்கிடுற நேரம் ஏழரையோ?

**வினோ:** (தனக்குள்) ம்... இப்ப எனக்கு ஏழரை பிடிச்சிருக்கு...

**நற் :** என்ன? என்ன சத்தத்தைக் காணேல்லை?

**வினோ:** மாமா கதைக்கேக்கை கட்டாகீட்டுது. உடனை எடுக்கச் சொல்லி நம்பரொண்டு தந்தவர்.

**நற் :** ஓகோ... நீங்கள் எடுத்தால் யூனிற் ஓடும்... என்ரை ரெலிபோனிலை யூனிற் ஓடாதாக்கும். ஆ... நம்பர் தர எடுத்தால்... பிறகேன் வீண் கதையள் கதைச்சுக் கொண்டிருக்கிறீங்கள்? நம்பரைத் தாங்கோ... ஏய்! லலிதா... சுகந்தினி... ஆரெண்டாலும் ஒரு பேனை கொண்டாங்கோ, பாப்பம்... அந்தாளுக்கு அறளை பேந்து போச்சு... அங்கை அவர் ரெலிபோன் எடுத்துச் சொல்ல, அவை இஞ்சை நம்பர் தருகினமாம்...

**வினோ:** என்னங்கோ...

**நற் :** இல்லை... அந்தாளுக்கு அறளை பேந்துபோச்செண்டு சொன்னனான்...

**வினோ:** ஆருக்கு...

**நற் :** அப்பருக்குத்தான்...

**வினோ:** ஓமோம்... உங்கடையப்பாவை நீங்கள் எப்பிடியும் சொல்லிக் கொள்ளலாமாக்கும், என்ன?

**நற் :** என்னெண்டு...

**வினோ:** அது நானிங்க சிந்துவோடை..... சிந்து... சும்மா... இரு... அப்பா வரட்டும்... நீங்கள் நம்பரை எழுதுங்கோ...

(லலிதா பேனை கொடுக்க வாங்கி)

**நற் :** ம்...

**வினோ:** ஐம்பத்திமூண்டு...

www.padippakam.com



நற் : ஐம்பத்திமூண்டு...

வினோ: நாற்பத்தியாறு...

நற் : நாற்பத்தியாறு...

வினோ: எழுபத்திரெண்டு...

நற் : எழுபத்திரெண்டு...

வினோ: சரி... வைக்கிறனுங்கோ... அடுப்பிலை அலுவலாய் நிக்கிறன்... அவர் வந்தாப்பிறகு எடுக்கச் சொல்லுறன்... என்ன...

(ரெலிபோனை நற்குணம் வைக்க)

லலிதா: என்ன... நம்பரை எழுதிப்போட்டு ஒண்டும் கதைக்காமல் வைக்கிறீங்கள்...

நற் : ம்... இவளவு நேரமும் கதைக்காமலென்ன பாடிக் கொண்டே நிண்டனான்...

லலிதா: நான் ஒருக்கா வினோவோடை கதைப்பமெண்டு பாத்துக்கொண்டு நிக்கிறன்... உங்கடைபாட்டுக்கு அடிச்சு வைக்கிறீங்கள்...

நற் : நான் வைக்கேல்லை... அந்த மகாராணிதான் வச்சிட்டா... அடுப்பிலை கறியாம்... அவவுக்கு நல்லாய் வாய் கூடிப்போச்சு. அவவோடை இப்ப கதைக்கக்கூடாது... பின்னேரம் பூச்சி மருந்த கொஞ்சம் அடிச்சுப் போட்டுத்தான் கதைக்கவேணும்.

லலிதா: ஆரும் சொல்லிக் கேக்கிற ஆளாயிருந்தால்தானே ஏதும் சொல்லாமல்...

நற் : என்ன தனியக் கதைச்சுக்கொண்டு போறாய்?

லலிதா: தம்பி பெஞ்சாதியோடை குடிச்சுப்போட்டுக் கதைச்சால், நாளைக்கு உங்களை என்னெண்டு மதிப்பா, சொல்லுங்கோ பாப்பம்...

www.padippakam.com



*நற் : என்ரை மதிப்பு எனக்குத் தெரியும்... நீ உன்ரை அலுவலைப் பார்... நட... ஏய்... எங்க நிமலன்... அவனை வெளிக்கிடச் சொல்லு, சோசல் (சமூக உதவிக் கந்தோர்) க்குப் போகவேணும்.*

*லலிதா: அவன் காலமையே வெளியிலை போய்ரான்...*

*நற் : உனக்கு நேற்றைக்கே சொன்னனான், இண்டைக்க சோசல் (Sozial) லை ரேர்மின் (Termin) இருக்குது... அவனுக்குச் சொல்லி வையெண்டு...*

*லலிதா: அவனுக்கு ஆர்பைற்சம்ற் (Arbeitsamt) (வேலைக் கந்தோர்) ஏதோ ரேர்மின் (Termin) அனுப்பியிருக்குது... போய்ரான்.*

*நற் : சுகந்தினி எத்தினை மணிக்கு ஸ்கூல் (School) ஆல் வருவாள்...*

*லலிதா: இண்டைக்குப் புதன் கிழமை... பதினொண்டே காலுக்குத்தான் அவளுக்கு வகுப்பு முடியும்...*

*நற் : ம்... பன்ரெண்டு மணிக்குப் பிறகு சோசல் (Sozial) இல்லை...*

*லலிதா: வளர்ந்த பிள்ளையளைச் சோசல் (Sozial) க்குக் கூட்டிக் கொண்டு போகாமல், நீங்கள் தனியாய்ப் போய்க் கதையுங்கோ... அதுகளுக்கு சோசல் (Sozial) க்கு வரக் கூச்சமாயிருக்குதாம்...*

*நற் : ஓமோம்... இவையெல்லாம் சோசல் (Sozial) காசிலை வளராமல், உன்ரை கொப்பர் வீட்டுக் காசிலைதானே வளந்தவை...*

*லலிதா: போதும்... இப்ப தேவையில்லாமல் ஐயாவை இதுக்குள்ளை இழுக்கவேணாம்... இப்ப என்னத்துக்கு வினோ ரெலிபோன் அடிச்சது... ஆற்றை நம்பர் தந்தது?*

*நற் : அப்பர் கொழும்பிலை நிண்டு போன் பண்ணினவராம்...*

படிப்பகம்

www.padippakam.com



உடனை எடுக்கச் சொல்லி... அங்க ஆர்பைற்றர் (வேலைகாரன்) வேலைக்குப் போட்டாராம், இவ எனக்கு நம்பர் தாறா...

**லலிதா:** அப்ப எடுங்கோவன்...

**நற் :** ஏன்...?

**லலிதா:** இதென்ன கேள்வி... நாளைக்குப் பிளேனெண்டு ஏதோ கதைச்சுக் கேட்டுது... என்ன ஏதெண்டு விபரம் கேக்கிறதில்லையே?

**நற் :** ஏன்... அவ... மகாராணி கொழும்புக்கு எடுத்துக் கேக்கலாந்தானே?

**லலிதா:** உங்கடை அப்பாவோடை... அவளோ... நானோ எடுத்துக் கதைக்கிறதைவிட... நீங்களோ அமுதனோ கதைக்கிறதுதான் நல்லது... அதுதான் வினோ உங்களுக்கு நம்பர் தந்திருக்கு... வீம்புக் கதை கதைச்சுக் கொண்டிருக்கலாம்... எடுங்கோ.

**நற் :** நீ சொன்னாப்போலை நான் எடுக்கவேணுமோ... என்னோடை எடுத்துக் கதைக்கவேணுமெண்டு அவருக்கொரு யோசினை வரேல்லைத்தானே... எனக்குத் தெரியும் ஆரோடை, எப்ப, என்னத்துக்குக் கதைக்க வேணுமெண்டு.

**(திரை)**

www.padippakam.com



# காட்சி 4



***களம்***

*அமுதன் வீடு.*

***பாத்திரங்கள்:***

*வினோதினி, சிந்து, லலிதா, அமுதன், நற்குணம், குகன்.*

*வினோ தையல் மிஷினில் தைத்துக் கொண்டிருக்கிறாள். அமுதன் ரெலிபோனில் திரும்பத் திரும்ப டயல் செய்கிறார். தொடர்பு கிடைக்கவில்லை.*

***வினோ :*** *என்னப்பா... சாப்பாட்டைப் போடட்டே...*

***அமு :*** *வேண்டாம்ப்பா... கொஞ்சம் சும்மா இரும் பாப்பம்...*

***வினோ :*** *நானொரு விசரி சமைச்சு வைச்சிருக்கிறன்... அவர் பசிச்சுதாம்... கன்ரின்லை சாப்பிட்டவராம்... அப்ப... சமைச்சதை இனிக் கொட்டுறதே... சொல்லிப் போட்டன்... இரவுக்குப் பலகாரம் செய்யமாட்டன்... சோறு தான் சாப்பிடுவியள்... ஓ...*

***அமு :*** *நீர் இப்ப கத்தாமை இருக்கமாட்டீரே? கொழும்பிலும் சரியாப் பதில் சொல்லுறாங்களில்லை... அண்ணை வீட்டையும் ஒருத்தரையும் காணேல்லை.*

***வினோ :*** *இப்ப என்னத்துக்கு உலகமெல்லாம் ரெலிபோன் அடிக்கிறீங்கள்... சும்மா குழம்பாமல் கொஞ்சநேரம் போய் நித்திரையைக் கொள்ளுங்கோ... பெரியத்தான் கட்டாயம் கொழும்புக்குப் போன் பண்ணியிருப்பார்...*

www.padippakam.com



அமு : அவர் கதைச்சிருந்தால் இஞ்சை ரெலிபோன் பண்ணிச் சொல்லியெல்லே இருப்பார்...

வினோ : அவர் தீத்தத்துக்கு யாத்திரை வெளிக்கிட்டிருப்பார்... இனித் தீத்தமாடி முடிஞ்சு பின்னேரக் கையாப்பாத்து ரெலிபோன் எடுப்பார்தானே?

(அப்போது வாசல் மணி ஒலிக்கிறது.)

அமு : ஆரெண்டு பாரும்...

வினோ : நான் கையிலை அலுவலாயிருக்கிறன்... நீங்க ஒருக்காப் பாருங்கோவன்...

அமு : ஐஞ்சு மணித்தியாலம் தைச்சு இருவது மாக் உழைப்பீர்... அதைவிட்டிட்டு எழும்பேலாமையிருக்கு உமக்கு...

(அமுதன் வாசலுக்குச் சென்று)

அமு : ஹலோ... ஆ... குகனே... வாரும்! வாரும்!... மேலை வாரும்... ஒரு ரீ குடிச்சிட்டு இறங்குவம்...

வினோ : ஆரப்பா அது...

அமு : குகன் வருதப்பா... ரீயைப் போடும்... இஞ்சை... நானோருக்கா குகனோடை றாட்டியோவரைக்கும் (றாட்டியோ என்பது ஒரு கடை) போட்டுவாறன்... அண்ணை ரெலிபோன் அடிச்சா விபரத்தைக் கேட்டுவையும்...

வினோ : இப்ப என்ன அவசரத்துக்கு றாட்டியோவுக்குப் போறீங்கள்...

அமு : குகன் ஒரு ரீவி எடுத்ததாம்... போய் ஏத்திக்கொண்டு வரவேணும்...

www.padippakam.com



**வினோ :** உங்கடை காருக்கும் ஓய்வில்லை... உங்களுக்கும் ஓய்வில்லை... உங்கடை காருக்குமேலையப்பா சமூகசேவை வாகனமெண்டு எழுதி ஒரு போட் மாட்டிவிடுங்கோ...

**அமு :** சும்மா இரும் பாப்பம்... அவன் வேண்டாமேண்டு சொன்னாலும் பெற்றோல் அடிச்சுவிடுறவனப்பா...

**வினோ :** ஆ... ஆ... பெற்றோல் கனகாசுக்குத்தானே அடிச்சுவிடுவினம்...

**அமு :** பத்து மாக்குக்குப் பெற்றோலடிச்சாலே ஆகக் குறைஞ்சது எழுவது கிலோ மீற்றர் ஓடலாம்...

**வினோ :** ஊருக்குக் காரோடிக் கொண்டு இன்சூரன்சும் ரக்சும (Tax) கட்டிக்கொண்டிருங்கோ...

**அமு :** அப்ப இன்சூரன்சிலும் ரக்சிலும் கொஞ்சம் தரச் சொல்லிக் கேக்கட்டோ?...

**வினோ :** ஆள் வந்திட்டுதுபோலை இருக்கு... கதைக் காதேங்கோ...

(என்று தையல் மிஷினிலிருந்து எழும்புகிறாள்.)

**குகன் :** (வந்தபடி) வணக்கம் வினோ அக்கா...

**வினோ :** வணக்கம்! வாங்கோ...

**அமு :** என்ன செய்தனி இவளவுநேரமும்... படியிலை ஏறி வந்தனியோ.... தவண்டு வந்தனியோ...

**குகன் :** உங்கடை பாக்பிளற்சிலை கள்ளர்போலை கிடக்கு... ரண்டு துன்னாலையள் (துருக்கி நாட்டவர்) உங்கடை காரைச் சுத்திச்சுத்திப் பாத்துகொண்டு நிண்டாங்கள்... நான் நிக்கிறதைக் கண்டவுடனை மெதுவாய் நழுவீட்டாங்கள்...

www.padippakam.com



அமு : என்னப்பா... ரீ போட்டாச்சோ... அல்லது... றாட்டியோவிலை கோப்பி குடிக்கிறதோ...

குகன் : அண்ணை... வாங்க... றாட்டியோவிலை கபே (Cafe) குடிப்பம்...

அமு : வினோ... அப்ப ரீயைப் போடாதையும்... குகன் கோப்பி வேண்டித் தருகுதாம்... பிறகென்ன.... சரி, பின்ன இறங்கும்...

(இருவரும் வெளியே செல்ல, வினோ றேடியோவைப் போடுகிறாள். றேடியோவில் பாட்டு ஒலிக்கிறது. வினோ தைக்கத் தொடங்குகிறாள். வாசல் மணிச் சத்தம்கேட்டுக் கதவு திறக்கச் செல்கிறாள். சிந்து பள்ளிக்கூடத்திலிருந்து வருகிறாள்.)

சிந்து : அம்மா... அப்பா வந்திட்டாரே?

வினோ : அப்பா இப்பதான் கடைக்குப் போறார்... வந்ததும் வராததுமாய்... ஏன் அப்பாவைத் தேடுறாய்?

சிந்து : அப்பாவைக் கூட்டிக்கொண்டு கடைக்குப் போகவேணும்... எனக்கு ஒரு பேனை..., மப்ப (பைல்), ஸ்றைப்புஹ் (Schreib - Buch)..(கொப்பி). இவளவும் வாங்கவேணும்...

வினோ : சிந்து, போன மாதம்தானே பேனை வாங்கினனி? அதுக்குள்ளை அது பழுதாப்போயிட்டுதோ? நீ பேனையாலை எழுதுறனியோ, இல்லாட்டிக் கொப்பியளைக் கிழிக்கிறனியோ...? அப்பா... செல்லம் தந்து, செல்லம் தந்து உன்னை நல்லாப் பழுதாக்கிப் போட்டார்.

சிந்து : நான் உங்களிட்டைக் கேக்கேல்லைத்தானே... அப்பா விட்டைத்தானே கேக்கப் போறன்...

www.padippakam.com



**வினோ :** கதைக்காமல்போய் வாய்க் (Bag) கை வைச்சிட்டு... யூஸ் (Juice) ஸை எடுத்துக் குடி... கொற்ரலட் (ஒருவகை இறைச்சி உணவு) சாப்பிடப்போறியே?

*(சிந்து உள்ளே போகிறாள்...)*

**வினோ :** ம்... உடனை கோவம் வந்திடுது... கேட்டதுக்குப் பதில் சொல்லேலாமை இருக்கு... என்ன! ஒரு மாதத்துக்கு ஒரு பேனை...! கிழமைக்கொருக்கா ஏதுமொரு சாமான்...! கஸ்டப்படாமல் காசு வருகுதெண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறாய்... எனக்கென்ன... அப்பா வந்தாப் பிறகு கேளன்...

**சிந்து :** வாய்க் (Bag) இல்லாமல் கொற்றலெற், யூஸ் கொண்டு வந்தபடி) அம்மா... அப்பப்பா எப்ப வருவார்...?

**வினோ :** எனக்கு ஒண்டும் சரியாய்த் தெரியாது... பெரியப்பாவுக்கு ரெலிபோன் நம்பர் குடுத்தனான், எடுத்துக் கதைக்கச் சொல்லி. அப்பா வேலையாலை வந்து பெரியப்பாவுக்கு ரெலிபோன் எடுத்தவர்... அங்கை ஒருத்தரையும் காணேல்லை...

**சிந்து :** அக்காவும் பெரியம்மாவும் வீட்டிலை நிப்பினம்தானே...?

*(வாசல் மணி ஒலிக்கிறது.)*

**வினோ :** சிந்து! ஆரெண்டு பார்...

**சிந்து :** (இன்ரர்கோமில் (Intercom) கதைத்தல்) ஹலோ... ஆ... பெரியம்மா... வாங்கோ... அம்மா! பெரியம்மா வாறா...

**வினோ :** பெரியம்மாவோ...?

*(லலிதா உள்ளே வருகிறாள்.)*

**வினோ :** வாங்கோ... அக்கா...

www.padippakam.com



**லலிதா :** வினோ... அமுது இன்னும் வரேல்லையே...

**வினோ :** இப்ப வந்திடுவார்... இருங்கோ...

**லலி :** சிந்து... இஞ்ச வா... இந்தா... (இனிப்புகள் சிலவற்றைக் கொடுக்க)

**சிந்து :** Danke (நன்றி) பெரியம்மா...

**வினோ :** என்னக்கா... இண்டைக்குப் பின்னேரம் வேலை இல்லையே...

**லலி :** இப்ப... ஆறு மணிக்குத்தானே வேலை. ஒரு மணித் தியாலத்தைக் குறைச்சுப்போட்டாங்கள்...

**வினோ :** அப்ப காலமை மூண்டு மணித்தியாலம், பின்னேரம் மூண்டு மணித்தியாலமே... ம்... இவரின்ரை ஒரு ஒழுங்கில்லாத வேலையாலை.... நான் ஒரு வேலைக்கும் போகேலாமை இருக்கு... காலமை, பின்னேரம், இரவெண்டு... இவர் வேலைக்குப் போறார்... நானென்னண்டு வேலைக்குப் போறது... இந்த மிஷினோடை என்ரை காலம் போகுது... வீட்டு வேலையும் செய்து, ஒரு நாளைக்கு ஒரு சட்டைக்குமேல தைக்கேலாதக்கா.

**லலி :** அமுது வேலைக்குப் போகுது... உனக்கென்ன பிறகு வேலை... பேசாமை வாற ஓடரைச் செய்துபோட்டு... வீட்டிலை இருப்பமெண்டில்லை... வேலைக்கப் போப்போறாவாம் வேலைக்கு...

**வினோ :** அக்கா... ரெண்டாயிரம் ஆண்டிலை உலகம் அழியப் போகுதாம்... அதுக்குள்ளை... உழைக்கிறதை உழைச்சு... சிலவழிக்கிறதைச் சிலவழிக்க வேணும்...

**லலி :** ஓமோம் வினோ... றேடியோவிலை சொன்னதாம்...

www.padippakam.com



பூமிக்கு மேலை ஒரு கல்லு விழப்போகுதுதாம்... அது விழுந்தால் உலகம் அழிஞ்சுபோகுமாம்...

வினோ : அக்கா... முந்தியும் இப்பிடியொரு கல்லு விழுந்து உலகம் கொஞ்சம் அழிஞ்சதாம்... அதுதான் பயமாயிருக்கு...

(அமுதன் வருகிறார்.)

அமு : இப்ப விழப்போற கல்லு... ஜேர்மனிக்கு மேலைதான் விழப்போகுதாம்... அதுவும்... எங்கடை வீட்டுக்கு மேலைவந்து... நேரா... வினோவின்ரை தலையிலை தான் விழப்போகுதாம்...

வினோ : சும்மா... இருக்கோ... உங்களுக்கு எப்பவும்... பகிடி... அப்ப ரேடியோவிலை பொய்யே சொல்லுறாங்கள்...?

லலி : வினோ... அந்தக் கல்லை பூமிக்குமேலை விழாமை செய்ய விஞ்ஞானியள் ஆராய்ச்சி செய்யிறாங்களாம்...

அமு : பாருங்கோ அண்ணி... ஆராய்ச்சி செய்யிற விஞ்ஞானியள் உங்களுக்கு அறிவிச்சிருக்கிறாங்கள்... வினோவுக்கு ஒரு சொல்லுச் சொல்லேல்லை...

வினோ : சும்மடா இருங்கோப்பா... இனி இவர் அறுத்துக் கொண்டிருக்கப்போறார்...

அமு : அண்ணி அப்போதையிலை இருந்து ரெலிபோன் அடிச்சன்... வீட்டிலை ஒருத்தரையும் கணேல்லை... அண்ணை கொழும்புக்கு ரெலிபோன் எடுத்தவரே?

லலி : எடுத்திருக்கிறார்போலை இருக்குது...

அமு : என்ன அண்ணி... என்னத்தையோ விழுங்கிறியள் போலை இருக்கு...

படிப்பகம்

www.padippakam.com



லலி : வீட்டிலை நடக்கிற எல்லாத்தையும் வெளிவிடாமல் விழுங்கி, விழுங்கி... பழகிப்போச்சுது... இனியும் விழுங்கினால்... எனக்கு... நெஞ்சு வெடிச்சுப் போகும்... அதுதான் இப்ப வெளிக்கிட்டு வந்தனான்...

அமு : என்னண்ணி... என்ன நடந்தது...

லலி : காலமை வினோ நம்பர் குடுத்த உடனை ரெலிபோன் எடுக்கச் சொன்னனான்... எடுக்க மாட்டனெண்டு இருந்தார்... நான் நிக்கேக்கை கதைக்க விருப்பமில்லையாக்கும் எண்டு நினைச்சுக் கொண்டு கடைக்கு இறங்கீற்றன்... கடையாலை வந்து பாத்தால்... நானூற்றிச் சொச்ச . யூனிற் கதைச்சிருந்துது... மாமா எப்ப வாறாரெண்டு கேக்க, உனக்கேன் அதை... கனடாவிலை ஒரு வந்தான் வரத்தான்... இங்கயொரு தோட்டக்காட்டாள்... எல்லாரும் என்ரை குடும்பத்துக்கு முதலாளியோ எண்டு கேக்கிறார்...

அமு : என்ன அது தோட்டக்காடு...

லலி : எங்கடை ஐயா யாழ்ப்பாணத்திலை இருந்து கண்டிக்குப் போய் எஸ்டேற்றிலை வேலை செய்தவர்... நான் அங்கையே பிறந்து வளர்ந்தனான்... அதாலை நான் தோட்டக்காட்டாளாய்ப் போனன்...

அமு : இதென்ன கதையண்ணி... அண்ணைக்கென்ன விசர் கிசர் பிடிச்சிட்டுதே?

வினோ : (வந்தபடி) அப்ப இனி ஜேர்மனியிலை பிறக்கிற பிள்ளையளெல்லாம்... தாங்கள் ஜேர்மன்காரர் எண்டு சொல்லாமாக்கும்...

அமு : சும்மா இரும்... உம்மடை கதையும் நீரும்!

www.padippakam.com



வீனோ : தகப்பன்... ஆப்பிட்டுப் போனார்...

அமு : எங்கை ஆப்பிட்டவர்... இப்ப கனடாவுக்கோ... கொழும்புக்கோ... அடிச்சதெண்டு தெரியாமைக் குழப்பியெல்லோ விட்டிருக்கிறார்...

லலி : அமுது... மாமா வந்தால் இங்சையே நிக்கட்டும்... எங்கடை வீட்டை இடைக்கிடை நீர் கூட்டிக் கொண்டு வந்தால் காணும்... அங்கை அவர் நிக்க வேண்டாம்...

அமு : ஏனண்ணி...?

லலி : உங்கடை அண்ணை ஒருநாளும் மாறமாட்டார்... மாமாவை வீட்டுக்கை வைச்சுக் கொண்டு, என்னைப் பேசுறதையோ அடிக்கிறதையோ நிப்பாட்டப் போறதில்லை... பிள்ளையளுக்கும் தகப்பனுக்கும் ஒத்துப் போகுதில்லை...

வீனோ : அதுகள் வளந்த பிள்ளையள்... அதுகளுக்குத் தேவையானதைத் செய்யாட்டி... கோவம் வருந்தானே..?

லலி : சுகந்தினிக்குப் படிக்க வேணுமெண்டு ஆசை.... நான் பின்னேரம் வேலைக்குப் போயிடுவன்... இவர் குடிச்சுப்போட்டு சம்பல் போடு... இறைச்சி பொரி... எண்டு கேட்டால் அவள் படிக்கேலாது... அதைச் சொன்னாலும் விளங்கிக் கொள்ளுறாரில்லை... நிமலனுக்கு வேலை கிடைக்காததிலை ஆத்திரம்... தான் தனியப்போய் வேறையெங்கையும் இருக்கப் போறனெண்டு நிக்கிறான்...

அமு : அண்ணி... நிமலன்ரை போக்குச் சரியில்லை... அவன்ரை செற்றுகளும் அவளவு சரியில்லை...

லலி : நானென்ன செய்யிறது... உங்கடை அண்ணை ஒழுங்காய் இருந்தால், அவனேன் இப்பிடித் திரியிறான்?

www.padippakam.com



சோசல் இவரை வேலை தேடச்சொல்லுது... இவர் அதைக் கடத்துறதுக்கு அவனைச் சோசலுக்கு வாவெண்டு நிக்கிறார். அவன் சோசலுக்குப்போய், தகப்பனுக்காகக் கதைக்கத் தனக்கு வெக்கமாயிருக் கெண்டுறான். இவளவு நாளும் நடுவிலை நிண்டு நான் ஒருபக்கம் பேச்சும் ஒரு பக்கம் அடியும் வேண்டிச் சமாளிச்சுப்போட்டடன்... இப்ப மாமாவும் வந்து வீட்டுக்கை இருக்க, ஏதும் ஒரு பிரச்சினை வந்தால் மாமான்ரை மனம் எவளவு கவலைப்படும்... சொல்லுங்கோ பாப்பம்... அவர் இப்ப இஞ்சை வாறது... பிள்ளையள்... பேரப்பிள்ளையளைப் பாத்துச் சந்தோசப்பட... மன ஆறுதலுக்கு வாறவரை, இவர் நிம்மதியாயிருக்க விடமாட்டார்...

**வினோ** : அக்கா... சிலநேரத்திலை மாமாவைக் கண்ட சந்தோசத்திலை... பெரியத்தான் இவளவு நாளும் நடந்ததுமாதிரி நடக்காமை, ஒழுங்காயும் இருக்கலாமெல்லே?

**லலி** : வினோ, நீ சொல்லுறதைக் கேக்கச் சந்தோசமாய்தான் இருக்கு... ஆனால்...

**அமு** : அண்ணி, வீணாய் யோசிக்காதையுங்கோ... அப்பா வந்தால்... அண்ணை பிழையாய் நடக்கமாட்டார்...

(வாசல் மணி ஒலிக்க)

**வினோ** : ஆரெண்டு பாருங்கோப்பா....

(அமுதன் கதவு திறக்கச் செல்ல)

**லலி** : சரி... நேரமாகுது... வினோ.... நான் வெளிக்கிடப் போறன்... இரவுக்கொருக்கா ரெலிபோன் எடுத்து என்னெண்டு சொல்லு... கொத்தான் எடுத்தால் நான்

www.padippakam.com



இஞ்சை வந்ததெண்டு சொல்லாதை...

அமு : அவ இனியென்னத்தை மறைக்கிறது... ஆள் வருகுது...

வினோ : ஆரப்பா...

அமு : அண்ணைதான் வாறார்...

லலி : போச்சுது... இண்டைக்கு வேலைக்குப் போன மாதிரித்தான்... அமுது... ஆளிப்ப கொழுவுறதுக்குத் தான் வருகுது... நீரொண்டும் கோவிக்காமைக் கதையும்... வினோ... நீயொண்டும் கதையாதையாச்சி...

நற் : (வந்தபடி) நீ... வேலைக்குப் போறன்... போறனெண்டு சொல்லிப்போட்டு வீடு வீடாய்த் திரிஞ்சு... என்னை மரியாதை கெடுக்கிறதெண்டு முடிவெடுத் திட்டியாக்கும்... ஆ...

அமு : அண்ணை... என்ன வீடுவீடாய்த் திரிஞ்சது? அண்ணி என்ரை வீட்டை வரக்கூடாதே...?

நற் : ஓமோம்... நீர் குடும்பத்துக்குப் பெரியாள்... உமக்கு... மரியாதை தரத்தான் வேணும்...

லலி : சரி, நான் போயிட்டுவாறன்... எனக்கு வேலைக்க நேரமாகீட்டுது...

நற் : என்னைக் கண்டவுடனை நீ வெளிக்கிட்டால் எனக்கொண்டும் விளங்காது... அப்ப... நானொரு வெறும் பேயன்... என்ன...?

லலி : நீங்கள் இருந்து கதைச்சிட்டுப் போங்கோவன்... ஐஞ்சரை மணியாகுது... நானினி... றாம் பிடிச்சுப் போக ஆறு மணியாகீடும்...

நற் : நீ ஜேர்மன் கவர்மென்ரை (German Goverment) ஏமாத்தி... ரக்ஸ் (Tax) கட்டாமல் வேலை செய்யலாம்... ஆனா...

www.padippakam.com



நற்குணத்தானுக்குச் சுத்தேலாது... தெரியுமே... உன்ரை பிச்சைக்காசு... அறுநூறு மாக்கிலை என்ரை குடும்பம் நடக்கேல்லை, விளங்குதே... நீ இப்ப... இஞ்சை என்னத்துக்கு வந்தினி... எண்டு... சொல்லாமல்... படியாலை இறங்கேலாது...

அமு : அமுதன் வந்து நற்குணத்துக்கு முன்னே நின்று அண்ணி... நீங்க... நடவுங்கோ...

நற் : என்னடா...

அமு : அண்ணை... உதிலை இரு... அண்ணி... நீங்க இறங்குங்கோ... வினோ... அண்ணியை அனுப்பி... கதவைப் பூட்டும்...

(லலிதா செல்கிறாள். வினோ பின்தொடர்கிறாள்.)

அமு : அண்ணை... அப்பா எப்ப வாறார்...?

நற் : எனக்கவர் ரெலிபோன் எடுத்தா எல்லோ எனக்குத் தெரியும்... உனக்கு ரெலிபோன் எடுத்தவர்... அப்ப நீயெல்லோ அதைச் சொல்லவேணும்....

அமு : அண்ணை... அடாத்துக் கதை கதைக்காமைச் சொல்லு... இப்பதான் கேள்விப்பட்டனான்.. கொழும்பிலை வெடிகுண்டுகளோடை ரண்டு லொறி வெடிச்சிருக்குதாம்... சனம் செத்திருக்குதாம்... கனஆக்களுக்குக் காயமாம்.. இப்ப இனி ரெண்டு கிழமைக்கு கொழும்பிலை பதட்டமாயிருக்கும்...

நற் : பதட்டம்... அது நோமல் (சாதாரணம்)தானே... தாய்மண்ணைப் பாக்கப் போனவர்... தலைப் பிள்ளையை மறந்தார்... இப்ப கொழும்பிலை நிண்டு ததிங்கிணந்தோம் போடப்போறார்.

www.padippakam.com



*(வினோ நற்குணத்தை வெறுப்பாகப் பார்த்துவிட்டு உள்ளே செல்கிறாள்.)*

*அமு* : *உன்னைப் படிப்பிச்சதுக்கு அப்பா நாலைஞ்சு அனாதைப் பிள்ளையளை வேண்டி வளத்திருக்கலாம்... ச்சீ... என்ன கதை கதைக்கிறாய்? கொஞ்சமெண்டாலும் மனுசனுக்கு நெஞ்சிலை ஈவிரக்கம் இருக்கவேணும்... அப்பா வந்தாப் பிறகும் உப்பிடித்தான் குடிச்சுக் கூத்தாடப்போறியாக்கும்... அப்பா இஞ்சை வராமை நேராய் கனடாவுக்குப் போயிருக்கலாம்... நீ உப்பிடியிருக்கிறதைப் பாத்தா அவற்றை மனம் என்ன பாடுபடுமெண்டு யோசிச்சியே? நாளைக்கு உன்ரை பிள்ளை உப்பிடி நடந்தால் உன்ரை மனம் தாங்குமே?*

*நற்* : *நீயெல்லாம் புத்தி சொல்லிக் கேக்கிற அவளவுக்கு நற்குணத்தான் ஒண்டும் புத்தி கெட்டவனில்லை... அப்பா... ஜேர்மனிக்கு வாறார்... என்ரை வீட்டைதான் வாறார்... வந்தவுடனை நான் உனக்கு அறிவிப்பன்... நீ... அங்கைவந்து... அவரைப் பாக்கலாம்... பிறகு நீ விரும்பினால்... இஞ்சை கூட்டிக்கொண்டு வந்து... வைச்சிருந்துபோட்டு என்ரை வீட்டை கொண்டுவந்து விடவேணும்... நல்லதம்பிக்குப் பிள்ளை நீமட்டுமில்லை... நற்குணமெண்டொருத்தன் இருக்கிறா-னெண்டதை ஞாபகத்திலை வைச்சு இனிமேல் கதை... நான் வாறன்...*

*(வினோ வந்து சைகைமூலம் அமுதனைக் கதைக்க வேண்டாமென்று காட்டுகிறாள்.)*

*அமு* : *சரி... அப்பா எப்ப வாறார்...?*

*நற்* : *உனக்கு அது தேவையில்லாத கேள்வி... உனக்கு நாளைக்கு எத்தினை மணிக்கு வேலை...?*

www.padippakam.com



அமு : காலமை ஆறு மணிக்கு...

நற் : ஓகே... எயர்போட்டிலை (Airport) அப்பரை நான் றிசீவ் (Receieve) பண்ணி... வீட்டை கூட்டிக் கொண்டு போறன்... நீ எல்லாராயும் கூட்டிக்கொண்டு வீட்டை வா...

அமு : சரி... நான் பின்னேரம் வீட்டை வாறன்... எத்தினை மணிக்கு அப்பா வாறாரெண்டு சொல்லன்?

நற் : இப்பவெல்லே சொன்னான்... நல்லதம்பிக்கு நற்குண மெண்டொரு மகன் இருக்கிறானெண்டு... பிறகென்னடா கதை...

வினோ : பெரியத்தான், கோப்பி குடிக்காமைப் போறியள்...

நற் : கோப்பியோ... கோப்பியை வைச்சு உந்த சாமியாருக்குக் குடும்...

அமு : அண்ணை... ராசாத்தி... அல்லது தனம் கொழும்புக்கு வந்தவையே...

நற் : கொழும்பில் பதட்டம்... பதறாதே மனமே...

(நற்குணம் போகிறார்.)

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 5



***களம்***

*அமுதன் வீடு.*

***பாத்திரங்கள்:***

*வினோ, சிந்து, அமுதன், சோதி.*

*சிந்து கயிறடித்து விளையாடிக் கொண்டிருக்கிறாள். வானொலியில் I.B.C. Radioவின் பாடல் ஒலிக்கிறது....)*

***வினோ :*** *(சத்தமாக) சிந்து... வீட்டுக்கை நிண்டு துள்ளாதை சிந்து...*

***சிந்து :*** *அம்மா... Heute ist Samstag... (இண்டைக்கு சனிக்கிழமை...)*

***வினோ:*** *சனிக்கிழமையெண்டால் நீ என்ன வேணுமெண்டாலும் செய்யலாமாக்கும்... என்ன... காலமையிலை இருந்து சொல்லுறன் குளிக்கச் சொல்லி... கடத்திக் கொண்டு நிக்கிறாய்...*

***சிந்து :*** *இண்டைக்க Swimm (நீச்சல்)க்கு அப்பா கூட்டிக்கொண்டு போவாரெண்டு சொல்லிப்போட்டு... ஏமாத்திப்போடீங்கள்... நான் இண்டைக்குக் குளிக்கமாட்டன்.*

www.padippakam.com



**வினோ :** சிந்து... சொல்லுறதைக் கேள்... அப்பா வந்தவுடனை கடைக்குப்போட்டு, பெரியப்பா வீட்டை போகவேணும்...

**சிந்து :** அம்மா...அப்பப்பா... வந்திட்டாரா...?

**வினோ:** அப்பப்பா Colombo லையிருந்து வெளிக்கிட்டிட்டாரோ தெரியேல்லை... உங்கடை பெரி யப்பா ரெலிபோன் அடிச்சாத்தான் அப்பப்பா வந்தது வராதது தெரியும்...

(ரெலிபோன் அடிக்கிறது.)

**சிந்து :** ஆ... அம்மா... பெரியப்பாவின்ரை ரெலிபோன்...

(என்றவாறு சிந்து ரெலிபோனை எடுக்கப் போக)

**வினோ :** சிந்து... ரெலிபோனிலை தொடக்கூடாது... போ... அங்காலை...! (ரெலிபோனை வினோ எடுத்து) ஹலோ...!

**அமுதனின் குரல்:** வினோ! அண்ணை ரெலிபோன் எடுத்தவரே?

**வினோ :** இல்லையப்பா... இப்ப... நீங்கள் ரெலிபோன் எடுக்க, நான் அவர்தானெண்டு நினைச்சன்...

(சிந்து வந்து மைக்கை அமத்துகிறாள்.)

**அமு :** எனக்கு வேலை செய்யவும் மனமில்லாமல் இருக்கு... பத்து மணியோடை கேட்டுக்கொண்டு வரட்டே..?

**வினோ :** (சிந்துவின் கையில் அடித்து) சிந்து... என்ன பழக்கமிது... கதைச்சுக் கொண்டிக்கேக்கை... மைக்கை அமத்திறது... இஞ்சை... சனிக்கிழமை வேலை... சம்பளம் கூடவெல்லே... short லீவு எடுத்து வேலையைக் குழப்பிப்போடாதீங்கோ...

**அமு :** அப்ப... நீரொருக்கா அண்ணை வீட்டுக்கு அடிச்சுப் பாருமன்...

www.padippakam.com



**வினோ :** *ம்... சரி...*

*(ரெலிபோனை வைக்கிறாள்.)*

**சிந்து :** *அப்பா... பத்து மணிக்கு வந்தால் Swimm போயிருக்கலாம்... நீங்கள் எல்லாத்துக்கும் வேண்டாம், வேண்டாம் எண்டுதான் சொல்லுவீங்கள்...*

**வினோ :** *அப்பப்பாவின்ரை சேதியொண்டும் தெரியாமல், உன்னைவின்ரை கட்டாயம் Swimmக்கு கூட்டிக்கொண்டுதான் போவார்...*

**சிந்து :** *அம்மா... பெரியப்பாவுக்கு ரெலிபோன் எடுக்கச் சொல்லி... அப்பா சொன்னார். நீங்க எடுக்கேல்லையோ...?!*

**வினோ :** *அதுதான் என்ன செய்யிறதெண்டு யோசிக்கிறன்...*

**சிந்து :** *அப்ப.. நான் எடுத்துக் கதைக்கிறன்...*

**வினோ :** *ஐயோ சும்மா இரு சிந்து...*

*(அப்போது வாசல் மணி ஒலிக்கிறது...)*

**வினோ :** *சிந்து... ஆரெண்டொருக்கா பார்...*

**சிந்து :** *ஹலோ... ஓம் நிக்கிறா... வாங்கோ...*

**வினோ :** *ஆர் சிந்து..?*

**சிந்து :** *பெரியம்மாவோடை வேலை செய்வா.? அந்த அன்ரி...*

**வினோ :** *சோதி அன்ரியெண்டு சொல்லு... பெரியம்மாவோடை வேலை செய்யிற அன்ரி... நல்ல அடையாளம்..!*

**சோதி :** *(வந்தபடி) வணக்கம் வினோ...*

**வினோ :** *வணக்கம்... வாங்கோ அக்கா... நேற்றைக்கு வாறனெண்டு சொன்னீங்கள்... காணேல்லை...*

www.padippakam.com



**சோதி :** நேற்றைக்கு நேரமில்லாமல் போச்சு... வினோ! முடிஞ்சுதே...?

**வினோ :** ஓமக்கா... அக்கா! ரீ போடட்டே?

**சோதி :** ரீ வேண்டாம்... கொஞ்சம் ஜூஸ் தாரும்... (ஜூஸ் எடுக்க வினோ செல்ல) என்ன... சிந்து... உங்கடை அப்பப்பா வாறாராம்...

**சிந்து :** இன்னும் வரேல்லையே... நாங்கள் இண்டைக்குப் பெரியப்பா வீட்டை போறம்...

(வினோ ஜூசுடன் வந்தபடி)

**வினோ :** என்னவாம்... உது அலட்டுது...?

**சோதி :** அப்பப்பா வாறாரெண்டு... சிந்துவுக்கு சரியான சந்தோசம்போலை இருக்கு...

**வினோ :** சிந்து... போய் குளியம்மா... அப்பா வந்தவுடனை வெளிக்கிட வேணும்...

(சிந்து உள்ளே போக)

**சோதி :** என்ன வினோ... உங்கடை மாமா வாறதை... ஒருத்தருக்கும் தெரியாமல் ரகசியமா வைச்சிருக்கிறாராம் உங்கடை அத்தான்...

**வினோ :** அதையேன் பேசுவானக்கா! இஞ்சை மாமா ரெலிபோன் எடுக்கேக்கை... இவரில்லை.. நான் கதைக்கிறதைவிட அத்தான் கதைச்சா நல்லது எண்டு நினைச்சு, நான் நம்பரை அவரிட்டைக் குடுத்திட்டன்... அது இப்ப வில்லங்கமா போய்ருது...

**சோதி :** நற்குணம்... சரியான மோசம் வினோ... லலிதாவுக்குக் கூட மாமா எப்ப வாறார் எண்டு சொல்லேல்லையாம்...

www.padippakam.com



**வினோ :** நேற்றைக்கு ரெலிபோன் எடுக்கேக்கை மாமா சொன்னவர்... நாளைக்குப் பிளேனெண்டு... இண்டைக்கு மாமா வந்தவுடனை ரெலிபோன் அடிச்சுச் சொல்லுறதெண்டுதான் எங்களுக்கும் அத்தான் சொல்லியிருக்கிறார்... இன்னும் ரெலிபோன் அடிக்கேல்லை...

**சோதி :** என்னெண்டு இண்டைக்கு வருவாரெண்டு சொல்லுவீர்...? நேற்றைக்கு ரெலிபோனிலை இண்டைக்குப் பிளேனெண்டு சொன்னால், நாளைக்குத் தானேப்பா இஞ்சை வந்து சேருவார்...?

**வினோ :** (கொஞ்சம் யோசித்து) நீங்கள் சொல்லுறது சரிதானக்கா... அத்தான் நேற்றைக்கு இஞ்சை வந்து குழப்பினதிலை... நாங்கள் ஒண்டையுமே சரியாய் யோசிக்கேல்லை... அது சரி அக்கா... இண்டைக்கு அக்கா வேலைக்கு வரேல்லையோ...?

**சோதி :** வேலைக்கு வந்திட்டுத்தான் கடைக்குப் போகவெண்டு போறா... வினோ... லலிதா... சரியான பாவமப்பா... காலமையும் பின்னேரமும் வேலை செய்தும் பிரயோசனமில்லாமல் இருக்கெண்டு கவலைப் படுகுது...

**வினோ :** ஒண்டுக்கு ரெண்டு வேலை செய்துகொண்டு பிரயோசனமில்லை எண்டு சொன்னா நம்பேலுமே? சும்மா கதைக்குச் சொல்லுறதுதான்... அவகாசு வைச்சிருக்கிறா... எப்பிடியும் ரண்டு வேலையாலும் மாதம் ஆயிரத்திருநூறுக்குமேலை வரும்தானே?

**சோதி :** லலிதா கஸ்டப்பட்டு வேலைசெய்ய நீர் கணக்குப் பாக்கிறீரப்பா... ஆயிரத்திருநூறு என்னெண்டு வரும்...? ரெண்டு வேலையாலும் தொளாயிரம் மாக் வரும்...

www.padippakam.com



**வினோ :** *பாத்தீங்களே... தொளாயிரமெண்டுறது கொஞ்சக் காசே...?!*

**சோதி :** *அதுக்குத்தான் உங்கடை அத்தான் ரெலிபோன் கதைச்சு முடிக்கிறாராமே...!*

**வினோ :** *என்ன?! அவளவு காசுக்கும் ரெலிபோன் கதைக்கிறாரே... சோசல் காசிலை வீட்டு வாடகை... கரண்ட்... சாப்பாட்டுச் செலவெல்லாம் அத்தான்தானே பாக்கிறார்... ரெலிபோன் காசும் பிள்ளையளின்ரை சிலவுகளும்தானே அக்கா குடுக்கிறா... எப்பிடிப் பாத்தாலும் மாதம் ஐநூறுக்கு மேலை மிச்சம் வரும்...*

**சோதி :** *சும்மா.... இப்பிடிக் கதைக்கக்கூடாது... வினோ! ஒரு நாளைக்கு கை... ஒரு நாளைக்கு கால்... ஒரு நாளைக்கு முகம் எண்டு... வீங்கி, வீங்கி... அது... பாவமப்பா...*

**வினோ :** *இவ வேலைக்குப் போகாமல் வீட்டிலை இருந்து... எல்லாப் பொறுப்பையும் அவரிட்டை விட்டால்... அவர் வழிக்கு வருவார்... இவவுக்கு வேலையைவிட மனமில்லை...*

**சோதி :** *வேலையைவிட்டால் அவளவுதான்... பொம்பிளைப் பிள்ளையை வைச்சுக்கொண்டு நற்குணம் பொறுப் பில்லாமல் இருக்கேக்கை... லலிதாவும் வேலை செய்யாட்டில்... பின்னடிக்குச் சரியா கஸ்டப்படவேணும்...*

**வினோ :** *ஏனக்கா கஸ்டப்படவேணும்? நிமலனும் இனி வேலை செய்யத்துவங்கீடுவான்... அக்கா பேசாமல் வீட்டை இருக்கலாம்...*

*(வாசல் மணி ஒலிக்கிறது. சோதி ஜூஸ் குடித்துக் கொண்டிருக்க,*

www.padippakam.com



*வினோ சென்று மணி அடித்தவருடன் தொடர்பு கொள்கிறாள்.)*

**வினோ :** ஆ... அக்காவே... வாங்கோ அக்கா...! (வந்தபடி) சோதியக்கா... லலிதா அக்காதான் வாறா... சோதி அக்கா! நானுங்களிட்டை இப்பிடிக் கதைச்சதெண்டு வாய் தடுமாறி அக்காட்டைச் சொல்லிப் போடாதையுங்கோ... எனக்கேதன் மனதிலைபட்டால் அதை ஆரிட்டையும் கேட்டுப்போட வேணும்... மனதிலை எனக்குச் சுமையளை வைச்சிருக்கேலாது...

**சோதி :** நான் ஏன் சொல்லுறன், வினோ? எனக்கென்ன வீட்டுக்கு வீடு கதை காவுறதே வேலை...? வினோ... கதைச்சுக் கொண்டிருந்ததிலை நேரம் போனது தெரியேல்லை... பத்து மணியாகீற்றுது... நான் போயிற்று வாறன், என்ன...

*(அப்போது லலிதா உள்ளே வரல். முகத்தில் காயம்.)*

**லலி :** சோதி... இஞ்சையே நிக்கிறீர்... நீர் இஞ்சை வாறதெண்டு தெரிஞ்சால்... நானும் உம்மோடை வந்திருப்பனே?

**சோதி :** நீர் கடைக்குப் போகவேணுமெண்டீர்... அதுதான் நான் சொல்லேல்லை... சரி.. அப்ப நான் வாறன்... வினோ... போட்டுவாறன்...

**வினோ :** என்னக்கா... விபரமேதும் தெரியுமே...?

**லலி :** அவர் ஒண்டும் சொல்லேல்லை வினோ... நேற்றைக்கு இரவு வேலையாலை வர... என்னத்துக்கு உங்கடை வீட்டை போனதெண்டு அடிச்சுப்போட்டார். நல்ல வேளை... நிமலன் அப்ப வீட்டிலை இல்லை...

**வினோ :** அக்கா... மாமா வெளிக்கிட்டது, வெளிக்கிடாததுபற்றி ஒண்டும் கதைக்கேல்லையே...?

www.padippakam.com



**லலி :** எங்கை கதைக்கிறது... விடிய விடியக் குடிச்சுப்கொண்டு இருந்து... அலட்டினார். கனடாவுக்கு எடுத்தவர்போலை இருக்கு... மலர் வீட்டிலை ஒருத்தரும் இல்லையாக்கும்... தன்பாட்டிலை... மலரையும் புருசனையும் பேசிக் கொண்டிருந்தார்... சாப்பிடவும் இல்லை... அப்பிடியே செற்றீலை நித்திரையாய் போய்ரார்... நான் காலமை வேலைக்கு இறங்கீற்ரன்... உங்களுக்கேதும் ரெலிபோன் அடிச்சவரோ எண்டு கேக்கத்தான் வந்தனான்...

**வீனோ :** கொழும்பிலை சரியான பதட்டமாயிருக்காம்... வீடுவீடாய்ப்போய் ஆக்களைப் பிடிக்கிறாங்களாம்... ராசாத்தியும் புருசனும் மாமாவை அனுப்புறத்துக்கு கொழும்புக்க வந்திச்சினமோ... தெரியாது...

**லலி :** இந்த மனிசன் வாய் தடுமாறி... வெறியிலைதன்னும் ஏதும் சொல்லுமெண்டு பாத்தன்... என்னென்னவோ பழசெல்லாம் சொல்லிச்சொல்லிப் பேசிக் கொண்டு இருக்கு. மாமா வாறதைப்பற்றியோ... ராசாத்தியைப் பற்றியோ வாய் துறக்கேல்லை...

**வீனோ :** எல்லாருக்கும் ஆறறிவு... அத்தானுக்குமட்டும் கடவுள் ஐஞ்சறிவுதான் படைச்சிருக்கிறார்...

**லலி :** (கோபமாக) வினோ)... நீ ஆரிட்டை ஆரைப்பற்றிக் கதைக்கிறாய் எண்டதை ஞாபகத்திலை வைச்சிரு... எல்லாருக்கும் என்ரை மனுசன் இளக்காரமாய்ப் போனார்... அது சரி... என்ரை மனச்சுமையை உங்களிட்டைக் கதைக்க, நீ பல்லுக்குப் பதமாய்க் கதைக்கிறாய்... சரி... நான் போட்டுவாறன்...

**வீனோ :** அக்கா, நீங்கள் படுற கஸ்டத்தைப் பாத்து சகிக்கேலாமைத்தான் உப்பிடிக் கதைச்சனான்... கோவிக்காதையுங்கோ...

www.padippakam.com



*லலி : சரி வினோ, ஏதும் தெரிஞ்சால் ரெலிபோன் அடிக்கிறன்... அமுது வேலையாலை வந்தவுடனை வீட்டை வாங்கோ...*

*(என்று சொல்லிவிட்டுப் புறப்படுகிறாள்.)*

**(திரை)**

o o o

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 6



**களம்**

அமுதன் வீடு, நற்குணம் வீடு
என மேடையில் இரு பகுதிகள்.
குகன் வந்தபடி... பாரம்
சுமந்து படியேறிய களைப்புத் தெரிய...

**பாத்திரங்கள்:**

அமுதன், வினோ, சிந்து,
நல்லதம்பி, குகன், நற்குணம்.

குகன் : அது இருக்கட்டும்... நான் தூக்கிறன்... நீங்கள் உள்ளுக்க வாங்கோ...

அமு : ஆரோடை கதைக்கிறீர்... என்னத்தை உள்ளுக்குக் கொண்டுவராமல் வச்சிட்டு வாறீர்...

குகன் : கொஞ்சம் பொறுமன்.

அமு : என்னெண்டாலும் வாசலிலை வைக்காமல் உள்ளுக்குக் கொண்டாரும். முன் வீட்டுக்காரன் கத்துவான்... (என்று கையிலிருந்த புத்தகத்தைத் தவறவிட்டு குனிந்து எடுக்கிறார்.)

(நல்லதம்பி உள்ளே வர, அமுதன் நிமிர்கிறார். தந்தையைக் க்ண்ட ஆச்சரியம்... மகிழ்ச்சியோடு எழும்பி, 'அப்பா...' என்றபடி... இருவரும் தழுவிக்கொள்கின்றனர்.)

எ-18

www.padippakam.com



அமு : வினோ... சிந்து... இஞ்சை வாங்கோ... ஆர் வந்திருக்கிறதெண்டு பாருங்கோ... கெதியா வாங்கோ...

விநோ : (உள்ளிருந்து) கொஞ்சம் பொறுங்கோப்பா... அடுப்பிலை கறி... கருகப்போகுது... இப்பிடிக் கத்துறீங்கள்...

அமு : கறியைக் கவிட்டுக்கொட்டிப்போட்டு வாரும்... இஞ்சை அப்பா வந்திருக்கிறார்...

விநோ : என்ன... அப்பாவோ? சிந்து... சிந்து...!!

சிந்து : (வந்து) அம்மா! அம்மா!! அப்பப்பா... வந்திட்டார்...

நல்ல : இஞ்சை வா... ஆச்சி... (பேத்தியை அனைத்து முத்தமிடுகிறார்.)

விநோ : மாமா...

நல்ல : என்ன பிள்ளை... வா... ஆச்சி... தம்பி! (குகனைப் பார்த்து) இருங்கோவன்... எங்க தம்பி... அண்ணை...?

அமு : எங்கை அண்ணையோ... அண்ணை உங்களோடை வரேல்லையே?

குகன் : குழம்பாதையுங்கோ... ஐயா Canteen கை வந்து ஶ்ரீலங்கா ஆக்கள் வேலை செய்யினமோ எண்டு இங்கிலீசிலை விட்டிருக்கிறார். வெயிற்றர் என்னை இங்கிலீஸ் பண்டிதரெண்டு நினைச்சுக் கூப்பிட்டு விட்டான்... ஐயாவின்ரை விபரத்தைக் கேட்டிட்டு, கூட்டிக்கொண்டு வாறன்...

அமு : விநோ! பாத்தீரே... அண்ணை Airportக்குப் போகேல்லை...

படிப்பகம்

www.padippakam.com



குகன் : ஐயா... நான் வரப்போறன்...

அமு : குகன்... நில்லும், சாப்பிட்டிட்டுப் போகலாம்...

குகன் : இல்லை அமுதண்ணை... வின்சன் இண்டைக்கு Saterlight எடுக்கிறதுக்கு போக வரச் சொன்னவன்... நேரம்போட்டுது... நான் போட்டுவாறன்...

நல்ல : தம்பி... தண்ணி வென்னி குடிக்காமல் போகாதீங்கோ...

அமு : விணோ! ரீ போடுமப்பா...

குகன் : ஐயா, பிரச்சினையில்லை. நான் நெடுக இஞ்சை வந்துபோற ஆள்த்தான்... நாளைக்கு வாறனே...

நல்ல : சரியய்யா... உங்களைக் கண்டிராவிட்டால், நான் இன்னும் Airportஇலதான் நிண்டிருப்பன்... மெத்தப் பெரிய உபகாரமய்யா... நாளைக்கு வருவியள்தானே?

குகன் : ஓமோம்...

நல்ல : பின்னைச் சரி... போட்டு வாங்கோ...

(குகன் போக)

அமு : அப்பா... அண்ணை உங்களோடை ரெலிபோன்லை கதைக்கேல்லையே....

நல்ல : கதைச்சவன்... உனக்கு வேலையெண்டு.. சொல்லிக் கதைச்சவன்... பிளேன் நம்பர்... நேரம் எல்லாம் கேட்டவன்... நீ வரமாட்டாய்... தான்தான் Airportக்கு வருவன் எண்டும் சொன்னான்... நானும் Airportஇல நிண்டு பாத்துப்பாத்துக் களைச்சுப்போனன். எனக்கு இந்த Bagகுகளைத் தூக்கேலாது... தம்பி... அந்த Bagகுகள் வெளியிலை இருக்குது...

www.padippakam.com



குகன் : (உள்ளுக்கு வந்தபடி) பயப்படாதீங்க ஐயா... இந்தா கொண்டுவந்திட்டன்... மகனைப் பாத்த சந்தோசத்திலை Bagஐ மறந்திட்டியள்... சரி ஐயா, நான் வாறன்...

(குகன் போகிறார்.)

நல்ல : ரெலிபோன் எடுப்பமெண்டால் இஞ்சத்தே காசுமில்லை... ரெண்டு பிள்ளையள் இஞ்சை இருந்தும் அனாதையைப்போலை என்னை நாலு மணித் தியாலமாய் அலையவிட்டிட்டியள்... நானும் ஒரு மடையன்... டொலரிலை கொஞ்சத்தை வைச்சிருந்திருக்கவேணும்... பிள்ளையளிட்டைத் தானே போறன்... எனக்கேன் காசையெண்டு கிடந்த காசெல்லாத்தையும் ராசாத்தியிட்டைக் குடுத்திட்டு வெளிக்கிட்டிட்டன்... டொலரிலை கொஞ்சம் வச்சிருந்தால் எயர்போட்டிலை மாத்தி ரெலிபோன் அடிச்சிருப்பன்... ம்.. காசில்லாமல் ஒண்டும் செய்யேலாதெண்டு அறுபத்தைஞ்சு வயதிலையாவது எனக்கு விளங்கிச்சுதே...

அமு : எப்ப வாறீங்கள்... எத்தினை மணிக்கு வாறீங்கள் எண்ட ஒரு விபரமும் எனக்குத் தெரியாதப்பா...

நல்ல : அப்ப அந்தளவுக்கு அப்பாவிலை அக்கறையாய் இருந்திருக்கிறாய்....

அமு : அண்ணை உங்களோடை கதைச்சுப்போட்டு... எனக்கு ஒண்டும் சொல்லமாட்டனெண்டிட்டார்... அப்பா வந்தாப் பிறகு ரெலிபோன் எடுப்பன்... நீ என்ரை வீட்டிலை வந்து அப்பாவைப் பாக்கலாம் எண்டிட்டார். கனடாவுக்கு ரெலிபோன் எடுத்தா... அங்கை ஒருத்தரும் இல்லை...

www.padippakam.com



நல் : ஓமோம்! அவை வீட்டிலை இல்லை... மொன்றியால் முருகன் கோயிலிலை நேற்றைக்குத் தேர்... அவை... என்ரை ரெலிபோனைப் பாத்துக்கொண்டிருந்து... கதைச்சுப்போட்டு அண்டைக்கே மொன்றியாலுக்குப் போட்டினம்... அங்க மருமோன்ரை சிநேகிதப் பொடியன் இருக்கிறான்... அவனும் நல்ல பொடியன்... மருமோனையும் பிள்ளையளையும் கண்டால் விடமாட்டான்... ஞாயிற்றுக்கிழமை இரவுதான் இனி அவையை ரொறொண்டோவுக்கு அனுப்புவான்...

வினோ : (ரீயுடன் வந்தபடி) அப்ப இண்டைக்கு வந்திடுவினம்... ம்... அவை நிண்டிருந்தாலாவது என்ன பிளைற்றிலை நீங்கள் வாறீங்களெண்டு அறிஞ்சிருக்கலாம்... மாமா... ரீயைக் குடியுங்கோ...

நல் : ஓம் பிள்ளை... (ரீ குடித்து) பிள்ளை... இனிமேல் எனக்கு சீனி கொஞ்சம் குறைச்சுப் போடுங்கோ...

வினோ : அப்ப... இதைக் குடிக்காதேங்கோ... நான் வேறை போட்டுத்தாறன்...

நல் : வேணாம், வேணாம்... இருந்திட்டு ஒரு நாளைக்குக் கொஞ்சம் கூடப்போட்டுக் குடிச்சால் ஒண்டும் செய்யாது... தம்பி, இப்ப கனடாவிலை எத்தினை மணி இருக்கும்...?

அமு : (மணி பார்த்து எண்ணிப் பார்த்து) காலமை ஆறரை மணி அப்பா...

நல் : சரி... அப்ப... இரவுக்குத்தான் ஒருக்கா எடுத்துச் சொல்லவேணும்... தம்பி, அண்ணை ஏன் எயர்போட்டுக்கு வரேல்லையெண்டு தெரியேல்லை...

www.padippakam.com



ஒருக்கா ரெலிபோன் எடுத்துப் பாரன்... லலிதா எப்பிடி இருக்கு..?

அமு : இருக்கிறா...

வினோ : மாமா... முகம் கழுவுறதெண்டால் கழுவிக்கொண்டு வாங்கோ...

நல் : ஓம் பிள்ளை... தம்பி... உந்த சின்ன (Bag) வாக்கைத் திறந்து, அதுக்குள்ளை துவாயும் சாரமும் இருக்கு... எடு பாப்பம்...

(ரெலிபோன் அடிக்க வினோ எடுக்கிறாள்.)

வினோ : ஹலோ...

மறுமுனை......

வினோ : அக்கா... மாமா இங்க வந்திட்டார்...

(அமுதன் மைக்கை அமத்த..)

லலிதா : என்ன வந்திட்டாரோ...?

வினோ : ஓமக்கா... எயர்போட்டிலை கண்டு குகன் கூட்டிக்கொண்டு வந்திட்டுது...

லலி : விடிய விடியக் குடிச்சுப்போட்டு... இப்ப எழும்பி, தன்னை ஒருத்தரும் நித்திரையாலை எழுப்பி விடேல்லையெண்டு தாறுமாறாப் பேசிப்போட்டு ஓடுறார்.... மாமா எங்கை... அவரிட்டைக் குடு...

வினோ : ரொய்லட்டுக்கை நிக்கிறார்... வந்தவுடனை எடுக்கிறனக்கா...

லலி : சரி... உடனை ஒருக்கா எடு, என்ன...

படிப்பகம்

www.padippakam.com



**வீணா :** சரியக்கா...

(ரெலிபோனை இருவரும் வைக்க...)

நற்குணம் வீட்டில் ரெலிபோன் ஒலிக்கிறது. லலிதா எடுக்க, சுகந்தினி மைக்கை அமத்துகிறாள்.

**நற் :** நேரகாலமில்லாமல் ஆரோடை கதைச்சுக் கொண்டிருந்தனி... அப்பா ரெலிபோன் எடுத்தவரே...

**லலி :** இல்லையே... நீங்கள் இப்ப எங்கை நிக்கிறியள்...?

**நற் :** கொப்பற்றை தோட்டக்காட்டிலை... எயர்போட்டிலை அப்பாவைக் காணேல்லை... இன்போமேசன்லை விசாரிக்க, பிளைற் வந்திட்டுதாம்... அவரும் அதிலை வந்திருக்கிறாராம்...

**லலி :** அப்ப, எங்கை போனவர்... வடிவாத் தேடிப் பாருங்கோ...

**நற் :** தேடிப் பாக்கட்டோ... தேடிப் பாக்கிறதுக்கு என்ரை அப்பா என்ன சில்லறைக் காசே.... வையடி...

அமுதன் வீட்டில்...

**வீணா :** என்னப்பா... நடக்கேலாமை நடக்கிறார்... துணிஞ்சு தனியை வெளிக்கிட்டு... ஊருக்குப்போட்டு... இஞ்சை வந்திருக்கிறாரே...!

**அமு :** அது அந்தக் காலத்து ஒடியல் கூழும் குரக்கன் புட்டும்... செய்யிற வேலை....

(ரெலிபோன் அடிக்கிறது.)

**அமு :** (ரெலிபோனை எடுத்து) ஹலோ...

**நற்குணத்தின் குரல்:** டேய்... அப்பா ரெலிபோன் அடிச்சவரே...

www.padippakam.com



அழு : ரெலிபோன் அடிக்கேல்லையே...! நீ அங்க நிக்கிறாய

நற்குணத்தின் குரல்: .........எயர் போட்டிலை

அழு : எயர்போட்டிலையோ... என்னத்துக்கு அங்கை போனனீ... அப்பா வந்த பிளேனைக் கழுவித் துடைக்கவே போனனீ... அப்பா இஞ்சை வந்திட்டார்...

நற்குணம் வீடு...

சுகந் : அம்மா... அண்ணாவும் அப்பாமாதிரி வரப்போறார் போலை இருக்கு... ராத்திரி அண்ணா வரேக்கை நான்தான் கதவு திறந்தனான்... ஒரே வாசமாயிருந்துது...

லலி : உனக்கு அவனைப்பற்றி ஏதும் சொல்லாமை இருக்கேலாது... என்ன...

சுகந் : அப்பாவை நினைச்சு நினைச்சு கவலைப்படுகிறீங்கள்... இனி அண்ணாவும் அப்பாமாதிரி வந்திட்டால் நீங்கள் தாங்கமாட்டீங்கள் எண்டதாலைதான் சொல்லுறன்...

லலி : அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான் எண்டு பாக்கிறவையைச் சொல்லவைக்கப் போறான்போலை இருக்கு... சுகந்தினி... நீ அண்ணாட்டை ஒண்டும் கதைக்காதை... நான் கதைச்சுக் கொள்ளுறன்...

சுகந் : அம்மா... அப்பா எங்கை அவசர அவசரமாய் ஓடினவர்...?

லலி : எயர்போட்டுக்கு போயிருப்பார்போலை இருக்கு.... அங்கை அப்பப்பாவைக் காணேல்லையாம்...

www.padippakam.com



*சுகந் : என்ன... அப்பப்பாவைக் காணேல்லையோ...?*

*லலி : அப்பிடித்தான் சொன்னார்... என்ன நடந்ததெண்டு தெரியேல்லை...*

*அமுதன் வீடு... (மேலுள்ள உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது சிந்து குப்பைப்பையுடன்) வெளியே போகிறாள். வினோ சாப்பாடு கொண்டு வந்து முகம் கழுவிவிட்டு வந்த நல்லதம்பியிடம் நீட்டுகிறாள். இடையே நுழைந்த நற்குணம் அதை வாங்கிக் கொண்டு...)*

*நற் : நீங்களெல்லாம் கெட்டிக்காரரெண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறியளோ... அப்பா வெளிக்கிடுங்கோ... வீட்டை போவம்...*

*நல்ல : என்னய்யா... என்ன நடந்தது... ஏன் ராசா எயர்போட்டுக்கு வரேல்லை...*

*நற் : ஏன்... என்ரை வீட்டிலை சாப்பாடில்லையே... நாங்களென்ன காத்துக் குடிச்சேடா வாழுறம்... அப்பா... நீங்கள் வெளிக்கிடப் போறியளோ, இல்லையோ?*

*நல் : தம்பி... இவளவு காலத்துக்குப் பிறகு அப்பா உன்னை ஆசையாய் பாக்க வந்திருக்கிறன்... ஏனைய்யா இப்பிடிக் கொதிச்சுக்கொண்டு நிக்கிறாய்...*

*நற் : என்னைப் பாக்க வந்தனீங்களோ...? அப்ப பிறகேன் இவன் உங்களை இங்கை கூட்டிக்கொண்டு வந்தவன்?*

*வினோ : அத்தான்... அவர்போய் மாமாவைக் கூட்டிக்கொண்டு வரேல்லை...*

*நற் : ஆ... அவர் போகாமல் நீர்தான் எயர்போட்டுக்குப் போனனீரோ?*

www.padippakam.com



அமு : வினோ... நீர் கதைக்காதையும்... அண்ணை! சும்மா பிசத்திக் கொண்டிருக்காதை... நீ இரவிரவாய் நித்திரை கொள்ளாமல் இருந்திட்டு, பிளேன் வாற நேரத்திலை நித்திரை கொண்டிருக்கிறாய்... உனக்கு ஏலாட்டி என்னட்டைச் சொல்லி இருந்தால், நானாவதுபோய் அப்பாவைக் கூட்டிக்கொண்டு வந்திருப்பன்... நாங்கள் இஞ்சை மலைபோலை இருக்க, ஆரோ எயர்போட்டிலை இருந்து அப்பாவைக் கூட்டிக் கொண்டு வாறளவுக்கு வச்சிட்டாய்... இப்ப உனக்குச் சந்தோசந்தானே...?!

நற் : என்னடா... என்ன நாடகமே போடுறாய்? அப்பா எப்ப வாறாரெண்டு கனடாக்காரன் உனக்குப் போன் பண்ணியிருக்கிறான்... நீ ரகசியமாய் ஆரையோ எயர்போட்டுக்கு அனுப்பி, அப்பாவை வீட்டை கூப்பிட்டிட்டு... இப்ப ஒண்டும் தெரியாதவன்போலை நடிக்கிறாய்... அந்த வந்தான் வரத்தானுக்கு நான் ரெலிபோன் அடிக்க அடிக்க, அவன் எடுக்காமை இருக்கிறான்...

நல் : பொத்தடா வாயை... வந்தான் வரத்தானாம்... வந்தான் வரத்தான்...! ஆரடா வந்தான் வரத்தான்? நீ எயர்போட்டுக்கு வரவேண்டிய நேரத்துக்கு வராமை விட்டிட்டு இப்ப வாயிலை வந்தபடி எல்லாரையும் பேசிக்கொண்டிருக்காதை... நான் எயர்போட்டுக்கு வரேக்கை ஒருத்தரும் என்னைக் கூப்பிட வரேல்லை... நீ வருவாயெண்டு பாத்துப் பாத்துக் களைச்சுப் போனன்... ரெலிபோன் எடுக்கிறத்துக்கும் காசில்லை... என்ன செய்யுறதெண்டு யோசிச்சுப்போட்டு... சரி...

www.padippakam.com



எப்பிடியும் எயர்போட் ரெஸ்ரோறண்டிலை ஒரு தமிழ்ப் பொடியனெண்டாலும் வேலை செய்வான்தானே எண்ட நம்பிக்கையிலை போய்க் கேட்டன்... அங்கை அந்தப் பொடியன் கடவுள்மாதிரி நிண்டான்... விபரத்தைச் சொன்னன்... அமுதனைத் தெரியும் எண்டு... இஞ்சை கூட்டிக்கொண்டு வந்து விட்டிட்டுப் போறான்...

நற் : நான் இஞ்சை இருக்கேக்கை கண்டவன் நிண்டவன் எல்லாம் உங்களை என்னெண்டு இஞ்சை கூட்டிக் கொண்டு வரேலும்? கனடாக்காரனும் இந்தக் கோஷ்டியளும் என்னையும் உங்களையும் பிரிச்சுப்போட்டுது.

நல் : மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயெண்டமாதிரி இருக்கு உன்ரை கதை... என்னை உன்னட்டை இருந்து பிரிக்கிறதாலை ஆருக்கு என்னடா லாபம்... நானென்ன சொத்துப் பத்தே வச்சிருக்கிறன்...

நற் : அப்பா... உங்களுக்கு ஒண்டும் விளங்காது... ஊரைவிட்டு வந்தாப் பிறகு இந்தச் சனங்களெல்லாம் மாறிப்போட்டுது...

நல் : இந்தச் சனங்கள் மாறிப்போட்டுதெண்டு நீ சொல்லுறாய்...?

நற் : நான் இஞ்சையிருந்து கனடாவுக்கு அடிக்கடி ரெலிபோன் எடுக்கிறன்... நீங்களெப்ப சிலோனுக்குப் போறதெண்டதை எனக்குச் சொல்ல வேணுமெண்டு ஒருத்தரும் நினைக்கேல்லை... உவன் வேலை வேலையெண்டு திரிவான்... ரெலிபோன் வந்தாக்

www.padippakam.com



கதைப்பான்... ஒருத்தருக்கும் தானாய் ரெலிபோன் எடுக்கமாட்டான்... உவனுக்குத்தான் நீங்களும் கொழும்பிலை இருந்து ரெலிபோன் எடுத்திருக்கிறீங்கள்...

நல் : கொழும்பிலை இருந்து உனக்கு ரெலிபோன் எடுத்துக் களைச்சுப்போய்த்தான் தம்பிக்கு எடுத்தனான்... உனக்கு ரெலிபோன் எடுத்தால் எப்ப பாத்தாலும் என்கேஜ்ஜாய் இருக்கும்..

நற் : உப்பிடிச் சொல்லச் சொல்லி உவன் சொல்லித் தந்தவனே? கூடப் பிறந்த சகோதரங்கள் என்னை மதிக்கேல்லை... நான் பெத்த பிள்ளைகள் என்னை மதிக்கேல்லை... இப்ப என்னைப் பெத்த தகப்பனும் என்னை மதிக்கேல்லை...

(என அழுகிறார்.)

நல் : சரி... நட.... நான் வீட்டை வாறன்... அமுது... நான் அண்ணை வீட்டை போட்டுவாறன்...

அமு : ஐயா... சாப்பிட்டிட்டுப் போங்கோவன்...

நல் : நான் வரேக்கை பிளேனுக்கை சாப்பிட்டனான்தானே... ஐயா..

நற் : அப்பான்ரை (Bag) வாய்க்குகள் எல்லாம் வரட்டும்...

அமு : என்ன...

நற் : தமிழ் விளங்கேல்லையோ... அப்பான்ரை (Bag) வாய்க்குகள் எல்லாம் கெதியாய் வரட்டும்...

படிப்பகம்

www.padippakam.com



*(அமுதன் (Bag) வாய்க்குகளை கொண்டுவந்து முன்னே வைக்கிறான். நற்குணம் அதைத் தூக்கிக்கொண்டு...)*

*நற் : அமுதன்... நாளைக்கு சசீன்ரை பேர்த் டே... அப்பாதான் சீவ் கெஸ்ட்... எல்லாரும் பின்னேரம் வீட்டை வாங்கோ...*

*(வெளியே போகிறார்.)*

*நல் : (அமுதனிடம்) தம்பி... பாஸ்போட் என்னட்டைக் கிடக்குது... இந்த லாண்டட் பேப்பர் சின்ன (Bag) வாய்க்கிலை கிடக்குது... அதை இஞ்சை கவனமாய் வை... இதை எடுக்கிறதுக்காக மருமேன் நல்லாய்த்தான் கஸ்டப்பட்டுப் போனார்...*

*(நல்லதம்பியும் வெளியே போகிறார்.) நான் போட்டு வாறனப்பு... பிள்ள... ராசாத்தி... நான் போட்டு வாறன்.*

**(திரை)**

○ ○○

www.padippakam.com



# காட்சி 7



***களம்***

*நற்குணம் வீடு*

***பாத்திரங்கள்***

*பிறந்த நாள் விழாவுக்கான அலங்கரிப்பில் வீடு. பிள்ளைகள் அனைவரினதும் உடைகள் வழக்கத்திற்கு மாறாக நன்றாக இருக்கிறது. யோகம் சேலை அணிந்திருக்க நற்குணமும் தன் உடையில் கவன் செலுத்தியிருப்பது தெரிகிறது... நல்லதம்பி வேறு உடையில். வரிசையாக அடுக்கப்பட்ட கதிரைகளின் வலப்பக்கத்து முனையில் அமர்ந்து சஞ்சிகை யொன்றைப் படித்துக் கொண்டிருக்கிறார். இடது பக்க முனையில் சிறுமேசையொன்று அதில் ஒரு மதுபானப் போத்தல்... அருகே நான்கைந்து கண்ணாடிக் கிண்ணங்கள்... (மேடையின் நடுவே பிறந்தநாள் கேக்வைக்கப்பட்டிருக்கிறது) மங்கலான ஒளி மேடையிற் பரவ திரை விலகுகிறது.* ***நாடகமாந்தர்,*** *நற்குணம் குடும்பத்தினர், நல்லம்பி, குகன்...*

*திரை விலக... தகப்பனுக்கு முதுகைக் காட்டியபடி நின்று மதுவில் சிறிது அருந்திக் கொள்கிறார் நற்குணம்...*

*நல்ல : தம்பி! அமுதனை இன்னும் காணேல்லை... ஒரு ரெலிபோன் அடிச்சுப் பாரன்...*

*நற் : இண்டைக்கு Birthday எல்லாரும் வாருங்கோ எண்டு... நேற்றைக்கு நேரிலை சொல்லிப்போட்டுத்தானே வந்தனான்... பிறகுகன்ன ரெலிபோன் அடிப்பு!...*

படிப்பகம்

www.padippakam.com



நல் : உன்ரை வீட்டு விஷேத்துக்கு மற்ற ஆக்கள் வாறதுக்கு முதல் உன்ரை சகோதரம் வரவேணும் அதுதான் முறை...

நற் : அதை... அவருரெலே யோசிக்கவேணும்... மூண்டாவது மனுஷன் மாதிரி கேக் வெட்டுற நேரத்துக்கு வரவேணுமெண்டு நினைக்கிறார் போல இருக்கு... வரட்டும்.. ஆறுதலா வரட்டும் அவரென்ன (chef Gust) சீங் கெஸ்றே?

யோக : மாமா வினோ பலகாரம் செய்துகொண்டு வாறதெண்டு சொன்னவ... அதுதான்... பிந்துதாக்கும்.. வந்திடுவினம் மாமா!

நற் : ஹோலுக்கை என்ன கதைக்கிறம் எண்டதைக் கேட்டுக் கொண்டுதான் உள்ளுக்கு நிக்கிறிய ளாக்கும்.. (நளினமாக) ம்... உங்களுக்கு பலகாரம் என்ன? செய்யேலாது... அவவிட்டை சொன்னிய ளாக்கும். ஆ...

யோ் : நான் செய்து கொண்டு வரச் சொல்லேல்லை. வினோ தானாத்தான் காலமை... ரெலிபோன் அடிச்சு... முறுக்குச் சுட்டுக் கொண்டு வாறன் எண்டு சொன்னது.

நற் : ஓகோ! அப்ப... இடையிலை ரகசியாக... ரெலிபோன் பரிவர்த்தனையும் நடக்குது ம். இங்க என்ன நடக்குதெண்டதை... அவர் பெண் சாதி சொல்லி ரெலிபோன் அடிச்சு அறியிறார் என்ன

நல் : தம்பி... இஞ்ச என்ன இராணுவ ரகசியமே வச்சிருக்கிறாய்?... அவன் ரெலிபோன் அடிச்சு அறியுறதுக்கு! (நற்குணம் எரிச்சலுடன் திரும்பிப் பார்கிற)

நல் : தம்பி... அந்தப் பொடியனுக்கு ரெலிபோன் அடிச்சுச் சொன்னியே.

www.padippakam.com



நற் : ஆருக்கு!....

நல் : நேற்றைக்கு என்னை எயர் போட்டிலை இருந்து கூட்டிக் கொண்டு வந்தான்... தம்பி...

நற் : ஆ... அமுதன்ரை சினேகிதனுக்கோ...! அவனுக்கு நான் என்னெண்டு ரெலிபோன் அடிக்கிறது...

நிமா : (வந்தபடி) அப்பப்பா... நீங்கள் வரச் சொன்னனீங்கள் எண்டு காலமை நான் சொல்லிப் போட்டன. (யோகம் உள்ளே போகிறார்)

நற் : ம்.... முன் பின் எனக்குத் தெரியாதவன்! இண்டைக்கு ஒரு பார்ச்லோடை வருவான்! பிறகு தனக்கு கலியாணமெண்டு இன்னொரு நாளைக்கு காட் (Card) கொண்டு வருவான்... இது நற்குணத்துக்கு தேவையே...

நற் : தம்பி... எதுக்கெடுத்தாலும்... உப்பிடிக்குதர்க்கக்கதை கதைக்கானத... நாங்கள் எங்கடை சொந்த ஊரிலை வாழேல்லை... கடல் கடந்து, கண்டம் கடந்து... ஒவ்வொரு நாட்டிலையும் கொஞ்சக் கொஞ்சப் பேர்கிட்டத்தட்ட அனாதையாளைப் பொலமுறம்... முன்பின் தெரியாட்டிலும்... இப்ப இஞ்சையிருக்கிற எங்கடை சனம் தான் எங்களுக்கு உறவுகள்.. சொந்தங்கள் எண்டு நினைச்சு வாழ வேணும்...

நற் : கண்டவன்.... நிண்டவனோடை யெல்லாம் சொந்தாம் கொண்டாட எனக்கென்ன விசரே... அது... உங்கடை சின்ன மகனுக்குத்தான் சரி... நற்குணத்தானுக்கு ஒரு Stets (ஸ்ரேற்றல்) இருக்குது... அவன் தன்னரை Stetsக்கு ஏற்ற ஆக்களோடைதான் பழகுவான்...

(உள்ளிருந்து)

www.padippakam.com



மகள் : (அம்மா!) அவற்றை ஸ்ரேற்றல் காறர் இன்னும் கொஞ்ச நேரத்தில் போத்திலோடை வருவினமெண்டு அப்பாப்பாவுக்கு சொல்லுங்கோவன்..

யோ : (சும்மா இரடி)

நற் : யேய்... உங்க என்ன சத்தம்

நற் : டேய்

யோ : ஆரெண்டுமில்லை... அது... நானும் பிள்ளையும் (வாசல் மணி ஒலிக்கிறது)

நற் : டேய் சசி... ஆரெண்டு பார் ஆரோ (Bell) பெல் அடிக்கினம்....

சசி : (உள்ளிருந்து வந்து வாசல் கதவைத்திறக்க குகன் கையில் ஒரு பார்சலுடன் உள்ளே வருகிறான்) வணக்கம்... வாஸிகோ மாமா வணக்கக்.. வணக்கம்... ஹப்பி பேர்த்டே (Happy Birthday)

நற் : வாங்கோ தம்பி... வாங்கோ இருங்கோ! நேற்றைக்கு உங்களை கண்டிராவிட்டால் எயர்போட்டிலை நிண்டு எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பான்.....

நற் : ஒரு கஷ்டமில்லை... ஒரு ரக்ஸி பிடிச்சுக் கொண்டு வீட்டை வரவேண்டியதுதானே!...

நல் : என்னெண்டு வாறது... கையில காசொண்டுமில்லை.... (Bag) வாய்க்குகளை தூக்கமாட்டன்

நற் : சரி.... சரி...! நீர் வாரும்... தம்பி! தம்பி உம்மடை பேரென்ன?...

குணா : "குகன்" அண்ணை

நற் : ஆ.... நீர் ... அடுதனோடை ஒண்டா வேலை செய்யுறீரோ!

குணா : ஓ. மண்ணை! பிள்ளை.... இஞ்ச.... இந்த தம்பி வந்திருக்கிறார் (என்றபடி உள்ளே போக)

எ-19

படிப்பகம்

www.padippakam.com



நற் : குகன் நீர் அமுதனோடை ஒண்டாவேலை செய்யுறீ ஆரெண்டால்... என்னொண்டு எயர் போட்டுக்குப் போனனீர்... - (சந்தேகித்து) என்னமோ... இடிக்குதே! அவனும் நீரம் ஒண்டா வேலை செய்யிறனீங்கள்... எண்டால் நீர் என்னெண்டு எயர்ப்போட்க்கு அப்பாவை சந்திச்சனீர்...

குணா : அண்ணை... நான் எயர்ப்போட்டிலை (Aushilfi) அவுஸ்ஹில்ப (பகுதிநேர வேலை) ஒண்டும் செய்யிறன்.

நற் : ஒரு கஷ்மில்லை. ஒரு (taxi) (ரக்சிலி) பிடிச்சுக் கொண்டு வீட்டை வரவேண்டியது தானே!....

நல் : என்னெண்டு வாறது... கையில காசொ கண்டுமில்லை... (Bag) வாய்க்குகளை தூக்கமாட்டன் ரெண்டு பேரில் ஒருத்தனும் வரல்லை...

நற் : சரி... சரி... நீர் வாரும்... தம்பி... தம்பி உம்ம பேரென்ன?

கு : "குகன்" ஆண்கள்

நற் : ஆ... நீரும்... அமுதுனோடை ஒண்டா வேலை செய்யுறீரோ!

கு : ஓ மண்ணை...

நல் : பிள்ளை... இஞ்ச.. இந்த தம்பி வந்திருக்கிறார் என்றபடி (உள்ளே போக)

நற் : நீர் அமுதனோடை ஒண்டாவேலை செய்யறீ ரண்டல்... என்னெண்டு எயர் போட்டுக்குப் போனனீர். (யோசனையுடன் - சங்கீதகித்து) என்னமோ இடிக்குதே! அவனும் நீரும் ஒண்டி வேலை செய்யிற்னீங்கள்... எண்டால் நீர் என்னெண்டு எயர்ப்போட்டில் அப்பாவை சந்திச்சனீர்.

குக : அண்ணை... நான் எயர்ப்போட்டிலை (Aushilfe) (பகுதி நேர வேலை) ஒண்டு செய்யிறன்.

www.padippakam.com



நற் : ஆ... ஓகோ... அப்ப ரெண்டு வேலை செய்யுறீர் எண்டு சொல்லும்.. சரி.. வாரும்.. கதைச்சுக் கொண்டிருந்து நேரத்தை ஏன் வீரைக்குவான். (என்றபடி போத்தல் கிளாஸ் அருகே சென்று இரண்டு கிளாஸ்களில் மதுவை ஊற்றிவிட்டு திரும்ப... குகன் நின்ற இடத்திலேயே நற்குணத்தைப் பார்த்தவாறு நிற்கிறான்) என்ன.... அங்க நிக்கிறீர்... வாரும் என்ன கலங்குறனீர்... (Cola) கோலாவோ... அல்லது சிரித்தபடி பச்சைமாவோ! (பெருமையாக) நான் ஒண்டும் கலக்கிறேல்லை. கலந்து குடிக்கிற தெண்டால் பிறகேன் இதைக் குடிப்பான்...

குக : என்னை நான் உ_தொண்டும் குடிக்கிறேல்லை.

நற் : அப்ப... பியரே (Bier)

குக : இல்லையண்ணை... நான்.... ஒண்டும் குடிக்கிறேல்லை.

நற் : இதுதான் கூடாதெண்டுறது. நீர் என்ரை வீட்டுக்:கு வந்த விருந்தாளி அதுவும் என்ரை தம்பியின்ரை சினேகிதன். உ_ம்மை நான் ஒடிவா உ_பசரிக்காட்டில் என்னது தம்பி கோபிப்பான்... தம்பி வரேல்லையெண்டு யோசிக்காமல் எடும் (என்றபடி குடிக்கிறார்)

குக : இல்லையண்ணை... எனக்குப் பழக்கமில்லை...

நற் : பழக்கமில்லையோ... நீர் குடிக்காட்டில்... அமுதனும் குடிக்கிறதில்லையெண்டு... நான் நம்புவன் எண்டு நினைக்கிறீர். என்ன. தம்பி இஞ்சை... குடிக்கிறதில்லை எண்டு சொல்லுறவங்கள் எல்லாம் - ரகசியமா (Bed - Room) பெட்_மூமுக்கை வச்சு... மண்முறவங்கள்... எண்ட சங்கரி எனக்குத் தெரியும்... என்னோடை குடிக்க வெட்_கப்படத் தேவையில்லை... குடியும்..

குக : இல்லையண்ணை...

www.padippakam.com



*யோ* : தம்பி... இந்தாங்கோ... பலகாரம் சாப்பிடுங்கோ - ரீ (Tea) ரீயோ, கோப்பியோ... குடிக்கிறீங்கள்.

*நற்* : யேய்...நான் அவரோடை கதைச்சுக் கொண்டு நிக்கிறது உனக்குத் தெரியேல்லையே... என்னேடை நிக்கேஜ்கை... ரீ - ஆகாப்பிக்கு இஞ்ச என்ன அலுவல்... பலகாரத்தை வச்சிட்டு போ... வாறாய ரீயோ? கோப்பியோ எண்டு கொண்டு (யோகம் உள்ளே செல்ல) நீர் வாரும் எடும் .

*குக* : அண்ணை... சொல்லுறதைக் கேளுங்கோ... நான் குடிக்கிறறேல்லை...

*நற்* : இவ்வளவு நாளும் குடிக்கேல்லையெண்டால் பரவாயில்லை. இண்டைக்குக் குடியும்... என்ரை வீட்டை வந்ததுக்காக்குடியும். என்ரை அப்பரை எயர்ப் போட்டிலை இருந்து கூட்டிக் கொண்டு வந்ததுக்காகக் குடியும்.

*மகள்* : (உள்ளிருந்து) அம்மா... ஹோலுக்கை ஒருக்கா எட்டிப்பாருங்கோ... அப்பா அவரைப்படுத்துரபாட்டை

*யோ* : அப்பப் எங்கை பிள்ளை... அப்பப்பாவைக் கூப்பிட்டு ஹோலுக்கை அனுப்பிவிடு.

*மகள்* : அப்பப்பா பாத்ரூமக்கு (Bath room) ப் போய்டார்....

(உள்ளிருந்து உரையாடல் அத்தும் வரும் வேளையில் நற்குணமும் குடிக்கும்படி குகனிடன் கேட்பதும் அவர் மறுப்பதும் ஒலியின்றித் தொடர்கிறது)

*நற்* : என்ரை வீட்டை வந்தநீர்.... என்ரை உபசரிப்பை ஏற்கமாட்டீட் எண்டால் பிறகேன் வந்தனீர்.. நடவும் (கோபமாக) நடவும்..

*குகன்* : என்னண்ணை.... நீங்கள்.... அந்தப் பெரியவற்றை மனம் நொந்து போகக் கூடாதெண்டு வந்தால் அவரையும்

www.padippakam.com



வீட்டுக்கை வச்சுக் கொண்டு குடி... குடி.... எண்டு... அரியெண்ணப் படுத்திறியள்.... நான் குடிக்கிற தில்லையெண்டு சொல்லுறன். இல்லைக் குடிக்கயெண்டு சொன்னால் என்ன அர்த்தம்... (நல்லதம்பி வருகிறார்)... இங்க வந்தது என்ரை பிழை... நான் வாறன்.

நல் : என்ன தம்பி... அதுக்குள்ளை வெளிக்கிட்டிட்டியள்.. இருங்கோ...

குகன் : இல்லை! ஐயா.... நான் போறன்...

நல் : தம்பி....

குகன் : ஐயா... கோவிச்சுக் கொள்ளாதீங்கோ.... நான் வாறன் (வேகமாக வெளியேறுகிறான்)

நல் : தம்பி... (மகனிடம்) என்ன தம்பி... நீ வீட்டை வந்த மனுரோடையும்.... உன்ரை குதர்க்கத் தனத்தை விடுகிறாய்.. நீ மூண்டு பிள்ளையளுக்குத் தகப்பன்.... எண்டதை யோசிச்சு நடக்கிறாயில்லை....

லலி : மாமா... இந்தாங்கொ... தேத்தண்ணியைக் குடியுங்கோ.... (மெதுவாக மாமனிடம்) மாமா... இப்ப.. அவரிட்டைக் கதைக்காதீங்கோ... நாளைக்கு காலமை கதையுங்கோ....

நற் : என்னடி.... என்னடியங்க. குசு குசுக்கிறாய்

நல் : ஒண்டுமில்லை.. நான் மாமாவைத் தேத்தண்ணி குடிக்கச் சொன்னனான்.

நற் : ஆ... தேத்தண்ணி குடிக்கச் சொன்னனீரோ... தகப்பனுக்கும் பிள்ளையும் கதைக்கேக்கை.... நீ யென்னடி... குறுக்க வாறாய்...

சுகந் : அப்பா... சத்தம் போடாதீங்கோ... ஆக்கள் வரப்போகினம்...

படிப்பகம்

www.padippakam.com



*நற்* : *வந்திட்டா.... அடுத்த முதலாளி வந்திட்டா... என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறியள்... தலையிருக்க வாலாடினால் வந்திடும் விசர் எனக்கு....*

*லலி* : *சுகந்தினி... நட உள்ளுக்கு (தாயை சுகந்தினி பார்க்க) நட உள்ளுக்கு (கணவனைப் பார்த்து) எங்களை மரியாதை கெடுக்காதீங்கோ... கன நாளைக்குப் பிறகு... எங்கடை வீட்டிலை ஒரு கொண்டாட்டம் செய்யுறம் நீங்கள் வழக்கம் போல.... இண்டைக்கு இப்பிடி நிக்காதீங்கோ (போய் கோ.. போய்க்... குளியுங்கோ... ஒருக்கா) குளிச்சிட்டு... வேற உடுப்பு மாத்திக் கொண்டு வாங்கோ....*

*நற்* : *(எட்டி மனைவியின் தலைமுடியைப் பிடித்து) என்னடி.... என்னடி ரெண்டு நிமிஷம் விட்டால்... எனக்கு சட்டம் போட வெளிக்கிடுகிறாய்...(கன்னத்தில் 'பளார் பளார்' என அறைகிறான்) பொத்தவேணும்... வாயைப் பொத்த வேணும். (என சொல்லியபடி அடிக்க)*

*நல்* : *விடு தம்பி... விடு தம்பி.... அவனவ என் மகனைப் பிடித்திழுத்தபடி இருவருக்கும் இடையில் வர நற்குணம் மனைவியை விடுகிறாள் மறுபக்கத்தால் நிமரின் வருகிறான்.*

*நிம* : *வாங்கோம்மா... (மெதுவாக) உங்களுக்கு காலமையே சொன்னானான். இவற்றை கதையைக் கேட்டு வீட்டை ஒருதரையும் கூப்பிட வேணாமெண்டு... அவர்கள் இருவரும் உள்ளே போக..... நல்லதம்பி.... அமர்ந்தபடி சிந்தனையில் ஆழ்கிறார்... நற்குணம் மீண்டும் ஒரு கிளாஜ் மதுவை.... வேகமாக உள்ளே அனுப்பிவிட்டு தகப்பனை நோக்கி வந்தபடி அப்பா... இப்ப சொல்லுங்கோ.... நீங்கள் ஏன் கனடாவுக்குப் போக வேணும்...*

www.padippakam.com



நல் : (புரியாதவராக) என்ன?...

நற் : நீங்கள் ஏன் கனடாவுக்குப் போக வேணுமெண்டு கேட்கிறன்.

நல் : உதென்ன.... கேள்வி தம்பி...

நற் : விளங்கேல்லையோ?.... உண்மை யாத்தான் கேக்கிறன்.. விளங்கேல்லையோ!

(உள்ளிருந்து நிமலனின் குரல்) அம்மா காத்து... திசை திரும்பீற்றுது....

நற் : நாங்கள் இஞ்சை ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையள் இருக்க... நீங்கள் ஏன் கனடாவில... இருக்க வேணும்... நாங்கள் இஞ்சை வச்சி உங்களைப் பாக்க மாட்டமோ!... அமுதனும் தேவையில்லை... நீங்கள் என்னோடையே இருக்க வேணும்... ஓம் நான் உங்களை வச்சுப் பாப்பன்....

நல் : டேய்.... தம்பி... நடக்கிற அலுவலாக் கதை... ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையள் இஞ்ச இருக்கிறியள் தான்... ஆனால் ஒற்றுமையாய் இருக்கிறியளோ? இல்லை.... அவனாவது ஒழுங்கா இருக்கிறான்.... நீ... அப்பிடியே...

நற் : அப்பா

நல் : வேண்டாம்... அதைவிடு... என்னை மாமன் எண்டு நினைக்காமல் தகப்பன் மாதிரி நினைச்சு... அங்கை கூப்பிட்டு வச்சு..... இவளவு நாளும் பாத்தது... மருமோன் தான்.. நான் என்ரை பிள்ளையையும் மருமகனையும் விட்டிட்டு... இஞ்ச இருக்கட்டோ...

நற் : (கோபமாக).. மருமகள்... மருமகன் மருகன் என்னைவிட பெத்தபிள்ளையைவிட.... உங்களுக்கு அந்த வந்தான் வரத்தான் தான் பெரிய ஆள் என்ன.... (நல்ல தம்பியின் முகம் கோபத்தால் மாறுகிறது)

www.padippakam.com



என்ரை தகப்பனை... என்னிட்டை இருந்து பிரிக்கிறதுக்கு அந்த வந்தான் வரத்தானுக்கு என்ன... உரிமை இருக்குது... நீங்கள் செத்தால் கொள்ளி வைக்க வேண்டியது நான்.. அந்த வந்தான் வரத்தானில்லை.

**நல்** : (வேகமாக வந்து நற்குணத்தின் கன்னத்தில் பளாரென அறைந்து விடுகிறார்) ஆரடா... வந்தான் வரத்தான்... ஆரடா... வந்தான் வரத்தான்.. அவர் என்ரை பிள்ளையடா... அவர் எனக்கு மூத்த பிள்ளையடா! அம்மாவைச் சாகக் குடுத்துப் போட்டு நான் தனிய நிக்கேக்கை... என்னைப் பற்றிக் கவலைப்படாத நீ இப்ப... உன்னோடை இருக்கச் சொல்லுறாய். பெத்த பிள்ளையள் மதிக்கிற மாதிரி வாழாமல் கட்டின பெண் சாதியை நாளும் பொழுதும் துன்பப்படுத்திக் கொண்டு இருக்கிற உன்னோடை.... நான் இருக்கட்டோ (லலிதாவும் பிள்ளைகளும் வர)

**நற்** : (கோபத்துடன் வேகமாக சுவரில் மாட்டியிருக்கும் தகப்பனின் 'கோட்' பையிலிருந்து அவரின் பாஸ்போட்டை எடுத்து) இது... இது... 'கனேடியன்'' எண்டு உங்களை நினைக்க வச்சது.. இதுதானே... இது.. இருந்தாத் தானே... கனடாவுக்குப் போவியள்...

**நல்** : சொல்லுறதைக் கேள்... சொல்லுறதைக் கேள்... அதை... இருந்த இடத்திலைவை)

**நற்** : இல்லை.. இது.. இனி உங்களுக்கில்லை.. (மிக வேகமாக கிழித்துக் கொண்டு) இனி... என்னோடைதான் இருக்கிறியள்... வந்தான் வரத்தான் உங்களுக்கு கொள்ளை வைக்க... நற்குணத்தான் விடமாட்டான்..

**நல்** : பிள்ளை.. (சுகந்தினியிடம்) சித்தப்பாவுக்கு ஒருக்கா

www.padippakam.com



ரெலிபோன் அடியம்மா... என்றவாறு "கோர்ட்"டை எடுத்து அணிந்து கொண்டு... உன்னோடை இந்த வீட்டிலை... ஒரு நிமிஷம் கூட இருக்க மாட்டன்... பிள்ளை ரெலிபோன் அடியம்மா... சித்தப்பாவை உடன வரச்சொல்லு.

(வாசல்மணி யொலிக்க சசி ஓடிச் சென்று கதவைத் திறக்க... உள்ளே அமுதனும் வினோவும் சிந்த வருகின்றனர்)

அப்பு.... வா... வா.. வீட்டை போவம்.. இவனோடை ஒரு நிமிசம் கூட இஞ்ச நான் இருக்க மாட்டன்.. இவன் மனுசனில்லை... இவன் மனுசனில்லை... (லலிதா... நிமிலனிடம் காதுக்குள் இரகசியமாகச் சொல்ல அவன் உள்ளே போய் நல்ல தம்பியின் Bag பாய்க்கு களைக் கொண்டு வருகிறான்) என்ரை பாஸ்போட்டைக் கிழிச்சுப் போட்டான்... என்னைக் கனடாவுக்குப் போகக்கூடாதாம்)

அமு : என்ன?

நல் : நற்குணம் எண்டு பேர் வச்சன்... இவனிட்டை.. நாள் முழுக்கை குடிச்சுப் போட்டு கூத்தாடுற குணத்தைவிட வேற ஒண்டுமில்லை.. வா ஐயா... என்னைக் கொண்டு போய் முதலிலை... வீட்டை விட்டிட்டு.. பிறகு நீ.. நீ... இஞ்ச... வா..

அமு : அப்பா... கொஞ்சம் பொறுங்கோ

நல் : (கோபமாக) இல்லை.... நான் இறங்கிறன்.. நீ... என்ரை (bag) வாக்கைக் கொண்டு வா.... என்று நல்லதம்பி ஒரு Bag ஐ குனிந்து.. தூக்க எத்தனிக்க இயலாமல் போய் விடுகிறது நெஞ்சைப் பிடித்தபடி அப்படியே சாய்கிறார்.. அமுது... எனக்கு என்னமோ செய்யுது.... எனக்கு ஏதும் நடந்திட்டாலும் மருமகனிட்டை.... என்னை அனுப்பிப் போடு... இஞ்சையெண்டால்... இவன்... உன்னையும்

www.padippakam.com



விட மாட்டான்.. எனக்கு... இவன் கொள்ளி வைக்கக் கூடாது.. என்னை... அங்க அனுப்பிப் போடு என குரல் அடங்குகிறது.

லலி : மாமா · மாமா (வென லலிதாவும் வினோவும் அழைத்தபடி அருகே வர)

அமு : அப்பா... அப்பா... வினோ... கொஞ்ச தண்ணி கொண்டு வாரும்... நிமிலன்... Ambulance ஆம்புலன்ஸ்க்கு ஒருக்கா ரெலிபோன் அடியென்று சொல்ல திரை மெதுவாக தொடங்குகிறது.

(நிறைவு)

○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com



# பாவலன் பெற்ற பரிசு

படிப்பகம்

www.padippakam.com

# பாவலன் பெற்ற பரிசு

பின்பனிக்காலம் 1993



| நாடக மாந்தரும் | உயிரூட்டியோரும் |
| --- | --- |
| குமணன் | உதயகுமார் |
| அமைச்சர் | தே. தங்கராஜா |
| இளங்குமணன் | நாச்சிமார் கோயிலடி இராஜன் |
| பாவலன் | பி. மனோகிமன் (ஜீவகன்) |
| புலவர் | அ. டொ. ஞானசெல்வம் |
| காவலன் | ரமேஷ் |

படிப்பகம்

www.padippakam.com

# காட்சி 1



***களம்***

*குமணனின் அரசவை*

***பாத்திரங்கள்***

*குமணன் - இளங்குமணன்*
*அமைச்சர் - புலவர் - காவலன்*
*திரை விலகும்பே*

***குமணன்*** : *அமைச்சரே பாவலர்கள் நாவலர்கள் புலவர் பெருமக்களுக்கெல்லாம் பரிசில்களுக்கு.....*

***அமை*** : *வழக்கம்போலவே எல்லா ஏற்பாடுகளும் ஏற்கனவே செய்யப் பட்டுவிட்டது மன்னவா!*

***இ.குமண*** : *அதுதானே... அண்ணா மறந்தாலும் அமைச்சர் மறப்பாரா என்ன? ஆலயங்களில் நிகழும் ஆறுகால பூசைபோல எங்கள் . அரண்மனையில் நிகழும் நித்திய கிரியையல்லவா அது?*

***காவலன்*** : *(வந்து நின்று) குறிஞ்சி நிலக் கோமகன் குமணவள்ளல் கொற்றம் வாழி... வற்றாத வளம் கொழிக்கும் முதியமலை இளவரசர் இளங்குமணன் புகழ் வாழி... வேந்தே புலவர் ஒருவர் தங்களைக் காணக் காத்து நிற்கிறார்.*

www.padippakam.com



**குமணன்** : என்ன! புலவரைக் காக்க வைப்பதா? காவலா! விரைந்து சென்று அவரை அனுப்பிவை.

**காவலன்** : உத்தரவு மன்னா!

**இ.குமண** : (ஏளனமாக) புலவர்..... கவிஞர்... வாயில் வந்ததைப் புலம்புவார்கள். அண்ணா அள்ளிக் கொடுப்பார். வந்தவர்கள் வளத்தொடு செல்வார்கள். உழைத்து வாழமுடியாத சோம்பேறிக் கூட்டத்திற்கு நீங்கள் ஊக்கமளிக் கிறீர்கள் அண்ணா.

**குமணன்** : தம்பி... அவர்கள் உழைப்பால் தான் தமிழ் வாழ்கிறது. நீயும் நானும் சாதிக்க முடியாததை சாதிக்கும் அவர்களா சோம்பேறிகள்? அவர்கள் படைப்பாளிகள். வறுமையற்று அவர்கள் வாழ வேண்டும் செந்தமிழ் அவர்களால் செழித்து வளர வேண்டும்.

**இ.குமண** : அப்படியே முதியமலை செல்வமெல்லாம் கரையவேண்டும். நீங்களும் நானும் ஆண்டிகளாய் அலையவேண்டும்.

**குமண** : தம்பி, ஏன் அப்படி எண்ணுகிறாய்? இறைக்கின்ற கிணறு தான் மேன்மேலும் ஊற்றெடுக்கும். செல்வம் வரும் போகும். வருகின்ற செல்வ மெல்லாம் எம்மோடிருந்தால் நம்நாடும் மக்களும் வறியவர்களாகிவிடுவார்கள். நாட்டு மக்களின் வறுமையை ஒழிப்பதும் நாடாள்வோன் கடமை தம்பி. நாடாள்வோன் மட்டுமல்ல... இருப்பவன் கொடுக்கவேண்டும்.... மறுத்தால் இல்லாதவன் கை தானாக எடுக்கும் நிலை தோன்றிவிடும்.

(புலவர் வந்தபடி)

www.padippakam.com



**புலவர்** : வானுயர ஓங்கட்டும் குமணவள்ளல் புகழ்... பைந்தமிழ் பாவலர் தம் பசிப்பிணி தீர்த்து செந்தமிழ் வழங்கும் செல்வமெல்லாமுனக்கு மாரி போல் தந்திடுவாள் வண்ணத் திருமகளே... ஐயனே! தள்ளாடும் முதுமை கொண்ட என் அன்னை ஊன்று கோலூன்றியும் தனித்துலாவ முடியாமல் பசிப் பிணியால் வாடி உயிரோடு போராடி உருக்குலைகின்றாள். வறுமை போக்க வகையறியாது, வாடிய நிலையிலும் பொறுமை காக்கும் என் மனையாள் விதியை நொந்து உயிர் வாழ்கின்றாள். பசியால் துவண்டு பாலின்றி அழும் பாலனை, சிங்கம் வருமென்று பயமுறுத்தி ஆற்ற முயல்கின்றாள். அன்னை பசி நெருப்பு வயிற்றில் மூண்டால் பயம் வருமா பாலனுக்கு? ஓயாது அழுகின்ற குழந்தை, அது கண்டு குமைந்தழும் மனைவி.....

**இ.குமண** : இதையெல்லாம் பாட்டாகச் சொல்லி பரிசென்ற பெயரில் பிச்சையேற்க வந்திருக்கிறீர்களா?

**குமண** : இளங்குமணா! (நாவையடக்கிப் பேசு.) எம்மை நாடி வந்திருப்பவர் தமிழறி ந்த புலவர்... புலவரே! அமைதி கொள்ளுங்கள். என் தம்பியை மன்னித் தருளுங்கள். இனிமேல் பசியும் வறுமையும் தங்களுக்கில்லை... வயிராற உண்டு சுகமாக சிந்தித்து, வளமாகத் தாங்கள் தமிழ்த் தாய்க்கு தொண்டு செய்ய ஆவன செய்வோம்.... அமைச்சரே... புலவர் பெருமானுக்கு.....

**அமை** : அதோ.... (பரிசு தட்டில் கொண்டுவந்து அதைப் புலவரிடம் கொடுக்க)

**புலவர்** : நன்றி மன்னா நன்றி... வாழி நின் கொற்றம்! நீடுழி காலம்! வளர்க நின் புகழ் பல்லாண்டுகாலம்.

www.padippakam.com



**குமணன்** : புலவரே! மகிழ்வோடு போய் வாருங்கள். (புலவர் செல்ல)

**இ.குமண** : அண்ணா!

**குமணன்** : தம்பி.... பசியால் வாடிய புலவரின் முகம் பரிசில் பெற்றவுடன் தினகரனைக் கண்டதாமரைப்போல் மலர்ந்ததை பார்த்தாயா? கொடிது கொடிது வறுமை கொடிது என்று ஔவை பாடியது எவ்வளவு உண்மையானது என்பதை உணர்ந்து கொள்... நீ இந்நாட்டின் இளவரசன்... அண்ணன் பரிசளிக்க தம்பி அவமதித்தான் என்ற அவப்பெயர் உனக்கு வேண்டாம்...

**இ.குமண** : அண்ணா.... தாங்கள் அள்ளி வழங்கும் செல்வம் எம்மையும் எம் நாட்டையும் வறுமையில் ஆழ்த்திவிடும் என்பதை தாங்கள் சிந்திக்க மறுக்கிறீர்கள்.. இங்கு வருவோரெல்லாம் வறுமையால் வாடித்தான் வருகிறார்களா? அல்லது வறுமையென்று நடிக்கிறார்களா? ஆராய்ந்து பாராமல்....

**குமண** : தம்பி! பசியையும், வறுமையையும் நடித்துக் காட்டி பரிசு பெறுமளவுக்கு, எம்தமிழ் புலவர்கள் தரம் தாழ்ந்து விடவுமில்லை. பசியெது? பாசாங்கு எதுவென்று? புரியாது ஆட்சி செய்ய குமணன் அறிவற்ற மூடனுமல்ல. அமைச்சரே. தமிழ் புலவர் தாழ்வுநீங்கி மேன்மையோடு வாழ்த்தல் வேண்டும் தானமும் தர்மமும் தரணியாளும் மன்னர் தம் தலையாய பணியென்பதை என்னினிய தம்பிக்கு இதமாகப் புரியவையுங்கள். நான் ஆயுத சாலைவரை சென்று வருகின்றேன்.

**அமை** : நல்லது அரசே... (குமணன் செல்கின்றான்) இளவரசே. மன்னர் சொல்வது என்னவென்றால்....

www.padippakam.com



இ.குமண : அமைச்சரே. நிறுத்தும் உமது அதிகப் பிரசங்கித்தனதை... எனது மூளையை சலவை செய்ய உம்மால் முடியாது... வீணாக முயற்சி செய்யவேண்டாம். முதியமலையின் பொன்னும் பொருளும் பொதி பொதியாய்ப் போகிறது நாட்டைவிட்டு. புலவர்களென்ற புதிய கொள்ளைக் காரர்கள் மூலம்....

அமை : இளவரசே! புலவர்களை பழித்துரைக்காதீர்கள். அண்ணன் கேட்டால் அடங்காச் சினம் கொள்வார். அதுமட்டுமல்ல... புலவர்கள் வாக்கு என்றும் பொய்யானதில்லை.... குமணவள்ளல் புகழ் ஓங்குக என அவர்கள் நெஞ்சார வாழ்த்த வாழ்த்த எம்மன்னர் குறிஞ்சி நிலத்திலே புகழ் மலையில் உச்சியிலே கொலுவீற்றிருக்கிறார். இதனால் தங்களுக்கும் பெருமைதானே?

இ.குமண : அவரை வள்ளலென்று மற்றோரார் புகழ்வதால் எனக்கென்ன பெருமை...? எனக்கு அதனால் சிறுமை தான்.... அமைச்சரே... சிந்தனையுடன் நடந்து... அமைச்சர் அருகில் வந்து தந்தையின் அரசிலே தனயர்களுக்கும் உரிமையுண்டுதானே?

அமை : நிச்சயமாக....

இ.குமண : அப்படியானால் முதியமலை அரசில் எனக்கு என்ன உரிமை இருக்கிறது? அண்ணன்தானே அள்ளி அள்ளி வழங்கி வள்ளல் என்று புகழ் பெறுகிறார்.

அமை : இளவரசரே.... மூத்தவர் அரசராவதும்... இளையவர் இளவரசராவதும் மரபு... தங்கள் தந்தையின் அரசுரிமையால் தங்களுக்கு இளவரசர் என்ற பட்டமும் கௌரவமும் என்றுமுண்டு.



படிப்பகம்

www.padippakam.com



**இ.குமண** : என்று முண்டு இளவரசர் என்ற பட்டம்... அமைச்சரே! மரபை மாற்றினான் இளங்குமணன் என்று இந்த மாநிலம் போற்ற விரைவில் வழி செய்கிறேன். அரனென்ற ஆணவத்தில் பாவலரென்று சொல்லி வரும் பஞ்சத்திலடிபட்ட பரரிகளுக்கெல்லாம் என் நாட்டின் செல்வங்களை அள்ளி வழங்கிக் கொண்டு அவர்கள் முன்னே நாவையடக்கிப்பேசு என்று அதிகாரம் செலுத்துகிறான் அண்ணன்.

**அமை** : இளவரசே (குழைந்து) அண்ணன் தம்பியை அன்போடு கண்டிப்பதில் தவறேதுமில்லையே... மேலும் அவர் அரசர். தாங்கள் இளவரசர்....

**இ.குமண** : அமைச்சரே (அதட்டலாக) மீண்டுமொருமுறை இளவரசர் என்று என்னை நீர் அழைத்தால் உமது தலை உமக்குச் சொந்தமாக இருக்காது. காக்கைக்கும் கழுகுக்கும் உமது தலை உணவாகிவிடும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளும்.

**அமை** : தாங்கள் என்மீது கோபம் கொள்கிறீர்கள்... அண்ணனே அரசர்.... அவரைத் தவிர யாரையேனும் மன்னா என்று நான் அழைத்தால் என் தலை என்னிடம் இருக்காது ம்... (பெருமூச்சுவிட்டு) அண்ணனாலோ அல்லது தம்பி யாலோ தான் என் தலை உருளவேண்டுமென்று என் தலையில் எழுதப்பட்டிருந்தால் அந்த விதியை யாரால்த்தான் மாற்றமுடியும்?

**இ.குமண** : விதியாம் விதி. மதியால் வெல்லலாம் விதியை என்பதை (அறியாத) நீர். எப்படித்தான் 'அமைச்சர் ஆனீரோ?

www.padippakam.com



**அமை** : விதியை மதியால் வெல்லலாம் என்பது உண்மைதான். ஆனால் அந்த மதியை நிர்ணயிப்பதே விதிதானே? நான் சொல்வது என்னவென்றால்...

**இ.குமண** : அண்ணனுக்கு கீழ்ப்படிந்து அவர் வழங்கும் கொடையைப்போற்றி வருவோரும் போவோரும் அவரை வள்ளலென்று போற்ற அதைக்கேட்டு இன்புற்று இளவரசனென்ற வெறும் பட்டத்தை மட்டும் நான் சுமந்து கொள்ளவேண்டும். அப்படித்தானே. போரென்றால் முதிய மலையைக் காக்க வாளேந்திக் களம் செல்லும் வெறும் பலிக்கடாவா இளங்குமணன்? இல்லை. ஒருக்காலும் இல்லை. இளங்குமணன் இளித்தவாயன் இல்லை என்று நிருபிக்கிறேன். எட்டாத கனியைத் தட்டிப் பறிக்க முடியாவிட்டால் - மரத்தை வெட்டிச் சாய்த்தேனும் கனியை அடைந்தே தீர்வான் இளங்குமணன் அமைச்சரே! முதியமலைச் சிம்மாசனத்தில் இளங்குமணன் அரசனாக வீற்றிருக்கும் நாள் வெகுதொலைவில் இல்லையென்று உமது அரசனுக்கு, இல்லையில்லை... குமணவள்ளலுக்குச் சொல்லிவையும்....

**அமை** : இளவரசே.... இல்லையில்லை.. மன்னிக்க வேண்டும்... தங்கள் முடிவும் முயற்சியும் விபரீதமானது. அண்ண னிருக்கத் தம்பி அரசாள்வதா என்று அண்டை நாட்டு மன்னரெல்லாம் தங்கள்மீது சினம் கொள்வார்கள். மண்ணுக்காக அண்ணனோடு தம்பி பகை கொண்டான் என்ற பழிச்சொல்லுக்கு

www.padippakam.com



ஆளாகாதீர்கள். குமண வள்ளலின் கொற்றத்தை மக்கள் நேசிக்கிறார்கள். அண்ணன் உயிரோடிருக்கத் தம்பி அரசரானால் எம்நாட்டு மக்களே தங்களுக்கெதிராகக் கிளர்ந் தெழுந்து விடுவார்கள்.

இ.குமண : (சிரித்து) என்ன சொன்னீர். அண்ணன் உயிரோடி ருந்தால்தானே தம்பி அரசாள முடியாது. என் அன்பான அண்ணனின் உயிரைப்பறித்துவிட்டால்... (சிரிப்பு)

அமை : ஐயகோ... வேண்டாம்! வேண்டாம்... இந்த விபரீத எண்ணம்.

இ.குமண : எது விபரீதம்... நான் மன்னனாக எண்ணுவதா விபரீதம்? இல்லை. ஒரு போதும் இல்லை. நான் மன்னனாக வேண்டும். அதற்காக குமணன் அரசு துறந்து காடு சென்று துறவறம் பூணவேண்டும். இல்லையேல் என்னால் அவனுயிர் பறிக்கப்படும். இந்த இரண்டு முடிவில் ஏதாவது ஒன்று. எதை வேண்டுமானாலும் குமணன் தெரிவு செய்யட்டும். அமைச்சரே! என் முடிவில் எந்தவொரு மாற்றமும் இனியில்லை. இதை தெளிவாக குமணனிடம் தெரிவியும். இது முதியமலையின் வருங்கால மன்னனின் கட்டளை. நான் வருகிறேன். (சென்று திரும்பி) ஆ... நீர் தொடர்ந்தும் அமைச்சராக இருக்கவேண்டுமானால் குமணனின் முடிவென்ன என்பதை எனக்குத் தெரிவிக்க வேண்டியது உமது கடமை.

(இளங்குமணன் இடது புறமாகச் செல்கிறான்.)

www.padippakam.com



அமை : இளங்குமணா, ஆட்சி வெறி பிடித்து அண்ணனைக் கொல்வேன் என்கிறாய். புலவர் பலர் போற்றும் குமணவள்ளல் நாட்டுமக்கள் நெஞ்சமெல்லாம் கொலுவீற்றிருக்கிறார் என்பது தெரியாமல் குதர்க்கம் பேசுகிறாய். நீதியான, பண்பான அண்ணனும் நெறி கெட்ட இளவலும்.... இறைவா... எங்கள் நாட்டுக்கு ஏனிந்தச்சோதனை....? (குமணன் வலதுபுறத்திலிருந்து வருகிறான்)

குமண : அமைச்சரே! தனிமையிலே ஆழ்ந்த சிந்தனை எதற்காகவோ?

அமை : அரசே... என் நெஞ்சமெல்லாம் அச்சம். கேட்டதை உரைக்க வார்த்தையின்றித் தவிக்கிறேன்....

குமண : முதியமலை மன்னனிடம்.. அவன் பெருமதிப்பிற்குரிய அமைச்சருக்கு வார்த்தைக்குப் பஞ்சமா? என்ன கேட்டீர்கள்? எங்கு கேட்டீர்கள்? உங்களுக்கா அச்சம்...?

அமை : ஆம் மன்னா. அச்சம்தான்... முதியமலையின் எதிர்காலத்தையெண்ணி அச்சம்தான்.

குமண : அமைச்சரே... எங்கள் நாட்டோடு யாரேனும் போர் தொடுக்கப் போவதாக ஒற்றர்மூலம் செய்தி கேட்டீர்களா... அல்லது என் கொற்றத்தில் குற்றமென்று மக்கள் குறை சொன்னார்களா? எதுவாயினும் சரி. போரென்றால் வாளேந்தவும், கொற்றத்தில் குற்றமென்றால் குறைகளைக் களையவும் குமணன் என்றுமே அஞ்சமாட்டான். அச்சமின்றி உரையுங்கள்.

அமை : அரசே தமிழ் வாழ, புலவர்களை வாழவைக்கும் தங்களை எதிர்த்துப்படையெடுக்க வேற்று நாட்டார்

www.padippakam.com



யாருமில்லை. தங்கள் கொற்றத்தில் குற்றமென்று சொல்லுவோரை தேசத்துரோகிகள் என்று சொல்வார்கள் எம்மக்கள்....

குமணன் : அப்படியென்றால்... தாங்கள் அச்சம் கொள்ளு மளவிற்கு தங்களைச் சஞ்சலப்படுத்துவதென்ன...

அமை : மன்னா, என்னை மன்னியுங்கள். தங்கள் சிம்மாசனத்திலும் எங்கள் மண்ணிலும் ஆசை கொண்டவர் வேற்று மனிதரல்ல. தங்கள் உடன்பிறப்பு... இளவரசர் இளங்குமணன்...

குமணன் : என்ன... (ஆச்சரியமாக) என் தம்பியா... எனக் கெதிராகவா? அமைச்சரே.... உமக்குப் பித்துப் பிடித்துவிட்டதா....

அமை : மன்னா... இன்னும் எனக்குப் பித்துப்பிடிக்க வில்லையே என்றுதான் நான் வருந்துகிறேன்.

குமணன் : அமைச்சரே... யாரோ சதிகாரர்கள் என்னையும் தம்பியையும் பிரிக்க சூழ்ச்சி செய்கிறார்கள். யாரவர்கள் என்று கண்டறிய ஏற்பாடு செய்யுங்கள்.

அமை : அதற்கு அவசியமில்லை மன்னா. ஆட்சியை அடைய உடன்பிறந்தவன் உயிரையும் பறிக்க அஞ்சாத கல்நெஞ்சராகிவிட்டார் இளவரசர்...

குமண : அமைச்சரே.... நீர் உரைப்பதில் உண்மை இல்லையென நானறிந்தால் உமக்கு என்ன நடக்குமென்பதை...

அமை : அறிவேன் மன்னா.. நன்கறிவேன்.. மூத்தவன் உயிரோடிருக்க இளையோன் அரசனாவது மரபல்ல என்று இளவரசருக்கு நீதியுரைத்தேன். மூத்தோனுக்கு உயிர் வேண்டுமானால் துறவு

www.padippakam.com



பூணட்டும். ஆட்சியும் வள்ளல் என்ற புகழும் வேண்டுமென்ற ஆசை கொண்டால் அண்ணன் உடலைவிட்டு உயிர் பறிப்பேன் என்று வெஞ்சினம் கொண்டுரைத்தார் இளவரசர். இந்த அநீதியான முடிவை அரசருக்கு அறிவிக்கும் துர்ப்பாக்கியத்தை எனக்குக் கட்டளையாகவும் இட்டார்.

(குமணன் சிந்தித்தபடி உலாவிட்டு)

**குமணன்** : அமைச்சரே... அச்சத்தை விடுங்கள். தம்பி நாடாள அண்ணன் காடேக வேண்டுமென்கிறான். அவ்வளவு தானே? அப்படியே செய்வோம் அண்ணனைக் கொன்று அரசுகொண்டான் இளங்குமணன் என்ற இழிச்சொல் என் தம்பிக்கு வேண்டாம். பாட்டெழுதும் புலவன் பசியால் நலிந்துவர கைகட்டி நிற்கின்ற துணிவில்லை குமணனுக்கு. இனிமேல் இளங்குமணனே இந்த நாட்டின் மன்னன்...

(தலையிலிருந்து மணிமுடியைக் கழற்றி நீட்டுகிறான்.)

**அமை** : (பதறியபடி) அரசே தங்கள் முடிவு.

**குமணன்** : மாறாத முடிவு. தீர்க்கமான முடிவு அமைச்சரே. கொடையில்லாக் கொற்றம் குமணனுக்கு வேண்டாம். என்தம்பி ஏதுமறியாதவன். பாவலரும் நாவலரும், புலவரும் கவிஞரும், வறுமையால் மாளும் மக்களும் இருக்க அறுசுவை உணவுண்டு. பழரசம் அருந்தி பஞ்சணையில் படுத்துறங்கும் பழக்கம் வேண்டாம். எங்கள் நாடு வளமாக, நாட்டு மக்கள் நலமுடன் வாழ, சுகபோகமாக வாழும் நாம்தானே கொடுக்க வேண்டும். எம்நாட்டு மக்களுக்கு வேற்றுமனிதனா உணவும் உடையும்

www.padippakam.com



*பொருளும் தருவான்? எம்மிடம் மிஞ்சி யிருப்பதில் சிறுபகுதியைக் கொடுப்பதால் நாம் அழிந்துவிடப் போவதில்லை. நாம் கொடுப்பதால் தமிழ் வாழும். எம் தமிழர் வாழ்வர். இதை என் தம்பிக்கு உணர்த்துங்கள். அவன் நல்லாட்சி புரிய உறு துணையாய் இருங்கள். விரைவில் முடிசூட்டு விழா விற்கு ஏற்பாடு செய்யுங்கள். இதோ பெற்றுக் கொள்ளுங்கள் மகுடத்தை... வாழிய இளங்குமணன் ஆட்சி... நான் போய்வருகிறேன் அமைச்சரே...*

**அமை:** *மன்னா... மன்னா... மன்னா....*

**(திரை)**

○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 2



**களம்**

*அரண்மனையின் ஓர் பகுதி*

**பாத்திரங்கள்**

*இளங்குமணன்...... அமைச்சர்*

**இ. குமண :** *கொடைக் கொடுத்துப் புகழ் கொண்ட குமணன் தன் கொற்றக் குடையிழந்தான். கொடியிழந்தான். மணி முடியிழந்தான். நாடாண்ட மன்னன் காடாளச் சென்றுவிட்டான்: (சிரிப்பு) பாவலர்கள் பாட்டுக்கு பரிசளித்த குமணன் சிங்கம் புலி கரடி வாழும் காட்டில் இனி யாரிடம் பாட்டுக் கேட்பான்... யாருக்குப் பரிசளிப்பான்? பசியால் வாடியோர்க்கு எல்லாம் பட்டாடையும் பொன்னும் கொடுத்த வன் இன்று பசியால் மெலிந்து காயும் கனியும் தேடியலையப் போகிறான். அமைச்சரே! மூத்தவன் உயிரோடிருக்க இளையவன் அரசாள்வதெப்படி என்று கேட்டீரே? பாரும் இப்போது..... இதுதான் ராஜதந்திரம்....*

**அமை :** இளவரசே....

**இ. குமண :** *(கோபமாக) என்ன?*

www.padippakam.com



அமை : (பயத்துடன்) இல்லையில்லை மன்னிக்க வேண்டும்! அரசே, என்ன இருந்தாலும் அவர் உங்கள் அண்ணன். அவரைப் பழித்துரைப்பது அரசரான தங்களுக்கு....

இ.குமண : அபகீர்த்தியோ? பரவாயில்லை.... அமைச்சரே என் மனதிலோர் சந்தேகம். போகும் முடிவை எப்படி ஏற்றான் என் அண்ணன்! கானகத்து வாழ்வின் துன்பங்களை குமணன் தாங்குவானா? அல்லது அரச வாழ்வின் இன்பங்களையெண்ணி ஏங்கு வானா? ஒருவேளை மீண்டும் அரசனாகும் எண்ணம் குமணனுக்கு வந்துவிட்டால்....

அமை : அரசே..... தங்கள் அண்ணன் ஒருபோதும் அப்படி எண்ணமாட்டார்...

இ.குமண : அதை எப்படி உம்மால் உறுதியாகச் சொல்லமுடியும்...? நாட்டு மக்கள் குமணனைக் காண காட்டுக்கு செல்வதாக அறிந்தேன். ஒருவேளை மக்களோடு சேர்ந்து, என்னை வீழ்த்தி அரசைக் கைப்பற்ற முனைந்தால்.... ஆம் அப்படித்தான் இருக்க வேண்டும். குமணன் மீண்டும் இங்கு வந்தால் நான் அழிய வேண்டும். நிச்சயம் அழிக்கப்படுவேன்.... (யோசித்து) அமைச்சரே! ஓர் அவசர அறிவிப்பு... உடனடியாக இந்தச் செய்தியை நாட்டின் சகல இடங்களிலும் பறையறைந்து தெரிவிக்க வேண்டும்... நாட்டை விட்டோடிய முன்னாள் மன்னன் குமணனின் தலையைக்கொண்டு வருவோர்க்கு முதிய மலையின் இந்நாள் மன்னன் இளங்குமணனால் அளப்பரிய பரிசு வழங்கப்படும்.

www.padippakam.com



**அமை** : *மன்னா.... இதென்ன அநியாயம்?*

**இ.குமண** : *அமைச்சரே! உமது ஆலோசனை எனக்குத் தேவையில்லை... இட்ட கட்டளையை உடனே நிறைவேற்றும்... பாவலனாக இருந்தாலும் சரி, பாமரனாக இருந்தாலும் சரி அல்லது பராக்கிரமம் உள்ளவனாக இருந்தாலும் சரி.. குமணனின் தலையைக் கொண்டு வருபவனுக்கு நானும் கொடுக்கிறேன் கொடை. ஆம்.... நானும் கொடை வள்ளலாகிறேன்...*

***(திரை)***

o o o

www.padippakam.com



# காட்சி 3



***களம்***

*காடு*

***பாத்திரங்கள்***

*குமணன்......... புலவர்....... பாவலன்*

***புலவர்*** : *மன்னா! குமண வள்ளலே, குறிஞ்சிநிலக் காட்டிலா நீ இன்னும் வாழுகிறாய்? வேண்டாம். போய்விடு மன்னா.... போய்விடு... குறிஞ்சி மண்ணைவிட்டே போய்விடு... பசியென்று வந்த பாவலர்க்கெல்லாம் புசிக்க உணவளித்து அவர் தம் வறுமை தீர்த்து, வளமுடன் தமிழ் வளர்க்க, பொன்னும் பொருளும் பரிசாயளித்தாய் அன்று. ஆனால் இன்று! உன் தலையைக் கொண்டு வருவோர்க்கு அளப்பரிய பரி-சென்று இளங்குமணன் அறிவித் திருக்கிறான்.... அதனால் நீ போய் விடு.... இந்தக் காட்டைவிட்டே போய்விடு...*

***குமணன்*** : *புலவரே அமைதி கொள்ளுங்கள். என் மண்ணை விட்டு, நாதியற்ற நாடோடியாய் நான் அலைய வேண்டுமா? நாடோடி வாழ்க்கை எத்தனை*

www.padippakam.com



நாட்களுக்கு நீடிக்கும்? நாடாண்ட நான் இன்று என் நாட்டின் காட்டில் வாழுகின்றேன். அவ்வளவு தான்.... இதுவும் என்மண்.... என் சொந்தமண். என் உயிர் போவதானால் என் சொந்த மண்ணில் போகட்டும். என் மன அமைதிக்காக என் தலை கொடுத்து யாரோ ஒருவர் பரிசு பெறப் போகிறார் என்றால் அதுவும் மகிழ்ச்சியானதே.

புலவர் : மன்னா! நீ சொல்வதென்ன?

குமணன் : புலவரே கலக்கம் வேண்டாம்.. போய் வாருங்கள். எனக்காக... என் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்ற உயர்ந்த நோக்கில் காடு தேடி வந்தீர்கள். தங்கள் கருணைக்கு நன்றி. போய் வாருங்கள்.... ம்... புறப்படுங்கள்.

(புலவர் தயக்கத்துடன் செல்ல குமணன் சிந்தனை வயப்படுகிறான்)

அற்ப உயிரைக் காக்க.... என் மண்ணை விட்டு நான் போவதா.... அப்படி இந்த மனிதப் பிறவி எனக்கு வேண்டுமா இந்த மாநிலத்தை விட்டு நான் போக வேண்டுமா!

(பாவலர் ஒருவர் வருகிறார்.)

குமணன் : புலவரே! நான் இப்போது மன்னனில்லை. என் தம்பி இளங்குமணன்தான் இப்போது மன்னன்...

பாவலர் : அறிந்தேன் மன்னா! நான் மன்னனைக் காண எண்ணவில்லை. பாவலர்க்கெல்லாம் பரிசளித்து வறுமைதீர்த்த குமணவள்ளலைக் காணவந்தேன்! ஐயனே, உண்பதற்கு ஒருபிடி அன்னமுமின்றி என் மனையாள் வாடுகின்றாள். பால் பணம் மாறாப்

www.padippakam.com



பச்சிளம்பாலன் பெற்றவளின் நலிந்த உடலின் வற்றிய மார்பில் பால் காணாது கதறி அழுகின்றான். பசியால் வாடும் பாலன் தாய் முகம் நோக்க, தாய் என் முகம் நோக்கினாள்... அவள் முகம் நோக்க நெஞ்சுரமற்ற நான்.. நின் முகம் நோக்க ஓடி வந்தேன்.

குமணன் : அருந்தமிழ் புலவரே! செல்வத்தில் குமணன் செழித்திருந்த காலத்தில் நீர் வந்திருக்கக் கூடாதா? வளமிழந்து வறுமையோடு கானகத்தில் வாழுமென்னைக் காண வந்தீரே! என்ன செய்வேன்

(மேடையின் முன்னணிக்கு வந்து தனியாக தாழ்ந்த குரலில்)

என் தம்பி என் தலைக்கு தலைக்கு விலை வைத்த செய்தறியறியாமல்.... இருந்து வந்த புலவருக்கு பரிசில்லையென்று எப்படி உரைப்பேன்... எப்படியுரைப்பேன்? என்றோ ஓர் நாள் போகும் உயிர். அது இன்று போனாலென்ன? புலவரின் வறுமை போக்க என்னுயிர் இன்று போவது என் தம்பிக்கும் அமைதியைக் கொடுக்கும். என் தம்பியின் அச்சம் நீங்கி அவன் நிம்மதி அடைந்தால் தான் என் நாட்டு மக்களும் அமைதி யடைவார்கள். (புலவரின் அருகில் சென்று) புலவரே! இப்போது நான் தரும் பரிசு என் இறுதிப்பரிசு..... இனிமேல் யாரும் குமணனிடம் கேட்டாலும் கொடுக்க முடியாத பரிசு. நான் தருவதைக் கொண்டு சென்று என் தம்பியிடம் கொடுங்கள்.... அவன் ஆனந்தம் கொள்வான். ஆறுதல் அடைவான். நிச்சயம் உங்களுக்குப் பரிசளிப்பான். சற்றுக் காத்திருங்கள். (உள்ளே குமணன் சென்று அத்திசையைப் பார்த்து)

(சில வினாடிகள் செல்ல)

www.padippakam.com



புலவர் : குமணா.... நிறுத்து.. குமணா நிறுத்து.... (என்று சொல்லும்போது தலையொன்று மேடையில் வந்து விழுகிறது)

ஐயோ... குமணவள்ளலே.... உன் மரணத்திற்கும் என் வறுமை காரணமாகிவிட்டதே. வள்ளலே வள்ளலுடன் தலைகொடுத்து வறுமை போக்கி நான் வாழ்வதோ? வேண்டாம் எனக்கிந்த இழிந்த வாழ்வு. இளங்குமணா! நானறிந்த செய்தி உண்மையானதா? செவிவழிச் செய்தியை வதந்தி என்று நம்பினேனே.... குமண வள்ளலின் தம்பி இப்படி ஒரு கருத்துக் குருடனாய் இருக்க மாட்டான் என்றெண்ணினேனெ... இளங்குமணா இதோ வருகிறேன்.... உன் கண்ணைத் திறக்க இதோ வருகிறேன். தமிழ் புலவனுக்கு குமணவள்ளல் தந்த பரிசோடு வருகிறேன். அண்ணன் தலை கொண்டு தம்பியின் அறிவுக்கண் திறக்கச் செய்கிறேன். இல்லையேல் உன் கண் முன்னே ஆவி துறக்கின்றேன்....

(திரை)

www.padippakam.com



# காட்சி 4



***களம்***

*இளங்குமணன்*

***பாத்திரங்கள்***

*இளங்குமணன், அமைச்சர், பாவலர், காவலன்.*

**இ.குமண** : *அமைச்சரே! குமணனின் தலை கொண்டு வருவோர்க்கு பரிசென்று அறிவித்து நாட்கள் பலவாகிவிட்டனவே.... முதிய மலையில் வீரமுள்ளோரில்லையா? அல்லது குமணன் குறிஞ்சி நிலத்தைவிட்டே ஓடிவிட்டானா?*

**அமை** : *மன்னா! உண்பதற்குணவின்றி, வறுமையால் அல்லலுற்று வாடியோன்கூட குமணவள்ளல் தலை கொய்து வாழும் எண்ணம் கொள்ளமாட்டான்.*

**இ.குமண** : *அப்படியானால்? யாருமே குமணனைக் கொல்ல மாட்டார்களென்று சொல்லுகிறீர். அப்படித்தானே?*

**அமை** : *தங்கள் உயர்ந்த சிந்தனை அதை ஒப்புக் கொள்வது அடியேன் செய்த பாக்கியம்.*

*(புலவரின் கையில் குமணனின் தலை துணியால் சுற்றியபடி இருக்க பாவலர் உள்ளே வர பின்னால் காவலன் வந்தபடியே)*

**காவலன்** : *ஏய் போகாதே நில்... நில்.... அரசர் பெருமானே.... நான் தடுத்தும் கேளாமல் இந்தப் புலவர் உள்ளே வந்துவிட்டார்.*

www.padippakam.com



**இ. குமண** : புலவரே! யார் நீர்? எங்கு வந்தீர்? வள்ளலென்று உங்கள் கூட்டம் வாழ்த்துரை வழங்கிய குமணன் இப்போது அரசனில்லை. அவன் அரண்மனையிலும் இல்லை.. ம்... ஆனாலும் பரவாயில்லை... என்னை வாழ்த்தி ஓர் பாடல் பாடும்... நானும் பரிசளிக்கிறேன்.

**புலவர்** : அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் அழுத்தமாய் நெஞ்சில் வைத்து அரசனென்ற அகந்தை கொண்டு, அண்ணன் தலை கொண்டுவந்தால் அள்ளித் தருவேன் பரிசென்று பறையறைவித்த பாவியே! உன்னை வாழ்த்திப் பாவலன் பாடினால் அவன் நா அழுகி வீழுமடா! கொடியவனே!

**இ.குமண** : ஏய் மமதை பிடித்தவனே.

**பாவலர்** : இளங்குமணா! நில்லங்கே. (அப்படியே) உன்னிடம் பரிசு பெற நானிங்கு வரவில்லை. உன் அண்ணன் குமணவள்ளல் என்றுமே தான் வள்ளலென்று நிருபித்துவிட்டான். நீ அறிவித்த கொடிய செய்திகேட்டு, என் வறுமை தீர்க்க, என் பசி போக்க? குமணவள்ளல் எனக்குப் பரிசளித்தான்....

**இ.குமண** : என்ன? காட்டில் இருந்து கூட பரிசளிக்கிறானா?

**பாவலர்** : ஆம்... என்றும் குமணன் வள்ளல்தான்.. பாவலரி ன் காவலன் எனக்களித்த பரிசை அவன் தம்பி இளங்குமணன் காண வேண்டாமா? நீ அந்தப் பரிசைக் கண்டால் ஆனந்தம் கொள்வாயோ அல்லது அலறித்துடிப்பாயோ? கருத்துக் குருடனே... இதோ பார் பாவலன் பெற்ற பரிசை....

(துணியிலிருந்து தலையை வெளியே பாவலர் எடுக்க)

எ-21

www.padippakam.com



*இ.குமண : ஆ.... அண்ணனின் தலை..... அண்ணனின் தலை அலறுகிறான்.*

*அமை : மன்னா!*

*இ.குமண : அண்ணன்.... என் அண்ணன்.... என் அண்ணன்... பேராசை கொண்ட இளங்குமணனின் அண்ணன் அண்ணா.... அண்ணா.... அண்ணா.....( என்றபடி வீழ்கிறான் இளங்குமணன்)*

*(நிறைவு)*

படிப்பகம்

www.padippakam.com



# யாரிவர்கள்?

படிப்பகம்

www.padippakam.com

## யாரிவர்கள்?

முன்பனிக் காலம் 1999

| நாடக மாந்தரும் | உயிரூட்டியோரும் |
|---|---|
| தணிகாசலம் | நாச்சிமார் கோயிலடி இராஜன் |
| எட்வின் | பூ. நவரட்ணராஜா |
| மாக்கிறற் | சரோஜினிதேவி நேமிநாதன் |
| ஜெயம் | அரவிந்தன் நவரட்ணராஜா |
| மரீனா | மேகலா இராஜன் |
| ஸ்ரீபன் | தனஞ்சயன் இராஜன் |
| மாலா | மோகனரூபி நவரத்தினம் |
| வின்சன் | பி.மனோகிமன் (ஜீவகன்) |

படிப்பகம்

# காட்சி 1



***களம்***
*வன்னிப் பெருநிலத்தில் ஒரு குடில்.*

***பாத்திரங்கள்:***
*தணிகாசலம், எட்வின்,*
*எட்வினின் மகன் வின்சன்,*
*தணிகாசலத்தின் மகள் மாலா.*

*வன்னிப் பெருநிலம்..... சாக்குகளினால் அமைக்கப்பட்ட ஒரு குடில் மேடையின் இடதுபக்கத்தில் பின்புலமாகத் தெரிகிறது. தணிகாசலம் மேடையில் உலவுகிறார். நடுப்பகுதியில் வின்சன் அமர்ந்திருக்கிறார். வின்சனின் கையில் கடிதமெழுத கொப்பியும் பேனாவும் இருக்கிறது. பக்கத்திலிருக்கும் எட்வின் வெற்றிலை மென்றபடி பத்திரிகை படித்துக்கொண்டிருக்கிறார்.*

**வின்சன்:** நல்லாயிருக்குது. கடிதமெழுத வேணும் வா எண்டு சொல்லி என்னைக் கூப்பிட்டு இருத்திப்போட்டு, நீங்கள் நடைபழகுறீங்கள். நான் அதைப் பாத்துக் கொண்டிருக்கட்டே?

**தணி :** நடைபழகேல்லையெடா தம்பி... வன்னிக்கு வந்தாப்பிறகு இப்பதான் மகனிட்டையிருந்து கடிதம் வந்திருக்குது.

**வின் :** அடிசக்கை... மகனிட்டை இருந்து கடிதம் வந்ததெண்டால் பிறகென்ன! தணிகாசமண்ணை! உடன கொழும்புக்கு வெளிக்கிட வேண்டியதுதானே.

www.padippakam.com



எட் : வின்சன், கடிதம் வாறதுக்கும் கொழும்புக்குப் போறதுக்கும் என்டாப்பா சம்பந்தம்?

வின் : என்ன சம்பந்தமோ..... கொழும்புக்குப் போய் மகனோடை கதைச்சுப்போட்டு வெளிநாட்டுக்கு வெளிக்கிட வேண்டியதுதானே?

தணி : வின்சன்! மறை கழண்டுபோன கதை கதைச்சு எரிச்சல் ஏத்தாதை தம்பி! (தனக்குள்) கடிதம் அனுப்புறாராம் கடிதம். கடிதம் அனுப்பினவர் கண்ணுக்கு முன்னுக்கு வந்திருந்தாரெண்டால் காதைப் பொத்தி வாங்கி இருப்பார்.

வின் : அப்பிடி என்ன எழுதிப்போட்டாரெண்டு இப்பிடி தனிய நிண்டு பேசுறியள்.

தணி : அவன்... வன்னியில இருந்து கஷ்டப்படவேணாமாம்... என்னையும் தங்கச்சியாரையும் யாழ்ப்பாணம் போகட்டுமாம்....

எட் : அடி செருப்பால.....

தணி : ஆருக்கு..... உமக்கோ...... எனக்கோ....

எட் : உம்மடை மூத்த மகனுக்குத்தான்.....

தணி : ஆ.....

வின் : (சினந்து) ஐயா! என்ன கதை கதைக்கிறீங்கள். எழும்பி போங்கோ. நான் எழுதிக் குடுத்துட்டு வாறன்.

எட் : பின்னையென்ன! யாழ்ப்பாணத்தில என்ன நடக்கு தெண்டு தெரியாமல் இஞ்ச இருக்குறவையை யாழ்ப்பாணம் போ எண்டு எழுதினால் என்ன அர்த்தம்.

(எழும்புகிறார்)

www.padippakam.com



தணி : அதுதான் காணும். எனக்கும் ஆத்திரமாக்கிடக்கு. நீர் எங்கை வெளிக்கிடுகிறீர். உதில இரும்.

எட் : எனக்கு வாய் சும்மா இருக்காது. நான் ஏதும் சொல்லிக்கொண்டிருப்பன். பிறகு இவன் புறுபுறுத்துக் கொண்டிருப்பான். நான் வாறன்.

தணி : அவன் இனி புறுபுறுக்கமாட்டான். நீர் உதில இருந்து வெத்திலையை போடும் காணும்

(எட்வின் மகனைப் பார்க்கிறார்)

வின் : அண்ணை! யாழ்ப்பாணத்தில கோயில் திருவிழாக் களை வீடியோ எடுத்து அரசாங்கத்தின்ரை சிலவிலை வெளிநாடுகளுக்கு அனுப்புகினம். அதுகளைப் பாத்துப் போட்டு சிலபேர் யாழ்ப்பாணத்தில இப்ப ஒரு பிரச்சினையும் இல்லையெண்டு நினைக்கினமாக்கும். உங்கட மகனும் அப்பிடி நினைச்சிருக்கிறார் போலயிருக்கு.

தணி : தம்பி! இப்ப கோயிலில தேரோடேக்கை ஹெலியில இருந்து பூப்போடுறவங்கள்தானே அண்டைக்கு நாகர் கோயிலும், நவாலியிலும் நரபலி எடுத்தவங்கள். இந்தச் சண்டாளங்கள் மலர்தூவி மண்டியிடவேண்டிய இடம்வேற. ஓ! கிரிசாந்தியெண்ட செம் பருத்திப்பூவைக் கதறக்கதற கொண்டு புதைச்சாங்களே.... அந்தச் செம்மணியிலதான் இவங்கள் மலர்தூவி மண்டியிடவேணும்......

எட் : அந்த அரக்கங்களின்ரை நரபலி இப்ப வன்னிக்கை வவுனிக்குளத்திலும், நாச்சிகுடாவிலும், உடையார் கட்டிலும் தொடர்ந்து நடக்குதானே?

மாலா : (வந்தபடி) வயித்துக்கைஎன்னமோ செய்யுது அப்பா. எனக்கு....வயதுக்கை என்னமோ செய்யுது......

www.padippakam.com



தணி : ம்....பசிக்கத் துவங்கீற்றுதே?

(ஒரு பாத்திரத்துள் இருந்து மரவள்ளிக்கிழங்கு எடுத்துக் கொடுக்க மாலா உண்கிறாள்.)

தணி : பார் தம்பி.. பசிக்குது எண்டு சொல்ல என்ரை பிள்ளை பயப்பிடுகிறாள்......

வின் : மெய்யேண்ணை, செஞ்சிலுவைச் சங்கத்தில மகளுக்கு வைத்தியம் செய்யக் கதைச்சனீங்களே?

தணி : கதைச்சனான் தம்பி. அனேகமா....நல்ல பதில் வருமெண்டுதான் நினைக்கிறன்... சரி அதை விட்டிட்டு கடிதத்தை எழுதத் துவங்கன்....

வின் : சுகசேதி கேட்டு எழுதிப்போட்டன். மிச்சத்தைச் சொல்லுங்கோ

தணி : சரியப்பு.. எழுது! கனநாளாய் உன்ரை கடிதத்தைக் காணேல்லை. நாங்கள் இங்க இன்னும் உயிரோடைதான் இருக்கிறம் எண்ட சங்கதியை உனக்கு அறிவிக்க ஒரு கடிதம் எழுத வேணுமெண்டு கனதரம் நினைச்சனான். ஆனா எழுத ஏலாமப்போட்டுது. கண்ணிலை புரை. கரைக்கவோ, அறுக்கவோ இங்க ஏலாது. அதுக்கு வசதியில்லை. இங்க பக்கத்தில இருக்கிற தம்பி ஒருதன் சொல்லுங்கோ எழுதித்தாறன் எண்டு சொன்னான். அதுதான் இந்தக் கடிதம்.

எட் : ஓ! பக்கத்தில இருக்கிறவன் எழுதினான். பிளேனிலை ஏறி வந்து தபால்காரன் தாரான்! என்ன விண்ணாணம் காணும் எழுதுறீர்? எழுத வெளிக்கிட்ட விசியத்தை எழுதுமன்.

www.padippakam.com



**தணி** : ஓமோம்! கொஞ்சம் பொறும் காணும். நீ எழுதய்யா. தம்பி யாழ்ப்பாணத்தில எல்லாம் கிடைக்குது, போய் அங்க இருங்கோவேண்டு நீ எழுதுறாய், ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறைஞ்சாம் ஆண்டு ஐப்பசி முப்பதாம் திகதி.... என்ன நாளெண்டு உனக்கு தெரியாது. எனக்கும் இஞ்சயுள்ள எங்கட சனத்துக்கும் அது தெரியும். அஞ்சரை லெட்சம் தமிழீழமக்கள் சொந்த மண்ணைவிட்டு... பிறந்து வளர்ந்த இடத்தை விட்டு... குழந்தை குட்டிகள் வயது போனதுகளோடை ஜெயவர்த்தனாவில இருந்து... சந்திரிகாவரை போட்ட குண்டுக்கும் ஷெல்லடிக்கும் கால்கையைக் குடுத்ததுகள் உட்பட... இஞ்ச வந்து சேர்ந்தம். நாங்கள் தம்பியைத் தலைவனாகக் கொண்டனாங்கள்.... தம்பி.... இஞ்ச... அதால நாங்களும்... இங்க... அவளவுதான்... யாழ்ப்பாணத்தில கிடைக்காத ஒண்டு... இஞ்ச எங்களுக்கு கிடைச்சிருக்குது... அதுதான் சுதந்திரம். இதைப்பற்றி உனக்குத் தெரிஞ்சிருந்தால், நீ இப்படி எழுதுவியோ? வன்னியிலை... பசி, பட்டினி பாம்புக்கடியளோடைதான் நாங்கள் வாழுறம். ஆனால் சுதந்திரமா வாழுகிறம். யாழ்ப்பாணத்தில அமைதியும் சகசமான வாழ்க்கையும் இருக்கெண்டு வீடியோ கஸற்றில கதிர்காமர் எடுப்பிச்சு வெளிநாட்டுக்கு அனுப்புறார். அது உன்மையெண்டு உன்னைப்போல எத்தினைபேர் நம்புகினமோ எனக்குத் தெரியேல்லை...

**வின்** : அண்ணை... யாழ்ப்பாணத்தில சகச வாழ்க்கை நடக்குதெண்டால், ஏன் செம்மணியைத் தோண்டச் சொல்லி கிரிசாந்தியைக் கொண்டு புதைச்சவன் சொல்லுறான்? பிள்ளையளைக் காணேலல்லையெண்டு ஏன் பெற்றோர் ஊர்வலம் நடத்துகினம்?

www.padippakam.com



எட் : நானூறு சனத்துக்குக்கிட்டை செம்மணியில புதைச்சிருக்கிறாங்களாம். நீதி விசாரனை வேணும் எண்டு எங்கடை சிஸ்ரர்மாரோடை பெற்றோரும் சேர்ந்து ஊர்வலம் நடத்தியிருக்கினம்.

தணி : தம்பி! நீ இப்ப சொன்னதையும் கேட்டெழுது...

வின் : சரியய்யா... சொல்லுங்கோ...

தணி : யாழ்ப்பாணத்தில சகச வாழ்க்கை இனி இப்போதைக்கு வராது... ஏனெண்டால் விடுதலையைப்பற்றி யோசிக்காமல் தேசியத்திலை கலக்கிறம் எண்டு சொன்னவையின்ரை கைகளிலையும் சந்திரிகா துவக்குக் குடுத்துவிட்டிருக்கிறாள். பிறகென்ன சகசவாழ்க்கை? வன்னியுக்கை இருக்கிறவைக்கு சாப்பாட்டுச்சாமான் அனுப்புறதை நிப்பாட்டினால் தங்கடை வழிக்கு வருவமெண்டு மாமன் ரத்வத்தையும் மருமகளும் நினைக்கினம். சாப்பாடு மருந்தெல்லாம் நிப்பாட்டியாச்சு... பசி... பட்டினி... நோய்... இதுகளாலை சனம் சாகுது. உண்மை. ஆனால்... நாங்கள் அடிமையில்லையெண்ட உணர்வோடை சுதந்திரமா எங்கடை நாட்டில இருக்கிறம் எண்ட திருப்தியில இஞ்ச வாழுறம்.

எட் : தணிகாசலத்தார், நாங்கள் இஞ்ச இருக்கிறதுக்கு உங்கடை மகனும், மகனைப்போல அங்க இருக்கிறவையும் என்ன செய்யவேணுமெண்டு எழுதேல்லையே?

தணி : எழுதன் சொல்லுறன். வெளிநாட்டில வாழுற எங்கடை உறவுகள், எங்கடை பசி, பட்டினி, துன்பத்தை அறிஞ்சு மனத்தால செய்யுற உதவியளாலைதான் இண்டைக்கு ஒருநாளைக்கு ஒருவேளை இலைக்கறிக்

www.padippakam.com



கஞ்சியெண்டாலும் குடிச்சுக்கொண்டு வாழுகிறம். இனியும் வாழுவம். சிங்களக் கதிர்காமரும்....

வின் : அண்ணை! கதிர்காமர் தமிழனண்ணை...

தணி : என்ன தமிழன்! ஆர் தமிழன்? லக்ஷ்மன் எண்டால் சிங்களவன்தான்ரா. குறுக்கை கதைக்காமல் நான் சொல்லுறதை நீ எழுது. லக்ஷ்மன் கதிர்காமரும், சந்திரிகாவும் வெளிநாட்டு ரீவிக்குக் குடுக்கிற செய்தியள் பொய்யெண்டதை விளங்கிக்கொள். நாங்கள் வாழுறநாடு எங்கடைநாடு எண்டதை நெஞ்சில வச்சிரு. பசியால பட்டினியால நோயால வருந்துற எங்கடை சனத்துக்கு உதவியெண்டு வாறவையை கேள்வி கேட்காமல் காசு குடு. உனக்கு போறவழிக்குப் புண்ணியம் கிடைக்கும். மற்றது ரத்வத்தையால 'யாப்பப்பட்டண' ஆக்கப்பட்ட எங்கடை மண்ணை திருப்பி எங்கடை பொடியள் யாழ்ப்பாணமாக்குவாங்கள். அண்டைக்கு நான் யாழ்ப்பாணம் போவன். வேறயென்ன? இதைவிட நான் எழுதுறதுக்கு ஒண்டுமில்லை. ஏலுமெண்டால் பதில் போடு. இப்படிக்கு த.தணிகாசலம்.

வின் : சரியண்ணை! அப்ப நான் வரப்போறன். நாளைக்கு மன்னாருக்குப் போறன். அங்க இருந்து கடிதத்தைப் போட்டுவிடுகிறனே...

தணி : என்ன மன்னாருக்குப் போறியோ?

வின் : ஓமண்ணை! இஞ்சை உழைப்புப் பிழைப்பில்லை. இங்க தட்டுப்பான சாமானுகளை மன்னாரில இருந்து கொண்டு வந்தால் விற்கலாம். அதில வாற லாபத்தில குடும்பச் சிலவைச் சமாளிக்கலாமெண்டு யோசிக்கிறன்.

தணி : ம்...... நல்ல முயற்சிதான்...... கவனம்......

www.padippakam.com



**வின்** : சரியண்ணை.. அப்ப நான் வாறன். விலாசத்தைத் தாங்கோவன்..

(தணிகாசலம் விலாசம்கொடுக்க வின்சன் போகிறான்)

**தணி** : எட்வின்! உயிலங்குளத்தில ஆமிக்காரரர் பிரச்சினை-யெண்டு கேள்விப்பட்டன். கவனமெண்டு சொல்லி விடும்.....

**எட்** : அதுதான்காணும் எனக்கும் பயமாக்கிடக்கு! சொல்லுறதைக் கேட்கிறானில்லை. இங்க சும்மா இருந்து என்ன செய்யிறதெண்டு கேட்கிறான். நத்தார் வருஷத்துக்கு மருமக்களுக்கு ஏதன் போய் வாங்கிக்கொண்டு வரவேணுமெண்டு ஆசைபபடுகிறான். அதைத் தடுக்கவும் எனக்கு விருப்பம் இல்லை.

**தணி** : ஓ! அதுகளும் தகப்பனில்லாத பிள்ளையள். அவன் தாய் மாமன் எண்டிருக்கிறவன், செய்யிறதைச் செய்யத்தானே வேணும்?

**மாலா** : ஐயா... நான் அண்ணையிட்டைப் போகப்போறன். அம்மாவைச் ஷெல் அடிச்சுக் கொண்டவங்களைக் சுட வேணும். துவக்கு வாங்கவேணும். அண்ணையிட்டைப் போய் காசு வாங்கிக்கொண்டு வந்து துவக்கு வாங்கி அவங்களைச் சுடப்போறன்.

**எட்** : ஆயுதம் வாங்க நீ ஏன் ஆச்சி கஷ்டப்படுகிறாய்? எங்களுக்காகத்தானே சந்திரிகா உலக நாடுகளிற்றை கடன்வாங்கி ஆயுதம் வாங்குறா! அதை ரத்வத்தை ஆமிக்காரிட்டை குடுத்தும் அனுப்புறார். பொறு... பொறு.... இன்னும் கொஞ்சநாள் பொறு...

**மாலா** : அப்ப... பிறகு எனக்குத் துவக்குக் கிடைக்குமோ?

www.padippakam.com



**தணி** : கிடைக்கும்........

**மாலா** : நான் ஆமிக்காரரைச் சுடவேணும். என்ரைஅம்மாவைக் கொண்டவனைச் சுடவேணும்... சுடவேணும்... சுடவேணும்....

(அழுகை ஆத்திரம் சிரிப்பு. இவற்றோடு சேர்ந்து மேலுள்ள வசனம் சொல்லப்படவேண்டும்.)

**(திரை)**

○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 2



**களம்**

வன்னியில் ஒரு குடில்.

**பாத்திரங்கள்**

எட்வின், எட்வினின் மகள் மாகிறற், மாகிறற்றின் பிள்ளைகளான ஜெயம், மரீனா,

ஜெயம், மரீனா, ஸ்ரீபன் மூவரும் இருந்து பாடுகின்றனர். மூவருக்கும் பசி. பின்பு விளையாடச் செல்கின்றனர்.

**ஜெய** : எனக்கு பசிக்குது...

**ஸ்ரீ** : அண்ணா, எனக்கும் பசிக்குது...

**மரீ** : அண்ணா எனக்கும்தானே பசிக்குது...

**ஜெய** : அம்மாவையும் இன்னும் காணேல்லை. சாப்பிடுறதுக்கு என்ன கிடக்குது?

(தேடுகிறான். தேன் போத்தலைக்கண்டு)

**ஜெய** : ஆ...... தேனிருக்குது. நான் குடிக்கப் போறேன். ஆருக்கு வேணும்?

**ஸ்ரீ** : தேனோ! அது அம்மா மருந்துக்கெல்லோ வைச்சிருக்கிறா?

**மரீ** : அண்ணா நீங்க தேனை எடுத்தா அம்மா அடிப்பா!

www.padippakam.com



ஜெய : நான் தேனைக் குடிக்கப்போறேன். நீ சொல்லுவியோ?

மரி : இல்லை!

ஸ்ரீ : (மௌனம்)

ஜெய : (தேனைக் குடித்தபடி) சரி! வாங்கோ பாலை மரத்துக்குக் கீழை போய் விளையாடுவம்.

(ஜெயத்தின் பின்னால் மரீனா செல்ல ஸ்ரீபன் இருக்கிறான். அவனை ஜெயம் திரும்பிப் பார்த்துவிட்டு)

டேய் நீ முழுகிறாய்! அம்மாவிட்டைச் சொன்னியெண்டால் உனக்கு அடிப்பன்!

(எட்வின் களைப்புடன் வர எதிர்ப்பக்கமாக மாகிறற் வருகிறாள்.)

மாகி : காலமையில இருந்து எத்தினை தரம் வளவுக்கை போட்டு வந்திட்டீங்கள்? கொஞ்சம் தேயிலைச்சாயம் போட்டுத்தரட்டே?

எட் : தேயிலைச் சாயத்துக்கை கொஞ்சம் தேசிக்காய் புளிஞ்சுவிட்டால் வயித்தாலயடி நிக்கும். கிடக்கிற தேயிலையை எனக்குத் ஊத்தித் தந்திட்டு பிள்ளையளுக்கு என்ன செய்யப்போறாய்? தேன் கிடந்தாக் கொஞ்சம் தா.

(மாக்கிறற் உள்ளே போய் திரும்பி வந்து பிள்ளைகளை அதட்டுதல்.)

மாகி : பிள்ளையள்... இதில போத்திலோடை தேள் இருந்தது... ஆர் எடுத்தனீங்கள்? (பிள்ளைகள் ஒருவரையொருவர் பார்க்கின்றனர் ஆனால் பதில் இல்லை)

மாக் : (ஜெயம், மரீனா, ஸ்ரீபன் மூவரிடமும் விசாரிக்க அவர்கள் தெரியாதென்ச் சொல்லகிறீர்கள்... ஸ்ரீபன்

www.padippakam.com



விழித்து விழித்து தாயையும் தமையனையும் பார்த்துவிட்டு) கஞ்சி காய்ச்சி வெச்சிருக்கிறன். உண்மையைச் சொல்லாட்டி இண்டைக்கு ஒருதருக்கும் கஞ்சியில்லை. போங்கோ!

(தாயின் காதிற்குள் ஜெயம் தேன் குடித்ததாக சொல்ல தாய் அடிக்கிறாள்)

எட் : பிள்ளையைப் போட்டு ஏன்னிப்பிடி அடிக்கிறாய்? அவன் பசிக்குதெண்டுதானே தேனை எடுத்துக் குடிச்சவன். அதுக்குப்போட்டு அடிக்கிறாய். அவனை அடிக்காதை விடு.

ஜெய : அழுதபடி பசிக்குதெண்டு தேனைக் குடிச்சதுக்கு அடிக்கிறா.

எட் : நீ போய் விளையாடைய்யா.

ஸ்ரீ : அண்ணா பசியிலை தேனைக் குடிச்சதுக்கு நீங்க அடிக்கிறீங்க. நான் உங்களோடை கதைக்கமாட்டன்.

எட் : சரி.... சரி. நீங்க போய் விளையாடுங்கோ.

மாக் : நீங்களும் தம்பியும் செல்லம் குடுக்க, அதுகள் தாங்கள் நினைச்சமாதிரி நடக்குதுகள்.

எட் : எனக்குத் தேன் இல்லையெண்டதுக்காக பிள்ளையளுக்குக் கஞ்சியில்லையெண்டால் சரியே?

மாக் : (கலங்கியபடி) அப்ப என்னை என்ன செய்யச் சொல்லுறியள்?

எட் : கதையைவிட்டிட்டு போய்க் கஞ்சியைக் காய்ச்சு பிள்ளை! எனக்கு கதைக்கேலாமலிருக்கு.

திருப்பியும் வயித்துக்கை என்னவோ செய்யுது. பிள்ளையளைக் கூப்பிட்டுக் கஞ்சியக் குடு.

www.padippakam.com



(எட்வின் போக வின்சனுடன் பிள்ளைகள் வருகிறார்கள்.)

மாக் : இருங்கோ எல்லாரும் கஞ்சி குடிக்க.

வின் : அக்கா எனக்கு கொஞ்சம் கஞ்சி தா. நானும் குடிச்சிட்டு வெளிக்கிடவேணும்.

(வின்சன், மாக்கிரெட், பிள்ளைகள் மூவரும் சிரட்டையில் கஞ்சி குடித்துக் கொண்டிருக்கின்றனர்.)

மாக் : தம்பி... மன்னாரில இருந்து வன்னிக்கு வாறதும் போறதும் லேசான விஷியமெண்டு அவரும் நீங்களும் நினைச்சுக் கொண்டிருக்கியள். எனக்கென்னவோ நெஞ்சு படபட எண்டு அடிச்சுக்கொண்டிருக்குது. வியாபாரத்துக்குப் போற வாறவையை புலிகளின்ரை உளவாளியள் எண்டு ஆமிக்காரர் பிடிச்சு விசாரிக்கிறாங்களாம்.

வின் : சும்மா எதுக்கெடுத்தாலும் பயப்பிடாதையக்கா. ஆமிக்காரர் பிடிக்கிறதும் விசாரிக்கிறதும் அடிக்கிறதும் நெடுக நடக்கிறதுதானே? ஆக மிஞ்சினாலென்ன? சுடுவாங்கள்..அவ்வளவுதானே?

மாக் : என்னடா... சுடுவாங்களேண்டு சாதாரணமாச் சொல்லுறாய்.

வின் : அப்ப என்னெண்டு சொல்லுறது? பயந்து பயந்து சொல்லட்டே? முந்தி இலங்கைத்தமிழன் பயந்தவனாயிருந்தான். இப்ப.... தமிழீழத் தமிழன் பயமில்லாதவனாக வளர்ந்திட்டான். பயந்தவனுக்குச் சாவு ஒவ்வொரு நாளும். ஆனா பயம்மில்லாதவனுக்குச் சாவு ஒரு நாள்த்தான். சும்மா பயப்பிடாதையக்கா. நான் போட்டுவாறன்.

ஸ்ரீ : மாமா.. நீங்கள் போட்டு வரேக்கை எனக்கொரு பந்து வாங்கிக்கொண்டு வரவேணும். நான் கனநாளாப் பந்து



படிப்பகம்

www.padippakam.com



கேட்டுக்கொண்டிருக்கிறன். நீங்கள் இன்னும் எனக்குப் பந்து வாங்கித் தாறீங்களில்லை...

வின் : நீ பந்துகேக்கிறாய். மாமா பந்து வாங்கிக்கொண்டு வாறதை ஆமிக்காறர் கண்டால் குண்டு கொண்டு வாறா-ரெண்டு பயத்தில பிடிச்சுப்போடுவாங்கள்.

ஸ்ரீ : இல்லை! நீங்க எனக்குப் பந்து வாங்கிக்கொண்டு வாறனெண்டு சொல்லலாம்தானே?

மாக் : (சிரித்து) தம்பி! ஆமிக்காறரைப் பகிடி பண்ணுறது உனக்குப்பொரு வேலையாப்போச்சுது.

வின் : நானென்ன சும்மாவே சொல்லுறன்? கொஞ்சநாளைக்கு முதல் முல்லத்தீவுக் கடலுக்குள்ளை ஸ்ரீலங்கா கடற்படைப் படகொண்டு போயிருக்குது. அதுக்கு முன்னால இன்னொரு படகு வந்ததைக்கண்டு கடற்படை பயத்தில அந்தப் படகை அடிச்சுப்பிளந்து போட்டுது. படகில இருந்த ஆக்கள் கடலுக்கை குதிச்சுத் தப்பீற்றாங்கள். அடுத்தநாள் முல்லைத்தீவுக் கடலில் புலிகளின் படகு கடற்படையால் அழிக்கப்பட்டதெண்டு பேப்பருக்கு ரீவிக்கு எல்லாம் அரசாங்கம் செய்தி குடுத்திட்டுது. ஆனா நடந்தது என்ன தெரியுமே? அந்தப் படகில இருந்து தப்பினது மீன்பிடிக்கப் போன ஒன்பது சிங்கள ஆக்கள்... அவங்கள் போய் தங்கடை படகை கடற்படை அடிச்சுப்போட்டுது, தாங்கள் உயிர்தப்பி வந்திருக்கிறம், நஷ்டஈடு தரவேணுமெண்டு வழக்குப் போட்டிருக்கிறாங்கள்...

மாக் : (சிரித்து) மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் எண்ட மாதிரி ஸ்ரீலங்காவின்ரை முப்படைக்கும் இப்ப எல்லாத்துக்கும் பயம்தான்...

வின் : சரி... நான் அப்ப போட்டுவாறன்... வாறதுக்கு எப்பிடியும்

www.padippakam.com



ஒரு கிழமை பத்துநாளாகும்... ஸ்ரீவன்! மாமா மன்னாரில இருந்து பிள்ளைக்குப் பந்து வாங்கிக் கொண்டு வருவன், சரியே..? விளையாடப் போறது கவனம். பத்தையளுக்கை போகாதை. பாம்பு பூச்சி கிடக்கும். கவனம்.

*(வின்சன் போக ஸ்ரீபன் மாமாவென அழைத்து ஓடிப்போய் முத்தம் கொடுக்கிறான்.)*

**மாக்** : *கவனமா போட்டுவா. போற இடத்தில எங்களைப்பற்றி யோசிச்சு, காசு சிலவழிஞ்சு போகுமெண்டு சாப்பிடாமல் இருக்காதை. வாய்க்கு ருசியா வாங்கிச் சாப்பிடு. பயணம் போகேக்கையும் இலைக்கறிக் கஞ்சியோடை போறாய்.*

*(கண் கலங்குகிறாள்.)*

**வின்** : *வெளிக்கிடேக்கை சிணுங்காதையக்கா....*

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



## காட்சி 3



***களம்***

*ஒரு நடைபாதை ஒழுங்கை.*

***பாத்திரங்கள்:***

*எட்வின், மாலா.*

*மாலா வருகிறாள். எதிர்பக்கத்தில் எட்வின் வருகிறார்.*

***எட்*** : *மாலா, எங்க போறாய்..?*

***மாலா*** : *வயித்துக்கை என்னமோ செய்யுது. மாக்கிறற் அக்காட்டைப் போறன்.*

***எட்*** : *சரி..... வா... நான் உன்னைக் கூட்டிக்கொண்டு போய் விடுகிறன்.*

***மாலா*** : *வேண்டாம்... நீங்க போங்கோ... எனக்கு ஒரு துவக்குக் கொண்டுவந்து தாறீங்களில்லை. நான் உங்க்ளோடை கோவம்....*

***எட்*** : *சரி... சரி... கோபப்படாமல் வா. நான் உனக்குத் துவக்குக் கொண்டுவந்து தாறன்...*

***மாலா*** : *இல்லை! நீங்க என்னை ஏமாத்துறீங்க. துவக்குக் கொண்டுவந்து தந்தாத்தான் நீ சொல்லுறதைக் கேப்பன்.*

***எட்*** : *எடி ஆத்தை, துவக்கை வச்சு நீ என்ன செய்யப்போறாய்? நான் சொல்லுறதை கேள்.*

www.padippakam.com



*மாலா* : *மாட்டன் நீங்க போங்கோ... போங்கோ. எனக்கு வழிதெரியும். நான் போவன்.*

*(மாலா போகிறாள்.)*

*எட்* : *பிதாவே, பத்தையளுக்கை பாம்பு பூச்சி கிடக்கும். எதால போறாளோ?*

*(மாலாவைத் தொடர்ந்து போகிறார்.)*

**(திரை)**

o o o

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 4



***களம்***
*எட்வினின் குடில்.*

***பாத்திரங்கள்:***
*மாக்கிறற், எட்வின், மாலா,*
*தணிகாசலம், ஜெயம், மரீனா, ஸ்ரீபன்.*

*மாக்கிறற் இருக்கிறாள். எட்வின் வருகிறார்.*

*மாக் : தம்பி போய் பத்து நாளாகீற்றுது. இன்னும் காணேல்லை. கிடந்த அரிசியும் முடிஞ்சுது... மரவெள்ளிக் கிழங்குமில்லை...*

*எட் : அதுதான் பிள்ளை எனக்கும் என்ன செய்யிறதெண்டு தெரியே இல்லை. பொறு... நானொருக்கால் தணிகாசலத்தாரிட்டைப் போட்டு வாறன். அங்க ஏதும் கிடக்குதோ எண்டு பாத்துவாறன்.*

*மாலா : (வந்தபடி) மாமா..... வயித்துக்கை என்னமோ செய்யுது...*

*எட் : பிதாவே... இதில இரு பிள்ளை. ஐயா எங்க?*

*மாலா : அவரைக் கனநேரமாக் காணேல்லை. எனக்கு வயுத்துக்கை என்னமோ செய்யுது...*

*எட் : சரி.... கொஞ்ச நேரம் இரு வாறன்.*

*(எட்வின் போகிறார்.)*

www.padippakam.com



**ஜெய** : அம்மா! பசிக்குது... சாப்பிட ஏதும் தாங்கோ...

**மாக்** : கொஞ்சம் பொறு ராசா... தாத்தா வந்திடுவார்...

**மரீனா** : அம்மா... மாமா ஏன் இன்னும் வரேல்லை... மாமா போய் கனநாளேல்லே?

**மாக்** : வந்திடுவார்... அப்பு

**மாலா** : அக்கா... எனக்கு வயித்துக்கை என்னமோ செய்யுது.

(எட்வின் வருகிறார் கையில் இரண்டு மாங்காய்கள்)

**எட்** : ஜெயம், இந்தா... இதைச் சாப்பிடு. ஸரீபன்... இந்தா ராசா... இது உனக்கு.

**ஜெய** : அம்மாவுக்கு? உங்களுக்கு..?

**எட்** : நானும் அம்மாவும் பிறகு சாப்பிடுகிறம். நீ இப்ப இதைச் சாப்பிடப்பு.

**தணி** : (தணிகாசலம் வந்தபடி) மாலா... இங்கயே நிக்கிறாய்? நான் வாறதுக்குள்ளை அவசரப்பட்டு இஞ்ச வந்திட்டியே..?

**எட்** : தணிகாசலத்தார்.... அவள் வயுத்துக்கை என்னமோ செய்யுதெண்டு வந்தாள். இஞ்ச ஒண்டுமில்லை. பொடியளுக்கும் பசிக்குமெண்டிட்டு நல்லையற்றை மா மரத்தில ரெண்டு மாங்காய் புடுங்கிக்கொண்டு வந்து குடுத்தன். என்ன... மரவெள்ளிக்கிழங்கு ஏதும் சந்திச்சுதே?

**தணி** : இல்லை எட்வின். பதினைஞ்சு நாளா T.R.O.வுக்கு வரவேண்டிய அரிசி வரேல்லை... வவுனியாவில வந்த சாமானுகளை பாழ்படுவார் மறிச்சு சோதினை போடுறாங்களாம். குமார் இங்கனேக்கை நிண்டால் ஒரு நாள் ரெண்டு நாளைக்கு சமாளிக்க ஏதும்

www.padippakam.com



வாங்கலாமெண்டு போனன். அவனும் சாமான் வரேல்லையெண்டதால வவுனியாவுக்குப்போட்டானாம்...

**எட்** : கடவுளே... நாங்கள் பட்டினி கிடக்கலாம். இந்தப் பொடியளுக்கும் மாலாவுக்கும் என்ன செய்யுறது? நல்லையற்ற மாமரத்தில மாம்பிஞ்சுகூட இனி இல்லை.

**தணி** : பதினைஞ்சு நாளா அரிசி வராததால... உங்க ஒரு இடத்திலும் மரவெள்ளிக் கிழங்குமில்லை.

**எட்** : மகன் இண்டைக்கெண்டாலும் வந்தானெண்டால் சாமான் சக்கட்டைக் கொண்டு வருவான்....

**தணி** : (மெதுவாக) மன்னாரில இருந்துவந்த வியாபாரியளை உயிலங்குளத்தில ஆமி பிடிச்சு வச்சிருக்குதாம்... ரெண்டு பேரைச் சுட்டுப்போட்டாங்களாம்........

**எட்** : என்ன?

**தணி** : ஏன் காணும் கத்துறீர்? மகளுக்குத் தெரிஞ்சால் பதைச்சுப்போவாள். கொஞ்சம்அமைதியா இரும். குமார் வந்தால் விபரம் தெரியும். அதுக்குள்ள பெட்டை யிட்டைக் கதைச்சு அவளைக் குழப்பிப்போடாதையும்...

**மாக்** : உதில நிண்டு ரெண்டுபெரும் என்ன குசுகுசுக்கிறீங்கள்?

**தணி** : அதொண்டுமில்லைப் பிள்ளை... இண்டைக்கு நாளைக்கு வயித்துப்பாட்டுக்கு ஏதும் வழி இருக்குமோ எண்டு விசாரிக்க வந்தன்... இஞ்சையும் இடைஞ்சலாயிருக் கெண்டு கொப்பர் சொல்லுறார். அதுதான் என்ன செய்வமெண்டு யோசிச்சுக்கொண்டு நிக்கிறம்.

**மாக்** : இடதுகரை T.R.O. காம்புக்கு போவமே அப்பா?

**ஏட்** : இடதுகரைக் காம்புக்குப் போனால் இலைக்கறிக் கஞ்சி குடிக்கலாம்தான்.......

www.padippakam.com



தணி : அப்ப வெளிக்கிடுங்கோவன் போவம்......

எட் : தணிகாசலத்தார்.....போக வர... ஏழும் ஏழும் பதின்னாலு கட்டை...

தணி : ஏழும் ஏழும் பதின்னாலு கட்டையெண்டு ஏன் காணும் கணக்குப் பாக்கிறீர்? உப்பிடியே போய் ஆனை முறிச்ச பாலைக் குப்பக்கத்திலே இருக்கிற கொப்பு நறிக்குள்ள இறங்கின மெண்டால்! கா(ல்) மணித்தியாலத்திலை இடது கரைக்குப் போயிடலாம்.

எட் : இவையள் இஞ்ச இருக்கட்டும். நாங்கள் ரெண்டுபேரும் போய் இவைக்கும் கஞ்சியைக் கொண்டுவருவம்.

மாக் : அதுதானய்யா..... நல்லது. தம்பி வந்தாலும் நான் இஞ்ச நிற்கிறன். நீங்கள் ரெண்டுபேரும் போட்டு வாங்கோவன்.

தணி : மாலா... நீயும் அக்காவோடை இரு... நான் போய் கஞ்சி வாங்கிக்கொண்டு வாறன்...

(தணிகாசலமும் எட்வினும் வெளியே போகிறார்கள்.)

(திரை மூட, குண்டு வீச்சு விமானங்கள் பறக்கும் சத்தமும் குண்டு விழும் சத்தமும் கேட்டபடி இருக்க, திரை விலகுகிறது)

மாக்கிறட்டை அணைத்தபடி பிள்ளைகள் பயந்தவண்ணம் இருக்க, மாலா அண்ணாந்து பார்த்துவிட்டு எழும்புகிறாள். அவளைப் பலவந்தமாக மாக்கிறட் இருத்துகிறாள். எட்வினின் குரல் கேட்கிறது. தூரத்திலிருந்து சொல்வது போல கேட்கிறது குரலில் பதட்டமும் அவசரமும் நிறைந்திருக்கிறது.

எட் : மாக்கிறட் பிள்ளையளைக் கூட்டிக்கொண்டு ஓடு...

(குண்டு விழுந்து மேடையிலிருந்த அனைவரும் உயிரிழக்க, எட்வின் வந்து இறந்தவர்களைப் பார்த்து அழுகிறார்.)

எட் : ஐயோ... என்ரை குஞ்சுகளே... அரக்கங்களின்ர உயிர்ப்

www.padippakam.com



பசிக்கு உங்களையும் பலிகுடுத்திட்டனே... கஞ்சிக்குப் போகாமல் நானும் இதிலை இருந்திருந்தனெண்டால் நானும் உங்களோடை வந்திருப்பனே...

(அழுது கொண்டிருக்க, தணிகாசலம் வருகிறார். இருப்பவர்களின் கோலத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்து அழுகிறார். மகளை மடியில் தூக்கி வைத்து)

**தணி** : ஆச்சி... இனி வயித்துக்கை உனக்கொண்ணும் செய்யாது. இந்தப் பிஞ்சுகள் பூக்களை எல்லாம் இப்பிடிப் பறிச்சாப்போல எங்கடை மண்ணை நாங்கள் விட்டுக்குடுத்திடுவமெண்டு மாமனும் மருமேளும் நினைக்கினமோ...

**எட்** : ஐயோ, இந்தப் பிஞ்சுகள் பூக்களை எல்லாம் நானே கொண்டுபோய்ப் புதைக்கவேண்டி வந்திட்டுதே...

**தணி** : இல்லை எட்வின். எங்கடை குஞ்சுகளை நாங்கள் புதைக்கேல்லை... விதைக்கிறம்... தூக்கு... போவம்...

(அழுதபடி பிள்ளைகளைத் தூக்கத் திரை மூடுகிறது.)

**(நிறைவு)**

O O O

www.padippakam.com



# வீடு

படிப்பகம்

www.padippakam.com

## வீடு

முன்பனிக் காலம் 2000

| | நாடக மாந்தரும் (பிறேமன்) | உயிருட்டியோரும் (பாரிஸ்) |
|---|---|---|
| இமானுவேல் | நவரட்ணராஜா | ஏ.ரகுநாதன் |
| லூர்தம்மா | பெனடிக்ரா ஞானசெல்வம | லூமின் |
| வின்சன் | இராஜன் முருகவேல | பகீரதன் |
| ஜஸ்மின் | அனுலா மனோகிமன் | முகுந்தினி நித்தி |
| ஜோன்சன் | பீற்றர் குலம் | சந்திரமோகன் |
| புளோறியா | மேரிஷாலினி நவரட்ணராஜா | மெலின் சிடோனி சந்திரமோகன் |
| சாரதா | சித்திராதேவி தங்கராஜா | உமா சந்திரமோகன் |
| பாஸ்கரன் | யோகநாதன் | முத்து ஜெயசிங்கம் |

படிப்பகம்

www.padippakam.com



*இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலக்கட்டங்களில், ஸ்ரீலங்காவின் இனவாத அரசுகள் தமிழ் மக்களை அழிக்கத் திட்டமிட்டுச் செயலாற்றிய ஆண்டுகளில், தமிழீழத் தேசத்தின் விடுதலைப் போராட்டம் முனைப்படைந்த வேளையில் உயிர்ப்பாதுகாப்புக்காகவும், பொருளாதார மேம்பாட்டுக்காகவும் தமிழீழ மக்களில் பலர் அவிழ்க்கபட்ட நெல்லிக்காய் மூட்டையெனச் சிதறுண்டு, உலகப்பந்தின் பல பாகங்களுக்கும் பரவினர்.*

*இதோ புலம்பெயர்ந்து ஜேர்மனியில் தஞ்சம் புகுந்த மக்களிற் சிலர்...*

*(திரை விலகுகிறது. ஒவ்வொரு பாத்திரங்களாக மேடைக்கு வருகின்றனர்.)*

*(இமானுவேல்,பாஸ்கரன் வரும்போது...)*

*தளர்ந்து, பஞ்சுப் பொதியாய் தலை நரைத்து, தோளிற் சுமையோடு வருகின்ற இந்தப் பெரியவர்கள் யார்? இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவுக்குள் அகதியாய் நுழைந்து, வாழ்வலையில் எதிர்நீச்சலிட்டு, ஜேர்மனியில் தங்கள் வாழ்வைக் கரைத்துக்கொண்ட புலம்பெயர்ந்த தமிழரின் முதற் சந்ததியின் பிரதிநிதிகள். இருபத்தோராம் நூற்றாண்டிற்கூட இவர்கள் உடல் உழைப்பாளிகள்தான்.*

*(லூர்த்தம்மா வரும்போது...)*

*இதோ உழைத்து உடல் சோர்ந்து வருகின்ற இந்த முதியவள் யார்? புலம்பெயர்ந்த தமிழரின் முதற் சந்ததியின் வாழ்க்கைத் துணைகளில் ஒருத்தி இவள்.*

*(வின்சன் வரும்போது...)*

*யாரிந்த இளைஞர்? இரு தேசக் குடியுரிமையில் ஜேர்மனியக்*

www.padippakam.com



*குடியுரிமையை விரும்பிப்பெற்று, தமிழீழம் தனது தாயகம் என்று சொல்லத் தயங்கும் புலம்பெயர் தமிழரின் இரண்டாவது சந்ததியின் பிரதிநிதி இவன்.*

*(ஜோன்சன் வரும்போது...)*

*ஓ... சராசரித் தமிழனிலிருந்து தன்னை மாற்றிக்கொண்ட இந்த இளைஞன் யாராக இருக்கும்?*

*ஐரோப்பிய மோகத்தில் தோய்ந்து, அதற்குப் பலியாகி, தாங்கள் யார் என்ற முகவரியைத் தங்களையறியாமல் தொலைத்துக்கொண்டிருக்கின்ற இரண்டாவது சந்ததியின் இன்னுமோர் பிரதிநிதி.*

*(ஜஸ்மின், சியாமளா வரும்போது)*

*யாரிந்த இளம்பெண்கள்? தமிழீழத்திலிருந்து புலம்பெயர்ந்த நிலத்திற்கு வருவிக்கப்பட்ட இரண்டாவது சந்ததியின் வாழ்க்கைத் துணைவிகள்.*

*(புளோறியா வரும்போது...)*

*இதோ இந்தப் பிஞ்சு யாராக இருக்கும்? இருபத்தோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் புலம்பெயர்ந்த தமிழரின் மூன்றாவது சந்ததியும் இந்த மண்ணில் முகிழ்க்கத் தொடங்கியிருக்கிறது என்பதற்கு இவளே சாட்சி*

*முதற் சந்ததியிலிருந்து வாழையடி வாழையாக வளர்ந்து வரும் எமது சமூகப் பிரதிநிதிகளான இந்த நாடக மாந்தருடன் எங்கள் கரங்களையும் இணைத்துக் கொள்வோம். (நாடக மாந்தர் கை கோர்த்துக் கொள்கின்றனர்.) இதயங்களைப் பிணைத்துக் கொள்வோம் வாருங்கள். நாமனைவரும் இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கிச் செல்வோம்*

*(நாடக மாந்தர் கை கோர்த்தபடி மெதுவாக நகர்கின்றனர்.)*

www.padippakam.com

# காட்சி 1



**களம்**

*இமானுவேலின் வீட்டு வரவேற்பறை.*

***பாத்திரங்கள்***

*இமானுவேல், இமானுவேலின் மனைவி லூர்த்தம்மா, இம்மானுவேலின் மூத்தமகன் வின்சன், வின்சனின் மகள் புளோறியா, இமானுவேலின் இளையமகன் ஜோன்சன், இமானுவேலின் நண்பர் பாஸ்கரன்.*

*வின்சன் உணவருந்திக்கொண்டிருக்கிறான். வின்சன் உணவை சுவைத்த படி தாய் லூர்தம்மாவிடம்........*

**வின் :** *நல்லாயிருக்குது!*

**லூா :** *ஆ.*

**வின் :** *இண்டைக்கு சமையல் நல்லா இருக்குது. கேக்குது?*

**லூா :** *(உள்ளிருந்து) கேக்குது.... கேக்குது.... எல்லா நாளும் சமைக்கிறமாதிரித்தான் இண்டைக்கும் சமைச்சனான்.*

**வின் :** *என்னமோ இன்டைக்கு ஏதோ ஒரு வித்தியாசமாக இருந்தது.*

**லூா :** *ம் ! எல்லாம் அப்பாவிட்டைப் பழகினதுதான். இந்தா... அந்தா எண்டு பதினெட்டு வருசம்போட்டு... அப்பா என்னையும் உன்னையும் இஞ்சை கூப்பிடேக்கை, எனக்கு வடிவாச் சமைக்கக்கூடத் தெரியாது. ம்... காலம்*

www.padippakam.com



போனமாதிரிய... மூண்டு மணியாகுது... அப்பாவை இன்னும் காணேல்லைத் தம்பி. ஒருக்காப் போய் கூட்டிக்கொண்டு வாறியே?

**வின் :** அப்ப நான் இண்டைக்கு வேலைக்குப் போறேல்லையே? சாப்பிட்டு கொஞ்சநேரம் நித்திரை கொண்டாத்தான் போய் வேலை செய்யலாமம்மா...

*(வாசல் மணிசத்தம் ஒலிகிறது.)*

**வின் :** இந்தா அப்பாதான் வாறார்! போய்க் கதவைத் துறவுங்கோ... அதுக்கிடையிலே அவசரம்...

*(கதவை நோக்கி சென்று கொண்டு)*

**லூா :** இது அப்பா இல்லை. அப்பா எண்டால் ஏன் பெல் அடிக்கிறார்? அவரிட்டைத் திறப்பு இருக்குத்தானே?

**வின் :** அப்ப..... ஆர் இந்த நேரத்திலே?

**லூர் :** புளோறியாவுக்கு பள்ளிக்கூடம் முடிய நேரமிருக்குதே?

*(கதவைத் திறக்க ஜோன்சன் உள்ளே நுழைகின்றான்.)*

**ஜோன்:** Hello Mum Alles klar... (ஹலோ அம்மா, எல்லாம் சரியா?)

**லூர் :** வாடா வா... என்ன வழி மாறி வந்திட்டியோ?

**ஜோன்:** Ha Bruder auch da ... Guten Appentit. (ஆ... சகோரதனும் இருக்கிறாரே...)

**வின் :** Danke... Danke... (நன்றி... நன்றி...)

**லூா :** ஆ... ஆ.... பெரிய டொச்சுக்காரன்தான். தமிழிலைக் கதை!

**ஜோ :** O.K. Alles Klar...? (சரி, எல்லாம் சரியா..?)

**வின் :** ஜோன்சன்.... அம்மா சொன்னது விளங்கேல்லையோ? அல்லது விளங்கிற நிலைமையில நீயில்லையோ?

www.padippakam.com



ஜோ : *Entschuldigung...* (மன்னிக்கவும்...) விளங்குது... விளங்குது. அம்மா, எங்க 'பப்பி'யை காணேல்லை?

லூா : அப்பா இன்னும் வரேல்லை ஜோன்சன்.

ஜோ : அப்ப வெளியிலே வண்டில் நிக்குதே...?

வின் : அப்ப... அப்பா காரில போகேல்லையே?

லூா : அப்பா காரிலை போனால் உன்னையேன் கேக்கிறன், கூட்டிக்கொண்டு வரச்சொல்லி.

ஜோ : அப்ப.... அந்த வண்டிலுக்கு என்ன நடந்தது?

லூர் : வண்டிலோ? அதில நீங்களெல்லாம் ஏறிச்சவாரி செய்துதான் அதை வண்டிலாக்கினனீங்கள்.

ஜோ : மம்மி... பப்பி வாறதுக்கு முதல் நான் இறங்குறன். ஒரு 50 *Euro Bitte.* (ஐம்பது யூறோ, தயவுசெய்து...)

லூா : இரு... இரு... அப்பா இப்ப வருவார். அவரிட்டை கேட்டு வாங்கிக்கொண்டு போ.

ஜோ : *Mummy.... Bitte Mums.* (அம்மா, தயவுசெய்து அம்மா...)

வின் : அம்மா நீங்கள்தான் இவருக்குக் கேக்கிற நேரமெல்லாம் காசு குடுத்துக் குடுத்துப் பழுதாக்கிறீங்கள்.

ஜோ : *Bruder ich frag dich nicht. Ich frag meine Mama.... O.K.?* (சகோதரன், நான் உன்னட்டைக் கேக்கேல்லை. அம்மாட்டைக் கேக்கிறன். சரியே..?)

லூா : நீ என்னிட்டைக் கேட்டாலும் சரி, கொண்ணையிட்டைக் கேட்டாலும் சரி... முடிவு ஒண்டுதான்... நான் காசு தரமாட்டேன். என்னிட்டைக் காசில்லை.

(உணவு முடிந்து உள்ளே சென்றுகொண்டிருந்த வின்சன் திரும்பி ஜோன்சனிடம்..)

எ-23

www.padippakam.com



***வின் :*** *Siehst du mein lieber Bruder! (பார்த்தியா, எனது அன்பான சகோதரனே!)*

*(வின்சன் உள்ளே செல்ல...)*

***ஜோ :*** *Bitte Mummi...*

*(அமைதியென லூர்த்தம்மா சைகை காட்டிக் காசு கொண்டுவந்து கொடுக்க..)*

***ஜோ :*** *Danke Mummi*

*(அமைதியென லூர்த்தம்மா மீண்டும் சைகை செல்லமாக அடிக்க, வின்சன் பின்னே நின்று காண்கிறான். வாசல் மணி ஒலிக்கிறது. வின்சன் போய்க் கதவைத் திறக்க புளோறியா உள்ளே வருகிறாள்.)*

***புளோ:*** *அப்பம்மா, அப்பப்பா எங்க? நித்திரையா?*

***லூ :*** *அப்பப்பா இன்னும் வரேல்லையடா!*

*(ஜோன்சன் வந்திருப்பதைக் காட்ட...)*

***புளோ:*** *ஆ...*

***லூர் :*** *உங்க... சித்தப்பா வந்திருக்கிறார்.*

***புளோ:*** *ஹலோ சித்தப்பா.*

***ஜோ :*** *Was ist das (என்ன) சித்தப்பா? Ruf mich Onkel. (அங்கிள் என்று கூப்பிடு.)*

***புளோ:*** *Nein (இல்லை). Deutsch இல Onkel எண்டு மாமாவையும் கூப்பிடலாம். சித்தப்பாவையும் கூப்பிடலாம். நீங்கள் என்ரை மாமா இல்லை. சித்தப்பாதான். OK?*

***லூ :*** *பிள்ளையிட்டை வாயைக் கொடுத்தனி, வாங்கிக்கட்டு.*

www.padippakam.com



(வின்சன் கையில் ஒரு பழத்தை வெட்டிக்கொண்டு உள்ளே வருகிறார்.)

**புளோ:** ஆ... அப்பா என்னும் நித்திரை கொள்ளேல்லையா? ஆ... உங்களுக்கு இண்டைக்கு Freeயா? (விடுமுறையா?)

**வின் :** நேநே... (இல்லையில்லை...) இன்டைக்கு Nachtschift (இரவு வேலை) அம்மா!

**புளோ:** Ach... so (அப்படியா?) அப்பம்மா இந்த கிழமை முழுக்க அப்பா திரும்பவும் கோமாகாரர்போல இருக்கப் போறார்.

**லூ :** (லூர்தம்மா சிரித்தபடி) பிள்ளை... நீ போய்ச் சாப்பிடம்மா.

**வின் :** ஜோன்சன், உன்னைத் தேடி வர இருந்தனான். நீயே வந்திட்டாய்...

**ஜோ :** ஆ....

**வின் :** இப்ப Afrikans தான் உனக்கு நல்ல friends போல இருக்கு.

**ஜோ :** Wieso? Sind die keine Menschen? oder was? (அதெப்படி? அவை மனிசரில்லையா? இல்லாட்டி என்ன?)

**வின் :** ஆர் சொன்னது அவங்கள் மனிசரில்லை எண்டு? எங்களிலை சிலபேர் எப்பிடியோ? (தம்பியாரைக் காட்டுகிறான்.) அதுமாதிரி அவங்களிலையும் சிலபேர் மனிசரில்லை.

**ஜோ :** வின்சன்! Was willst du? Lass mich in Ruhe. (உனக்கென்ன வேணும்? என்னை அமைதியாய் இருக்கவிடு.)

**வின் :** Das geht nicht... (அது சாத்தியப்படாது...)

**ஜோ :** Warum geht das nicht? (ஏன் சாத்தியப்படாது?)

**லூர் :** (வந்தபடி) எடேய்... நீங்கள் ரெண்டுபேரும் என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறீங்கள்? அம்மாவுக்கு டொச்

www.padippakam.com



விளங்காதெண்டோ? (வின்சனைப் பார்த்து) தம்பி... அவன் எப்பவும் இருந்தீட்டு ஒருக்கா வாறான். நீ அவனோடை இப்ப ஏன் தேவையில்லாமல் கொழுவல் எடுக்கிறாய்? சும்மாயிரு பாப்பம்.

லூர் : ஜோன்சன்.... சாப்பிடுறியே அப்பு..?

ஜோ : Reis immer Reis.... Reis Curry... Curry Reis.. Reis Curry Curry. (சோறு நெடுகச் சோறு... சோறு கறி... கறி சோறு... சோறு கறி கறி...)

லூர் : அப்ப என்னடா Kartofell (உருளைக்கிழங்கு) Ok; Brat Wurst (ஒருவகை இறைச்சி உணவு) உமே எங்களைச் சாப்பிடச் சொல்லுறாய்? டேய் எங்கையடா கையில கிடந்த மோதிரம்?

வின் : கையைப் பாக்காமல் கழுத்தையும் பாருங்கோ....

லூர் : வின்சன் என்ன தம்பி சொல்லுறாய் நீ....

வின் : முதலிலை பாருங்கோவன்....

ஜோ : Nein... (இல்லை...)

லூர் : விடடா.... (கழுத்தைப் பார்த்த பின்) எங்கையடா கழுத்திலை கிடந்த சங்கிலியையும் காணேல்லை?

வின் : (அப்பிள் சாப்பிட்டவாறு) அதை அவற்றை ஆபிரிக்கன் Friends இட்டைத்தான் கேக்கவேணும்.

ஜோ : வின்சன்! Bitte Ruhe... (தயவுசெய்து அமைதி...)

லூர் : வின்சன்... இப்ப நீ என்ன சொல்லுறாய்? இவன் ஏன் கத்துறான்?

வின் : இவற்றை பிரட்ண்கும் சரியில்லை... இவற்றை பழக்கமும் சரியில்லை... இவருக்கு நீங்கள் குடுக்கிற 'செல்லமும்

www.padippakam.com



சரியில்லை. இவற்றை கையை எடுத்துப் பாருங்கோ...

**ஜோ :** வின்சன், உன்ரை வேலையை நீ பார். என்ரை விசயத்திலை நீ தலையிடாதை. உங்கடை பிரச்சினை வேண்டாமெண்டுதான் நான் உங்களோடை இருக்காமை சுதந்திரமாய் தனிய இருக்கிறன்.

**வின் :** நீ சுதந்திரமெண்டு சொல்லுறது எங்கடை குடும்பத்தைப் பாதிக்குமெண்டால் நான் அதிலை தலையிட்டுத்தான் தீருவன். (என்று சொல்லியபடி ஜோன்சனை நெருங்குகிய வாறு). அம்மா... நீங்க முதல்லை அவன்ரை கையைப் பாருங்கோ.

(இருவரும் இடக்கையை நீட்டிப் பார்க்க முயற்சிக்கின்றனர். ஜோன்சன் திமிருகிறான். லூர்த் கையிலுள்ள அடையாளங்களைப் பார்க்கிறாள்.)

**லூர் :** ஐயோ... என்னடா இது கை முழுக்கக் காயமாக் கிடக்குது?

**வின் :** நீங்க அவருக்குக் குடுத்த காசுகள்தான் கையிலை அடையாளமாயிருக்குது. இப்ப நான் உள்ளுக்குப் போகேக்கை எனக்குத் தெரியாமைக் குடுக்கிறனெண்டு குடுத்தீங்களே... அந்தக் காசிலை போடுற ஊசிலைதான் இப்ப இவர் ஊசலாடுறார்.

**ஜோ :** வின்சன் என்ன நீ? விட்டாக் கனக்கக் கதைச்சுக்கொண்டு போறாய். முதல் நீ சரியா இருந்துகொண்டு என்னைப் பற்றிக் கதைக்க வெளிக்கிடு. எனக்கும் அம்மாவுக்கும் இடையிலை வந்தியெண்டால்... கொல்லுவன்.

(வின்சனை அடிக்கிறான். வின்சன் தான் இருந்த கதிரையைத் தூக்கி அடித்து விடுகிறான். 'ஐயோ' என லூர்து சத்தமிட, புளோறியா வருகிறாள். அப்போது கதவு திறந்து உள்ளே

படிப்பகம்

www.padippakam.com



இமானுவேல் நுழைகிறார்.)

**இமா :** இதென்ன வீடோ... சத்திரமோ? ஆ..? என்ன சத்தம்போடுறியள்..? இவருக்குப் பத்து வயது. அவருக்க எட்டு வயதாக்கும். ஆ..? (பிள்ளைகள் இருவரும் சண்டையிட்டதை அறியாதவராக) இண்டைக்கு மழைக் குணம் ஒண்டுமில்லையே. இவருக்கு ஆர் வழிகாட்டினது, இங்க வாறதுக்கு?

**லூர் :** உள்ளுக்குப் போங்கோ ஆரோ வருகினம்.

(பிள்ளைகள் இருவரும் உள்ளே செல்ல, யாரது என்பதைப் பாவனையால் லூர்த்தம்மா கேட்க...)

**இமா :** அது பாஸ்க்கரனப்பா...

(வெளியே பார்த்து) பாஸ்கரன், என்ன அங்கேயே நிக்கிறீர்? உள்ளுக்கு வாருமன்.

**பாஸ் :** ஓமோம்...

(பாஸ்கரன் உள்ளே வருகிறார்.)

**பாஸ் :** வணக்கம் தங்கச்சி

**லூர் :** வணக்கமண்ணை. வாங்கோ!

**இமா :** இரும் இரும்...

**பாஸ்:** நேரம் போட்டுதெல்லே, இம்ஸ்! நான் வெளிக்கிடுகிறன்! இண்டைக்கு ஆளுக்குச் சரியான வேலையெண்டு உமக்கு வடிவாத்தெரியும்! இனிப் போய் ஆளைக் குளிப்பாட்டி சாப்பாடு குடுத்து செற்றியிலை சாயவச்சு ஒரு படமும் காட்டிப்போட்டுக் கிடத்தினாத்தான் ஆள் நாளைக்கு காலமை வேலைக்கு உசாராய் எழும்பும்.

**லூர் :** பாஸ்கரன் அண்ணை... இருங்கோ... சாப்பிட்டுப் போகலாம்...

www.padippakam.com



பாஸ் : இல்லைத் தங்கச்சி... ஆள் குளிக்காமல் சாப்பிடாது.

லூர் : அப்ப... ரீ போடுறன்... குடிச்சிட்டுப் போங்கோ...

பாஸ் : ரீயைக் குடுத்தால் ஆள் பிறகு சாப்பிடப் பஞ்சிப்படும்...

லூர் : ரின் பால் ரீ நல்லாயிருக்குமண்ணை....

பாஸ் : ரின் பால் உங்களுக்கு விருப்பமெண்டால் போட்டுக் குடியுங்கோ. அதுக்கு சாப்பிடப் போற ஆளை ஏன் வருத்துறியள்..?

(லூர், பாஸ்கரன், இமானுவேல் ஆகிய மூவரும் சிரிக்க, 'இங்கு பாஸ்கரன் ஆள் என்று குறிப்பிடுவது தன்னையே.')

லூர் : அப்ப ஆளுக்குப் பிளேன் ரீ போட்டுக்கொண்டுவாறன். சரியே!

இமா : கேட்டுக்கொண்டு நிக்காமல் போய்ப்போட்டுக்கொண்டு வாருமன்.

(லூர்த் உள்ளே செல்ல, புளோறியா கைத்தடியுடன் வருகிறாள்.)

புளோ: அப்பப்பா.... இந்தாங்கோ.... உங்களுக்கு ஒரு பரிசு

இமா : என்னடா... வேலையிடத்திலை பதினைஞ்சு ஈரோவுக்கு பூவாங்கித் தந்து சூஸ் சொல்லி அனுப்பிவிட்டாங்கள். நீ என்ன தந்தடா என்னை வரவேற்கிறாய்?

புளோ: பாருங்கோவன்.

லூர் : (தேனீருடன் லூர்து வந்தபடி) எட எனக்கும் தெரியாமல் அப்பப்பாவுக்குப் பரிசு வாங்கி வச்சிருக்கிறா! என்னெண்டு பாருங்கோ அப்பா. பாஸ்கரன் அண்ணை, பிளேன் ரீ குடிச்சா ஒண்டும் செய்யாது. குடியுங்கோ.

பாஸ் : இதென்ன இது, இவளவு கெதியா தேத்தண்ணி போட்டுட்டியள். ஆ.. மருமகள் குசினிக்கை நிக்கிறாவாக்கும்?

www.padippakam.com



**லூர் :** இல்லையண்ணை மருமகள் வேலைக்குப் போட்டா. ஆரும் வீட்டை வந்ததைக் கண்டால் பேத்தி உடன தண்ணி வைச்சிடுவா. நான் தேத்தண்ணியை ஊத்திக்கொண்டுவாறன்.

(பரிசைத் திறந்து, அந்தக் கைத்தடியைப் பார்த்து இமானுவேல் கண்கலங்கியபடி...)

**இமா :** அப்பப்பாவைக் கிழவனாக்கிப்போட்டாய்.... கள்ளி!

**பாஸ் :** இம்ஸ்! பேத்தியை அந்த மாதிரித்தான் வளர்திருக்கிறீர். பிள்ளை நல்ல வடிவாத் தமிழிலும் கதைக்கிறா.

**இமா :** சின்னவன் தமிழ் கதைக்கப் பஞ்சிப்பட்டான். அது எனக்கு ஒரு பாடமாப்போட்டுது. இவவோடை ஒருத்தரும் வீட்டுக்குள்ளை டொச்சிலை கதைக்கக்கூடாது எண்டொரு சட்டத்தைப் போட்டன். பிள்ளை வடிவாத் தமிழ் கதைக்கிறா. பள்ளிக்கூடத்தில டொச்சும் வடிவாப் படிக்கிறா. பிறகென்ன?

**பாஸ் :** (எழுந்தபடி) அப்ப நானும் உம்மடை நடைமுறையைப் பின்பற்றலாம் போலகிடக்கு. சரி! இம்ஸ், இல்லை யில்லை... பெஞ்சனியர்! நேரம்போட்டுது. அப்ப நான் வெளிக்கிடுகிறன். வரட்டே?

**இம் :** சரி.. பாஸ்... அப்ப போட்டு வாரும். (வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டு) லூர்த்தம்மா... இதுகளைக் கொண்டுபோய் வையும். பென்சனீயர்... (விரக்தியான சிரிப்பு) Rente எனக்கு Rente... (பென்சன்... எனக்கு பென்சன்..)

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 2



***களம்***

*இமானுவேல் வீடு.*

***பாத்திரங்கள்***

*இமானுவேல், லூர்த்தம்மா,*
*புளோறியா, ஜஸ்மினின் குரல்.*

*(இமானுவேல் வேலைக்குப் புறப்படும் ஆயத்தத்தில் தலைவாரிக்கொண்டு நிற்க, பின்னே வந்த லூர்த்தம்மா சிரித்தபடி..)*

**லூர் :** *வடிவாயிருக்குது....*

**இமா :** *என்ன...?*

**லூர் :** *முடியெல்லாம் முழுக்க வெள்ளையாகீட்டுது. ஆனால் இன்னும் சீப்பு வைச்சு தலையிழுத்து வடிவு பாக்கிறீங்கள்.*

**இமா :** *லூர்து... தலையிலை இது இருக்கும்வரைக்கும் அதை ஒழுங்கா வச்சிருக்கிறதாலைதானப்பா இதுக்குப் பேர் முடி. இது கீழ விழுந்திட்டா மயிர் எண்டு கேவலமாத்தான் சொல்லுறம். ஏதோ... கொஞ்சமிருக்குது. அதை வடிவா வச்சிருக்கக் கூடாதே..?*

**லூர் :** *வெள்ளையாப் போனாலும் அது வடிவாத்தானிருக்குது. அது சரி... இந்தநேரத்தில வடிவு பாத்து எங்கையப்பா வெளிக்கிடுறியள்?*

www.padippakam.com



இமா : ம்... என்ரை கள்ளப் பெஞ்சாதியிட்டை...

லூர் : என்ன..?

இமா : பின்னை என்ன... வேலைக்கு நேரம்போட்டுது... செல்லக் கதை கதைச்சுக்கொண்டு நிக்கிறீர்... கெதியா பாணைக் கொண்டுவாரும்.

லூர் : வேலைக்கோ... என்னப்பா நீங்கள்.? நேற்றைக்குத்தானே பூவும்தந்து சூஸ் சொல்லி அனுப்பிவிட்டவங்கள்.

இமா : ஓ... (அசதியாக) இண்டையிலை இருந்து எனக்கு Rente (பென்சன்) என்ன? பதினைஞ்சு வருசப் பழக்கத்தை பதினைஞ்சு யூறோ பூவோட மறக்கச் சொல்லிட்டாங்கள். ஆனால் Factory யும் என்ரை மிஷினும் மனதை விட்டுப் போகுதில்லை. நான் இப்ப Pensionகாரன். உலகத்துக்குப் பிரயோசனமில்லாத மனிசன்.

லூர் : ஏனப்பா... அப்படி நினைக்கிறீங்கள்? இவளவு நாளும் வேலை செய்ததுக்கு உங்களுக்கு ஓய்வு தந்திருக்கிறாங்கள். இனிச் சும்மா வீட்டில இருக்க காசு தரப்போறாங்கள் எண்டு நினையுங்கோவன்...

இமா : லூர்த்தம்மா, Renten காசு சும்மா தானமாகத் தாற காசில்லை. முப்பத்திரெண்டு வருசம் என்ரை சம்பளத்திலை மாதம் மாதம் அரசாங்கம் பிடிச்சுவச்ச காசு. அதை இனிச் சாகும்வரைக்கும் பிச்சுப்பிச்சு பங்கிட்டுத் தரப்போறாங்கள்.

லூர் : என்னப்பா சொல்லுறீங்கள்?

இமா : ஓமப்பா! Renten காசு யானைப் பசிக்குச் சோளப்பொரி போடுறமாதிரித்தான். இவளவுநாளும் சம்பளக் காசை வச்சு உன்னைப் பிடி என்னைப் பிடியெண்டு வீட்டுக்குக் காசு கட்டினன். இன்சூரன்ஸ் காசு கட்டினன். இனி என்ன

www.padippakam.com



செய்யப்போறனெண்டுதான் விளங்கேல்லை.

லூர் : ஏனப்பா காசு போதாதெண்டு நினைக்கிறீங்களோ?

இமா : என்ன நினைக்கிறது? போதாது! போதாதெண்டது வடிவாத் தெரியுது.

லூர் : அப்பா, இன்சூரன்ஸ் காசு அறுபத்தைஞ்சு வயதில திருப்பி எடுக்கலாமெண்டு சொன்னீங்களெல்லே? அதையெடுத்து வட்டிக்குக் கொடுத்தீங்களெண்டால், வட்டியை வைச்சு சமாளிக்கலாந்தானே?

இமா : வட்டிக்குக் குடுக்கவோ? நானோ?

லூர் : இந்த வீடு வாங்கினாப் பிறகு பற்றீசியாவின்ரை கலியாணத்துக்கு வட்டிக்கு வாங்கிப்போட்டு, வட்டி கட்டப் பட்டபாடு உமக்கு வடிவாத் தெரியும். வட்டிக்கடனையும் வளர்ந்தெரியுற நெருப்பையும் நிப்பாட்டுறது எவளவு கஷ்டம் எண்டதை, நான் அனுபவிச்சு உணர்ந்தனான். அப்பிடி உணர்ந்த நானே வட்டிக்குக் குடுக்கலாமே? என்ரை பிரச்சினை தீரவேணுமெண்டதுக்காக ஆரையும் கஷ்டப்படுத்த வேண்டாம்?

லூர் : என்னப்பா நீங்கள்? வட்டிக்குக் குடுக்கிறது ஆரையும் கஷ்டப்படுத்துறதுக்கே? அவையவையின்ரை பிரச்சினை தீருறதுக்கு நாங்கள் உதவி செய்யுறமாதிரித்தானே?

இமா : ஓ.. அதிலயும் ஒரு உண்மையிருக்குதுதான். பிள்ளையின்ரை கலியாணத்துக்கு நான் காசுக்கு அலையேக்கை நான் உதவி செயதவையெல்லாம் கையைவிரிக்க, வட்டிக்குத் தந்தவைதானே என்னைக் காப்பாத்தினவை.

லூர் : பிறகென்னப்பா... இன்சூரன்ஸ் காசையெடுத்து வட்டிக்குக் குடுங்கோவன்.

www.padippakam.com



இமா : இல்லை. அது உமக்கெண்டு இருக்கிற காசு. இந்தா பாரும், அறுபத்தைஞ்சு வயது... Renten காரன் ஆக்கி Tuv (பாவனை) முடிஞ்சுது எண்டதை ஞாபகப்படுத்தி இருக்கிறாங்கள். திடீரெண்டு எனக்கேதும் நடந்திட்டா..?

லூர் : ஐயோ... விடியக்காலமை என்ன கதை கதைச்சுக் கொண்டிருக்கிறீங்கள்?

இமா : உள்ளதைச் சொல்லுறதுக்கு காலமை பின்னேரமெண்டு நேரம் பார்க்கேலாது. எண்டைக்கோ ஒரு நாளைக்கு நடக்கப்போற காரியந்தானே? நானில்லாத காலத்தில நீர் கஷ்டப்படாமல் இருக்க வேணுமெண்டதை அப்பவே நினைச்சுத்தான் இன்சூரன்ஸ் தொடங்கினனான். அந்தக்காசு பாங்கிலயே கிடக்கட்டும். நான் சாகும்வரைக்கும் அந்தக்காசை எடுக்கிறதைப்பற்றி என்னிட்டைக் கதைக்காதையும்.

லூர் : சரி... போதும்! நிப்பாட்டுங்கோ உங்கடை கதையை! சாகிறன் சாகிறன் எண்டு சொல்லி என்னைப் பயப்பிடுத்தாதீங்கோ! வரப்போற Renten காசு போதாது. இருக்கிற காசில கைவைக்கமாட்டனெண்டு பிடிவாதம் பிடிக்கிறீங்கள். உங்கடை பிடிவாதத்தை இந்த வயதிலையும் மாத்தமாட்டனெண்டு நிக்கிறீங்கள்.

இமா : லூர்து, உம்மடை பாஷையில இது பிடிவாதம். ஆனா என்ரை எண்ணத்தில இது பிடிவாதமில்லை. கடமை! என்ரை இருபத்தைஞ்சு வயதில இருந்து என்னோடை வாழ்ந்து, என்ரை சுகதுக்கங்களில பங்கெடுத்த என்ரை பெண்சாதிக்கு நான் செய்திருக்கிற பாதுகாப்பு விளங்குதே!.

(உள்ளிருந்து மணிக்கூடு அலாம் சத்தம் கேட்க. தொடர்ந்து ஜஸ்மினின் குரல் கேட்கிறது.)

www.padippakam.com



குரல் : புளோறியா, எழும்பம்மா. அலாம் அடிக்கிறது கேக்கேல்லையே..?

புளோ : ஓமம்மா!

(மேடையில்...)

லூர் : என்னப்பா காசு ஒரு பாதுகாப்பே? ஒண்டுக்கு மூண்டு பிள்ளையளைப் பெத்து வளர்த்திருக்கிறம். பிள்ளையள் பாக்குமப்பா!

இமா : பிள்ளையள் பாக்குமோ? பற்றீசியா கனடாவில. அவள் வந்து இனி எங்களைப் பாப்பாள், பராமரிப்பாள் எண்டு ஏமாறமாட்டன். நாங்கள் உயிரோடை இருக்கேக்கையே வீட்டைவிட்டு வெளியில போய்ரான் ஜோன்சன். ஒரு சராசரி மனிசனுக்கு என்னென்ன கூடாத பழக்கங்கள் இருக்கக்கூடாதோ, அவ்வளவையும் தான் குத்தகை யெடுத்து வச்சிருக்கிறான். அப்பாவுக்கு ஒண்டும் தெரியா-தெண்ட நினைப்பிலை ஏதோ வெளியாள்மாதிரி இடையிடை வந்திட்டுப்போறான்.

லூர் : என்னப்பா?

இமா : அவனைப்பற்றி கனக்கக் கேள்விப்பட்டிட்டன். எப்பிடி அவனை வழிக்குக் கொண்டு வாறதெண்டதுதான் இன்னும் விளங்குதில்லை. வின்சனுக்கு தானின்னும் செல்லப் பிள்ளையெண்ட நினைப்பு. வேலைக்குப் போறான், வாறான். பொறுப்பா ஏதும் செய்யிறானோ? வருஷத்துக்கொருக்கா கார் மாத்திறான். ஒரு நாளைக்கு ஒரு தமிழ்ப்படம் பாக்காட்டி நித்திரை வராத வனாயிருக்கிறான்.

லூர் : தமிழ்ப்படம் தவறாமப் பாக்க அவனைப் பழக்கினதே நீங்கள்தானேயப்பா?

www.padippakam.com



இமா : அதையில்லையெண்டு சொன்னனானே? ஆனால் இவன்ரை வயதிலை நான் பொறுப்போடை இருந்தமாதிரி இவன் இருக்கிறானோ? இல்லை.? இல்லையே!

லூர் : அவனைப் பற்றிக் குறைசொல்லாட்டி உங்களுக்கு நித்திரை வராது. அப்பா எல்லாம் செய்யிறாரெண்டு அவனிருக்கிறான். இனி.. இனி... அவன் செய்ய வேண்டியதைச் செய்வான்தானே? இவளவுநாளும் நீங்கள் என்ன செய்யிறியளெண்டு ஆருக்கும் சொல்லிப் போட்டே செய்யிறனீங்கள்? என்ன அலுவலெண்டாலும் செய்து முடிச்சாப் பிறகுதானே சொல்லுறனீங்கள்? அதுமாதிரி அவனும் இருக்கிறானாக்கும். சரி, சொல்லுங்கோ பாப்பம். இப்ப எண்டாலும் உங்களுக்கு றென்ரன் காசு எவளவு வரப்போகுது? நீங்கள் என்னென்னத்துக்குக் காசு காசு கட்டவேணு மெண்டதை...

இமா : உங்கடை தலையில பாரம் சுமத்தாமல் நானே எல்லாத்தையும் செய்துகொண்டு வந்தன். இது ஒரு குறையாப்போட்டுதே? ஆங்ஆ... சரியப்பா, சொல்லுறனெணை.. சொல்லுறன். வீட்டுக்காக பாங்குக்குக் கட்டவேண்டியது ஐந்நூற்றியிருபது ஈரோ.. தண்ணிக்கும் கரண்டுக்கும் இருநூற்றிப்பத்து... ரெலிபோனுக்கு நாற்பது... காருக்கு ஒரு ஐம்பது... இன்சூரனஸ் இனியில்லை. மற்றது வீட்டுச் சிலவுக்கு....

(இமானுவேல் கணக்குச் சொல்லச்சொல்ல லூர்த்தம்மா கூட்டிக்கொண்டு வந்து...)

லூர் : கட்டவேண்டிய காசு எண்ணூற்றியிருபது... றென்ரன் காசு எவளவப்பா வரும்.

இமா : ஐந்நூற்றியாறு ஈரோதானப்பா வரும்.

www.padippakam.com



லூர் : அப்ப... முந்நூறு குறையுது.

இமா : என்னெண்டப்பா முந்நூறு குறையும்? வீட்டுச்சிலவுக் கணக்கையும் சேத்துக்கூட்டும்.

(மனதுக்குள் கூட்டிப் பார்த்துவிட்டு நெற்றியைத் தடவிக்கொள்கிறாள் லூர்த்தம்மா)

இமா : என்னப்பா தலை விறைக்குதே? சொல்லேல்லையெண்டு குறைப்பட்டீர். சொன்னவுடன தலையில கையை வைக்கிறீர்...

லூர் : (பெருமூச்சுடன்) மெய்யேப்பா, இன்னும் எவளவு நாளைக்கு வீட்டுக்காசு கட்டவேணும்?

இமா : நாலு வருஷத்துக்கு... இன்னும் நாற்பத்தாறு கட்டுக்காசு கட்டவேணும்...

லூர் : ஐந்நூற்றியிருபது தர நாற்பத்தாறு எண்டா....

இமா : கிட்டத்தட்ட இருபத்தினாலாயிரம் வரும்.

(புளோறியா உள்ளிருந்து வந்தபடி...)

புளோ : என்னத்துக்கு அப்பம்மா கணக்குப்போடுறீங்கள்?

இமா : ஆ... அப்பம்மா இப்பதான் *haus ausgabe* (வீட்டுப்பாடம்) செய்துபாக்கிறா.

லூர் : (மணிக்கூட்டைப்பார்த்து) அப்பா... கதைச்சுக் கொண்டிருந்ததிலை நேரம்போனது தெரியேல்லை. பிள்ளை பள்ளிக்கூடம் வெளிக்கிட்டிட்டாள். நடவுங்கோ. *Zahn arts* (பல் வைத்தியர்) இட்டை *termin* இருக்கு.

இமா : என்னம்மா திடீரெண்டு *termin* எண்டுறீர்?

லூர் : ரெண்டு கிழமையா பல்லுக் கொதிக்குதெண்டியள்... நான் எப்ப உங்களுக்கு லீவெண்டு பாத்து இண்டைக்கு *termin* வச்சனான்.

www.padippakam.com



**இமா :** ஆ.. எப்ப tuv (பாவனை) முடியுதெண்டு கவனமாப் பாத்திருக்கிறீர்.

**லூர் :** என்னப்பா....

**இமா :** ஓமப்பா. நானிப்ப tuv முடிஞ்ச ஆள்தானே...

**லூர் :** உதென்ன கதை கதைச்சுக்கொண்டு நிக்கிறீங்கள். நடவுங்கோப்பா. பிள்ளை, வாவனம்மா நீயும். அப்பப்பாவோடை காரிலை வந்து பள்ளிக்கூடத்திலை இறங்கன்.

**புளோ :** ஓ.. அம்மா..! சூஸ்... நான் அப்பப்பாவோடை காரிலை போறன் என்ன...

**உள்ளிருந்து ஜஸ்மினின் குரல் :** ஓமோம். Frustuck (காலைச் சாப்பாடு) எடுத்து வச்சிட்டியே..?

**புளோ :** ஓமம்மா...

(மூவரும் வெளியே செல்ல திரை மூடுகிறது.)

**(திரை)**

○ ○ ○

www.padippakam.com



# காட்சி 3



***களம்***

*இமானுவேல்*
*வீட்டின் வரவேற்பறை.*

***பாத்திரங்கள்***

*வின்சன், ஜஸ்மின்.*

*வேலைக்குப் புறப்படும் கோலத்தில் ஜஸ்மின். இவள் ஓர் அலங்காரப் பிரியை என்பது அளவுக்கதிக ஒப்பனையில் தெரிகிறது. காலை ஒன்பது மணியென்பதை வானொலி உறுதிசெய்ய, காலையுணவை மேசையில் வைத்துவிட்டு அமர்கிறாள் ஜஸ்மின். வின்சன் கையில் கோப்பியும் ஒரு புத்தகமும் கொண்டு வந்தபடியே...)*

**வின்** : *Morgen! (காலை வணக்கம்!)*

**ஜஸ்** : *குசினி மேசையிலை கோப்பி வச்சன். எடுத்துக்கொண்டு வாங்கோ.*

**வின்** : *கொண்டுதான் வாறன். என்ன... பத்து மணி வேலைக்கு நேரத்தோடை வெளிக்கிட்டிருக்கிறீர்.*

**ஜஸ்** : *உங்கடை மகள் அலாம் அடிக்க அடிக்க எழும்புகிறாளில்லை. அவவை நித்திரையால எழுப்ப நான் எழும்ப வேண்டியிருக்கு. போதாக் குறைக்கு ரெண்டு கிழடுகளும் அலட்டிக்கொண்டிருக்குதுகள்.*

**வின்** : *உமக்கு மூண்டு பேற்றை பிரச்சினை. எனக்கு நாலு பேற்றை பிரச்சினை.*

எ-24

www.padippakam.com



*ஜஸ்* : (புரியாதமாதிரி) என்ன....

*வின்* : உம்மையும் சேர்த்து.... நாலுபேர்தானே

*ஜஸ்* : (சற்று கோபமாக) என்ன...?

*வின்* : உண்மையைத்தான் சொல்லுறன். விடியப்புறம் மூண்டு மணிக்கு வேலை செய்துகொண்டிருக்க, மிஷின் பழுதாப்போய்ற்றுது. நாலு மணிவரைக்கும் திருத்திப் பாத்தாங்கள். சரி வரேல்லை. நாலு மணிக்கு Feirabend (வேலை முடிஞ்சு) எண்டாங்கள். கொஞ்சநேரம் நித்திரை கொள்ளலாம் எண்டு சந்தோசப் பட்டுக்கொண்டுவந்து படுத்தன். புளோரியா வின்ரை Alarm அடிச்ச சத்தம் எனக்குக் கேக்கேல்லை... ஆனால் புளோரியாவை எழும்பச் சொல்லி நீர் போட்ட சத்தம் Domsheid (ஜேர்மனியில் ஒரு நகரப்பகுதி) கோயில் மணி அடிச்சமாதிரிக் கேட்டுது. என்ரை நித்திரை குழம்பீற்றுது.

*ஜஸ்* : அப்ப அதுகள் அலட்டினதொண்டும் உங்களுக்குக் கேக்கேல்லையே!

*வின்* : என்ன... அலட்டினது, அலட்டினது எண்டுறீர்? அப்பிடி என்ன கதைச்சவை?

*ஜஸ்* : உங்களுக்குப் பொறுப்பில்லையெண்டு கதைச்சவை....

*வின்* : எனக்குப் பொறுப்பில்லை, பொறுப்பில்லையெண்டு நீர் சொல்லுறதை அவையும் கேட்டிட்டினமாக்கும்... எனக்கெண்டால் ஒண்டும் விளங்குதில்லை. நான் ஒழுங்கா வேலைசெய்யுறன். வேலையிடத்திலும் Vorarbeiterஆ (முன்னிலை வேலையாள்) இருக்கிறன். மற்றவை சொல்லக்கூடியமாதிரி கெட்ட பழக்கமெண்டு என்னிட்டை என்ன இருக்கு? ரெண்டு நாளைக்கு ஒரு பக்கெற் சிகரட்தான் பத்துறன். அதுவும் அப்பா

www.padippakam.com



அம்மாவுக்கு முன்னுக்குப் பத்திறதில்லை. ஆரோடையும் சேர்ந்து குடிக்கிறனோ? இல்லை. எல்லாரும் நித்திரை கொண்டாப் பிறகு Bed Roomக்கை வச்சு மருந்துமாதிரி கொஞ்சம் குடிக்கிறன்.

**ஜஸ்** : மருந்து மாதிரியோ? மூண்டு நாளைக்கொருக்கா முழுசா ஒரு போத்திலை விழுங்குறீங்கள். அதுக்குப் பேர் மருந்தோ?

**வின்** : இந்தா பாரும். Nachtshift (இரவு வேலை) எண்டதால பகலிலையும் குடிக்கிறேல்லை. அதைவிடும். நான் வேலை செய்யுறன். நல்ல சம்பளம் எடுக்கிறன். என்ரை சம்பளத்தை வச்சு நிர்வாகம் செய்யுறதே நீர்தான்....

**ஜஸ்** : அப்ப நான் வேலை செய்யாமல் சும்மாவே இருக்கிறன்?

**வின்** : நான் அப்பிடிச் சொன்னானே? ஆனா உம்மடை சம்பளம் எவ்வளவு எண்டதை நான் இதுவரைக்கும் கேட்கேல்லை. நீரும் சொல்லேல்லை...

**ஜஸ்** : இப்ப உங்களுக்கு வாற சம்பளம்... எனக்கு வாற சம்பளம்.... Kindergeld (பிள்ளைகளுக்கான அரசு உதவி) எல்லாத்துக்கும் சேர்த்து கணக்குக் கேட்கப்போகினம்.

**வின்** : எங்களுக்கு வாற வருமானத்தைப்பற்றி ஆருக்குக் கணக்குக் காட்டுறது? Financeamtக்கு (வருமானவரி இலாகா) ஒழுங்கா கணக்குக் காட்டி.... கட்டிற Steuer கூட (வரி) திருப்பி எடுக்கிறன். பிறகென்னப்பா?

**ஜஸ்** : ஐயோ... ஐயோ... காலமை அவை ரெண்டுபேரும் கதைச்சுக் கொண்டிருந்ததைப்பற்றிச் சொல்லுறன்.

**வின்** : ஆர் கதைச்சதையப்பா...?

**ஜஸ்** : மாமாவும் உங்கடை அம்மாவும்...

www.padippakam.com



**வின்** : (புரிய வைக்க முயற்சி செய்வதாக நளினம் செய்து) உம்மடை மாமா எண்டா.... எனக்கு அப்பா. என்ரை அம்மா... (எரிச்சலுடன்) உமக்கு மாமிதானே?

**ஜஸ்** : ஐயோ... இந்த மனுசனுக்கு எப்ப என்ன கதைக்கிற தெண்டு தெரியாமலிருக்குது!

**வின்** : சரி... சரி... சொல்லும் என்ன கதைச்சவை?

**ஜஸ்** : இந்த வீட்டுக்கு இன்னும் நாலு வருசம் காசுகட்ட வேணுமாம். அதுக்குப் பிறகுதான் வீடு சொந்தமாகுமாம். மாமாவுக்கு இனி வரப் போற Renten காசு போதாது. அதாலை உங்களைக் காசு கேக்கப்போகினம். அவைக்கு நீங்கள்மட்டும் பிள்ளையில்லை. ஜோன்சன் Arbeitlos (வேலையிழப்பு) காசிலையும் Sozial (சமூக உதவி) காசிலையும் சந்தோசமா காத்திலை மிதக்கிறார். அவர் தனி ஆள். அவரிட்டைக் கேக்கலாந்தானே? உங்களிட்டை காசைப்பற்றி ஏதும் கதைச்சால் நீங்கள் ஒண்டும் கதைக்க வேண்டாம்.

**வின்** : நீர் வீட்டில இல்லாத நேரம் கதைச்சால், நான் கதைக்காமல் இருக்கேலாது ஜஸ்மின்.

**ஜஸ்** : சரி, அப்பிடிக் கதைச்சால் என்ன பதில் சொல்லப்போறீங்கள்?

**வின்** : என்ன பதில் சொல்லுறதெண்டால்..!

**ஜஸ்** : ஆ..! உங்களுக்கு இன்சூரன்ஸ் கட்டுறது... புளோரியாவுக்கு sparbookஇல (சேமிப்புப் புத்தகம்) காசு போடுறது... வருஷம் வருஷம் கார் மாத்தினதில நட்டம், பற்றீசியாவைப் பாக்க கனடாவுக்குப் போனதில கடன்... இப்ப எடுத்த காருக்கு மாதம் மாதம் காசு கட்டவேணும்...

www.padippakam.com



**வின்** : எனக்கு Versicherung (காப்புறுதி) கட்டுறதும், பிள்ளைக்கு Sparen (சேமிப்பு) செய்யுறதும் உண்மை, கார் மாத்தினதில நட்டம், கடனிருக்கு, கட்டுக்காசுக்கு கார் எடுத்தது எண்டதெல்லாம் சுத்தத்திலும் சுத்தமான பொய்யெல்லோ..?

**ஜஸ்** : அதைத்தான் நீங்கள் சொல்லவேணும்....

**வின்** : ஜஸ்மின் எனக்கு இப்பிடி நல்ல பழக்கங்கள் பழக்கிறமாதிரி பிள்ளைக்கும் பழக்குறீரோ?

**ஜஸ்** : நேரகாலம் தெரியாமல் பகிடி விடாதீங்கோ. பொய் சொல்லக்கூடாதுதான். ஆனா... நாங்கள் நல்லா இருக்கோணுமெண்டால், பொய் சொல்லுறதைத் தவிர எனக்கு வேற வழி தெரியேல்லை.

**வின்** : உமக்காக... நீர் சொல்லித் தந்தமாதிரி நான் பொய் சொன்னாலும், அதை அப்பாவும் அம்மாவும் நம்பவேணுமே? அப்பாவுக்கு இப்ப அறுபத்தைஞ்சு வயது அனுபவங்கள் கனக்க. கோவாவைக் காட்டி புளுமன் கோல் (பூக்கோவா) எண்டா நம்புவாரே?

**ஜஸ்** : நம்புறமாதிரி சொல்ல வேணும்...

**வின்** : ஜஸ்மின்... சரியான கஸ்டமான வேலையை என்னைச் செய்யச்சொல்லுறீர்.

**ஜஸ்** : சரி. நானில்லாத நேரம் காசு விஷியம் ஏதும் கதைக்க வெளிக்கிட்டினமெண்டால் அவசரமா ஏதும் Termin இருக்கெண்டு சொல்லிப்போட்டு வெளியில போங்கோ! நான் வந்து பிறகு கதைப்பன்... என்ன... சரியா..?

**வின்** : ஓ... ஓ....

**ஜஸ்** : எனக்கு வேலைக்கு நேரமாகீற்றுது. நான் போய்று வாறன். என்ன..?

www.padippakam.com



*(ஜஸ்மின் Hand Bag உடன் வெளியே போகிறாள்.)*

**வின்** : இஞ்சை பிறந்து வளர்ந்து படிச்ச பெட்டையளெண்டால் ஜேர்மன் Styleஇல இருப்பினம். எங்களுக்கு ஏற்றமாதிரி அமையாது. ஊரில இருந்து நல்ல மருமகளா சொந்தத்துக்குள்ளை எடுப்பமெண்டு எடுத்தவை... மருமகள் Pop hair வெட்டிக்கொண்டு வேலைக்குப்போறா. மருமகள்... sher gut..! (மிக அருமை..!)

**(திரை)**

ooo

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 4



***களம்***
*இமானுவேல் வீடு.*

***பாத்திரங்கள்***
*இமானுவேல், லூர்த்தம்மா, புளேறியா, வின்சன், ஜோன்சன், ஜஸ்மின்.*

*இமானுவேல், லூர்த்தம்மா, புளேறியா மூவரும் ஞாயிற்றுக் கிழமைப் பூசைக்குப் புறப்பட ஆயத்தமாகின்றனர். மேடையில் இமானுவேல், புளோறியா.*

**இமா** : லூர்த்து! கெதியா வாங்கோம்மா! பூசை முடிஞ்சாப் பிறகே கோயிக்குப் போறது?

**லூர்** : (உள்ளிருந்து) இந்தா வந்திட்டன்!.. பிள்ளை.. வெளிக்கிட்டிட்டியேடா?

**புளோ** : நான் வெளிக்கிட்டு அரை மணித் தியாலமா Hallக்கை இருக்கிறன் அப்பம்மா.

**லூர்** : பேரனுக்கு ஏற்ற பேத்தி.

**இமா** : பிள்ளை இண்டைக்குப் பூசையில சொல்லுற மன்றாட்டை ஆயுத்தப்படுத்திப் போட்டியேடா?

**புளோ** : ஓ... இங்க பாருங்கோ அப்பப்பா! இந்தப் பக்கத்தை அப்பிடியே பாடமாக்கிப்போட்டன்.

**இமா** : கெட்டிக்காரி! பிள்ளை அப்பம்மாவைப் பாத்தியேடா... இன்னும் வெளிக்கிடேல்லை.

www.padippakam.com



**புளோ** : அப்பம்மா.. என்ன செய்யிறீங்க? நேரம்போகுது!

**லூர்** : (வந்தபடி) ஒரு துண்டு பாண் தானா எடுத்துச் சாப்பிடமாட்டார் உன்ரை அப்பப்பா. காலமை அவருக்கு பாண் பூசிக் குடுத்து, கோப்பிபோட்டுக் குடுத்தாப் பிறகுதானே நான் வெளிக்கிடலாம்.

**இமா** : அப்ப பாணும் கோப்பியும் உம்மிட்டைக் கேட்காமல் பக்கத்து வீட்டுத் துருக்கிக்கார மனுஷியிற்றையே கேட்கிறது! (பேத்தியிடம்) சோக்காயிருக்குமென்ன?

(புளோறியா சிரிக்க..)

**லூர்** : சரி சரி... சிரிச்சது போதும் இறங்குங்கோ. கறி கொதிச்சிட்டுது. இறக்கிப்போட்டு வாறன். ரெண்டுபேரும் இறங்குங்கோ!

**இமா** : நீர் வரும்வரைக்கும் நாங்கள் போய் குளிருக்கை நிண்டு விறைக்கிறதோ? போய் கறியை இறக்கிப்போட்டு வாரும்.

(லூர்த்தம்மா உள்ளே போக, இமானுவேல் ஜக்கெற் அணிந்தபடி)

**இமா** : இஞ்சையப்பா! நேற்றைக்கு ஜோன்சனைக் கூட்டிக்கொண்டு வாறனெண்டு போனீர்! என்ன நடந்தது? எனக்கொண்டும் சொல்லேல்லை!

**லூர்** : (உள்ளிருந்தபடி) நான் போகேக்கை அவன் ஏதோ அவசர அலுவலா வெளிக்கிட்டுக்கொண்டு நிண்டவன். இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே, வாறன் எண்டான்.

**இமா** : கிழிச்சான்! ஏதோ பெரிய (நேர ஒதுக்கீடு) வேலைவெட்டிக்குப் போறவர்தானே? termin வச்சு வரப்போறார். நீர் பாத்துக்கொண்டிரும்.

**லூர்** : (வந்தபடி) சும்மா பேசாதீங்கோ அப்பா! அண்ணியும்

www.padippakam.com



அண்ணையும் வீட்டிலை நிப்பினம், நீயும் வா, எல்லாரையும் வச்சு முக்கியமான விஷியம் கதைக்கிறதுக்கு அப்பா பாத்துக் கொண்டிருக்கிறா- ரெண்டு வடிவாச் சொனனனான். கட்டாயம் வருவான்.

இமா : பாப்பம்... பாப்பம்... இந்த மாதம் சம்பளக்காசு வரும். அடுத்த மாதத்திலை இருந்துதானே பிரச்சினை? கறி அடிப்பிடிக்கப்போகுது. போய் இறக்கிப்போட்டு வாருமன்.

லூர் : கறி இறக்கிக் போட்டடன். நடவுங்கோ..

(வாசல்மணி அடிக்கிறது.)

லூர் : (ஜக்கெற் அணிந்துகொண்டு) பிள்ளை, ஆரெண்டு பாரடா!

புளோ : அப்பப்பா சித்தப்பா வாறார்!

லூர் : பாத்தீங்களே... என்ரை பிள்ளையை! சொன்னபடி வந்திட்டான்!

இமா : பிறகென்ன, உம்மடை மகன் சொன்ன சொல்லைக் காப்பாத்திக்கொண்டு வந்திருக்கிறார். இண்டைக்குப் புயல்தான் வரப்போகுது.

லூர் : அ..ஆ... போதும். சும்மா இருங்கோ

(நெளித்துக் காட்டிவிட்டு உள்ளே செல்கிறார்.)

புளோ : (ஜோன்சன் உள்ளேவர) வாங்கோ சித்தப்பா...

ஜோன் : (போதை குறைந்த நிலையில் வருகிறான்) Morgen புளோறியா! Wie gest? (எப்படிச் சுகம்?)

புளோ : நல்ல சுகம்! நீங்கள் சுகமா இருக்கிறீங்களா?

ஜோன் : Ich bin imme imme... imme gut. (நான் எப்பவும் சுகம்தான்.)

www.padippakam.com



**இமா** : எடேய்! நீ டொச்சிலை கதைக்க, பிள்ளை தமிழிலை பதில் சொல்லுது. பிள்ளையோடை தமிழிலை கதைக்க வேணு மெண்டு உனக்கு விளங்கவேணாமே?

**ஜோன்** : தமிழிலை கதைச்சுக் கதைச்சுப் பிள்ளைக்கு டொச் வராமப் போகப்போகுது.

**இமா** : உப்பிடிக் கதைச்சவை கனபேர் தம்பி! அவளவும் அசல்ப் பொய்.

**இமா** : நீயும் கொண்ணையும், உங்கடை வயதுப் பொடியளும் தமிழ்க் கதைச்சுத்தான் வளந்தனீங்கள். உங்களுக் கெல்லாம் டொச் வராமலேபோனது. தமிழைத்தான் சிலபேர் கடிச்சுக் கடிச்சுக் குதறுறியள். ஆனால் என்ரை ராசாத்தியைப் பார்... என்ன வடிவாத் தமிழ் கதைக்கிறாளெண்டு...

(பேத்தியை அணைத்து முத்தமிடல்.)

**லூர்** : (தேனீருடன் வந்தபடி) என்னை அவசரப்படுத்திப்போட்டு மகனோடை தமிழாராய்ச்சி நடத்துறார். தம்பி நீயும் வாறியே, கோயிலுக்குப் போட்டு வருவம்?

**ஜோன்** : கோயிலுக்கோ? நானோ? Tutmier sehr leit. என்னை மன்னித்துவிடுங்கள். நீங்கள் போட்டு வாருங்கோ.

**இமா** : மடையா! கோயிலுக்குப் போற எங்களுக்கு Tutmier sher leit சொல்லாதை. கோயிலுக்கு வராத உனக்கு நாங்கள் தான் Tutmier sehr leit சொல்லவேணும்.

**லூர்** : சரி... சரி... நடவுங்கோ. ஜோன்சன் இரு. நாங்கள் போட்டுவாறம். (உள்ளே பார்த்து...) பிள்ளை..! குழம்பு வச்சிட்டன். மரக்கறி ஏதும் பாத்து வச்சுவிடுங்கோ...

**ஜஸ்** : (வந்தபடி) வாரும் ஜோன்சன். எப்பிடிச் சுகமாயிருக்கிறீரோ?

www.padippakam.com



**ஜோன் :** Morgen அண்ணி! என்ன அண்ணி, இப்பதான் நித்திரையால எழும்பியிருக்கிறீங்கள்போல இருக்கு.

**ஜஸ் :** கொஞ்சநேரத்திற்கு முதல் எழும்பீற்றன்! இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. இந்த ஒருநாள் மட்டும்தானே கொஞ்சநேரம் கூட நித்திரை கொள்ளுறது?

**ஜோன் :** ம்... ஹும்...

**ஜஸ் :** அது சரி ஜோன்சன். அண்டைக்கு அண்ணைக்கும் தம்பிக்கும் என்ன நடந்தது. நீங்கள் ரெண்டு பேருமென்ன சின்னப் பிள்ளையளே?

**ஜோன் :** நீங்கள் அண்டைக்கு வீட்டிலை இல்லையே..?

**ஜஸ் :** இல்லாட்டி என்ன! புளோறியா நிண்டவள்தானே? புளோறியாவுக்கு முன்னுக்கு என்ன நடந்தாலும் உங்கடை அப்பா வந்தவுடன எல்லாத்தையும் அப்பிடியே ஒப்படைச்சுப்போடுவாள். அப்படி ஒப்படைச்சால்தான் அவளின்ரை மனதுக்கு நிம்மதி! அப்படி ஒப்படைக்கேக்கைதான் என்ரை காதிலை பட்டுது.

**ஜோன் :** ஓ...

(சிரிக்கிறான்.)

**ஜஸ் :** ஓ... அப்பிடியொரு கோள்மூட்டி. நீர் அண்ணைக்கு அடிக்கக் கதிரையைத் தூக்கினீராம். அண்ணை உம்மைத் தள்ளிவிட்டாராம்... எல்லாத்தையும் உங்கடை அப்பாவிட்டை இவள் சொல்லி அண்ணைக்கும் அம்மாவுக்கும் நல்ல பேச்சு வாங்கிக் குடுத்தாள்.. நல்லவேளை நீர் உடன வெளிக்கிட்டதால தப்பினீர்.

**வின் :** (கையில் கோப்பியுடன் வந்தபடி) அண்டைக்குக் காசு

www.padippakam.com



*எத்தனை நாளைக்கு சுதந்திரமா இருக்கிறதா நினைச்சு, உன்னையே நீ ஏமாத்திக் கொண்டிருக்கப்போகிறாய். உனக்கெண்டொரு குடும்பம் வேணாமே?*

***ஜோன்*** *: Famille... வாழ்க்கையில எந்தச் சந்தோசமும் வேண்டாமெண்டு சொல்லுற பொம்பிளைதான் என்னைக் கலியாணம் செய்ய வருவாள். அப்படி ஆரும் இருப்பினமோ? Nein... என்னாலே ஏன் ஒரு பொம்பிளை-யின்ரை வாழ்க்கை வீணாப் போகவேணும்? வேண்டாம், நான் ஒருதற்றை சந்தோசத்தையும் கெடுக்க விரும்பேல்லலை. ஆனா... அப்பா அம்மா எங்களை வளர்த்ததுக்கு அவை எதிர்பார்த்த சந்தோசத்தை நான் குடுக்கேல்லை. இனி... ஏலாது. இனி... ஏலாது... நான் பழைய ஜோன்சனா வர ஏலாது. வர ஏலாது. வின்சன்... நேரம் போய்ருது. இனி என்னால இஞ்ச இருக்க ஏலாது... என்னால தாங்கேலாம இருக்கு. நான் ஒருக்கா வெளியில போய்ருவாறன்.*

*(வின்சன் முறைத்துப் பார்க்க)*

***ஜோன்*** *: Ja! நான் போய்ரு உடன வாறன்*

***வின்*** *: நீ எங்க போகப்போறாயெண்டு எனக்குத் தெரியும்.*

*(கதவு திறக்கப்படும் சத்தம் கேட்பதை சைகையால் உணர்த்த, கோயிலிலிருந்து இமானுவேல்,லூர்த்தம்மா, புளோறியா ஆகியோர் திரும்பி வருதல்.)*

***வின்*** *: ஒரு இடமும் போகவேண்டாம். இரு.*

*(ஜோன்சன் வெளியே போய் வருவதாக சைகையால் கெஞ்சுதல். மகள் ஓடிவருதல் வின்சன் அணைத்து முத்தமிடுகிறான்.)*

***இமா*** *: வின்சன்! பெரியவர் எங்க போகப் போறாராம்?*

www.padippakam.com



ஜஸ் : ஜோன்சன்! எங்க போகப்போறீர்? இரும். சாப்பிட்டிட்டுப் போகலாம். சமையல் முடிஞ்சுது.

இமா : சமையல் முடிஞ்சுதெண்டால் சாப்பிட வேண்டியது தானே!

(ஜஸ்மின் மாமனைக் கண்டு எழும்ப..) இருங்கோ பிள்ளை, இருங்கோ... என்ன இன்னும் சாப்பிடேல்லையே?

ஜஸ் : இல்லை. மாமா நாங்கள் Birthday க்குப் போறம்.

லூர் : அப்பா.. உங்களுக்குச் சாப்பாடு போடட்டே?

இமா : எனக்குப் பசிக்கேல்லையப்பா. நான் பிறகு சாப்பிடுகிறன். பிள்ளை நீயும் Birthdayக்குப் போறாய்தானேயம்மா? அப்ப போய் உடுப்பை மாத்துங்கோவன். லூர்த்தம்மா, நீரும் ஜோன்சனும் சாப்பிடுங்கோவன்......

லூர் : நான் பிறகு சாப்பிடுகிறனப்பா .........ஜோன்சன்

ஜோன் : Nein Ich habe Kein hunger

இமா : பின்னைச் சரி. எல்லாரும் இருங்கோ... இவளவு நாளும் நான் எந்த ஒரு பிரச்சினையையும் உங்களிட்டை விட்டதில்லை. ஏன்...? அம்மாவிட்டைக்கூட சொன்னதில்லை.

ஜோன் : என்ன! அதுக்கிடையிலையாம்..65 வயதெண்டால் பென்சன் தருவாங்கள்தானே ...

இமா : என்னடா அங்க தனியக் கதைக்கிறாய்

ஜோன் : ஒண்டுமில்லை

இமா : நான் செய்த வேலையளெல்லாம் ஒரு சராசரித் தொழிலாளிக்குரிய வேலையள்தானே.. இப்பிடியான வேலையள் செய்தவைக்கு பென்சன் முழுச் சம்பளமாக

www.padippakam.com



வராது.

லூர் : இனி எங்கடை காலம் முடிஞ்சுது. இன்னுமொரு நாலு வருஷந்தானே! நீங்கள் ரெண்டுபேரும் இந்த வீட்டின்ரை காசைக் கட்டிப்போட்டியளெண்டால் ...உங்கடை எதிர்காலத்துக்கு ஒரு சொத்தாகிவிடும்

ஜோன் : அம்மா... எனக்கு 'ஆர்பைற்லொஸ் கில்ப"தான் இப்ப வாறது. இனிமேல் நான் வேலை செய்வன் எண்ட நம்பிக்கை எனக்கில்லை...

வின் : அப்ப... என்ன... சோசலில இருக்கப் போறியே..

ஜோன் : Natürlich... (நிச்சயமாக) மற்றது... சொத்து எதிர்காலம் இதுகளிலை எனக்கு நம்பிக்கையில்லை... நான் வீட்டுக்குக் காசு கட்டுவன் எண்டு எதிர்பார்க்காதீங்கோ...

ஜஸ் : ஜோன்சன்... எதிர்காலத்திலை... சொத்திலையெல்லாம் நம்பிக்கையில்லை... காசும் கட்ட ஏலாதெண்டு சொல்லுறீர்... இப்ப இந்த வீட்டிலை உமக்கிருக்கிற பங்கை அண்ணைக்கு எழுதிக் குடுப்பீரே...

ஜோன் : Warum? das geht nicht. (ஏன்? அது சாத்தியமில்லை.) ஏன் என்ரை பங்கை நான் குடுக்கோணும்...

ஜஸ் : என்ன ஜோன்சன்... அப்ப அண்ணை தனிய நாலு வருசமும் கட்டி முடிக்க வேணுமெண்டு நினைக்கிறீரோ?

ஜோன் : எனக்கு ஏலாத நிலைமையிலை அவர்தானே கட்டவேணும்.

வின் : இதைச் சொல்லத்தான் அம்மா வந்து உன்னைக் கூட்டிக்கொண்டு வந்தவவோ... நான் தனியக் காசு கட்டவேணுமாம்... ஆனால் அவருக்குப் பங்கு

www.padippakam.com



வேணுமாம்...

ஜஸ் : சும்மா இருங்கோ! அவருக்கு ஏலாத நிலைமையில... எங்களாலை ஏலுமோ ஏலாதோ... இந்தப் பிரச்சினையை எப்பிடிச் சமாளிக்கலாம் எண்டு யோசிப்பமெண்டில்லை... தமையனும் தம்பியும் வாக்குவாதம் செய்ய வெளிக்கிடுகிறீங்கள்...

இமா : வடிவாச் சொல்லு பிள்ளை..

ஜஸ் : மாமா, உங்களுக்குத் தெரியும் உங்கடை மகனை... வருசத்துக்கொருதரம் கார் மாத்தி, மாத்தி ரண்டாயிரம், மூவாயிரம் எண்டு நட்டம்... பற்றீசியாவைப் போய் பாத்துக்கொண்டு வரச் சொன்னீங்கள்... அப்பா சொல்லிப்போட்டார்... கட்டாயம் போகத்தான் வேணுமெண்டு வெளிக்கிட்டார். போகேக்கை வெறுங்கையோடை போறதோ? தங்கச்சியின்ரை பிள்ளையளுக்கு நகை வாங்க வேணுமெண்டு நகையள் வாங்கினார். கனடாவுக்குப் போனதாலமட்டும் ஒன்பதாயிரம் மாக் கடன் வாங்கிப்போட்டார்..

லூ : என்ன... கடன் வாங்கினவனோ?

இம் : அதுவும் இவளவு தொகையோ?

ஜஸ் : ஓம் மாமா! அதோடை விட்டாரே... இந்தக் காரை எடுக்கவேணுமெண்டு ஒற்றைக் காலிலை நிண்டு கட்டுக் காசுக்கு... எடுத்து வச்சிருக்கிறார்... பிள்ளையின்னை Kindergeldகாசை அவவுக்கு பதினெட்டு வயதுவரைக்கும் எடுக்கேலாதமாதிரி பெற்றாக் செய்து பாங்கில போடுறார்... இதோடை விட்டாரே... தனக்கும் எனக்கும் லைவ் இன்சூரன்ஸ் செய்து மாதா மாதம் இருநூறு



படிப்பகம்

www.padippakam.com



யூறோ கட்டுறார்... என்ரை சம்பளம்... கொஞ்சந்தான்... அதில்தான் நான் எனக்குத் தேவையானதுகளை வாங்கிக் கொள்ளுறன்...

**லூர்** : தோளுக்கு மிஞ்சினாத் தோழன்... அவன் உழைக்கிறது அவனுக்கு. அதைப்பற்றி அவனிட்டைக் கேக்கமாட்டன் எண்டு அப்பா இருந்தார்... அப்பா கேட்காமல் இருக்கநானும் இதைப்பற்றி விசாரிக்கக் கூடாதெண்டு இருந்திட்டன்... எட தம்பி, உனக்கு இந்த வீட்டில என்ன சிலவு குறை வச்சனாங்கள்... சாப்பாட்டுச் சாமானளை அப்பா கொண்டுவந்து போடுவார்... நீயும் வாங்கிப் போடுவாய்... கரணஇட் காசு, தண்ணிக் காசு ஈறாக மற்றச் சிலவெல்லாம் அப்பாதானே பாத்தவர்.. நீ மிச்சம் பிடிக்கிறாயெண்டு நாங்களிருக்க... நீயென்னடா இப்பிடிக் கடன்பட்டிருக்கிறாய்... ஆரிட்டைக் கடன் வாங்கினனி... அப்பாவுக்குத் தெரிஞ்ச ஆரிட்டையுமே?

**ஜோன்** : நான் நினைச்சனான்... நான்தான் ஒரு Dum Kopf ஆக (முட்டாள்) வாழ்ந்து என்ரை வாழ்க்கையை வீணாக்கிப் போட்டனெண்டு... நான் தனி ஆள்... நீ Familion... Warum... Du bist ein Düm Kopf.. (நீ குடும்பகாரன். ஏன்... நீ ஒரு முட்டாள்...)

**இமா** : ஜோன்சன்.. கதையை நிப்பாட்டு... வின்சன்... ஆரிட்டைக் கடன் வாங்கினனி? கை மாத்தா வாங்கினனியோ? பாங்கில எடுத்தனியே இல்லாட்டி வட்டிக்கு வாங்கினனியோ?

(வின்சன் மெளனமாக ஜஸ்மினைப் பார்க்க..)

**இமா** : கேக்கிறனெல்லே... வாயைத் திறந்து பதிலைச் சொல்லனப்பா..

www.padippakam.com



ஜஸ் : அவரென்னெண்டு வாயைத் திறப்பார்... கடன் வாங்கினது... உங்களுக்குத் தெரியக் கூடாது... தெரிஞ்சால் பேசுவீங்களெண்டு என்னையும் வாயைத் திறக்கக் கூடாதெண்டிட்டார்... கார்க் கடன் பாங்கில... கனடாவுக்குப் போன கடன் வெளியில வாங்கினது...

லூர் : அதுதான் பிள்ளை... ஆரிட்டை வாங்கினதெண்டெல்லே கேட்கிறார்...

ஜஸ் : என்னோடை வேலை செய்யிற பிள்ளையிட்டை வாங்கினது... அவையிற்றை குறைஞ்ச வட்டி... ஆயிரத்தக்கு முப்பதுதான்...

ஜோன் : அம்மா... வின்சனுக்கு எங்க கடனிருக்குது... எவ்வளவு கடனிருக்குது எண்டுதைப் பற்றிக் கதைக்கவே என்னை வரச் சொன்னனீங்கள்...

ஜஸ் : நாங்கள் பட்ட கடனை நாங்கள் குடுப்பம் ஜோன்சன்.. நீர் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்... மாமா... நான் இன்னுமொரு நாலு மணித்தியாலம் கூட வேலை செய்து... வீட்டுக்குக் கட்டுக்காசை கட்டுறன்... கரண்ட் காசையும் தண்ணிக் காசையும் நீங்கள் கட்டினீங்களெண்டால்... பிரச்சினையைத் தீர்த்துப் போடலாம்... ஆனால்...

லூர் : என்ன பிள்ளை... சொல்லுங்கோ... ஜஸ்மின் எல்லோரையும் பார்த்துவிட்டு... கீழே பார்த்து

ஜஸ் : வீட்டை... இப்பவே... அவரின்ரை பேருக்கு மாத்திவிடுங்கோ...

இமா : என்ன...

www.padippakam.com



*ஜோன்* : வுண்டபா.. (அற்புதம்...)

*ஜஸ்* : ஓ... பிறகு... எங்களுக்குப் பிரச்சினை இருக்கக்கூடாது...

*லூர்* : வின்சன்... என்னடா... பிள்ளை இப்பிடிச் சொல்லுறா... நீ வாயை மூடிக்கொண்டிருக்கிறாய்...

*வின்* : அவ சொல்லுறதிலை என்ன பிழை... நியாயத்தைத் தானே சொல்லுறா...

*இமா* : ஓம்... ஓம்... ஒரு பிழையுமில்லை... அவளவும் நியாயம்...

*லூர்* : என்னப்பா சொல்லுறீங்கள்...

*இமா* : பின்னை... அவவுக்கு... அது நியாயம் எண்டால்... எனக்கும் ஒரு நியாயம் இருக்கும்தானே! எல்லாரும் கேட்டுக் கொள்ளுங்கோ... இந்த வீடு... என்ரை வீடு... என்ரை மனுஷின்ரை வீடு... அகதியா வந்து... இந்த நாட்டு விசாவுக்கு ஆலாப் பறந்து உங்களுக்கு இரெண்டு நாட்டு சிற்றிசனுக்காக... செய்யவேண்டியதெல்லாம் செய்து... நான் வாழ்ந்த வீடு... நானோ... என்ரை மனுஷியோ சாகும்வரைக்கும் ஒருத்தருக்கும் துரோகம் செய்யமாட்டம்! ஒரு கண்ணுக்கு தண்ணியும் மற்றக் கண்ணுக்கு எண்ணெயும் ஊத்தமாட்டன்...

உங்கடை முடிவை நீங்கள் சொல்லுறீங்கள்... இனி... நான் என்ரை முடிவை எடுத்துக் கொள்ளுறன்... அதுக்கு எனக்கு யோசிக்க கொஞ்ச நேரம் வேணும்... ஒரு கிழமை... பத்து நாள் பொறுங்கோ... இவளவு நாளும் எல்லாத்துக்கும் தனிய முடிவெடுத்தனான்... இனி என்ரை மனுஷியோடை கலந்து... ஒரு முடிவெடுக்கப் போறன்... சரி... நீங்கள் பசியோடை இருக்கிறியள்... Birthdayக்குப் போட்டு வாங்கோ...

www.padippakam.com



ஜஸ் : பிள்ளை... வா அம்மா... எழும்புங்கோவன்....

ஜோன் : வின்சன்... என்னையும் Birthdayஇல (புகையிரத நிலையத்தில்) இறக்கி விடு...

(எல்லோரும் வெளியே போக.. இமானுவேல் மேடையில் உலாவுகிறார். லூர்து நாடியில் கைவைத்திருக்க...)

இமா : கடன்... கனடாவுக்கு அப்பா போகச் சொன்னதால கடன்... அதுவும் ஒன்பதாயிரம் கடன்... நானென்ன... கட்டுமரத்திலயே ஜேர்மனிக்கு வந்தனான்... நானும் பிளேனேறித்தானே வந்தனான்...

(வாசல் மணியொலிக்க...) ஆரெண்டு பாருமப்பா...

(லூர்து கதவு திறக்க... ஒரு பெண் வருகிறார்.)

சாரதா : வணக்கம்...

லூர் : வணக்கம்... நீங்கள்...

சாரதா : என்னை உங்களுக்குத் தெரியாது... நான் ஜஸ்மினோடை வேலை செய்யிறனான்... நேற்றைக்கு வேலைக்கு வரேக்கை காசு கொண்டு வருவனெண்டு அவவுக்கு சொன்னனான்... பிள்ளையை டொக்டரிட்டை கொண்டுபோனதாலே நேற்றைக்கு நான் வேலைக்குப் போகேல்லை... அவவிட்டைச் சொல்லிவிடுங்கோ... குறை நினைக்க வேண்டாமெண்டு இதிலை ரெண்டு மாத வட்டிக் காசும் இருக்குது.. எண்ணிப் பாருங்கோ... நானூறு யூறோ இருக்குது...

லூர் : நான் இப்பிடியே குடுத்துவிடுகிறன்...

சார : சரி... நான் வாறனுங்கோ...

www.padippakam.com



*(நடந்து... திரும்பி வந்து...) ஜஸ்மின் சொன்னவ... வட்டிக் காசு பிந்திலை... மாமா கோவிப்பாரெண்டு... குறை நினைக்க வேண்டாமெண்டு அவரிட்டை ஒருக்காச் சொல்லுங்கோ... என்ன...*

*(சாரதா வெளியே செல்கிறார். இமானுவேல் திகைப்புடன் மனைவியைப் பார்க்க...)*

**(திரை)**

o o o

படிப்பகம்

www.padippakam.com



# காட்சி 5



***களம்***
*இமானுவேல் வீடு.*

***பாத்திரங்கள்***
*இமானுவேல், லூர்த்தம்மா,*
*வின்சன், ஜஸ்மின், புளோறியா,*
*ஜோன்சன், பாஸ்கரன்.*

*மேடையில் இரண்டு மூன்று பயணப்பைகள் இருக்கிறன. லூர்து ரெலிபோனில் கதைத்துவிட்டு வைக்கிறார்.*

**இமா :** *வின்சன்...... வின்சன்.......*

**வின் :** *(உள்ளிருந்து) வாறன்.... (வின்சன் வருகிறான், பின்னே ஜஸ்மினும் வருகிறாள்)*

**இமா :** *(ஒரு கடிதத்தை நீட்டி) இந்தா....*

**வின் :** *என்ன கடிதம்! எங்க இருந்து வந்திருக்குது?*

**இமா :** *என்னிட்டையிருந்து உனக்கு வருகுது!*

**வின் :** *ஆ....*

**இமா :** *இந்த வீட்டில இருந்து இன்னும் ஒரு மாதத்தில நீயும் உன்ரை குடும்பமும் வெளிக்கிடவேணும் எண்டதை சட்டப்படி..... உனக்கு அறிவிச்சிருக்கிறன்.....*

**வின் :** *என்ன.........*

**ஜஸ் :** *என்ன......... (இருவரும் ஒரே குரலில்)*

**இமா :** *ஓம்..... எச்சில் கோப்பை கழுவி, குப்பை சுமந்து, MÜLL KONTAINER (குப்பைத் தோம்பு) இழுத்து...*

www.padippakam.com



*(இருவரும் புறப்பட)*

**பு :** அப்பப்பா.. என்னை விட்டுட்டு போகப் போறீங்களா! நானும் உங்களோடை வாறன் அப்பப்பா... அப்பம்மா... நீங்கள் தானே.. என்னை வளத்தனீங்கள்... அம்மா... வேலைக்குப் போக... நீங்கள் தானே... எனக்கு விதம் விதமாக சமைச்சுச் சாப்பாடு தாறனீங்கள்.. நானும் உங்களோடை வாறன்...

**லூ :** இல்லையெடா! இனியெண்டாலும் அப்பம்மா... சம்பளமில்லாத வேலைக்காரியா... இருக்காமல்... FRAU இம்மானுவேலாக... (திருமதி இமானுவேலாக) சந்தோசமா இருக்கப்போறன்... நான் உன்னை மறக்க மாட்டனடா!

**இமா :** அப்பப்பாவும் உன்னை மறக்கமாட்டனெடா! அழாதை... அழாதையடா!

*(ஜஸ்மின் புளோறியாவை இழுத்துச் செல்லுதல். வாசல் மணி-யொலிக்க, லூர்து... கதைவைத் திறக்க பாஸ்கரனும் ஜோன்சனும் வருகிறார்கள்.)*

**ஜோ :** என்ன! ALTERHEIMக்குப் போறீங்களாம்!

**இமா :** ஓம்.... அதுகென்ன...

**ஜோ :** அது உங்கடை விருப்பம்... வீட்டுக்கு என்ன முடிவு செய்தனீங்கள்...

**லூ :** என்னடா! என்னடா அது முடிவு... எங்கடை வீட்டை... நாங்கள் வித்திருக்கிறம்...

*(புளோறியா அழுதுகொண்டு வருதல் பின்னே வந்த வின்சன் மகளைத் தடுத்து மனைவியை ஏசுதல்...)*

**லூர் :** பொறுப்பில்லாத பிள்ளையாலும்... பெத்தவையில பாசம் வைக்காமல்... பெண்சாதிக்கு தலையாட்டுற பிள்ளையாலும் கிடைச்ச ஏமாற்றத்துக்கு முடிவு கண்டிட்டம்... வீடு வித்தாச்சு...

www.padippakam.com



**இமா** : இந்தா பாருங்கோ! வீடு வித்த காசு BANK இல இருந்குது... எங்களின்ரை கடைசிக்காலத்துக்குப் பிறகு உங்ளுக்குச் சேரவேண்டிய பங்கு உங்களுக்குக் கிடைக்கும்...

**ஜோ** : என்ன மாதிரிப்பங்கு பிரிச்சிரிக்கிறீங்கள்...

**இமா** : நாலாப்பறிச்சு... ஒரு பங்கு... பற்றீசியாவுக்கு... ஒருபங்கு அம்மாவுக்கும் எனக்கும்... ஒருபங்கு அண்ணைக்கு ஒருபங்கு உனக்கு... ஆனால் உன்ரை பங்கை உனக்குக் கிடைக்கச் செய்யிறது உன்னைப் பொறுத்தது...

**ஜோ** : என்ன....?

**இமா** : ஓ... நாங்கள் உயிரோடை இருக்கேக்கை... நீ கலியாணம் செய்தால் நாங்களாக உன்ரை பங்கை உனக்குத்தருவன்... நாங்கள் செத்தால்பிறகு... நீகலியாணம் செய்தால்.. எங்கடை தமிழ்ச்சுவாமி மூலமா... உனக்கு அந்தக் காசு கிடைக்கும்... ஆனால்... நீ றோட்டிலை போற ஆரையும் கலியாணம் செய்துபோட்டு காசு எடுக்கேலாது... ஒரு தமிழ்ப் பொம்பிளையைக் கலியாணம் செய்தால் உனக்கு பங்கு கிடைக்கும்.... இல்லாட்டி... அது... எங்கடை நாட்டியுள்ள தாய்தகப்பனில்லாத பிள்ளையளுக்குப் போகும்.

**ஜோ** : கலியாணம்!:. அதுவும்... எனக்கும் தமிழ்ப் பொம்பிளைக்கும்... (சிரிக்க)

**லூ** : முதலில்... உன்ரை வருத்தத்தை மாத்தி மனிசனா வா.... அதுக்குப் பிறகு தானே கலியாணம் செய்யலாம்...

**இமா** : சரி பாஸ் வெளிக்கிடுவமே!

*(பாஸ்கரன் Bag க்குகள் தூக்கிக்கொண்டு நடக்க எத்தனிக்க )*

www.padippakam.com



பு : அப்பம்மா... அப்பப்பா... போகாதீங்கோ... என்னை விட்டுட்டுப் போகாதீங்கோ...

லூ : பிள்ளை... நாங்கள் போறது ALTERHEIஆ அங்க... நீ... இருக்கேலாதடா! அழாதை அழாதை

(வின்சனின் நெஞ்சில் அடித்து புளொறியா அழுதல்.)

புளோ : அம்மா... இப்ப சந்தோசம்தானே? அப்பா இப்ப உங்களுக்கு சந்தோசம்தானே? அப்பம்மாவும்... அப்பப்பாவும் ALTERHEIM, இல அனாதையா.. இருக்க... நானும் இனி இங்கு அனாதையாத்தானே இருக்கப்போறன்... வீடு! வீடு... முழுசா வேணும்.... ஆசை!.. ஆசை!.. பேராசை... பாத்தீங்களா!.. அப்பப்பாவும் அம்மம்மாவும் உழைச்சு ஆசைப்பட்டு வாங்கின வீட்டை நீங்கதான் இல்லாமல் செய்தனீங்கள்.... நான் பெரிசா வளந்து... உங்களை ஏமாத்தினால் உங்களால தாங்கேலுமா? உங்களாலை தாங்க ஏலுமா? ஏலாது..! ஏலாதென்ன... ஆனால்.. நான் உங்களை ஏமாத்தமாட்டன்.. ஏனெண்டால் நான் அப்பம்மாவும்.. அப்பப்பாவும் வளர்த்த பிள்ளை.. உங்களை மாதிரி வளராத பிள்ளை... நான் அப்பப்பாவின்ரை பிள்ளை. அப்பம்மாவின்ரை பிள்ளை... வின்சன் சிலையாக நிற்கிறான்...

(இம்மானுவேல் லூர்த்தம்மா வெளியேறுகின்றனர்.)

**(நிறைவு)**

○ ○ ○

www.padippakam.com



**வந்த வழியை நாங்களெல்லாம் சிந்திச்சுப் பார்க்க வேணும்**

www.padippakam.com

## வந்த வழியை நாங்களெல்லாம் சிந்திச்சுப் பார்க்கவேணும்

இளவேனில் 1995



| நாடக மாந்தரும் | உயிரூட்டியோரும் |
|---|---|
| ஜெகன் | குலதாசன் |
| ஆனந் | குலதாசன் |
| மோகனதாஸ் | இராஜன் |
| சிந்துகா | தங்கராஜா |
| மேரிஷாலினி | நவரட்ணராஜா |

படிப்பகம்



**களம்**
ஜேர்மனியில் ஒரு நகரின்
வீதியோரம் வெய்யில் காலத்தில்

**பாத்திரங்கள்**
ராசாத்தி, சுந்தரம், ஈசுவரன், துரை

**ராசாத்தி :** பள்ளிக்கூடம் செல்லும் சிறுமி.

**சுந்தரம் :** தன்னை ஜேர்மன்காரன் என எண்ணும் இலங்கைத் தமிழர்

**ஈசுவரன் :** தமிழ்ப் பற்றாளராக தன்னைக் காட்டிக் கொள்ளும் போலித் தமிழர்

**துரை :** தமிழ்ப்பற்று, நாட்டுப்பற்று, நிறைந்தவன் இளைஞன். புலம் பெயர்ந்தாலும் தாயகத்தை நேசிப் பவன் மாற்ற முயற்சிக்கும் சைவ சமயத்திலிருந்து மதம்மாறிய பெண்.

திரை விலகு முன்பே தபேலா ஒலிக்கத் தொடங்குகிறது... திரை விலகிச் கொண்டு நடக்க ராசாத்தி பள்ளிக்குப் போகும் வையுடன் தாளத்திற்கேற்ப இடமிருந்து வலமாக நடந்த செல்கிறாள். மேடையின் முக்கால் வாசிப் பகுதிக்கு இராசாத்தி வரும்போது இடப்பக்கத்திலிருந்து ஐரோப்பிய ஆடை அலங்காரத்தில் இள நரைத்தலையுடன் கண்ணாழயணிந்தபழ சுந்தரம் வருகிறார்... ராசாத்தி போலவே இனிவரும் நாடக மாந்தரும் தாளத்திற்கேற்ப நடையும் ஆட்டமும் போட்டபழ வந்தால் தானே இது தாளலயம் சரி தானே இனி இந்த நாடக மாந்தர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேளுங்கோவவின்.

www.padippakam.com



சுந்த : எடிபிள்ளை ராசாத்தி அவசரமாய் எங்க போறாய்

இரா : ஆ... (திரும்பிப் பார்த்தபடி)...

சுந்த : எடிபிள்ளை ராசாத்தி அவசரமாய் துணையில்லாமல் கடையாளுக்கு போக இப்ப துணிஞ்சிட்டியள்

இரா : என்னமாமா... அப்பிடி இல்லை மாமா இண்டைக்கு சனிக்கிழமை எண்டதை மறந்திட்டுங்கள் லீவு வரும் நாட்களிலே நாங்கள் செய்யும் காரியங்கள்... சத்தியமாய் உங்களுக்கு கொஞ்சம் கூடத் தெரியாது..

சுந் : என்ன கனக்கக் காரியங்கள் செய்து கிழக்கிறியள்... மெய்யே. என்ன கனக்க காரியங்கள் செய்து முடிக்கிறி யள்

இரா : ஆ...

சுந் : அஞ்சாறு வீடியோ படடிமடுத்துப் பாப்பீங்கள்... விசிற் லஞ்எண்டு சொல்லிச் வீடு வீடாச் சுத்துவியள்

இரா : மாமா... மாமா (சிரித்து) வெளியுலகம் தெரியாமல் வாழுறீங்கள் மாமா நீங்கள் லீவு வரும் நாட்களிலே தமிழ்படிக்கப் போகின்றோம்...

தமிழோடு மற்றும் பல கலைகளையும் கற்கின்றோம்.

சுந் : ஜேர்மனியில் வாழுறியள்.... டொச் படிச்சால் போதாதே... (2)

(நளினச் சிரிப்புடன்) தமிழ்ப் படிச்சு இனி நீங்கள் என்ன செய்யப் போறியளோ

இரா : என்ன

சுந் : தமிழ்ப்படிச்சு இங்க நீங்கள் . என்ன செய்யப் போறியளோ? எனக் கெண்டா விளக்கேல்லை...

www.padippakam.com



இரா : மாமா!... தமிழறிவு துளியளவு இல்லாமல் நாங்களெல்லாம் தமிழரெண்டு சொல்லலாமே!

சுந் : ஆ... (ஆச்சரியமாக இராசாத்தியைப் பார்க்க)

இரா : யோசிச்சுப் பார்க்க வேணும் - நல்லா யோசிச்சுப் பார்க்க வேணும்.

சுந் : வாயைக் குடுத்து வாங்கிக் கட்ட வெணுமெண்டு தலையெபுத்து - எனக்கு (தனக்குத்தானே) இதுக்கு மேல ஏதும் சொன்னால் இன்னும் கிழிய வேண்டிவரும் (தன்னைச் சுதாகரித்துக் கொண்டு) அம்மா நீங்கள் பள்ளிக்கூடம் போட்டு வாங்கோ பத்திரமாய்! சுகம் கேட்டனனெண்டு அப்பாவிட்டைச் சொல்லுங்கோ!

இரா : ஓம் மாமா... ஓம் மாமா... பள்ளிக்கும் நேரமாச்சு... போட்டு வாறன் என்ன மாமா இராசாத்தி மேடையின் வலதுபக்கத்தால் வெளியே சென்று கொண்டிருக்கும் போது துரை வருகிறன்.

துரை : அண்ணை... அண்ணை... (சுந்தரம் திரும்பிப்பார்க்க) சின்னப்பிள்ளையெண்டு நீங்கள் வம்புக்கு வாயை விட்டு தும்பு பறக்க வாங்கீற்றீங்கள்.

சுந் : ஆ... என்ன...

துரை : அங்க நிண்டு கவனிச்சனான். உதை அங்க நிண்டு கவனிச்சனான். சின்னப்பிள்ளை சொன்னதிலை என்ன பிழை இருக்கு தண்ணை... மெத்தச் சரியெண்டு சொல்லி ஒத்துப் போயிருக்கலாமோ... அண்ணை எந்த நாட்டில் வாழ்ந்தாலும்: சொந்த மொழி வேணுமண்ணை

சுந் : புதுக்க வந்த நீங்களெல்லாம் இப்பிடித்தான் கதைப்பீங்கள்... இந்த நாட்டு சிற்றுவேசன் என்னெண்டு தெரியாமல் புதுக்க வந்த நீங்களெல்லாம் இப்பிழத்தான்



படிப்பகம்

www.padippakam.com



கதைப்பீங்கள்

**துரை** : அண்ணை... நானிங்க வந்து இப்ப அஞ்சாறு வருசமாச்சு

**சுந்** : (ஏளனமாக) அஞ்சாறு வருசமெண்டால் புதுக்க வந்த ஆக்கள் தானே. நானிஞ்சு வந்து இங்க பலவருவு மாச்சுத்தம்பி...

**துரை** : சிற்றிசன் எடுத்து இப்ப மூண்டு வருஷம் முடிஞ்சு போச்சு. அப்ப நீங்கள் தமிழரில்லை எண்டு சொல்லப் போறியளோ... ஆ...(2) அண்ணை... சிற்றிசனும் பாஸ்ப்போட்டும் தோல் நிறத்தை மாத்தாதண்ணை. சொந்த நாட்டை சொந்த மொழியை சொல்லியிங்கை வந்து போட்டு சொந்த நாட்டை மறந்து நீங்கள் வசனங்கள் பேசுறீங்கள்

**துரை** : தம்பி!... உமக்கு வேற வேலையில்லை நானுமும்பைப் போல இல்லை. வீண்பொழுது போக்காமல் வந்த அலுவல் பாக்கவேணும் காசு நாலு சேர்க்க வேணும் காரோடித்திரிய வேணும்... காசு நாலு சேர்க்கவேணும். நல்ல காரோழத் திரியவேணும்... காலுக்கு மேல் கால்போட்டு ஹைகிளாசாய் வாழவேணும்

**துரை** : ஹைகிளாசாய் நாங்கனிங்கை வாழ்வதற்கு அத்திவாரம் என்னெண்டு நீங்கள் கொஞ்சம் யோசிச்சுப் பாத்தீங்களே... விடுதலைக்கு போராடும் வீரர் கதையைச் சொல்லி இங்க வாழும் நாங்களெல்லாம் நாட்டுக்காக ஏதேனும் மனம் வச்சுக் செய்யவேணும்.

**சுந்** : (அதிர்ச்சியடைந்தவர் போல) என்ன...

**துரை** : நாளையிந்த நாட்டைவிட்டு நாசிகள் கலைக்கும் வேளை போயொதுங்க எங்களுக்கு சொந்த நாடு வேணுமண்ணை (2)

www.padippakam.com



சுந் : தம்பி... மண்ணைப் பற்றிப் பேசிப்பேசி மொழியைப் பற்றிப் பேசிப்பேசி மண்ணைப் பற்றி - மொழியைப்பற்றி... நினைவு படுத்திப் பேசிப் பேசி மனசைக் குழப்புறீர் மூளையைக் கசக்குறீர் இதை மறக்க உடனடியாய் Kino வுக்குப் போகவேணும் - டொச்சு (Kino - திரைப்பட அரங்கு. போட்டு வாறன் போட்டுவாறன் டொச்சுக் Kino வுக்குப் போட்டுவாறன்

(துரை வலப்பக்கமாக உள்ளே செல்ல இடப்பக்கத்திலிருந்து வேட்டி நஷனெல்சால்வை அணிந்து... ஈசுவரன் வருகிறார்.)

துரை : வணக்கமய்யா... வணக்கமய்யா...

ஈசு : வணக்கம் தம்பி... வணக்கம் தம்பி...

துரை : எங்கயய்யா கன காலம் இந்தப் பக்கம் காணேல்லை.

நாடு மாறி எங்கேனும் போட்டியளோ எண்டிருந்தன்.

ஈசு : இல்லைத்தம்பி இல்லைத்தம்பி இஞ்சைதான் இருக்கிறன். இண்டைக்கு வெளியூரில் விழா வொண்டு இருக்குத்தம்பி அதுக்குப் போகத்தானிப்ப வெளிக்கிட்டு வாறன் தம்பி. தம்பி! தமிழைப் படிக்க வேணும் தமிழூராக வாழ வேணும்! எந்த நாடு போனாலும் அந்த அந்த நாட்டியெல்லாம் தமிழ்ரெண்ட பெருமையோடை தலைநிமிர்ந்து வாழவேணும். ஆழிசூழ்ந்த உலகமெல்லாம் சொந்தமென்று சுற்றி வந்து அகிலத்து மனங்களிலே ஆட்சி செய்ய வேணும் தம்பி...

துரை : ஐயா, நாள் முழுக்க தமிழைப்பற்றி நல்லாய் கதைக்கிறியள்... நாடு முழுக்க சுற்றி வந்து பல சேவை செய்யுறியள்...

ஈசு : ஓமோம் மெய்தான் தம்பி.

www.padippakam.com



என்னைப் போல அனுபவங்கள் நிறைஞ்ச மனிசரிஞ்ச குறைஞ்ச போன தாலையெங்கள் தமிழ் அழிஞ்சு போகாமல் காக்கின்ற நோக்கம்தான் வாழும் வரை எனக்கிருக்கும்...

**துரை :** மெத்த நல்ல சந்தோசம்... ஐயா மெத்த நல்ல சந்தோசம் தமிழ் வளர்க்கப் போறனெண்டு வரிஞ்சு கட்டி நிக்கிறீங்கள் ஜேர்மனியில் தமிழ்வளர் வகை செய்யச் சொல்லுறீங்கள்... (சற்று தயக்கமாக) ஆனால் ஐயா...

**ஈசு :** (முறைப்பாக) என்ன ஆனால்... ஆ... என்ன ஆனால்

**துரை :** ஊருக்கு உபதேசம் உச்சிகுளிரச் செய்து கொண்டு உங்கள் வீட்டுப் பிள்ளையளை டொச்சிலை வளக்கிறீங்கள்... - ஐயா உங்கள்பிள்ளை தமிழ்ப் படிச்சால் என்னையா குறைஞ்சு போகும்

**ஈசு :** (சங்கடத்துடன்) குறையொண்டு ஏண்டுமில்லை - தம்பி குறையொண்டு ஒண்டுமில்லை. அதுகள் படிக்குதில்லை.

**துரை :** அந்தக்காலம் எங்கள் நாட்டில் எம்பிமார் செய்த வேலை இந்தக்காலம் உங்களிற் சிலர் ஜேர்மனியில் செய்யுறியள்... தமிழைப் படிக்கச் சொல்லி மற்றவைக்குச் செல்லுறியள் உங்கள் பிள்ளை தமிழ்படிச்சால் தடுத்து நிறுத்தறியள்... நானெங்க தடுத்தன் தம்பி அதுகளுக்கு விருப்பமில்லை. Guten moregen Guten abend Danke - Bitte எண்டு சொல்லி... எனக்கும் தமிழ் வராமல் அதுகளெல்லே கெடுக்குதுகள்.. வீட்டுக்குள்ளை டொச்சுக் கதைச்சு என்னையும் பழுதாக்குதுகள்....

**துரை :** மெய்தானே... உதுமெய்தானே ஐயா உங்கள் பலவீனங்களை குழிதோண்டிப் புதைக்கிறீங்கள்

www.padippakam.com



மற்றவைக்குப் பழியாலே கோபுரங்கள் கட்டுறீங்கள்...(2)

ஈசு : தம்பி... நல்ல விஷயம் சொன்னால் கேட்க ஒரு சனமுமில்லை. பொல்லாப்பு சொல்லிப்போட்டு விட்டிட்டு ஓடுதுகள்... அன்பென்றால் என்ன வென்று விளங்காத சனங்களுக்கு என்னத்தைத் தான் சொன்னாலும் சத்தியமாய் விளங்காது.

துரை : ஐயா அன்பென்றால் ஆழமாக சிந்திச்சுக் கதைக்க வேணும். நடபென்றால் மனம் திறந்து நேரிலே கதைக்க வேணும் கொண்டோடிமார் அரைகுறையாக் கொண்டு வாற கதையைக் கேட்டு! வீண் கோபம் கொண்டு நீங்கள் பிழைகள் விடக் கூடாதையா! பண்பாளர் எண்ட பெயர் நிலைச்சிருக்க வேணு மெண்டால்.... எண்ணத்தில் எழுத்து பேச்சில் உண்மை நேர்மை வேணுமய்யா!

ஈசு : தம்பி! ஊருக்குப் பொதுவான மனுஷனாய் இருப்பவன் நான். பேருக்கும் புகழுக்கும் எனக்காசை இல்லைத் தம்பி

துரை : ஐயா! ஊருக்குப் பொதுவான மனுஷனெண்டு சொல்லுறியள் உள்ளூரான் பேரெடுத்தால் மூடிமறைக்க நினைக்கிறயள் முகத்துக்கு முன் சிரிச்சுப் பேசி முதுகில் குத்தும் ஆட்களைத்தான் அடையாளம் காணவேணும் அவதானம் கொள்ள வேணும் ஐயா... தந்தோன இறைவன் இருகாதும் ஒரு மனமும் சொந்தமாகச் சிந்தித்து சுயமாய் முடிவெடுக்க (மெதுவாகத் தனக்குள்) வழிமாறி வந்து இப்ப வசமாக மாட்டிக் கொண்டன்...!

ஈசு : (மெதுவாகத் தனக்குள்)வழிமாறி, வந்து இப்ப வசமாக மாட்டிக் கொண்டன்!

துரை : ஆ... என்னய்யா...

www.padippakam.com



ஈஸ் : காரை இன்னும் காணேல்லை. கன நேரம் யோச்சு தம்பி வந்த கார் வழிமாறிப் போச்சுதோ தெரியேல்லை.

துரை : ஐயா வந்த வழியை நாங்கள் கொஞ்சம் திரும்பிப்பார்க்க வேணுமய்யா

ஈஸ் : ஓம் தம்பி... ஓம் தம்பி... அவசரமாய் போக வேணும். சீட்டுக்கு நேரம் போச்சு

துரை : என்னய்யா! என்ன கஷ்டம் உங்களுக்கு சீட்டெடுத்து சில வழிக்க

ஈசு : சீட்டெடுத்துச் சிலவழிக்க எனக்கென்ன விசரேதம்பி கழிவை நல்லா ஏத்திவிட்டால் கட்டுக்காசு குறையுமெல்லே

துரை : ஓமோம்...

ஈஸ் : வாறன்... தம்பி... போய்ரு வாறன்தம்பி. (ஈஸ்வரன் மேடையின் வலப்பக்கத்தால் வெளியேற நெற்றியில் பொட்டின்றி - தலையில் பூவின்றி... கையில் சில புத்தகங்களும் தோளில் ஓர் கனத்த தோற்பையுடனும் பாவாடை - சட்டையணிந்த ஒரு பெண் இடப்பக்கத்திலிருந்து மேடைக்கு வருகிறார்)

எமிலி : (வந்தபடி தனக்குத்தானே) முந்தியப் போல சனங்களொடும் வீட்டுக்குள்ளை விடுகுதில்லை! சந்தி வழிய வந்து நிண்டு கதைச்சு ஆட்கள் சேர்பதிலே! சந்திக்கும் சங்கடங்கள் மற்ற வைக்கு விளங்குவதில்லை!. வாருங்கோ வாருங்கோ எல்லோரும் வாருங்கோ. சேருங்கோ சேருங்கோ. எங்களோடை சேருங்கோ. உங்கள் மனம் அமைதி பெற நாங்கள் உதவி செய்து தாறம்!

www.padippakam.com



துரை : ஐயையோ... ஐயையோ. ஆர் கடவுள் எவர்கடவுள் என்று அக்கா கேட்டு இப்ப என்னைக் குழப்ப முன்னம் நாள் இங்கிருந்து மாற வேணும் - உடனே இங்கிருந்து மாற வேணும் முகத்தில் காயங்களுடன் சுந்தரம் அலங்காரம் குலைந்து போன நிலையில் வருகிறார்.

எமிலி : வணக்கமண்ணை வணக்கமண்ணை வாருங்கோ வாருங்கோ Gutentag Gutentag (தான் தவறால சொல்லிவிட்டதுதாக எண்ணிக் கொண்டு) இல்லையில்லை... இல்லையில்லை வணக்கம் பிள்ளை... வணக்கம் பிள்ளை கண்டு கன காலமாச்சு... எப்பிடிச் சுகங்களெல்லாம்

எமி : சுகத்துக்கு என்ன குறை நல்லாயிருக்கிறன் நான் சுகமான வாழ்விப்போ எனக்குக் கிடைச்சிருக்கு

சுந் : சுகமான வாழ்வெண்டால் சொல்லு பிள்ளை கேட்பம் கேட்பம்

எமி : நாளுக்கு நாள் உலகத்திலே அதிகரிக்கும் துன்பமெல்லாம் எங்களோடு சேர்ந்து விட்டால் கொஞ்ச நாளில் பறந்து போகும் எங்களை போல் விசுவாசம் உள்ளவராய் நீங்கள் வந்தால் உங்கள் மனம் அமைதி பெற நாங்கள் உதவி செய்து தாறும்.

சுந் : ஆ... ஆருக்கு விசுவாசம் என்னத்துக்கு விசுவாசம்

எமி : மனம் மட்டும் மாறவேணும் மதம் மாறத் தேவையில்லை

சுந் : மினக்கட்டு உன்னிட்டை கதை கேட்டு நிண்ட எனக்கு பழஞ் செருப்பால அடிக்க வேணும் கற்பூரச் சட்டி தூக்கி கந்த சஷ்டி விரதம் பிடிச்சு இங்கை வந்து போட்டு நீங்கள் சனத்தைப் பேய்க் காட்டுறீங்கள் டொச்சுக்காரர் போல வாழ நான் ஆசைப்பட்டாலும் உங்களைப் போல்

www.padippakam.com



ஆட்களிட்டை தலையைத் தர முட்டாளில்லை. வேற வேலை ஏதும் செய்து உழைக்க வழி பாரன் பிள்ளை.

துரை : (வந்தபடி) தமிழராக இங்க வந்தும் தமிழறாக திரும்பிப் போவம் மதத்தை எங்கள் நடுவில் வச்சு மனங்களைக் குழப்பாதீங்கோ

எமிலி : இந்த வாழ்வு முடிஞ்ச பிறகு என்னத்தைச் செய்யப் போறம் எண்டு கொஞ்சம் யோசிச்சால் இப்பிடிக் கதைப்பியளே!

ஈஸ் : (வந்தபடி) வீடு வழிய வந்த தொல்லை தெரு வழிய நிக்குதுபார் பள்ளிக்கூட வாசலிலே நிண்டு சின்னப் பிள்ளைகளின் தலையைக் குழப்பி நீங்கள் பிழைப்பு நடத்தப் போறியளோ?

எமி : நாங்கள் போகும் பாதையிலே எல்லோரும் இணைந்து விட்டால் இந்த உலகம் எப்போதும் நல்லதாக இருந்துவிடும்

சுந் : நீங்கள் போகும் பாதை மெத்தத் திறமான பாதை தானே

ஈஸ் : பொட்டு வைக்கக் கூடாது பூ வைக்கச் கூடாததெண்டு நிறைஞ்ச சுமங்கலிக்கு கொடுமை செய்து பாக்கிறியள்

துரை : தாய் தகப்பன் சண்டையால பிள்ளையளைப் பழுதாக்கி குடும்பங்களைக் குலைச்சு குலைச்சு Camp வழிய அனுப்புறீங்கள்!

ஈஸ் : சைவக்காரர் வேதக்காரர் ஒற்றுமையாய் வாழுகிறோம் ரெண்டையும் குழப்பி நீங்கள் குளிர் காயப்பாக்கிறீங்கள்.

துரை : வந்த வழியை நாங்களெல்லாம் சிந்திச்சுப் பார்க்க வேணும் கொஞ்சம் வசதி வந்த உடன கூத்தடிக்க கூடாது.

www.padippakam.com



சுந் : வந்த வழியை நானும் தான் சிந்திக்கத் தொடங்கிவிட்டன் டொச்சுக்காரன்! டொல்மேச்சர் - எண்ட தலைக்கனத்தில் டொச்சுப் படம் பார்க்கப் போனன் மொட்டையங்கள் தந்த அடியில் மூளை கலங்கிப் போச்சு

துரை : வந்த வழியை நாங்களெல்லாம் சிந்திச்சு பார்த்துப் பார்த்து ஒருவர் பின் ஒருவராக மேடையைச் சுற்றியபடி வருகின்றனர். ஒற்றுமையாய் இருக்க வழி விரைந்து தேடும் எண்ணம் வேண்டும்

துரை : வந்த வழியை நாங்களிளெல்லாம் சிந்திச்சுப் பார்க்க வேணும்

ஈஸ் : வந்த வழியை நாங்களிளெல்லாம் சிந்திச்சுப் பார்க்க வேணும்

சுந்த : வந்த வழியை நாங்களிளெல்லாம் சிந்திச்சுப் பார்க்க வேணும்

இராச : வந்த வழியை நாங்களிளெல்லாம் சிந்திச்சுப் பார்க்க வேணும்

எமிலி : வந்த வழியை நாங்களிளெல்லாம் சிந்திச்சுப் பார்க்க வேணும்

எல் : வந்த வழியை நாங்களிளெல்லாம் சிந்திச்சுப் பார்க்க வேணும்

**(நிறைவு)**

○ ○○

www.padippakam.com

# அனுபந்தங்கள்

**அனுபந்தம்....1** **திரு. இராஜன் முருகவேல்**

இற்றைக்குப் பத்தாண்டுகளுக்கு மேல் காலம் உருண்டோடியிருக்குமா? அன்றுதான் எனக்கொரு புதிய மேடை அனுபவம் நாடகம் மூலமாகக் கிடைத்தது.

தாயகத்திலே, யாழ்ப்பாணத் தமிழிலே மேடைகளில் பலரையும் தன் வயப்படுத்திய மேடை நாடகங்கள் சிலவற்றைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவற்றின் வெற்றிக்கு நகைச்சுவையே முக்கியமான காரணமாக இருந்தது. ஆனால், இற்றைக்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர் ஜேர்மனியிலே இராட்டிங்கன் என்னும் இடத்தில் ஐரோப்பா ரீதியிலான நாடகப்போட்டி மேடையிலே ஏறிய "உறவுகள்" என்னும் நாடகம் புலத்தையும் தாயகக் களத்தையும் வெகுயதார்த்தமாக, இயல்பான அதேநேரம் தனித்தன்மையான பாத்திரங்களின் மூலம் பழக்கப்பட்ட தமிழிலே என்னைத் தன்வயப்படுத்தி, ஆழ்ந்து நோக்க வைத்தது.

நட்பைப் பற்றி எவ்வளவோ ஆக்கங்கள் வந்துள்ளன. ஆனால் உறவுகள் காட்டிய நட்பின் ஆழமானது மண்ணின் புழுதிவாசத்துடன் இரசிகர்களின் கண்களைக் கரைத்து, தம்மையே யார் என்று மனதுக்குள்ளாவது கேட்டுக்கொள்ள வைத்தது. அதன் பிறகு இவரது நாடகங்களைத் தொடர்ந்து காணும் வாய்ப்புக் கிடைத்தது.

படிப்பகம்

www.padippakam.com



இராஜனின் பாத்திர அமைப்புகள், சமூகத்திலுள்ள மனிதர் களின் ஒவ்வொருவருக்குமுரிய அடையாளங்களையும், இயல்பு களையும், அவற்றின் வரையறையை மீறாமல் வெளிப்படுத் தியமைதான் அவரது நாடகங்களின் பிரதான வெற்றிக்குக் காரணம் என நினைக்கின்றேன்.

ஒரு பாத்திரம் என்ன பேசவேண்டும், எப்படி நடமாட வேண்டும், எப்படி உடை அணியவேண்டும், எந்த சூழலில் வாழ வேண்டும் என்பன போன்றவற்றின் யதார்த்தரீதியான கலவையில் தான் திரு நாச்சிமார் கோயிலடி இராஜன் அவர்கள் ஒரு நாடகப் பிரதி ஆக்கதாரராகவும், இயக்குநராகவும் ஒரே பாதையில் இணைந்து சென்று வெற்றிபெற்றிருக்கிறார் என்பதுதான் உண்மை.

இந்நூலில் உள்ள நாடகப் பாத்திரங்கள் யாவுமே ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. உதாரணமாக, எதைக் குறிப்பிடுவது? குடிகாரருள்ளும் தனக்கென ஒரு வித்தியாசமான தனித்தன்மையைக் காட்டி நிற்கும் லிங்கத்தையா (உறவுகள்)? நற்குணத்தையா (சுருதிபேதம்)? காந்தனையா (நீர்க்கோலம்)? அல்லது கற்பனைக் கோட்டைகட்டும் சின்னத்துரையையா (நீர்க்கோலம்)? இத்தனைக்கும் மேலாக சுமைகள் என்ற நாடகத்தில் வரும் அத்தனை பாத்திரங்களுமே குணவியல்பில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவை. ஆனால் சமூகம் என்று பார்க்கும்போது எல்லாப் பாத்திரங்களுமே புலம்பெயர்ந்த தமிழர்கள்தான். ஆனால் தனித்தன்மையானவை. தன்மையில் மிகப் பெரிய வித்தியாசங் களைக் கொண்டவை. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் சுமைகள் நாடகத்தில் திரு இராஜன் அவர்கள் ஒரு இயக்குநராகவே தெரிகிறார்.

இதை ஏன் கூறவருகிறேன் என்றால், நாடகப் பிரதிகளைப் பொறுத்தவரையில் அதன் கதாசிரியரையோ அல்லது வசன கர்த்தாவையோ மட்டுமே காணமுடியும். ஆனால் இந்த நாடகங்களில் ஒரு சிறந்த கதாசிரியரையும், சிறந்த வசன கர்த்தாவையும், நிகரில்லாத புலம்பெயர்ந்த தமிழ் இயக்குநரையும் காணமுடியும்.

www.padippakam.com



எல்லோராலும் எல்லாவற்றையும் செய்ய முடியாது. அதேபோல, நாச்சிமார் கோயிலடி இராஜன் அவர்களைப் போல ஒரு யதார்த்தமான சமூக நாடகத்தை யாழ்ப்பாணத் தமிழில் என் தாயகத்தின் புழுதிவாசத்துடன் தர முடியாது. இதற்கு ஐரோப்பா ரீதியாக ஜேர்மனியிலே இதுவரை நடந்த நான்கு போட்டிகளிலுமே இவரது நாடகங்களே முதற்பரிசை ஈட்டியதே சான்று. அதிலே சுமைகள் என்ற நாடகத்தில் என்னையும் மேடையில் உலாவவிட்டு, வீடு என்ற நாடகத்தில் எனக்குப் பல அனுபவங்களைத் தந்ததையும் இங்கே பகிர்ந்துகொள்வதில் பெருமை அடைகிறேன்.

அவரது இந்த நாடகங்களின் தொகுப்பு நூலுக்கு பலரும் ஆதரவு தருவதன் மூலம், மேன்மேலும் அவரது பணி தொடர ஒத்துழைக்கவேண்டும் என்ற எனது ஆசையைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன்.

அன்புடன்,

**திரு இராஜன் முருகவேல்,**

பிறேமன், ஜேர்மனி.

**அனுபந்தம்..2** **திரு செ. யோகநாதன்**

தமிழ்மணி நாச்சிமார்கோயிலடி இராஜன் அவர்கள் இரசிகர்களின் நன்மதிப்பைப் பெற்ற நல்ல படைப்பாளி. பிறேமன் தமிழ்க்கலை மன்றத்துக்கு கலைமகளின் நகையணிந்து கௌரவப் படுத்தியவர். புதிய தலைமுறையினரையும் புகழ்மிக்க கலைஞர்களாக்கி ஒரு கலைப் பூங்காவாய் பிறேமன் தமிழ்க்கலை மன்றத்தை உருவாக்கியவர்.

இவரின் நாடகங்கள் ஒவ்வொன்றும் உறவுகளின் பாசத்தையும், அவர்கள் படும் சோகத்தையும் தொட்டுச் செல்லும். நம் தேசத்தின் வீரத்தையும், அதன் வாசத்தையும், அதில் இன்றும் தொக்கிநிற்கும் தோஷத்தையும் சுட்டிக்காட்டி இரசிகனின் மனதைச் சொக்கவைக்கும்.

www.padippakam.com



திரைமூடிய மனங்களுக்கு மெய்யுணர்வூட்டி, திசைமாறிய மனிதர்களுக்கு நல்வழிகாட்டி. அந்நியத்தைக் குறிப்பெழுதி பிறந்த மண்ணின் தேவைகளைக் குறிப்பறிந்து வலியுறுத்தும் இவரது நாடகங்களில் வரும் ஒவ்வொரு பாத்திரங்களும் ஒவ்வொருவிதமான வாழ்க்கைத் தோரணங்கள். ஒரு தேர்ந்த சிற்பியின் கைவண்ணம் தேரேறி வரும்போது எப்படி இருக்குமோ, அப்படி இருக்கும் இவரின் கைபட்ட பாத்திரங்கள் ஒவ்வொன்றும் மேடையேறி வரும்போது.

அதனாற்தான் பாராட்டுகளோடு நின்றுவிடாமல் பட்டங்கள் சூட்டியும் மகிழ்ந்தார்கள் பண்பட்ட மனம் கொண்டவர்கள். தாய்மண் பெருமைகொள்ளவும், தமிழ் மனங்கள் மேன்மை கொள்ளவும் தன் கலைப்படைப்புகளுக்கு உயிர்கொடுத்த தமிழ்மணி நாச்சிமார் கோயிலடி இராஜன் அவர்களின் நாடகங்கள் நூலுருப் பெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி. இவரது பாத்திரங்களைப் பார்த்து இரசித்ததோடு மட்டும் நின்றுவிடாமல் பங்குகொண்டவன் என்றவகையில் இரட்டிப்பு மகிழ்ச்சி எனக்கு.

வாழ்த்துகளுடன்,

**செ. யோகநாதன்,**

பிறேமன், ஜேர்மனி

**அனுபந்தம்.3** **திரு.ம. கொலின் நித்தியேந்திரன்,**

அன்பின் ராசு அண்ணன்,

தங்களின் ஒன்பது நாடகங்கள் அடங்கிய எதிர்பார்ப்புகள் நூல் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். தங்களின் நாடகங்கள் பிறேமன் நகரில் உலாவர ஆரம்பித்த 90களில் தங்களுடன் இழுபட்ட பலரில் நானும் ஒருவன். தங்களின் சிரமங்கள் அனைத்தையும் நேரில் பார்த்தவன். தங்களின் நாடகங்கள் மேடையேறிய இடமெல்லாம் கரவோசை வானைக்கிழித்தது. நீங்கள் யாழ்மண்ணின் யதார்த்த வாழ்வை ஐரோப்பிய மேடைகளில் தவழ விட்டபோது உங்களுக்கு கிடைத்த பாராட்டுகளும் பரிசில்களும் உங்கள் வாழ்வின் மிகப்பெரிய சாதனை. மப்பும் மழையும் சேர்ந்த

www.padippakam.com



மாலைப்பொழுதில் 27ம் இலக்க நெடுஞ்சாலையில் வில்லுப் பாட்டிற்காக நேரப்பற்றாக்குறையுடன் எங்கள் வாகனம் விரைந்து கொண்டிருந்தபோழுது அதில் கிடைத்த அரைமணி நேரத்தில் அன்றைய வில்லுப்பாட்டிற்காக நீங்கள் விபரித்த கதை உங்களின் எதிர்பார்ப்புகள் நாடகம். இன்னமும் அதையிட்டு ஆச்சிரியப்படுகிறேன். கோடம்பாக்க தொப்புள்கலாச்சாரம் திரையில் மினுங்கும் காலகட்டத்தில் எதிர்பார்ப்புகள் நாடகம் படைத்த சாதனை உங்களின் திறமையை ஐரோப்பிய தமிழ்நாடக வட்டத்தில் முத்திரை பதித்துக்காட்டியது. உங்களின் எதிர்காலம் இன்னமும் பெரிய வெற்றிகளைக் காணவேண்டும் என்று வாழ்த்துவதில் பெருமிதமடைகிறேன்.

**ம. கொலின் நித்தியேந்திரன்,**
பிறேமன், ஜேர்மனி.

**அனுபந்தம்..4** **திருமதி பெனடிக்ரா ஞானசெல்வம்**

யேர்மனியில் பிறேமன், தனிமாநிலங்களில் ஒன்று மட்டுமல்ல, தமிழ்மக்கள் செறிந்து வாழும் மாநிலங்களுக்கு மிக நீண்ட தொலைவில் தனித்திருக்கும் மாநிலமுமாகும். மார்கழியில் ஒளிவிழாவும், தையில் பூவரசு விழாவும் இடையிற் கிருஸ்ண ஜெயந்தியும் தவிர வேறோர் கலைநிகழ்ச்சியைக் காண்பதென்றால் இருநூற்றைம்பது கி.மீற்றருக்கு அப்பால் செல்லவேண்டுமென்ற நிலையிருந்த காலத்தில் பிறேமன் தமிழ்க்கலை மன்றம் உருவாகியது. தாயகத்தில் அரங்கேறி அனுபவம் பெற்ற பலர் புலம் பெயர் நாடுகளில் ஆங்காங்கே சந்தர்ப்பம் சரியாக அமையாததால்... தங்கள் திறனை வெளிப்படுத்த முடியாமல் மௌனமாக இருக்கிறார்கள். ஆனால் பிறேமன் தமிழ்க்கலை மன்றம் அமைந்ததால் எமக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தன... அதனால் எங்களிற் பலரின் திறன் வெளிக்கொணரப்பட்டது. அரங்கேறாதோரையும் அரங்கேற்றி மன்றம் பல கலைஞர்களை உருவாக்கியது....

www.padippakam.com



சமையலும்... பிள்ளைப் பேறுமே... பெண்ணின் தலையாய கடமையென்பதை மறுக்கின்ற மனம் படைத்த என் துணைவர் தந்த உற்சாகமும், மன்றத்தினூடாக இராஜன் அவர்கள் தந்த ஊக்கமும் என்னை தொடர்ந்து நடிக்க வைத்தன. எம்மில் பலர் தம்பதிகளாகவே இந்நாடகங்களில் நடித்து புகழீட்டினோம். நாம் நடித்த நாடகங்களை எழுதி, இயக்கிய இராஜன் அவர்களின் நாடகங்கள் நூலாவது கண்டு மனம் பூரிக்கும் அனைவருடனும் சேர்ந்து நானும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

**பெனடிக்ரா ஞானசெல்வம்**
பிறேமன்.

**அனுபந்தம்..5 அன்ரன் பீலிக்ஸ் சித்திரா தம்பதிகள்**

நாம் கண்டு நயத்த மாகலைஞன்

பழகுவதற்கு இனிமையான, திறமைகள் பலப்பல இருந்தும் சிறிதும் தற்பெருமை கொள்ளாத தகையோன், மிகப் பெரும் சாதனையாளன். வில்லிசைச் செம்மல் இராஜனை என் நண்பனாகக் கொண்டது நான் செய்த பெரும்பேறே எனக் கருதுகிறேன். 1991, இராஜன் நகருக்கும் புதிசு. அதிகம் பழக வாய்ப்பும் இருக்கவில்லை. யேர்மனி பிறேமன் மாநகரில் வருடாவருடம் நான் பொறுப்பேற்றுப் பணியாற்றி வந்த கிறீஸ்து பிறப்பு விழாவில் “பாலகன் யேசுவும் அகதியானார்” என்ற நாடகத்தில் ஒரு பாத்திரமேற்று நடிக்க முன்வந்தார். முக்கால முணர்ந்த பழுத்த ஞானியாக வயதான தளர்ந்த தோற்றம். அநாயசமாக, அற்புதமாக நடித்தார். என் மனதில் ஆழமான இடத்தைப் பிடித்துக் கொண்டார். நாச்சிமார் கோயிலடி இராஜன் வில்லிசைக் குழுவினர் பற்றி சிறுவயதில் நான் அறிந்திருந்தாலும், புகழ்பூத்த அக்கலைஞன் இவர்தான் என்பதை அந்நடிப்பின் பின்னர் தான் அறிந்து கொண்டேன். கலை வாழ்வின் பரம்பரையில் வந்த எனக்கு இராஜனைச் சந்தித்தது பெருமகிழ்வைத் தந்தது. அக்கலை எங்களிருவருக்கும் நட்புப் பாலமிட்டது.

www.padippakam.com



ஒரு நடிகன் எழுத்தாளனாகவும் இருப்பது இரட்டிப்புத் திறமை. அது இராஜனிடம் அபரிதமாக இருந்தது. தமிழ்க் கலை மன்ற மூலம், வேறு பல இடங்களுக்கும் சமுதாயச் சிந்தனையைத் தூண்டும் பல நாடகங்களை மேடையேற்றினோம். நாடகப் போட்டிகளுக்குச் சென்ற இராஜனின் நாடகங்கள் சிறந்த நாடகம்,சிறந்த இயக்கம், சிறந்த நடிகன், சிறந்த நடிகை என்று அனைத்துப் பரிசுகளையுமே ஒரே நாடகம் தட்டிக்கொண்டு வந்துவிடும். அவ்வாறு அவரெழுதி இயக்கி நாடகப் போட்டிக்குச் சென்று முதலிடம் பெற்ற நாடகங்களிலொன்றான "எதிர்பார்ப்புகள்" நாடகத் தேர்வில் தலைமைத் தேர்வாளராகக் கடமையாற்றிய திரைப்பட டைரக்டர் திரு ஏ. ரகுநாதன் அவர்கள் அந்த நாடகத்தைத் திரைப்படமாக்கக் கேட்டார். அதன்படி திரைக்கு வந்ததே " நினைவு முகம்" திரைப்படமாகும். ஏழு நாட்களுக்குள் அத்திரைப்படம் எடுத்து முடித்தது இராஜனோடு இணைந்து செயற்பட்ட மறக்க முடியாத நாட்கள். என்னைப் புரிந்து கொண்ட சிறந்த நண்பன் இராஜன்.

இராஜனின் மிகச் சிறந்த கலைவடிவங்களில ஒன்று வில்லுப்பாட்டு. பாடும் திறன் என்னிடமிருந்ததால் தன்னோடு அருகிலிருந்து வில்லிசை பாடுமாறு கேட்டபோது முதலில் நான் தயங்கினேன். பின்பு அவரோடு சேர்ந்து பல வில்லிசை நிகழ்ச்சிகளைச் செய்த வேளை வில்லிசைக்கே உரிய பாடல் வகைகள் என்னை மிகவும் கவர்ந்தன. அவ்வாறு இராஜன் தந்த ஊக்கமும், அவரோடிணைந்து செய்த வில்லிசை அனுபவமும் இன்று என்னை வில்லிசைக் கலைஞனாக புகழீட்ட வைத்திருக்கிறது. வில்லிசை இராஜனுக்கு திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்கள் குருவாய் அமைந்து போல் எனது வில்லிசைக் குருவாக நாச்சிமார்கோயிலடி இராஜன் அவர்கள் அமைந்ததைப் பெருமையாகக் கருதுகிறேன். கடவுளின் திருவுளத்தில், காலத்தின் அவசியத்தில் கடலும் கண்டமும் இருவரையும் பிரித்தாலும் ஆழம் காணமுடியாத நட்பு மட்டும் தொடர்கிறது. அவரது கலைப்பணி

www.padippakam.com



ஓயாது என்பது அவரோடு பழகும் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இராஜன் என்ற சிறப்பான ஒரு கலைஞன் மூலம் உலகத் தமிழினத்துக்கு இந்நூலில் உள்ளது போன்ற இன்னும் பல நாடகங்கள் கிடைக்கும் என்பதும், அவற்றை நடித்து மேடையேற்றுவதன் மூலம் தமிழ் சமுதாயம் சிறந்த பல சிந்தனைகள் பெறமுடியுமென்பதும் எமது நம்பிக்கை. அவரது கலை வாழ்வு, எழுத்துப் பணி இன்னும் பல ஆண்டுகள் தொடர வேண்டுமென்று எமது குடும்பத்தின் சார்பில் மனம் நிறைய வாழ்த்தி நிற்கும்...

கலைதந்த நண்பன்,
**அன்ரன் பீலிக்ஸ் தம்பதிகள்**
கனடா.

**அனுபந்தம்..6** **திரு. பூ. நவரட்ணராஜா**

1960களில் எமது தாய்மண்ணின் பேச்சுவழக்கில் சில நாடகங்கள் ஆங்காங்கே மேடையேறி வந்தன. யாழ்ப்பாணத் தமிழில் நாடகமா? என அந்நேரத்தில் அதை அருவருப்போடு பார்த்த சிலர் உண்டு. தென்னகத்துத் திரைப்பட இயக்குனர்களான ஸ்ரீதர், பாலச்சந்தர் போன்றவர்களைப் பின்பற்றி, இவர்களுடைய நாடகம் என்பதை ஜீரணிக்க முடியவில்லை. இருப்பினும் சில நாடகங்கள் தாய்மண்ணை நேசித்தவர்களால் அவ்வப்போது அரங்கேறி வந்தது. விடுதலைப் போராட்டச் சூழல் அதை மேலும் ஆழப்படுத்தியது. புலம்பெயர் நாடுகளிலும் கலைத் தாகம் மிக்கவர்களால் எமது தாய்மண்ணின் பேச்சுவழக்கிலேயே நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வருவது பெருமைக்குரியது. அந்தவகையில் திரு இராஜன் அவர்களின் நாடகங்கள் அனைத்துமே தாய்மண்ணின் அவலங்களை மட்டுமின்றி, புலம்பெயர் மண்ணிலுள்ள அளவற்ற வாழ்க்கை வசதிகளால் உருவாகும் சமுதாய சீர்கேடுகளையும் அழகிய யாழ்ப்பாணத்தமிழில் எடுத்தியம்புகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



இந்த நாடகங்களில் பெரும்பாலானவற்றில் நடித்தவன் என்ற வகையில் இவை நூலாவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்நூலில் இடம்பெறும் எதிர்பார்ப்புகள் மூலம் புலம்பெயர் மண்ணில் நடிகனாக அறிமுகமானேன். பிறேமனில் அந்நாடகம் மேடையேற்றப்பட்ட போது நாடகக் கலைஞனாகவும் உயர்ந்தேன். காரணம், மிகச் சாதாரணமாக நடித்தால்கூட மக்களை இலகுவில் சென்றடையும் வகையில் உருவாக்கப்பட்ட பாத்திர அமைப்பு. (இந்திய அகதிமுகாம் அதிகாரி.) அந்நாடகம் எதிர்காலத்தில் நாடகமொன்றின் மூலாதாரமான (கனமான) பாத்திரப் படைப்புகளில் என்னால் நடிக்கமுடியுமென்ற நம்பிக்கையை நாடக ஆசிரியர் இயக்குனர் திரு இராஜன் அவர்களுக்கும் சக நடிகர்களுக்கும் ஏற்படுத்தியது.

நாற்பத்தைந்து நிமிட நேர நாடகத்தில் வெறும் பத்து நிமிடங்களே வந்து போகும் ஒரு பாத்திரப் படைப்பு வெற்றி பெறும் வகையில் அதை மெருகூட்டுவதென்பது திரு இராஜன் அவர்களுக்குக் கைவந்த கலை.

இந்நூலில் இடம் பெறும் உறவுகளில் லிங்கம், எதிர்பார்புகளில் நடராசா, நீர்க்கோலத்தில் காந்தன், குமார், அதற்கு மேலும் சில உதாரணங்கள் நாடகங்களை ஆழ்ந்து படித்தால் இவை புலப்படும். நான் சொன்னவை அனுபவத்தால் உணர்ந்தவை! உண்மையென்று நீங்களும் உணர்வீர்கள் என்ற நம்பிக்கையில், அவரது எழுத்துப்பணி மேலும் சிறக்க மனமுவந்து வாழ்த்துகிறேன்.

**பூ. நவரட்ணராஜா,**
பிறேமன், ஜேர்மனி.

**அனுபந்தம்....7** **திரு. பிரான்சிஸ் இராஜகுமாரன்**

பாரம்பரிய தமிழ்க் கலைகளையும் அதனோடு தொடர்புடைய கலைச்சாதனங்களையும் பாதுகாக்கும் முயற்சியில் முனைப்போடு செயல்பட்டுவரும் அனைவரும் இன்றைய காலத்தின் தேவையை

www.padippakam.com



உணர்ந்து செயற்படுபவர்கள் என்றே கருதப்பட வேண்டியவர் களாவர். இயல், இசை, நாடகம் என்பவற்றின் தமிழ்த் தொல்காப்பியச் சிறப்புக்கள் அந்நிய ஊடுருவல்களாலும், ஆதிக்கங்கள் அடக்குமுறைகள் என்பவற்றாலும் துகில் உரியப்பட்டு நிர்வாணமாகும் இக் காலத்தில் இத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் விழித்துக் கொண்டு செயற்படுவது வரவேற்கப்பட வேண்டியதே. ஈழத்தின் நூல்நிலையங்களில் இப்போதெல்லாம் தமிழ் நாடகப் பிரதிகள் அற்றுப் போய்க்கொண்டிருக்கின்றன அல்லது அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதனால் நாடகப் பிரதிகள் தேடித்தேடிக் காக்கப்பட வேண்டும். நாடக ஆசிரியர்கள் எல்லாம் தங்கள் பிரதிகளை நூல் வடிவமாக்கும் நிதி படைத்தவர்களுமல்லர். அதனால் நிதியுள்ளவர்கள் இத் திருப்பணிக்கு மனமுவந்து உதவ முன்வர வேண்டும். இன்றைய எமது போர்க்கால நிகழ்வுகள் எல்லாம் வரலாற்று வடிவங்களாக நாடகங்களாகப் பதியப்பட்டு நூல் வடிவமாகி எமக்குப் பின்னால் வரும் புதிய சந்ததியினருக்கு நினைவுச் சின்னங்களாக விட்டுவைக்க வேண்டும். திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலே எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து யூதர்கள் தம்மை விடுவிக்க செய்த போராட்டங்களையும் அதன்போது நடைபெற்ற நினைவழியாச் சம்பவங்களையும் குறிப்பெடுத்து வைத்ததுமன்றி பாரம்பரிய வடிவிலே அவற்றை தமது சந்ததியினருக்கு நினைவூட்டியும் வருகின்றார்கள். அதற்காகவே பாஸ்கா என்று ஒரு விழாவையும் கொண்டாடி வருகிறார்கள். அந்த வகையிலே தமிழர்களாகிய நாங்கள் எமது வருங்கால சந்ததியினருக்காக செய்ய வேண்டிய கடமையில் இருந்து தவறக் கூடாது.

நாச்சிமார் கோவிலடி இராஜன் என்கின்ற தம்பையா இராசுவை கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு முன்னர் பிறேமன் நகரில் நடைபெற்ற நத்தார் ஒளிவிழாவிலே மூன்று ஞானிகளில் ஒருவராக நடிக்கக் கண்டு அவரது நடிப்பினால் கவரப்பட்டு அவரைப் பாராட்டி அறிமுகமாகிக் கொண்டேன். அன்றிலிருந்து அவரோடு ஒரு

www.padippakam.com



நெருக்கமான உறவு ஏற்பட, அவரது கலைத் திறமையின் வெளிப்பாடுகளை பல மேடைகளில் கண்டு வியந்துள்ளேன். அவரது பல நாடகங்கள் போட்டிகளில் பங்கேற்று பல விருதுகளைப் பெற்றதும், பல நாடகங்களுக்கு என்னால் இயன்ற வரையில் மேடையின் பின்னால் இருந்து துணை புரிந்ததும், நடிகர்களுக்கு உதவியாக வார்த்தைகளை முன்னால் வாசிக்க வேண்டிய கடமையின்போது நடிகர்களின் நடிப்பிலே மயங்கி நான் கண்ணீரினால் நாடகப் பிரதிகளை நனைத்ததும், அதனால் நடிகர்கள் சிக்கலுக்குள் மாட்டி என்னைத் திட்டிக் கொண்ட நிகழ்வுகளும் நினைவழியாதவை. பல பெண் நடிகர்களையும், நடிகைகளையும், குழந்தை நட்சந்திரங்களையும் மேடைகளில் அறிமுகமாக்கியவர் இவர். நடிப்பதற்கு விருப்பமிருந்தால் மட்டும் போதும்... நடிக்கத் தெரியாதவர்களையும் நடிக்கவைத்துவிடுவார்... இந்நூலில் வரும் நாடகங்களில், உறவுகளில் - சிவபாக்கியம், எதிர்பார்ப்புகளில் செல்லம்மா - ஈஸ்வரி... நீர்க்கோலத்தில் கிளி, ஜமுனா, ரேவதி, உமா, சுமைகளில் கோமதி-கீதா-கண்மணி ஆகிய பாத்திரங்கள் பெண்களின் பல வகை உணர்வுகளை சித்திரித்த பாத்திரங்களாகி நிற்கின்றன. வில்லிசையின் பாரம்பரியத்தினை புலம்பெயர் மண்ணிலே காத்துவரும் ஒரேகலைஞர் என்று சொல்லும் அளவிற்கு புகழ்பெற்ற இவரோடு ஒருசில வில்லிசை நிகழ்ச்சிகளில் எனக்கும் பங்கு கொள்ளக் கிடைத்தமை நான் பெற்ற பேறாகும். மாவீரர்விழா மேடையொன்றில் இவரையும் இணைத்து நான் செய்த தாளலய நாடகம் பலரது பாராட்டையும் பெற்றது. எனது மகளது அரங்கேற்ற மலரிற்காக ஒரு கட்டுரை வரையும்படி கேட்டதற்காக இரண்டு நாட்கள் என்னோடு வந்து தங்கிநின்று பல ஆய்வுகளோடு அதனை சிறப்பாக்கி முடித்தமை - மற்றவர்களின் கலையார்வத்திற்கு அவர் கொடுக்கும் முக்கியத்துவத்திற்கு ஒரு உதாரணமாகும்.

இப்படியாகப் பல திறமைகளை உள்ளடக்கி அமைதியாக இருக்கும் இக்கலைஞர் தான் எழுதி மேடையேற்றிய பல

www.padippakam.com



நாடகங்களில் சிலவற்றைத் தெரிவுசெய்து அதனை நூல் வடிவாக்கும் முயற்சிக்கு நான் மேலே குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந் நூலிற்காகத் தெரிவான நாடகங்களில் இரண்டு திரைப்படமாகத் தயாரானது குறிப்பிடத்தக்கது. இந் நூல் அனைத்துத் தமிழ் இல்லங்களிலும் நூலகங்களிலும் இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். இவர் செயலைப் பின் தொடர்ந்து மேலும் பல நாடக நூல்கள் பலரால் வெளியிடப்படவேண்டும் என்று வினைந்து நிற்கின்றேன்.

**பிரான்சிஸ் இராஜகுமாரன்**
Mülheim

படிப்பகம்

www.padippakam.com

# பின்னுரை

## இது நீங்காத நினைவுகள்...

1959 இல் யாழ்ப்பாணத்தில்,

வண்ணை கலைவாணர் நாடகமன்றம், யாழ் சரவணபவா நாடக மன்றம், திருக்குறள் நாடகமன்றம் என நாடக மன்றங்கள் போட்டியிட்டு நாடகங்களை மேடையேற்றிக் கொண்டிருந்தன. வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தின் "வீரமைந்தன்" நாடகம் யாழ் மனோகரா தியேட்டரில் மேடையேற்றப்பட்ட போது, அந்த நாடகத்தைப் பார்த்து அதை என் நெஞ்சு அப்படியே உள்வாங்கிக் கொண்டது... மீண்டும் அந்நாடகம் யாழ் பெரியபுலம் பாட சாலையில் மேடையேற என் வயதொத்த உறவினர்களும் பார்த்தோம்... கிட்டிப் புள், கிளித்தட்டு விளையாடிய நாம்... இந்த நாடகத்தை நடிக்கத் திட்டமிட்டோம். நாடகத்தில் வரும் உப பாத்திரங்களை நடிகர்கள் இல்லாமையால் நீக்கிவிட்டு, ஐந்து பிர-தான பாத்திரங்களை மட்டுமே வைத்து நாடகத்தை ஒத்திகை பார்த்துக் கொண்டோம். பவுடர்,குங்குமம், கரித்துண்டு, பஞ்சு, கோதுமை மாவினலான பசை இவைதாம் எங்கள் ஒப்பனைப் பொருட்கள். நாடகத்திற்கான உடைகளான பழைய சேலைகள்.

www.padippakam.com



நடிகர்களின் தாய்மார்களிடம் பல ஏச்சுக்களிடையே பெறப்பட்டு, நடிகர்களின் வீடுகள் அமைந்த ஒழுங்கையிலே, நாடகம் அரங்கேறியது. நாடகம் பார்த்த பெற்றோர்களில் சிலரிடமிருந்து பாராட்டு, சிலரிடமிருந்து "படிக்கிற வயதில் கூத்தாடுறீங்களோ" என்ற ஏச்சும் சமஅளவில் கிடைத்தன... வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தின் ஒப்பனைக் கலைஞர் வண்ணை தியாகனும், எங்கள் நாடகத்தின் நடிகரின் தந்தையும் ஏற்கனவே மேடையேறிய வீரமைந்தனின் நடிகருமான மணியம் (மாணிக்கம்) அவர்களும் எங்கள் வீரமைந்தனைப் பார்த்து பாராட்டி சில தவறுகளையும் சுட்டிக்காட்டி தட்டிக் கொடுத்தார்கள். நாச்சிமார்கோயிலடி ஒழுங்கையிலே "வீரமைந்தன்" பல தடவை நடிக்கப்பட்டது.

1960 இல் வண்ணை கலைவாணர் நாடகமன்றம் மேடையேற்றவிருந்த "ஐயா வைத்தியரே" நாடகத்தில் நடிப்பதற்காக வண்ணை தியாகன் அவர்களால் என் தந்தையாரிடம் அனுமதி பெறப்பட்டு வண்ணை கலைவாணர் நாடக மன்றத்திற்கு நான் அறிமுகப் படுத்தப்பட்டேன். நாடகப் பிரதியை தந்து மனப்பாடம் செய்யும்படி சொன்னார்கள். பிரதிகளைப் பார்த்து முன் அனுபவம் இல்லாத நான்.... பிரதியில் உரையாடலுக்கு முன் அந்தப் பாத்திரம் எவ்வாறு உணர்ச்சியைக் காட்ட வேண்டும் என அடைப்புக்குறிக்குள் இருக்கும் கோபமாக, சிரித்து, வந்தபடி, கண்கலங்கி போன்ற சொற்களையும் வசனத்துடன் சேர்த்து வீட்டில் சத்தமிட்டு மனப்பாடம் செய்தேன். இதைக் கண்ட என் தந்தை ஒரு நமட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு இருந்துவிட்டார். சிரித்ததைப் பார்த்தேன். ஏனென்று புரியவில்லை.

நாடக ஒத்திகைக்காக வண்ணைத் தியாகன் அவர்கள் திரு இரா பற்குணம் அவர்களிடம் என்னை அழைத்துப் போனார். "என்ன வசனம் பாடமே"என்று பற்குணம் அவர்கள் கேட்க ஓமென்று நான் பதில் சொல்லிவிட்டு மளமளவென பாடமாக்கி(எனது பாத்திரத்திற

www.padippakam.com



குரியது சகநடிகரின் பாத்திரத்திற்குரியது - அடைப்புக் குறிக்குள் இருந்தது) அனைத்தையும் இடைவெளியின்றி ஒப்புவித்தேன்... "டேய் தியாகு... என்னடாப்பா... கொப்பியிலை இருந்ததெல்லாத்தையும் சப்பி வச்சிருக்கிறானெடா" என பற்குணம் அண்ணர் விழுந்து விழுந்து சிரித்துவிட்டு... எதையெதை நான் பாடமாக்க வேண்டும்... என்பதை சொல்லித்தந்தார். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக "ஐயா வைத்தியரே" மேடையேற்றப்பட வில்லை... நாடகத்தில் நடிக்கக் கிடைத்த வாய்ப்பு தவறிவிட்டதால் மனவருத்தம்.... ஆனால்... காத்திருந்தேன். 1961 இல் மீண்டும் வந்தது சந்தர்ப்பம். இலங்கை வானொலி ஊ.சண்முகம் அவர்கள் எழுதிய "சரியா? தப்பா?" நாடகத்தை ரி. எஸ். லோகநாதன் அவர்கள் தயாரிக்க அந்த நாடகத்தில் "காதலோ காதல்" நாடகத்திற்கு விளம்பரம் செய்யும் பையனாக நடிக்க நான் அழைக்கப்பட்டேன்.

கனத்த குரல், தடித்த மீசை, காதோரங்களில் கற்றையாக முடி, இராணுவ வீரனுக்கான கம்பீரத் தோற்றம், ஆனால் ஆடை மட்டும் அந்தக் கால ஆசிரியருக்குரியது....ஒத்திகையின் போது கண்டிப்பென்றால் கண்டிப்பு.... எத்தனை அடி வைத்து நடக்க வேண்டும் எங்கிருந்து திரும்பிப் பார்க்க வேண்டும் எப்போது வசனத்தை எப்படிப் பேச வேண்டும் என்பனவற்றையெல்லாம் சொல்லித் தருவார்... அவர் கற்பித்ததை சரியாகச் செய்யும்வரை விட மாட்டார். சரியாகச் செய்து விட்டால், "இன்னும் இன்னும் நன்றாகச் செய்யலாம் செய்" என்பார். ஒத்திகை வேளைகளில் சிரிப்புக் கூட சில வேளைகளிற்தான் சீமானிடம் இருந்து எட்டிப்பார்க்கும்.. இத்தனைக்கும் சொந்தக்காரரான அந்தச் செம்மல் தான் 1996ல் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களிட மிருந்து ஐம்பது வருட நாடகப்பணிக்காக மாமனிதர் விருது பெற்ற எஸ்.ரி. அரசு என்றும் அரசையா என்றும் கலைஞர்களால் அழைக்கப்படும் என் நாடகக் குரு சி.திருநாவுக்கரசு அவர்களாகும்.

www.padippakam.com



நாடகத்தில் ஒரேயொரு காட்சியில்தான் நான் வருவேன்... ஆனால் ஒத்திகைக்கு ஒழுங்காகச் செல்வதால் எனக்கு அத்தனை பேரின் வசனமும் பாடம். எனது காட்சி தவிர்ந்த மற்றைய காட்சிகள் ஒத்திகை பார்க்கும் போது, நாடக நடிகர்களுக்கு சிகரட் வாங்குவதும், பெரியபுலம் பாடசாலைக்குப் பக்கத்திலுள்ள குமாரசாமி கடையில் தேநீர் வாங்கி வருவதும் எனது பணியாகி விட்டது.

1-1-61 இல் "சரியா தப்பா" மேடையேறியது. இந்த நாடகத்தில் நடிக்க வாய்ப்புப் பெற்றதால் நான் சந்தித்த கலைஞர்கள் எவ்வளவு பெரிய கலைஞர்கள் என பின்னாளில் எண்ணிப் பார்த்தேன். எனது முதல் நாடகமேடை முறையான அரங்கேற்றம் இலங்கையின் இரு பெரும் சாதனையாளர்களோடு கூட நடித்த பேறு இன்றும் என்னை மகிழ்ச்சியிலாழ்த்துகிறது. யார் அந்த சாதனையாளர்கள்? இலங்கையின் இரண்டாவது தமிழ்த் திரைப்படமான கடமையின் எல்லையில் இருந்து தெய்வம் தந்த வீடுவரை தொடர்ந்து பல படங்களில் நடித்தவரும் நிர்மலா படத்தைத் தயாரித்து நடித்தவருமான ஏ.ரகுநாதன் அவர்கள் ஒருவர்... மற்றவர்.. கேட்பதற்கு மட்டுமென்றிருந்த வில்லிசையை கேட்கவும் பார்க்கவும் வைத்து, வில்லிசையில் சாதனை படைத்த கலாவினோதன் க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்கள்...

வீரமைந்தன் நாடகத்தில் சின்னமணி அண்ணர் வீரசேனராக நடித்த நடிப்புத்தான் என்னை நடிகனாக்கிய நெம்புகோல். பிறந்த நாட்டை பதவிக்காக மாற்றானுக்கு காட்டிக்கொடுத்து, பெற்ற மகனால் அதற்காக மரணதண்டனை பெற்று, அது நிறைவேறுமுன் தவியாய்த் தவித்து தற்கொலை செய்துகொள்ளும் தனிநடிப்புக் காட்சி நாற்பத்தியிரண்டு ஆண்டுகளாகியும் என் கண்ணைவிட்டும் நெஞ்சைவிட்டும் நீங்காமலிருக்கிறது.

"சரியா தப்பா" நடித்து முடித்த பின் தொடர்ந்து நடிக்க

www.padippakam.com



வேண்டுமென்ற ஆவல் என்னை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

1963 இல் திப்பு சுல்தான் நாடகத்திற்கான ஒத்திகை ஆரம்பமாகியது. என்னோடு நாடகத்தில் நடித்த பலரும் நடிக்க எனக்கு மட்டும் இடமில்லை... ஏனென்றால் பத்து வயதுச் சிறுவனுக்குப் பொருத்தமான பாத்திரம் திப்பு சுல்தானில் இல்லை. மனமொடிந்தாலும் நாடக ஒத்திகைகளுக்குத் தவறாது போய் வருவேன். "அரசையா" நடிகர்களுக்கு சொல்லிக் கொடுத்த ஏற்ற இறக்கத்துடன் நாடகப் பிரதியை பார்த்தபடி (Prompt) சொல்லுவேன். இதைக் கவனித்த சின்னமணியண்ணர் ஒரு நாள் அரசையாவிடம் "சின்ராசா வைப் பாரும் அரசர். அவன் prompt பண்ணேக்கையே நடிக்கிறானப்பா" என மெதுவாகச் சொல்லிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது.... காதில் விழுந்தென்ன நடிப்பதற்குப் பாத்திரம் இல்லையே! நாடகத்தின் திருப்புமுனைக் காட்சியை, இரண்டு வழிப்போக்கர்களை பாத்திரங்களாக்கி அமைத்திருந்தார் நாடக ஆசிரியர் "ஈழத்துறைவன்" என்ற ஏரம்பமூர்த்தி ஆசிரியர். இயக்குநர் அரசு அவர்கள் வழிப்போக்கர்களை மீனவர்களாக்க வண்ணை தியாகன் அவர்கள் அந்தக் காட்சிக்குப் பொருத்தமாக திப்பு சுல்தானின் ஆட்சிச் சிறப்பை விளக்க "பஞ்சம் தீருமையா பசிமாறுமையா" என்ற பாடலை எழுத இசைவாணன் கண்ணன் இசையமைத்திருந்தார்.. ஆனால் மீனவர்களாக நடிக்க வருபவர்கள் இயக்குநர் கற்பிப்பதை நடிக்க முடியாமல் ஓடியவாறு இருந்தார்கள்... இந்த இரண்டு பாத்திரங்களிலும் நடிக்க வந்தவர்கள் மூன்று நாள் ஒத்திகைக்கு மேல் தொடர்ந்ததில்லை. நடிக்க வந்தவர்கள் முதலிரண்டு நாட்கள் சொல்லிக் கொடுத்ததை மூன்றாம் நாள் நடிக்கவில்லையெனில் இயக்குநர் நையாண்டி செய்து... ஏனிங்கு வந்தனி... என்று கேட்டு விடுவார்... இதைப் பார்த்த வண்ணை தியாகன் அவர்கள், "அரசர் நீங்கள் சொல்லுறமாதிரி எல்லாரும் நடிக்க மாட்டினம்.... எத்தினை

www.padippakam.com



பேரைக் கொண்டு வந்தாச்சு. இனி.... ஒருத்தரும் இல்லையென்று சொல்ல வழிப்போக்கர்கள் இருவரில் ஒருவன் நீதான்..” என்றார் அரசர். அப்ப மற்றது? “அதுக்கு ஆளிருக்கு.... “ராசன்.. எழும்பு ... இரண்டாவது வழிப்போக்கன்ரை வசனத்தைப் பேசு...” என்றார். வண்ணைத் தியாகன் நடிக்க சம்மதமோ இல்லையோ நான் நடிக்கத் தயாராகி களத்திற்கு வந்து விட்டேன். சின்னப்பொடியன் என்று லோகநாதன் அண்ணர் சொல்ல, அதெல்லாம் மேக்கப்பில பாத்துக்கொள்ளலாம்..என்றார் அரசையா. திப்பு சுல்தானில் நான் நடிப்பதென்பது நிச்சயமாகிவிட்டது. ஒத்திகை நடந்தது. அரசையா என்னை கசக்கிப் பிழிந்து பழக்கிவிட்டார். ஒரு பழைய வேட்டி, இரண்டு தாவணித் துணிகள் ஒரு நீத்துப் பெட்டி இவையே எனது உடைகள். யாழ் மனோகராத் தியேட்டரில் மற்றவர்களுக்கு ஒப்பனை நடந்து கொண்டிருந்தது... வண்ணைத் தியாகனும் நிர்மலா திரைப்படத்தின் இயக்குநராகப் பணி புரிந்த அமரர் நவாலியூர் அருமைநாயகம் அவர்களும் ஒப்பனையில் ஈடுபட்டிருந்தார்கள். அமரர் அருமை நாயகத்திற்கருகில் என்னை அழைத்துச் சென்ற அரசர், ஒரு மேசை மீது தூக்கி என்னை இருத்தி விட்டு “அருமை இவன் ஒரு மீன் பிடிகாரன். ஒரு 20..-25 வயது என்று வைத்துக் கொள்ளும்.. முகத்துக்கு மேக்கப் போட்டிட்டு சொல்லும். நான் வந்து உடுப்பு கட்டி விடுகிறன்.” அருமைநாயகம் 11 வயதுக்கார என்னையும் அரசரையும் பார்த்து சிரித்துவிட்டு எனக்கு ஒப்பனை செய்தார். அரசர் வந்தார். மூன்று நிமிடங்கள் ஆகியிருக்காது.. வேட்டியைக் கட்டி, நீத்துப் பெட்டியைத் தலையில் கவிழ்த்து, அதைச் சுற்றி ஒருவகையான தலைப்பாகை கட்டி, அடுத்த தாவணியை இடுப்பில் சால்வை போல் கட்டி... மூலையில் தயாராக வைத்திருந்த ஒரு வலையையும் என் தோள் மீது போட்டு விட்டு எட்டிப் போய் நின்று பார்த்துவிட்டு.. “தியாகு... எங்கை லோகன்... கூப்பிட்டுக் காட்டு வேஷப் பொருத்தத்தை” என்று கூறிப் போய்

www.padippakam.com



விட்டார். திப்பு சுல்த்தான் ஒரு வெற்றி நாடகமாக அமைந்தது. அதில் நடித்த எல்லோரையுமே பாராட்டி எழுதிருந்தது அன்றைய கலைச்செல்வி சஞ்சிகை. 1964 தை இரண்டாம் திகதி திப்பு சுல்த்தான் கொழும்பு ஹவ்லக் ரவுண் மண்டபத்திலும் மேடையேற்றப்பட்டு வண்ணை கலைவாணர் நாடகமன்றத்திற்கு பெரும் புகழீட்டிக் கொடுத்தது. தினகரன் பத்திரிகையாளராக நாடகம் பார்க்க வந்திருந்த எனது சகோதரர் நடேசன் அவர்கள் நாடகம் முடிய வண்ணை தியாகனிடம் ராசன் இந்த நாடகத்தில் நடிப்பதாக கடிதம் எழுதியிருந்தான் எங்கை ஆளைக் காணேல்லை.. என்று கேட்குமளவிற்கு ஒப்பனையில் என்னை மாற்றியிருந்தார்கள்.

யாழ் சரவணபவா நாடகமன்றத்திற்கும், எழுத்தாளர் புதுமைலோலன் அவர்களை தலைவராகக் கொண்டிருந்த திருக்குறள் நாடகமன்றத்திற்கும், என் தந்தையார் இ. தம்பையா அவர்கள் ஒப்பனை கலைஞராக இருந்தார். 1964க்குப் பின் யாழ் சரவணபவா நாடகமன்றத்தின் தலைவர் ஏ.எஸ். மணி (தெய்வண்ணை) அவர்களின் தொடர்பும் கிடைக்க, அந்த மன்றத்திலேயே தொடர்ந்து பல நாடகங்கள் நடிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. போட்டி மன்றத்தில் நடித்தமைக்காக.... வண்ணை கலைவாணர் நாடகமன்றம் என்னை இடை நீக்கமும் செய்தது. பிறந்த வீட்டிலிருந்து பிரிந்தது போன்ற கவலை நெஞ்சில் இருந்தாலும், புகுந்தவீடான யாழ் சரவணபவா நாடகமன்றம் தந்த வாய்ப்புகளால் அமரர் "யுவராஜ்" சி.ரி.செல்வராஜா, எழுபதுகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரபல பேச்சாளராக விளங்கிய வண்ணை ஆனந்தன், நடன ஆசிரியர் "கலாநிகேதன்" வேல்ஆனந்தன் போன்றோருடன் நடித்தமை கவலையை மறக்கச்செய்தன.

நாடக ஆர்வம் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் பல நாடகங்களை நடிக்க வைத்தது. யாழ்ப்பாணத்துக்கு வில்லிசையை

www.padippakam.com



அறிமுகம் செய்த திருப்பூங்குடி வி.க. ஆறுமுகம் ஆசிரியரின் நெறி யாள்கையில் **வீறகு வீற்ற விமலன்,** ஆசிரியர் புதுமைலோலனின் நெறியாள்கையில் **பாதுகை** ஆகிய நாடகங்களிலும், நானே நெறி யாள்கை செய்த எஸ்.பொவின் **முள்ளோ மலரிலும்** நடித்தேன்.

1973இல் வண்ணை கலைவாணர் நாடகமன்றம் ஏறத்தாழ செயலிழந்து போன நிலையில் மீண்டும் அதை வளர்த்தெடுக்க வண்ணை தியாகனும் இரா.பற்குணம் அவர்களும் மேற்கொண்ட முயற்சி திருவினையாக 1973 பொங்கல் விழாவில் வீரமைந்தன் எஸ்.ரி. அரசு அவர்களின் நெறியாள்கையில் இளைய தலைமுறையினரால் மேடையேறியது. 1959ல் வீரமைந்தன் மனோகரா படமாளிகையில் அரங்கேறியபோது நடித்த மன்ற நடிகர்கள் அனைவரும் வந்து தாம் நடித்த பாத்திரங்களையேற்ற இளைய தலைமுறை நடிகர்களுக்கு தாமே ஆடையலங்காரம் செய்து, முதல் வரிசையிலமர்ந்து நாடகம் பார்த்து பாராட்டியதும், விமர்சனம் செய்ததும் மறக்கமுடியாத மலரும் நினைவுதான். மீண்டும் யாழ் -கைதடியில் வீரமைந்தன் மேடையேற்றப்பட இருந்ததால் ஒத்திகை ஆரம்பமானது. அரசையா கலாவினோதன் சின்னமணி அவர்களின் வில்லிசை நிகழ்ச்சிகளில் பிரதான பங்கேற்றிருந்தமையால் தினமும் ஒத்திகைக்கு வரமுடியாத நிலை, அவர் வராத நாட்களில் ரி.எஸ்.லோகநாதன் அவர்கள்தான் நெறி யாள்கைப் பொறுப்பை யேற்றிருந்தார். லோகநாதன் அண்ணர் உடல் நலமின்மையால் ஒத்திகைக்கு வரமுடியாமற்போன வேளைகளில், இளைய தலைமுறை நடிகர்களுள் நானே வயதிலும் அனுபவத்திலும் மூத்தவன் என்பதால் ஒத்திகையை மேற்பார்வை செய்யும் பொறுப்பு சக நடிகர்களின் ஆர்வத்தால் பற்குணம் அண்ணர் மூலம் என்னிடம் வந்து சேர்ந்தது. இது லோகநாதன் அண்ணருக்கும், தெரியவர அவர் வராத நாட்களில் ஒத்திகையை மேற்பார்வைசெய்யும் பொறுப்பு என்னைச் சார்ந்ததாக மாறியது.

www.padippakam.com



அரசையா எனக்குத் தந்ததை சக நடிகர்களுக்கு பகிர்ந்தளித்து திருப்தியடைந்த அந்த நாட்களை, இன்றும் எனது ஒவ்வொரு நாடகத்தின் பயிற்சியின்போதும் அரங்கேற்றத்தின்போதும் நெஞ்சிற் தாங்கி நினைவுகூர்ந்து கொள்கின்றேன்

தொடர்ந்து வண்ணை கலைவாணர் நாடக மன்றத்திற்காக இரா பற்குணம் அவர்களின் முயற்சியால் **இடிந்தகோயில், மிஸ்டர் கந்தப்பு** ஆகிய நாடகங்கள் பல தடவைகள் மேடையேற்றப்பட்டது.

அக்காலத்தில், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியோடு இல்லங்களுக்கிடையே நாடகப் போட்டியும் நடைபெற்று வந்தது. சம்பந்தர் இல்லத்திற்கு வருடா வருடம் நாடக இயக்குநராக பணியாற்றிய ரி.எஸ். லோகநாதன் அவர்கள் 1974ல் உடல் நலிவுற்றிருந்தமையால் சம்பந்தர் இல்லத்தின் நாடக இயக்குநராக என்னை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். எனது நாடக அனுபவத்தின் நெஞ்சை விட்டு நீங்காத காலம் இக்காலம். எள்ளெனில் எண்ணெயென உருகி நின்று போட்டியிட்டு நடிக்கும் மாணவர்களுக்கும் முதன் முறையாக இயக்குநராகி இருந்த எனக்கும் சக்கரவர்த்தி இராஜலிங்கம் அவர்கள் எழுதிய **மனம் திறந்தபோது** நல்ல தீனியாக அமைந்தது. முதல் நாடகத்திலேயே அவர்களுக்கு முதற் பரிசு, கிடைக்க மட்டற்ற மகிழ்ச்சி. நாடகம் முடிந்து பரிசுகளை பிரதம நடுவர் அறிவித்தார்... பார்த்த முகம்... ஆம்.... சரியா? தப்பா? வில் நடித்த ரகுநாதன் தான் இவர் என முடிவு செய்து கொண்டு, அவர் அருகில் சென்றேன்... சிறுவனாக 61இல் சந்தித்த என்னை இளைஞனாக அவரால் அடையாளம் காண இயலவில்லை... என்னை அறிமுகம் செய்த பின்... “அப்ப உன்ரை நாடகத்துக்கா தம்பி முதற்பரிசு?”என்று கேட்டார்.. ஆம் என்றபோது. “அந்த நாடகத்தின் கதாபாத்திரங்கள் அனைத்துமே நன்றாக நடிக்க வைக்கப்பட்டிருந்தன. நீயொரு நாடக மன்றக்காரன்

www.padippakam.com



என்பதை நன்றாக நிருபித்திருக்கிறாய்"எனப் பாராட்டினார்! 1974 முதல் 78 வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியின் சம்பந்தர் இல்லம் என் இல்லம் போலானது. 75இல் இந்திரா பார்த்தசாரதி அவர்களின் மழை - 76 ல் ஆசிரியர் "தமிழ்க்" குமரனும் நானும் எழுதிய ஊன்று கோல் 77இல் அண்ணாவின் தீர்ப்பளியுங்கள் 78இல் "யாழ் நடாவின்" மாரீச மயக்கங்கள் ஆகிய நாடகங்களை இயக்கும் வாய்ப்பு பெற்றேன்...

77இல் யாழ்ப்பாணத்தில் "கலைத்தளிர் கலாமன்றம்" பல நாடக ஆர்வலர்களால் உருவானது. தமிழ்க் "குமரனும்" நானும் இணைந்தெழுதிய "சுருதிபேதம்" யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறி பெருவெற்றி பெற்றது. அதனால் வந்த இலாபத்தில் சக்கரவர்த்தி இராஜலிங்கம் அவர்களின் "கலைந்தராகங்களை" மேடையேற்றி வெற்றி பெற்றது கலைத்தளிர் கலா மன்றம். இவ்வேளையில் இவ்வெற்றிக்குப் பின்னணியாய் உழைத்த அமரர் அருளையும், அமரர் ஓவியர் கனகுவையும்(ராஜி ஆர்ட்ஸ்) நினைப்பதில் நெஞ்சம் நெகிழ்கின்றது.

1981 இலிருந்து புலம் பெயர் வாழ்க்கை... கலை முயற்சி களில்... அரங்குகளில் இருந்து அஞ்ஞாத வாசம். உள்ளம் பாதிப்புகளின் உணர்வுகளால் கொப்பளித்துச் கொண்டிருந்தது. புலம் பெயர் வாழ்வெனும் பரந்த வெளியில் பிரான்சிலும் - ஜேர்மனியிலும் பட்ட அனுபவங்கள் - கற்றபாடங்கள் - நெஞ்சில் நிறைந்திருந்தது.... அரங்கமற்ற அகதி வாழ்வின் அவலம். வேலை - வீடு... வேலை - வீடு என செக்கு மாடாக வட்டம் சுற்றும் வாழ்க்கை...பிஞ்சு வயதில் நெஞ்சிற் கலந்த நாடகமும் வில்லிசையும் ஆழ்மனதில் இனியும் அடங்கியிருக்க இயலா தென எழுந்து வெளிவரத் வடித்த வேளையில், 1991 இல் **பூவரசு** இனிய தமிழேட்டின் முதலாவது ஆண்டு நிறைவிற்காக வில்லிசைக்கு அழைத்தார் எழுத்தாளர் இந்து மகேஷ், அதே காலப்பகுதியில்

www.padippakam.com



பிறேமன் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகப் பொறுப்பாளர் அன்ரன் பீலிக்ஸ் நாடகத்திற்காக அழைத்தார்! 26.12.1991ல் கலைஞர் அன்ரன் பீலிக்ஸ் அவர்களின் அறிமுகத்தில் ஜேர்மனியில் முதன் முதலாக அரிதாரம் பூசி அரங்கேறினேன்.

"யாரிவன்?" என்று விழிவிரித்து கேட்க வைத்தது நாடகம். "இவனே நாச்சிமார் கோயிலடி இராஜன்" என வில்லிசைக்க விதந்துரைத்தது "பூவரசு". பத்தாண்டு கால கலையுலக அஞ்ஞாத வாசம் மூன்று வார இடைவெளியில் நாடகம், வில்லிசையென நிறைவுக்கு வந்தது...

1992இல் பிறேமன் தமிழ்க்கலைமன்றம் உருவானது. அறிமுக விழாவிற்காக பாரிஸ் கலைஞர் பரா அவர்களின் **எங்கே போகிறோம்** நாடகப் பிரதி நடிகர்களுக்காக தயாரிக்கப்பட்டு... நடிக்க ஒப்புக் கொண்டவர் நடிக்கத் தயங்கி - மறுத்த போது... "அண்ணை யோசிக்காதீங்கோ! நாடகம் குறித்த நாளில் மேடையேறும்... அந்த இடத்துக்கு எனது மனைவி நடிப்பா... சித்திராவிட்டைக் கொப்பியைக் குடுங்கோ" என... கைதந்து... தூக்கி... நிறுத்தினார் கலைஞர் அன்ரன் பீலிகஸ் எங்கே போகிறோம் நாடகத்தைத் தொடர்ந்து பல நாடகங்களை மன்றத்திற்காக அவ்வப்போது எழுதி மேடையேற்றியுள்ளேன். அவற்றிலிருந்து ஒன்பது நாடகங்களைத் தேர்ந்து நூலாக்கித் தந்திருக்கிறேன்.

நாடகங்களோடு, என்னுரையென ஆரம்பித்து பின்னுரையாக வளர்ந்த என் நீங்காத நினைவுகளையும் (பொறுமையுடன்) படித்த இனிய நெஞ்சங்களே! என்றும் நன்றியுடன் விடைபெறுகின்றேன்.

வணக்கம்

*14.12.2001* **நாச்சிமார்கோயிலடி இராஜன்**

Thambayah Rasu
Langlütjensand 6 - 28259 Bremen, (Germany)
E-mail : kalaiosai@tamil.com

படிப்பகம்

www.padippakam.com



புலம் பெயர்ந்த நாடுகளிலே
வாழும் தமிழர்களுடைய
தமிழ்த் தாகங்களையும்
உணர்ச்சி ஏக்கங்களையும்
பிணைத்து
நாச்சிமார்கோயிலடி இராஜன்
பிறேமன்
தமிழ்க்கலை மன்றத்திற்காக
ஜேர்மன் மண்ணிலே
வெற்றிகரமாக
மேடையேற்றிய
ஒன்பது நாடகங்களின்
தொகுப்பு



படிப்பகம்